
2.11.32 N75
N76-136,

138

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

THURSDAY 6th NOVEMBER 1975

Volume CXXXVI—No. 1

©
GOVERNMENT OF TAMIL NADU
1976

*Legislative Council Department*
*Fort St. George, Madras-600009.*

PRICE 35 *Paise*]

D
V2:11,32 N75
N76.136

63175

# Tamil Nadu Legislative Council Debates

FIFTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

6th, 7th, 10th and 11th November 1975.

VOLUME CXXXVI—Nos. 1 to 4

*TABLE OF CONTENTS.*

*Thursday, 6th November* 1975.


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu .. | i—v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council .. .. .. .. .. | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies .. .. | ix—xi |
| 1. Questions and Answers .. .. .. | 1—32 |
| 2. Announcement *re* Message from the Assembly ... | 32 |
| 3. Calling attention to strike and fast by teachers and students on account of difference of opinion between teachers and management of P.T.M.T.M. College, Kamuthi, Ramanathapuram District ... | 32—40 |
| 4. Non-official Resolutions— | |
| (1) Constitution of the Hindu Religious and Charitable Endowments Development Board—*cont.* ... | 40—48 |
| (2) Voluntary surrender of surplus lands below ceiling limit .. .. .. .. | 48—63 |
| (3) Constitution of a Bench of High Court, Madras in Madurai ... ... ... | 64—74 |
| 5. Papers laid on the table of the House ... | 74—75 |

*Friday, 7th November 1975.*


| | PAGES |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... ... | 99—118 |
| 2. Announcement *re* Message from the Assembly ... | 118—119 |
| 3. Calling attention to abolition of B.Ed. (Short Term) Course of Secondary Grade teachers obtaining B.A. degree while in service .. .. | 119—123 |
| 4. Government Bills— | |
| (1) The Sakthi Pipes Limited (Acquisition of Undertaking) Bill, 1975 (L.A. Bill No. 38 of 1975) .. .. .. .. .. | 124—159 |
| (2) The Southern Structurals Limited (Acquisition of Undertaking) Bill, 1975 (L.A. Bill No. 39 of 1975) .. .. .. .. .. | 159—164 |
| (3) The Lasco Steels Limited (Acquisition of Undertaking) Bill, 1975 (L.A. Bill No. 40 of 1975) .. .. .. .. .. | 164—166 |
| (4) The Textool Company Limited (Acquisition of Undertaking) Bill, 1975 (L.A. Bill No. 41 of 1975) .. .. .. .. .. | 166—168 |
| 5. Papers laid on the table of the House .. .. | 169 |


*Monday, 10th November 1975.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... ... | 241—258 |
| 2. Announcements— | |
| (1) Message from the Governor .. .. | 258 |
| (2) Message from the Assembly .. .. | 259 |
| 3. Government Resolutions— | |
| (1) Location of Headquarters of proposed Leather Industries Development Corporation in Madras | 260—267 |
| (2) Change in the order of business .. .. | 267—268 |
| 4. Government Bills— | |
| (1) The Tamil Nadu State Wakf Board (Validation of Functions of Special Officer) Bill, 1975 (L.A. Bill No. 43 of 1975) ... .. .. | 268—270 |




*Monday, 10th November 1975—cont.*


| | PAGES |
|---|---|
| (2) The Tamil Nadu Private Electricity Supply Undertakings (Acquisition) Amendment Bill, 1975 (L.A. Bill No. 42 of 1975) .. .. | 271—273 |
| (3) The Tamil Nadu Payment of Salaries (Second Amendment) Bill, 1975 (L.A. Bill No. 53 of 1975) .. .. .. .. .. | 273—291 |
| (4) The Tamil Nadu Legislature (Prevention of Disqualification) Amendment Bill, 1975 (L.A. Bill No. 49 of 1975) ... ... ... ... | 291—293 |
| (5) The Tamil Nadu Handloom Textiles (Protection, Production, Distribution and Sale) Bill, 1975 (L.A. Bill No. 19 of 1974) ... ... | 293—302 |
| (6) The Tamil Nadu Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Amendment Bill, 1975 (L.A. Bill No. 13 of 1974) .. .. | 303—307 |
| (7) The Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1975 (L. A. Bill No. 51 of 1975). | 307—327 |
| 5. Papers laid on the table of the House .. .. | 328 |


*Tuesday, 11th November 1975.*


| | |
|---|---|
| 1. Questions and Answers .. .. .. | 367—390 |
| 2. Statement under Rule 82 of Council Rules *re* Bus accident near Central Railway Station — | 391 |
| 3. Calling attention to the attack on the employees of 'Navasakthi' by ladies on 29th October 1975 | 391—393 |
| 4. Government Bills— | |
| (1) The Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 51 of 1975)—*cont.* .. .. .. .. .. | 393—424 |
| (2) The Tamil Nadu General Sales Tax (Third Amendment) Bill, 1975 (L.A. Bill No. 50 of 1975) .. .. .. .. .. | 424—425 |

PAGES

(3) The Tamil Nadu District Development Coun-

(3) The Tamil Nadu District Development Councils (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 48 of 1975) .. .. .. .. 425—426

(4) The Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 60 of 1974) .. .. .. .. .. 426—436

(5) The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 52 of 1975) .. .. 436—466

5. Papers laid on the table of the House .. .. 466—467

Index. 485—515

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

THIRU KODARDAS KALIDAS SHAH.

### *Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI, Chief Minister in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Election, Prohibition, Excise and Backward Classes.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister in-charge of Education including Technical Education, Official Language, Legislature, Tourist and Tourism Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, Minister in-charge of Public Health, Medicine and Town Planning and Water Board.

4. THE HON. THIRU P. U. SHANMUGAM, Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

5. THE HON. THIRU S. MADHAVAN, Minister in-charge of Revenue, Food, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Bhoodhan, Gramdhan, Textiles, Yarn, Handlooms, Law, Courts, Prison, Registration and Land Reforms.

6. THE HON. THIRU S. J. SADIQ PASHA, Minister in-chrage of Industries, Mines and Minerals, Iron and Steel Control, Companies, Electricity and Waqfs.

7. THE HON. THIRU SI. PA. ADITANAR, Minister in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing, Agro-Engineering and Service Co-operative Societies at the Block, District and Apex levels including the Federation.

8. THE HON. THIRU MANNAI P. NARAYANASAMY, Minister in-charge of Co-operation, Agricultural Refinance, Housing including Slum Clearance Board and Accommodation Control.

9. THE HON. THIRU K. RAJARAM, Minister in-charge of Labour, Tranpsort, Nationalised Transport, Motor Vehicle Tax, Legislation on Weights and Measures, Statistics, Employment and Training and Ex-Servicemen.

10. THE HON. THIRU C. V. M. ANNAMALAI, Minister in-charge of Social Welfare including Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages and Approved Schools and Vigilance Service.

11. THE HON. THIRU O. P. RAMAN, Minister in-charge of Commercial Taxes, Forest including Cinchona, Animal Husbandry, Legislation on Money-lending, Rural indebtedness, Legislation on Chits and Cinematograph Act.

12. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions, Stationery and Printing and Government Press.

13. THE HON. THIRU M. KANNAPPAN, Minister in-charge of Religious Endowments, Khadi and Village Industries, Rural Industries Project, Milk, Operation Flood Project, Tamil Nadu Dairy Development Corporation, Information and Public Relations, Film Technology, Youth Service Corps and Prosperity Brigade.

14. THE HON. THIRU N. RAJANGAM, Minister in-charge of Harijan Welfare, Indians Overseas and Refugees and Evacuees, Newsprint Control and Passports.

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

---

### தமிழ் நாடு ஆளுநர்

### மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் (ஐ.சி.எஸ்.) அதிகாரிகள், இந்திய ஆட்சிப் பணியாளர் (ஐ.ஏ.எஸ்) அதிகாரிகள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், போலீஸ், தேர்தல், மதுவிலக்கு, ஆயத்தீர்வை, பிற்பட்டோர் நலம்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: கல்வி, தொழில் நுட்பக் கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சி வாரியம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (நல்வாழ்வுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொது சுகாதாரம், மருந்துகள், நகர அமைப்புத் திட்டங்கள், குடிநீர் வாரியம்.

4. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (பொதுப்பணித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப்பணி, சிறு பாசன சிறப்புத் திட்டங்கள் உள்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

**5. மாண்புமிகு திரு. செ. மாதவன்** (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய்த் துறை, உணவு, வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள், பூமிதானம், கிராமதானம், ஜவுளி, நூல்; கைத்தறி; சட்டம்; கோர்ட்டுகள், சிறைச்சாலைகள், பதிவுத்துறை, நிலச் சீர் திருத்தங்கள்.

6. **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** (தொழில்-மின்சாரத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில், மின்சாரம், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு-உருக்கு கட்டுப்பாடு, கம்பெனிகள், வக்ப் போர்டு.

7. **மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்** (வேளாண்மை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, உணவு, உற்பத்தி, வேளாண்மை பொறியியல் பிரிவு, வேளாண்மை பொறியியல் கூட்டுறவுகள்.

8. **மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி** (கூட்டுறவு அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: கூட்டுறவு, வேளாண்மை மறுநிதி, வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு.

9. **மாண்புமிகு திரு. க. இராசாராம்** (தொழிலாளர் நலம்-போக்குவரத்து அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர் நலம், போக்குவரத்து, அரசுடைமை ஆக்கப்பட்ட போக்குவரத்து, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், வேலை-வாய்ப்பு-பயிற்சி அளித்தல், முன்னாள் ராணுவத்தினர்.

10. **மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை** (சமூகநல அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பெண்கள்-குழந்தைகள் நலம் உள்பட சமூக நலம், மீன் வளம், பிச்சைக்காரர் இல்லங்கள், அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பணிகள், கண்காணிப்புகள்.

11. **மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்** (வர்த்தக வரி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வர்த்தக வரி, கடன் சட்டம், காடுகள், சின்கோனா, கிராமவாசிகள் கடன், சீட்டுக் கம்பெனிகள், கால்நடை வளர்ப்பு, சினிமா சட்டம்.

12. **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** (ஊராட்சி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சிகள், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், எழுது பொருள்-அச்சகத்துறை, அரசு அச்சகம்.

13. **மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** (அறநிலைய அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அற நிலையங்கள், கதர் கிராமத் தொழில், கிராமத் தொழில் திட்டங்கள், பால், பால் பெருக்குத் திட்டம், தமிழ் நாடு பால் வழங்கு நிறுவனம், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சினிமா தொழில் நுட்பம், இளைஞர் அணி, சீரணி.

14. **மாண்புமிகு திரு. என். இராசாங்கம்** (அரிசன நல அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தோர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பாஸ் போர்ட்டுகள்.

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

---

### மேலவைத் தலைவர்

மாண்புமிகு திரு. சி. பி. சிற்றரசு

### மேலவைத் துணைத் தலைவர்

திரு. ம. பொ. சிவஞானம்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல் :

1. திரு. மு. இராமநாதன்.
2. திரு. எல். பலராமன்.
3. திரு. எஸ். நாராயணசாமி.
4. திரு. ஆர். தாமஸ்.

### மேலவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்.

திரு. த. பி. டெல்லிதுரை, பி.எஸ்ஸி.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 1 அப்துல் வகாப், கே. எஸ். | மாநிலச் சட்டப் பேரவை. |
| 2 அய்யணன் அம்பலம், அ. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 3 அறிவழகன், க., எம்.ஏ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதி. |
| 4 அறிவுடைநம்பி, புலவர் ஓ. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர் தொகுதி. |
| 5 அனிபா, நாகூர், ஈ.எம்., | மாநிலச் சட்டப் பேரவை. |
| 6 ஆதித்தன், எஸ்.டி.,பி.ஏ.,பி.எல். | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 7 ஆறுமுகசாமி, எம். | மாநிலச் சட்டப் பேரவை. |
| 8 இளம்பரிதி | மாநிலச் சட்டப் பேரவை. |
| 9 இராசகோபால், சி.வி. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 10 இராசமாணிக்கம், எஸ்.ஏ. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 11 இராசாராம், கே. (எதிர்க் கட்சித் தலைவர்). | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 12 இராஜு, ஜி.என். | மாநிலச் சட்டப் பேரவை. |
| 13 இராமகிருஷ்ணதேவர், எஸ். | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 14 இராமநாதன், மு. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 15 இராம சுப்பையா, காரைக்குடி | நியமனம். |
| 16 இராமசாமி படையாச்சி, எஸ். எஸ். | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 17 எல்லமந்தா, பி. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 18 கணபதி, கே. எஸ். | தஞ்சாவூர் - திருச்சிராப்பள்ளி ஆசிரியர் தொகுதி. |
| 19 குன்றக்குடி அடிகளார், தவத்திரு | நியமனம். |
| 20 கோலப்பா, சி.ஆர். | மாநிலச் சட்டப் பேரவை. |

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
| --- | --- |
| 21 சக்தி மோகன், ஆர். | மாநிலச் சட்டப் பேரவை. |
| 22 சங்கரலிங்கம், எம். | திருநெல்வேலி - கன்னியாகுமரி ஆசிரியர் தொகுதி. |
| 23 சந்தோஷம், டி., எம்.ஏ., பி.எல். | சென்னை தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 24 சாம்பசிவம், இரா. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 25 செங்கோட்டு வேலப்ப கவுண்டர், எஸ்.சி. | கோயம்புத்தூர் - நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 26 சிவஞானம், ம. பொ. (துணைத் தலைவர்). | நியமனம். |
| 27 சிற்றரசு, சி.பி. (மாண்புமிகு தலைவர்.) | மாநிலச் சட்டப் பேரவை. |
| 28 சுந்தரேசத் தேவர், என். | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 29 சுவாமிநாதன், ஜி., பி. பார்மஸி | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 30 தங்கப்பாண்டியன், வே., பி.ஏ.,பி.டி. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 31 தங்கவேலு, ஏ. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 32 தமிழரசி, சி. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 33 தாமஸ், பி.ஆர். | மதுரை - இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 34 தாமோதரன், ஏ.ஆர்., பி.எஸ்ஸி. (ஆனர்ஸ்). | சென்னை வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 35 தாமோதரன், ஜி.ஆர். | சென்னை மேற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 36 திராவிடமணி, ஆ. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 37 டிமாண்டி டென்சில் வின்சென்ட் | மாநிலச் சட்டப் பேரவை. |
| 38 தென்னரசு, எஸ்.எஸ். | நியமனம். |
| 39 தேவராஜ், வி.எம். | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 40 நடராசன், எம்.கே.டி. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |



| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
| --- | --- |
| 41 நாராயணசாமி, மன்னை ப. (கூட்டுறவுத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 42 நாராயணசாமி, எஸ். | சென்னை மாவட்ட பட்டதாரிகள் தொகுதி. |
| 43 பக்கர், எம்.எம். | நியமனம். |
| 44 பலராமன், எல். | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 45 பாலசுப்பிரமணியம், அ. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46 பாலசுப்பிரமணியம், கு.மா. | நியமனம். |
| 47 பெரியண்ணன், வி.ஆர். | சேலம் - தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 48 மணி, கோ.சி. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 49 மாசிலாமணி, மு. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 50 முத்து, எஸ். | மாநிலச் சட்டப் பேரவை. |
| 51 முத்துகிருஷ்ணன், டி.வி. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 52 முத்துசாமி, செ. | சேலம் - தர்மபுரி-கோயம்புத்தூர். நீலகிரி ஆசிரியர் தொகுதி. |
| 53 முருகேசன், எச்.எல். | நியமனம். |
| 54 ரஸ்ஸல் ராஜ் | நியமனம். |
| 55 வசந்த பாய், ஜி. | சென்னை மாவட்ட பட்டதாரிகள் தொகுதி. |
| 56 வில்வம், ஏ.கே. | நியமனம். |
| 57 வில்சன் அப்போலோஸ், என். | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 வெங்கா, வி. | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 வெள்ளபாண்டியன், எஸ். | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 வெங்கடேஸ்வர தீக்ஷிதர், ஒய். | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61 ஜார்ஜ் கோமகன் | மாநிலச் சட்டப் பேரவை. |
| 62 வெற்றிடம் | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 63 வெற்றிடம் | மாநிலச் சட்டப் பேரவை. |

# தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

---

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட சட்ட மன்ற மேலவையின் ஐம்பத்தி ஒன்றாவது கூட்டத் தொடர்.

---

வியாழக்கிழமை, 1975 நவம்பர் 6.

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Transport facilities to Police Stations.*

*71. Q.—THIRU A. BALASUBRAMANIAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that necessary transport facilities are not available in every Police Station for the effective implementation of prohibition; and

(b) if so, whether there is any proposal with the Government to provide transport facilities?

### காவல் நிலையங்களுக்கு வாகன வசதிகள்.

**திரு. அ. பாலசுப்பிரமணியம் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மதுவிலக்கை அமுல் செய்வதைத் துரிதப்படுத்த ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் வாகன வசதி இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆமெனில், வாகன வசதி ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) & (இ) மதுவிலக்கைச் செயல் படுத்துவதற்காகவென்றே காவல் நிலையம் ஒவ்வொன்றுக்கும் வண்டி ஒன்றை வழங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. மது விலக்கைச் செயல்படுத்தும் காவல் துறை சூப்பிரண்டுகளிடம் இதற்காகப் போதிய அளவு வண்டிகள் உள்ளன.

**திரு. அ. பாலசுப்பிரமணியம்:** துணைத் தலைவரவர்களே, ஒரு தாலுக்காவிலே என்று எடுத்துக்கொண்டாலும்கூட, போதுமான அளவுக்கு வசதி இல்லாத காரணத்தினால், இது தவிர வேறு குற்றங்கள் ஏதாவது நிகழ்ந்தால், காவல் துறையினர் துரிதமாகச் செல்வதற்கு கஷ்டம் ஏற்படுகிறது என்பதாகத் தெரிகிறது. ஆகவே அரசு மேலும் இந்தத் திட்டத்தை அமுல்படுத்த ஏதாவது செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** உறுப்பினர் அவர்கள் இது வன்னியில் பொதுவாகவே காவல் துறையினருக்கு அதிகமான வண்டிகள் வேண்டும் என்று கோரினார்கள். மாவட்டத்தில் மொத்தம் 283 சர்க்கிள்கள் இருக்கின்றன. இப்போது ஏறத்தாழ 200 சர்க்கிள்களுக்கு ஜீப்புகளும், பிக்-அப் வேன்களும் இருக்கின்றன. மற்றவைகளுக்கு வழங்குவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. எல். பலராமன்:** மதுக் குற்றம் அதிகமாகி தவறுகள் நடந்துகொண்டிருக்கின்றன என்று கருதப்படுவதால், அரசு மாவட்ட வாரியாக தனியாக காவல் துறை பிரிவு ஏற்படுத்துவதற்கு ஏற்படுத்த இருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, டி.ஐ.ஜி. அளவிலே இந்த மதுவிலக்குக் குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கு ஓர் இலாகா இயங்கிவருகிறது. சென்னையிலே அதற்குத் தலைமை அலுவலகம் இருக்கிறது. டி.ஐ.ஜி. அவர்கள் தலைமையில் அது இருக்கின்றது. ஒவ்வொரு மாவட்ட அளவிலும் மொபைல் யூனிட் வேறு இயங்கி வருகின்றது. டெபுடி சூப்பிரண்டெண்டன்ட் அவர்கள் தலைமை ஏற்று அந்தப் பணியை நடத்தி வருகிறார்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** நம் மாநிலம் மதுவிலக்குத் திட்டத்தைக் கையாண்டதன் காரணமாக, இழப்பு ஏற்பட்டிருக்கிறது; அந்த இழப்பை ஈடு செய்ய அல்லது ஒரு பகுதியையாவது ஈடு செய்ய மத்திய அரசுக்கு மாநில அரசு கடிதம் எழுதியதா? அதற்கு என்ன பதில் வந்தது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பல முறைகள் மாநில அரசு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறது. மது விலக்கினால் ஏற்படுகிற இழப்பை ஈடு செய்யும் அளவுக்கு இல்லாவிட்டாலும், ஒரு கணிசமான அளவுக்கு, ஒரு குறிப்பிட்ட விகிதாசாரத்திற்காவது ஈடு செய்ய வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. ஆனால், மத்திய அரசு அதைப்பற்றி ஆலோசிப்பதாகச்



சொன்னது. அதை 12 அம்சத் திட்டத்தோடு 13-வது அம்சமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றுகூட அண்மையிலே பிரதமரிடத்திலே எடுத்துச் சொல்லப்பட்டது. மீண்டும் நினைவுறுத்தியும் இருக்கிறோம். டெல்லியிலே கூடிய அமைச்சரவையில், இதனால் பயனடைபவர்கள் குஜராத்தும், தமிழ்நாடுமாக இருப்பதால், அதைக் கைவிட்டுவிட்டதாகத் தெரிகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மற்ற மாநிலங்கள் ஏதேனும் மது விலக்கைக் கொண்டுவருமானால், அவர்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை கொடுப்பார்களா? அப்படியானால், மறுபடியும் மது விலக்கை ரத்து செய்துவிட்டு, மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மற்ற மாநிலங்களைப் பொறுத்த வரையில், கடந்த 2, 3 ஆண்டுகளாக கருநாடக முதலமைச்சர் அவர்களைத் தொடர்ந்து பீகார் மாநில முதலமைச்சர் அவர்களும் மது விலக்குத் திட்டத்தை அமுல் படுத்தினால் 30 கோடி அல்லது 40 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்படும் என்றும், அதை ஈடு கட்ட மத்திய அரசு தயாராக இருந்தால், அதைப் பற்றி யோசிக்கலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அவர்களால் அப்படிச் சொல்ல முடிகிறது. நம்மால் அப்படிச் சொல்ல முடியவில்லை.

**திரு. கே. ராஜாராம்:** மது விலக்குத் திட்டத்தை மாநிலம் பூராவும் அமுல்படுத்தியிருக்கின்ற மாநிலங்கள் குஜராத்தும் தமிழ் நாடும்தான். அவைகளில் மாற்றுக் கட்சியினர் ஆட்சி நடைபெறுவதனால், மாநில அரசுக்கு மத்திய அரசிலிருந்து இழப்பீட்டுத் தொகை இல்லை என்ற அளவுக்கு கைவிட்டு விட்டதாக அதிகார பூர்வமாகத் தகவல் வந்திருக்கிறதா? யாரோ சொல்லிவிட்டார்கள் என்று நாம் விட்டுவிடக்கூடாது. மேற்கொண்டு முயற்சி செய்ய நமது அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எதிர்க் கட்சி ஆட்சி செய்யும் மாநிலங்களுக்குத் தர இயலாதென்று அதிகார பூர்வமாக எழுத மாட்டார்கள். நாம்தான் ஜாடையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

## *Prohibition Cases.*

*72. *Q.*—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of persons who have been sentenced to imprisonment or imposed fine respectively, in connection with prohibition offences from the reintroduction of prohibition; and

(b) the name of the District where prohibition cases are prevalent?

**மதுவிலக்கு வழக்குகள்.**

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாட்டில் மதுவிலக்கு அமுலுக்கு வந்தபின்பு எத்தனை பேர் மதுவிலக்கு சம்பந்தமாக சிறைத் தண்டனை பெற்றுள்ளார்கள்? எத்தனை பேர்கள் அபராதம் கட்டியுள்ளார்கள்?

(இ) எந்த மாவட்டத்தில் மதுவிலக்கு வழக்குகள் அதிகம்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** துணைத் தலைவரவர்களே, (அ) தமிழ் நாட்டில் மதுவிலக்கு மீண்டும் அமுல்படுத்தப்பட்ட தேதி முதல்—அதாவது 1—9—1974 முதல் 31—8—1975 முடிய உள்ள காலத்தில்—

50,059 பேர் மதுவிலக்குச் சம்பந்தமாக சிறைத் தண்டனை மாத்திரம் பெற்றார்கள்.

2 லட்சத்து 61 ஆயிரத்து 328 பேர்கள் அபராதம் மாத்திரம் கட்டி உள்ளார்கள்.

சிறைத் தண்டனையும் அபராதமும் சேர்ந்து பெற்றவர்கள் 85,076 பேர்கள்.

(இ) சென்னை நகரில் மதுவிலக்கு வழக்குகள் அதிகம்.

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, மதுவிலக்குக் குற்றங்களைக் கண்டுபிடித்து, அவர்களைப் பிடிக்கும்போது காவல் துறையினருக்கு அவர்கள் அதிகத் தொந்தரவு கொடுப்பதாகவும், சில இடங்களில் துன்புறுத்தப்படுவதாகவும் அறிகிறேன். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படிப்பட்டவர்கள் எல்லாம் கடுமையான நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

**திரு. வே. தங்கபாண்டியன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, மது விலக்கு பூரணமாக நடைபெற வேண்டுமானால், திருப்திகரமாக நடைபெற வேண்டுமானால், அரிஷ்டம், மதுக்கஷாயம் போன்ற பொருள்கள் இந்தச் சட்டத்திற்குள்ளாக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்து



தமிழக அரசு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளதா? அதுபற்றி மத்திய அரசிடமிருந்து பதில் வந்துள்ளதா? சமீபத்திலே மிசா சட்டத்தின்கீழ் இந்தக் குற்றங்களுக்காகக் கைதானவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்களே, அதுபற்றி மத்திய அரசு உத்தரவிட்டதா என்று அறிய விரும்புகிறேன். அவர்கள் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதற்கு தமிழக அரசு ஏதாவது சட்டம் இயற்றுமா, அதுபற்றி தமிழ் நாடு அரசின் நிலை என்ன என்பதுபற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மது விலக்கு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமானால், நாம் பல கட்டு திட்டங்களை அதற்காகக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல, அரிஷ்டம் போன்ற பொருள்களை விற்பதாகச் சொல்லி மது வகையறுக்கள் தயாரிக்க பயன்படுத்துகிறார்கள். அவையிலே மாண்புமிகு அங்கத்தினர்கள் அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்டவர்கள், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், 128 பேர்கள் சமூக விரோதிகள் என்று கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்கள். மத்திய அரசு அவர்களை சமுதாய விரோதிகள் அல்ல என்றும், மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யக் கூடாது என்றும் உத்தரவிட்டது. மத்திய அரசின் கருத்தை ஏற்று மாநில அரசு அவர்களை விடுதலை செய்தது.

**திரு. கே. எஸ். கணபதி :** மதுவிலக்குக் குற்றங்களில் காவல் துறை அதிகாரிகளே சம்பந்தப்பட்டிருப்பதாக பரவலாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அது உண்மை. காவல் துறை அதிகாரிகள் முழுவதும் சம்பந்தப்பட்டிருப்பார்கள் என்று சொல்ல முடியாது. யாரோ ஒரு சிலர் தவறு செய்கிறார்கள். காவல் துறையில் இருப்பவர்களும் மனிதர்கள்தான். அப்படிச் செய்பவர்கள் கடுமையான தண்டனைக்குள்ளாக்கப்படுகிறார்கள். பலர் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள் விசாரணை நடைபெறுகிறது. அவர்களுக்கு உறுதுணையாக இருக்கின்ற அதிகாரிகள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு, மேல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறது.

**திரு. சி. வி. ராஜகோபால் :** மது அருந்துவதற்கு மெடிகல் கிரவுண்டிலே பெர்மிட் தருகிறார்கள். எங்கள் செங்கற்பட்டு மாவட்டத்தில் அந்த பெர்மிட் அனுமதிக்காமல் தள்ளிவிடுகிறார்களே, ஏன்?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** கேள்வி வழக்குகள் பற்றியதாக இருக்கின்றது என்பதை உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** மெடிகல் கிரவுண்டிலே பெர்மிட் தருவதற்கு வரைமுறைகள் எல்லாம் வைத்துக்கொண்டு, எங்கள் ஜில்லாவிலே, பெர்மிட்டே இல்லை என்று தடுக்கிறார்களே, அதற்கு ஏதாவது அரசு இன்னும் கொஞ்சம் சலுகை தருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக விண்ணப்பித்துக்கொண்டால், அதுபற்றி கவனிக்கப்படும். இது வரையில் 9 ஆயிரம் பேர்களுக்கு இந்தமாதிரி மது அருந்துவதற்கு பெர்மிட் மெடிகல் கிரவுண்டில் அளிக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி ஆங்காங்கு அதிகாரிகள் சென்று விசாரித்து ஆராய்ந்து, இது சம்பந்தமாக முடிவு செய்த பின்னர் தான், மது பெர்மிட் அளிக்கலாம் என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது.

THIRU D. V. D'MONTE : Sir, may I know how many Hotels in the City have been offenders in this respect?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதுபற்றிய விவரங்கள் என்னிடத்திலே இல்லை. பொதுவாக 5 ஸ்டார் ஓட்டல்களுக்கு இந்த விதி தவிர்க்கப்படுகிறது. தனிக் கேள்வி போட்டால், அதுபற்றிச் சொல்லுகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இந்த 5 நட்சத்திர ஓட்டல்களில் தனியாக பார் எடுத்துக்கொண்டால், 12 அம்சத் திட்டம் அவர்களைக் கட்டுப்படுத்தாதா ? அது மாதிரி இருந்தால், அதைக் கட்டுப்படுத்த நம்முடைய மாநிலத்தில் ஏதாவது சட்டம் கொண்டு வருவதாக உத்தேசம் உண்டா என்பதுபற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஏற்கெனவே இந்த மாதிரியான 5 ஸ்டார் ஓட்டல்களில், மது அருந்துகிறவர்கள் தனி அறையிலே விருந்துகளில் கலந்துகொள்ளும்போது அருந்தலாம். மேலும் அந்த விதியைக் கட்டுப்படுத்துவதாக இல்லை. 12 அம்சத் திட்டத்தை நாம் ஏற்கெனவே நிறைவேற்றியிருக்கிறோம். புதிதாக ஒரு அம்சம் என்று சொல்லி, தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில், மறுபடியும் அந்த 12 அம்சத் திட்டத்தை நாம் பரிசீலிக்கத் தேவையில்லை.

(பிற்பகல் 4-10)

**திரு. எல். பலராமன் :** தமிழ் நாட்டில் மதுவிலக்கை ரத்து செய்து மறுபடியும் மது விலக்கை அமுலுக்குக் கொண்டு வந்ததால், மொத்தம் 2 லட்சத்து 61 ஆயிரத்து 328 பேர்கள் அபராதம் மாத்திரம் கட்டியிருப்பதாகவும், 50,059





பேர் மது விலக்கு சம்பந்தமாக சிறைத் தண்டனை மாத்திரம் பெற்றதாகவும் ஒரு புள்ளி விவரத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். சமீப காலமாக வசதியுள்ளவர்கள்தான் இந்த மதுவைக் காய்ச்சுவதாகக் கூறுகிறார்கள். மதுவைக் காய்ச்சுவதால் குடிப்பவர்கள் எண்ணிக்கை அதிகமாகிறதா அல்லது குடிப்பவர்கள் எண்ணிக்கை அதிகமாகிறதால் காய்ச்சுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** குடிப்பவர்களை நம்பி காய்ச்சுபவர்கள் இருக்கிறார்கள்.

**திரு. வி. வெங்கா :** மிக அதிகமானவர்கள்மீது இந்த மது விலக்கு சம்பந்தமாக நடவடிக்கை எடுத்திருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சென்னை நகரிலும், கிராமப்புறங்களிலும் மது விலக்கை ரத்து செய்து அமுல்படுத்துவதற்கு முன்பு எந்த அளவுக்கு மது காய்ச்சி விற்பனை ஆகிக்கொண்டிருந்ததோ அதே அளவுக்கு விற்பனை செய்து வருவதாக பொது மக்கள் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் மற்றும் விற்பனையாளர்கள்மீது மேலும் தீவிர நடவடிக்கை எடுக்க அரசு ஏதேனும் சிறப்புத் திட்டம் வைத்திருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதற்காகத்தான் இப்பொழுது இருக்கிற மிசா சட்டத்தையேகூட பயன்படுத்தி இந்த கள்ளச் சாராயம் காய்ச்சுகின்ற பெரிய மொத்த வியாபாரிகளை எல்லாம் பிடிப்பதற்கு அரசு முயற்சித்து, அவர்களை எல்லாம் சிறையில் போட்டது. ஆனால் அவர்கள் எல்லாம் சிறையில் இருப்பது நல்லதல்ல என்று மத்திய அரசு அவர்களை விடுவிக்குமாறு உத்தரவிட்டிருக்கிறது, இருப்பினும் நம்முடைய சட்ட வரம்புக்கு உட்பட்டு தீவிரமான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. தொடர்ந்து எடுக்கும்.

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் :** 12 அம்சத் திட்டத்தைப் பயன்படுத்தி சமூக விரோதிகளை இந்த அரசு ஜெயிலில் போட்டது, மத்திய அரசு அவர்களை விடுவிப்பதற்கு உத்தரவிட்டது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிச் செய்தால், இந்த அரசுக்கும் இந்த அரசின் ஆணைக்கும் என்ன மரியாதை இருக்கிறது என்பதை நான் முதலமைச்சர் அவர்களிடமிருந்து அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** உணர்வுகளை உறுப்பினர் அவர்கள் தெரியப்படுத்தி விட்டார்கள். என்னால் முடியவில்லை.

**திரு. சி. வி. ராஜகோபால்:** இந்த மது விலக்கை மீண்டும் அமுல்படுத்தியதன் பிறகு, ஏராளமானவர்கள் அபராதம் கட்டியதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அபராதம் அதாவது 'பைன்' கட்டியதால், அரசுக்கு வந்த மொத்த லாபம் எவ்வளவு என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல், அதை லாபம் என்று கூற முடியாது. அபராதம் என்று தான் சொல்லலாம். அபராதம் மாத்திரம் கட்டியவர்கள் எண்ணிக்கை 2 லட்சத்து 61 ஆயிரத்து 328 பேர்கள் என்று சொன்னேன். மொத்தம் அபராதத் தொகையாக அவர்கள் செலுத்தியது 26 லட்சத்து 82 ஆயிரத்து 988 ரூபாய்.

### *Government grants for Private Colleges*

*73. Q.—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of Private Colleges which were sanctioned Government grants during the year 1971–72:

(*b*) the college-wise amount; and

(*c*) the number of Private Colleges which were not sanctioned Government grants during 1971–72?

### தனியார் கல்லூரிகளுக்கு அரசு மானியம்

**திரு. எல். பலராமன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1971-72 ஆம் ஆண்டில் எத்தனை தனியார் கல்லூரிகளுக்கு அரசு மானியம் வழங்கப்பட்டது?

(இ) கல்லூரி வாரியாக எவ்வளவு?

(உ) 1971-72 ஆம் ஆண்டில் மானியம் வழங்கபபடாத தனியார் கல்லூரிகள் எத்தனை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) 1971-72-ல் 146 தனியார் கல்லூரிகளுக்கு அரசு மானியம் வழங்கப்பட்டது.

(இ) விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

(உ) 5 கல்லூரிகள்.

---

@ 76-92 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**திரு. எல். பலராமன்:** 'அட்வான்ஸ் டீச்சிங் கிரான்ட்' என்ற வகையில் ஒருசில கல்லூரிகளுக்கு முன்னதாக கிரான்ட் கொடுத்தும் சிலவற்றிற்குக் கொடுக்காமல் இருப்பதற்கும் என்ன காரணம் என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** 1971-72 ஆம் ஆண்டில் 5 கல்லூரிகளுக்கு மட்டும் இந்த மானியம் வழங்கப்படவில்லை. அந்தக் கல்லூரிகளில் முறையே, அய்யப்பா பெண்கள் கல்லூரி, அல்லூர்; தேவி குமாரி பெண்கள் கல்லூரி, குழித்துறை; என்.வி.கே.எஸ்.டி. ஆசிரியர் கல்லூரி, மார்த்தாண்டம், ஆகிய மூன்று கல்லூரிகளுக்கும் மானியம் வழங்கப்படாததற்குக் காரணம் அந்தக் கல்லூரிகளுடைய வரவு-செலவுபற்றிய விவரங்களை கல்லூரிக் கல்வி இயக்குநருக்குத் தெரிவித்து மார்ச் 31 ஆம் தேதிக்கு முன் விண்ணப்பிக்காததுதான். அந்த ஆண்டு அவர்களுடைய கணக்கு வழக்குகளைப்பற்றி தாமதமாக விண்ணப்பித்ததால், அந்த ஆண்டு மானியத்தை அவர்கள் பெறவில்லை. அந்த ஆண்டு செந்தமிழ் கலைக் கல்லூரி, மதுரை, செந்தமிழ் ஓரியென்டல் கல்லூரி, மதுரை, ஆகிய இரண்டிலும் அதனுடைய நிர்வாகத்தைப் பொறுத்து தகராறு ஏற்பட்டது. காரஸ்பாண்டன்ட், தாளாளர் யார் என்று முடிவு செய்ய முடியாத நிலையில் வழக்குகள், வழக்கு மன்றங்களிலே இருப்பதனால், அந்த இரண்டு கல்லூரிகளுக்கும் மானியம் வழங்கப்படவில்லை. ஆக, தமிழகத்திலுள்ள இந்த ஐந்து கல்லூரிகளைத் தவிர, மற்ற எல்லாக் கல்லூரிகளுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. எஸ். கணபதி:** இந்தக் கல்லூரிகளுக்கு அரசாங்க மானியம் வழங்கும்போது, இன்னின்ன அடிப்படையில் வழங்கப்படும் என்பதற்கான தெளிவான விதி முறைகள் உண்டா? இந்த விதி முறைகளிலிருந்து கல்லூரிகள் தவறினால், கல்லூரிக் கல்வி இயக்குநர் அந்தக் கல்லூரிமீது நடவடிக்கை எடுக்க என்னென்ன வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன? கல்லூரிக் கல்வி இயக்குநர் தவறாக நடந்துகொண்டால், நிர்வாகிகள் மேற்கொண்டு விண்ணப்பித்து மானியம் பெற வழிவகை இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தனியார் கல்லூரிகளுக்கு எந்தெந்த முறையில் மானியம் வழங்க வேண்டுமென்ற விதி முறைகள் இருக்கின்றன. எந்த முறையில் அவர்கள் விண்ணப்பித்தால், கல்லூரியை வைத்திருந்தால், அவர்களுக்கு மானியம் கொடுக்கலாம் என்ற முறைகள் எல்லாம் இருக்கின்றன. அட்வான்ஸ் மானியத்தையும் மற்றும் முழுமையான மானியத்தையும் கொடுப்பதற்கு முன்பு, அந்தக் கல்லூரியினுடைய கணக்கு வழக்குகளையெல்லாம் சரி பார்க்கிறார்கள். இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னால்

கல்லூரிக் கல்வித் துறையிலே இதற்காகவென்று ஒரு தணிக்கையாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் பார்த்த பின்புதான் வழங்குகிறார்கள். கல்லூரி நிர்வாகிகளுக்கு இதிலே ஏதாவது குறைபாடுகள் இருந்தால், அவர்கள் மறுபடியும் விண்ணப்பித்துக் கொள்வதற்கு இப்பொழுது வாய்ப்புகள் இருக்கின்றன.

**திரு. எல். பலராமன் :** தனியாரால் நடத்தப்படும் கல்லூரிகளில் சில மதத்தின் பெயரால் நடத்தப்படுகின்றன. அப்படிப்பட்ட கல்லூரிகளில் சில வற்றில் பின்தங்கிய மாணவர்களையும் தாழ்த்தப்பட்ட மாணவர்களையும் சேர்த்துக்கொள்ள தயக்கம் காட்டுவதாகச் சொல்லப்படுகிறது. அரசு குறிப்பிடும் விகிதாசாரப்படி பின்தங்கிய மாணவர்களையும், தாழ்த்தப்பட்ட மாணவர்களையும் சேர்க்கவில்லையென்றால், அப்படிப்பட்ட கல்லூரிகளுக்கு அரசு வழங்கும் மானியத்தை நிறுத்தி விடும்படியான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எல்லாக் கல்லூரிகளும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களையும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களையும் ஒரு குறிப்பிட்ட விகிதாசாரப்படி கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்திருக்கிறோம். ஆண்டு தோறும் எல்லாக் கல்லூரி தாளாளர்களும் தங்களுடைய கல்லூரியில் இத்தனை பிற்படுத்தப்பட்டவர்களைச் சேர்த்திருக்கிறோம், இத்தனை தாழ்த்தப்பட்டவர்களைச் சேர்த்திருக்கிறோம் என்பது போன்ற புள்ளி விவரங்களை கல்லூரிக் கல்வி இயக்குநருக்குத் தவறாமல் அனுப்ப வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அவர்கள் அப்படி கடைசி வரை அனுப்பாவிட்டால், அந்தக் கல்லூரி மீது நடவடிக்கை எடுக்க இப்பொழுது வாய்ப்பு இருக்கிறது. மேலும் மானியத்தை நிறுத்தி விடவும் வாய்ப்பு இருக்கிறது. அந்த முறையில் அரசு மேலும் ஆராய்ந்து வருகிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, it was reported that one College in the City of Madras did not accept the Government's proposal not to collect fees from the Pre-University Class students. May I know whether there is any provision to suspend the grant to this institution or whether any amendments have been made by the Government in this regard?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எஸ்.ஐ.இ.டி. கல்லூரிக்கு மட்டும் மூன்று ஆண்டு காலமாக பள்ளிக் கல்வி இயக்குநர் மானியம் எதுவும் தரவில்லை. அதற்குக் காரணம் அவர்கள் அரசாங்கத்தினுடைய தலைமையிடத் தணிக்கைக்கு வைக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறியிருக்கிறார்கள். தாங்களே தணிக்கையாளரை வைத்து கணக்குகளைப் பார்க்கும்போது, அதை மறுபடியும் அரசாங்கத்தின் சார்பில் நாம் வைத்திருக்கும் தணிக்கையாளர் பார்க்கத் தேவையில்லை என்று கூறுகிறார்கள். இந்த மாநிலத்திலுள்ள 150 கல்லூரிகள் தணிக்கை செய்ய தங்களுடைய கணக்கு வழக்குகளைத் தரும்போது, இவர்கள் மட்டும் தர மறுக்கிறார்கள். அவர்கள் மறுத்ததன் காரணமாக, என்றைக்கு நீங்கள் தணிக்கைக்கு ஒத்துக்கொள்கிறீர்களோ அன்றைக்குத் தான் மானியம் தருவோம் என்று சொன்னோம். அவர்கள் தணிக்கைக்கு கணக்குகளைத் தர முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அப்படியானால், நாங்கள் மானியம் தர முடியாது என்று சொல்லி விட்டோம். அதன் பிறகு அவர்கள் அந்தக் கல்லூரியில் படிக்க விரும்பும் மாணவிகள் சம்பளம் கட்டித் தான் படிக்க வேண்டுமென்று பத்திரிகையில் அறிக்கை வெளியிட்டார்கள். சம்பளம் வாங்கிக்கொண்டுதான், அவர்களைக் கல்லூரியில் சேர்த்திருக்கிறார்கள். மாணவிகளும் சம்பளம் கட்டித்தான் படிக்கிறார்கள். இந்த விஷயத்தில் விரைவில் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று அரசு கருதித்தான், பல்கலைக் கழகத்துக்கும் இதுபற்றி எழுதியிருக்கிறோம். அவர்கள் விரைவில் ஒரு முடிவெடுப்பதற்காக ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** அரசாங்கம் மானியம் வழங்குவதை மட்டும் இப்படி நிறுத்தி விட்டால், அதன் காரணமாக மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நிறைய தொல்லைகள் ஏற்படுகின்றன. மாணவர்கள் சம்பளம் கட்டிப் படிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அங்கு பணியாற்றும் ஆசிரியர்களுக்குச் சரியாக ஊதியம் வழங்கப்படாத நிலை ஏற்படும். அந்த ஆசிரியர்களுக்கு பணிப் பாதுகாப்புக்குக்கூட உத்தரவாதமில்லாத நிலை ஏற்படும். பல ஆண்டுகளாக இந்த மானியம் வழங்கப்படாவிட்டால், அது பல விதமான சிக்கல்களை உருவாக்கும். மதுரை செந்தமிழ் கலைக் கல்லூரிக்கும், மதுரை செந்தமிழ் ஓரியெண்டல் கல்லூரிக்கும் அரசாங்க மானியம் வழங்கப்படாததால், இது போன்ற இடர்பாட்டுக்கு ஆளாகியிருக்கிறது. இதுபோன்ற இடர்பாடுகளைப் போக்கி அரசு விரைவில் தீர்வு காணுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்படிப்பட்ட சிக்கல்கள் நிறைந்த கல்லூரிகளை அரசாங்கமே ஏற்று நடத்துவதுதான் பொருத்தமாக இருக்கும். அதற்கென்று தனியாக ஒரு சட்டம் கொண்டுவந்தால், நாம் அத்தகைய கல்லூரிகளை ஏற்றுக்கொள்ள வழி ஏற்படும். அந்த வகையில் ஏதாவது செய்யலாமா என்பதுபற்றி இப்பொழுது ஆராய்ந்துகொண்டிருக்கிறோம். வழக்கு மன்றத்தின் தீர்ப்புக்குப் போனால், அரசாங்கம் எந்த வித

மான நடவடிக்கையிலும் ஈடுபடக் கூடாது என்ற தடை இருப்பதன் காரண மாக, நாம் அதில் ஈடுபட முடியாத ஒரு நிலை இருக்கிறது. அவர்களாகவே அரசிடம் கொடுக்க முன்வந்தால், அரசு ஏற்று நடத்தத் தயாராக இருக்கிறது.

**திரு. கே. ராஜாராம்:** அரசாங்கம் ஏற்று நடத்த இப்பொழுதுள்ள விதி முறைகளின்படி ஏதாவது சிரமங்கள் இருப்பினும்கூட, மானேஜ்மெண்ட் நிய மனம், காலேஜ் போர்ட் நியமனம், மற்றும் நிர்வாகத்தை அரசே ஏற்று நடத்துவது போன்ற வகையில் அதற்கு வேண்டிய ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வருவதன் மூலம் இப்பொழுதிருக்கும் கஷ்டங்களைக் குறைக்க அரசு முற்படுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அங்கே பணி புரிகின்ற ஆசிரியர்களுக்கு எந்த ஒரு கேடும் ஏற்படாத வகையில், தொடர்ந்து கல்லூரி சீராக நடைபெற வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். அப்படி ஏதாவது கல்லூரியில் பணி புரிகின்ற ஆசிரியர்களுக்குக் கேடு ஏற்படும் வகையில், சீர் கேடான முறையில் நடைபெறுமேயானால், அத்தகைய கல்லூரிகளைச் சீர்படுத்த நாம் புதிய சட்டம் கொண்டு வர வேண்டியவர்களாக இருக்கிறோம். அதைத் தான் அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. எல். பலராமன்:** இன்றைக்கு தமிழ் நாட்டில் புகுமுக வகுப்பில் படிக்கின்றவர்களுக்கு இலவசக் கல்வி என்ற திட்டத்தை அரசு நிறைவேற்றி, அதை மாணவ சமுதாயம் பயன்படுத்திக்கொண்டிருக்கிறது. இப்படி இருக்கும் போது, அரசின் கொள்கைக்கு விரோதமான முறையில் விதிகளுக்கு முரணாக சம்பளம் வாங்கிக்கொண்டு, புகுமுக வகுப்பில் மாணவிகளைச் சேர்க்கும் கல்லூரியின்மீது தீவிரமாக அரசு நடவடிக்கை எடுத்து, அதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அந்தக் கல்லூரி குறித்து அரசாங்க நிலையில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் யாவும் எடுத்து முடிந்து விட்டது. இப்பொழுது பல்கலைக் கழகத்துக்குக் கடிதம் எழுதியிருக்கிறோம். இப்படியே அவர்கள் தகராறு செய்துகொண்டேயிருந்தால், அனுமதியை மறுப் பதற்கு உரிமை இருக்கிறது. அப்படி உரிமை மறுக்கப்பட்டால், அங்கு படிக்கும் மாணவர்கள் பரிட்சை எழுத முடியாத ஒரு நிலை உருவாகும். அப்படி மாணவர்கள் பரிட்சை எழுத முடியாத நிலை உருவானால், மாணவர்கள் மேற் கொண்டு கல்லூரியில் சேர முன்வர மாட்டார்கள். ஆக, பல்கலைக் கழகம் அதன் சட்ட திட்டங்களை வைத்துக்கொண்டு ஆராய்ந்துகொண்டிருக்கிறது.

(பிற்பகல் 4-20)



**திரு. செ. முத்துசாமி:** கல்லூரிகளுக்கு அரசு மானியம் வழங்க அரசு ஆணை இருக்கிறது. இந்த ஆணைக்குக் கட்டுப்படாமல் கட்டணம் வசூலிக்கக் கூடிய கல்லூரிகள்மீது அவசரச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க அரசு முற்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அவசரச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க முடியாது. அதற்காக தனியாக ஒரு சட்டம் கொண்டுவர வேண்டும். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** அரசாங்கத்தினுடைய சட்டப்படி, புகுமுக வகுப்புகளுக்குக் கட்டணம் வசூலிக்கக்கூடாது என்று இருக்கிறது. ஆனால் சில கல்லூரிகளில் வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள். கட்டணம் இல்லாத கல்லூரிகள் இருக்கும்பொழுது, இந்தக் கல்லூரிகளில் கட்டணம் கொடுத்து மாணவர்கள் சேருவதற்குக் காரணம் என்ன? அங்கு மாணவர்கள் நன்றாகப் படிக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அங்கு சேருகிற மாணவர் களையும், சேர்க்கிற பெற்றோர்களையும்தான் கேட்க வேண்டும். மூன்று ஆண்டு களுக்கு முன்பே, இந்த ஆணை பிறப்பிக்கப்படுவதற்கு முன்பே, அவர்கள் கட்டணம் வசூலித்தார்கள். அந்தப் பணத்தை அவர்கள் திருப்பித் தரவில்லை. அரசாங்கமே அந்த வருஷத்தில் மாணவிகளிடம் அந்தக் கல்லூரி வசூலித்த கட்டணத்தைத் திருப்பித் தந்தது. அதிலும் சில மாணவிகள் வாங்கிக் கொள்ளவில்லை. அதன்பின், பத்திரிகை மூலமாக அறிக்கை விட்டோம். அந்தக் கல்லூரியில் கட்டணம் வசூலிப்பதற்கு அரசாங்கம் பொறுப்பில்லை என்று அறிக்கை கொடுத்தோம். ஆனாலும் இப்போது மாணவிகள் அந்தக் கல்லூரியில் சேர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

### *Teachers of Raja's College of Sanskrit and Tamil Studies, Tiruvaiyaru.*

* 74. Q.—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the revised scales of pay made applicable to the teachers of Oriental Colleges, are not made applicable to the teachers of Raja's College of Sanskrit and Tamil Studies at Tiruvaiyaru in Thanjavur district; and

(*b*) if so, the reason therefor?

[1975 நவம்பர் 6

**திருவையாறு, ராஜா சமஸ்கிருத தமிழ்மொழிப் பாட கல்லூரி ஆசிரியர்கள்**

**திரு. கே. எஸ். கணபதி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) கீழ்த்திசை மொழிக் கல்லூரிகளின் ஆசிரியர்களுக்குப் பொருந்தும் திருத்தியமைக்கப்பட்ட சம்பள வீதங்கள் தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறில் உள்ள ராஜா சமஸ்கிருத, தமிழ்மொழிப் பாட கல்லூரி ஆசிரியர்களுக்குப் பொருந்ாதென்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) ராஜா கீழ்த்திசைக் கல்லூரி, அரசு மானியம் பெறும் கல்லூரி அல்ல. ஆகையால் மானியம் பெறும் கீழ்த்திசைக் கல்லூரி ஆசிரியர்களுக்கு அமுலில் உள்ள ஊதிய விகிதங்கள் ராஜா இசைக் கல்லூரி ஆசிரியர்களுக்கு விஸ்தரிக்கப்படவில்லை.

**திரு. கே. எஸ். கணபதி:** மற்ற கலைக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர் தகுதியை இந்த கீழ்த்திசைக் கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர்கள் பெற்றிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் ஊதியம் வழங்கப்படுகிறது. இந்த நிலைமையை மாற்றி, மற்ற கல்லூரி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியம்போல் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** கீழ்த்திசைக் கல்லூரியைப் பொறுத்தவரையிலே, மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் ஒரு குழு அமைத்து, அது அதைப் பார்த்துக்கொண்டு வருகிறது. அரசினுடைய மானியம் எதுவும் பெறவில்லை. அந்தக் கல்லூரிகளிலே பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் மற்ற கல்லூரிகளில் போல் ஊதியம் கொடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரியிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர், "போதுமான அளவுக்குப் பணம் இல்லாத காரணமாக, ஊதியம் குறைவாகக் கொடுத்து வருகிறோம்; மற்ற கீழ்த்திசை கல்லூரிகள்போன்று இதற்கும் அரசாங்கம் மானியம் தரவேண்டும்" என்று விண்ணப்பம் கொடுத்திருக்கிறார். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இதுபற்றி பரிசீலனை செய்து ஒரு முடிவெடுக்கலாம்.

**திரு. கே. எஸ். கணபதி:** அந்தக் கல்லூரி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதிய வேறுபாட்டை மாத்திரம் அரசு ஒப்புக்கொண்டு, தானே கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1975 நவம்பர் 6]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அவர்களுக்கு ஈடாக சம்பளம் அளிக்க பணமில்லை. அரசாங்கம்தான் தரவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதை அரசு பரிசீலித்து தக்க முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** அந்தக் கல்லூரியிலே பணியாற்றும் ஆசிரியர்களுக்கு முறையான சம்பளம் கொடுக்கப்படவில்லை, குறைவான சம்பளம் கொடுக்கப்படுகிறது என்பதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றிய விவரம் இல்லை. அது மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக கவனிக்கப்பட வேண்டும்.

*Government Arts College for Women, Kumbakonam*

* 75. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that a sum of Rs. 1 lakh was donated to the Government a few years back by the Rotary Club of Kumbakonam for the construction of an Auditorium at the Government Arts College for Women, Kumbakonam;

(*b*) if so, whether the work relating to construction has been taken up; and

(*c*) if not, the reason for the delay?

**கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரி**

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரியில் அரங்கம் (Auditorium) ஒன்று கட்டுவதற்காக, கும்பகோணம் ரோட்டரி கிளப் சில ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு லட்சம் ரூபாயை அரசுக்கு நன்கொடையாக வழங்கியது உண்மையா?

(இ) ஆமெனில், கட்டுமானப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(உ) இல்லையெனில், தாமதத்திற்கான காரணம் யாது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1975 நவம்பர் 6

**திரு. ஜி. சுவாமிநாதன் :** எத்தனை ஆண்டுகளாக இந்தப் பணம் கொடுக்கப் பட்டு ஆடிட்டோரியம் கட்டப்படாமல் இருக்கிறது, அதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆடிட்டோரியம் கட்ட ரோட்டரி கிளப்பினரால் 1972-ம் ஆண்டு ஒரு லட்ச ரூபாய் நன்கொடையாக அந்தக் கல்லூரி முதல்வரிடம் கொடுக்கப்பட்டது. அந்த ஆடிட்டோரியம் கட்ட 3,40,000 ரூபாய் ஆகும் என்று கணக்கிடப்பட்டது. மேடைப்பகுதி மட்டும் கட்ட ஒரு லட்ச ரூபாய் செலவாகும் என்று கருதப்பட்டது. 1973-74-ல் அந்தப் பணி பொதுப்பணித் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள், செண்டேஜ் சார்ஜ் 14.5 சதவீதம் ஆகும் என்று சொல்லி 1,45,000 ரூபாய் வேண்டுமென்று கேட்டார்கள். ரோட்டரி கிளப்பினர் ஒரு லட்சம் தான் தந்திருக்கிறார்கள். பிறகு பொதுப்பணித் துறையினரே, அந்தக் கல்லூரி முதல்வரிடமிருந்து கணக்கு முழுவதையும் தங்களிடத்தில் ஒப்படைத் தால், செண்டேஜ் சார்ஜ் வசூலிக்காமல் விடலாம் என்று சொன்னார்கள். அதன் பின் அந்தக் கணக்கு பொதுப்பணித் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு, இப்போது அந்தக் கட்டட வேலை துவங்கிவிட்டது. அது இந்த ஆண்டுக்குள் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இந்தப் பணம் ஆடிட்டோரியம் கட்டுவதற்காக 1969-லே கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்போது ஒரு லட்ச ரூபாய் போது மானது என்று கருதப்பட்டது.

ஆனல் இப்போது அதற்கு 2, 3 லட்ச ரூபாய் ஆகும் என்று கருதப்படு கிறது. இன்னும் போகப் போக அதிகமாகலாம். ஆகையால் இந்த ஆண்டுக் குள்ளாகவாவது கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 1972-லேதான் ரோட்டரி கிளப் அரசினர் மகளிர் கல்லூரி முதல்வரிடம் வழங்கியது. அந்த ஆடிட்டோ ரியம் கட்ட ஆகும் செலவு 3,40,000 ரூபாய். மேடைப் பகுதிக்கு மட்டும் 1 லட்ச ரூபாய் ஆகும், மற்ற பகுதிக்கு மேற்கொண்டு நிதி ஒதுக்கீடு செய்து கட்டிக்கொள்ளலாம் என்று கருதப்பட்டது. ரோட்டரி கிளப்பினர் ஒரு லட்ச ரூபாய் தருவதால், அவர்கள் சின்னம் பொறிக்கப்பட வேண்டுமென்றும், அவர்கள் பெயரை அந்த ஆடிட்டோரியத்திற்கு வைக்க வேண்டுமென்றும்

@ 31-10-1975 ஆம் நாள் விஞப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப் பட்டது.



1975 நவம்பர் 6]

கோரிக்கை விடுத்தார்கள். அந்த இரண்டு கோரிக்கைகளையும் அரசு ஏற்று, அதற்கு அனுமதி அளித்து, இப்போது ரோட்டரி கிளப் ஆடிட்டோரியம் என்ற பெயரிலேயே கட்டப்பட்டு வருகிறது.

*Running of Nursing Homes by Professor of Medical College.*

@ * 63 Q.—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that complaints have been received during 1975, that the Professor of Psychiatry, Tirunelveli Medical College, now on leave, is running two Nursing Homes at Thanjavur, contrary to the service rules;

(*b*) if so, whether the matter has been investigated; and

(*c*) the action taken thereon?

மருத்துவக் கல்லூரி பேராசிரியர் தனி மருத்துவ இல்லங்களை நடத்துதல்.

**திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :—

(அ) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் பணியாற்றிவருபவரும், தற்போது விடுப்பில் உள்ளவருமான உள நோயியல் பேராசிரியர் பணிமுறை விதிகளுக்கு முரணுக, தஞ்சாவூரில் இரண்டு தனி மருத்துவ இல்லங்களை நடத்தி வருகிறார் என்று 1975-ஆம் ஆண்டில் புகார்கள் வந்துள்ளனவா ?

(இ) ஆமெனில், இதுபற்றிப் புலனாய்வு செய்யப்பட்டுள்ளதா ?

(உ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் இத்தகைய பதவி எதுவும் இல்லை.

(இ) & (உ) : இவ்விஞ எழவில்லை. கேட்கப்பட்ட கேள்வி திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியைப் பற்றியது. ஆனல் கோவை மருத்துவக் கல்லூரியிலே அத்தகைய பதவி உள்ளது. அதுபற்றி துணைக் கேள்வி கேட்பார்களானல், பதில் கூற முடியும்.

**திரு. கே. எஸ். கணபதி :** உளநோயியல் பேராசிரியராக இருந்தவர் தஞ்சை யிலிருந்து கோயம்புத்தூருக்கு மாற்றப்பட்டிருக்கிறார். அவர் தொடர்ந்து தஞ்சையிலே இரண்டு நர்சிங் ஹோம் நடத்தி வருகிறார். மேலும் அவர் இரண்டு ஆண்டுகளாக எக்ஸ்டிரார்டினரி லீவ் எடுத்துக்கொண்டு அதை நடத்தி

@ 31—10—1975 ஆம் நாள் விஞப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்

வருகிறார். இது சட்டத்திற்குப் புறம்பானது. இதுபற்றி அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தஞ்சையிலே அவ்வாறு ஒரு உள நோயியல் பேராசிரியர் தனியாக இரண்டு நர்சிங் ஹோம் நடத்தி வருகிறார் என்ற குற்றச்சாட்டு காரணமாகத்தான், அவர் தஞ்சையிலிருந்து கோயம்புத்தூருக்கு மாற்றப்பட்டார். நீண்டகாலமாக, பதவியிலே உள்ளவர்கள் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றல் ஆகிறபோது, விடுமுறை எடுக்க அவர்களுக்கு உரிமை இருந்து வருகிறது. அந்த முறையிலே இவர் முதலிலே 4 மாதம் விடுமுறை பெற்றார். அதன்பின் 62 நாட்கள் ஈட்டிய விடுப்பு பெற்றார். பின்னர் 120 நாட்கள் ஈட்டிய விடுப்பு பெற்றார். அதற்குப் பிறகு சம்பளத்துடன் கூடிய விடுப்பு எடுக்க முடியாத நிலையிலே, சம்பளம் இல்லாமல் ஈட்டாத விடுமுறை பெற்றார்.

இதற்கிடையிலே சில வாரங்கள் விட்டு விட்டு அங்கு வந்து பணியாற்றி விட்டு, இப்போது மெடிகல் லீவ் வேண்டுமென்று கேட்டு, மெடிகல் சர்ட்டிபிகேட் கொடுத்து தற்போது விடுப்பில் இருந்து வருகிறார். அது மெடிகல் போர்டில் பரிசீலனையில் இருக்கிறது. மெடிகல் போர்டு பரிசீலனை செய்து, தவறு என்று தெரிவிப்பார்களேயானால், நடவடிக்கை எடுக்கலாம். இதற்கிடையிலே, அவர்கள் சொந்தப் பொறுப்பிலே நர்சிங் ஹோம் நடத்திக்கொண்டிருப்பதாலும், அரசுப் பணியை சரியாகச் செய்யாததாலும், அந்த அடிப்படையிலே அவர்களை ஏன் வேலையிலிருந்து நீக்கம் செய்யக்கூடாது என்று காரணம் கேட்குமாறு, மருத்துவத் துறை இயக்குநர் அவர்களிடத்திலே வாய்மொழியாகச் சொல்லியிருக்கிறேன். அதற்கு இயக்குநர் அவர்கள் விஜிலன்ஸ் துறை மூலமாக புலன் விசாரணை செய்யச் சொல்லி, நடவடிக்கை எடுக்கச் சொல்லலாம் என்று தெரிவித்தார்கள். இருந்தாலும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க இயக்குநர் அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள்.

(பிற்பகல் 4-30)

**திரு. கே. எஸ். கணபதி :** தஞ்சாவூரிலுள்ள மருத்துவ மனையில் 'டவுட்' என்று சொல்லக்கூடிய ஏஜன்டுகள், உளநோய் உள்ளவர்கள் மருத்துவ மனைக்கு வரும்போது, இங்கிருக்கும் மருத்துவர்கள் புதிதாக வந்தவர்கள்; சிறப்பாக வியாதி குணமாக வேண்டுமானால், இங்கு வேலை பார்த்த பழைய மருத்துவரிடம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நர்சிங் ஹோமுக்கு அழைத்துப் போகிறார்கள். அந்த நோயாளிகளிடமிருந்து அதிகமான தொகை வசூலிக்கப் படுகிறது. இப்படி அழைத்துச் செல்லும் ஏஜன்டுகளுக்கு 25 சதவிகிதம்





என்ற முறையில் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. என்னுடைய நண்பர் ஒருவர்கூட அதில் சிக்கிக்கொண்டு அவஸ்தைப்பட்டார். எனவே அந்த மருத்துவர்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு உறுப்பினரைப் போல, அமைச்சரும் அவசரப்பட்டுச் செய்துவிடலாமென்று எண்ணுவது உண்டு. ஆனால் யார்மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமானாலும், சில விதிமுறைகளைப் பின்பற்றித்தான் செய்ய வேண்டும். இல்லையென்றால், இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், அந்தக் காலத்திற்கும் சேர்த்துச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்ற தீர்ப்பை, ஏதாவது ஒரு நீதிபதியிடம் பெறும் வாய்ப்பு அரசுப் பணியில் இருப்பவர்களுக்கு இருக்கிறது. உறுப்பினரவர்கள் சொல்லும்போது, அங்கே சில டவுட்டுகள் இருக்கிறார்கள். அவர்களை தூது செல்கிறார்களென்றார்கள். மருத்துவ மனையில் பணியாற்றுபவர்களே அப்படிச் செய்கிறார்களென்ற புகார் வருமானால், அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU A. R. DAMODARAN : Sir, what we would like to know is whether it is permissible under the Government Service Rules for a Professor of Psychiatry in a Medical College to have Nursing Homes. If it is established that she is running a Nursing Home, why the Director of Medical Education has to wait for three years to initiate action only on the word of the Hon. Minister is not understood by the Members of this House. May I know, Sir, whether there is reluctance on the part of the department even to take action against proved offenders of this type?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அவர்கள் அவ்வாறு மருத்துவ மருந்தகம் ஒன்றை அல்லது மருத்துவமனை ஒன்றை நடத்தி வந்தாலுங்கூட, அது அவர்களுடைய பெயரிலே நடத்தப்படுகிறதென்பது சில கட்டங்களிலே மறைக்கப்படுகிறது, சில நேரங்களில் வேறு பெயரை வைத்துவிடுகிறார்கள். நர்சிங் ஹோம் என்ற பெயர் இல்லாமலேயே நடத்துகிறார்கள். சுருக்கமாகச் சொல்வதாக இருந்தால், ஏமாற்றுவதற்கான வல்லமையை சிலர் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் அப்படி ஏமாற்றும்போது, சட்டப்படி குற்றம் சாட்டப்படாமல் போய்விடக்கூடும். அவர்கள் ஆற்ற வேண்டிய கடமையை ஆற்றவில்லை என்று அப்போது குற்றம் சாட்ட வேண்டியிருக்கிறது. மற்றொன்று, அவர்கள் விடுமுறை பெற்ற காரணத்தாலே, குற்றம் சாட்ட முடியவில்லை. எனவே விஜிலன்ஸ் மூலம் நிரூபிக்க வேண்டும்.

*திரு. எம். ஆறுமுகசாமி :* இந்த மருத்துவப் பேராசிரியை தஞ்சை நகரத்திலே, மக்கள் குடியிருக்கக்கூடிய பகுதியிலே மருத்துவ மனையை வைத்துக்கொண்டு, பயித்தியக்காரர்களை காலையிலும், மாலையிலும் சாலையிலே ஊர்வலமாகப் போகவிடுவதும், வைத்தியம் என்ற பெயரிலே அந்தப் பயித்தியக்காரர்களை மருத்துவமனையில் அடிப்பதும், அதனால் கூச்சல் எழுவதும், அதனால் அந்தப் பகுதியில் வாழ்பவர்களுக்குச் சங்கடம் ஏற்படுகிறதென்பதும் அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா? அப்படிப் பட்ட தகவல் அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந் தால், அதன் நிமித்தம் அரசுக்கு நடவடிக்கை எடுக்க எண்ணமுண்டா?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவம் எனக்கு ஏற்படவில்லை. அவர்கள் அதுபற்றி எனக்குத் தெரிவிக்கவுமில்லை. அப்படி ஏதாவது இருந்தால், பக்கத்திலுள்ளவர்கள் போலீசுக்குப் புகார் செய்தால் போலீசார் தொடர்ந்து நடவடிக்கை எடுக்க முடியுமென்று எதிர்பார்க்கிறேன்.

*திரு. ஜி. சுவாமிநாதன் :* முன்பெல்லாம் இராஜா மிராசுதார் மருத்துவ மனைக்கு தடுப்புச் சுவர் இல்லாமல் இருந்தது. மாண்புமிகு அமைச்சரவர்கள் அங்கு வந்தபோது, இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டு, எல்லாப் பக்கத்திலும் தடுப்புச் சுவர் போடப்பட்டது. அப்படியிருந்தும்கூட, டவுட்டுகள் என்று சொல்லக்கூடிய ஏஜன்டுகள் மிக அதிகமான அளவில்—40, 50 பேர்கள் என்ற அளவில் இருந்துகொண்டு, நோயாளிகளை ஈர்த்துக்கொண்டு போவதும், அதிகப்படியான அளவுக்குப் பணத்தை கமிஷனாக வாங்குவதும் தொடர்ந்து நம்முடைய மாநிலத்தில், தஞ்சாவூரில் மட்டும்தான் நடைபெறுகிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபற்றி அட்வைசரி கமிட்டியிலும் பேசப் பட்டது. அதற்கு ஒரு முடிவு கட்டினால், பல குழப்பங்கள் தீரும். எனவே அது குறித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்குமாவென்று அறிய விரும்பு கிறேன்.

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அந்த மருத்துவ மனையின் ஆலோசனைக் குழுவில் இடம் பெற்றிருப்பார்களென்று எதிர்பார்க்கிறேன். அரசு மருத்துவ மனையில் பணியாற்றுபவர்களே டவுட்டு களாக இருந்தால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கலாம். அப்படிப்பட்ட டவுட்டுகளைப் பயன்படுத்தும் டாக்டர்கள் யார் யார் என்பதற்கான பட்டியலை மாண்புமிகு உறுப்பினர்கள் தந்தால், அதில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரையும் பணிமாற்றம் செய்யலாம். அந்த டாக்டர்களை மாற்றலாம் அல்லது டவுட்டுகள் மருத்துவமனையில் பணியாற்றுபவர்களாக இருந்தால், அவர்களை மாற்றலாம். இரண்டுமில்லாமல், வெளியார் தொடர்பில் செய்தால், டாக்டர்கள் அதற்கு உடன்பட்டிருந்தால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கலாம்.



THIRU D. SANTOSHAM : Hon. Deputy Chairman, Sir, is it not a fact that Professors who are specialists and experts in particular departments are allowed to have consulting practice and it is not necessary that the expert knowledge of such persons should be made available to the public by allowing them to **have** consulting practice during their spare hours?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* அரசாங்கப் பணியில் ஈடுபட்டிருக்கக் கூடிய மருத்துவர்களில் சிலர், நிர்வாகத் துறையில் இருக்கக்கூடிய மருத்து வர்களில் சிலர் எந்தக் காரணத்தை முன்னிட்டும் பிராக்டிஸ் செய்யக்கூடாது. Either Consultation or general practice எதுவும் செய்யக் கூடாது. பேராசிரியர்களாக உள்ளவர்கள் அல்லது Clinical professors ஆக உள்ளவர்கள் Consultation வழங்கலாம். Consultation வேறு, Practice வேறு. அவர்கள் ஆலோசனை வழங்குவதற்கு இன்றைக்கு இடமிருக்கிறது. அதை Limited practice என்று சொல்ல வேண்டும். ஆனால் பலர் நர்சிங் ஹோம் வைத்துக்கொள்ளும் அளவுக்கு அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, அதில் வேறு சிலருடைய பெயர்களை வைத்துக்கொண்டு, தவறுகள் செய்வது உண்மைதான். சட்டப்படி எப்படி நடவடிக்கை எடுப்பதென்பது ஆராய்வதற்குரியது.

THIRU G. VASANTHA PAI : Sir, in view of the poor attention in many of our Government Hospitals and overcrowding there, why not we abolish the rule prohibition private practice and make it paremissible for all medical practitioners to practise privately instead of finding fault with one or two people who are doing it surreptitiously?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* அவ்வாறு அனுமதிக்க ஆரம்பித்தால், மருத்துவ மனைகளில் வேலையே நடக்காது.

*Chatram Dispensary, Tiruvaiyaru.*

@ * 64. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Health be pleased to staate—

(a) whether there is any proposal with the Government for taking over the Chatram Dispensary at Tiruvaiyaru, Thanjavur District, and running the same as a Government hospital; and

(b) if so, when it is expected to be implemented ?

---

@ 31-10-1975 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப் பட்டது.

[1975 நவம்பர் 6

### திருவையாறு சத்திரம் மருந்தகம்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாற்றில் உள்ள சத்திரம் மருந்தகத்தை அரசே மேற்கொண்டு அதனை அரசு மருத்துவமனையாக நடத்துவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், இது எப்பொழுது செயல்படுத்தப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** துணைத் தலைவரவர்களே, (அ) இல்லை.

(இ) எழவில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** துணைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவையாறு மருந்தகம், சத்திரம் டிபார்ட்மென்ட் என்ற நிர்வாகத்தினால் நடத்தப்படுவதாகும். அங்கு கடந்த மூன்று ஆண்டுக் காலமாக மருந்து இல்லையென்று சொல்கிறார்கள். மருந்து கிடையாதென்று போர்டு எழுதி, மருத்துவ மனையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக வைத்திருப்பதாக மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் சொல்லியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரவர்களும் இதைப்பற்றி எழுதியிருப்பதாகச் சொன்னார்கள். கிட்டத்தட்ட ஒரு லட்சம் மக்கள் இருக்கிறார்கள். அதைப்பற்றி அரசு தக்க நடவடிக்கை எடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** துணைத் தலைவரவர்களே, அந்த வட்டாரத்தில் ஒரு லட்சம் மக்கள் இருப்பார்கள். அந்தப் பகுதியில் ஒன்றிய மருத்துவ மனை—ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்று இருக்கிறது. அது தவிர, திருவையாறு மருந்தகம் இருக்கிறது. திருவையாற்றிலிருந்து இரண்டு, மூன்று மைலில் ஒன்றியத்தின் மேற்பார்வையில் ஒரு டிஸ்பென்சரி இயங்கிக் கொண்டிருக்கிறது. இது ஒன்றியத்தினுடைய மருத்துவ மனையாக இல்லாமல், சத்திரம் டிஸ்பென்சரி என்று தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. ஒரத்தநாடு மாணவர்கள் இல்லம் போன்று, அற அடிப்படையில் இது நடைபெற்று வருகிறது. இதன் நிர்வாகத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே செம்மைப்படுத்த முடியும். செம்மைப்படுத்த முடியவில்லை என்று அவர்கள் அரசுக்கு எழுதுவார்களேயானால், அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம். ஒன்றிய மருத்துவ மனைகளைப்பற்றிப் பரிசீலிக்கும் அதே கோணத்தில் இந்த மருத்துவ மனையைப்பற்றிப் பரிசீலிக்க முடியாது. 11-7-1975-ல் மருத்துவ நலத் துறை இயக்குநருக்கு இதுபற்றி ஒரு வேண்டுகோள் வந்திருப்பதாகவும், அது



1975 நவம்பர் 6]

ஆராயப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர், அந்த மருத்துவ மனையின் நிலைமைகளை விளக்கி, அரசு அதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னால், அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

(பிற்பகல் 4-40)

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இதுபற்றி இந்த அபிவிருத்தி மன்றக் கூட்டத்திலே பேசும்போது, தங்களாலே அதற்குப் பணம் கொடுத்து நடத்த இயலவில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அரசே இதை எடுத்துக் கொள்ளலாம் என்று கடிதம் எழுதியிருப்பதாகவும் சொன்னார்கள். ஆக, அதை அரசே நடத்துமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன். மேலும் திருவையாறு பகுதி மக்கள் அதிகமாக இருப்பதாலும், அதிக அளவில் நோயாளிகள் இருப்பதாலும், அரசு புதிதாக ஒரு மருத்துவமனையை வைக்க முயற்சி செய்யுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** ஏற்படுத்திய மருத்துவமனையில் மருந்து இல்லை என்ற நிலை இருக்கும்போது, புது மருத்துவமனை ஏற்படுத்துவது என்பது கட்டிய மனைவிக்கு குழந்தை இல்லை என்று புது மனைவி தேடுவது போல் ஆகிவிடும். அதற்கு அதிகமான செலவு ஆகும். ஆகவே, தற்போது இயலாது.

### Malaria

* 76. Q.—THIRU D. V. D'MONTE: Will the Hon. the Minister for Health be pleased to staate—

(a) the specific measures taken by the Health anthorities to combat the resurgence of Malaria and to control the mosquito menace in Tamil Nadu; and

(b) the steps taken to meet the reported shortage of Anti-Malaria Drugs?

### மலேரியா

**திரு. டி. வி. டி' மாண்டி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாட்டில் மீண்டும் மலேரியா பரவுவதை எதிர்த்துப் போராடவும், கொசுத் தொல்லையைக் கட்டுப்படுத்தவும் சுகாதார அதிகாரிகளால் எடுக்கப்பட்ட திட்டவட்டமான நடவடிக்கைகள் யாவை ?

(இ) மலேரியா தடுப்பு மருந்துகள் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) & (இ) விவர அறிக்கையொன்று @ மன்றத்தின் முன்வைக்கப்பட்டுள்ளது.

THIRU D. V. D'MONTE: Sir, have the Government any proposal to use larve-eating fish called Gamboosa or Gabi as a weapon to control malaria, as is done by the Ahmedabad Municipal Corporation in Gujarat? May I know, Sir, what programme, if any, is in the mind of the Government and what it would cost?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** ஒரு விரிவான அறிக்கை தரப்பட்டிருக்கிறது. விவரங்களிலேகூட 'கண்டிஷனல்'-ஆகத்தான் ஒவ்வொரு கட்டத்திலேதான் பயன்படுத்த முடியும் என்று இருக்கிறது. எந்த ஒரு புது மருந்தையும் பயன்படுத்தக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும்.

**திரு. டி. சந்தோஷம்:** மதுரை மாநகராட்சியில் முன்பெல்லாம் டி.டி.டி. ஸ்ப்ரே ஒழுங்காக நடந்து வந்தது. இப்போது அது முற்றிலும் கைவிடப்பட்டுள்ளது. அவ்வாறு கைவிடப்பட்டது, எந்தவிதப் பயனும் ஏற்படவில்லை என்ற காரணத்தாலா அல்லது தேவையில்லை என்ற காரணத்தாலா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** ஒரு முறை மலேரியா ஒழிப்புப் பணி தீவிரமாக நடைபெற்றது. 1965 ஆம் ஆண்டிலே தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், மலேரியா ஒழிப்பு வெற்றிபெற்ற ஒன்றாகக் கருதப்பட்டது. அதற்குப் பின்னர் வேறு சில மாநிலங்களில், இந்த மலேரியா இடையிடையே தோன்றியது என்று தெரிவிக்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டிலே தமிழ் நாட்டில் தர்மபுரி மாவட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலும், மேலும் ஈரோடு, சேலம், திருச்சி போன்ற பகுதிகளிலேயும், சென்னையிலேயும் மலேரியா மறுபடியும் காணப்பட்டது. மலேரியா அடையாளம் உள்ளவர்கள் சிகிச்சைக்கு வருகிறார்கள் என்ற நிலைமை ஏற்பட்டபோது, எந்தெந்தப் பகுதிகளிலே மறுபடியும் வளருகிறது என்று பார்த்து, அந்தந்தப் பகுதிகளிலே முனைப்புப் பணி நிறைவேற்றும்படி கேட்டுக்கொள்ளப்பட்டு, மாநகராட்சிகள் மூலமாகவும், நகராட்சிகள் மூலமாகவும் மற்றும் அரசு மருத்துவமனைகள் மூலமாகவும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. மதுரையிலே இப்போது இல்லை என்று சொன்னால், இப்போது மதுரையிலே அந்தப் பிரச்சினை இல்லை என்று பொருள்.

@ 93-94 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



## *Applications for Power Connections*

@ * 65 Q.—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of applications received during 1972-73, 1973-74 and 1974-75 up to 28th February 1975, requesting power connection for (i) domestic and (ii) agriculture purposes in North Arcot District; and

(b) among them, the number of power connections given, category-wise?

### மின் இணைப்பு கோரிய மனுக்கள்.

**திரு. எல். பலராமன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் 1972-73, 1973-74 ஆம் ஆண்டுகளிலும், 1974-75 ஆம் ஆண்டில் 28-2-1975 முடியவும் (1) வீடு (2) வேளாண்மை உபயோகத்திற்காக மின் இணைப்பு கோரி வந்த மனுக்கள் எத்தனை?

(இ) அவைகளில் இதுவரை இணைப்புகள் வழங்கப்பட்டவை இனம் வாரியாக எத்தனை?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:**

| | வீட்டிற்கு அளிக்கப்பட்ட மின் இணைப்புகள். | | வேளாண்மைக்கு அளிக்கப்பட்ட மின் இணைப்புகள். | |
|---|---|---|---|---|
| வருடம், | மின் இணைப்பு கோரி வந்த மனுக்கள். | மின் இணைப்பு வழங்கப்பட்டவைகள். | மின் இணைப்பு கோரி வந்த மனுக்கள். | மின் இணைப்பு வழங்கப்பட்டவைகள். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1972–73 | 6,001 | 4,971 | 10,307 | 8,555 |
| 1973–74 | 5,529 | 5,476 | 4,787 | 4,684 |
| 1974–75 | 6,370 | 5,580 | 4,294 | 2,867 |

@ 31-10-1975 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.

**திரு. எல். பலராமன் :** அமைச்சர் அவர்கள் பதிலிலே வீடுகளுக்கு மின்னிணைப்பு ஏறத்தாழ முழுவதும் கொடுக்கப்பட்டுவிட்டது என்று சொன்னார்கள். விவசாய பம்புசெட்டுகளுக்கு, 10 ஆயிரத்துக்கு 8 ஆயிரம் என்ற அளவில் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக மூன்று பிரிவாக மனுக்கள் வாங்குகின்றார்கள். அதாவது, Construction, O. & M., Commercial. என்ற மூன்று பிரிவுகளில் வாங்குகின்றார்கள். இப்படி மூன்று பிரிவின்படியும் வாங்கும் மனுக்களை ஒன்று திரட்டித்தான் பதில் அளிக்கப்பட்டதா, அப்படியிருப்பின் பல மனுக்கள் விடப்பட்டிருக்கும் என்பதை அரசு அறியுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஒன்று திரட்டித்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. குறைவுக்குக் காரணம் ஒதுக்கப்படுகின்ற தொகை போதவில்லை என்பதுதான். மேலும் இப்போது அலுமினியம் கண்டக்டர் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. சீக்கிரத்தில் அது தாராளமாகக் கிடைத்து விடும். கிடைத்தவுடன் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொண்டு, நிறைவேற்ற வேண்டும் என்று அரசு தெரிவித்திருக்கிறது.

**திரு. வி. வெங்கா :** அலுமினியம் கண்டக்டரை உபயோகப்படுத்தாமலே பக்கத்திலே இருக்கக்கூடிய போல்கள் மற்றும் சாதனங்களை வைத்தும் உபயோகப்படுத்தலாம். ஆகவே, பக்கத்திலே இம்மாதிரி வசதிகள் இருந்தும், சில இடங்களிலே வழங்கப்படாமலிருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவாரா? அம்மாதிரி வசதிகள் இருந்தால், அந்த இடங்களுக்குக் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடங்களில் பிரச்சினை இருக்கிறது என்று விவரங்கள் கொடுத்தால், பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எல். பலராமன் :** 1974-75 ஆம் ஆண்டிலே 4 ஆயிரம் மனுக்கள் தான் பதிவு செய்யப்பட்டன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ரிஜிஸ்தர் செய்ததனால்தான், 4 ஆயிரம் என்ற நிலை. வரும் எல்லா மனுக்களையும் பதிவு செய்யாத ஒரு நிலை இருப்பதை அரசு அறியுமா? வருகின்றவைகளை எல்லாம் தக்கவாறு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க அரசு அறிவுரை வழங்குமா என்றும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** வந்திருக்கின்ற விவரப்படி வேளாண்மைக்கு அளிக்கப்பட்ட மின்னிணைப்பு குறைவுதான். மனுக்கள் வந்திருப்பது 4,794, அதில் இணைப்பு கொடுக்கப்பட்டிருப்பது 2,497 மனுக்களுக்குத்தான். பதிவு செய்துதான் இந்த விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.





முக்கியமான பிரச்சினை இதுவல்ல. வரும் மனுக்களையெல்லாம் பதிவு செய்கின்றார்கள். அலுமினியம் கண்டக்டர் கிடைக்கவில்லை என்பதுதான் முக்கியமான பிரச்சினை. ஆறு மாத காலமாக இந்த அலுமினியம் கண்டக்டர் கிடைக்கவில்லை. டன் ஒன்றுக்கு அதிகமான விலை இருந்தும் பரவாயில்லை என்ற முறையில், நம்முடைய அரசின் சார்பாக இறக்குமதி செய்வதற்குக்கூட ஒப்புக்கொண்டோம். ஆனால், இவைகளை வெளிநாட்டிலிருந்து வாங்கக்கூடாது என்று மத்திய அரசு சொல்லியிருக்கிறது. இங்கே உற்பத்தியாகும் அலுமினியம் கண்டக்டர்கள் இந்த ஆண்டு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். ஆகவே அவைகள் கிடைக்கப்பெற்றவுடன், எல்லாவற்றுக்கும் இணைப்புக் கொடுத்து, பிரச்சினைகள் இல்லாமல் போகும் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வினாக்கள் 77, 78 மற்றும் 79 ஒன்றாகவே இருப்பதால், அமைச்சர் அவர்கள் தொடர்ந்து பதில் அளிப்பார்கள்.

## *Artificial Rain.*

* 77. *Q.*—THIRU D. V. D' MONTE : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to produce artificial rain in Madras City by seeding clouds with silver iodide to relieve water scarcity; and

(*b*) if so, the steps taken in that regard?

## செயற்கை மழை.

**திரு. டி. வி. டி' மாண்டி :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை மாநகரில் தண்ணீர் பற்றாக்குறையைப் போக்க மேகத்தினூடே சில்வர் அயோடைடு தூவி செயற்கை மழை பெய்விக்கும் செயற் குறிப்பு எதுவும் உள்ளதா?

(இ) ஆமெனில், அதுகுறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) & (இ) மதிப்பிற்குரிய உறுப்பினர் அறியவிழையும் தகவல் அடங்கிய விவர அறிக்கை @ ஒன்று சட்டமன்ற மேலவையில் வைக்கப்பட்டுள்ளது.

---

@ 96-97 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

* 78. *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have any plans for producing artificial rains in drought-affected areas, whenever necessary and possible; and

(*b*) if so, the details thereof?

**திரு. டி. சந்தோஷம் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) வறட்சிப் பகுதிகளில், அவசியமான பொழுதும் இயன்ற பொழுதும், செயற்கை மழை பெய்யச் செய்வதற்கான திட்டங்கள் எவையும் அரசிடம் உள்ளனவா ?

(இ) ஆமெனில், அவை பற்றிய விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) தற்போது இல்லை.

(இ) மதிப்பிற்குரிய உறுப்பினர் அறியவிழையும் தகவல் அடங்கிய விவர அறிக்கை @ ஒன்று சட்டமன்ற மேலவையில் வைக்கப்பட்டுள்ளது.

* 79 *Q.*—THIRU D. V. D' MONTE : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the total expenditure so far incurred on the artificial rain experiment in Tamil Nadu; and

(*b*) the results and evaluation of the artificial rain experiment?

**திரு. டி. வி. டி'மாண்டி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாட்டில் செயற்கை மழை பொழிவிப்பதற்காக இதுவரையில் மேற்கொண்ட சோதனைகளுக்கான மொத்தச் செலவு யாது ?

(இ) செயற்கை மழை ஆய்வின் முடிவுகளும், மதிப்பீடும் யாவை ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) செலவு விவரம் மேலவை முன் வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் @ குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(இ) மதிப்பீடு இன்னும் நடைபெறவில்லை. அமெரிக்க நிபுணர்கள் அறிக்கையைக் கொடுப்பதற்கு இன்னும் மூன்று மாத காலம் நீடித்துத் தர வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கை கிடைத்த பின் வெற்றியா, தோல்வியா, வெற்றி என்றால் எத்தனை சதவீதம் என்றெல்லாம் மதிப்பீடு செய்ய முடியும்.

---

@ 95-96 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.





THIRU D. V. D' MONTE : Sir, have the Government proposed to have a permanent set-up for artificial rain in the State?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, in the statement placed on the table of the House, it is staated that the report of the Americaan Experts is expected in November. They have asked for three months' time to submit their report. Only after the report is received, we will be able to evaluate whehter this artificiaal rain scheme is successful and if so, to what extent.

**திரு. டி. சந்தோஷம் :** சென்ற ஆண்டிலே வறட்சியின் கொடுமையால் கிழக்கு ராமநாதபுரம் பகுதியில் பல கிராமங்கள் முழுவதுமாகக் காலி செய்யப் பட்டு, அங்கு வாழ்ந்த மக்கள் அகதிகளாக தஞ்சை மாவட்டத்திற்குச் சென்றார்கள். இந்த வறட்சி ஏற்பட்டபோது, வறட்சியைக்கூடக் கருதாமல் செயற்கை மழை பெய்விக்க முயற்சிகள் மேற்கொண்டோம். இவ்வாறு செய்வது மிகவும் அவசியம். இனிமேலும், இம்மாதிரி நிலைமைகள் ஏற்பட்டால், செலவைக்கூடப் பொருட்படுத்தாமல் செயற்கை மழை பெய்விக்க அரசு முயற்சிகள் மேற்கொள்ளுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 4.50)

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** துணைத் தலைவரவர்களே, விவர அறிக்கையில் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. செலவை நாம் பொருட் படுத்தவில்லை. ஏற்கெனவே ஏறத்தாழ 19 லட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகி யிருக்கிறது. அதிலே ரூ. 6,23,742-க்கு மத்திய அரசு நமக்குத் தீர்வையாக விதித்திருக்கிறார்கள். அதைத் திரும்பப் பெறும்படியாக நாம் கேட்டிருக் கிறோம். செலவைப் பொறுத்து அல்ல. செலவு எவ்வளவு இருந்தாலும், தண்ணீர்ப் பாசன வசதிக்காக செலவு செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. ஆனால் நிபுணர்கள் கொடுக்கும் அறிக்கையைப் பரிசீலனை செய்ய அதற்கு என்று ஒரு தனிக் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு இன்னார் இன்னார் இந்தக் குழுவில் இருக்கவேண்டும் என்று சொல்லியிருக் கிறார்கள். அந்தக் குழு பரிசீலனை செய்து, நாம் ஏற்கெனவே செய்த அந்தச் சோதனைகள் எல்லாம் வெற்றி பெற்றதா, அல்லது இவ்வளவு மழை அதனால் தான் பெய்ததா, புழலேரியிலே செய்த சோதனையால் மதுராந்தகத்திலே பெய்ததா, இப்போது வந்த மழை எல்லாம் சில்வர் அயோடைட்டை நாம் தெளித்ததனாலா, என்பதுபற்றி எல்லாம் அறிக்கை தரவேண்டும். அதன் பிறகு திட்டத்தை விஸ்தரிக்க நாம் முயற்சிக்கலாம். அதற்கு இடையிலே கிழக்கு ராமநாதபுரத்தில் உள்ள தண்ணீர்த் தட்டுப்பாட்டை தீர்ப்பதற்கு ஆழமான கிணறுகளை வெட்டுவதற்குத் திட்டம் இருக்கின்றது.

**திரு. அ. பாலசுப்பிரமணியம்:** இந்தச் செயற்கை மழை பெய்வதற்கு வெளிநாடுகளிலிருந்து நிபுணர்கள் வரவழைக்கப்பட்டார்கள். ஆனால் இது போன்று வறட்சி ஏற்பட்டால், அந்த மாதிரிச் செயற்கை மழை வரவழைக்க தமிழ் நாட்டில் இருப்பவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுமா என்பதுபற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஏற்கெனவே செய்த இந்தப் பரிட்சைகள் எல்லாம், சோதனைகள் எல்லாம் வெற்றியடைந்திருக்கின்றன என்று திட்டவட்டமாகத் தெரிந்தால், அதை விரிவுபடுத்துவதற்கு எந்த விதமான தயக்கமும் இருக்க முடியாது. விரிவுபடுத்துவது மட்டுமல்லாமல், நம் மாநிலத்திற்கு வெளிநாட்டிலிருந்து வரவழைத்துத்தான் செய்ய வேண்டும் என்ற நிலைமையை மாற்றிக்கொள்ளலாம். அப்படித்தான் மற்ற தொழில்களிலும் செய்திருக்கிறார்கள். வெளிநாட்டினரின் ஒத்துழைப்போடு ஆரம்பித்த தொழில்களை இப்போது தமிழ் நாட்டு நிபுணர்கள்தான் நடத்திக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் முதலில் நவம்பர் மாதத்தில் முதல் வாரம் அறிக்கை தருகிறோம் என்று சொன்னார்கள். அமெரிக்க நிபுணர்கள் இன்னும் 3 மாத காலம் நீடித்துத் தரவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கை வந்து பார்க்க வேண்டும். அந்த அறிக்கையைப் பரிசீலனை செய்து, அது சரியான அறிக்கை தானா என்று பார்க்க மத்திய அரசு ஒரு குழு நியமிக்கிறது. அந்தக் குழு முடிவு செய்ய வேண்டும். அப்படி முடிவு செய்தால், மேற்கொண்டு விரிவுபடுத்த எந்தவிதமான தயக்கமும் நம் அரசுக்கு இருக்க முடியாது.

**திரு. மு. இராமநாதன்:** கோவை மாவட்டத்தினுடைய அவினாசி, பல்லடம் ஆகிய இரண்டு தாலுக்காக்களில் வறட்சி இருக்கிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, செயற்கை மழை பற்றிச் சொன்னார்கள். அது ஆலோசனையில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். வேறு ஏதாவது புது முறையில் இந்த இரண்டு தாலூக்காக்களிலும் பாசன வ்சதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** வேறு வழியில் பாசன வசதிகளை விரிவுபடுத்துவதற்கு ஏற்கெனவே பல திட்டங்கள் ஆய்வில் இருக்கின்றன. ஆனால் இப்போதுள்ள வினா செயற்கை மழையினால் எந்த அளவுக்கு நமது தண்ணீர் வசதியை விரிவாக்கிக்கொள்ள முடியும் என்பது பற்றியது. இன்னும் ஒரு 3 மாத காலத்தில் நிபுணர்களின் அறிக்கை வந்து, அதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதை நாம் மட்டும் ஆராயவில்லை, மத்திய அரசும் ஆராய்ந்து இதிலே ஒரு நல்ல முடிவைச் சொன்ன பிறகு, அதனை நிறைவேற்று வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.





## *Edward Variety of Rose Flowers.*

* 80 *Q.*—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the Physical Sciences Department of the Tamil Nadu Agricultural University has developed a method to extract 'Concentrate' from the Edward Variety of Rose flowers; and

(*b*) if so, the details thereof?

### எட்வர்டு வகை ரோஜா மலர்கள்.

**திரு. கே. எஸ். கணபதி:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) எட்வர்டு வகை ரோஜா மலர்களிலிருந்து கெட்டித் தைலம் (Concentrated) வடிக்கும் முறையொன்றைத் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் அறிவியல் (Physical Sciences) துறை கண்டு பிடித்துள்ளது உண்மையா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** (அ) & (இ) விவர அறிக்கை @ ஒன்று இம்மன்றத்தில் வைக்கப்பட்டு உள்ளது.

**திரு. கே. எஸ். கணபதி:** இந்த எட்வர்டு ரோஜா என்பது தமிழகத்திலே சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய ரோஜா தான். இதிலிருந்து தைலம் எடுக்கப்படுகிறது. இது வாசனைப் பொருள்கள் தயாரிப்பவர்களுக்கு வெகுவாகப் பயன்படுகிறது. இது அதிகம் பயிராகிற நேரத்திலேயே இதிலிருந்து தைலம் தயாரிக்கலாம். கிலோ 4 அணாவிற்கு விற்கிறது. இந்த ரோஜா விலிருந்து தைலம் எடுத்து விற்பனை செய்வதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணி நமக்குக் கிடைக்கும். அந்த வகையிலே இந்த அரசு அதைப் பற்றிப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஏற்கெனவே இந்த மாமன்றத்தின் முன் வைத்துள்ள அறிக்கையின்படி, இதிலுள்ள சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து பார்த்து, சாத்தியமாக இருந்தால் செய்யலாம். ரோஜாவிலிருந்து முதலிலே

---

@ 97 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1975 நவம்பர் 6

அந்த கான்கிரீட், பிழம்பு எடுத்து அதிலிருந்து பிரித்து அந்தத் தைலத்தை எடுக்க முடியும். அதற்கு நல்ல கிராக்கி இங்கே இருக்கிறது. வெளிநாட்டிலேயும் இருக்கிறது. ஆனால் அதை எந்த முறையில் செய்வது, என்னென்ன சாத்தியக் கூறுகள் இருக்கின்றன, யார் செய்வது என்பனவெல்லாம் ஆராயப்பட வேண்டும். யாராவது தொழிலதிபர்கள் முன்வந்தால் நிச்சயமாக முயற்சிக்கலாம். இது நல்ல லாபம் தரக்கூடியதாகவும் ஒரு நல்ல தொழிலாகவும் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

*[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]*

## 2. அறிவிப்பு.

### பேரவையிலிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, இம்மேலவையின் ஒப்புதலுக்காக, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1974) பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளது என்பதை அவைக்கு அறிவிக்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு.

**கமுதி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நினைவுக் கல்லூரியில் நிர்வாகத்தினருக்கும் ஆசிரியர்களுக்குமிடையே உள்ள குழப்ப நிலையால் ஏற்பட்டிருக்கும் வேலை நிறுத்தம், உண்ணாவிரதம் ஆகியவை குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இரண்டு கவன ஈர்ப்பு முன்னறிவிப்புகளும் ஒரே பொருள் குறித்ததாக இருப்பதால், இரு உறுப்பினர்களும் முன்மொழிந்து கவனத்திற்குக் கொண்டுவந்த பின்னர், அமைச்சர் அவர்கள் பதிலளிப்பார்கள்.



1975 நவம்பர் 6]

THIRU P. R. THOMAS : Hon. Deputy Chairman, Sir, I would like to call the attention of the Hon. Minister for Education to a matter of urgent public importance, namely, the non-payment of salaries to the members of the faculty of P.T.M.T.M. College, Kamuthi, Ramanathapuram district, malpractices and mismanagement of the grant sanctioned by the Government and the donations raised from the members of the staff and the public leading to the strike by the teachers from 21st July and the relay fast from 1st October 1975 by the teachers and the students and the consequent hardship caused to the teachers, students and the people affecting their normal life.

**திரு. ஆர். சக்தி மோகன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"கமுதி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நினைவுக் கல்லூரியின் நிர்வாகத்தினர் அளித்த நியாயமான முடிவுகளை ஏற்காமல், கல்லூரி நிர்வாகத்தின் அனுமதியின்றியே கல்லூரியை மூடி காலவரம்பற்ற வேலை நிறுத்தம், உண்ணாவிரதம் முதலியவற்றை அறிவித்து, பொது அமைதியையும் நிம்மதியையும் கலைத்து பரபரப்பான நிலையைத் தோற்றுவிக்கக்கூடிய வகையில் மாணவர்களையும் பொதுமக்களையும் தூண்டிவிட்டு அமைதியற்ற கவலைக்கிடமான நிலைமையைத் தோற்றுவித்துள்ள அக்கல்லூரி ஆசிரியர்களின் வன்முறை நடத்தை குறித்து".

(பிற்பகல் 5-00)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, பசும்பொன் திரு. முத்துராமலிங்கத் தேவர் நினைவுக் கல்லூரி 1970-71 ஆம் ஆண்டில் புகுமுக வகுப்புடன் தொடங்கப் பெற்றது. 1973-74 ஆம் ஆண்டு முதல் பட்டப்படிப்புக் கல்லூரியாக மாறியது இக்கல்லூரியில் மொத்தம் 23 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர் பணி புரிகின்றனர். இவர்களுக்கு ஆகும் ஊதியச் செலவு மாதத்திற்கு சுமார் ரூபாய் 14,300. இக்கல்லூரி ஊழியர்களுக்கு ஏப்ரல் 1975 முதல் ஊதியம் வழங்கப்படவில்லையாகையால், அவர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். அரசு மானியம் உள்பட, கல்லூரியின் நிதியை நிர்வாகம் கடந்த சில ஆண்டுகளாகவே தவறான முறையில்

பயன்படுத்தி வருகிறது என்று மதுரைப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் முறையிட்டுள்ளது. ஆகையால் அரசே இக்கல்லூரியை ஏற்று நடத்த வேண்டும் என்றும் அச்சங்கம் கோரியது. கல்லூரி ஆசிரியர்களை நியமனம் செய்யும்பொழுது, ஆளுக்கு ரூபாய் 7,000 விதம் வாங்கிக் கொண்டுதான் நியமனங்கள் நடைபெறுவதாக அக்கல்லூரி ஆசிரியர்களும் புகார் மனுக்கள் அனுப்பியுள்ளனர். இதுபற்றி மதுரைப் பல்கலைக் கழகத்தையும் கல்லூரிக் கல்வி இயக்குநரையும் அரசு கலந்தாலோசித்தது. 27-7-1975 முதல் இக்கல்லூரி செயல்படவில்லை என்றும், 15-4-1975 அன்று வழங்கிய, 1974-75 ஆம் ஆண்டுக்கான, அரசு மானியம் ரூபாய் 49,400 ஐயும் நிர்வாகம் சரியான முறையில் பயன்படுத்தியதா என்று தெரியவில்லை என்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். அக்கல்லூரி ஆசிரியர்களுக்கு ஏப்ரல் 1975 முதல் சம்பளம் வழங்கப்படாதது உண்மைதான் என்று அக்கல்லூரி தாளாளர் மதுரைப் பல்கலைக்கழக பதிவாளருக்கு 20-8-1975 அன்று எழுதிய முடங்கலில் ஏற்றுக்கொண்டுள்ளார். எனினும், இதற்கு கல்லூரி முதல்வரைக் குறை சொல்லியுள்ளார். விசாரணையை கமுதிக்குப் பதிலாக மதுரையிலேயே வைத்துக்கொள்ளலாம் என்று தாளாளர் மதுரைப் பல்கலைக் கழகப் பதிவாளரை வேண்டியுள்ளார். இதுபற்றி துணை வேந்தரைச் சந்தித்து விவாதிக்க அழைக்கப்பட்டும், தாளாளர் அதற்கு முன் வந்தாரில்லை. இக்கல்லூரி நிர்வாகத்தின் மேல் சாட்டப்பட்டுள்ள முறைகேடான செயல்கள், முக்கியமாக ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்காதது குறித்து விசாரிக்கும் பொருட்டு சிண்டிகேட் உறுப்பினர் இருவரைக் கொண்ட குழு ஒன்றை அமைக்க மதுரைப் பல்கலைக் கழகம் முடிவு செய்தது. இதற்கிடையில் 28-7-1975 முதல் கல்லூரி காலவரையின்றி மூடப்பட்டதாக கல்லூரி முதல்வர் தெரிவித்தார். பல்கலைக் கழகம் அமைத்த குழு 21-8-1975 அன்று கமுதிக்குச் சென்று விசாரணை நடத்தியது. தாளாளரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டார். ஆனால் அவர் வரவில்லை. குழுவினுடைய முடிவுகள் வருமாறு :

1. ஆசிரியர்களை நியமிக்கும்பொழுது, ஒவ்வொருவரிடமும் ரூபாய் 4,000 முதல் ரூபாய் 7,000 வரை நிர்வாகம் பெற்றுக்கொண்டுள்ளது.

2. கல்லூரி ஊழியர்களிடம் அவரவர்களுக்குரிய முழு ஊதியத்தையும் பெற்றுக்கொண்டதாக கட்டாயமாகக் கையொப்பம் பெறப்பட்டபோதும், குறைவான தொகையே அவர்களுக்குப் பட்டுவாடா செய்யப்பட்டு வந்தது. இது 1975 மார்ச் முடிய நடந்தது. 1975 ஏப்ரல் முதல் ஊதியம் அறவே வழங்கப்படவில்லை.



3. கோட்ட ஆட்சித் தலைவர் இதில் தலையிட்டு சுமுகமான தீர்வு காண முயன்றார். ஆனால் கல்லூரி ஊழியர்களுக்குச் சேர வேண்டிய 4 திங்களுக்கான விடுமுறைச் சம்பளத்தை அவர்கள் விட்டுக்கொடுக்க வேண்டும் என்று தாளாளர் வற்புறுத்தியதால், தீர்வு காண முடியவில்லை.

4. கல்லூரி விடுதி மாணவர்களுக்குத் தேவையான அடிப்படையான சிறு வசதிகள் கூட செய்து தரப்படவில்லை.

5. மாணவர் கட்டணத் தொகைகள், அரசு மானியத் தொகைகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதில் நிர்வாகம் முறைகேடான செயல்கள் பலவற்றைச் செய்துள்ளது. கமுதி வட்டாரத்தில் ஒரு கல்லூரி தேவை என்ற காரணத்தால், அக்கல்லூரியை அரசே ஏற்று நடத்தலாம் என அக்குழு பரிந்துரைத்துள்ளது.

1970-71 முதல் அக்கல்லூரிக் கணக்குகளை சரிபார்ப்பதற்காகவும், அரசு மானியம் முறையாக பயன்படுத்தப்பட்டதா, ஆசிரியர்களுக்கு முழு ஊதியமும் ஒழுங்காகத் தரப்பட்டு வந்ததா என்பதைச் சரிபார்ப்பதற்கும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலக தணிக்கைப் பிரிவு ஊழியர்கள் 16-9-1975 அன்று அக்கல்லூரிக்குச் சென்றனர். கல்லூரியில் அச்சமயம் இருக்க வேண்டுமென தாளாளருக்கு முன்னறிவிப்பு கொடுத்திருந்தும் அவர் ஊரிலில்லாமல் மதுரைக்குச் சென்று விட்டார். 1970-71, 1971-72-க்கான ஆவணங்களைப் பார்க்க முடியவில்லை. முன்னர் இருந்த விதிகளின்படி 1970-71, 1971-72 ஆம் ஆண்டுகளுக்கான கல்லூரிக் கணக்குகளை தனிப்பட்ட தணிக்கையாளர்கள், (சார்ட்டர்ட் அக்கவுன்டென்ட்ஸ்) தணிக்கை செய்து விட்டனர் என்றும், அத்தணிக்கை அடிப்படையில் அரசு மானியம் வழங்கப்பட்டுவிட்டதென்றும், ஆவணங்கள் அனைத்தும் கல்லூரி முதல்வரிடமே உள்ளன என்றும், கல்லூரி முதல்வர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கருதுவதாகவும் தாளாளர் மதுரையிலிருந்து கொண்டே ஒரு முடங்கல் மூலம் கல்லூரிக் கல்வி இயக்குநர் தணிக்கையாளருக்குத் தெரிவித்தார். சரியான காரணங்களின்றியும், தனது தாளாளர் அனுமதியில்லாமலும் கல்லூரியை முதல்வர் மூடிவிட்டதாகவும், கல்லூரியைத் திறக்கச் சொல்லியும் திறக்கவில்லை என்றும், பல ஆண்டுகளாக ஒழுங்கான கல்லூரிக் கணக்குகளை முதல்வர் வைத்து வரவில்லை என்றும் தாளாளர் கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு 6-10-1975 அன்றைய முடங்கலில் புகார் தெரிவித்துள்ளார். இந்தக் காரணங்களுக்காக கல்லூரி முதல்வர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் தாளாளர் எழுதியுள்ளார். ஆனால் அவருடைய குற்றச் சாட்டுகளைக் கல்லூரி முதல்வர் மறுத்துள்ளார்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1975 நவம்பர் 6

கல்லூரியைத் திறக்க நிர்வாகம் விரும்புவதாகவும், ஆனால் கல்லூரி முதல்வரும் ஊழியர்களும் ஒத்துழைக்க மறுப்பதால்தான் எதுவும் செய்ய இயலவில்லை என்றும் தாளாளர் 13-10-1975 அன்று பல்கலைக் கழகத் துணை வேந்தருக்கு எழுதியுள்ளார். கல்லூரியைத் திறக்க வேண்டும் என்றும், அதனை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்றும் கோரி அக்கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் கமுதி தாலுக்கா அலுவலகத்தின் முன் 1-10-1975 முதல் நடத்தி வந்த தொடர் உண்ணாவிரதப் போராட்டம் 22-10-1975 அன்று நிறுத்தப் பட்டுள்ளதாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். கமுதியிலுள்ள முன்னாள் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்தையும் தளவாடங்களையும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அறக்கட்டளைக்கு 1970 ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளி நடத்துவதற்காக அரசு வழங்கியது. அச்சொத்துக்களுக்கான ஈட்டுத் தொகையான ரூபாய் 1 லட்சத்து 69 ஆயிரத்தை நிர்வாகம் அரசுக்கு இதுவரை தரவில்லை. தராததோடு அப் பள்ளிக்கூடத்திலுள்ள தளவாடங்களை, அவ்வறக்கட்டளை கல்லூரிக் கட்டிடத்திற்கு அப்புறப்படுத்திக்கொண்டுள்ளது. அவ்வறக்கட்டளை நடத்தி வரும் உயர்நிலைப் பள்ளி நிர்வாகத்திலும் ஏராளமான ஒழுங்கீனங்களும் நிர்வாகச் சீர்கேடுகளும் பல உள்ளதாக புகார்கள் வந்து, அவைபற்றி கல்வித் துறை தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. பசும்பொன் திரு. முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் பெயரில் கமுதியில் தொடங்கிய இக்கல்லூரி அவ்வட்டாரத்தின் கல்லூரிக் கல்வித் தேவையை நன்கு நிறைவேற்ற வேண்டுமென்பதில் அரசுக்கு மிகுந்த அக்கறையுண்டு. கல்லூரி நல்ல முறையில் இயங்குவதற்கான நல்ல சூழ்நிலை உருவாக வேண்டும் என இந்த அரசு விரும்புகிறது. இதுவரையில் உரியவர்கள் அத்தகைய சூழ்நிலையை உருவாக்காதது வருந்தத்தக்கது. கவலை தரத்தக்க தற்போதைய நிலைமை நீடிக்குமேயானால், திரு. முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் பெயரில் இக்கல்லூரி என்றும் நின்று நிலவும் வகையில் அரசே இக்கல்லூரியைத் தனது நேரடி நிர்வாகத்தில் எடுத்து அரசுக் கல்லூரியாக நடத்திட வேண்டிய நிலைமை ஏற்படும்.

**திரு. பி. ஆர். தாமஸ்:** இதே நிர்வாகத்தினரால் நடத்தப்பட்ட உயர்நிலைப் பள்ளி ஒழுங்காக நடக்காததால், அரசாங்கம் தலையிட்டு, நடவடிக்கை எடுத்து, நேரடியாக ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** விளக்கம் கேட்கலாம். சொற்பொழிவு ஆற்றக்கூடாது.



1975 நவம்பர் 6]

**திரு. பி. ஆர். தாமஸ்:** பள்ளி ஒழுங்காக நடக்காத காரணத்தால், அங்கு பணியாற்றியவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களை அரசு உணர்ந்து, அவர்களுக்கு நேரடியாக ஊதியத்தை வழங்கியது போல், இந்தக் கல்லூரி நிர்வாகத்தில் பணி புரிபவர்களுக்கும் அரசு நேரடியாக ஊதியத்தை வழங்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நான் முதலிலேயே குறிப்பிட்டேன். நாம் வழங்கிய மானியத் தொகைக்கான கணக்கும் வரவில்லை. கேட்டும் அவர்கள் தரவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையின் காரணமாக ஒரு சுமுகமான நிலையை ஏற்படுத்த வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் உரியவர்களிடம் கூறினோம். இந்தக் கல்லூரி நிர்வாகத்திற்கு கணக்குகளைக் காட்ட வேண்டுமென்று கல்லூரிக் கல்வி இயக்குநர் உத்திரவிட்டும் நிர்வாகத்தினர் கணக்கு கொடுக்கவில்லை. 15, 20 நாட்களுக்கு முன்பு இந்தப் பிரச்சினை குறித்து திரு. மூக்கையா தேவர், எம்.பி., திரு. கந்தசாமி, எம்.எல்.ஏ., ஆகியோர் என்னை சந்தித்துப் பேசினார்கள். அரசாங்கம் தானாகவே போய் அந்தக் கல்லூரியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பவில்லை என்றும், இவ்வளவு காலமாக அந்தக் கல்லூரிக்கு அரசு பல உதவிகளைச் செய்து வந்தும், மானியம் கொடுத்தும் கணக்குகளைக் காட்ட மறுக்கிறார்கள் என்றும் நான் அவர்களிடம் கூறி, 'இரு தரப்பினரும் ஒத்துழைத்து சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்துங்கள்' என்று கூறினேன். உரியவர்கள் அத்தகைய சுமுகமான சூழ்நிலையை உருவாக்கினால், அரசாங்கம் தலையிட விரும்பவில்லை. இதுவரை அத்தகைய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த அவர்களால் முடியவில்லை. கல்லூரி மூடப்பட்டு ஆசிரியர்களுக்குச் சம்பளமில்லாத நிலையும், மாணவர்கள் படிக்க முடியாத நிலையும் நீடிக்கும் இச்சூழ்நிலையில், அரசுக்கு இருக்கும் ஒரே ஒரு வழி, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தனியார் கல்லூரி ஒன்றில் இத்தகைய கோளாறு ஏற்பட்டபோது அரசு தலையிட்டு நிர்வாகத்தை ஏற்று ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கியது போல், இதையும் எடுத்துக்கொள்வது. ஆகவே முக்கியமானவர்களும் மற்றவர்களும் ஒத்துழைத்து, இந்தப் பிரச்சினையில் ஒரு சுமுகமான நிலையை உருவாக்க வேண்டும். அப்படி அவர்கள் செய்யத் தவறிவிட்டால், இக்கல்லூரியை தனது நேரடி நிர்வாகத்தில் எடுத்து அரசு கல்லூரியாக நடத்திட வேண்டி வரும்.

## கமுதி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நினைவுக் கல்லூரியில் நிர்வாகத்தினருக்கும் ஆசிரியர்களுக்குமிடையே உள்ள குழப்ப நிலையால் ஏற்பட்டிருக்கும் வேலை நிறுத்தம், உண்ணாவிரதம் ஆகியவை குறித்து



* **திரு. ஆர். சக்தி மோகன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கம், ஆசிரியர்கள் தரப்பிலே கொடுக்கப்பட்ட புகார்கள், மானேஜ்மென்டினுடைய அனுமதியின்றி கல்லூரியை மூடியது போன்ற விவரங்கள் நிறைய இருந்தாலும், இன்றைய சூழ்நிலை என்ன என்பதை நான் கூறிட விழைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** சொற்பொழிவு ஆற்றக் கூடாது. 42 (1) வது விதியின்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து விளக்கம் கேட்கலாம். விதியைக் கடைப்பிடிக்க வேண்டும்.

**திரு. ஆர். சக்தி மோகன் :** நாங்கள் திரு. மூக்கையா தேவர் அவர்கள் தலைமையில் மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தரைச் சந்தித்துப் பேசினோம். ஊழியர்களுக்குரிய மூன்று மாதச் சம்பளத்தைத் தவிர, மூன்று மாதச் சம்பளத்தை நிர்வாகத்தினர் டெப்பாசிட் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அதன்பேரில் 1975 அக்டோபர் 8 ஆம் தேதி டெப்பாசிட் செய்திருக்கிறார்கள். ஆசிரியர்கள் தரப்பிலே இப்படிப் புகார் கொடுத்திருப்பதற்கான காரணம் குறுக்கு வழியில் அவர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக மாற வேண்டுமென்ற நோக்கம்தானே தவிர, வேறல்ல.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ஆர். சக்தி மோகன் :** மறுபடியும் விரைவில் கமுதி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நினைவுக் கல்லூரியைத் திறக்க நிர்வாகம் ஏற்பாடு செய்து வருகிறது. அதற்கான உதவியும், ஒத்துழைப்பும் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கல்லூரியைத் திறக்க வேண்டுமானால், இரு தரப்பினரும் ஒருமித்து சுமுகமான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்றுதான் நான் சொன்னேன். அங்கே ஆசிரியர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையே சுமுகமான சூழ்நிலையை இதுவரை ஏற்படுத்த முடியவில்லை. கோட்ட ஆட்சித் தலைவரும், மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தரும் தலையிட்டு, நல்ல சுமுகமான சூழ்நிலையை உருவாக்க முயன்றும் ஒத்துவர மறுக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் அரசு மேற்கொண்டு என்ன செய்ய முடியும் என்பதைப்பற்றித் தான் யோசிக்க முடியும். எல்லா ஆசிரியர்களும் ஒத்துவர வேண்டும். தாளாளரை விசாரணைக்கு கமுதிக்கு அழைத்து, அங்கு அவர் வரவில்லை. கணக்குகளையும் தரவில்லை. தாளாளரி





டத்தில் கேட்டால், கல்லூரி முதல்வரிடத்தில் இருக்கிறது என்கிறார். கல்லூரி முதல்வரிடத்தில் கேட்டால், தாளாளரிடத்தில் இருக்கிறது என்கிறார். நாம் விரும்புவதெல்லாம் மாணவர்கள் பாதிக்கப்படாமல் கல்லூரி ஒழுங்காக நடக்க வேண்டும் என்பது. தாளாளர் சொல்வதை ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆசிரியர்கள் சொல்வதை தாளாளர் ஏற்றுக்கொள்ளவில்லை. கோட்ட ஆட்சித் தலைவரும், மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தரும் இரு தரப்பினரையும் சந்தித்துப் பேசியும் ஒத்துவரவில்லை. இந்தக் கல்லூரியை தவிர்க்க முடியாத சூழ்நிலையில் அரசு தனது நேரடி நிர்வாகத்தில் எடுத்து நடத்த வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால்கூட, திரு. முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் பெயரில்தான் இக்கல்லூரி இருக்கும் (கரவொலி). நிர்வாகப் பொறுப்பை அரசு ஏற்றுக்கொண்ட பிறகு, கல்லூரி தொடர்ந்து நல்ல முறையில் நடைபெறும். நிர்வாகப் பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்வதைத் தவிர, வேறு வழி இல்லை. அதற்கு முன் உரியவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். அந்த வகையில் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

(பிற்பகல் 5-10)

**திரு. பி. ஆர். தாமஸ் :** பல்கலைக் கழகத் தேர்வை மாணவர்கள் எழுதுவதற்கு குறிப்பிட்ட நாட்கள் வந்திருக்க வேண்டும் என்று அரசு ஆணை இருக்கிற காரணத்தால், விரைவிலே இந்தக் கல்லூரியைத் திறந்து, மாணவர்கள் தேர்வு எழுதக்கூடிய நிலைமையை உண்டாக்கி, அதற்கு விதிவிலக்கு அளிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலிலேயே தெரிவித்தேன். இதைப்பற்றி அரசு கவலை கொண்டிருப்பதன் காரணமாகத் தான் அந்தக் கல்லூரியை விரைவிலே திறப்பதற்கான முயற்சியிலே ஈடுபட்டு வருகிறது.

**திரு. ஆர். சக்தி மோகன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியவாறு, விஷயம் முடியாமல் ஒன்றுமில்லை. துணைவேந்தர் அவர்கள் அழைத்துப் பேசிய பிறகு, 70 ஆயிரம் ரூபாய் டெபாசிட் செய்திருக்கிறார்கள். தாளாளர் அவர்கள் தேதி குறிப்பிட்டு கல்லூரியைத் திறக்க வேண்டியதுதான். அதற்கான ஏற்பாடுகளுக்கு அமைச்சர் அவர்களே உதவியும் ஒத்துழைப்பும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

### கமுதி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நினைவுக் கல்லூரியில் நிர்வாகத்தினருக்கும் ஆசிரியர்களுக்குமிடையே உள்ள குழப்ப நிலையால் ஏற்பட்டிருக்கும் வேலை நிறுத்தம், உண்ணாவிரதம் ஆகியவை குறித்து

[1975 நவம்பர் 6

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொல்லியபடி, தாளாளர் அவர்கள் முயன்று சுமுகமான முறையிலே கல்லூரி நடக்குமானால், அரசு தலையிட வேண்டிய அவசியமில்லை. அது நடைபெறாத காரணத்தால்தான், அரசு தலையிட வேண்டியிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், முத்துராமலிங்கத் தேவர் பெயரைக் காப்பாற்ற வேண்டும், அவர் பெயரால் கல்லூரி சிறப்பாக இருக்க அரசே அந்தப் பொறுப்பை ஓராண்டுக் காலம் ஏற்று நடத்தி, திரும்பவும் சுமுகமான நிலை ஏற்படுமானால், அவர்களிடம் நிர்வாகத்தை ஒப்படைக்கத் தயாராக இருக்கிறோம். அந்த அளவிலேதான் அக்கறை கொண்டு பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டு வருகிறோம். விரைவிலே அதுபற்றிய முடிவை நாம் கண்டு தீர வேண்டியவர்களாக இருக்கிறோம்.

### 4. தனி உறுப்பினர் தீர்மானங்கள்.

#### (1) இந்து அறநிலைய வளர்ச்சி வாரியம் அமைத்தல்—தொடர்ச்சி.

திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவத்திரு அடிகளார் அவர்கள் கொடுத்துள்ள இந்தத் தீர்மானத்தை ஆதரித்து ஓரிரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் "திருக் கோவில்களுடைய வருவாய் வளர்ச்சிக்குப் பணி செய்யத்தக்க வகையிலே ஒரு இந்து அறநிலைய வளர்ச்சி வாரியம் அமைக்கப்பட வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையிலே இந்த வளர்ச்சி வாரியம் எதற்காக அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்து சொல்லப்படுகிறது—சொல்லப்பட்டது என்று பார்த்தோமானால், தமிழகத்தில் உள்ள திருக்கோவில்களிலே கிட்டத்தட்ட 75, 80 சதவீதக் கோவில்கள் சரியான அளவிலே வருமானம் இல்லாமலும், அவர்களுடைய பூஜை முதலான காரியங்களைக்கூட செய்ய முடியாத நிலையிலும் இருப்பதை நாம் பார்க்கிறோம்.

மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே பேசுகிற போது, கடந்த நான்கைந்து ஆண்டுகளாக திருக்கோவில்களுடைய வருமானம் ஓரளவு பெருகி வந்திருக்கிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆனால் நான் பார்த்தவரையிலே, கோவில்களுடைய, மடாலயங்களுடைய சொத்துக்களி லிருந்து வருமானம் பெருகி வரவில்லை என்ற கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன்.





வருமானம் பெருகி வந்திருக்கிறது என்று சொன்னால், பழனி, திருத்தணி போன்ற பெரிய திருக் கோவில்களிலே பக்தர்கள் சென்று அங்கு போடுகிற காணிக்கைகள்தான் ஆண்டுக்காண்டு அதிகமாகப் பெருகி வந்திருக்கின்றன. மொத்தமாக வருமானத்தைக் கணக்கிட்டுப் பார்க்கிறபோது, திருக்கோவில் களுடைய வருமானம் பெருகியிருக்கிறது என்று சொல்லலாமே தவிர, தனிப் பட்ட பக்தர்களிடமிருந்து எவ்வளவு காணிக்கை வந்தது, கோவில்களுடைய சொத்துக்களிலிருந்து எவ்வளவு பெறப்பட்டது என்ற கணக்கைப் பார்ப்போ மானால், எனக்குத் தெரிந்தவரையில், கடந்த நான்கைந்து ஆண்டுகளாக சொத்துக்களிலிருந்து வரக்கூடிய வருமானம் குறைந்துகொண்டு வந்திருக்கிறது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெரிய கோவில்களாக இருப்பவை இரண்டுவிதமான வழியிலிருந்து தங்களுடைய வருமானத்தைப் பெறுகின்றன. ஒன்று, கோவில்களுடைய சொத்துக்கள் நிலமாக இருப்பதிலிருந்து. இரண்டு, வீடுகளாக உள்ள சொத்துக்களிலிருந்து. இந்த இரண்டிலிருந்துதான் கோவில்களுக்கு வருமானம் வருகிறது. இந்த நிலத்தைப் பொறுத்தவரையிலே, சாதாரணமாக தனிப்பட்ட நிலச் சொந்தக்காரர்கள்கூட தங்களுடைய நிலத்திலிருந்து வருமானம் பெற முடியாத நிலை இருக்கிறது. நிலத்திலிருந்து பண்ணை முறையாகவும், குத்தகை முறையாகவும் இரண்டுவிதமாக வருமானம் பெறப்படுகின்றது. இந்தக் கோவில்களுடைய நிலங்களைப் பொறுத்தவரையிலே, தனிப்பட்டவர் 20 ஏக்கருக்குமேல் பண்ணையாக நிலத்தை வைத்துக்கொள்ளக் கூடாது என்று முன்னாலேயே சட்டம் கொண்டுவரப்பட்டது. எவ்வளவு ஏக்கர் என்று எனக்குச் சரியாகத் தெரியவில்லை. அநேகமாக இருபது ஏக்கர் இருக்கலாம் என்று நினைக்கிறேன். அதற்கு மேலாக உள்ளவைகளை எல்லாம் குத்தகை நிலமாக வைக்க வேண்டுமென்று சட்டம் முன்பு இயற்றப்பட்டது.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, குத்தகை நிலத்திலிருந்து 5 கலம் 10 கலம் என்று வரக்கூடிய நிலை இருக்கிறது. கோவில்களுடைய நிலமாக இருந்தால், 2 கலம் 3 கலம் கூட வருவது இல்லை. திருக்கோவில் களுடைய நிலத்தை வைத்திருக்கும் குத்தகைதாரர்கள் அதிலிருந்து வரக்கூடிய வருமானத்தில் ஓரளவு தாங்கள் எடுத்துக்கொண்டு, மிகக் குறைவாகத்தான் கோவிலுக்கும், மடாலயங்களுக்கும் கொடுத்து வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே பார்க்கின்றபோது, சாதாரணமாக ஒருவருக்கு நிலத்திலிருந்து வரக்கூடிய வருமானம் குறைவு. அதிலும் கடந்த ஐந்தாறு ஆண்டுகளுக்குள் அரசு இரண்டு தடவை குத்தகை தரவேண்டிய தேவையில்லை என்று உத்தர விட்டதன் காரணமாக, தனிப்பட்டவர்களுக்கும், கோவில்களுக்கும் இழப்பு

ஏற்பட்டது. அமைச்சர் அவர்கள்கூட ஓரிரு இடங்களில் பேசுகிறபோது கிட்டத்தட்ட கோடிக்கணக்கான ரூபாய் அளவுக்கு வருமானத்தை கோவில்கள் இழந்திருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அடுத்து, கோவில்களுடைய வீடுகளிலிருந்து வாடகையாக குறைந்த வருமானம் வருகிறது. கோவில்களுடைய வீடுகள் குறைந்த வாடகையிலே விடப்பட்டிருப்பதன் காரணமாகத்தான் குறைந்த வருமானம் வருகிறது. அதனாலேதான், திரு. பழனிவேல் ராஜன் எஸ்டிமேட்ஸ் கமிட்டியின் தலைவராக இருந்தபோது, இந்த வீடுகளுக்கு 'அக்காமடேஷன் கண்ட்ரோல்' என்ற அளவிலே வாடகை போடாமல், அவ்வப்போது உள்ள மார்க்கெட் நிலவரப்படி வாடகை வைத்தால், அதனால் கோவில்களுக்கு அதிக வருமானம் கிடைக்கும் என்ற கருத்தைச் சொன்னார்கள். இப்படி அதிகமாக வரக்கூடிய வருமானம், கோவில்களுக்கும், மேலும் பல நல்ல காரியங்களைச் செய்யவும் பயன்படுகிறது. கோவில்களுடைய வருமானத்தைக் கொண்டு அரசு மருத்துவமனைகள் கட்டுதல் போன்ற பல நல்ல காரியங்களைச் செய்தால் கோவில்களுடைய வருமானம் பெருகி வரவேண்டும் என்ற கருத்து அவர்களாலே அப்போது சொல்லப்பட்டது. கோவில்கள் வளர்ச்சி வாரியம் என்று அடிகளார் சொல்லுகிறாரே, அந்தக் கோவில்களுடைய வருமானத்தை எடுத்து திருப்பணிக்காகச் செலவிடுவதா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். திருப்பணி செய்வது என்று ஆரம்பித்தால், இருக்கின்ற கோவில்களிலே 10 சதவீதக் கோவில்கள்கூட திருப்பணி செய்ய முடியாத நிலைமையிலே இருக்கும்.

சர் சி. பி. ராமசாமி ஐயர் அவர்களுடைய கமிட்டியிலே 'சர்ப்ளஸ அமௌண்ட்' என்பதைப்பற்றிச் சொன்னார்கள். 'சர்ப்ளஸ் அமௌண்ட்' என்றால், உபரிப் பணம் அல்லது உபரி வருமானம். உபரி வருமானம் என்ற கருத்தைச் சொல்கிறபோது, உண்மையாக ஒரு கோவிலுக்கு உபரி வருமானம் வருவதாக இருந்தால், கோவில் அல்லது மடாலயம் செய்ய வேண்டிய காரியங்கள் அனைத்தையும் செய்வதாக நாம் வைத்துக்கொண்டால், நிச்சயமாக 90 சதவீதக் கோவில்களுக்கு உபரி வருமானம் வரமுடியாது என்ற கருத்தை அந்தக் காலத்திலேயே, முன்னால் முதல்வர் திரு. பக்தவத்சலம் அவர்களும், அப்போது இந்த அவையின் உறுப்பினராக இருந்த திரு. பாலசுப்பிரமணியம் அவர்களும் தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு, அந்தக் கோவில்க்ள் நடத்துவதற்கு ஆகும் செலவு போக, பாக்கியை கல்லூரிகள் அமைப்பது, மருத்துவமனைகள் அமைப்பது போன்ற 12 விதமான காரியங்களைச் செய்யலாம் என்று சர். சி. பி. ராமசாமி ஐயர் கமிட்டியால் தெளிவாகச் சொல்லப்பட்டது. அப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் அந்தக் கோவில்கள் செய்யுமானால்,





நிச்சயமாக அது அந்தக் கோவில்களில் வருகிற காணிக்கையாக இருக்குமே தவிர, வேறு உபரி வரமுடியாத நிலைமைதான் அந்தக் கோவில்களுக்கு இருக்க முடியும் என்று நாம் பார்க்கிறோம். ஆகவே அடிகளார் அவர்கள் குறிப்பிடுவது, கிட்டத்தட்ட 50 லட்ச ரூபாய் மூலதனத்திலே வளர்ச்சி வாரியம் ஒன்றை ஏற்படுத்தி, அதற்கு கோவில்களுடைய நிதி, மடலாய நிதி இவைகளையெல்லாம் சேர்த்து, நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களே அதற்குத் தலைவராக இருந்து, அறநிலையத்துறை கமிஷனர் அவர்களே மேனேஜிங் டைரக்டராக இருந்து, மற்றவர்கள் அதிலே இணையாக, இயக்குநர்களாக இருந்து நடத்த வேண்டும். அப்படி அது வாரியம் என்ற அளவிலே அமையுமானால், எல்.ஐ.சி. மற்றும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் ஆகியவற்றிலேயிருந்து பணத்தைக் கொண்டுவந்து அதிலே கோடிக்கணக்கான ரூபாய் அளவிலே சேருமானால், அந்தப் பணத்தை எடுத்து, சில கோவில்களிலே தரிசாக இருக்கும் நிலங்களை எடுத்து விவசாயம் செய்யக்கூடிய அளவுக்கு வளமை செய்ய முடியும். டெவலப்மெண்ட் எக்ஸ்பெண்டிசர் (Development expenditure) என்ற அளவிலே அதை வளர்க்க முடியும். அப்படிச் செய்கிறபோது, அதிலிருந்து கிடைக்கிற வருமானம் சிறு கோவில்களுக்கும், நாட்டில் உள்ள மக்களுக்கும் பயன்படும் என்ற கருத்தை அவர்கள் வலியுறுத்தினார்கள்.

(பிற்பகல் 5.20)

இது தவிர, சில இடங்களிலே கோவில்களின் நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்கள் குத்தகைதாரர்களிடம் இருக்கின்றன. அவர்கள் அந்த நிலங்களைச் சரி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்கக்கூடிய குத்தகைதாரர்கள்; கிணற்றுப் பாசனம் மூலம் பயிர் செய்வதற்கு தண்ணீர் வசதி செய்து கொடுங்களென்று கேட்கக்கூடியவர்கள்; பம்ப்-செட் வைத்துக் கொடுங்களென்று கேட்கக்கூடியவர்கள். அப்படிப்பட்ட வசதியை நாம் செய்து கொடுத்தோமானால், அதன் மூலம் பாசன வசதி ஏற்பட்டு, நல்ல அளவில் உற்பத்தி பெருகி, அதனால் குத்தகைதாரர்களுக்கும், மக்களுக்கும், கோவில்களுக்கும் நல்ல பயன் ஏற்படுமென்பது ஒரு கருத்து. பல கோவில்களுக்கு மனைக் கட்டுகள் ஏராளமாக இருக்கின்றன. சென்னையிலுள்ள கபாலீஸ்வரர் கோவிலுக்கு மிகுந்த அளவில் காலி மனைகள், நகரத்தில் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இதுபோலவே திருவண்ணாமலை கோவிலுக்கும் சொந்தமான காலி மனைகள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்த மனைக் கட்டுகளை நல்ல முறையில் பயன்படுத்தி, அவற்றில் வீடுகளைக் கட்டி, வாடகைக்கு விடுவோமேயானால், அதிலிருந்து நிறைய வருமானம் கிடைக்கும். அந்த வருமானம் கோவில்களுக்கு நல்ல முறையில் பயன்படும். இப்படிப்பட்ட நல்ல கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் தவத்திரு அடிகளார் அவர்கள்

இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே இந்தத் தீர்மானத்தை மாண்புமிகு அமைச்சரவர்களும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் மக்களுக்கும், கோவில்களுக்கும் நல்ல பயன் ஏற்படும். அதே சமயத்தில் அரசுக்கும் இதனால் அதிகப் பயன்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. எனவே இந்தத் தீர்மானத்தை மனமார ஆதரித்து, நம்முடைய அரசும் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது சில கருத்துக்களைச் சொல்ல . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** பேசுவதற்கு முன்பு உறுப்பினர் அவர்கள் சிந்திப்பதில்லை . என்னிடம் அனுமதியும் வாங்குவதில்லை.

**திரு. சி. வி. ராஜகோபால் :** ஒரேயொரு சந்தேகத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். வருமானமுள்ள பெரிய கோவில்களைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். ஆனால் சில கோவில்கள் பழைய காலத்திலே ரொம்பவும் மூர்த்திகரமாக இருந்தன. அங்கெல்லாம் பிரம்மோத்சவம் நல்ல முறையில் நடந்திருக்கிறது. அப்படிப்பட்ட கோவில்களின் நிதி நிலைமை இப்போது மிகவும் மோசமாக இருக்கிறது. அந்தக் கோவில்களில் நைவேத்தியம்கூட செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. பெரும் சொத்தோடு அந்தக் காலத்தில் இருந்த கோவில்கள் இப்போது மூடப்பட்டிருக்கின்றன. காஞ்சீபுரத்தில் புண்ணிய கோடீஸ்வரர் கோவில் . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** எல்லாத் தவறுகளும் உறுப்பினர் அவர்கள் ஊரில்தான் நடைபெறுகின்றனபோல் இருக்கிறது.

**திரு. சி. வி. ராஜகோபால் :** காஞ்சீபுரத்திலுள்ள புண்ணிய கோடீஸ்வரர் கோவில் இப்போது மூடப்பட்டிருக்கிறது. ஒருவேளை நைவேத்தியம்கூட இல்லாமல் இருக்கிறது. இப்படிப்பட்ட கோவில்களில் அந்தக் காலத்தில் உற்சவங்கள் எல்லாம் நடந்து, நல்ல முறையில் நடந்து வந்தன. எனவே இப்போது இந்தக் கோவில்களைக் காப்பதற்கு, மற்ற கோவில்களிலிருந்து வரும் பணத்தில், ஒரு பகுதியைக் கொடுக்க அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

**திரு. கே. ராஜாராம் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தவத்திரு அடிகளார் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானம் மிகவும் வரவேற்கத் தக்க ஒன்றாகும். தமிழ் நாட்டில் மூலை முடுக்குகளிலெல்லாம் கோவில்கள் இருக்கின்றன. மற்ற நாடுகளைப்போல் இல்லாமல், தமிழ் நாட்டில் நமது





முன்னோர்கள் சொல்லி வைத்துள்ளது என்னவென்றால், கோவில் இல்லாத ஊரில் குடி இருக்க வேண்டாமென்பதுதான். அதற்கேற்றாற்போல், கோவில் இல்லாத ஊரே தமிழ் நாட்டில் கிடையாது. எனக்கு முன்னால் பேசிய திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னதுமாதிரி, தமிழ் நாட்டில் நூற்றுக்கு எண்பது கோவில்களில் வரவு-செலவைச் சரிக்கட்டும் நிலைமையில்லை. அந்த வரவினங்களை அதிகப்படுத்திக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அதற்கு வேண்டிய மூலதனம் இல்லை. கோவில்களில் இடிந்து கிடக்கும் சுவர்களையும், கோவில்களின் கட்டிடங்களையும் புதுப்பிப்பதற்காக இந்த நிதிக் கார்ப்பரேஷனிலிருந்து பணம் கொடுப்பது என்பது இந்தத் தீர்மானத்தின் நோக்கமல்ல. ஏனெனில் அது மூலதனச் செலவு. கோவில்களினுடைய வருவாயைப் பெருக்குவதற்கு இந்தக் கார்ப்பரேஷன் உதவ வேண்டுமென்பதுதான் அடிப்படை நோக்கம். எனவே அதற்கான மசோதா ஒன்றைக்கூட தயாரித்து, இத்துடன் தவத்திரு அடிகளார் அவர்கள் அனுப்பி வைத்திருக்கிறார்கள். நோக்கம் நல்ல நோக்கம். அரசாங்கம் செய்ய வேண்டியதை அவர்களே செய்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்று. இதை அரசாங்கம் அப்படியே ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும்கூட, இதை அனுசரித்து ஒரு மசோதா கொண்டு வர வேண்டும். இதை ஒப்புக்கொண்டு செய்தால், அது மிகவும் வரவேற்கத் தக்கது. இல்லையென்றால் இதைக் கொள்கையளவில் ஒப்புக்கொண்டு, அரசாங்கமே ஒரு மசோதாவைக் கொண்டுவந்து இதை நிறைவேற்றினால், தமிழ் நாட்டில் மிகவும் நல்லதொரு காரியத்தைச் செய்தவர்களாவார்கள். ஏனெனில் ஏராளமான நிலங்கள்—வருவாயைப் பெருக்கக்கூடிய நிலங்கள்—பெரிய நகரங்களிலும், சிறு கிராமங்களிலும் பரந்து கிடக்கின்றன. அவைகளில் வியாபாரிகளுக்குக் கடைகள் கட்டி வாடகைக்கு விடலாம்; வீடுகள் கட்டி வாடகைக்கு விடலாம். எனவே இம்மாதிரி பலவிதங்களில் அந்த நிலங்களின் வருவாயைப் பெருக்கும் வாய்ப்புகள் இருப்பதால், இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன். இதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*** மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவத்திரு அடிகளார் அவர்கள் அறநிலையங்களுடைய வருவாயை மேம்படுத்தும் வகையில் இங்கே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, சென்ற தொடர் கூட்டத்தில் சிறந்ததொரு உரையை நிகழ்த்தினார்கள். அதன் தொடர்பாக இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்களும், திரு. சி. வி. ராஜகோபால் அவர்களும், எதிர்க் கட்சித் தலைவரவர்களும் நல்ல கருத்துக்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மதிப்பிற்குரிய தவத்திரு அடிகளார் அவர்கள் எதற்காக இந்த வாரியம் அமைக்கப்பட வேண்டுமென்பதற்காக மிக

விளக்கமான கருத்துக்களையெல்லாம் அவருடைய பேச்சிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். கோவில்களுடைய வருமானம் அல்லது அறக் கட்டளைகளினுடைய வருமானத்தைப் பெருக்குவதற்காக அரசு பல்வேறு வகையிலே முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. இருந்தாலும்கூட, நம்முடைய உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டதுபோன்று, சிறு விவசாயிகளுக்கும், குத்தகை விவசாயிகளுக்கும் பல்வேறுவிதமான சலுகைகளை அரசு அளிக்கும் நேரத்தில், அற நிலையங்களினுடைய வருமானம் குறைந்து விடுகிறதென்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இருந்தாலும் கூட சிறிய விவசாயிகள், குத்தகை விவசாயிகள் சாகுபடி செய்யக்கூடிய கோவில் நிலங்களை, கோவில்களினிடத்தில் போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தால், அபிவிருத்தி செய்ய முடியவில்லை என்ற குறை நீண்ட காலமாக இருந்து வருவதை அரசு நல்ல முறையிலே அறிந்திருக்கிறது. அதேபோல நகர்ப் பகுதிகளில் இருக்கக்கூடிய காலி மனைகள் பற்றியும் அரசு அறிந்திருக்கிறது. அந்த மனைகளிலே நல்ல கடைகளையும், வீடுகளையும் கட்டி வாடகைக்கு விட்டு, அதன் மூலமாகக் கோவில்களின் வருமானத்தை அதிகப்படுத்துவதென்பதைப்பற்றி அரசாங்கம் பல்வேறு நிலைமைகளில் பரிசீலனை செய்திருக்கிறது. சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், நில வள வங்கிகள் மூலம் அந்தக் கடனைப் பெற வசதியிருக்கிறதாவென்று ஆராய்ந்து பார்க்கப்பட்டது. அதிலிருக்கும் சில சட்டச் சிக்கல்கள், விதி முறைகள் காரணமாக உடனடியாகக் கடனைப் பெற வழி முறைகள் இல்லையென்பதை நாம் நேரடியாகப் பார்த்தோம். எந்தவிதத்தில் இதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுவது என்று அரசு யோசனை செய்யும் நேரத்தில், மாண்புமிகு தவத்திரு அடிகளார் அவர்கள் நல்ல யோசனைகளை அரசுக்குச் சொல்லியிருக்கிறார்கள். எந்த வகையில் இந்த பைனான்சிங் கார்ப்பரேஷனை அமைக்கலாமென்பதற்கு முன்மாதிரியாகக்கூட குறிப்பு தந்திருக்கிறார்கள். கோவில்களின் வருமானத்தை அதிகப்படுத்தும் வகையில், நகர்ப்புறத்தில் இருக்கும் கோவில்களுக்குச் சொந்தமான வீடுகள், காலி மனைகள், கட்டிடங்கள் ஆகியவற்றிற்கு வாடகைக் கட்டுப்பாடு சட்டத்திலிருந்து விதி விலக்கு தர வேண்டுமென்று அரசு மதிப்பீட்டுக் குழுவின் சார்பில் ஏற்கெனவே சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. அந்த யோசனையை அரசு சென்ற ஆண்டு ஏற்றுக்கொண்டு, ரென்ட் கன்ட்ரோல் சட்டத்திலிருந்து விதி விலக்கு தந்திருக்கிறது. அதனால் நகர்ப்புறத்தில் இருக்கும் ஏராளமான கோவில்களின் வருமானம் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கான வழி

(பிற்பகல் 5-30)

முறைகள் செய்யப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, சென்னையிலுள்ள கபாலீஸ்வரர் கோயிலுக்கு ஏராளமான வீடுகள் இருக்கின்றன. சாதாரணமான தனியாருடைய வீடுகளாக இருந்தால், ஏராளமான வாடகை தருவார்கள்.



கோயிலுக்கு, சாதாரணமான, வீட்டு வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் இருக்கிறது. மிகக் குறைந்த வாடகையைக் கொடுத்துக்கொண்டிருந்த நிலைமைகள் எல்லாம் மாறி, சென்ற ஆண்டு விதி விலக்கு கொடுத்ததற்கு பிறகு, அறங் காவலர் குழுவும், துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் இந்த வாடகையை கணிசமான அளவு உயர்த்தவேண்டும் என்ற முடிவு செய்த பிறகு, கபாலீஸ்வரர் கோவிலிலே மட்டும் ஆண்டு ஒன்றுக்கு 50 ஆயிரம் ரூபாய் அதிகப்படியாக வரும் அளவுக்கு இருக்கிறது. நகர் பகுதிகளில் இருக்கக்கூடிய கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்களுக்கு இன்றைக்கு லட்சக்கணக்கான ரூபாய் அதிகமாக வருகிறது. நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டதுபோல், சொத்துக்களிலிருந்து வருகின்ற வருமானம் கூடுதல் ஆக்கப்படவில்லை. உண்டியல், காணிக்கை இவைகளின் மூலம் வரும் வருமானம் மிகவும் பெருகியிருக்கின்றது என்று சொன்னார்கள். நிலத்தின் மூலம் வருகின்ற வருமானமும் பெருகியிருக்கின்றது. கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக தமிழகத்திலே இருக்கின்ற வறட்சி நிலைமையைக் கணக்கில் கொண்டு, குத்தகைதாரர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற சலுகைகள் காரணமாகத்தான் வருமானம் சற்று குறைந்திருக்கின்றது. நிலத்தை தனியார் வைத்திருப்பதால்தான் வருமானம் குறைந்திருக்கிறது என்று சொல்ல முடியாது. மேலும், 70 சதவீதம், 80 சதவீதம் கோயில்களில் அன்றாடம் பூஜைக்கும், விளக்கு வைக்கவும் முடியாத நிலை தான் இருக்கின்றது என்று சொன்னார்கள். நிச்சயமாக அந்த நிலைமை இல்லை என்று நான் சொல்லிக்கொள்ளுகின்றேன். பெரும்பாலான கோயில்களில், பூஜை ஒன்றும் நடக்காமல் இருந்த கோவில்களில்கூட, இன்றைக்கு வேறு பல நிதி வசதியுள்ள கோயில்களிலிருந்து நிதி மாற்றம் செய்து, நிதி கொடுத்து, பூஜை எல்லாம் தக்கவாறு நடத்த வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** அந்தந்தக் கோயில்களில் வரக்கூடிய வருமானத்தை வைத்து அந்தந்தக் கோயில்களுக்குச் செலவு செய்தால்தான் நல்லது.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** குறைந்த பட்சம் 200 ரூபாய் வருமானம் வரக்கூடிய கோயில்களைக்கூட நாம் எடுத்துக்கொண்டிருக்கின்றோம். அந்தக் கோயில்களில் ஏற்படக்கூடிய அனைத்துச் செலவுகளையும் நாம் செய்ய வேண்டும். அந்தக் கோயில்களில் பூஜை செய்தல், திருவிழாக்கள் எடுத்தல், கோயில் ஊழியர்களுக்குச் சம்பளம் அளித்தல் இம்மாதிரியான காரியங்கள் நாம் செய்தாக வேண்டும். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பல நல்ல யோசனைகளை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே, அடிகளார் அவர்கள் கொடுத்திருக்கின்ற நல்ல யோசனைகள் எல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. 'ஃபினான்ஸ் கார்ப்பரேஷன்' எந்த வகையிலே அமைக்கலாம் என்றும் ஆராயப்பட்டு வருகிறது. பொதுவாக கோயில்களின் சொத்துக்கள் மேம்படுத்தப்பட்டு, காலி இடங்களில் கட்டி

டங்கள் கட்டி, அவற்றை வாடகைக்கு விட்டு, அதன் மூலம் கோயில்களின் வருமானத்தைப் பெருக்கி, அவைகள் ஊழியர்களுக்கு தக்கவாறு ஊதியம் கொடுப்பதற்கும், கோயிலைப் பராமரிப்பதற்கும், திருவிழாக்கள் எடுப்பதற்கும் பயன்படுகின்ற வகையில் அமைய வேண்டும் என்ற கருத்தை மையமாக வைத்து இந்தத் தீர்மானத்தை அவர்கள் கொண்டு வந்திருக்கின்றார்கள். அவர்களுடைய கருத்தை அரசு முழுமையாக ஏற்றுக்கொள்ளுகிறது. அதே நேரத்தில் கார்ப்பரேஷன் அமைக்க வேண்டும் என்ற யோசனையையும் சொல்லியிருக்கின்றார்கள். எந்த வகையில் அதை அமைக்கலாம் என்பதுபற்றியும், இந்தக் கார்ப்பரேஷனை தேவையா அல்லது தற்பொழுது இருக்கின்ற அமைப்பின் மூலம் ஆணையரை வைத்து காரியங்கள் செய்ய முடியுமா என்பதையும் பரிசீலித்து, தக்க முடிவை அரசு எடுக்கும் என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எந்த வகையிலே செயல்படுத்தலாம் என்பதற்கு நம்முடைய அரசு நிதித் துறைச் செயலாளர், வணிக வரி அற நிலையத் துறைச் செயலாளர், ஆணையர் ஆகிய இந்த மூன்று பேரையும் கொண்ட ஒரு குழுவை நியமித்து, கார்ப்பரேஷன் அமைக்கலாமா, அல்லது அரசாங்கமே அதற்கு முதலீடு செய்யலாமா, எப்படிப்பட்ட நிலைமைகளிலே முதலீடு செய்வது என்பதுபற்றியெல்லாம் பரிசீலித்து, வெகு சீக்கிரத்தில் செயல்படுத்துகின்ற வகையிலே நடவடிக்கை மேற்கொள்ளும் என்ற கருத்தை அரசின் சார்பிலே தெரிவித்து, இந்தத் தீர்மானம் தனிப்பட்ட முறையில் நிறைவேற்றப்பட வேண்டிய தேவையில்லை, அரசாங்கமே இவற்றுக்கு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தம்முடைய தீர்மானத்தை வலியுறுத்துகிறாரா ?

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** தீர்மானத்தின் நோக்கங்களை அரசு ஏற்றுக்கொண்டு, உரிய செயல் வடிவம் கொடுப்பதாக அரசின் சார்பில் உத்தரவாதம் கொடுத்திருப்பதால், தீர்மானத்தை நான் வற்புறுத்தவில்லை.

தீர்மானம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

**(2) உச்சவரம்பு அளவுக்குக் குறைவான நிலத்தை ஒப்படைத்தல்.**

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"உச்சவரம்பு அளவுக்குக் குறைவாக நிலம் வைத்துள்ளவர்களுக்குச் சொந்தமான உபரி நிலங்கள், அவர்களால் விருப்பமுடன் ஒப்படைக்கப்படுமானால், மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் நிலச் சீர்திருத்த நடவடிக்கைகளைக்



கருத்திற்கொண்டு, அவை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிலமற்ற ஏழைகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட வகை செய்து பொருத்தமான சட்டம் ஒன்று நிறைவேற்றப்படலாம் அல்லது தற்போதைய சட்டம் உரியவாறு திருத்தப்படலாம் என்றும் தற்போதைய நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளவாறு நிலச் சொந்தக்காரர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படலாம் என்றும் இந்த அவை அரசுக்குப் பரிந்துரை செய்கிறது" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஏ. ஆர். தாமோதரன் :** இதை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"உச்சவரம்பு அளவுக்குக் குறைவாக நிலம் வைத்துள்ளவர்களுக்குச் சொந்தமான உபரி நிலங்கள், அவர்களால் விருப்பமுடன் ஒப்படைக்கப்படுமானால், மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் நிலச் சீர்திருத்த நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு, அவை அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு நிலமற்ற ஏழைகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட வகை செய்து பொருத்தமான சட்டம் ஒன்று நிறைவேற்றப்படலாம் அல்லது தற்போதைய சட்டம் உரியவாறு திருத்தப்படலாம் என்றும் தற்போதைய நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளவாறு நிலச் சொந்தக்காரர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படலாம் என்றும் இந்த அவை அரசுக்குப் பரிந்துரை செய்கிறது".

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு சுலபமான தீர்மானம் என்பது எனது கருத்து. இதன் முக்கியமான கருப்பொருள், தற்போதுள்ள நில உச்சவரம்புச் சட்டத்தின் அடிப்படையிலே, நிலச் சீர்திருத்தத்திற்கு ஆதரவு கொடுக்கப்படுகிற வகையில், நிலமில்லாத ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு நிலம் கொடுக்க வேண்டும் என்பதுதான். நிலங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென்று சொன்னால், பலரிடம் இருக்கக்கூடிய உபரி நிலம் எடுக்கப்பட்டு, அது நிலமற்ற பலருக்குக் கொடுக்கப்பட வேண்டும். அந்த அடிப்படையிலேதான் 1960 ஆம் ஆண்டிலே நில உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப் பட்டது. அப்போது 30 ஏக்கரா நிலம் உச்சவரம்பாக வைக்கப்பட்டு, அதற்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து அந்த உபரி நிலத்தை அரசாங்கம் எடுத்து நிலமற்றவர்களுக்குக் கொடுத்தது. அந்த அடிப்படையில் கிட்டத்தட்ட 24,124 ஏக்கர் நிலங்கள் எடுக்கப்பட்டதாக நான் அறிகிறேன். அதற்குப் பின்னால் திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகு, 1971 ஆம் ஆண்டு கொண்டு வந்த நில உச்சவரம்புச் சட்டத்திலே, 30 ஏக்கர்கள் என்று இருந்ததை 15 ஸ்டேன்டேர்ட் ஏக்கர்கள் என்று ஆக்கி, அதன் மூலமாக கிட்டத்தட்ட 1.08 லட்சம் ஏக்கர்கள் சர்ப்ளஸ் என்ற அளவிலே எடுக்கப்பட்டு, கிட்டத்தட்ட 37 ஆயிரம் பேருக்கு

அவைகள் கொடுக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த 1.08 லட்சம் ஏக்கர்களில் 62,682 ஏக்கர்கள்தான் இதுவரையில் இந்த 37 ஆயிரம் பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. முதலிலே எடுக்கப்பட்ட 24,124 ஏக்கர்களும் 4,825 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் என்று கருதுகிறேன். குத்தகைதாரர்கள் 5 ஏக்கர்கள் வரையிலே குத்தகைக்கு வைத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. அப்படி 5 ஏக்கர்கள் இருந்தால்தான், ஒருவர் பாடுபட்ட பலனைப் பெறமுடியும். ஆக, முன்பு எடுத்த மொத்தம் 24,124 ஏக்கர்களையும் ஒரு ஆளுக்கு 5 ஏக்கர் என்ற அளவிலே கொடுத்தால்கூட, 4,825 பேர்களுக்குக் கொடுக்க முடியும். 2½ ஏக்கர் ஒரு ஆளுக்கு என்று கொடுத்தால், கிட்டத்தட்ட 8 ஆயிரம் பேர்களுக்குப் பலன் ஏற்பட்டிருக்கலாம்.

அடுத்தபடியாக, தற்போதுள்ள உச்சவரம்புச் சட்டத்தின் அடிப்படையிலே 1.08 லட்சம் ஏக்கர்கள் கிடைக்கும் என்று சொன்னார்கள். அதிலே 62,682 ஏக்கர்கள் எடுக்கப்பட்டு 37 ஆயிரம் பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கணக்கிட்டுப் பார்த்தால், ஒருவருக்கு இரண்டு ஏக்கர்கள் என்ற அளவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆக, மொத்தமாகப் பார்த்தால், கிட்டத்தட்ட 45 ஆயிரம் பேர்களுக்கு இதுவரை உச்சவரம்புச் சட்டத்தின் மூலமாக உபரி நிலங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டிலே, எனக்குத் தெரிந்த வரையில், கிட்டத்தட்ட 63 லட்சம் ஏக்கர்கள் பயிரிடப்படுகின்றன. தற்போது விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் கிட்டத்தட்ட 45 லட்சம் பேர்கள். இவர்களுக்கெல்லாம் நிலங்கள் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் துரதிருஷ்டவசமாக நமக்குக் கிடைத்திருப்பது இவ்வளவு நிலம்தான். அதை நாம் 45 ஆயிரம் பேர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். மொத்தம் இருக்கக் கூடிய 45 லட்சம் விவசாயிகளில், இதுவரையிலும் நிலங்கள் கொடுக்கப் பட்டிருப்பது 45 ஆயிரம் பேர்களுக்குத்தான். இது ஒரு சதவீதத்துக்கு உள்ளாகத்தான் ஆகிறது. ஆகவே, இந்த நில உச்சவரம்புச் சட்டம் நல்ல பயனுள்ளதாக ஆக்கப்பட வேண்டும் என்றால், இன்னும் அதிகமான நிலங்கள் எடுக்கப்பட்டு நிலமில்லாத ஏழை மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். தமிழ் நாட்டிலே அதிகமான அளவுக்கு உபரி நிலங்கள் எடுக்கப்படவில்லை என்று சொன்னால், நிலங்களை வைத்திருப்பவர்கள் ஏமாற்றிவிட்டார்கள் என்பதல்ல

(பிற்பகல் 5-40)

உண்மை. இன்றும்கூட சில பேர்கள் தமிழகத்திலே வழக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இப்போது தமிழ் நாட்டிலே மொத்தமாகப் பார்க்கிறபோது, பல பேர்களிடத்தில் ஒரு ஏக்கர், இரண்டு அல்லது மூன்று ஏக்கர் என்றுதான் இருக்கிறது. ஒரு





ஏக்கர் உள்ளவர்கள் எவ்வளவு பேர்கள்? பட்டாதாரர்கள் 50 சதம் அல்லது 60 சதம் இருப்பார்கள். ஒரு ஏக்கர் அல்லது 5 ஏக்கருக்குக் குறைவாக வைத்திருப்பவர்கள் கிட்டத்தட்ட 90 சதம் பேர்கள். தமிழ் நாட்டிலே பல்லாயிரக் கணக்கான பட்டாதாரர்கள் அதிலே பாடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை அறிவோம். அப்படி ஒரு ஏக்கர் வைத்துக்கொண்டு, அரசாங்க உத்தியோகத்தை நம்பிக்கொண்டு, சென்னை போன்ற வேறு இடங்களுக்குச் சென்றிருக்கிறார்கள். அப்படி அவர்களுக்கு எந்தவிதமான வருமானமும் கிடைக்காமல், தனியாகவும் பயிர் செய்ய முடியாமல் இருக்கின்றார்கள். அவர்கள் அதை ஒரு கிஸ்தி கட்டுகின்ற உடைமையாகத்தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அனுபோக பாத்தியதை உள்ளவர்கள் எதுவுமே தருவதில்லை. இந்த நிலத்தை இன்னொருவரிடத்திலே கொடுத்தாலே போதும் என்று இருக்கிறார்கள். இதற்கு முன்னாலே இந்த நிலச் சீர்திருத்தம்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர்கள் பேசினார்கள். நிலச் சீர்திருத்தம் சரியான முறையிலே இல்லையென்றால், பல பேர்கள் வழக்கிற்குப் போக வேண்டியிருக்கும். சிறு நிலச்சுவாந்தாரர்கள் வழக்குக்குப் போக வசதியில்லை. அவர்கள் இந்தச் சீர்திருத்தத்தை முழுமனதோடு ஆதரித்து, அரசாங்கத்துக்கு உறுதுணையாக இருந்து, தங்களுடைய நிலத்தைத் தாங்களாகவே விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்திலே பொதுவாக நிலங்களை சுலபமாக விற்க முடியும். இப்போது அந்த நிலைமை இல்லை. இந்த நிலத்தை அரசுக்குக் கொடுத்து விடுகிறோம். அரசாங்கம் அவர்களுக்குத் தரவேண்டிய பணத்தை நில உச்சவரம்புச் சட்டத்தின் அடிப்படையிலே, முதல் 5 ஆயிரம் 'ஆனுவல் ரென்ட்' என்ற அளவிலே வரக்கூடியதாக அவர்களுக்கு 12 டைம்ஸ் என்ற முறையிலே கொடுக்கிறார்கள். அந்த அளவில் அரசாங்கத்திலே கொடுத்தால்கூட போதும் என்று பல நிலச்சுவாந்தார்கள் சொல்கிறார்கள். அந்த அடிப்படையிலே நான் கொண்டுவந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்போது மத்திய அரசிலிருந்து நம்முடைய பிரதம மந்திரி அவர்கள் நிலச் சீர்திருத்தத்திற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நமது மாநிலத்திற்கும் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அந்த முறையிலே இன்னும் அதிகமான நிலத்தை எடுத்து வினியோகம் செய்ததாக இருக்கும். நிலச் சீர்திருத்தம் என்ற வகையிலும், சிறு நிலச்சுவாந்தார்கள் சார்பாகவும், விவசாயத் தொழிலாளர்கள் சார்பாகவும், லட்சக்கணக்கான நிலம் இல்லாதவர்களுடைய துயரத்தைப் போக்குவதற்காக இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறேன். அரசு இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, this Resolution that has been moved by my hon. Friend Thriu Swaminathan is, I think, an entirely unobjectionable Resolution from the Government's point of view because while the object of the landowners may not be to surrender surplus lands to help the Government's objective regarding land ceilings, nonetheless, it would serve the purpose which the Government have in mind because, at the present moment, in spite of various Land Ceiling legislations that we have passed, as my hon. Friend pointed out, less than 85,000 to 90,000 people have been able to benefit only because surplus land is not available for distribution since we have nearly 4.5 million landless labourers and 4.4 or 4.6 million tenant-cultivators. I think this suggestion would help the Government to avail themselves of a larger extent of land which could be distributed to the huge queue that waits for lands in these areas.

Secondly, Sir, as regards the compensation that has been mentioned in this Resolution, it has not been stated that market value should be paid and it has not been stated that the price should be negotiated. All that has been stated is that the same compensation that was envisaged in the existing Land Ceiling Act which ranges from 12-11-10 to 9 times the annual net income in varying ranges should be paid as compensation to those who are willing to surrender this land to Government. I hope that the Government may take an early opportunity of amending the existing Land Ceiling Act itself, so that tohse who are willing to surrender these lands without any litigation could do it. There is no question of going to Court and there is no question of determining the market value. It can be done in less than three months and I am sure the response would be good especially from those unfortunate individuals who have perhaps not purchased land in the recent past, but who have inherited it from their fathers and who find that it is more of a liability than an asset. If they are willing to surrender these lands, I really do not think that Government would have any radical objection to paying them the limited compensation that is envisaged in the Land Ceiling Act. In fact, when these Bills were brought before this House, we pleaded that if it was the real intention of the Government to help the tenant farmers as well as the landless labourer, then some sort of a co-operative tenants' bank or an agricultural bank would be necessary to finance the ryots to buy up the land which they were tilling on lease or holding on tenancy.



The Government of Tamil Nadu have also lent support to this idea but, unfortunately, the whole thing fell through because of lack of funds which was required in a very massive way because our own estimate was that more than Rs. 100 crores would be required for this purpose. But I think we can make a small beginning by accepting the laands which the landowners of Thanjavur district seem to be so very anxious to surrender. I think the problem will arise only in a few areas. Nobody is going to surrender land in Ramanathapuram district; neither would the Government be willing to take it nor would there be landless labourers waiting to cultivate it. But it is from the richest bowl of Tamil Nadu —lands in Thanjavur district, perhaps in Tiruchirappalli and perhaps in some areas of Coimbatore, Chingleput and North Arcot districts that lands may be surrendered to the Government and I wholeheartedly commend the Resolution for the acceptance of this House.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் முன்மொழிந்துள்ள இந்தத் தீர்மானமானது உண்மையிலேயே நிலச் சீர்திருத்தத்திலே ஒரு புரட்சியைச் செய்யும் அடிப்படையிலே அமையும் என்ற அளவுக்கு அரசாங்கம் மாண்புமிகு அங்கத்தினர் அவர்களின் தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, என்னுடைய கருத்தைச் சொல்ல முற்படுகிறேன்.

ஏறத்தாழ 15 சத விகிதம் உழவுக்கு உள்ள நிலம்தான் இந்த உச்சவரம்புச் சட்டத்தின்படி அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டு விநியோகிக்கப் பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு நம்முடைய முயற்சியும் நோக்கமும் சிறப் பானதாக இருந்தாலும், கடைப்பிடிக்கும் கொள்கை எவ்வளவு நேர்மையான தாக இருந்தாலும், நாங்கள் எதிர்பார்த்த அளவுக்கு நிலச் சீர்திருத்தத் திட்டத்தை நிறைவேற்றவில்லை என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்பு கிறேன். ஏனென்றால், நிலமில்லாத விவசாயிகளுக்கு நிலம் வழங்கப்பட வேண்டும் என்பதுதான் நம்முடைய நோக்கமாக இருந்தாலும், மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள், 1,80,000 ஏக்கர் நிலத்தை எடுத்து, ஏறத்தாழ 1½ ஏக்கர் அல்லது 2 ஏக்கர் என்று கொடுத்து, .45 ஆயிரம் விவசாயிகளுக்கு மட்டுமே நாம் நிலம் வழங்கியிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். 45 ஆயிரம் விவசாயத் தொழிலாளர்களுக்கு மட்டுமே நிலம் கொடுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, நம்முடைய நோக்கம் உண்மையாகவே நிறைவேறவில்லை

[திரு. கே. எஸ். கணபதி] [1975 நவம்பர் 6

என்பதுதான் என்னுடைய கருத்தாகும். நாம் முழு அளவு நிலச் சீர்திருத்தத்தை நிறைவேற்ற வேண்டுமானால், மாண்புமிகு அங்கத்தினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கூறிய தீர்மானத்தை நாம் செயல்படுத்த வேண்டும். ஏனென்றால், பெரும்பான்மையானவர்கள் குறைவான நிலம் வைத்திருக்கிறார்கள். மேலும் அவர்கள் அந்த நிலத்தைச் சாகுபடி செய்வதில்லை. அதை குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள். நமக்கு இது நன்றாகத் தெரியும். குத்தகைக்கு விட்ட நிலத்திலிருந்து அவர்களுக்கு எந்தவிதமான வருமானமும் வருவதில்லை. முதற்படியாக அவர்கள் இந்த நிலத்தை அரசுக்குக் கொடுக்க முன்வருவார்கள். எனவே இந்தத் தீர்மானத்தை ஏற்று நிறைவேற்றினால், ஏறத்தாழ நம்முடைய விவசாய நிலத்திலே 40 சதவிகிதம் அரசுக்குக் கிடைக்கும் வகையிலே வழிவகைகள் செய்ய முடியும். மாண்புமிகு அங்கத்தினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் நிலங்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படலாம் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் இதைவிட, இன்சென்டிவ் என்று சொல்வார்களே, அப்படிச் செய்தால், அது நிலத்தைக் கொடுக்க அவர்களுக்கு ஊக்கமளிக்கும். சாதாரணமாக ரெண்டல் வேல்யுவிலே, 12 முறை என்றோ அல்லது 15 முறை என்றோ நாம் வைத்தோமானால், அவர்களுக்கு அது ஊக்கமளிப்பதாக இருக்கும் என்று சொல்லி, இந்தத் தீர்மானத்தை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

(பிற்பகல் 5.50)

*THIRU S. NARAYANASWAMY: Mr. Deputy Chairman, Sir, I hope the Hon. Minister will not brush his eyes to see me speak on the question of re-distribution of land. I believe it is not the intention of my hon. Friend Thiru Swaminathan to embarrass the Government by bringing in a Resolution such as the one he has brought in today. It is not with that intention. I know and I can testify to one fact. In the district of Thanjavur to which I belong, quite a large number of people are holding fragmented uneconomic lands which have become a nightmare to them. I am not prepared to pretend that they are interested in somebody else's benefit. It has become uneconomic for them to look after their lands. It has become impossible for them to have them cultivated on their behalf. The land is small for them to carry on cultivation by proxy or even cultivation through their own workers. It has become very difficult. The hon. Member referred to lands to the extent of about one or one and a half acres. Even a land of an extent of 3 or 4 acres has become uneconomic. If I



1975 நவம்பர் 6] [Thiru S. Naraayanaswamy]

may say so, Thiru G. Swaminathan is trying to point out the uneconomic character of all cultivation. Perhaps this Resolution is seeking the Government's help so that these lands are taken over and the frustration that is prevailing among the small landholders is reduced. It would be good if they are paid some compensation. It is not for me to say how it should be fixed. My hon. Friend Thiru K. S. Ganapathi has rightly pointed out that the compensation should be fixed on an incentive basis. But I think this is a problem that has to be tackled later. In fairness to the Government, I should say that the fragmentation is not solely due to the Land Ceiling Act or due to the steps taken to re-distribute the lands to the landless. It is also the direct consequence of Mitakshara Law of Inheritance under which regular fragmentation of the land goes on, when a large number of children try to divide the land among themselves. I know several families which were once very rich and which are facing utter destitution. The ownership of land has become a nightmare to them. It is with this view, I think, my hon. Friend Thiru Swaminathan has brought in this Resolution. In fact, I was myself wondering when he brought this resolution that it had fallen to the lot of a Swatantra Party Member to do this. But this will relieve the suffering of the persons who own uneconomic holdings and, at the same time, the problem of the landless will also be solved to some extent. I have nothing else to say.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கொடுத்துள்ள உச்சவரம்பு அளவுக்குக் குறைவான நிலத்தை அரசிடம் ஒப்படைத்தல் என்னும் தீர்மானத்தை நான் படித்தபொழுது, அதைப் புரிந்துகொள்ள எனக்குச் சிறிது நேரமாயிற்று. விளக்கம் வருமா என்று பார்த்தேன். பேசிய இரண்டு மாண்புமிகு உறுப்பினர்களும் விளக்கம் ஒன்றும் தரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி சொன்னதிலே கொஞ்சம் புரிந்தது. அந்தமாதிரி ஒரு பிரச்சினை வந்தால், ஏழை எளிய மக்களின் நன்மைக்காக எப்படி இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற முடியும் என்று யோசித்துக்கொண்டிருந்தேன். அதிகமான அளவுக்கு நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து நிலத்தை அரசு எடுத்து, ஏழை எளிய மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதுதான் நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் அடிப்படை. அதிலே பல குறைகள் இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, அவற்றைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். நிலமற்ற ஏராளமான ஏழை எளிய மக்களுக்கு நிலம் வழங்க வேண்டுமென்ற நோக்கத்திற்காகத்தான் நில உச்சவரம்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

அந்த நோக்கத்தை நிறைவேற்ற இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டால் என்ன என்ற கேள்வி கேட்கப்பட்டது. நம்முடைய நாட்டிலே சிறிய சிறிய நிலங்களாக இருக்கின்ற நிலைதான் இதற்குக் காரணம். நம்முடைய இந்து குடும்பங்களில் 'ஜாயின்ட் பேமிலி' என்ற முறையில் பிரிவினையை ஏராளமாக ஏற்று, நிலங்களைச் சிறு சிறு துண்டு நிலங்களாக ஆக்குகிறார்கள். சிறு சிறு நிலங்களாக மாறி விடுவதற்கு இதுவும் ஒரு காரணம் என்று எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்ரா நாராயணசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். அது சிந்திக்க வேண்டிய விஷயம். அதற்கும் இந்தத் தீர்மானத்திற்கும் சம்பந்தமில்லை. தனியாரிடத்தில் இருக்கின்ற நிலத்தை அரசு வாங்கி, அதை ஏழை எளிய விவசாய மக்களுக்குக் கொடுக்கும்போது, மறுபடியும் ஒரு பிரிவினை ஏற்படும். அப்போதும் நிலங்கள் சிறு சிறு துண்டு நிலங்களாக மாற வாய்ப்பிருக்கிறது. பிரிவினை இல்லாத நிலத்தை அமைக்க வேண்டுமென்றும், உற்பத்தியைப் பெருக்க ஏதுவான ஒரு கொள்கையை வகுத்து, அதற்கு வழிவகையை மேற்கொள்ள வேண்டுமென்றும் அதுபற்றி ஆலோசிக்க வேண்டுமென்றும் 1967-ஆம் ஆண்டிலேயே கேட்டுக்கொண்டேன். பஞ்சாபில் இதுபோன்ற ஒரு நிலை இருப்பதாக அறிந்து, அவர்களது அறிக்கையைப் படித்து, அங்கேயும் இந்துக்கள் இருப்பார்களேயானால், அவர்கள் அந்தச் சட்டத்தை எப்படி நிறைவேற்றுகிறார்கள் என்று ஆராய்ந்தோம். அவர்கள் பக்கத்திலுள்ள நிலங்களை வாங்கி, உரிமையையும் வாங்கி, அந்த நிலத்தைக் கைப்பற்றுகின்ற வகையில் ஒரு அறிக்கை இங்கே வந்தது. அப்படி நாம் தமிழ் நாட்டில் செய்தால், நமக்கு ஏராளமான எதிர்ப்பு வரும். ஓட்டு வாங்கித்தான் நாம் பதவிக்கு வர வேண்டியிருக்கிறது. ஏழை எளிய மக்களின் நிலத்தை பணக்காரர்கள் சேர்த்துக்கொள்ளக்கூடிய நிலை வரும் என்ற ஒரு குறிப்பு அப்போது அரசாங்கத்துக்கு வந்தது. அந்தப் பிரச்சினையை அப்பொழுது நாங்கள் ஆராய்ந்தோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி சொல்வதுதான் உண்மையான காரணம். கையில் நிலம் இல்லை; அரசாங்கத்திலிருந்து இதற்குப் பணம் தரக் கூடாதா என்று கேட்கிறார்கள். அதை அரசாங்கம் ஆராய்ந்தது. 'டெனன்ட்ஸ் ரைட்' என்ற மசோதாவைக் கொண்டுவந்தோம். பல பேர் எதிர்ப்பு தெரிவித்தார்கள். அப்படி எதிர்ப்பு தெரிவித்த காரணத்தால், இப்போது அதுபற்றி ஒன்றும் செய்ய முடியாத நிலை இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், அந்தக் கொள்கையை ஆதரிக்கிறேன். நிலச் சொந்தக்காரர் ஒருவர் எங்கோ ஒரு இடத்திலும், அதை உழுகின்ற விவசாயி இன்னொரு இடத்திலும் இருக்கின்ற நிலையில், இந்த இரு சாராரையும் பயன்படுத்துகின்ற அரசியல் வாதிகள் இந்த நாட்டில் இருக்கும் வரையில், நம்மால் இந்தமாதிரி நல்ல காரியங்களைச் செய்ய முடியாத நிலை இருந்துகொண்டிருக்கும். என்னைப் பொறுத்தவரையில், உண்மையிலேயே





உழுகின்ற உழவர்களிடம்தான் நிலம் இருக்க வேண்டும். இப்பொழுது நிலச் சொந்தக்காரர் ஒரு இடத்தில் இருக்கிறார். அவருடைய அறிவிப்பு பத்திரிகையில் வருகிறது. நிலச்சுவாந்தார் பெயரில் அறிவிப்பு வருகிறது. அந்தப் பத்திரிகையேதான் அம்மாதிரி அறிக்கையை வெளியிடுகிறதா என்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. நிலச் சொந்தக்காரர்களுக்கு, உழுகின்றவன் நிலைமை என்னவானாலும், அதைப்பற்றிக் கவலையில்லை, அவர்களுக்கு சாப்பாட்டுக்கு நெல் வர வேண்டும், அவ்வளவுதான். பொதுவாக தமிழ் நாட்டில் நெல்லும் அரிசியும் இப்பொழுது தாராளமாகக் கிடைக்கிறது. ஆகவே அவர்களுக்கு வாய்ப்பு இல்லாத ஒரு நிலை இல்லை. அப்படிப்பட்ட நிலையில் நிலச்சுவாந்தார்—குடியானவர் என்ற ஒரு பாகுபாடு இருப்பது நம்முடைய நாட்டுக்கு நல்லதல்ல. இதற்கு ஒரு தீர்வு காண மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்களின் கருத்தை ஏற்றுக்கொண்டு, அதை அவர்கள் மாவட்டத்தில் பரப்பினால் நல்லது. திரு. கணபதி சொல்லும் கருத்துதான் திரு. சுவாமிநாதனின் கருத்துமா என்பது எனக்குப் புரியவில்லை. அப்படியென்றால், அதை நிறைவேற்ற இந்த அரசு தயாராக இருக்கிறது. அரசு வாங்க முயலும்போது, அதற்கான பணம் எங்கே இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். "டெனன்சி கார்ப்பரேஷன்" ஒன்றை அமைத்து, உழுகின்ற உழவர் பெருமக்களுக்கு நிலத்தை சொந்தமாக்கிக் கொடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே இந்த மன்றத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அது உண்மையாக இருக்குமானால், அது பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று. நிலச்சுவாந்தார்கள் என்ற பெயரில் ஏராளமான நிலத்தை வைத்திருப்பவர்கள் அந்த நிலங்களை உழுகின்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். நிலச்சுவாந்தார்கள் தங்களுக்கு அரசியல் பலம் இருக்கிறது என்பதால்,

(பிற்பகல் 6.00)

ஒத்துழைப்புத் தருவதில்லை. திரு. கணபதி அவர்கள் சொல்லுகின்றவை உழுகின்றவர்களிடம் நிலத்தைக் கொடுத்து அவர்களுக்குச் சொந்தமாக்க வேண்டுமென்ற கருத்தாக இருக்குமானால், அதைப் பரிசீலிப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது. ஆனால் அதையெல்லாம் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தவர்கள் சொல்லவில்லை. அவர்கள் சொன்னது: "தமிழ் நாட்டில் நிலச்சுவாந்தார்கள் இருக்கிறார்கள். அவர்களிடத்திலே தேவையில்லாத அளவிலே நிலம் இருக்கிறது. அப்படித் தேவையில்லை என்று சொல்கிற நிலத்தை வாங்குவோர் தமிழ் நாட்டிலே இல்லை. அப்படிப்பட்ட ஒரு நிலச்சுவாந்தார் இருப்பாரானால், அப்படி நிலத்தை விற்பதற்கு அவர் தயாராக இருப்பாரானால், அதை வாங்குவதற்கு தமிழ் நாட்டில் ஆள் இல்லை என்றால்—இத்தனையும் உண்மையாக இருக்குமானால்—ஏன் இந்த அரசாங்கம் அவர்

களிடத்திலே இருந்து நிலத்தை வாங்க முன்வரக்கூடாது?" அவர்களிடத்திலேயிருந்து அந்த நிலத்தை வாங்கி, அவர்களுக்கு நஷ்டஈடு கொடுத்து, அந்த நிலத்தை ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கலாம் என்பதுதான் இந்தத் தீர்மானத்தின் பொருள் என்று நான் கருதுகிறேன். இந்தக் கருத்து உண்மையா என்பது தெரியவில்லை; அப்படி இருக்குமானால், அதற்கு என்ன மாற்றுப் பரிகாரம்? ஏன் அப்படி இருக்கிறது? ஏன் அதை வாங்க ஆள் இல்லாமல் போய்விட்டார்கள்? அந்த நிலம் பேருக்குத்தான் நிலமாக இருக்கிறதா அல்லது பாறையாக இருக்கிறதா? உற்பத்தி செய்கிற நிலத்தை வாங்குவதற்கு தமிழ் நாட்டிலே ஆள் இல்லாமல் இருக்க முடியுமா? இந்தப் புள்ளிவிவரங்கள் தரப்படுமானால், அதைப் பரிசீலித்து அதற்கு என்ன பரிகாரம் நாம் காணலாம் என்பதைப்பற்றி ஆலோசிக்கலாம். அதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. நம்முடைய எண்ணம், 'நான் உழமாட்டேன்' என்று சொல்லி உற்பத்திக்குக் குந்தகம் ஏற்படுத்துகிற நிலச்சுவாந்தார்கள் இருப்பார்களானால், அவர்களிடத்திலேயிருந்து நிலத்தைப் பறிப்பதுதான் நியாயமான கொள்கை. திரு. சுவாமிநாதன் அவர்கள் சொல்கிறமாதிரி, உண்மையிலே நாட்டுக்கு விரோதமாக, உற்பத்தி செய்யக்கூடிய நிலத்தை உற்பத்தி செய்யாமல் சும்மா போட்டு வைத்திருக்கிறார்கள் என்றால், அதற்கென்று ஒரு சட்டம் இருக்கிறது. அதைப் பயன்படுத்தி நிலத்தைப் பறிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இப்போது அந்தச் சட்டம் இருக்கிறது. அதைப் பயன்படுத்துவதற்கு நாம் தயாராக இருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு நிலை இருக்குமானால், நான் பரிசிலிக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டால், இது அரசாங்கம் போட்டிருக்கிற நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் வராது. நிச்சயம் அந்தச் சட்டத்திலுள்ள மார்க்கெட் வேல்யூக்குக் குறைவாக ஒரு சட்டம் போட முடியாது. அப்படிச் செய்து ஆபத்திலே நாம் மாட்டிக்கொள்ளக்கூடாது. புள்ளிவிவரங்கள் எல்லாம் தந்ததற்குப் பின்னாலே, அதுகுறித்துப் பரிசிலிக்கலாம். ஆனால் உற்பத்தி செய்யாமல் நிலத்தை நிலச்சுவாந்தார்கள் வைத்திருந்து, அதை யாருக்கும் விற்க முடியாமல், அதை வைத்திருப்பதைவிட அதை விற்றுவிட்டால் பரவாயில்லை என்று உற்பத்தி செய்யாமல் வைத்திருந்தால், அரசாங்கமே அந்த நிலத்தைப் பறிமுதல் செய்து, அரசாங்கமே சொந்தச் சாகுபடி செய்ய வாய்ப்பு இருக்குமா என்று பரிசிலிப்பது நியாயம் என்று கருதுகிறேன். நான் சொல்லுவது தவறாக இருக்குமானால், அதற்கு வேறு காரணங்கள் இருக்குமானால், அந்தக் காரணங்களை எல்லாம் சொன்னால், நாம் பரிசிலிப்பதற்குத் தயாராக இருக்கிறோம். தீர்மானத்தை ஏற்றுக்கொண்டால், அது அரசாங்கத்தை ஆபத்திலே கொண்டுபோய்விடக்கூடும். ஆகவே வேறு பரிகாரம் சொன்னால், அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.





திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதில் இந்தமாதிரி இருக்கலாம் என்றுதான் நான் சொல்லலாம். மதிப்பிற்குரிய நண்பர் திரு. கணபதி அவர்கள் சொன்னார்கள். தனிப்பட்ட முறையிலே குறைந்த அளவாக லட்சக்கணக்கான பேர் நிலங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை அவர்களே சாகுபடி செய்துகொண்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, பண்ணையாள் சட்டம் இருக்கிறது. அதிலே சில கட்டு திட்டம் இருக்கிறது. uneconomic holding என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். uneconomic holding என்ற அளவிலே, ஒரு ஆண்டிற்கு உற்பத்தியிலிருந்து ஊதியம் பெறக்கூடிய நிலை இல்லாத காரணத்தாலே, அவர்களுக்குப் பயன் இல்லாத நிலைமை இருக்கிறது. அவர்கள் பாடுபடுவதற்குத் தகுந்த ஊதியம் வராமல் இருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலே மற்ற மாவட்டங்களைவிட நெல் விலை பாதிக்குப் பாதி குறைவாக விற்கிறது. அது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். ஆகவே இவ்வளவு வேலை செய்துவிட்டு பயன் இல்லாத நிலையிலே விவசாயிகளுக்குச் சோர்வு ஏற்படுவது வழக்கம். அது வியக்கத்தக்கது அல்ல. அந்த நிலையிலே அவர்கள் நிலத்தைக் கொடுத்து விடுகிறேன் என்று சொன்னால், அந்த நிலத்திலிருந்து வருமானம் வரும் என்று நினைப்பவர்கள்தான் அதை வாங்க முன்வருவார்கள். தஞ்சை மாவட்டத்திலே உள்ள பண்ணை நிலங்களைப் பொறுத்தவரையிலே, வாங்குவோர் யாரும் இல்லை என்ற நிலைமை கடந்த ஓராண்டுக் காலமாகவே இருந்து வருகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மற்ற மாவட்டங்களில் எப்படி இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், எனக்கு திருத்துறைப்பூண்டி தாலுக்காவில் 15 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்தப் பண்ணை நிலத்தில் எனக்கு ஏக்கருக்கு 200 ரூபாய் அளவிலேதான் வருமானம் வருகிறது. அந்த நிலத்தினுடைய மொத்தப் பெறுமானம் 1 லட்ச ரூபாய். ஆனால் அதை வங்கியிலே போட்டால், 5 ஆயிரம் ரூபாய்கூட கிடைக்காத நிலை இருக்கிறது. ஆகையால் அந்த நிலத்தை விற்றுவிட்டு பணத்தை வங்கியிலே போடலாம் என்ற எண்ணம் வருவது யாருக்கும் இயற்கை. ஆனால் அதை வாங்குவோர் இல்லை. இந்தப் பிரச்சினை பற்றித்தான் மதிப்பிற்குரிய நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்களும் என்னிடத்திலே சொன்னார்கள். அவருக்குக் கிட்டத்தட்ட 10 ஏக்கர் நிலம் இருக்கிறது. அரசியலில் ஈடுபட்ட நேரம் போக, மற்ற நேரங்களில் நேரடியாகச் சாகுபடியில் ஈடுபட்டிருப்பவர். இந்தத் தீர்மானத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, அரசாங்கம் நிலத்தை எடுத்துக்கொள்ளுமானால், இன்றையதினமே நான் அரசாங்கத்திற்கு என்னுடைய நிலத்தைக் கொடுத்து

விடத் தயார் என்று ஆளுங் காங்கிரஸைச் சேர்ந்த அவர்களே சொன்னார்கள். அதே சமயத்தில் மதிப்பிற்குரிய நண்பர் திரு. கணபதி அவர்களும் சொன்னார்கள். 'என்னுடைய குடும்பத்தில் அண்ணன் தம்பிகளுக்குச் சேர்த்து 35 ஏக்கர் நிலம் இருக்கிறது. உறவினர்களுடைய நிலமும் சேர்த்து 105 ஏக்கர் இருக்கிறது. அதை மொத்தமாக அரசாங்கத்திற்குக் கொடுத்துவிடத் தயாராக இருக்கிறோம். அவ்வளவும் பண்ணை நிலம்' என்று சொன்னார்கள். ஆக, இந்த அவையிலே உறுப்பினர்களாக இருக்கக்கூடிய 3 பேரே அதற்குச் சாட்சி. ஆகவே அந்த அளவிலே நிலத்தைக் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை அமைச்சர் அவர்களிடத்திலே சொல்ல விரும்புகிறேன். மேலும் பல நிலச்சுவாந்தார்கள், 'அரசாங்கமே நிலத்தை எடுத்துக்கொள்கிறது என்று சொன்னால், எங்களுடைய 5 ஏக்கர், 10 ஏக்கர் நிலத்தை அரசாங்கத்துக்குக் கொடுத்துவிட்டு வேறு வேலை செய்யலாம்' என்று பல இடங்களிலே சொல்லி, அந்த அடிப்படையில்தான் சுதந்திரா கட்சியைச் சேர்ந்தவனாகிய நானே தைரியத்தோடு இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறேன். அவர்கள் அந்த அபிப்பிராயத்தைச் சொல்லாவிட்டால், நானும் இங்குவந்து சொல்லியிருக்கமாட்டேன். ஏனென்றால் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடும் என்ற கருத்து எனக்கு இருந்தது. அப்படி ஏற்றுக்கொண்டால், என்ன நடக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சாகுபடி செய்யாமலிருந்தால், அரசாங்கமே அந்த நிலத்தை எடுத்துக்கொள்ளும் என்று சொன்னார்கள். அதையேதான் நாங்களும் சொல்லுகிறோம். அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டுமென்றுதான் சொல்லுகிறோம். ஆகவே அந்த நிலைமையை நாங்கள் ஆதரிப்போமே தவிர, அதிலே பய உணர்ச்சி ஏற்படவில்லை. கையைவிட்டு நிலம் போனால் போதும் என்ற அளவிலேதான் நான் சொன்னேன்.

குத்தகை நிலத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் சொன்னார்கள். அதிலே எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அது சம்பந்தமான செலக்ட் கமிட்டியிலே நானும் ஒரு உறுப்பினராக இருந்தேன். அப்போது நாங்கள், "கிட்டத்தட்ட 95 சதவீத நிலச்சுவாந்தார்கள் குத்தகை நிலங்களைக் கொடுத்துவிடத் தயாராக இருக்கிறோம், அப்படிக் கொடுக்கிறபோது எங்களுக்குப் பணமாகக் கொடுத்து விடுங்கள்" என்று கேட்டோம். கொடுக்க மாட்டோம் என்று யாரும் சொல்லவில்லை. நிலத்தைக் கொடுக்கிறபோது, பணத்தைக் கேட்பது இயற்கை. முதன் முதலாக நாம் என்ன சட்டம் போட்டோம்? 'அந்த நிலத்தை உங்களிடமிருந்து எடுத்துக்கொண்டு அதை உரிய அதிகாரிகளிடம் கொடுத்துவிட்டு, 10 ஆண்டு காலத்திற்கு, ஒவ்வொரு ஆண்டாக குத்தகைதாரர்களிடமிருந்து நீங்கள் பெற்றுக்கொள்ளுங்கள்' என்று





சொன்னோம், இப்போது நிலம் உடைமையாக இருக்கும்போதே, குத்தகைதாரரிடமிருந்து எதுவும் சரியாக வருவதில்லை. சமயத்திலே அரசாங்கமே ஒன்றிரண்டு ஆண்டுகள் குத்தகை கொடுக்க வேண்டாம் என்று வஜா செய்துகொண்டிருக்கிறது. குத்தகைதாரர்களிடமிருந்து வசூல் செய்ய முடியாத நிலைமையிலே யார் கேட்பார்கள்? அப்போதும், 15 ஏக்கர் உச்சவரம்பு வைத்துவிட்டு, பூண்டி வாண்டையார், வி. எஸ். தியாகராஜ முதலியார் போன்றவர்களுடைய ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை எல்லாம் அரசாங்கம் வாங்கிக்கொண்டு அவர்களுக்கெல்லாம் 'பாண்டு' கொடுத்து விட்டு, 15 ஏக்கருக்குக் குறைவாக உள்ள சிறு நிலச் சொந்தக்காரர்களிடத்திலே 'ஒவ்வொரு வருடமும் குத்தகைதாரர்களிடமிருந்து வாங்கிக் கொள்ளுங்கள்' என்று சொல்வது நியாயம் இல்லை என்ற கருத்தைத்தான் சொன்னோம். அந்தக் கமிட்டியிலே இருந்தவர்கள், "நிலச் சொந்தக்காரர்களுக்கும் குத்தகைதாரர்களுக்கும் இடையே எந்தவிதமான தாவாவும் தேவையில்லை. ஒரேமுட்டாக பணத்தைக் கொடுத்து விடுங்கள்" என்று சொன்னார்கள். 'எங்களுக்கு விவாக ரத்து வேண்டும்' என்ற வார்த்தையைத்தான் கம்யூனிஸ்ட் உறுப்பினர்களாக இருந்தவர்கள் சொன்னார்கள். 'நாங்களும் விவாக ரத்து போடுகிறோம், அவர்களும் விவாக ரத்து போடுகிறார்கள்.' கணவனுக்கும் விவாக ரத்து தேவை, மனைவிக்கும் விவாக ரத்து தேவை. இடையிலே அரசாங்கம் ஒரு சரியான முடிவை எடுக்க வேண்டும்...

(பிற்பகல் 6-10)

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இரண்டு பேருக்கும் அரசு பணம் கொடுக்க வேண்டும்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** பணத்தை அரசாங்கம் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. அரசாங்கம் நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் எடுத்துக் கொண்டுள்ள நிலங்களுக்கு 'பான்ட்' கொடுத்திருக்கிறது. அரசாங்கம் இப்போது பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிறது. யாரிடமிருந்து நிலத்தை வாங்கிக்கொண்டார்களோ அவர்களுக்கு "பான்ட்" கொடுத்துவிட்டு, நிலத்தை யாருக்குக் கொடுத்தார்களோ அவர்களிடமிருந்து பணத்தை வசூல் செய்கிறது. பெரிய நிலச்சுவாந்தார்களுக்குச் செய்ததை, சிறிய நிலச்சுவாந்தார்களுக்கும் செய்ய வேண்டுமென்று சொல்கிறோம். பணம் கொடுக்க மாட்டோம்; நிலத்தை மட்டும் எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், அதற்கு யாரும் தயாராக இருக்க மாட்டார்கள். அதைத்தான் நாங்கள் சொல்கிறோம். அமைச்சரவர்கள் இது நிலச் சீர்திருத்தம் என்ற அடிப்படையில் வராதென்று சொல்கிறார்கள். எந்த அடிப்படையானாலும், நிலச் சீர்திருத்தமாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. அரசாங்கம் நினைத்தால், எப்படி வேண்டு

பாளுலும் செய்யலாம். சட்டம் இயற்றினால், என்ன செய்வது என்று அமைச்சரவர்கள் கேட்டார்கள். மனப்பூர்வமாகக் கொடுக்கிறோம்; ஏற்றுக்கொள்ளுங்கள் என்றுதான் சொல்லுகிறோம். இதனால் அரசுக்கு உபரி நிலம் நிறையக் கிடைக்கும். நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் ஒரு லட்சம் ஏக்கர்கள் வந்ததென்றால், இப்போது இதன் அடிப்படையில் லட்சக் கணக்கான பட்டாதாரர்கள் நிலங்களைக் கொடுத்தால், கிட்டத்தட்ட 4 லட்சம் ஏக்கர்கள் தமிழ் நாட்டில் கிடைக்கும். எனவே மொத்தம் 5 லட்சம் ஏக்கர்கள் கிடைத்தால், ஒரு லட்சம் பேர்களுக்குக் கொடுக்கலாம். நிலமற்ற விவசாயிகளுக்குக் கொடுக்க முடியும். இப்போது 45 லட்சம் நிலமற்ற விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களில் இன்னும் ஒரு லட்சம் பேர்களுக்குக் கொடுக்க முடியும். இது எல்லோருக்கும் நல்லது. இந்த அரசு நல்ல முறையில் நிலச் சீர்திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறதென்ற கருத்தையொட்டித்தான் இதைச் சொல்கிறோம். எனவே இந்த நிலங்களை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய தீர்மானத்தை அரசாங்கம் மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்தத் தீர்மானத்தை முதலில் பார்த்தபோது, அரசாங்கத்தைக் கிண்டல் பண்ணுவதற்காகக் கொண்டு வரப்பட்டுள்ளதென்று நினைத்தேன். இப்போது உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்டதும் அப்படியல்லவென்று நம்புகிறேன். இங்கேயுள்ள மூன்று உறுப்பினர்களின் நிலங்களை—சொந்தச் சாகுபடியில் உள்ள நிலங்களை—வாங்குவதற்கு ஆள் இல்லாமல் இருப்பதால், அவற்றை அரசாங்கமே முன்வந்து, உழவர்களுக்கு வாங்கிக் கொடுத்தால், உற்பத்தி பெருகுமே என்ற நல்ல எண்ணத்தைச் சொன்னார்கள். பண்ணைக்காரர்கள் வைத்துக்கொண்டிருக்கும் நிலங்களையெல்லாம் எந்தவிதமான பணமும் பெறாமல் ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும். சொத்து இல்லாத சோஷலிசக் கட்சியைச் சேர்ந்தவர்கள் திரு. ஆறுமுகசாமி அவர்கள். அவர்களும் எந்தவிதமான காம்பன்சேஷனும் இல்லாமல் கொடுக்க முன்வருவார்களென்று நினைக்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** அரசாங்கத்திற்கு ஒரு பிரச்சினையைக் கொண்டு போக வேண்டுமென்பது எங்களுடைய நோக்கமல்ல. அதே போன்று அரசாங்கமும் உறுப்பினர்களுக்கு ஒரு பிரச்சினையைக் கொண்டுவர வேண்டுமென்பதும் எங்களுடைய கருத்தல்ல. நாங்கள் சிறிய நிலச்சுவாந்தார்கள்.

**திரு. எம். ஆறுமுகசாமி:** இதுபோல் ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் தயாராக இருந்தால், நான் இன்றைக்கே எவ்விதக் காம்பன்சேஷனும் இல்லாமல் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.





**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சட்டம்கூடக் கொண்டுவர வேண்டுமென்பதில்லை. நாளைக்கே சர்வே நம்பரைச் சொல்லி, அதை இனாமாகக் கொடுக்கிறேன் என்றால், நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். இப்போது மூன்று நண்பர்கள் தங்களுடைய நிலங்களை வாங்க ஆளில்லை என்று சொல்லுகிறார்கள். இது பத்திரிகையில் வருமென்று நினைக்கிறேன். ஏராளமான நிலங்கள் . . .

**திரு. ஜி. சுவாமிநாதன்:** ஏராளமான நிலம் என்று சொல்லும் வாதத்தை நான் ஆட்சேபிக்கிறேன். நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் 15 ஏக்கர்களுக்குள்ளாக வைத்துக்கொண்டிருக்கும் சிறிய நிலச்சுவாந்தார்கள்தான்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** 15 ஏக்கருக்கு உள்ளாக வைத்திருக்கும் நண்பர்கள் இதற்குத் தயாராக இருக்கிறார்கள். எனவே அவர்களுடைய நிலத்தை வாங்க ஆளில்லை என்ற செய்தி பரவிவிடும். தமிழ் நாடு முழுவதும் அப்படி நிலங்களை வைத்துக்கொண்டிருக்கிற விவசாயிகள் இருக்கிறார்களா என்பது இதன்மூலம் மக்களுக்குத் தெரியும். உண்மையில் தமிழ் நாட்டில் இப்படிப்பட்ட நிலை இருந்தால், அதைப் பரிசீலிக்க வேண்டும். தேவையில்லாதவர்களிடம் இருக்கும் நிலங்களை வாங்கி, உழுகின்ற உழவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிற கருத்து நியாயமானதுதான். அதைக் கொள்கையளவில் ஆதரிக்கிறோம். என்றாலும், அது உண்மை என்பதை தைரியமாக ஒப்புக்கொள்ள முடியவில்லை. மூன்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வதால், அதை நம்ப வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறேன். தமிழ் நாடு முழுவதும் இப்படிப்பட்ட கொள்கைக்கு ஆதரவு கிடைத்தால், அரசாங்கம் அதற்கு மாற்றுப் பரிகாரம் செய்ய யோசிக்குமென்று கூறி, இப்போது இந்தத் தீர்மானம் தேவையில்லையென்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் தம்முடைய தீர்மானத்தை வலியுறுத்துகிறாரா?

**திரு. ஜி. சுவாமிநாதன்:** துணைத் தலைவரவர்களே, நான் என்னுடைய தீர்மானத்தை வலியுறுத்தவில்லை.

தீர்மானம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

### (3) மதுரையில், சென்னை உயர்நீதி மன்றத்தின் நீதி ஆயம் ஒன்று அமைத்தல்.

**திரு. டி. சந்தோஷம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"மதுரையில், சென்னை உயர்நீதி மன்றத்தின் நீதி ஆயம் ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரசுக்கு இந்த அவை பரிந்துரை செய்கிறது"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, I second it.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"மதுரையில், சென்னை உயர்நீதி மன்றத்தின் நீதி ஆயம் ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரசுக்கு இந்த அவை பரிந்துரை செய்கிறது".

**திரு. டி. சந்தோஷம்:** துணைத் தலைவரவர்களே, இந்தத் தீர்மானம் குறித்து அதிகமாக விளக்கிப் பேச வேண்டிய அவசியமில்லை என்று நான் உணர்ந்திருக்கிறேன். ஏனென்றால் நீண்ட நாட்களாகவே இந்தத் தீர்மானத்தில் கண்டுள்ள பொருள்பற்றி, என்னால் மட்டுமல்லாமல் மற்றும் பல உறுப்பினர்களாலும் பல முறை வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. தென் தமிழ் நாட்டுப் பொது மக்களைப் பொறுத்தவரையில், அவர்கள் அனைவரும் பல பெரிய பொறுப்புள்ள ஸ்தாபனங்கள் மூலம் இதைத் தீர்மானமாக நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் கிளர்ச்சி செய்யவில்லையேயொழிய, மற்ற முறைகளில் இந்தப் பிரச்சினைபற்றித் தெரிவித்திருக்கிறார்கள். பொறுப்புள்ள பல நிறுவனங்களிலிருந்து இப்படிப்பட்ட முடிவை ஆதரித்திருக்கிறார்கள். நமது தமிழ் மக்களின் பேரன்பையும், ஆதரவையும் பெற்றுள்ள ஆற்றல்மிக்க அமைச்சரவை ஏற்கெனவே இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், இந்தக் கருத்தின் அடிப்படையில் மத்திய அரசை அணுகி, அவர்களை இந்தமாதிரி ஒரு ஹைக்கோர்ட் பெஞ்ச்-ஐ மதுரையில் நிறுவ அனுமதி வழங்க வேண்டுமென்று வற்புறுத்தி வந்திருக்கிறது. குறிப்பாக நமது முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களும் நமது சட்ட அமைச்சர் மாண்புமிகு திரு. மாதவன் அவர்களும் இந்த விஷயத்தில் பெரிதும் அக்கறை காட்டி வந்திருக்கிறார்கள். 'வெஸ்டட் இன்டரஸ்ட்' என்று சொல்லக்கூடிய ஒருசிலர் மாத்திரம் சுயநலத்தின் அடிப்படையில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களைத் திருத்த நான் முயற்சி செய்யவில்லை. அவர்களைத் திருத்தவும் முடியாது. அவர்களைத் திருத்த அவசியமும் இல்லையென்று நான் நினைக்கிறேன். நான் ஏன் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்



என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். பொது மக்களின் கருத்துக்களுக்கு ஒரு வடிவம் கொடுத்து, ஏற்கெனவே அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் முயற்சிகள் வெகுசீக்கிரத்தில் வெற்றியடையும் வகையில் அரசாங்கத்தின் கரங்களை வலுப்படுத்த வேண்டுமென்றுதான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். 1973 ஆம் ஆண்டில் இந்திய அரசியல் சட்டத்திற்கு 30-வது திருத்தம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. இந்திய அரசியல் சட்டத்தின் 133-வது பிரிவு—உட் பிரிவு 1 (ஏ) & (பி)-ல் ஏற்கெனவே, எந்த ஒரு வழக்கும் 20,000 ரூபாய்க்கு அதிகப்பட்ட மதிப்புள்ளதென்று உயர்நீதி மன்றம் சான்றிதழ் வழங்கினால்தான், சுப்ரீம் கோர்ட் ஏற்றுக்கொண்டு, விசாரிக்கலாம் என்று இருந்தது. ஆனால், பாராளுமன்றத்தில் கொண்டுவந்த 30-வது திருத்தத்தின் மூலம் அதை மாற்றினார்கள். 20 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள வழக்குகள் மட்டுமல்லாமல், எவ்வளவு குறைந்த மதிப்புள்ள வழக்குகளாக இருந்தாலும், உயர்நீதி மன்றம் அதிலுள்ள முக்கியமான பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியிருக்கிறதென்று சான்றிதழ் வழங்கினால், அந்த வழக்கை சுப்ரீம் கோர்ட் எடுத்து விசாரிக்க வேண்டுமென்று திருத்தம் கொண்டு வந்தார்கள். அந்தத் திருத்தத்தின்மேல் பாராளுமன்றத்தில் நடந்த விவாதங்களை நான் படித்தேன். எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அதுபற்றிப் பேசினார்கள். மத்திய சட்ட அமைச்சர் திரு. கோகலே அவர்களும் பேசினார்கள். பேசிய எல்லோரும் ஒரு கருத்தை, ஒருமனதாகத் தெரிவித்திருக்கிறார்கள். நாட்டிலுள்ள உயர்மட்ட நீதி மன்றங்களனைத்தும் ஏழை மக்களும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்தை அனைவரும் சொன்னார்கள். ஆனால் 30-வது திருத்தம் கொண்டுவந்ததன் மூலம் உயர் மட்ட நீதி மன்றங்கள் ஏழைகளுக்குப் பயன்படுமென்று நினைப்பது பெருந் தவறாகும். 1,500 மைலுக்கு அப்பாலுள்ள சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு ஏழை போய் தன்னுடைய வழக்கை, ஒரு 5 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள வழக்கை நடத்துவது எப்படி முடியும்? அதற்காகும் பிரயாணச் செலவும், அங்கு போய் முன்பின் தெரியாத வக்கீல்களை நியமித்து வழக்கை நடத்தினால், 5 ஆயிரம் ரூபாய் வழக்குக்கு மேலும் 5 ஆயிரம் ரூபாய் ஆகும்.

(பிற்பகல் 6.20)

If really justice through the higher courts should be available to the poor litigant, it should be made available to him at his very doors. ஆக, ஏழை மக்களுக்கு நீதிமன்றங்கள் பயன்படவேண்டுமென்றால், அந்த நீதி மன்றங்கள் அவர்களுடைய வீட்டுக்குப் பக்கத்திலேயே அமைய வேண்டும். அப்போது

தான் நல்ல முறையில் பயன்பெற முடியும். நமது தமிழகத்தின் தலைமை நீதிபதி ஜஸ்டிஸ் திரு. வீராசாமி அவர்கள் பொறுப்பேற்ற சமயத்திலே இந்தக் கருத்தை ஏற்று வலியுறுத்தினார்கள். "Decentralization of Courts" அதாவது, நீதிமன்றங்கள் பரவலாக அமைககப்பட வேண்டும் என்று சொன்னார்கள். உதாரணமாக, மதுரையிலே நீண்ட நாட்களாக இயங்கி வந்த இராமநாதபுரம் சப்-கோர்ட்டை ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு மாற்ற வேண்டும் என்று ஒரு நடவடிக்கை மேற்கொண்டார்கள். அதே கொள்கையின் அடிப்படையில்தான் நான் இன்று கொண்டுவந்திருக்கும் இந்தத் தீர்மானம் இருக்கிறது. உயர்நீதி மன்றத்தின் ஒரு பிரிவை மதுரையில் வைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை, "Decentralization of Courts" என்ற அடிப்படையிலேதான் கொண்டு வந்திருக்கிறேன். ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கேள்வி கேட்கக்கூடும். தமிழ் நாட்டின் தென்பகுதியிலிருந்து 500 மைலுக்கு அப்பால் இருக்கின்ற உயர்நீதி மன்றத்தை இரண்டாக அமைத்து, அதில் ஒரு பிரிவை மதுரையில் அமைக்க வேண்டும் என்று கேட்கிறீர்களே, 1,500 மைலுக்கு அப்பால் உள்ள சுப்ரீம் கோர்ட்டை இம்மாதிரிப் பிரித்து பரவலாக அமைக்கக் கேட்கக்கூடாதா என்ற கேள்வி கேட்கக்கூடும். நான் சொல்வேன், 'நிச்சயமாகப் பிரிக்க வேண்டும்' என்று. இரண்டாக மட்டுமல்ல, அதை நான்காகப் பிரிக்க வேண்டும் என்பதுதான் என் கருத்து. அப்படிப் பிரிப்பதில் Southern Bench of Supreme Court சென்னையிலோ, பெங்களூரிலோ அமைக்கலாம் Eastern Bench of Supreme Court கல்கத்தாவிலோ, பாட்னாவிலோ அமைக்கலாம்.

Western Bench of Supreme கல்கத்தாவிலோ, பாட்னாவிலோ அமைக்கலாம். பம்பாயிலோ, பூனாவிலோ அமைக்கலாம்.

Court Northern Bench of Supreme Court டெல்லியிலேயே இயங்க வேண்டும். ஒரு முக்கியமான வழக்கு என்று சொன்னால். Super Full Bench என்று அமைத்து, பெரிய அளவிலே அந்த விசாரணை நடக்க வேண்டும் என்ற நிலைமை இருக்க வேண்டும். அப்போது நான்கு டிவிஷன்களிலிருந்தும் நீதிபதிகள் வரவழைக்கப்பட்டு அந்த வழக்கை நடத்தலாம். இது அவசரமாக நிறைவேற்ற வேண்டிய ஒரு கோரிக்கை. நான் அந்தக் கோரிக்கையை இந்தத் தீர்மானத்துடன் சேர்த்துக் கொள்ளவில்லை. அதற்கான strategic reasons என்னவென்றால் அதை இத்துடன் இணைத்தால் ஒரு வேளை இந்தத் தீர்மானத்திற்கும் முட்டுக் கட்டை ஏற்படலாம் என்பதுதான்.. எனவே, சென்னை உயர்நீதி மன்றத்தை மாத்திரம் இரண்டாகப் பிரித்து ஒரு பிரிவை மதுரையில் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை மாத்திரம் தற்போது தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.





நமது அமைச்சரவை இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு செயல்படுத்துவதற்கு பல முயற்சிகளை எடுத்து வந்தாலும்கூட, மக்களுடன் தொடர்பில்லாத, மக்களுடைய கஷ்டங்களையும், துன்பங்களையும் உணராத சில அதிகாரிகள் இதற்கு எதிர்ப்புகளைக் கிளப்புகிறார்கள். முதலாவது அவர்கள் கிளப்பும் எதிர்ப்பு,

The High Court loses its integrity and the disintegration that will accompany decentralization will weaken the High Court.

அதாவது, உயர்நீதி மன்றத்தின் ஒற்றுமை குலைந்து அதன் காரணமாக பலவீனம் ஏற்பட்டுவிடும் என்று கூறுகிறார்கள். இது முற்றிலும் தவறான கருத்து. ஏற்கெனவே பல ஆண்டுக் காலமாக, உத்திரப்பிரதேசத்தில் அலகாபாத் ஹைக்கோர்ட் மற்றும் லக்னோ பெஞ்ச் என்ற இரண்டு பிரிவுகள் இயங்கி வருகின்றன. மத்தியப் பிரதேசத்தில் நாக்பூர் ஹைக்கோர்ட் மற்றும் இந்தூர் பெஞ்ச் என்று இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. இந்த இரண்டு மாநிலங்களிலும் அங்குள்ள உயர்நீதி மன்றங்கள் எந்த விதத்திலும் பலவீனம் அடைந்து விட்டதாக யாரும் குறிப்பிடவில்லை. அப்படியிருக்க, நாம் கோரிக்கையை வைக்கும்போது, இங்கே இப்படி எதிர்ப்புக் கிளப்புகின்றார்கள். ஆகவே, அவர்கள் கிளப்பும் இந்த எதிர்ப்பு கற்பனைதான் என்பது புலனாகிறது.

இரண்டாவது, மதுரையில் உயர்நீதி மன்றத்திற்குத் தேவையான தரமான நூல் நிலையம் இல்லை என்று சொல்கிறார்கள். ஓரளவு உண்மைதான். ஆனால், இந்தக் குறையை வெகு எளிதில் போக்கிவிடாலம். இப்படிப்பட்ட ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டு மதுரைக்கும் ஹை-கோர்ட் வரப்போகிறது என்ற நிலைமை ஏற்பட்டால், தென் பிராந்தியங்களில் வாழ்கின்ற மக்கள் மற்றும் வழக்கறிஞர்கள் எல்லோரும் மனமுவந்து தாராளமாக நன்கொடை கொடுத்து வெகு சீக்கிரத்தில் ஒரு பெரிய நூல் நிலையத்தை ஏற்படுத்திவிடலாம். ஆகவே, அதை ஒரு பெரிய இடையூறாக நினைக்க வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மற்றொரு எதிர்ப்பு கூறப்படுகிறது. அதாவது, மதுரையில் அனுபவம் உள்ள, திறமை மிக்க வழக்கறிஞர்கள் இல்லை என்பதுதான். இந்தக் கருத்தை நான் வன்மையாக மறுக்க விரும்புகிறேன். நான் என்னுடைய நண்பர்களான சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் ஒருவரிடமும், ஒரு உயர் நீதிமன்ற நீதிபதியிடமும் ஒரு சமயத்தில் பேசிக்கொண்டிருந்தபோது, இந்தக் குற்றச்சாட்டுபற்றி

அவர்களிடம் சொல்லி இது உண்மைதானா என்று கேட்டேன். அவர்கள் இது முற்றிலும் தவறு, "The Bar in Madurai is second to none' என்று சொன்னார்கள். ஒருவர் சொன்னார், 'சுப்ரீம் கோர்ட்டில் இருக்கக்கூடிய நீதிபதிக்கு இணையாகக்கூட நான் சொல்வேன்' என்று. "நீங்கள் இவ்வாறு சொன்னீர்கள் என்று வெளியில் நான் சொல்லலாமா" என்று கேட்டேன் "தாராளமாக நீங்கள் சொல்லலாம், நிச்சயமாக நாங்களும் சொல்லத் தயாராக இருக்கிறோம்" என்று சொன்னார்கள். ஆகவே, இந்தக் குற்றச்சாட்டுகளில் எந்தவிதமான உண்மையும் இல்லை. ஒரு வேளை வாதத்திற்கு Assuming without admitting—that it is true, even then அதுபற்றிச் சிந்திக்கத் தேவையில்லை. மதுரையில் வைத்தால், சென்னையில் தொழில் நடத்தும் வழக்குரைஞர்கள் அங்கே வருவார்கள். ஆகவே, இதில் எந்தவிதமான இடையூறும் இருக்காது.

அடுத்தபடியாக, நான் சொல்ல விரும்புவது, இந்தப் பிரச்சினை மக்கள் பிரச்சினை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, மக்களுடன் தொடர்புள்ள, மக்களுடைய தேவைகளை உணர்ந்த அமைச்சரவை இதற்கு முடிவெடுக்க வேண்டுமேயொழிய, மக்களுடன் தொடர்பில்லாமல் Iverz towers, தந்த கோபுரத்திலே இருக்கக்கூடிய அதிகாரிகளின் முடிவுக்கு இந்தப் பிரச்சினையை விடக் கூடாது. நம்முடைய அமைச்சரவையும், மத்திய அமைச்சரவையும் சேர்ந்து ஒரு நல்ல முடிவை எடுத்து, வெகு சீக்கிரத்தில் இதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கூறி இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

THIRU A. R. DAMODARAN : Sir. I rise to support this Resolution moved by my hon. Friend Thiru Santosham not because he is a member of my party and, therefore, I have to support him, but because I am really convinced that the time has come for the Government to take a serious decision on the constitution of a High Court Bench in Madurai. Sir. I think it is almost 110 years since the High Courts were established in the four Metropolitan areas of our country and I remember that only about 10 years ago, the Centenary celebration of the Madras High Court took place. All the arguments that have been put forward by possible vested interests in Madras that the integrity of the High Court would be spoilt if another High Court is established in Madurai and that the calibre of the Bar in Madurai is not up to the standard of Madras Bar, are entirely specious and as my hon. Friend has mentioned, I am sure that the members of the Bar in Madurai



and in the outlying districts are as capable and have as much knowledge of the due processes of law as my Advocate-friends in Madras. Sir, Uttar Pradesh has two High Courts; and Maharashtra has two High Courts. In fact, one of the important points that have been outlined by our Prime Minister in her 20-point economic programme is that legal aid to the poor should be given speedily and at the minimum cost. This, Sir, is possibly one of the resolutions that will fulfil this important point that has been mentioned in the economic programme. I know how expensive litigation is; and for litigants to go all the way from Kanyakumari to have a case decided by the Madras High Court is as cumbersome and expensive, as it is for some of us to go to the Supreme Court when we have to make an appeal to that Court. I know it is very difficult and we have the same problem whenever a Sub-Court has to be established in a district and there will be hundreds of petitions from my friends serving in that place. Sir, they are under the mistaken impression that if another High Court in Madurai is created, their practice will be diminished. Sir, we have promulgated so many enactments within the past 20 years. The speed with which we have introduced legislation is probably 200 times the speed at which legislation was introduced between 1857 and 1947. Even during this session we have passed about 15 enactments to replace Ordinances. So, my learned friends, the advocates need not worry about having sufficient practice. The Indian people have perhaps been unjustly criticised by the Britishers as extremely fond of litigation. We are very fond of going to Courts. Therefore, Sir, even if we had half-a-dozen more High Courts, my advocate-friends will be fully and busily occupied. Perhaps during the Emergency, their practice would have been affected to a certain extent because many of the fundamental rights have been suspended and obviously the Writ jurisdiction has been reduced. Normally speaking, I think we do not have to consider all these arguments at all and they are specious. The paramount consideration should be the convenience of the people who have to go to Court to have certain disputes settled. I think from that aspect, people in outlying districts of Ramanathapuram, Madurai and other southern districts would consider it a boon and I am sure the Hon. the Minister for Law, quite apart from the fact that he himself hails from the southern districts, would realise the great difficulty that was being experienced by the litigants when he himself was practising and I hope that he will be

able to influence—or I should not use the word 'influence'—he will be able to convince both the High Court of Madras, if it requires conviction, and the Government of India, possibly the Supreme Court which has some voice in this and the authorities concerned and see to it that before February—before Pongal of 1976, an announcement is made that another High Court will be constituted in Madurai. The money that is required to equip the library will come from my friends like Thiru Santosham, since there are very many Advocates in Madurai who are willing to collect money and present funds for the formation of a first class library in Madurai. But this is a very small consideration. I do hope that the Hon. the Minister for Law will give a very sympathetic consideration to this resolution and see that it is accepted at an early date. Thank you, Sir.

(பிற்பகல் 6-30)

*திரு. ஆர். சக்தி மோகன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவா வர்களே, மாண்புமிகு அங்கத்தினர் திரு. சந்தோஷம் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். ஏனென்றால் கடந்த 2 ஆண்டுகளாகவே மதுரையில் ஹைக்கோர்ட் பெஞ்ச் ஒன்று வைத்தாக வேண்டும் என்று பல உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். அது அவசியமான பிரச்சினையும்கூட. மதுரையில் ஹைக்கோர்ட் பிரிவு ஒன்று இல்லாததால் உள்ள சிரமங்கள் குறித்தும் விவரமாக உறுப்பினர்கள் விளக்கிச் சொல்லிவிட்டார்கள். அதிலே சிக்கல்கள் இருக்கின்றன என்று சொன்னாலும்கூட, அதை மக்கள் பிரச்சினையாகக் கருதி நிறைவேற்ற வேண்டும். குறிப்பாக சென்னைக்கு அடுத்த தலைநகரம் மதுரைதான். தென்பாண்டி மண்டலத்திலே உள்ள மாமதுரையில், உறுப்பினர்களின் வேண்டுகோளை ஏற்று, சட்டக்கல்லூரி அமைத்துச் சிறப்பித்த நமது அமைச்சரவை, உயர்நீதி மன்றப் பிரிவு ஒன்றையும் திறவினால் பெருஞ் சிறப்பாக இருக்கும், சாதாரண மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு நல்ல பயன் விளைவிக்கும் என்று எல்லோராலும் கருதப்படுகிறது. ஏனென்றால் வழக்குகளை நடத்த, பாமரமக்கள், சென்னைக்கு வர-போக, மதுரை வக்கீல் மூலம், சென்னையில் வக்கீல் அமைக்க வேண்டும். செலவையும், சிரமத்தையும், சமாளிக்க முடியாமல் தவிக்கிறார்கள். கடனாளி களாகிறார்கள். கட்டாயமாக ஹைக்கோர்ட்டு வரை செல்ல வேண்டும் என்று நினைக்கின்ற நிலை நம் நாட்டிலே பழக்கம் ஆகிவிட்டது. கன்னியாகுமரி, மதுரை போன்ற நெடுந்தூர நகர்களிலிருந்து சென்னைக்கு வழக்குக்காக வருவது, வந்து வழக்கு நடத்துவது என்பது பாமர மக்களுக்கு பல வழிகளிலே



செலவை அதிகமாக்குகிறது. இந்தச் செலவுகள் வழக்கின் குறிக்கோளையே அழுத்திவிடுகின்றன. வழக்கில் சம்பந்தப்பட்ட மக்கள் திகைத்துத் திண்டாடு கிறார்கள். இது மக்கள் பிரச்சினை. தமிழ் நாட்டின் சிறப்புமிக்க நகரம் மதுரை. அது தலைநகரம் போல் இருக்கின்றது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாமதுரையில் ஒரு ஹைக்கோர்ட்டு பெஞ்ச் ஏற்படுமானால், இந்த அமைச்சரவைக்கும் பெரும் சிறப்பு. இதை அமுல்படுத்தினால், அந்தப் பகுதி மக்களுக்குப் பெரும் பயன் ஏற்படும். மாண்புமிகு அங்கத்தினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னதுபோல் பொங்கல் வரைகூட போகாமல் டிசம்பருக்குள் 1975 லேயே ஸ்தாபித்தால் பெரும்புகழ் ஏற்படும் என்று வேண்டி இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவா வர்களே, இந்தத் தீர்மானம் நல்ல நோக்கத்தோடும், பொது மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற ஆர்வத்தோடும் கொண்டு வரப்பட்டிருக்கின்றது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். இதை நிறைவேற்றுகின்ற அதிகாரம் நம்மிடத்தில் இல்லை என்பதும் இங்கு முன்மொழிந்த அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். இந்தக் கொள்கை நாட்டு மக்களிடத்திலே பரப்பப் படவேண்டுமென்ற ஒரு நல்ல நோக்கத்தோடு இதைக் கொண்டுவந்திருக் கின்றார்கள். பொதுவாக நீதிமன்றங்களுக்கு வழக்குகளுக்கு என்று செல்கின்ற நிலைமைகள் எல்லாம் தவிர்க்கப்பட்டு நிலைமை மாறவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. ஒரு காலத்திலே மக்கள் நீதி மன்றத்திற்குச் செல்லாத ஒரு சமுதாய அமைப்பு ஏற்பட வேண்டும். அந்த நிலை ஒரு நாட்டில் ஏற்படுமானால், அதுதான் உண்மையான ஜனநாயகம் என்று நான் கருதுகிறேன். அந்த மாதிரி முயற்சிகளை பொறுப்புள்ள அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணமாக இருக்கிறது. ஜமீன் ஒழிப்புச் சட்டம் கொண்டு வந்ததாலும், அடுத்து இனாம் ஒழிப்புச் சட்டம் கொண்டுவந்ததாலும், நீதி மன்றங்களிலே வழக்குகள் இல்லாத நிலை ஏற்பட்டிருக் கின்றது. இதுபோலவே முன்னேற்றமான பல சட்டங்கள் சட்டமன்றத்திலே கொண்டுவரப்படுகின்றன. மக்கள் பணத்தை விரயமாக்குகின்ற நிலைமைகளை மாற்ற சட்டங்கள் வருகின்றன. வியாபார முறையிலே ஏற்படுகின்ற தொல்லைகளை ஒழித்துக் கட்டுவதற்கு வழிவகைகள் கண்டு ஒரு புதுமையான முறையினை உருவாக்குகின்ற நிலைமையையும், அரசாங்கமே இதற்கு விதி முறைகளை உருவாக்குகின்ற நிலைமையையும், கடன் வாங்குகின்ற முறைகளை மாற்றுகின்ற நிலைமையையும், தனியாரிடத்திலே கடன் வாங்குகின்ற நிலையினை மாற்றி அரசாங்கமே இதைக் கொடுக்கின்ற நிலைமையினையும் ஏற்படுத்திக்

கொண்டு வருகிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் வளருமானால், நீதிமன்றங்களுக்குச் சென்று வழக்காடும் தொல்லைகள் மக்களுக்கு இல்லாத நிலைமைகள் ஏற்படும். நீதியைப் பெறுவதற்காக ஒவ்வொரு முறையும் பணத்தைச் செலவழித்துக்கொண்டு பல நூறு மைல்கள் பிரயாணம் செய்ய வேண்டுமென்ற நிலை இன்றைய ஒரு குறையாக அமைந்திருக்கிறது. ஆகவே ஒரு உயர்நீதி மன்றம் ஒரு இடத்திலே மட்டும் இருப்பதற்குப் பதிலாக இரண்டு இடங்களிலே ஏற்படுத்தலாமா என்ற பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். மதுரையிலே ஏற்படுத்தினால், பல மாவட்ட மக்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் அங்கு ஒரு உயர்நீதி மன்றம் அமைக்க இங்கு ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பது ஒரு வாதத்திற்கு உரிய பிரச்சினையாக இருக்கிறது. எல்லாவற்றிற்கும் ஒரே நோக்கம், எளிதாக நம்முடைய குடி மக்கள் நீதியைப் பெற வேண்டும் என்பதுதான். உயர்நீதி மன்றம் ஏற்படுத்துவதைப் பரிசீலிக்கும் போது, உச்ச நீதிமன்றம், சுப்ரீம் கோர்ட் என்பதுபற்றிய கேள்வியும் எழுப்பப்படுகிறது. அதுவும் நியாயமான கேள்வி. அதைப்பற்றி மத்திய அரசு ஆலோசனை கோரியிருக்கிறார்கள். இந்திய உச்ச நீதிமன்றத்திற்கு ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட வழக்குகள் தான் செல்ல முடியும். ஒரு மாநிலத்திற்குள்ளேயே வரக்கூடிய பிரச்சினையாக இருக்குமானால், அந்த வழக்குகள் உச்ச நீதிமன்றத்திற்குப் போக வேண்டியதில்லை, மாநில உயர்நீதி மன்றத்திலேயே அவற்றைத் தீர்த்துக்கொள்ளலாம் என்ற கருத்தை நாங்கள் சொல்லியிருக்கிறோம். மத்திய அரசு சம்பந்தப்பட்ட வழக்குகள், மாநிலத்திற்கு மாநிலம் சம்பந்தப்பட்ட வழக்குகள், அந்த மாநிலத்திற்குச் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் உள்ள வழக்குகள் இவைகளைத்தான் உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லத்தக்கவைகளாக வைத்துகொள்ள வேண்டும் என்று கூறியிருக்கிறோம். அரசியல் அமைப்புச் சட்டம் பற்றிய அல்லது மாநில எல்லைகளுக்குட்பட்ட பிரச்சினைகள்பற்றி வழக்குகள் அல்லாதவற்றை உச்ச நீதிமன்றத்திற்குக் கொண்டுபோகவேண்டிய அவசியமில்லை என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறோம். இந்தக் கருத்தை மாநில அரசு மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறது. இந்தத் தீர்மானத்திலே உள்ள பொதுவான கருத்து சென்னையிலே உயர்நீதி மன்றம் செயல்படுவதுபோல, மதுரையிலும் செயல்பட வேண்டும் என்பது. இந்தத் தீர்மானம்பற்றிப் பேசும்போது, உறுப்பினர்கள், இந்தத் திட்டத்தை அரசாங்க அதிகாரிகள் எதிர்ப்பதாகச் சுட்டிக் காண்பித்

(பிற்பகல் 6.40)

தார்கள். நிச்சயம் அவர்கள் அரசாங்க அதிகாரிகளைக் குறிப்பிடவில்லை என்பதை நான் விளக்கிக் கூறிக்கொள்கிறேன். அரசாங்க அதிகாரிகள் அவர்கள் சொன்ன மூன்று எதிர்ப்புகளையும் சொல்லவில்லை. அதைச் சொன்னவர்களையும்



நான் குறிப்பிட விரும்பவில்லை. அவர்கள் சொன்ன 3 எதிர்ப்பை யார் சொல்லியிருந்தாலும், அந்த எதிர்ப்பை இந்த அரசாங்கம் பொருட்படுத்தவில்லை, அவர்கள் சொல்லிய கருத்தை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இது ஒரு நியாயமான கோரிக்கைதான். சென்னையிலே மட்டும் ஒரு உயர்நீதி மன்றம் இருப்பதால், தென் கோடியிலிருந்து பல நூறு மைல்களுக்கு அப்பாலிருந்து வழக்கு தொடர்பாக சென்னைக்கு வரவேண்டியிருக்கிறது. பொதுமக்களுக்கு ஏற்படும் இந்தக் கஷ்டங்களை இந்த அரசு உணர்ந்ததால்தான், இந்த நிலையை மாற்ற வேண்டுமென்ற ஒரு கருத்து அரசுக்கு இருக்கிறது. மத்திய அரசிடம் இது பற்றி நானும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நேரில் சென்று விவாதித்தோம். நான் பலமுறை மத்திய சட்ட அமைச்சரிடம் நேரில் சென்று விவாதித்திருக்கிறேன், நாங்கள் எப்படி வற்புறுத்திச் சொல்லிக்கொண்டிருந்த போதிலும், மத்திய சட்ட அமைச்சர் இதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் இந்த மாதிரி வைத்திருக்கிறார்கள் என்பதை அவரிடம் நான் சுட்டிக்காட்டிச் சொன்ன போதும்கூட, அவர் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார். எல்லா மாநிலங்களிலேயும் ஒரே ஒரு இடத்தில் உயர்நீதி மன்றம் இருப்பதுதான் நல்லது என்று அவர்கள் சொல்கிறார்கள். புதிதாக இப்படிப்பட்ட ஒரு உயர்நீதி மன்றம் ஒரு மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்டதாக நான் பத்திரிகையில் செய்தி வந்ததைப் படித்து, இதை முன்உதாரணமாக வைத்து, எங்களுக்கும் உயர்நீதி மன்றத்தின் இன்னொரு பகுதியை மதுரையில் அமைக்க அனுமதி வேண்டுமென்று வாதாடினேன். மற்ற மாநிலங்களில் இருப்பதுபோல் எங்களுக்கும் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். தொடர்ந்து வாதாடி வருகிறோம். நான் விவாதித்துக்கொண்டிருக்கும்போது, இன்னொரு மாநிலத்தினுடைய அமைச்சர் ஒருவரும்கூட இருந்தார். அவர் யார் என்று நான் இங்கு குறிப்பிட விரும்பவில்லை. நான் மத்திய அமைச்சரிடம் வாதாடியதைப் பார்த்து, இந்தக் கருத்தைப் பொறுத்தவரையில், தமிழ் நாட்டை ஆதரிப்பதாக அவர் சொன்னார். நான் "நீங்கள் இந்த விஷயத்தில் மட்டும் தமிழ் நாட்டினுடைய கருத்தை ஆதரித்தால் போதாது. எல்லா நியாயமான கோரிக்கைகளிலும் தமிழ் நாட்டின் கருத்தை ஆதரிக்க வேண்டும்" என்று சொன்னேன். நாமும் வற்புறுத்திக் கொண்டுதான் இருக்கிறோம். இதை மத்திய அரசு இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை. இதுகுறித்து முடிவு செய்ய வேண்டிய பொறுப்பு மத்திய அரசின் கையில்தான் இருக்கிறது. மத்திய அரசு எடுக்கின்ற முடிவுதான் இறுதியான முடிவாக இருக்க முடியும். மத்திய அரசின் அனுமதி கிடைத்த பிறகுதான், மதுரையில் உயர்நீதி மன்றத்தின் ஒரு பகுதியை அமைக்க வேண்டுமா அல்லது எல்லா மாவட்டங்களிலும் "கேம்ப்

கோர்ட்டுகள்" அமைக்க வேண்டுமா என்பது போன்ற பிரச்சினைக்குரிய விஷயங்களைப் பரிசீலித்து முடிவெடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். சாதாரண ஏழை எளிய மக்களுடைய வழக்குகளைத் தீர்ப்பதற்காக அவர்கள் பல நூறு மைல்களுக்கு வந்து போகும் நிலையை மாற்றி, ஏழை எளிய சாதாரண மக்களுக்குப் பலனளிக்கும் வகையில் மதுரையில், உயர்நீதி மன்றத்தின் ஒரு பகுதியை (பெஞ்ச்) அமைக்க வேண்டுமென்ற இந்தக் கருத்தை இந்த அரசு ஏற்று, மத்திய அரசுக்குத் தெரிவித்து, தொடர்ந்து இக்கோரிக்கையை வற்புறுத்தியும் வருகின்ற காரணத்தால், இந்தத் தனி உறுப்பினர் தீர்மானத்தை மேற்கொண்டு வற்புறுத்தாமல் இத்துடன் விட்டு விடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் தமது தீர்மானத்தை வற்புறுத்துகிறாரா ?

**திரு. டி. சந்தோஷம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விரிவான விளக்கத்திற்குப்பின், என்னுடைய தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

தீர்மானம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

**4. தலைமை ஆசிரியர் பதவிகளை அரசிதழ் பதிவு பெற்ற பதவிகளாக ஆக்குதல்.**

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** தலைமை ஆசிரியர் பதவி குறித்து தனி உறுப்பினர் தீர்மானம் கொடுத்திருக்கும் திரு. சங்கரலிங்கம் அவையில் இல்லாததால், தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6.44)

## 5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

238. Notification issued with G.O. Ms. No. 526, Commercial Taxes and Religious Endowments, dated 31st October 1974 in regard to exemption of sale of machinery, hospital equipments, appliances and tools by any dealer to Society for the Aid of Handicapped Children, Mettupalayam Road, Coimbatore, from tax. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].





239. Notification issued with G.O. Ms. No. 2719, Home, dated 27th November 1974 in regard to an amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957 in the Tamil Nadu Cinematograph Manual. [Laid on the table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955)].

### B. *Reports, Notificaations and other Paapers.*

71. Notification issued with G.O. Ms. No. 359, Transport, dated 28th July 1975, in regard to date of coming into force of the Indian Ports (Tamil Nadu Amendment) Act, 1975 (Tamil Nadu Act 19 of 1975.)

72. Notification issued with G.O. Ms. No. 360, Transport, dated 28th July 1975, in regard to abolition of Port Conservancy Boards and Landing and Shipping Fees Committee.

73. Notification issued with G.O. Ms. No. 361, Transport, dated 28th July 1975, in regrad to appointment of Officers to receive dues, fees and other charges under the Indian Ports Act, 1908.

*74. The Tamil Nadu Handloom Textiles (Protection, Production, Distribution and Sale) Bill, 1975 (L.A. Bill No. 19 of 1974), as passed by the Assembly.

& 75. The Tamil Nadu Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Second Amendment Bill, 1975 (L.A. Bill No. 13 of 1974), as passed by the Assembly.

---

* Laid on the table of the House on 5-11-1975.

& Circulated to all M.L.Cs. on 5-11-1975.

இணைப்பு-I

[8 ஆம் பக்கத்தில் 73 ஆம் எண்ணுள்ள உடுக் குறியிட்ட வினாவின் விடையைக் காண்க].

ANNEXURE I.

*Details of Grants Sanctioned during 1971-72—Aided Arts Colleges.*

| *Serial number and name of the College.* (1) | *Compensation grant.* (2) | *Advance Teaching Grant.* (3) | *Final Teaching Grant.* (4) | *Total.* (5) |
|---|---|---|---|---|
| 1 Pachaiyappa's College, Chetput, Madras .. .. | 2,47,500 | 2,50,000 | 1,54,943 | 6,52,443 |
| 2 Sir Theagaraya College, Madras-21 .. .. .. | 2,23,400 | 75,000 | 1,38,435 | 4,36,835 |
| 3 Loyola Collge, Nungambakkam, Madras-34 .. .. | 1,86,000 | 2,00,000 | 2,29,484 | 6,15,484 |
| 4 Vivekananda College, Mylapore, Madras-4 .. .. | 1,57,700 | 1,54,600 | 2,55,437 | 5,67,737 |
| 5 New College, Royapettah, Madras-14 .. .. | 2,06,100 | 1,96,400 | 2,02,481 | 6,04,981 |
| 6 Dwaraga Doss Govarthan Doss Vaishnav College, Arumbakkam, Madras-29. | 1,45,100 | 85,000 | 1,54,098 | 3,85,198 |
| 7 C. Kandaswamy Naidu College for Men, Annanagar, Madras. | 1,50,000 | .. | 43,103 | 1,92,103 |
| 8 Stella Maris College, Madras-6. .. .. .. | 1,42,600 | 94,100 | 1,28,248 | 3,64,948 |
| 9 S.I.E.T. Women's College, Teynampet, Madras-18 .. | 2,13,000 | .. | 1,76,995 | 3,89,995 |
| 10 Women's Christian College, Nungambakkam, Madras-6. | 22,900 | 1,00,000 | 1,28,575 | 2,51,475 |
| 11 Ethiraj College for Women, Egmore, Madras-8 .. | 1,42,800 | 1,16,800 | 62,689 | 3,22,289 |
| 12 A.M. Jain College, Meenambakkam, Madras-61 .. | 1,64,300 | 1,92,200 | 1,22,026 | 4,78,526 |
| 13 Madras Christian College, Tambaram, Madras-59 .. | 1,07,600 | 2,66,900 | 2,07,340 | 5,81,840 |
| 14 S.I.V.E.T. College, Gowrivakkam, Selaiyur, Madras-73 | 1,69,700 | 44,800 | 25,751 | 2,40,251 |
| 15 Srimathi Dev Kunvar Nanalal Bhatt Vaishnav College for Women, Chromepet, Madras-44. | 1,17,700 | 43,700 | 17,162 | 1,77,962 |
| 16 Pachaiyappa's College for Men, Kancheepuram .. | 1,79,800 | .. | 1,72,680 | 3,52,480 |
| 17 Pachaiyappa's College for Women, Kancheepuram .. | 53,600 | .. | 27,744 | 81,344 |
| 18 C. Kandaswamy Naidu College for Women, Cuddalore | 94,100 | .. | 88,553 | 1,82,652 |
| 19 Voorhees College, Vellore, North Arcot .. .. | 1,15,500 | 82,500 | 70,055 | 2,68,055 |
| 20 Islamiah College, Vaniyambadi .. .. .. | 1,40,000 | 92,200 | 1,34,593 | 3,66,793 |
| 21 C. Abdul Hakeem College, Melvisharam .. | 1,70,500 | .. | 1,22,551 | 2,93,051 |
| 22 Sacred Heart College, Tiruppattur .. .. .. | 1,08,400 | .. | 1,68,091 | 2,76,491 |
| 23 Auxilium College, Katpadi .. .. .. .. | 1,05,800 | 85,200 | 56,038 | 2,47,038 |
| 24 Mazharul Uloom College, Ambur .. .. .. | 1,45,700 | .. | 27,739 | 73,439 |

| Serial number and name of the College. (1) | Compensation grant. (2) | Advance Teaching Grant. (3) | Final Teaching Grant. (4) | Total. (5) |
|---|---|---|---|---|
| 25 Kandaswamy Kandar's College, Velur, Salem .. | 1,49,500 | 54,400 | 1,07,134 | 3,11,034 |
| 26 Sri Sarada College for Women, Salem .. .. | 1,67,600 | 88,400 | 1,68,591 | 4,24,591 |
| 27 P.S.G. Arts College, Coimbatore .. .. .. | 1,93,200 | 1,00,000 | 2,47,994 | 5,41,194 |
| 28 Sri Ramakrishna Mission Vidayalaya Arts College, Perianaickenpalayam, Coimbatore district. | 1,66,500 | .. | 1,10,415 | 1,70,915 |
| 29 Nallamuthu Gounder Mahalingam College, Pollachi | 1,91,300 | 40,000 | 1,44,215 | 3,03,515 |
| 30 Chikkaiah Naicker College, Erode .. .. .. | 2,09,100 | 92,900 | 1,07,583 | 4,09,583 |
| 31 Sri Vasavi College, Erode .. .. .. .. | 1,14,800 | 41,100 | 55,384 | 2,11,284 |
| 32 Vellalar College for Women, Erode .. .. .. | 81,300 | .. | 20,518 | 1,01,818 |
| 33 Gobi Arts College, Gobichettipalayam .. .. | 1,17,900 | 22,200 | 61,083 | 2,01,183 |
| 34 S.V.G. Visalakshi College for Women ,Udumalpet .. | 84,500 | 42,200 | 62,930 | 1,89,630 |
| 35 Nirmala College, Coimbatore .. .. .. .. | 78,200 | .. | 1,72,729 | 2,50,929 |
| 36 Sri Avinashilingam Home Science College, Coimbatore | 1,31,100 | 1,31,900 | 1,83,163 | 4,46,163 |
| 37 P.S.G.R. Krishnammal College for Women, Coimbatore | 1,07,800 | 1,00,000 | 1,43,417 | 3,51,217 |
| 38 Providence College for Women, Coonoor .. .. | 32,100 | .. | 89,933 | 1,22,033 |
| 39 Emerald Heights College, Ooty .. .. .. | 4,300 | 24,400 | 22,531 | 51,231 |
| 40 St. Joseph's College, Tiruchirappalli .. .. .. | 2,00,400 | 1,29,500 | 3,03,207 | 6,33,107 |
| 41 National College, Tiruchirappalli .. .. .. | 1,90,700 | 1,52,400 | 2,08,487 | 5,57,857 |
| 42 Jamal Mohamed College, Tiruchirappalli .. .. | 1,99,000 | 1,74,600 | 2,17,038 | 5,90,638 |
| 43 Bishop Heber College, Tiruchirappalli .. .. | 2,35,400 | 60,000 | 1,01,681 | 3,97,081 |
| 44 Nehru Memorial College, Puthanampatti .. .. | 1,19,700 | 26,800 | 55,663 | 2,02,163 |
| 45 Seethalakhsmi Ramaswamy College, Tiruchirappalli | 2,06,500 | 90,400 | 1,67,649 | 4,64,549 |
| 46 Holy Cross College, Tiruchirappalli .. .. .. | 1,64,800 | 75,000 | 82,535 | 3,22,335 |
| 47 Urumu Dhanalakshmi College, Ariamangalam, Tiruchirappalli. | 63,100 } 67,400 } | .. | 25,861 | 1,56,361 |
| 48 A.V.C. College, Mayuram .. .. .. .. | 1,49,300 | 1,08,300 | 95,103 | 3,52,703 |
| 49 A. Veeraiya Vandaiyar Memorial Sri Pushpam College, Poondi. | 2,00,100 | 1,38,100 | 1,50,881 | 4,89,081 |
| 50 Khadir Mohideen College, Adirampattinam .. | 1,18,000 | 40,300 | 68,904 | 2,27,204 |
| 51 P.U.C. College of Annamalai University, Chidambaram | .. | .. | .. | .. |
| 52 Poompuhar Peravai Kalloori, Melaiyur, Poompuhar .. | 88,600 | 8,100 | 6,258 | 1,02,958 |

| Serial number and name of the College. | Compensation grant. | Advance Teaching Grant. | Final Teaching Grant. | Total. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 53 D.R.B.C.C.C. Hindu College, Thandarai, Pattabiram. | 59,400 | 75,000 | 34,102 | 1,68,502 |
| 54 Saraswathi Narayanan College, Madurai .. .. | 62,100 | 50,000 | 51,811 | 1,63,911 |
| 55 American College, Madurai .. .. .. .. | 1,14,100 | 1,96,800 | 2,26,242 | 5,37,142 |
| 56 Madurai College, Madurai .. .. .. .. | 92,600 | 1,03,200 | 2,35,894 | 4,31,694 |
| 57 Thiagarajar College, Madurai .. .. .. .. | 1,22,100 | 1,42,800 | 2,67,469 | 5,32,367 |
| 58 Nadar Mahajana Sangam S. Vellaichamy Nadar College, Nagamalai, Madurai. | 88,400 | 76,600 | 1,12,960 | 2,77,960 |
| 59 Arulmigu Palaniandavar Arts College, Palani .. | 76,500 | .. | 2,17,269 | 2,93,769 |
| 60 Hajee Kartuha Rowther Howdia College, Uthamapalayam. | 82,300 | .. | 1,51,796 | 2,34,096 |
| 61 Arulmigu Palaniandavar College of Indian Culture, Palani. | .. | .. | 10,000 | 10,000 |
| 62 G.P.N. Arts College, Dindigul .. .. .. | 95,600 | 69,500 | 75,292 | 2,40,392 |
| 63 M. S. S. Wakf Board College, Madurai .. .. | 72,100 | .. | 63,470 | 1,35,578 |
| 64 Pasumpon Muthuramalinga Thevar College, Usilampatti. | 1,05,100 | 23,300 | 93,057 | 2,21,457 |
| 65 Sourashtra College, Madurai .. .. .. .. | 82,800 | 35,400 | 35,585 | 1,53,785 |
| 66 Lady Doak College, Madurai .. .. .. .. | 47,300 | 1,00,000 | 1,58,607 | 3,05,907 |
| 67 Fatima College, Madurai .. .. .. .. | 97,600 | .. | 2,40,204 | 3,37,804 |
| 68 Yadava College, Madurai .. .. .. .. | 43,400 | 1,28,200 | 41,122 | 92,722 |
| 69 Arul Anandar College, Karumathur, Madurai .. | 23,500 | 15,600 | 35,092 | 74,192 |
| 70 Sri Palaniandavar College for Women, Palani .. | 19,300 | .. | 25,263 | 44,563 |
| 71 Sri Sathguru Sangeetha Vidyalayam, Madurai .. | 4,100 | .. | 23,155 | 27,255 |
| 72 Senthamil Arts College, Madurai .. .. .. | .. | .. | .. | .. |
| 73 Virudhunagar Hindu Nadars Senthakumara Nadar College, Virudhunagar. | 1,69,300 | 1,73,000 | 2,86,911 | 6,29,211 |
| 74 Raja Doraisingam Memorial College, Sivaganga .. | 1,05,600 | 90,800 | 1,30,345 | 3,26,745 |
| 75 Alagappa College, Karaikudi .. .. .. .. | 1,33,000 | 1,25,000 | 3,02,145 | 5,60,145 |
| 76 Ayya Nadar Janaki Ammal College, Sivakasi .. | 96,800 | 74,700 | 1,56,406 | 3,27,906 |
| 77 Arumugam Pillai Seethai Ammal College, Tiruppattur | 64,300 | 70,100 | 1,30,169 | 2,64,569 |
| 78 V. V. Vanniaperumal College for Women, Virudhunagar. | 68,100 | 84,900 | 1,02,329 | 2,55,329 |
| 79 Seethalakshmi Achi College, Pallathur .. .. | 35,000 | 71,400 | 73,799 | 1,80,199 |

| Serial number and name of the College. | Compensation grant. | Advance Teaching Grant. | Final Teaching Grant. | Total. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 80 The Standard Fire Works Rajaratnam College for Women, Sivakasi. | 45,000 | 45,600 | 43,461 | 1,34,061 |
| 81 Devanga Arts College, Aruppukottai .. .. .. | 47,900 | .. | 36,478 | 84,378 |
| 82 Sree Sevugan-Annamalai College, Devakottai .. | 22,800 | .. | 24,473 | 47,273 |
| 83 Dr. Zakir Hussain College, Elayangudi .. .. | 40,700 | .. | 16,663 | 57,363 |
| 84 Pasumpon Muthuramalinga Thevar Memorial College, Pasumpon, Kamuthi, Ramanathapuram District. | 10,000 | 16,700 | 12,312 | 39,012 |
| 85 St. Xavier's College, Palayamkottai .. .. .. | 1,13,300 | 1,00,000 | 1,54,602 | 3,67,902 |
| 86 St. John's College, Palayamkottai .. .. .. | 1,09,300 | 1,02,700 | 2,05,451 | 4,17,451 |
| 87 M. D. T. Hindu College, Pettai, Tirunelveli .. .. | 1,24,800 | 86,700 | 1,71,122 | 3,82,622 |
| 88 Kamaraj College, Tuticorin .. .. .. .. | 45,300 | 34,900 | 81,503 | 1,61,703 |
| 89 G. Venkataswamy Naidu College, Kovilpatti .. | 1,44,800 | 50,000 | 62,332 | 2,57,132 |
| 90 V. O. Chidambaram College, Tuticorin .. .. | 1,41,700 | 1,73,700 | 2,50,713 | 5,66,113 |
| 91 Aditanar College of Arts and Science, Tiruchendur. | 45,300 | 50,000 | 1,05,529 | 2,00,829 |
| 92 Sri Paramakalyani College, Alwarkurichi .. .. | 56,200 | 81,600 | 49,812 | 1,87,612 |
| 93 Pope's College, Sawyerpuram, Tirunelveli District | 58,100 | 51,000 | 1,09,915 | 2,19,015 |
| 94 Sri Kumaragurupara Swamigal Arts College, Srivaikuntam | 24,800 | 52,000 | 1,07,249 | 1,84,049 |
| 95 Sarah Pucker College, Palayamkottai .. .. | 85,400 | 66,600 | 1,17,969 | 2,69,969 |
| 96 St. Mary's College, Tuticorin .. .. .. .. | 9,85,000 | 93,100 | 1,21,394 | 3,12,994 |
| 97 Sri Parasakthi College for Women, Courtallam .. | 45,800 | 53,300 | 88;902 | 1,88,002 |
| 98 Nazareth Margoschis College, Pillaiyanamannai, Nazareth. | 49,500 | 21,500 | 50,583 | 1,21,583 |
| 99 Madathupatti Gopal Naicker College, Sankarankoil.. | 24,900 | 27,000 | 19,581 | 71,481 |
| 100 Annai Arts College, Ambasamudram, Tirunelveli District. | 32,700 | 6,300 | 26,637 | 65,337 |
| 101 Sri Ramaswami Naidu Memorial College, Sattur .. | 15,100 | 12,000 | 17,613 | 44,713 |
| 102 Pasumpon Thiru Muthuramalinga Thevar College, Melancelithanallur. | 44,400 | 33,000 | 48,076 | 1,35,476 |
| 103 Thiruvalluvar College, Pothigaiyadi, Papanasam .. | 4,800 | 6,000 | 14,533 | 25,333 |
| 104 The Hindu College, Nagercoil .. .. .. .. | 1,16,500 | 47,600 | 1,75,496 | 3,39,596 |
| 105 Scott Christian College, Nagercoil .. .. .. | 1,2980 | 1,26,700 | 94,751 | 3,510,241 |

| Serial number and name of the College. (1) | Compensation grant. (2) | Advance Teaching Grant. (3) | Final Teaching Grant. (4) | Total. (5) |
|---|---|---|---|---|
| 106 Vivekananda College, Agasteeswaram .. .. | 49,600 | 28,200 | 54,210 | 1,32,010 |
| 107 Christian College, Marthandam .. .. .. | 1,36,300 | 85,400 | 1,56,959 | 3,78,659 |
| 108 Lakshmipuram College of Arts and Science, Nayoor | 60,600 | .. | 1,21,938 | 1,82,538 |
| 109 Holy Cross College, Nagercoil .. .. .. .. | 1,06,900 | .. | 1,66,120 | 2,73,020 |
| 110 Sree Devi Kumari Women's College, Kuzhithurai .. | 46,600 | .. | .. | 46,600 |
| 111 Pioneer Kumaraswami College, Nagercoil .. .. | 82,700 | 25,900 | 1,09,643 | 2,18,243 |
| 112 Sri Ayyappa College for Women, Aloor, Nagercoil | .. | .. | .. | .. |
| 113 Arignar Anna College, Aramboly .. .. .. | 31,900 | 30,800 | 52,822 | 1,15,522 |
| 1971–72. | | | | |
| 114 Guru Nanak College, Guindy, Madras .. .. | 78,900 | .. | .. | 78,900 |
| 115 Chellammal's Women's College, Guindy .. .. | 91,400 | .. | .. | 91,400 |
| 116 Jayaraj Annapackiam College for Women, Periakulam | 38,100 | .. | .. | 38,100 |
| 117 Sadakathullah Appa College, Palayamkottai .. | 42,300 | .. | .. | 42,300 |
| 118 Vivekananda College, Tiruvedagam, Sholavandan | 32,200 | .. | .. | 32,200 |
| 119 The Dakshina Mara Nadar Sangam College, T. Kallikulam. | 15,400 | .. | .. | 15,400 |
| 120 Saiva Bhanu Kashtriya College, Aruppukottai .. | 28,800 | .. | .. | 28,800 |

### *Aided Traning colleges* (16)

| (1) | (2) |
|---|---|
| 1 Sri K. Y. S. S. Kalloori, Tirupanandal .. .. .. .. .. | 19,679 |
| 2 Ganesar Sentamil College, Melasivapuri, Pudukottai .. .. .. | 14,833 |
| 3 Ramaswami Tamil College, Karaikudi .. .. .. .. .. | 13,466 |
| 4 Sri S. B. S. Tamil College, Mailam .. .. .. .. .. .. | 12,112 |
| 5 Jamia Darusallam Arabic College, Oomerabad .. .. .. .. | 19,685 |
| 6 Karanthai Pulavar Kalloori, Karunthattangudi, Thanjavur .. .. | 13,297 |
| 7 Dharmapuram Adheenam Oriental College, Dharmapuram .. .. | 13,295 |
| 8 Sree Thavathiru Santhalinga Swamigal Tamil Kalloori, Perur .. .. | 14,692 |
| 9 Sentamil Oriental College, Madurai .. .. .. .. .. .. | .. |
| 10 Kanaga Sabai Pillai Kalloori, Nagapattinam .. .. .. .. | 6,779 |
| 11 Madras Sanskrit College, Mylapore, Madras 4. .. .. .. .. | 11,688 |
| Total ... | 1,39,526 |

### AIDED PHYSICAL EDUCATION COLLEGES (3)

| | |
|---|---|
| 1 Y. M. C. A. College of Physical Education, Nandanam, Madras-35 .. | 39,852 |
| 2 Alagappa College of Physical Education, Karaikudi .. .. .. | 47,292 |
| 3 Maruthi College of Physical Education, Perianaickenpalayam .. .. | 25,753 |
| Total .. | 1,23,897 |



### *Aided* Training *colleges* (16)

| *Serial number and aided training colleges.* (1) | *Teaching grant paid during* 1971–72. (2) Rs |
|---|---|
| 1 St. Justin's Teachers College for Women, Madurai .. .. .. .. | 31,878 |
| 2 Sri Sarada Training College for Women, Salem .. .. .. .. .. | 33,666 |
| 3 Sri Avinashilingam Teachers College, Coimbatore .. .. .. .. | 32,450 |
| 4 Sri Lakshmi Teachers Training College, Gandhigram .. .. .. | 35,727 |
| 5 Stella Matutina College of Education, Santhome, Madras-4 .. .. | 48,922 |
| 6 N. K. T. National Training College for Women, Triplicane, Madras-5 .. | 55,961 |
| 7 Sri Ramakrishna Mission Vidyalaya Teachers College, Perianaickenpalayam. | 66,059 |
| 8 Meston Training College, Royapettah, Madras-14 .. .. .. .. | 24,048 |
| 9 Annammal Training College for Women, Tuticorin .. .. .. | 30,060 |
| 10 St. Xavier's College of Education, Palayamkottai .. .. .. .. | 27,237 |
| 11 St. Ignatius Training College for Women, Palayamkottai .. .. .. | 36,454 |
| 12 Thiagarajar College of Preceptors, Madurai .. .. .. .. .. | 47,582 |
| 13 V. O. Chidambaram Teachers' College, Tuticorin .. .. .. .. | 43,432 |
| 14 St. Christopher's Training College, Vepery, Madras-7 .. .. .. | 62,695 |
| 15 Dr. Alagappa Chettiar Training College, Karaikudi .. .. .. .. | 59,579 |
| 16 N. V. K. S. D. Teachers' College, Attoor, Martandam .. .. .. | .. |
| Total .. | 6,35,750 |

# ANNEXURE II.

## BUILDING GRANT SANCTIONED DURING 1971-72.

*Schemes Sanctioned during 1971-72 and spill over schemes.*

| Serial number and name of the college. (1) | Director's proceedings sanctioning the grant. (2) | Amount. (3) RS. | P. |
|---|---|---|---|
| 1 Sri Pushpam College, Poondi .. .. | Rc. 4436/D1/68, dated 12th April 1971. | 15,000 | 00 |
| 2 Do. | Rc. 35749/D1/68, dated 12th April 1971. | 10,000 | 00 |
| 3 Do. | Rc. 18729/D1/66, dated 7th May 1971 .. | 15,000 | 00 |
| 4 Nehru Memorial College, Puthanampatti | Rc. 64276/D1/67, dated 21st May 1971 .. | 35,000 | 00 |
| 5 S. V. Nadar College, Nagamalai .. .. | Rc. 12793/D1/67, dated 16th September 1971. | 7,000 | 00 |
| 6 Nehru Memorial College, Puthanampatti | Rc. 64276/D1/67, dated 21st May 1971 .. | 25,000 | 00 |
| 7 Aditanar College of Arts and Science, Tiruchendur. | Rc. 80157/D4/67, dated 18th December 1971. | 60,000 | 00 |
| 8 V. H. N. S. N. College, Virudhunagar .. | Rc. 67611/D4/67, dated 8th December 1971. | 5,000 | 00 |
| 9 N. M. S. S. Velaichamy Nadar College, Madurai. | Rc. 12793/D4/66, dated 3rd January 1972. | 10,000 | 00 |
| 10 Aditanar College of Arts and Science, Tiruchendur. | Rc. 80157/D4/68, dated 4th January 1972. | 15,000 | 00 |
| 11 V. V. Perumal College, Virudhunagar .. | Rc. 67610/67, dated 18th January 1972. | 30,000 | 00 |
| 12 Yadava College, Madurai .. .. .. | Rc. 13763/D1/71, dated 19th January 1972. | 18,000 | 00 |
| 13 V. H. N. S. N. College, Virudhunagar .. | Rc. 65261/D1/67, dated 25th January 1972. | 5,000 | 00 |
| 14 Nehru Memorial College, Puthanampatti | Rc. 64276/D4/67, dated 19th February 1972. | 10,000 | 00 |
| 15 S. T. Hindu College, Palayamkottai .. | Rc. 15493/D1/70, dated 7th March 1972 | 34,582 | 5 |
| 16 P. M. T. College, Usilampatti .. .. | Rc. 27322/D1/69, dated 8th March 1972. | 75,000 | 00 |
| 17 S. V. N. College, Madurai .. .. .. | Rc. 12793/D4/66, dated 10th March 1972. | 20,000 | 00 |
| 18 Sri Parasakthi College, Courtallam .. | Rc. 70014/D1/67, dated 20th March 1972. | 12,000 | 00 |
| 19 Popes College, Sawyerpuram .. .. | Rc. 32753/D1/66, dated 24th March 1972. | 5,000 | 00 |
| | Total .. | 4,06,582 | 50 |

THE FOLLOWING 12 COLLEGES WERE SELECTED FOR SANCTION OF BUILDING GRANT DURING 1971-72.

| Name of the college. (1) | Amount sanctioned and remarks. (2) |
| --- | --- |
| 1 A.N. Janaki Ammal College, Sivakasi .. .. .. | Rs. 65,000, Licence from Tahsildar not yet received. |
| 2 Seethalakshmi Achi College for Women, Pallathur .. | Construction of building not yet completed. |
| 3 Saraswathi Narayanan College, Madurai .. .. | Rs. 75,000, 25th October 1974. |
| 4 Islamiah College, Vaniyambadi .. .. .. | Rs. 75,000, 2nd January 1974. |
| 5 Pachaiyappa's College, Madras .. .. .. .. | Scheme dropped at the request of management. |
| 6 A. V. C. College, Mayuram .. .. .. .. | Rs. 36,250, 24th July 1974, eligible only for this. |
| 7 Sri Vasavi College, Erode .. .. .. .. | Rs. 71,250, 30th April 1974, eligible only for (after 5 per cent cut). |
| 8 S. I. V. E. T. College, Tambaram .. .. .. | Rs. 75,000, Scheme not yet completed. |
| 9 American College, Madurai .. .. .. .. | Scheme deferred. |
| 10 Auxilium College, Katpadi .. .. .. .. | Rs. 75,000, 21st November 1973. |
| 11. C. Kandaswamy Naidu College for Women, Cuddalore. | Scheme just completed. Release of grant is in progress. |
| 12 Aditanar College of Arts and Science, Tiruchendur .. | Rs. 75,000, 4th January 1972. |

Of the 12 colleges building grant for Aditanar College of Arts and Science, Tiruchendur was sanctioned during 1971-72. S. No. 5 and 9. The schemes deferred at the request of the management. Advance building grants were sanctioned during 1972-73, 1973-74 and 1974-75 for other colleges. Final building grant for college S. Nos. 3,4, 6, 7, 10 were sanctioned. Final grant for S. Nos. 1, 2, 8 and 11 have not yet been sanctioned.

## ANNEXURE III.

*Statement showing the details of various grants sanctioned during* 1971-72 *to the colleges opened in* 1970-71.

| Serial number. (1) | Teaching grant. (code grant). (2) | Building grant. (3) | Equipment grant. (4) | P.U.C. fee compensation grant. (5) |
| --- | --- | --- | --- | --- |
| 1 Urumu Dhanalakshmi College Ariyamangalam, Tiruchirappalli | 294 | .. | .. | 1,30,500 |
| 2 Vallalar College for Women, Erode .. .. .. | .. | .. | .. | 81,300 |
| 3 Palaniandavar Arts College for Women, Palni .. | 16,838 | .. | .. | 19,300 |
| 4 Devanga Arts College, Aruppukottai .. .. .. | 22,043 | .. | .. | 47,900 |
| 5 Sree Sevugan Annamalai College, Devakottai .. | 17,064 | .. | .. | 22,800 |
| 6 Dr. Zakir Hussain College, Elayangudi .. .. | 2,958 | .. | .. | 40,700 |
| 7 Pasumpon Muthuramalinga Thevar College, Melanselithanallur. | 36,279 | .. | .. | 44,400 |
| 8 Pasumpon Muthuramalinga Thevar College, Kamuthi | 9,146 | .. | .. | 10,000 |
| 9 Sri Ramaswamy Naidu College, Nagalapuram .. | 13,190 | .. | .. | 15,100 |
| 10 Arignar Anna College, Aramboly .. .. .. | 34,408 | .. | .. | 31,900 |
| 11 A.V.D. College, Ganapathipuram .. .. .. | .. | .. | .. | 18,500 |
| 12 Sreedhar Arts College, Thoothpor .. .. .. | .. | .. | .. | 21,800 |
| 13 Sathguru Sangeetha Vidyalayam, Madurai .. .. | 11,387 | .. | .. | 4,100 |
| 14 De La Salle College, Karumathur (Arul Andavar College.) | 25,508 | .. | .. | 23,500 |

## ANNEXURE III—*cont.*

*Statement showing the details of various grants sanctioned during 1971-72 to the colleges opened in 1970-71—cont.*

| (1) | *Maintenance grant.* (6) | *D.A. C.C.A. grant.* (7) | *Pay commissin grant.* (8) | *U.G.C. grant.* (9) |
|---|---|---|---|---|
| 1 Urumu Dhanalakshmi College, Ariyamangalam, Tiruchirappalli | .. | 4,716 | .. | 5,290 |
| 2 Vellalar College for Women, Erode .. | .. | 9,556 | .. | 11,112 |
| 3 Palaniandavar Arts College for Women, Palni .. | .. | 4,883 | .. | 3,543 |
| 4 Devanga Arts College, Aruppukottai .. | .. | 7,475 | .. | 6,911 |
| 5 Sree Sevugan Annamalai College, Devakottai .. | .. | 4,310 | .. | 3,011 |
| 6 Dr. Zakir Hussain College, Elayangudi. .. | .. | 7,218 | .. | 6,736 |
| 7 Pasumpon Muthuramalinga Thevar College, Melaneelithanallur. | .. | 7,626 | .. | 4,171 |
| 8 Pasumpon Muthuramalinga Thevar College, Kamuthi | .. | 2,201 | .. | 964 |
| 9 Sri Ramaswamy Naidu College, Nagalapuram .. | .. | 2,411 | .. | 2,012 |
| 10 Arignar Anna College, Arampodi .. | .. | 7,602 | .. | 5,542 |
| 11 A. V. D. College, Ganapathipuram .. | .. | 5,062 | .. | 5,675 |
| 12 Sreedhar Arts College, Thoothpor .. | .. | 3,682 | .. | 3,699 |
| 13 Sathguru Sangeetha Vidyalayam, Madurai .. | .. | 6,341 | .. | 5,376 |
| 14 De La Salle College, Karumathur (Arul Andavar College). | .. | 3,547<br>759 | .. | 3,318 |



## இணைப்பு II

*(24 ஆம் பக்கத்தில் 76 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.)*

*(a) மலேரியா மீண்டும் பரவுதலைத் தடுத்தல்.*

ஏற்கனவே செய்து வந்ததுபோல் வீடுகளுக்கு டி.டி.டி. மருந்து தெளித்தல், மலேரியா காய்ச்சல் கண்டவர்களுக்கு அடிப்படைச் சிகிச்சை அளித்தல் முதலான வழக்கமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மலேரியா மிகுதியாகப் பரவத் தொடங்கிய பின்னர் இந்நடவடிக்கைகள் மேலும் தீவிரமாக செயல்படுத்தப்பட்டன.

2. இத்தகைய வழக்கமான நடவடிக்கைகள் கிராமப் பகுதிகளில் மலேரியா ஒழிப்பில் முழு வெற்றி அளிக்காததால், இப்போது நோய் இயல் நிலைமைக் கேற்ப கூடுதலாகக் கீழ்க்கண்ட சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படு கின்றன :—

(i) இராமநாதபுரம் கடற்கரைப் பகுதிகள் மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் வாரம்தோறும் 'பாரிஸ்கிரீன்' தூள் தெளித்து கொசுப்புழு உற்பத்தி தடுக்கப்படுகிறது. இப்பகுதியில் மலேரியா பரவுவதை இக்கூடுதல் நடவடிக்கை கணிசமான அளவுக்குக் குறைத்துள்ளது.

(ii) தருமபுரி, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் பெண்ணை யாற்றங்கரையில் 50 மைல் தொலைவுக்கு வாரந்தோறும் 'அரோமெக்ஸ்' மருந்து தெளிக்கப்படுகிறது. மலேரியா பரப்பும் கொசுக்களைப் புழுப் பருவத்திலேயே அழிப்பதற்கான இந்த நடவடிக்கை, வீடுகளில் டி.டி.டி. மருந்து தூவும் வேலைக்குக் கூடுதலாக சமீப காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதன் பலன் கவனமாகக் கண்காணிக்கப்படுகின்றது.

(iii) மிகுதியாக மலேரியா பரவியுள்ள கிராமங்களில் ஒன்று அல்லது மேற்பட்ட முறைகள் பெரிய அளவில் மருந்து விநியோகிப்பதன் மூலம் விரைவில் மலேரியா நோய் குறைய வழி செய்யப்படுகிறது.

3. சமீப காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மேலே கூறிய சிறப்பு நடவடிக்கைகள் எதிர்பார்க்கும் பலனைத் தரும் என்று கருதப்படுகிறது. நிலைமையைச் சமாளிக்க ஏற்கனவே எடுத்துள்ள நடவடிக்கைகள் போது மானவை அல்ல என்று கண்டறிந்தால், மேலும் பிற கூடுதல் முறைகள் பின் பற்றுவது குறித்து யோசிக்கப்படும்.

4. நகரப் பகுதிகளில், வழக்கமான முறைகளான கொசுக்களைப் புழுப் பருவத்திலேயே அழித்தல், ஆங்காங்கு டி.டி.டி. மருந்து தூவுதல், நோயாளிகளுக்கு அடிப்படை சிகிச்சை அளித்தல் ஆகிய வேலைகள் மேலும் தீவிரப் படுத்தப்படும். வறட்சியினால் மீன் வளர்ப்பு பாதிக்கப்பட்டதனால் நீர் நிலைகளில் மீன்களை விடுவதற்குப் பதில் 'பாரிஸ் கிரீன்' மருந்திடப்படுகிறது. வீடுவீடாகச் சென்று கொசு உற்பத்தி ஆகத் தக்க இடங்களை ஆய்வு செய்யும் வேலையை மேம்படுத்த, கூடுதலாக ஏவலாட்கள் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

5. ஈரோடு மற்றும் சேலம் நகராட்சிகளில், சமீப காலத்தில் கிணறுகளில் 'பைரத்தரம்' எண்ணெய் இடுகின்ற பணி கூடுதலாக மேற்கொள்ளப்பட்டு மலேரியா பரவும் வீதம் குறைக்கப்பட்டுள்ளது.

6. மேற்குறித்த தீவிர நடவடிக்கைகளினால் மலேரியா காய்ச்சல் பரவுவது குறைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**கொசுத் தொல்லையைக் கட்டுப்படுத்துதல் :**

தமிழ்நாட்டில் நகராட்சிகளாலும், பேரூராட்சிகளாலும் சுமார் 175 திட்டங்கள் கொசு உற்பத்தி ஒழிப்புக்கென்று அரசினால் அனுமதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. இவற்றுக்கு நான்கில் ஒரு பகுதி அல்லது மூன்றில் ஒரு பகுதி மாநில நிதியிலிருந்து மானியமாகக் கிடைத்துள்ளது.

ஆகஸ்ட் 1975 திங்களில் சென்னை நகரத்தில் மலேரியா தடுப்புத் தீவிர இயக்கம் பொதுமக்களுக்கும் பள்ளிகளுக்கும் திரைப்படக் காட்சிகள் மூலமாகவும், கல்வி, ஏனைய நிலையங்களுக்குச் செய்தி விளக்கங்கள் கொண்ட போஸ்டர்களும், அறிக்கைகளும் விநியோகம் மூலமாகவும் நிறைவேற்றப் பட்டது. கொசு உற்பத்தி ஒழிப்பு பற்றிய ஒரு 'ஃப்ளோட்' ( ) தயாரிக்கப்பட்டு, சென்னை நகரத்தில், முக்கியமாக கொசு பரவுவதற்கு ஏதுவாகவுள்ள நகர்ப்புறங்களில் சுற்றிவரவும், கொசு உற்பத்தித் தடுப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றிய செய்தி விளக்கங்கள் விநியோகமும் மேற்கொள்ளப்பட்டன. பத்திரிகைச் செய்தி மூலமாகவும் விளம்பரப்படுத்தப்பட்டது. இந்திய மருத்துவக் கழகம் தங்கள் மருத்துவர்களை அவர்களால் மலேரியா என்று கருதப்பட்டு சிகிச்சை பெற்ற நபர்கள் பற்றிய விவரங்களை அண்மையிலுள்ள நகராட்சி வட்ட அதிகாரியிடம் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. வானொலியும் தொலைகாட்சியும் 24-8-1975 அன்று பயன்படுத்தப்பட்டன. நகரத்திலுள்ள திரைப்பட நிலையங்களில் இந்த நடவடிக்கைகள் பற்றிய ஸ்லைடுகள் ( ) காட்டுவதற்காக





நகராட்சிக்கு கொடுக்கப்பட்டன. செப்டம்பர் திங்கள் இரண்டாம் வாரத்தில் இந்தத் தீவிர இயக்கம் ஈரோடு, கோவை, திருச்சி மற்றும் அவைகளின் சுற்றுப் புறங்களிலும் நிறைவேற்றப்பட்டது.

(i) தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில், மலேரியாத் தடுப்பு மருந்து பற்றுக்குறை ஏதும் ஏற்படவில்லை.

## இணைப்பு III.

**(27-28 ஆம் பக்கங்களில் 77, 78, 79 ஆம் எண்களுள்ள உடுக்குறியிட்ட வினாக்களின் விடையைக் காண்க.)**

பருவமழை தவறியதனால், பொதுவாகத் தமிழ்நாட்டிலும், குறிப்பாகச் சென்னை மாநகரிலும் இதன் முன்னர் என்றும் கண்டிராத கடுமையான அளவிற்கு வறட்சி நிலை ஏற்பட்டது. எனவே, இந்நீர்ப் பற்றுக்குறையைப் போக்க புது வழி ஒன்றைக் காணவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. சென்னை மாநகரின் குடிநீர்த் தேக்கமான செங்குன்றம் ஏரியின் நீர்கோள் பகுதிகளிலும், நீலகிரி மாவட்டத்தில் புனல் மின் நிலையம் அமைந்துள்ள பகுதிகளிலும் செயற்கை மழை பெய்விப்பதற்கான திட்டம் ஒன்றை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க, இந்திய அரசின் இசைவு பெற்று, செங்குன்றம் ஏரியின் நீர்கோள் பகுதிகளிலும், நீலகிரி மாவட்டத்தின் புனல் மின் நிலையம் அமைந்திருக்குமிடங்களிலும் மேகங்களில் சில்வர் அயோடைடைத் தூவுவதன் மூலம் செயற்கை மழை பெய்விப்பதற்கான சோதனைகளை மேற்கொள்ள கலிபோர்னியாவைச் சேர்ந்த திருவாளர்கள் அட்மாஸ் பிரிக்ஸ் இன்கார்போரேட்டுடன் ( ) ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி இந்நிறுவனமே இவ் ஆய்வுக்குத் தேவையான மேகத்தினுள் மருந்தைத் தூவும் பொறிகள் கொண்ட விமானம், ராடார், மேகத்தில் சில்வர் அயோடைடைத் தூவுவதற்கான கருவிகளோடு தொழில் நுட்பப் பணியாளர்களையும் தங்கள் சொந்தப் பொறுப்பிலேயே ஏற்பாடு செய்து செயற்கை மழையைப் பெய்விக்க ஆவன செய்யவேண்டும். மாநில அரசு இத்திட்டத்திற்கான செலவு முழுவதையும் ஏற்றுள்ளது.

2. இந்த ஒப்பந்தத்திற்கிணங்க, செயற்கை மழை பெய்விப்பதற்கான நடவடிக்கைகளைச் செய்யவேண்டிய கால அளவு 15-7-1975 ஆம் நாளிலிருந்து 31-10-1975 ஆம் நாள் வரையிலாகும். இதற்கான நடவடிக்கைகள் 12-7-1975 ஆம் நாளன்றுதான் தொடங்கின. செயற்கை மழை பெய்விப்பதற்கான

நடவடிக்கைகள் முழுவதையும் உள்ளடக்கி இறுதி மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை இந்நிறுவனம் அளிக்கும். இந்த ஆய்வுகளின் பயனை மதிப்பீடு செய்வதன்பொருட்டு அமைக்கப்பட்ட குழு 1975 ஆம் ஆண்டு நவம்பர் திங்களின் முதல் வாரத்தில் மதிப்பிடும்.

3. இம்மாநிலத்தில் வருங்காலத்தில் வறட்சியால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் செயற்கை மழை பெய்விக்கச் செய்யலாமா என்பது குறித்து நாளடைவில் ஆராயப்படும்.

4. மேற்சொன்ன ஒப்பந்தத்திற்கிணங்க, ஒப்பந்தக் காலத்தில் மேற்சொன்ன நிறுவனம் புரிந்த பணிக்காக அந்நிறுவனத்திற்கு இந்த அரசு மொத்தம் 1,57,400 அமெரிக்க டாலர் தொகையை வழங்க வேண்டியுள்ளது. இத் தொகையில் சுங்கக் கட்டணங்களோ, இறக்குமதித் தீர்வைகளோ அல்லது எந்தவகையிலான வரிகளோ அடங்கா.

5. செயற்கை மழை பெய்விக்கும் ஆய்வுகளை நடத்த இந்த அரசு மொத்தச் செலவு ரூ. 19,92,000-க்கு (19 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய்) ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

இதுவரையில் ரூ. 19,25,617.01 செலவு ஏற்பட்டுள்ளது. அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | ரூ. | பை. |
|---|---|---|
| (1) 1975-ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர் ஆகிய திங்களில் அமெரிக்க நிறுவனத்திற்குக் கொடுக்கப்பெற்ற தொகை | 13,01,020 | 00 |
| (2) விமானம், ராடார் சாதனங்கள் செயற்கை மழை பெய்விப்பதற்கான கருவிகள் ஆகியவற்றை இறக்குமதி செய்ததற்காகச் செலுத்தப்பட்ட சுங்கக் கட்டணம் | 6,23,742 | 01 |
| (3) செலுத்தப்பட்ட ஆயுள் ஈட்டுறுதித் தவணைத் தொகை | 855 | 00 |
| மொத்தம் | 19,25,617 | 01 |

மேற்சொன்ன ஒப்பந்தத்திற்கிணங்க, இந்நிறுவனத்திற்கு இன்னும் ரூ. 66,300 (7,800 அமெரிக்க டாலர்) கொடுக்கப்படவேண்டியுள்ளது.



6. இச்சோதனையின் தன்மையையும், இத்திட்டத்தின் பொது முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு, அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விமானம், ராடார் சாதனங்கள், செயற்கைமழை பெய்விப்பதற்கான கருவிகள் ஆகியவை குறித்த சுங்கத் தீர்வையைத் தள்ளுபடி செய்யுமாறும், இந்த அரசால் சுங்கத் தீர்வையாகச் செலுத்தப்பட்ட 6,23,742.01 ரூபாயைத் திருப்பிக் கொடுக்குமாறும் இந்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இது குறித்து இந்திய அரசுடன் இன்னும் கடிதத் தொடர்பு நடைபெற்று வருகிறது.

## இணைப்பு IV

(31 ஆம் பக்கத்தில் 80 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.)

(அ) & (இ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் "எட்வர்டு" வகை ரோசா மலர்களிலிருந்து ரோசாப் பிழம்பு (கான்கிரீட்டு) எடுப்பதற்கான முறை ஒன்றை உருவாக்கியுள்ளது. அன்றலர்ந்த ரோசா மலர்கள், காற்றுப் புகாத கொள்கலன்களில் 4 அல்லது 5 மணி நேரம் "ஹெக்கேசன்" அல்லது பெட்ரோலியம் ஈதரில் 65—70 சென்டிகிரேட் தட்ப வெப்ப நிலையில் அமிழ்த்தி வைக்கப்படுகின்றன. ரோசா மலரின் சாறு, ஹெக்சேனில் அல்லது பெட்ரோலியம் ஈதரில் கரைந்துவிடும். பிறகு இந்தக் கரைசல் காய்ச்சி வடித்தல் மூலம் பிரித்தெடுக்கப்படுகிறது. கரைசலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சாறுதான் "கான்கிரீட்" (ரோசாப் பிழம்பு) என்று அழைக்கப்படும்.

2. மலர்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மெழுகு (முதலியன) வண்ண மூட்டும் பொருள்கள் போன்ற பல பொருள்களை இது கொண்டிருக்கும் எட்வர்டு ரோஜா மலரின் ரோசாப் பிழம்பு (கான்கிரீட்) சிவப்பு வண்ணத்தில் இருக்கும். இது 46—50 சென்டிகிரேட் வெப்பத்தில் உருகக்கூடியது. ஒரு கிலோ கிராம் மலரிலிருந்து 2.3 முதல் 3 கிராம் வரை ரோசாப் பிழம்பு (கான்கிரீட்) தயாரிக்கலாம். இது முகப் பவுடர்கள் ஒப்பனைக் களிம்புகள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இந்தச் செறிந்த கரைசல் சாராவியில் இதனைக் கரைத்துத் தூய்மைப்படுத்தினால் 40 விழுக்காடு நிறையில் தூய நறுமணப் பொருளைத்தரும். இது நறுமணப் பொருள் தயாரிப்பவர்களால் பயன்படுத்தப் படுகிறது.

(1) (தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில்) தமிழ்நாட்டில் வணிக முறையில் பயிரிடப்படும் எட்வர்டு வகை ரோசாவிலிருந்து எவ்வளவு ரோசாப் பிழம்பு எடுக்க இயலும் என்பதனையும்,

(2) அதன் தரத்தை மதிப்பிடுவதையும் கணிப்பதற்காக சோதனை அடிப்படையில் மட்டுமே தயாரிக்கப்பட்டது.

3. சோதனை அளவில் தயாரிக்கப்பட்ட ரோசாப் பிழம்பு நல்லதரம் வாய்ந்தது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாட்டில் இந்த ரோசாப் பிழம்பை வணிக முறையில் தயாரிப்பதற்கான வாய்ப்பு சிறப்பாக உள்ளது.



**தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.**

---

**வெள்ளிக்கிழமை, 1975 நவம்பர் 7.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

**1. வினாக்கள்—விடைகள்.**

**உடுக்குறியிட்ட வினாக்கள்.**

*Arulmigu Siva Temple, Keeranur.*

*81. Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that the Arulmigu Siva Temple at Keeranur, Pudukkottai district, has been brought under the control of Archaeological Department;

(b) whether the tower of the temple is in a dilapidated condition; and

(c) if so, the action taken to renovate it?

**கீரனூர் அருள்மிகு சிவன் திருக்கோயில்.**

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் அருள்மிகு சிவன் திருக்கோயில் தொல்பொருள் இலாக்காவின்கீழ் கொண்டுவரப்பட்டிருப்பது உண்மையா?

(இ) மேற்படி கோயிலின் திருக்கோபுரம் இடிந்துவரும் நிலையில் இருக்கிறதா?

(உ) ஆமெனில், அதனைப் புதுப்பிக்க எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

## Sree Sathyasayee High School, Ootacamund.

*82. Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that the teachers serving in Sree Sathyasayee High School, Ootacamund, have not been paid their salaries for the past 12 months;

(b) if so, the reasons therefor; and

(c) the action proposed to be taken thereon?

### உதகமண்டலம் ஸ்ரீ சத்தியசாயி உயர்நிலைப் பள்ளி.

*திரு. பி. ஆர். தாமஸ்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) உதகமண்டலம் ஸ்ரீ சத்தியசாயி உயர்நிலைப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கடந்த 12 மாதங்களாக ஊதியம் கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) அதுகுறித்து மேற்கொள்ளக் கருதியுள்ள நடவடிக்கை என்ன?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* (அ) ஆம்.

(இ) பள்ளிக்கென ஏற்படுத்தப்பட வேண்டிய 'அறக்கட்டளை நிதியினை குறிப்பிட்ட தவணைகளுக்குள் பள்ளி நிர்வாகம் கட்டவில்லையாதலால் ஆசிரியர்களின் ஊதியத்திற்கான மானியம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(உ) பள்ளி நிர்வாகம் இதுவரை ரூ. 47,000-ஐ அறக்கட்டளை ஏற்படுத்தி இருக்கவேண்டும். இந்த நிபந்தனையை நிறைவேற்றிய பிறகுதான் ஆசிரியர்களின் ஊதியத்திற்கான மான்யம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

*திரு. கே. எஸ். கணபதி:* துணைத் தலைவர் அவர்களே, அங்கீகாரம் கொடுத்த பிறகு, அது தற்காலிக அங்கீகாரமாக இருந்தாலும் சரி, அங்குள்ள ஆசிரியர்களுக்கு ஊதியம் கொடுக்கின்ற பொறுப்பை 1964-ம் ஆண்டு முதற்கொண்டு அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே அவர்களுக்கு ஏன் ஊதியம் வழங்கப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.



63175

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* பள்ளிக் கட்டடத்திற்கு ஏற்படுத்த வேண்டிய கட்டளை நிதியை ஏற்படுத்தவில்லை, அதற்குத் தவணை கேட்டார்கள். தவணை கொடுத்து 1974-க்குள் கட்ட வேண்டும் என்று சொன்னோம். அப்போதும் கட்டவில்லை. பிறகு 1975-க்குள் கட்ட வேண்டுமென்று சொன்னோம். கட்டவில்லை. மேலும் அவர்கள் வேறு நிபந்தனைகளைச் சரிவர நிறைவேற்றாததால், மானியம் கொடுப்பது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.

*திரு. செ. முத்துசாமி:* தனியார் பள்ளி நிர்வாகத்தினருக்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்ட பிறகு, ஒவ்வொரு நிபந்தனையின் அடிப்படையிலே அவர்கள் பணம் கட்டவில்லை என்பதற்காக மானியம் கொடுக்கப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. இதனால் பாதிக்கப்படுவது மானேஜ்மெண்டார் அல்ல, ஆசிரியர்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். 12 மாத காலமாக அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை. அரசே ஆசிரியர்களுக்கு உடனடியாகச் சம்பளம் வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* அதுபற்றித் தனியாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கலாம். தவிர நிபந்தனைகளில் ஐந்தாறு குறைபாடுகளை நிறைவேற்றாமல் இருக்கிறார்கள். அவற்றை நிறைவேற்ற வலியுறுத்தி வருகிறோம்.

*தவத்திரு குன்றக்குடி அடிகளார்:* அந்தப் பள்ளியில் மானியப் பொறுப்புக் கட்டணம் கட்டக் கட்டத்தான் தற்காலிக அனுமதி கொடுக்கிறார்கள். எத்தனை வகுப்புவரை நடத்தப் பெறுகிறது? பாதிக்கப்பட்டிருப்பது எத்தனை வகுப்புகள்?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* 11-வது வகுப்பு வரையிலே நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அனுமதி பெறாமலேயே அதைத் துவக்கிவிட்டார்கள்.

The furniture and equipment provided are not adequate; the building in which the school is being held is not suitable and adequate for a High School; the continuance of the Headmaster beyond the age of superannuation, viz., 58 years without prior approval of the Director is irregular; the school does not have a qualified Headmaster during 1974–75; the Correspondent had not forwarded the recognition application for Standard XI in spite of repeated reminders; the Correspondent had shifted the School

to a new premises without obtaining the prior approval of the department; the higher Standards IX to XI do not have economic strength.

இவ்வளவு குறைபாடுகளுடன் பள்ளி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

**திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பள்ளியைப் பற்றிக் குறைபாடுகளை எல்லாம் சொன்னார்கள். இவ்வளவு குறைபாடுகள் இருக்கும்போது, கடந்த 12 மாத காலமாகவே நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தனியார் பள்ளி பாதுகாப்புச் சட்டத்தின்படி அவர்கள்மீது நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஏன் பள்ளிக் கல்வி இயக்குநர் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இயக்குநர் நடவடிக்கை எடுத்துக்கொள்ளாததுபற்றி விவரம் இல்லை. அந்தப் பள்ளியை அரசு ஏற்று நடத்துவதா, அல்லது கொஞ்ச காலம் பொறுத்து வசதியையும் வாய்ப்பையும் ஆராய்ந்து திரும்ப அவர்களிடமே ஒப்படைத்துவிடுவதா என்று தனியாக ஆராய வேண்டும்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** அந்தப் பள்ளியில் இறுதி ஆண்டுத் தேர்வு எழுத மாணவர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்களா ? அப்படியானால் அங்கு பணியாற்றும் ஆசிரியர்களுக்கு நேரிடையாக ஊதியம் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்போது நேரடியாக வழங்கும் நிலை ஏற்படவில்லை. அதுபற்றித் தனியாக ஆராய வேண்டும்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :-** அந்தப் பள்ளியில் 11-வது வகுப்பு நடைபெற்றுக்கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு அவர்கள் அனுமதி பெறாத நிலையிலே, 11-வது வகுப்பு மாணவர்கள் தேர்வு எழுதுவதை அனுமதிப்பதுபற்றிய நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அப்படி ஒரு சூழ்நிலை ஏற்படுமானால், வேறு சில இடங்களில் பள்ளிகளுக்கு அனுமதி வழங்குவதுபோல், இதற்கும் அனுமதி வழங்கப்படும்.



*Tamil Nadu Leave Rules.*

*83. *Q.*—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that the amendments issued after 4th September 1972 to the Tamil Nadu Leave Rules applicable to the teachers in Government Service, are not made applicable to the teachers serving under other agencies including Aided Schools; and

(*b*) if so, the reason therefor?

**தமிழ் நாடு விடுப்பு விதிகள்.**

**திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசுப் பணியில் உள்ள ஆசிரியர்களுக்குப் பொருந்துகிற தமிழ் நாடு விடுப்பு விதிகளில் 4-9-1972-க்குப் பின்னர் செய்யப்பட்ட திருத்தங்கள், அரசுதவி பெறும் பள்ளிகள் உட்பட ஏனைய நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பொருந்தும் வகையில் செய்யப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்குரிய காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. எஸ். கணபதி :** தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு, அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு இருப்பது போலவே விடுப்பு விதிகள் பொருந்தும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 1975 முதற்கொண்டு அங்கீகாரம் உண்டு என்று சொல்லிவிட்டார்கள். 4-9-1972-க்குப் பின்னர் செய்யப்பட்ட திருத்தங்கள் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்தும். ஆனால், அரசு ஆணை பிறப்பித்த தேதியிலிருந்துதான் கொடுக்கப்படும் என்று பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகையால் 4-9-1972 முதற்கொண்டு தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குப் பொருந்துமாறு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** "There is no difference in the applicability of leave rules enjoyed by the teachers working in Government Schools and the teachers

working under other agencies" என்றுதான் இருக்கிறது. ஆகவே டிஸ்ட்ரிக்ட் போர்டைப் பொறுத்தவரையிலே, 1-4-1970 லிருந்து இந்த உரிமைகள் வழங்கப்படுகின்றன.

**திரு. கே. எஸ். கணபதி :** 4-9-1972-லிருந்து இந்த விதிகள் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என்று கூறப்பட்டது. அப்போதைக்கப்போது ஒவ்வொரு திருத்தமும் கொண்டுவரும்போது, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என்று கல்வி இலாகா கூறி வந்திருக்கிறது. அந்த அடிப்படையில் தான் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு உள்ளதுபோல் விடுப்பு விதிகள் பொருந்தும். 1975-ல் தான் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. அதிலிருந்துதான் அவர்களுக்குப் பொருந்தும் என்று கல்வி இலாகா இயக்குநர் அறிவித்திருக்கிறார்கள். அவர் அரசைக் கலந்து செய்தாரா அல்லது அவரே ஆணை பிறப்பித்தாரா என்பதை அறிந்துகொள்ள விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றித் தனியாக கவனத்திற்குக் கொண்டுவந்தால், நடவடிக்கை எடுக்க முடியும்.

**திரு. செ. முத்துசாமி :** 4-9-1972-க்குப் பின்னால் என்னென்ன சலுகைகள் அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ, அதாவது சரண்டர் லீவ், மெடிகல் லீவ் போன்ற அத்தனை சலுகைகளும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என அரசு ஆணையில் தெளிவாக உள்ளது. ஆனால், பொதுவாகவே கல்வி இலாகா அதிகாரிகள் ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுக்க வேண்டுமென்று ஜி.ஓ.வில் இல்லை என்று சொல்லி மறுத்துவிடு கிறார்கள். ஆகையால் 4-9-1972-க்குப் பின் என்னென்ன சலுகைகள் அறிவிக்கப் பட்டனவோ அத்தனையும் தனியார் பள்ளி ஆசிரியர்கள் பெற நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இது கேள்வி நேரம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதைப்பற்றிய முழு விவரங்கள் என்னிடம் இல்லை. இதிலே குறிப்பிட்டிருப்பது

In the G.O., dated 24th May 1975 the Government have clarified that the teaching and non-teaching staff working in aided schools are eligible to get all the leave benefits that are given to the teaching and non-teaching staff in Government Schools என்பதுதான். இது கிளாரிபிகேஷன் என்ற அளவில் இருக்கிறது. உத்தரவு



வந்த காலத்திலிருந்துதான் நடைமுறைப்படுத்தப்படுவதாக இருக்கும். எங்கே யாவது குழப்பம் இருந்தால், அதைக் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அதைப் பற்றி ஆராயலாம்.

(பிற்பகல் 4-10)

**THIRU D. V. D'MONTE :** Sir, may I know the number of teachers who have been adversely affected by these Leave Rules?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய புள்ளி விவரங்கள் இல்லை.

**திரு. செ. முத்துசாமி :** அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஊழியர் களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சலுகைகள் அனைத்தும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களில் பணி புரியும் ஆசிரியர்களுக்கும் அந்தச் சலுகைகள் வழங்கப்படாமல் இருக்கிறது. உள்ளாட்சித் துறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட பிறகு தான், தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் நிலைமை இருந்தது. இப்போது தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அந்தச் சலுகைகள் வழங்கப்பட்டு, உள்ளாட்சித் துறையில் பணி புரியும் ஆசிரியர் களுக்கு வழங்கப்படாமல் இருக்கிறது என்பதை அமைச்சரவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன். அதற்கான உத்தரவை அரசு விரைவில் இடுமா வென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர்களே,

"The Leave Rules in Fundamental Rules are applicable to the staff of the Municipalities and the leave rules applicable to teachers in Government institutions are applicable to teachers in Municipal Schools."

என்றுதான் இருக்கிறது. நகராட்சிப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர் களுக்கும் அந்த உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. எந்த நகராட்சிப் பள்ளியிலாவது அந்த உரிமைகள் ஆசிரியர்களுக்கு வழங்கப்படாமல் இருந்தால், அது குறித்து நடவடிக்கை தனியாக எடுக்கலாம்.

## Expert Sculptors.

* 84 Q.—THIRU V. R. PERIANNAN (on behalf of THIRU G. N. RAJU): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any scheme with the Government to give impetus and encouragement to the art of sculpture as the number of expert sculptore is dwindling;

(b) if so, the details of the same; and

(c) whether there is any scheme to defray monthly pension particularly to aged sculptors?

## சிற்பக்கலை வல்லுநர்கள்.

திரு. வி. ஆர். பெரியண்ணன் (திரு. ஜி. என். ராஜு சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சிற்பக்கலை வல்லுநர்கள் எண்ணிக்கை குறைந்து வருவதால் அந்தத் தொழிலை ஊக்கப்படுத்துவதற்கும் உற்சாகப்படுத்துவதற்கும் அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

(உ) குறிப்பாக வயது முதிர்ந்த சிற்பிகளுக்கு மாதாந்திர ஓய்வூதியம் கொடுக்க, திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) அரசு எடுத்துக் கொண்டுள்ள பூம்புகார் கலைக்கூடம், வள்ளுவர் கோட்டம், தமிழ்த்தாய் கோயில், புதுதில்லி தமிழ்நாடு விருந்தினர் விடுதி சிற்ப வேலை ஆகிய திட்டங்களில் சிற்பக்கலை வல்லுநர்களுக்கு வேலை வாய்ப்பு உள்ளது.

(உ) இல்லை.

THIRU G. VASANTHA PAI: Sir, will the Government consider the making of models of these historic places of ancient fame in smaller towns as is done in foreign countries?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவரவர்களே, வெளிநாட்டுக்காரர்கள் விரும்புவார்களேயானால், அந்த வகையிலே செய்து தரலாம். அந்த முறையிலே நாம் அவர்களை ஈடுபடுத்தலாம்.



**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** முதிர்ந்த சிற்பிகளுக்கு ஓய்வூதியம் கொடுக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பது கேள்வி. அதாவது, சிற்பிகள் வேலை செய்ய முடியாத காலத்தில், அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப் படுமா என்பது வினா. அதுபற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அவர்களுக்கென்று தனியாக ஓய்வூதியம் அளிக்கும் திட்டம் ஏதுமில்லை. பொதுவாக, கலைஞர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கும் திட்டம் இருக்கிறது. அதில், இசைக் கலைஞர்கள், நாதஸ்வரக் கலைஞர்கள், நாட்டியக் கலைஞர்கள் ஆகியோர் அடங்குவார்கள். அதிலே எழுத்தாளர்களைக்கூட சேர்த்திருக்கிறோம். வேண்டுமானால் அந்தத் திட்டத்தின் மூலம் இவர்களும் பயனடையலாம். அதைப்பற்றித் தனியாக ஆராயலாம்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கேள்விகளுக்கு என்று ஒரு மணி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஒரு தகவலை மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் தந்தார்கள். ஆசிரியர்களுக்குச் சலுகைகள் இல்லையென்று சொன்னேன். சலுகைகள் இருப்பதாக அவர்கள் குறிப்பைப் படித்தார்கள். இல்லையென்பதை மீண்டும் தெரிவித்து, அதைப் பற்றிக் கேட்க இடமில்லாமல் திடீரென்று நிறுத்தும்போது, அந்தத் தகவலைப் புரிந்துகொள்ள முடியாத நிலைமை இருக்கிறது . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** கேள்வி நேரம் என்பது ஒரு மணி நேரமிருந்தாலும், அவ்வளவு நேரத்தையும் திரு. முத்துசாமி அவர்களுக்கே கொடுக்க முடியாது. நேற்றுகூட ஒரு மணி நேரம் நடந்திருக்கிறது. எல்லா நேரத்தையும் ஒருத்தருக்கே கொடுத்துக்கொண்டிருக்க முடியாது. எல்லோருக்கும் பரவலாகத் தர வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி :** துணைத் தலைவரவர்களே, முத்துசாமிக்கே கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையில்லை . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வேறு யார் குறைபட்டுக்கொண்டாலும், திரு. முத்துசாமி அவர்கள் தனக்கு அதிக நேரம் கொடுக்கவில்லை யென்று குறைபட்டுக்கொள்வதில் நியாயமில்லை.

### Tamil Nadu Graduate Teachers' Association.

* 85 Q.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the number of teachers in the Districts of Madurai and Ramanathapuram, who have not, so far, benefited by G.O. Ms. No. 463, Education Department, dated 23rd March 1973, regulating the period of suspension of those teachers, who participated in the agitation organised by the Tamil Nadu Graduate Teachers' Association; and

(b) the reasons therefor?

### தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம்

**திரு. பி. ஆர். தாமஸ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கத்தால் நடத்தப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்ட ஆசிரியர்களைத் தற்காலிகமாக பணியிலிருந்து நிறுத்திவைத்த கால அளவை முறைப்படுத்துவது குறித்த கல்வித் துறையின் மார்ச் 23, 1973 ஆம் நாளிட்ட 463 ஆம் எண் அரசு ஆணையால் இதுவரை பயனடையாத மதுரை, இராமநாதபுரம் மாவட்ட ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(இ) அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஒன்றுமில்லை.

(இ) கேள்வி எழாது.

**திரு. பி. ஆர். தாமஸ்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, பல்வேறு ஆசிரியர்கள் இந்தச் சலுகையை அனுபவிக்காத நிலைமையில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசு சலுகையை அளித்தும், சில பள்ளிகளில் அந்தச் சலுகைகள் வழங்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? எனவே உடனே ஆணை பிறப்பித்து, அந்த ஆசிரியர்களுக்கு அந்தச் சலுகைகளை வழங்க அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துணைத் தலைவரவர்களே, பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து கிடைத்துள்ள தகவல், அப்படிப்பட்ட ஆசிரியர்கள் இல்லையென்பதுதான். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று யாராவது பாதிக்கப்பட்டிருந்தால், அதைப்பற்றி கவனத்திற்குக் கொண்டுவந்தால், நடவடிக்கை எடுக்கலாம்.





**திரு. பி. ஆர். தாமஸ்:** முகவை மாவட்டத்தில், சாத்தூர் வட்டாரத்தில் ஆசிரியர்கள் பணிக்கு வராத முன்பு, திருவிழாவிற்காக விடுமுறை அளித்திருக்கிறார்கள். அந்த விடுமுறையைத் தொடர்ந்து பணிக்கு வராதவர்களுக்கு, விடுமுறைக் காலத்தையும் சேர்த்துக்கொண்டு ஊதியம் அளிக்காமல் இருந்திருக்கிறார்கள்; ஆகவே, அந்த விடுமுறைக் காலத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டு சம்பளம் கொடுக்க அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இதைப்பற்றித் தனியாகக் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நடவடிக்கை எடுக்கலாம்.

### Rules relating to take over of Municipal Schools.

* 86. Q.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that due to the delay in the framing of the rules relating to the take over of the Municipal Schools, the teachers are put to much hardship in receiving their salaries, getting due increments, depositing Provident Fund contributions, getting loans from Provident Fund accounts, etc.; and

(b) if so, the action taken thereon?

### நகராட்சிப் பள்ளிகளை அரசு எடுத்துக்கொள்வது சம்பந்தமான விதிகள்

**திரு. பி. ஆர். தாமஸ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) நகராட்சிப் பள்ளிகளை அரசு எடுத்துக்கொள்வது சம்பந்தமான விதிகளைச் செய்வதிலுள்ள கால தாமதத்தினால், ஆசிரியர்கள், தங்களது சம்பளம், ஊதிய உயர்வு ஆகியவற்றைப் பெறுதல், வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை செலுத்துதல், அதனின்று கடன் பெறுதல் முதலியவற்றில் மிகுந்த இடர்பாடுகளுக்குள்ளாகிறார்கள் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. பி. ஆர். தாமஸ்:** துணைத் தலைவரவர்களே, விதிமுறைகள் வகுக்கப்படுவதற்கு முன்னரே, சில நகராட்சிப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர் பதவிகள் நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படாமல், 'ஏ' பிரிவு

ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இதைத் தவிர்த்து, நகராட்சிப் பள்ளிகளில் ஏற்கெனவே பணி புரிகின்ற ஆசிரியர்களுக்கு அந்தப் பதவி அளிக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வியிலே,

"The teachers are put to much hardship in receiving their salary, getting due increment, depositing provident fund contribution, getting loans from the provident fund"

என்று கேட்கப்பட்டிருக்கிறது. அதற்குத்தான் இல்லையென்று குறிப்பிட்டேன். தலைமையாசிரியர்களை மாற்றுவது போன்ற மற்றைய நிலைமைகளைப் பொறுத்தவரையில், தனிக் கேள்வி போட்டால்தான், பதில் சொல்ல முடியும்.

**திரு. கே. எஸ். கணபதி:** 1-4-1970 முதற்கொண்டு முன்னாள் கழகப் பள்ளிகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டது. ஆனால் அங்கு பணியாற்றும் ஆசிரியர்களுக்கான விதி முறைகள் இதுவரை சரியாக வகுக்கப்படவில்லை. அதற்கான நடவடிக்கை அரசு எடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை.

**திரு. செ. முத்துசாமி:** நகராட்சிப் பள்ளிகளை இப்போது அரசாங்கம் எடுத்துக்கொண்டிருந்தாலும், அந்தப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களை எந்த அடிப்படையில் வைப்பதென்பதில் இன்னும் முடிவெடுக்கவில்லை. ஆனால் தலைமை ஆசிரியர்கள் பதவியை மட்டும் 'ஏ' பிரிவில் இருப்பவர்களுக்குக் கொடுப்பதென்று முடிவெடுத்திருக்கிறார்கள். அந்தப் பள்ளி ஆசிரியர்களின் சீனியாரிட்டியை எப்படி வைப்பதென்பதில் முடிவு காணாத நேரத்தில், அங்கு இருப்பவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்காமல், 'ஏ' பிரிவில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு கொடுத்ததன் காரணமென்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நகராட்சிப் பள்ளிகளை அரசுப் பள்ளிகளாக ஏற்றுக்கொண்டிருந்தாலும், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவற்றை அரசாங்கப் பள்ளிகளாக எடுத்துக்கொள்வதற்கான சில பல விதிமுறைகளை வகுத்துச் சேர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதுவரையில் அவர்கள், நகராட்சிப் பள்ளியில் எந்தவித சட்டதிட்டத்தில் பணியாற்றினார்களோ, அதே விதிப்படி நடத்தப்படுவார்கள். அந்த விதி



முறைப்படி விடுமுறை போன்றவை தொடர்ந்து அவர்களுக்குத் தரவேண்டுமென்று மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அரசாங்கத்தோடு இணையும் நிலைமையில்தான் எல்லாச் சலுகைகளையும் தரும் நிலைமைகள் ஏற்படும். நகராட்சிப் பள்ளிகளில் பணி புரியும்போது என்னென்ன உரிமைகளை அவர்கள் பெற்று வந்தார்களோ அவைகள் தொடர்ந்து அவர்களுக்கு அளிக்கப்படும். இப்போது 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு என்று இருப்பதுபோன்று, 'சி,' பிரிவு ஒன்றை ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால், இந்த ஆசிரியர்களை மற்றவர்களுடன் சேர்க்கும்போது, சங்கடங்கள் ஏற்படும். எனவே, தொடர்ந்து இந்தப் பள்ளிகளை நடத்த நகராட்சிகளுக்கு மானியம் கொடுக்கலாமென்று சொல்லியிருக்கிறேன். இப்போது நாம் 66 சத விகிதம்; அவர்கள் 33 சத விகிதம் கொடுக்க வேண்டுமென்று இருப்பதால்தான் சங்கடங்கள் ஏற்படுகின்றன. தனியார் பள்ளிகளுக்கு நாம் 100 சத விகிதம் மானியம் தருகிறோம். எனவே இவர்களுக்குக் கொடுக்கப்படும் மானியத்தின் சதவிகிதத்தை உயர்த்திக் கொடுத்து, அவர்களே பள்ளிகளை நடத்த வேண்டுமென்று சொன்னால் அது பற்றிய தலைவலி இல்லாமல் இருக்கும். அதைப்பற்றியும் ஆராயும்படி செயலாளர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அதுகுறித்து முடிவு எடுத்த பின்பு இவர்கள் நிலை சீர்படுத்தப்படும்.

(பிற்பகல் 4-20)

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இது காலம் நீட்டிக்கப்படுமானால், நகராட்சிப் பள்ளிகளில் தலைமையாசிரியராய் இருந்தவர் அந்தப் பதவியைப் பெறாமல் போகக்கூடிய நிலை இருக்கிறது. ஏ-பிரிவிலிருந்து வருகிறவர்களுக்குக் கிடைக்கிறது. அந்த இடைக் காலத்திலே அவர்களுடைய சர்வீஸ் மற்றவைகள் எல்லாம் எப்படிக் கருதப்படும் என்று அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** 'ஏ' பிரிவிலிருந்து கொண்டுவந்து போடுகின்றார்களா என்று தெரியவில்லை. அப்படி இருந்தால், அது பற்றித் தனியாக ஆராயலாம்.

**திரு. எல். பலராமன்:** இந்த மாநகராட்சிப் பள்ளிகளையும், பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளையும் அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், அவற்றுக்கென்று தனியாக ஒரு வாரியம் அமைத்து, அவற்றை இயக்க அரசிடம் ஒரு செயற்குறிப்பு இருப்பதாக செய்தித் தாள்களில் பார்த்தேன். அது உண்மையா? அதுபற்றி எடுத்த முடிவு என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

[1975 நவம்பர் 7

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவைகளுக்கென்று தனியாக ஒரு வாரியம் வைக்கின்ற சூழ்நிலை ஏற்படவில்லை. இவைகளை அரசாங்கப் பள்ளிகளுடன் இணைப்பதா அல்லது தனியாகவே வைத்து நடத்துவதா என்பதுபற்றித் தனியாக ஆராயப்படும்.

திரு. சி. வி. ராஜகோபால் : நகராட்சிப் பள்ளிகளில் வேலை செய்கின்ற ஆசிரியர்கள் ஒழுங்காக வேலைக்குப் போகாமல் வேறு வேலை பார்க்கிறார்கள். அப்படிச் செய்கின்ற ஆசிரியர்களை நம்முடைய அரசு கண்காணித்து ஒழுங்காக அவர்கள் வேலைக்குப் போவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஒழுங்காக வேலை செய்ய வில்லை என்று ஆசிரியர்கள் அத்தனை பேரையும் ஒட்டு மொத்தமாகக் குற்றம் சாட்ட முடியாது. அப்படிப்பட்ட குறைபாடுகள் எந்தப் பள்ளியில் என்று சொல்ல முடியாது. எந்தப் பள்ளியில் இருந்தாலும், அதற்கான நடவடிக்கை களை அந்தந்தப் பள்ளியை நிர்வகிப்பவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டியவர் களாக இருக்கிறார்கள்.

## *Gastro-Enteritis.*

* 87. Q.—THIRU D. V. D' MONTE : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether the Government are aware of the alarming increase in the incidence of gastro-enteritis among children in Madras City;

(*b*) whether the Government have identified the causes behind the sudden increase in this sickness; and

(*c*) the steps taken to remove them?

## வயிறு-குடல் சார்ந்த நோய்

திரு. டி. வி. டி'மாண்டி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை மாநகரில் உள்ள குழந்தைகளிடையே வயிறு-குடல் சார்ந்த நோய் (பேதி) அச்சமிகும் அளவில் பரவியுள்ளதை அரசு அறியுமா ?

(இ) இந்த நோய் திடீரெனப் பெருகியுள்ளதற்கான காரணங்களை அரசு கண்டறிந்ததா ?



1975 நவம்பர் 7]

(உ) இந்நோய் பரவுவதற்கான காரணங்களை அகற்ற மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) நடப்பாண்டிலும், கடந்த ஆண்டிலும் ஏற்பட்டுள்ள வறட்சி நிலையும், குடிநீர் வழங்கு பிரச்சினையும் திடீர் அதிகரிப்புக்குக் காரணங் களாகும்.

(உ) பள்ளிகள், குடிசைக் குடியிருப்புகள் மற்றும் சுலபமாக நோய் பரவக்கூடிய பகுதிகளில் காலராத் தடுப்பு ஊசி குத்துதல், நீர் நிலைகளில் குளோரின் மருந்து கலத்தல் முதலிய முயற்சிகள் முடிந்த அளவு மேற் கொள்ளப்பட்டன.

THIRU D. V. D'MONTE : Sir, may I know how many deaths have occurred amongst children due to Gastro-Enteritis this year in the City of Madras?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டில் 1-1-1974 முதல் டிசம்பர் முடிய குடல் அழற்சி நோயால் பாதிக்கப் பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 796, அதில் மரணம் அடைந்தவர்களின் எண்ணிக்கை 20. அதைப்போல 1975 ஆம் ஆண்டிலே செப்டம்பர் மாதம் முடிய இந்த ஒன்பது மாத காலத்தில் குடல் அழற்சி நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 1,035. அவர்களில் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 28.

திரு. எல். பலராமன் : இந்த 'டயரியா' நோய் நகர்ப்புறங்களில் மட்டு மல்ல, கிராமப்புறப் பகுதிகளிலேயும் ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசினர் இது பற்றி ஆராய்ச்சி செய்ததாகத் தெரிகிறது. அதுபற்றிய தகவல் ஏதாவது மாநில அரசிடம் இருக்கிறதா ? அந்த நோய் எந்தக் காரணத்தினால் வந்தது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மத்திய அரசுக்கு இந்த நோயைப் பற்றிச் சம்பந்தமில்லை. மத்திய அரசுக்கு வேறு ஏதாவது அழற்சி நோய் ஏற்படலாம். மத்திய அரசு ஆராய்ச்சி செய்யவேண்டிய அவசியமில்லை. சுகாதாரம் மற்றும் கல்வித்துறைகள் எல்லாம் மாநில அரசின் பொறுப்பிலேயே இருக்கின்றன. வேறு ஏதாவது பற்றி அவர்கள் ஆராய்ச்சி நடத்தியிருக்கக் கூடும். கிராமப் பகுதிகளிலேயும், நகரப் பகுதிகளில் சில நேரங்களிலேயும் இது காலரா என்று கருதப்படுகிறது. மேலும், இது போன்ற 'கேஸ்ட்ரோ என்டெரிடிஸ்' நோயும் மக்களிடத்திலே சில நேரம் ஏற்பட்டுவிடுகிறது.

**திரு. கே. ராஜாராம்:** இப்போது அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரத்தில், இந்த நோயினால் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு அங்கு மரணமடைந்த குழந்தைகளின் எண்ணிக்கை மட்டும் இருக்கிறதா அல்லது ஆஸ்பத்திரியில் சேர்க்காமலேயே வெளியில் இறந்து போனவர்கள் பற்றி ஜனன-மரணப் பதிவு செய்யும் அலுவலகத்திற்கு வந்த புள்ளிவிவரங்களும் சேர்ந்துள்ளதா என அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** ஜனன-மரணப் பதிவு அலுவலகத்தில் தகவல் கொடுக்கும்போது, இறந்து போனவர்கள் என்ன நோயால் இறந்து விட்டார்கள் என்ற விளக்கங்கள் கொடுப்பதில்லை. மருத்துவ மனையில் அட்மிட் செய்யப்பட்டு அங்கு இறந்தால்தான், இவர்கள் இந்த நோயால் இறந்தார்கள் என்ற சரியான புள்ளிவிவரம் கிடைக்கும்.

**திரு. கே. ராஜாராம்:** மருத்துவமனைக்கு வராமல் இந்த நோயினால் குழந்தைகள் மரணமடைந்திருக்கலாம். அதுபற்றிய விவரம் ஏதாகிலும் இருக்கிறதா? இந்நோய் பரவாமலிருப்பதற்கு என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** எப்போதும் புள்ளி விவரங்கள் தருவது என்றாலே, சரியான அளவில் இருந்தால்தான் தரமுடியும், பொதுவாக அப்படியே சில குழந்தைகள் வெளியில் இந்த நோயின் மூலம் இறந்திருந்தாலும், என்ன காரணத்தினால், அல்லது என்ன நோயால் இந்தக் குழந்தைகள் இறந்துபோனார்கள் என்ற சரியான தகவலை உறவினர்களோ, மற்றவர்களோ தெரிவிக்காதபோது, அதுபற்றிய சரியான புள்ளிவிவரம் தருவது இயலாது. இந்த நோய் இருப்பதற்குக் காரணம், பொதுவாக குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டு, குடிப்பதற்குக்கூட நல்ல தண்ணீர் கிடைக்காத ஒரு நிலை ஏற்பட்டதே. அரசு எப்படியும் நல்ல தண்ணீர் கிடைக்கவேண்டும் என்று எடுத்த தக்க நடவடிக்கைகளின் காரணமாகத்தான், 800 பேர்கள் ஆயிரம் பேர்கள் என்று இருக்கிறதே தவிர, இல்லாவிட்டால், ஐயாயிரம், பத்தாயிரம் என்ற அளவுக்குப் போயிருக்கும். கடுமையான வறட்சி நாட்டில் 1½ வருட காலம் இருந்தது. சென்னை நகரில் ஓர் ஆண்டுக்காலம் குடிநீர் பற்றாக்குறை கடுமையான முறையில் இருந்தது. மாநகராட்சியும், அரசாங்கமும் சேர்ந்து திட்டமிட்டு பெரும் செலவிலே திட்டமிட்டு கடமையாற்றி குடிநீர் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பள்ளிகளிலும், குடிசைகளிலும் சிறப்பாக வசதி செய்து கொடுத்து அவர்கள் இரண்டு, மூன்று நாட்களுக்குத் தேவைப்படும் குடிநீரைச் சேகரித்து வைத்து. உபயோகப்படுத்தினார்கள். முற்றிலும் தண்ணீர் இல்லை என்ற நிலை சில சமயம் வந்தபோது, அவர்கள் கிணற்று நீரையும், மற்றும் குழாய் நீரையும் குடித்ததன் மூலமாகத்தான் இந்த பாதிப்பு ஏற்பட்டிருக்



கிறது. அரசு எடுத்த இந்தத் தீவிர நடவடிக்கைகளின் காரணமாகத்தான் இந்த அளவுக்குக் குறைவாக பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இப்படி நோயே வரக்கூடாதென்றால், எப்போதுமே வறட்சியோ தண்ணீர் பஞ்சமோ ஏற்படக் கூடாது.

## *Assignment of House-sites and Cultivable Lands to Villagers.*

* 88. Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state:

(*a*) whether it is a fact that 32 families residing in Bethelpuram Village near Parapala Dam site in Palani Taluk, who had come from various villages for kumari cultivation on promises of assignment of house-sites and cultivable lands have not been assigned any house-sites or other lands;

(*b*) whether they offered peaceful Satyagraha during April–May 1975, to secure fulfilment of the promises made to them; and

(*c*) the details and the outcome thereof?

## *கிராமவாசிகளுக்கு வீட்டு மனைகளும், வேளாண்மை நிலங்களும் ஒதுக்கித்தரல்.*

**திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்):** மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வீட்டுமனைகளும், வேளாண்மை நிலங்களும் ஒதுக்கித்தரப்படும் என்று அளித்த உறுதிமொழிகளின்பேரில் பல்வேறு கிராமங்களிலிருந்து வந்து குமரி சாகுபடி செய்வதற்காக பழனி வட்டம், பரப்பலா அணைக்கட்டுப் பகுதிக்கு அருகேயுள்ள பெதல்புரம் கிராமத்தில் குடியேறியுள்ள 32 குடும்பங்களுக்கு. வீட்டுமனைகள் அல்லது ஏனைய நிலங்கள் ஒதுக்கித்தரப்படவில்லை என்பது உண்மையா?

(இ) அவர்களுக்குக் கொடுத்த உறுதிமொழிகளை நிறைவேற்றுமாறு கோரி 1975-ஆம் ஆண்டு எப்ரல்-மே திங்களில் அமைதியான முறையில் சத்தியாக்கிரகம் செய்தார்களா?

(உ) அதன் விவரங்களும், அதன் விளைவும் யாவை?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (அ) இல்லை.

(இ) இல்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.

### Bus-Stand in Andimadam Panchayat.

* 89. Q.—THIRU A. BALASUBRAMANIAM (on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR): Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether it is a fact that the new bus-stand in Andimadam Panchayat, Tiruchirappalli District is not in use even though the construction has been completed; and

(b) if so, the reasons therefor?

### ஆண்டி மடம் ஊராட்சியில் பேருந்து நிலையம்.

**திரு. அ. பாலசுப்ரமணியம்** (திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்): மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சி மாவட்டத்தில் ஆண்டி மடம் ஊராட்சியில் பேருந்து நிலையம் கட்டப்பட்டும் அது பயன்படுத்தப்படாமல் இருப்பது உண்மையா?

(இ) ஆமெனில், காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) & (இ) ஆண்டி மடம் ஊராட்சி எல்லையில் பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு சில வசதிகள் மேலும் விதிகளின்படி செய்யப்பட வேண்டியிருப்பதால், பயன்படுத்தப் படாமல் இருக்கிறது. பேருந்து நிலையத்தை விரைவில் பயன்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### Auciton of Bus-Stand, Cart-Stand, etc., in Tindivanam Municipality.

* 90 Q.—THIRU A. THANGAVEL: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) the amount derived from the auction of the bus-stand, cart-stand and fish and mutton market in the Tindivanam Municipality during the years 1971–72, 1972–73, 1973–74 and and 1974–75, item-wise;

(b) the amount due, item-wise, from the successful bidder during every year; and

(c) the reason therefor?



### திண்டிவனம் நகராட்சி பேருந்து நிலையம், வண்டிப்பேட்டை முதலியவற்றை ஏலம் விடுதல்.

**திரு. ஆ. தங்கவேல்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திண்டிவனம் நகராட்சியில் 1971-72, 1972-73, 1973-74, 1974-75 ஆகிய ஆண்டுகளில் நகராட்சி பேருந்து நிலையம், வண்டிப்பேட்டை, மீன் மற்றும் கறி மார்க்கெட் ஏலம் விடப்பட்ட தொகை இனம் வாரியாக எவ்வளவு?

(இ) ஒவ்வொரு இனத்திலும் ஆண்டுதோறும் ஏலதாரரிடம் வசூல் செய்யப்படாத தொகை எவ்வளவு?

(உ) அதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ)—(உ) ஒரு விவர அறிக்கை@ சட்ட மன்ற மேலவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ஆ. தங்கவேல்:** துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் பேருந்து நிலையம் ஏலம் விடப்பட்ட தொகை வசூல் ஆகாததால் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன என்று குறிக்கப்பட்டுள்ளது. எப்போது வழக்கு தொடரப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** எப்போது தொடரப்பட்டது என்ற விவரம் இல்லை. வழக்குகள் தொடர்ந்தால், காலதாமதம் ஆவதைத் தடுக்க முடியாது.

THIRU A. R. DAMODARAN: Sir, usually when such markets are auctioned, a deposit amount equal to 3 months' lease is collected from these contractors. May I know, Sir, if such a deposit was collected from these contractors and if so, whether these deposits have been adjusted against the lease amount?

The HON. THIRU S. RAMACHANDRAN: Sir, the rule provides for the collection of the security deposit for 3 months' period. But I am sorry to say that I do not have the information whether any deposits have been collected in these cases. Somehow due to the heavy arrears, I should feel that the Council has to proceed with the action if necessary, through litigation also.

---

@ 170-171 ஆம் பக்கங்களில் இணைப்பு 1 அச்சிடப்பட்டுள்ளது.

THIRU A. R. DAMODARAN: Sir, the reason why I asked this is that I feel that the Executive Officer is primarily responsible for non-collection of lease amounts. The Council is not responsible. The Council only approves the tender and it is the duty of the Executive Officer to take action to collect this lease amount every month. May I request the Hon. Minister to find out whether there has been any collusion between the Executive Officer and the Contractors to avoid payment so as to throw the responsibility for further litigation on the Municipal Council?

The HON. THIRU S. RAMACHANDRAN: Sir, the point raised by the hon. Member will be given careful consideration and the responsibility fixed.

**திரு. ஆ. தங்கவேல்:** வழக்கு காலம் கடந்து தொடரப்பட்டதாகத் தெரிகிறது. எங்கே எப்போது வழக்கு தொடரப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவில்லை. நான் கேள்விப்பட்டவரையில், காலம் கடந்து வழக்கு தொடரப்பட்டதாகத் தெரிகிறது. அப்படியானால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** வழக்கு எப்போது தொடரப்பட்டது என்கின்ற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் 1971 ஆம் ஆண்டிலே இருந்து 1975 ஆம் ஆண்டு வரை பல்வேறு வகையில் நிலுவைகள் இருந்து வருகின்றன. ஆகவே, இது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நகராட்சி ஆய்வாளர் உத்தரவிட்டிருக்கின்றார்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் (*) உடுக்குறி அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

(பிற்பகல் 4-30)

## 2. அறிவிப்பு.

### பேரவையிலிருந்து செய்திகள்

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்புச் சட்டத்தின் 199-வது பிரிவுப்படி பணச் சட்ட முன்வடிவு எனப் பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு, இம் மேலவையின்



பரிந்துரைக்காக கீழ்க்கண்ட சட்ட முன்வடிவு பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளது:

தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 51/1975).

சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, இம் மேலவையின் ஒப்புதலுக்காக கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளன என்பதை அவைக்கு அறிவிக்கிறேன்—

(1) 1975 ஆம் ஆண்டு, சக்தி பைப்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 38/1975).

(2) 1975 ஆம் ஆண்டு, சதர்ன் ஸ்டிரக்சுரல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 39/1975).

(3) 1975 ஆம் ஆண்டு, லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 40/1975).

(4) 1975 ஆம் ஆண்டு, டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 41/1975).

## 3. கவன ஈர்ப்பு.

**தமிழ் நாட்டில் பள்ளிகளில் பணிபுரிந்துவரும் பி.ஏ. பட்டம் பெற்ற செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்குக் கொடுத்து வந்த பி.எட். குறுகிய காலப் பயிற்சியை அரசு நீக்கியுள்ளது குறித்து.**

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

" தமிழ் நாட்டில் பள்ளிகளில் பணிபுரிந்துவரும் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பி.ஏ. பட்டம் பெற்ற பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் உள்ளனர். இவர்களுக்கு இதுவரை கொடுத்து வந்த பி.எட். குறுகிய காலப் பயிற்சியை சமீபத்தில் அரசு நீக்கியுள்ளதால் பல நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து ".

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, மாநிலத்தில் போதிய அளவு பி.எட். பட்டதாரிகள் இல்லாத சமயத்தில் இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர்களில் பி.ஏ., பி.எஸ்ஸி. அல்லது பி.ஓ.எல். பட்டம் பெற்றவர்கள் பி.எட். பயிற்சி பெறும் பொருட்டு குறுகியகால (5 மாதம்) பி.எட். பயிற்சி கொண்டுவரப்பட்டது. இடைநிலை ஆசிரியர்களில் பெரும்பாலோர் வரலாறு பாடத்தையே பட்ட வகுப்பில் எடுத்துப் படித்து, பட்டம் பெற்று பின் குறுகிய கால பி.எட். பயிற்சியிலும் அப்பாடத்தையே விருப்பப் பாடமாகப் படிக்கக்கோரி விண்ணப்பிக்கிறார்கள். வரலாற்றை விருப்பப் பாடமாகக் கொண்டு தேறிய பி.எட். பட்டதாரிகளுக்கு உயர்நிலைப் பள்ளிகளில் வேலை வாய்ப்பு மிகக் குறைவு.

தற்போது நமது மாநிலத்தில் பி.எட். பட்டதாரி ஆசிரியர்களில் பலர் வேலையின்றியுள்ளனர். 1974-75 ஆண்டு இறுதியில் வேலைவாய்ப்பின்றி இருந்த பி.எட். ஆசிரியர்கள் சுமார் 4,900. புதிதாக 1975-76-ம் ஆண்டு பி.எட். தேறி வந்துள்ளோர் சுமார் 2,600. ஆக மொத்தம் தற்பொழுது வேலைவாய்ப்பின்றியுள்ள பி.எட். ஆசிரியர்கள் சுமார் 7,500 பேர்கள். ஆண்டுதோறும் உயர்நிலைப் பள்ளிகள் இவர்களுள் சுமார் 1,200 பேர்களுக்குமேல் வேலை அளிக்க இயலாது. எனவே, இம் மாநிலத்திலுள்ள 23 ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளிலும் (அரசு 7, தனியார் 16) முறையான (10 மாத) பி.எட். இடங்களில் 300 இடங்களைக் குறைத்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. டாக்டர் ஆதிசேசையாவின் தலைமையின்கீழ் அமைக்கப்பட்டுள்ள கல்விச் செலவு சிக்கனக் குழுவின் ஆலோசனையின் பேரில்தான் இவ்வாறு 300 இடங்கள் முறையான பி.எட். பயிற்சியிலேயே குறைக்கப்பட்டுள்ளன.

மேற்சொன்ன நிலைமைகள் அனைத்தையும் கருத்திற்கொண்டுதான் அரசு குறுகியகால பி.எட். பயிற்சியை நீக்கி உத்தரவு பிறப்பித்தது. பி.எட். பயிற்சி பெற விரும்பும் இடைநிலை ஆசிரியர்கள் பத்து மாத காலம் விடுப்பில் சென்று முறையான பி.எட். வகுப்பில் சேர்ந்து படித்துக்கொள்ள தடையேதுமில்லை.

*திரு. செ. முத்துசாமி :* அதாவது முறையாக நடத்தப்படும் ஓராண்டுத் தேர்வு இருக்கிறது. ஆகலால் அவர்கள் சென்று படித்துக்கொள்ளலாம், அதனால் பாதிக்கப்படமாட்டார்கள் என்று கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஓராண்டு காலத் தேர்விலே ஒரு 10 அல்லது 20 இடங்கள் தான் இருக்கின்றன. ஆண்டுதோறும் ஏராளமானவர்கள், குறைந்தது 100 ஆசிரியர்களாவது தங்களுடைய வாழ்க்கையிலே கஷ்டப்பட்டு முன்னேறுகிறார்கள். இந்தச் சலுகைகளை நீண்ட காலமாக் கல்வித் துறையிலே கொடுத்து





வருகிறார்கள். இந்தக் குறுகிய காலப் பயிற்சி பெறுவதன் மூலமாக அவர்களுக்கு இரண்டு ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்கப்படுகின்றன. அதுகூட இப்போது மறுக்கப்பட்டிருக்கிறது. இதில் 20 இடங்கள்தான் என்றால், நீண்டகாலம் பல பேர் பயிற்சி பெறாமல் இருக்கும் நிலை ஏற்பட்டுவிடும். அரசு கரஸ்பாண்டென்ஸ் கோர்சையாவது ஏற்படுத்தி, அவர்களுக்குப் பயிற்சி அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, பி.எட். படிப்பது என்பது தொழில் செய்வதற்குப் பயிற்சிப் படிப்பே தவிர, இது படிப்பு என்று ஆகாது. இது தொழில் பார்ப்பவர்களுக்குத் தேவையான பயிற்சி கொடுத்து அவர்களை உருவாக்குவதற்கு இருக்கக் கூடிய ஒரு திட்டம். நான் குறிப்பிட்டபடி, இந்த ஆசிரியர்களுடைய எண்ணிக்கை அதிகமாகியிருந்ததாலும், 3, 4 ஆண்டுகளுக்கு அவர்களில் பலர் வேலையில்லாது இருக்கின்ற காரணத்தினாலும், மேலும் மேலும் அதிகப்படுத்த வேண்டாமென்ற குறிக்கோளின் அடிப்படையிலேதான், இந்த 10 மாத குறுகிய காலப் பயிற்சிக் கல்லூரிகளில், இந்த ஆண்டு 300 இடங்களைக் குறைத்து விட்டோம். குறுகிய காலப் பயிற்சியைக் குறைக்க வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். இப்போது பெரும்பாலும் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள், பி.எட். படிப்பதற்கு முறை எளிதாக்கப்பட்டிருக்கிறது. இப்போது வரலாறு, தமிழ் இவைகள் படிப்பதற்குத்தான் இடம் இருக்கின்றது. ஆனால் இப்போது தேவைப் படுகிறவைகள் அறிவியலும், கணக்கியலும்தான். அதை எடுத்துப் படிப்பார்களானால், அவர்களுக்கு ஓரளவுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். ஆனால் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் 'லெபாரட்டரி' வசதிகள் பெற்று அறிவியல் படித்து அதிலே தேர்வு பெறுவது என்பது இயலாத ஒன்று. அவர்கள் எளிதாகப் படிக்கக் கூடியது வரலாறு அல்லது தமிழ்தான். அதைப் படித்து பி.எட். படித்தவர்கள்தான் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களுக்கே உயர்நிலைப் பள்ளிகளில் வேலை வாய்ப்புத் தர முடியவில்லை. முறையாகப் படித்தவர்களும் பல பேர்கள் இருக்கின்றார்கள். ஆகவேதான் அந்த இடங்களைக் குறைக்க வேண்டிய நிலை இருக்கிறது. அத்துடன் அதிகமானவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டு, இப்படிப்பட்டவர்கள் வெளியிலே வேலையில்லாமல் இருப்பதால், நாம் சங்கடங்களுக்கு ஆட்படுகிறோம். தேவை ஏற்படும்போது, ஆசிரியர்கள் பற்றாக்குறை ஏற்படும்போது, எந்த நிமிடத்திலேயும் ஆரம்பித்துக் கொள்ளலாம். இப்போது நாம் குறுகிய காலப் பயிற்சியைக் கொடுத்துவிட்டு, 3, 4, 5 ஆண்டுகளுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கின்ற ஒரு நிலைமையை

உண்டாக்குவது சங்கடமான ஒன்றாகும். ஆகவே அதற்கு வழிவகைகள் ஏற்படாமல் தடுக்க வேண்டியவர்களாக, பொறுப்பாக நாம் அதைப் பார்த்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவேதான் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. செ. முத்துசாமி: உயர்நிலைப் பள்ளிகளில், அரசாங்கத் துறையிலேயே, கல்வித் துறையிலேயே இருக்கக்கூடிய நடுநிலைப் பள்ளிகளில் கல்வி முன்னேற்றம் கருதி, 8-ம் வகுப்புக்கு போதிக்க, பி.டி. ஆசிரியர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் அநேகமாக வரலாற்றுப் பாடத்தை எடுத்துக் கொண்டவர்கள்தான். உயர்நிலைப் பள்ளியில் 8-ம் வகுப்புக்கு போதிக்கின்றவர்கள் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள்தான். ஆதலால் அங்கே கல்வி முன்னேற்றம் கருதி, 8-ம் வகுப்புப் பாடத்தைப் போதிக்க பி.டி. ஆசிரியர்களை நியமிக்கக்கூடிய செயற்குறிப்பு அரசாங்கத்திடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். ஏற்கெனவே கல்வி அமைச்சர் அவர்கள் இதுபற்றி ஆராயலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனுடைய நிலை என்ன என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: உயர்தொடக்கப் பள்ளிக்கு தலைமையாசிரியராக பி.ஏ., பி.எட். படித்த ஆசிரியர்களைப் போடலாம் என்கின்ற அளவுக்கு தனிப்பட்ட உத்தரவு இருக்கிறது. அதன்படி ஆண்டுக்கு ஆண்டு, நூறு நூறு இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. பிறகு அது நிறுத்தப்பட்டிருக்கிறது. மறுபடியும் 5 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு என்ற திட்டத்தின்படி 900 இடங்கள் கொடுத்தபோது, அதை பி.டி. ஆசிரியர்களுக்குத் தர வேண்டுமென்ற நோக்கத்துடன், பி.டி. ஆசிரியர்கள் உயர் தொடக்கப் பள்ளியினுடைய தலைமையாசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள் என்ற அளவுக்குத்தான் கொடுத்து வந்தோம். எல்லா உயர் தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர்களும் பி.டி. ஆசிரியர்களாகத்தான் இருக்க வேண்டும் என்கின்ற நிலையை நாம் ஏற்படுத்தி, அதற்கான நிதி ஒதுக்கீடு செய்கின்ற நிலைமை ஏற்படுமானால், அதற்கான வாய்ப்பு ஏற்படும். வாய்ப்பு ஏற்படுகின்றபோது, இப்படி செகண்டரி கிரேடிலே இருந்து, பி.எட். படித்து வந்தவர்களுக்கு வாய்ப்பளிக்கலாம் என்றாலும், அதிலே இன்னொரு சங்கடத்தையும் நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். உயர் தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர் பதவி பி.டி., பி.எட். படித்தவர்களுக்குத்தான் என்ற நிலைமை வந்துவிட்டால், செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு குறை ஏற்படுகிறது. அவர்களிடமிருந்து ஒரு முறையீடு வந்திருக்கிறது. எங்களுக்கு இதனால் தலைமையாசிரியர் பதவி பெறுகின்ற வேறு





வாய்ப்பே இல்லை என்று முறையிட்டிருக்கிறார்கள். அதை பி.டி. ஆசிரியர்களுக்கு என்று ஒதுக்கி விடுவதாக இருந்தால், என்றென்றைக்கும் நாங்கள் செகண்டரி கிரேடு ஆசிரியராகத்தான் இருந்து ஓய்வு பெறவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதிலேயும் 500, 400 மாணவர்களுக்கு மேல் இருக்க வேண்டுமென்று வைத்தால், செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் சில பேர்களுக்கு தலைமையாசிரியராக ஆகக்கூடிய வாய்ப்பு கிடைக்கும். இவற்றை எல்லாம் நான் முதலிலேயே சொன்னேன். அதை ஆராய்ந்து கொண்டு வருகிறோம். இடங்களை அதிகமாக்கினால், இப்படிப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படும். இல்லாவிட்டால் இவர்களுக்கு முதல் உரிமை தரவேண்டுமென்று சொல்லி, அந்தந்தப் பள்ளிகளிலேயே வேலைவாய்ப்பு ஏற்பட்டு, அதற்குத் தகுதியுடையவர் செகண்டரி கிரேடு ஆசிரியராக இருந்தால், அவருக்கு இடம் தந்துவிட்டு, பின் புதிதாகச் சேர்ந்தவர்கள் சேர்க்கப்படலாம் என்று நாம் ஒரு அறிவுரை தந்திருக்கிறோம். இந்தப் பிரச்சினைகளுக்குக் கூடுமானவரையில் ஒரு சுமுகமான முறையில் வழிவகை காணவேண்டும் என்பதற்காகத்தான் இந்த மாதிரி நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம்.

(பிற்பகல் 4-40)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவைக்கு ஓர் அறிவிப்பு. நிகழ்ச்சி நிரலில் உள்ளபடி 4 சட்ட முன்வடிவுகள் ஒரே துறையைச் சார்ந்ததாக இருப்பதால், இந்த நான்கு சட்ட முன்வடிவுகளின்மீதும் விவாதத்தைப் பொதுவாக வைத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, முதலிலே நான் ஒரு சட்ட முன்வடிவை முன்மொழிகிறேன். விவாதம் நடைபெற்ற பிறகு, ஒவ்வொரு சட்டமாக எடுத்துக்கொண்டு, அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: ஒவ்வொரு சட்டமாகத்தான் எடுத்துக்கொண்டு நிறைவேற்றப்பட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: விவாதிப்பதை பொதுவாக வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. ஒவ்வொரு சட்டமும் தனித்தனியாகத்தான் முடிவுக்கு விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** சக்தி பைப்ஸ் நிறுவனம் என்று விவாதத்தை எடுத்துப் பேசுகிறபோது, இன்னொரு நிறுவனத்தைப்பற்றிப் பேச முடியாது. அதன் பேலன்ஸ் ஷீட் பற்றியோ, அதன் பிரச்சினைகளைப் பற்றியோ இந்தச் சட்ட முன்வடிவிலேயே பேச முடியாது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அதிலேயே சொல்லலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** முதலிலேயே முதல் சட்டம் வருகிறபோது, அதுபற்றிய கொள்கைகளை, குறிக்கோள்களை மற்ற விஷயங்களைப் பேசி முடித்துவிடலாம். தனியாக ஏதாவது ஒன்றிரண்டு சொல்ல வேண்டி வருமானால், அடுத்தடுத்து வருகின்ற சட்டங்களில் ஒரு வாக்கியம் இரண்டு வாக்கியங்கள் பேசி அதை முடித்துக்கொள்ளலாம். ஆகவே பொது விவாதம் என்பது முதல் சட்டத்தைப் பொறுத்து வைத்துக்கொண்டு, அடுத்தடுத்து வருகின்ற சட்டங்களில் விளக்கங்கள் பெறுகிற அளவுக்கு மட்டும் வைத்துக்கொள்வார்களானால், அதிலேயே திருப்பித் திருப்பிப் பேசுவதற்கு அவசியம் ஏற்படாது என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

**(1) 1975 ஆம் ஆண்டு, சக்தி பைப்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப் படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1975).**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, சக்தி பைப்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

சக்தி பைப்ஸ் நிறுவனம் வார்ப்பு இரும்புக் குழாய்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள நிறுவனமாகும். இந்நிறுவனம் பல ஆண்டுகளாக விரயத்தில் இயங்கி வந்துள்ளது. அது கிட்டத்தட்ட மூடப்படும் நிலை ஏற்பட்டது. இந்நிறுவனத் தொழிலாளர்களைப் பாதுகாக்கவும், அதன் உற்பத்தி வசதிகளைத் திறம்படப் பயன்படுத்தவும் தமிழ் நாடு 1969 ஆம் ஆண்டு நிவாரணத் தொழில் நிறுவனங்கள் (சிறப்பு விதித் துறைகள்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 21/1969) பயனை இந்நிறுவனத்திற்கு மாநில அரசு அளித்துள்ளது.

---

@ 172–188–ஆம் பக்கங்களில் இணைப்பு II–ஆக அச்சிடப்பட்டுள்ளது.





இந்நிறுவனத்தின் இயக்குநர் குழுவும் இதன் பங்குதாரர்களும் நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பையும் 1972 ஆம் ஆண்டு டிசம்பர் 19 ஆம் நாளன்று அரசிடம் ஒப்படைத்துள்ளனர். அன்று முதல் அரசு இந்நிறுவனத்தின் நிர்வாகத்தைத் தங்களது நியமனதாரர்கள் மூலம் நிர்வகித்து வருகிறது. இந்நிறுவனத்திற்கு அரசு கணிசமான நிதியுதவியையும் அளித்துள்ளது. இந்நிறுவனத்தை விரிவு படுத்துவதற்குக் கணிசமான அளவிற்குப் புதிதாக முதலீடு செய்ய வேண்டியுள்ளதோடு இந்நிறுவனத்தின்மீது நிர்வாகக் கட்டுப்பாட்டை அரசு தொடர்ந்து செலுத்துவதற்கு வகை செய்யவும் வேண்டியுள்ளது. எனவே இந்த நிறுவனத்தைக் கையகப்படுத்துவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி செயற்குறிப்புகளுக்கு செயல்வடிவம் கொடுக்க தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சக்தி பைப்ஸ் நிறுவனம் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டு அச்சட்ட முன்வடிவு பரிசீலனைக்காகப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது. இப்பிரேரணையை ஏற்குமாறு இம்மாமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன் மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, சக்தி பைப்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

THIRU A. R. DAMODARAN : Sir, I move—

"That the Bill be referred to a Select Committee of this House consisting of 15 members."

THIRU K. S. GANAPATHI : Sir, I second it. மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த சக்தி பைப்ஸ் நிறுவனத்தையும் அதோடு சேர்ந்து மற்றும் மூன்று நிறுவனங்களையும் அரசாங்கம் கையகப்படுத்த வேண்டுமென்று அரசு நான்கு சட்ட முன்வடிவுகளை இந்த அவை முன் வைத்திருக்கிறது. இந்த முறையில் 'சிவீப் அன்டர்டேக்கிங்ஸ்' என்ற அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்பட்ட நிறுவனங்களை முழுமையாக அரசு கையகப்படுத்தும் முதல் முயற்சியாகும் இது. அந்த அடிப்படையில் எந்த முறையில் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்பதுபற்றி இந்த அவை தெளிவாக விவாதிப்பதற்குப் போதிய வாய்ப்பு இல்லாமல் இருக்கும் காரணத்தாலே, இந்தச் சட்ட முன்வடிவுகளை ஒரு ஆய்வுக் குழுவுக்கு அனுப்பி, அதனுடைய பரிசீலனையின் பேரில், அதனுடைய பரிந்துரையை அடிப்படையாகக்

கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவு மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இது போன்ற நிறுவனங்கள் அநேகமாக நசிந்த நிலையில் இருக்கும்போது, அந்த நிறுவனங்களை அரசு எடுத்துக் கொள்கிறது. இவ்வாறு நசிந்த நிலையில் இருக்கும்போது, ஏன் இந்த நிறுவனங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று காரணம் கேட்டால், இந்த நிர்வாகம் மூடப்பட்டால், அங்கேயுள்ள தொழிலாளர்கள் வேலையிழக்க நேரிடும் என்று சொல்லப்படுகிறது. தொழிலாளர்கள் வேலையிழக்க நேரிடும் என்ற ஒரே காரணத்திற்காக, அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் பல கோடி ரூபாய்களை அரசு இழக்க வேண்டுமா என்பதை நான் கேட்டுக் கொள்கின்றேன். தொழிலாளர்களுக்கு வாழ்வு கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த மாதிரி நிறுவனங்களை எடுப்பதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. அப்படி எடுக்க வேண்டியது அவசியமும் கூட. எனக்கு தொழிலாளர் சமுதாயத்தின்மீது எந்தவிதமான கெட்ட எண்ணமும் கிடையாது. ஆனால் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யும் முன், ஒரு நிர்வாகம் ஆரம்பத்திலிருந்தே சரியாகச் செயல்பட்டு வந்திருக்கிறதா, எந்தக் காரணத்தினால் நிர்வாகம் நசிந்துபோயிற்று என்பதையெல்லாம் ஆராய்ந்திருக்க வேண்டும். இந்த நிறுவனங்களுக்கு எந்த ஒரு நிபந்தனையும் இல்லாமல் ஆரம்பத்திலிருந்தே அரசாங்கம் கடன் கொடுத்து வந்திருக்கிறது. இருந்தும் கூட மிக மிக மோசமான நிலைமைக்கு அந்த நிறுவனங்கள் வந்த பிறகு, அவைகளை அரசு எடுத்துக்கொள்கின்ற இத்தகைய அவல நிலை எதிர்காலத்தில் தவிர்க்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. இந்த சக்தி பைப்ஸ் நிறுவனம் 1969 ஆம் ஆண்டு தொட்டே மிக மிக மோசமான நிலையில் இருந்து வந்திருக்கிறது. அப்போதெல்லாம் அரசு குறைந்த அளவிலே—குறைந்த அளவிலே என்று நான் குறிப்பிட்டது லட்சக்கணக்கிலே—அவர்களுக்குக் கடன் கொடுத்து, அவர்கள் தங்களுடைய திட்டங்களை முழுமையாக நிறைவேற்ற வகை செய்ய வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் உதவியிருக்கிறது. ஆனால் தொடர்ந்து அந்த நிறுவனம் சரியாகச் செயல்படாத காரணத்தினால், 'ரிலீப் அண்டர்டேக்கிங்ஸ்' என்ற பெயரில் 1973 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 'சக்தி பைப்ஸ் லிமிடெட்' நிறுவனம் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்திருக்கிறது. 1973 ஆம் ஆண்டிக்குப் பின்னால் அது நல்ல நிலைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 1973-க்குப் பிறகு உள்ள நிலைமையை நாம் பரிசீலனை செய்து பார்த்தால்கூட, அது நல்ல நிலையில் இல்லை என்று சொல்ல வேண்டியிருக்கிறது. இதற்கு முன்னதாகவே அரசு எகப்பட்ட அளவுக்கு இந்த நிறுவனத்துக்கு நிதி உதவி செய்திருக்கிறது. அந்த நிறுவனத்தின் முக்கிய பணி பைப்புகள் தயாரிப்பதாகும்.



அவர்கள் தயாரிக்கும் பைப்புகள் தரமானவையாக இல்லை. மிக மிக மோசமான நிலையில் இருக்கின்றன. ஒரு பைப்புக்கு என்னென்ன குணங்கள் இருக்கக் கூடாது என்பதுபற்றிக் கவலைப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. இருக்கக்கூடாத குணத்தைக் கொண்ட பைப்பைத் தயாரித்திருக்கிறார்கள். அந்த பைப்புகளில் என்னென்ன குணம் இருக்கக்கூடாதோ அந்த குணம் எல்லாம் இருந்துகொண்டிருக்கின்றது. 1971-72 ஆம் ஆண்டிலே அந்த நிறுவனத்தில் தயாரிக்கப்பட்ட பைப்புகளில் 65 சதவிகித பைப்புகள் மோசமான நிலையில் இருந்திருக்கின்றன. கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"The percentage of rejects was also as high as 65 per cent"

என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு தொடர்ந்து மோசமான குழாய்களைத் தயாரித்து வந்திருக்கிறது. எப்படியாவது அந்த நிறுவனத்துக்கு உதவ வேண்டும், அதன் நிலையை மாற்ற வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் அரசு தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம், டி.டபிள்யு.எ.டி. மூலம், இந்த நிறுவனத்துக்கு முதலில் 25 லட்சம் ரூபாயும், பிறகு 40 லட்சம் ரூபாயும் கடன் கொடுத்திருக்கிறது. அவர்கள் குழாய்களை 'டிவாடு' நிறுவனத்திற்கு சப்ளை செய்யும்பொழுது, அந்தக் குழாய்க்கான விலையை முன்னர் கொடுத்த கடன் தொகையிலிருந்து குறைத்துக்கொள்ளலாம் என்ற அடிப்படையில் 8 லட்சம் ரூபாய் வசூலாகியிருக்கிறது. அதன் பிறகு 40 லட்சம் ரூபாய் கொடுத்தார்கள். அவர்கள் தேவையான பொருள்களை வாங்கி, அவற்றைப் பயன்படுத்தலாம் என்ற அடிப்படையில் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய 'ரிலீப் அண்டர்டேக்கிங்ஸ்-ஐ ஒரே காலத்தில் இரண்டு ஆண்டுக்கு எடுத்துக்கொள்ளலாமென்று இருக்கிறது. மொத்தமாக ஐந்து ஆண்டுகள் எடுத்துக்கொள்ளலாமென்று சட்டம் இருக்கிறது. ஐந்து ஆண்டுகள் எடுக்க வேண்டாம், இரண்டு ஆண்டுகளுக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று என்னுடைய கருத்தினை நான் சொல்லிக்கொள்கிறேன். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அங்கே எடுத்துக்கொள்வதற்கு ஒன்றும் இருக்காது என்ற காரணத்திற்காகவோ என்னவோ இப்பொழுதே அந்த அச்சத்தாலே எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். காலம் தாழ்த்தினால் இன்னும் மோசமாகி விடும் என்ற அச்சத்தின் காரணமாக எடுத்துக்கொண்டிருக்கிறோம். முதல் தடவை 25 லட்சம் ரூபாயும் இரண்டாவது தடவை 40 லட்சம் ரூபாயும் கொடுத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல.

"Government assistance for procuring materials was to be tried for one year from February 1971" But, the arrangement, however, continued beyond February 1972 and was ratified in September 1972 by the Government"

by the Government என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே அவர்கள் ஒரு தற்காலிக ஏற்பாடாக அந்த நிறுவனத்துக்கு உதவி செய்திருந்தாலும், தொடர்ந்து ஒரு நிரந்தரமான, பெர்மனன்டான அடிப்படையிலே அவர்கள் இருந்திருக்கிறார்கள். 1973 ஆம் ஆண்டு நாம் அதை ரிலீப் அன்டர்டேக்கிங்ஸ் என்ற அடிப்படையில் எடுத்துக்கொண்டிருக்கிறோம். 1972 ஆம் ஆண்டு வரையில் அதாவது நாம் எடுப்பதற்கு முன்னால் அந்த நிறுவனங்களுக்கு 234 லட்சம் ரூபாய் நஷ்டம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசுக்கு வந்த பிறகு, நஷ்டத்தின் அளவு 398 லட்சம் ரூபாயாக உயர்ந்திருக்கிறது. 234 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருந்த நிறுவனங்களில் 398 லட்சம் ரூபாயாக அதிகரித்திருக்கிறது. அரசு எடுத்துக்கொண்ட பிறகு, ஏறத்தாழ 1½ கோடி ரூபாய் இந்த இரண்டு ஆண்டுகளிலே நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் பார்த்தால்கூட, 1974 ஆம் ஆண்டிலே அவர்களுக்கு 70 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த 70 லட்சம் ரூபாய் எப்படி ஏற்பட்டது என்று கணக்குப் பார்த்தால், 'டெப்ரிசியேசன்' என்ற கணக்கைச் சொல்கிறார்கள். தேய்மானம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. தேய்மானத்தைக் கணக்கில் எடுத்தால், நஷ்டத் தொகையை இன்னும் அதிகமாகக் காட்டும் என்பதால்தான் நஷ்டத்தை மட்டும் காட்டியிருக்கிறார்கள். இந்த 70 லட்சம் ரூபாய் நஷ்டத்தை வெளியில் இருப்பவர்கள் பார்த்தும், நம்மை நாமே பார்த்தும் திருப்திப்பட்டுக்கொள்ளும் வகையில், சொத்துக்களுக்கு உள்ள நஷ்டம் இன்னும் காட்டப்படவில்லை. சொத்துக்களுக்கு உள்ள நஷ்டம் இன்னும் கொடுக்கப்படவில்லை. இன்னும் 72 லட்சம் ரூபாய்க்கு மேல் குழாய்கள் தேங்கிக் கிடக்கின்றன. சொத்துக்களைக் கணக்கிடும்பொழுது, இந்தக் குழாய்களையும் சொத்தாக கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்தக் குழாய்களை 'ஸ்கிராப்' ஆகத்தான் பயன்படுத்த முடியும்.

THIRU G. SWAMINATHAN: Sir, how much was realised by the selling of scrap?

**திரு. கே. எஸ். கணபதி:** இப்படி நல்ல நிலையில் இல்லாத குழாய்களை எப்படிப் பயன்படுத்தப் போகிறீர்கள் என்று நான் நிறுவனத்தின் முக்கிய அதிகாரியாக இருக்கும் ஒருவரைப் பார்த்துக் கேட்டேன். அவர்களும் அதை 'ஸ்கிராப்' ஆகப் பயன்படுத்தலாம் என்ற முறையில்தான் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது அந்த நிறுவனத்தில் புதிய முறையில் குழாய்களைத் தயாரிக்கிறார்கள். அது 'ரா மெட்டீரியல்ஸ்' என்ற வகையில் இருக்கிறது. சென்ற ஆண்டு அதன் மதிப்பு 63 லட்சம் ரூபாயாக இருந்தது.



(பிற்பகல் 4-50)

இந்த ஆண்டு அதனுடைய மதிப்பை 72,83,000 ஆக உயர்த்தியிருக்கிறோம். பயன்படாத குழாய்களுடைய மதிப்பை நாம் சில லட்சங்கள் உயர்த்தியிருக்கிறோம். அந்த அடிப்படையிலே மேலும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அவர்களால் கொடுக்கப்பட்ட அட்டவணையிலே Fixed Assets ரூ. 3,42,00,000 என்று சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலே அது மூன்று கோடியே 42 லட்சம் தானா என்று பார்த்தால், இல்லை. ஏனென்றால், நான் முன்னாலே கூறியதுபோல, தேய்மானம் ஏறத்தாழ 90 லட்ச ரூபாய் கொடுக்க வேண்டியதைக் கொடுக்காமல் வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே 3.42 லட்ச ரூபாய் 2.31 லட்சமாகக் குறைகிறது. அடுத்தபடியாக, லோன்ஸ் அண்டு அட்வான்ஸஸ் மூன்று கோடியே 32 லட்சம் ரூபாய் என்று சொல்லுகிறார்கள். அதிலேயும், ஏற்கெனவே நான் சொல்லியது போல், 72.88 லட்சம் பயன்படாத பைப்புகளாக இருப்பதால், அதுவும் 2.59 லட்சமாகக் குறைகிறது. நா கூசுகிறது—லட்சத்திலிருந்து கோடியாக மாறிவிட்டது. அந்த அடிப்படையிலே தொடர்ந்து நாம் சேர்த்து வந்த நஷ்டம் 4 கோடி ரூபாய். நம்முடைய மொத்த சொத்து என்று சொல்லப்படுவது 10¾ கோடி ரூபாய். அந்தச் சொத்திலே 4 கோடி ரூபாய் நஷ்டம். அதிலும், பயன்படாத குழாய்களை எடுத்துவிட்டு நாம் பார்த்தோமேயானால், 6 கோடி ரூபாய்க்குக்கூட நம்மிடம் சொத்து இல்லை. அந்த நிலையில், கடன்கள் என்னவென்று பார்ப்போமானால், பத்தே முக்கால் கோடிக்கு இருக்கிறது. நாம் முழுமையாக யாரை ஏமாற்றலாம், மோசடி செய்யலாம் என்று பார்த்தால், இந்த நிறுவனம் ஆரம்பித்தபோது, ஆயிரம் ஆயிரமாகக் கொடுத்தார்களே 'ஷேர் ஹோல்டர்ஸ்' அவர்களுக்குத்தான் காலணா மிஞ்சாது. அவர்கள் பெறப்போகிற பங்கு இலாபம் 'ஒன்றுமில்லை' என்றுதான் சொல்லப் போகிறோம். அந்த நிலைதான் இன்று உள்ளது. அந்த அடிப்படையிலே ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாயை நாம் இப்போது கொடுக்கப்போகிறோம். அவர்களிடமிருந்து ஒரு கோடியே ஒரு லட்சம் ரூபாய் அரசுக்கு வரவேண்டியிருக்கிறது. அதைத் தவிர, 'செக்கியூர்டு லோன், அன்செக்கியூர்டு லோன்' என்று இரண்டாகப் பிரித்துக் கணக்கிட்டுப் பார்ப்போமானால், கொடுக்க வேண்டியதுதான் அதிகமாக இருக்கிறது. யாரிடத்திலும் அதிகமாகக் கடன் வாங்கவில்லை. நாலே முக்கால் கோடி ரூபாய் செக்கியூர்டு லோன் இருக்கிறது.

Industrial Credit Investment Corporation of India Ltd.,
Industrial Credit Investment Corporation of Tamil Nadu,
Industrial Finance Corporation of India,
Industrial Development Bank of India,
Joint Stock Bank.

ஆகிய பாங்கிகளிலிருந்து இந்தப் பணத்தை வாங்கியிருக்கிறோம். ஜாயிண்ட் ஸ்டாக் பாங்கிலிருந்து வாங்கியது 11,90,000 ரூபாய்தான். அதைத் தவிர ஏற்கெனவே வட்டி கொடுக்கவில்லை. அந்த அடிப்படையிலே 86 லட்சம் ரூபாய் வட்டியாகக் கொடுக்க வேண்டும். வட்டி கொடுக்கவில்லை என்று சொன்னாலும், அசலாகக் கொடுக்க வேண்டியது ஜாயிண்ட் ஸ்டாக் பேங்கைத் தவிர மற்ற கம்பெனிகளுக்கு 3¾ கோடி. செக்கியூர்டு லோன் என்ற அளவில் சட்டப்படி அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டால், நாம் கையிலிருந்து மேலும் ஏறத்தாழ ஐந்து கோடி ரூபாய் செலவழிக்க வேண்டியிருக்கும். ஆனால் 10 கோடி ரூபாய் ஏற்படக்கூடிய நஷ்டம் எதற்கு என்றால், அங்குள்ள அத்தனை தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பு கொடுப்பதற்காக இருக்கிற ஒரே அடிப்படையில்தான். என்னைப் பொறுத்தமட்டிலே, அரசுக்கு ஒன்று சொல்வேன். இதை நாம் எடுப்பதைவிட, இந்தத் தொழிலிலே ஈடுபாடு கொண்ட சிலரை அழைத்து, அவர்கள் இதை எடுத்து நடத்துகிறார்களா என்று கேட்டு, நாம் அவர்களிடத்திலே ஒப்படைப்பதுதான் சிறந்தது. நஷ்டத்தில் ஓட ஆரம்பித்த உடனே 'ரிலீப் அன்டர்டேக்கிங்' என்ற முறையிலே அரசிடத்திலே வந்துவிடுகிறார்கள். அதற்குப் பின் 'நீங்களே எடுத்து நடத்துங்கள்' என்று சொல்லும் நிலைக்கு வந்துவிடுகிறார்கள். இதுபோன்று சிறப்பாக நடத்த முடியாதவர்களுக்கு ஊக்கம் அளிக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய விருப்பம். பணியாளர்களுக்குப் பணிப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று மனிதாபிமானத்துடன் கூடிய நல்லெண்ணம் அரசுக்கு இருப்பதால், அதைப் பயன்படுத்திக்கொண்டு இந்த அரசை முட்டாளாக ஆக்கக்கூடாது, எதிர்காலம் அப்படி அமையக்கூடாது என்பதற்காகத்தான் நான் இந்த அரசை வேண்டிக் கொள்வதெல்லாம், இந்த நிறுவனத்தை தொழில் சார்பாக உள்ளவர்களிடம் ஒப்படைத்து 'நீங்கள் நடத்துகிறீர்களா?' என்று கேட்டு, அவர்கள் ஏற்காவிட்டால், அதற்குப் பின் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். ரிலீப் அன்டர்டேக்கிங் என்ற முறையிலே ஒரு ஐ.ஏ.எஸ். ஆபிசரை மேனேஜிங் டைரக்டராகப் போட்டால், அவர் அங்கு தொடர்ந்து இருப்பாரேயானால், இரண்டு ஆண்டுகள் ஆகும் அவர் தொழில் நுணுக்கத்தைத் தெரிந்துகொள்ள. அப்படி அந்த நிறுவனத்தை எடுத்துக்கொள்ளும்போது, அங்கு ஏற்கெனவே இருக்கும் இயக்குநரையோ, வேறு யாரையோ வைத்துத்தான் தொழில் நடத்த வேண்டியிருக்கிறது. இதுவரையிலே நாம் ஏற்றுக்கொண்டு 1½ கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுத்தியிருக்கிறோம். ஆகவே இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றுமுன், இதை ஒரு ஆய்வுக் குழுவுக்கு அனுப்பி, அந்த நிறுவனம் தவறாக நடக்காமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்று அறிவுரை சொல்லும் அளவுக்கு நிலைமைகள் ஏற்படுத்தப்பட்ட பின்னர், அதை எடுத்துக்கொள்ள **வேண்டும்** என்று சொல்லி, அமைகிறேன். வணக்கம்.



* THIRU S. NARAYANASWAMY: Hon. Deputy Chairman, Sir, I am grateful for the opportunity to speak on these four Bills to nationalise four limping undertakings.

My hon. Friend Thiru Ganapathi has spoken with the fervour and the inside knowledge of a Chartered Accountant in dealing with the affairs of these four Companies and that makes my task a little easier. I am concerned with onlyy two or three matters in connection with these companies. First, I think it is very necessary, Mr. Deputy Chairman, to be very honest and frank in dealing with a matter like this. This is very definitely the outcome of mismanagement by businessmen and industrialists. I am not for a moment hiding that fact, as a member of the commerciat community. I am very sorry that four such undertakings should have been brought to the stage of having to be placed under the oxygen-cylinder and finally be taken over as relief undertakings and later sought to be nationalised. The first big casualty is the shareholders who subscribes for shares in all innocence and trusting that the statements made in the prospectus are reasonably truthful. The fact of the matter is that at least in respect of one undertaking, viz., the Southern Structurals, I have personal responsibility for getting one cheque for Rs. 10 lakhs and the one great relief that the owner of these shares gets is that he is able to wipe it out from his Wealth Statement and get corresponding relief from his Wealth Tax Declaration. He can write it down as zero to-day and he is still called upon to shell away wealth tax on about Rs. 5 lakhs. He will only get that amount of relief. I am not cynical when I say that the pitiful status of the shareholder is something like this. But I do not blame the Government for the stage to which the shareholders have been reduced. I think it would be very unfair for me to lay the blame at the door of the Government. The fact that the companies are badly managed was itself responsible for eroding the equity value of the shares and, therefore, when this came into the hands of the Government, they were buying difficulties. But, I do think, Sir, that a much better, more vigorous, more reassuring strategy could have been adopted as and when these undertakings were taken over. Instead of continuing the same thing and manufacturing the same thing, the strategy could have been changed. For instance, railway wagons were manufactured by the Southern

Structurals and what happened was that the management quarrelled with the Railway Board and orders were not forthcoming. The only thing that could have been done would be to change the strategy straightway and do some diversification. This loss of Rs. 70 lakhs or whatever it is which the Southern Structurals incurred and also the loss incurred last year which we have carried forward resulting in a total loss of Rs. 2 crores and 73 lakhs against a comparatively small capital of Rs. 1 crore means, of course, that the value of the equity share is a negative figure.

(பிற்பகல் 5-00)

Sir, I am concerned with two or three things. First and foremost is that the shareholder has been wiped out and he may not be able to get anything out of the shares and the impression goes abroad that several industries started in this State have achieved the status of a minus value for their equity shares and, therefore, the capital market is a very unsafe place in which to subscribe capital. That is the psychological impact that we make through nationalisation as the result of the way in which these undertakings have been managed both in the past and later on under the aegis of the Government.

As regards the second issue, I am rather worried about it and I know most people are not worried about it. My hon. Friend Thiru Ganapathi said that this Government were too much pressed to take over these undertakings. Suggestions have been made that these companies could have been kept as Government companies by the share capital being transferred for a nominal price to Government. None of the financial exercises would be necessary, if it is merely transferred to the Government as a Government company so that the corporate character may be maintained and the undertaking may not be taken over by payment of compensation. If that could have been done, Government need not have to go through any financial exercises at a heavy outlay at a time when we need all the money for development. In this connection, I am worried about one thing. These companies, particularly the Sakthi Pipes owes money to three or four all-India financial institutions like the ICICI, the IDBI and also the TIIC. A large number of new companies are borrowing funds from these institutions in this State. We have



promoted so many new companies with the active help, sympathy and assistance of this State Government because everybody here is interested in promoting new industries. But none of these can be promoted without foreign exchange loans or rupee-loans from all- India institutions. With the best will in the world, the Tamil Nadu Industrial Investment Corporation will not be able to command the resources to give us all the loans that we want, particularly in foreign exchange. At a time like this, under the numbrella of nationalisation policy, if these institutions are to be paid compensation of Rs. 1,91,41,000, etc., these new institutions are going to get no money at all because there is nothing spelt out in the Bill which says that these loans will be paid for when Government take over the undertakings.

The HON. THIRU S. J. SADIQ PASHA: There are both pre-take-over and post-take-over loans. Of course, post-take-over loans are to be cleared by Government.

THIRU S. NARAYANASWAMY: There is a section in the Bill which refers to "any liability arising in respect of (a) loans advanced by Central Government or a State Government or both to the undertaking together with interest thereon". This is the only one instance where we undertake to pay. There is no specific reference to institutional loans. But from the general terms in which reference is made, I hope that it means that secured institutional loans will be repaid. If that is done, this disturbing situation will not obtain.

I only state this because the Central Government, when they took over several textile mills, told the TIIC in Madras that the money due to them under the mortgage loans would not be paid to them. After representations, the Union Finance Minister has come forward with a statement that the institution is free to show it under their Reserves as an outstanding money, without any assurance that they would be paid back their mortgage loans. The result is that the TIIC which over a period of years built up a Reserve Fund in a painstaking way and, if I may say so, in a praiseworthy way is called upon to write off the entire Reserve Fund if this money is not forthcoming and, as far as I know, the Central Government have made it clear that they are not likely to pay this money to the nationalised textile mills. The TIIC

is worried about it and everyone is worried about it. Of course, Government are fully aware of the position and I do not propose to rub salt into this wound.

When once Government nationalise, they are not taking over the undertaking as a company, but they are only taking over the undertaking, viz., the properties and assets of the company and, therefore, it ceases to be a corporate unit. What about the liabilities of these corporate units in respect of these institutions, in the form of specific mortgage loans? I wish to see that these obligations are met after the undertakings ar etaken over, because future obligations have to be incurred in respect of new companies that are borrowing very massively from the financial institutions. I think the credit-worthiness of the State and the undertakings of the State must be maintained. That is one point I want to make.

Sir, I fully appreciate the zeal with which the Government want to take over these undertakings. But I would like the Government to consult their Accounts wing and I am sure they would say that if the money that has been paid as compensation already as per the Balance Sheet and about which my hon. Friend Thiru Ganapathi made a pertinent reference today, had been given to the Life Insurance Corporation and if they had been asked to issue annuities from out of that money, we could have paid the entire salaries of the persons who are working in these factories as annuities while they are sitting in heir homes, In America they have a system called "feather-bedding". This happened in America when the dieselisation of the railways took place and the people stroking coal for the locomotives had to be sent home as the coal-locomotives were abolished. They insisted that under the trade-union arrangements they should be paid their full salary. The Government undertook to pay them their full salary and sent them home and adopted the "feather-bedding" programme. I was wondering wheher following such a programme would be easier and cheaper for the Government instead of resorting to a permanent arrangement and still working the undertakings at a loss. It is my opinion that the Government Officers who may be asked to run these undertakings would require a minimum of 2 or 3 years to come to a stage where they



would at least be able to operate the undertakings better; and this too can happen only if the officers are not transferred in the middle. I have been pleading that the appointment of the Chairman of the Electricity Board should be for a seven-year period to enable him to understand his problems for two years and to operate efficiently for five years thereafter, but nothing has happened. Now, in regard to these undertakings, I would suggest that it may be examined whether the money could be handed over to the Life Insurance Corporation of India who can create an annuity. When the worker is sent home, whatever is due to him may be paid to him in the form of a pension scheme. That will be cheaper for the Government. These machines, plant and machinery could be sold to somebody else who can operate the undertaking on a different and commercial basis. We are paying only a small amount and we are getting them at a cheap price because to put up Sakthi Pipes alone would cost about Rs. 9 crores today. I want my hon. Friends who think that we are paying a high price from the Government to remember one thing. To put up these Sakthi Pipes today will cost exactly Rs. 9 crores. It is not for me to say whether it is a loss or gain to the Government in the present take-over. I am not dealing with the market, I am not dealing with the revenue and I am not dealing with cash-flow. I am dealing with only one thing: The capital cost of a thing like that is high and the Government are also aware of that. It is a valuable asset. What is important is that we should be able to operate these assets gainfully for the Exchequer. Otherwise, we will be taking over not only a doubtful undertainkg but an assured annual liability on the part of this Government through the loss that the Government would have to incur by paying wages to people in order to keep them employed. That is the true and legitimate object of this take-over. But that is not the sole object. The Government will have to pay all those amounts through the nose. My hon. Friend Thiru Damodaran has moved a motion and I think it will be unfair to take the time of the House, since others might speak on this. Why should this not be referred to a Select Committee so that some of us may have sufficient time to examine it in some detail and give some little advice? Maybe our advice is not very valuable. When four

undertakings are being taken over, it would be possible for us to bring a more leisurely mind to bear on the various problems connected with the nationalisation. I, therefore, fully support the **motion of Thiru Damodaran that this Bill may be referred to a Select Committee.**

*(மாற்றுத் தலைவர் திரு. எஸ். நாராயணசாமி தலைமை)*

*(பிற்பகல் 5-10)*

**திரு. வி. வெங்கா :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன் வைக்கப்பட்டிருக்கக்கூடிய சக்தி பைப் நிறுவனத்தை அரசுடைமையாக்குவது என்ற அரசினுடைய இந்தச் சட்ட முன்வடிவை நான் மனமார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக இந்த நாட்டினுடைய தொழிலாளர்கள் அவல நிலைக்கு உள்ளாகக் கூடாது, அவர்களுடைய வாழ்விலே நிம்மதி ஏற்பட வேண்டும் என்ற அடிப்படையிலே ஏற்பட்ட ஒரு கருத்தின் விளைவாக, இதுபோன்ற இந்த சக்தி பைப் நிறுவனத்தையும் ஏனைய சிலபல நிறுவனங்களையும் இன்றையதினம் அரசுடைமையாக்குவது என்று அரசு முன்வந்திருப்பது கண்டு நான் மெத்தவும் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த நிறுவனம், செங்கற்பட்டு மாவட்டத்திலே, என்னுடைய தொகுதியிலே கும்மிடிப் பூண்டி என்னுமிடத்தில் இருக்கக்கூடிய நிறுவனம். அங்கே இருக்கக்கூடிய மக்கள், அது பிற்பட்ட பகுதியாக இருக்கின்ற காரணத்தாலும், நம்முடைய தமிழ் மாநிலத்தின் வடகோடி எல்லையிலே இருக்கின்ற காரணத்தினாலும், வேலை வாய்ப்பின்றி மிகவும் அவதியுறக்கூடிய நிலைமையிலே இருக்கின்றார்கள். ஏற்கெனவே இழிந்த நிலையிலே இருக்கக்கூடிய அந்தத் தொழிலாளர்கள் இந்தத் தொழில் நிறுவனம் மூடுவதன் காரணமாக மேலும் கஷ்டத்திற்கு ஆளாகக் கூடாது என்ற எண்ணத்திலே, இந்தச் சட்ட முன்வடிவு வந்திருப்பது கண்டு, நான் மெத்தவும் மகிழ்ச்சியுடன் இதை வரவேற்கிறேன். அப்படி வரவேற்கின்ற நேரத்திலே, ஒவ்வொரு ஆலைக்கும் இதுபோன்று தனித்தனியாகச் சட்ட முன் வடிவு கொண்டு வரவேண்டுமா, அதற்குத் தேவை என்ன என்ற விளக்கத்தையும் அமைச்சர் அவர்களிடத்திலேயிருந்து பெற விரும்புகின்றேன். இவ்வாறு நாட்டுடைமையாக்கும்போது, இதற்கென்று பொதுவாக கூரு 'லெஜிஸ்லேஷனை', சட்ட மன்றமும், மேலவையும்,—நாட்டிலே ஏற்படக்கூடிய நிர்வாகத் திறமையின்மையின் காரணமாக, அல்லது நஷ்டத்திலே இருக்கக்கூடிய நிறுவனங்கள் அனைத்தையும் அரசே ஏற்றுக்கொண்டு அவற்றை லாபகரமாக நடத்தக்கூடிய அளவுக்கு, கொண்டு வந்தால், மற்ற நிறுவனங்களை இம்மாதிரி நாட்டுடைமை





யாக்க வேண்டிய தேவை ஏற்படும்போது, அவற்றை ஒரு 'நோட்டிபிக்கேஷன் மூலமாகக்கூட நாம் கையகப்படுத்த வாய்ப்பு இருக்கும் என்று நான் கருதுகின்றேன். அந்த அளவுக்கு ஏற்கெனவே இந்தச் சட்ட முன்வடிவை நாம் கொண்டு வந்திருக்க வேண்டும். இந்த நிறுவனம் நேற்றைக்கோ, முந்தா நாளைக்கோ ஆரம்பிக்கப்பட்டு உடனடியாக அது நஷ்டத்தில் ஓடுகிறது என்ற நிலைமை இல்லை. அங்கு வேலை செய்கிற சற்றொப்ப 500-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இந்த நிறுவனம் தற்போதுதான் இந்த நிலைமைக்கு ஆளாகியிருக்கிறது என்று சொன்னால், எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? இது 1960 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட நிறுவனம். அதை ஏற்று நடத்தியவர்களின் திறமையின்மை காரணமாக இந்த நிலைமைக்கு வந்திருக்கிறது என்று நான் சொல்லமாட்டேன். அதை ஏற்று நடத்துகின்றவர்கள் பல்வேறு நிறுவனங்களோடு தொடர்புடையவர்கள். இது சரியாக நடக்காததற்கு என்ன காரணம் என்று பார்க்க வேண்டும். 1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அந்த நாளிலேயிருந்து தொடர்ந்து நஷ்டத்தில் இருக்கிறது. முந்திய அரசிடமிருந்து பெற்றுவந்த சலுகைகளை இந்த அரசிடமிருந்தும் பெற முனைந்திருக்கிறார்கள். டெக்னிக்கல் ரீதியாக அங்கே உற்பத்தியாகிற குழாய்கள் உபயோகப்படுத்த லாயக்கற்றவை என்று கூறப்படுகிறது. அதற்குக் கிடைத்த டெக்னிக்கல் ஆலோசனையையும் ஏற்க மறுத்துவிட்டார்கள். இன்றைக்கு அதற்கு 2 கோடி ரூபாய் நஷ்டஈடாகக் கொடுக்கப்போகிறோம். 1969 ஆம் ஆண்டிலே இருந்து இதுவரையில் அந்த நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதை எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் இது லாபகரமாக இயங்காது என்று கைவிட்டுவிட்டார்கள். கைவிட்டும், இதுவரையிலும் அவர்கள் நடத்தியதற்குக் காரணம் என்னவென்றால், "நடத்தினால் அரசிடமிருந்து சலுகைகள் பெற முடியும்" என்று எதிர்பார்த்துத்தான். அவர்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, கறந்த அளவுக்குக் கறப்போம் என்று கறக்கிறார்கள். ஏழை மக்களால் செலுத்தப்பட்ட வரிப் பணத்தை அந்தத் தனிப்பட்டவர்கள் கறந்திருக்கிறார்கள். இன்றைக்கு இரண்டு கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டஈடாகக் கொடுக்கப்போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் அதற்கு உதவியாகக் கொடுத்த தொகையை, அதாவது முக்கால் கோடி ரூபாயை, 'ரைட் ஆஃப்' செய்திருக்கின்றார்கள். அதை 'ரைட் ஆப்' செய்யாமல் அந்த நிறுவனத்திற்குக் கொடுக்க இருக்கும் நிதியிலே சேர்த்துக் கணக்கிட வேண்டும். அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது, இதோடு மட்டும் போய்விடவில்லை, அவர்கள் ஏற்றுக்கொண்ட பிறகு, அவர்கள் வேறு நிறுவனங்களுக்கும் கடன்பட்டிருக்கின்றார்கள், அதையெல்லாம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அப்படிச் செய்வதன் மூலம், இரண்டு-

மூன்று கோடி ரூபாய் என்று இல்லாமல், ஏழு-எட்டு கோடி ரூபாய் அளவுக்கு தமிழகத்திற்கு இழப்பு ஏற்படப் போகிறது என்று பார்க்கின்றபோது, அது தனிப்பட்ட ஒரு நிறுவனத்திற்கு வேண்டுமென்றே சலுகை காட்ட வேண்டுமென்று வந்திருக்கிறதா என்று ஐயுற வேண்டியிருக்கிறது. தமிழக அரசு எதிலும் முற்போக்கான அரசு என்று சொல்கிறார்கள். எதற்கெடுத்தாலும், மத்திய அரசுக்கேகூட நாங்கள்தான் வழிகாட்டுகின்றோம் என்று சொல்கிறார்கள். எல்லா மாநிலங்களிலும் எங்களைப் பார்த்துத்தான் எல்லாம் நடந்துகொண்டு வருகின்றன என்று சொல்கின்றார்கள். இப்படி எல்லா வழிகளிலும் முன்னோடியாக, முற்போக்காக இருக்கக்கூடிய அரசிலே நானும் அங்கமாக இருக்கின்றேன் என்று நினைக்கும்போது பெருமைப்படுகிறேன். 25-வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்திற்குப் பிறகு, ஆர்ட்டிக்கிள் 31 திருத்தத்திற்குப் பிறகு, நஷ்ட ஈட்டுத் தொகையை முழுவதுமாகக் கொடுக்க வேண்டியதில்லை, அதுவும் பணமாகக் கொடுக்க வேண்டாம், 'பாண்ட்'-ஆகக் கொடுத்தால் போதும், மேலும் அரசு நினைக்கக்கூடிய அளவுக்குக் கொடுத்தால் போதும், அதைப்பற்றி எந்த நீதி மன்றங்களிலேயும் 'சேலஞ்சு' பண்ண முடியாது என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, நாம் இப்போது ஏன் இந்த இரண்டு கோடி ரூபாயைக் கொடுக்க வேண்டும் என்ற கேள்வியைக் கேட்கின்றேன். நேற்றைய தினம் சட்ட மன்றப் பேரவையிலே இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. நிறைவேற்றப்பட்டதற்குப் பிறகு நான் பஸ்ஸிலே பிரயாணம் செய்யக்கூடிய நேரத்திலே, இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருப்பது தொழிலாளர்கள் நலனைப் பாதுகாப்பதற்கு மட்டுமல்ல, அந்த முதலாளியை ஊக்குவிக்கவும் என்று பேசப்பட்டது. அதிலும் இந்த ஆண்டு . . .

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** முதலாளியைப் பாதுகாக்க வேண்டும் என்பது முக்கியமானது அல்ல. 'நேஷனலைஷேசன்' கொள்கையை நிறைவேற்றும் ஏற்பாடுகள், அதன் நிமித்தம்தான் இந்த நடவடிக்கைகள். தனிப்பட்ட முறையிலே யாருடைய நன்மைக்கும் கொண்டுவரவில்லை. சும்மா பஸ்ஸிலே போனேன், சொன்னார்கள் என்பது சரியல்ல. மொத்தமாக காம்பன்சேஷன் கேட்டிருக்கிறார்கள். எடுக்க வேண்டிய நடவடிக்கையை, சரியாகத்தான் எடுத்திருக்கிறோம்.

*(மாற்றுத் தலைவர் திரு. சித்ரா நாராயணசாமி தலைமை)*

*(பிற்பகல் 5-20)*

**திரு. வி. வெங்கா :** நான் சொல்வது எல்லாம் அவர்கள் சொன்னார்கள் என்பதற்காக அல்ல. பொதுமக்கள் சொல்வதெல்லாம் கருத்தாக இருக்க முடியாது. என்னுடைய கருத்து மத்திய அரசு கொடுத்திருக்கிறதா என்பது





பற்றித்தான். 25-வது அமெண்ட்மெண்டு வருவதற்கு முன்னாலே கொடுத்திருக்கிறார்கள். 25-வது அமெண்ட்மெண்டு வந்த பிறகு, ரொக்கமாக அவர்கள் கொடுத்திருக்கின்றார்களா என்பதைத்தான் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். 25-வது அமெண்ட்மெண்டு வந்த பிறகு, ஆர்ட்டிகிள் 31 திருத்தப்பட்ட பிறகு, குறிப்பிட்ட நாமினல் தொகையைக் கொடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் டெப்பிரிஸியேஷனைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாததுபற்றியும், அங்கே இருக்கக்கூடிய லாயக்கற்ற பொருள்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, 2 கோடி ரூபாய் அளவுக்குக் கொடுப்பதைப் பற்றி சொன்னார்கள். இரண்டு கோடி ரூபாய் அளவுக்கு சக்தி நிறுவனத்திற்குக் கொடுப்பதால், அவர்கள் அதைப்பற்றி அப்படிப் பேசுவதில் ஒரு உண்மையிருக்கிறது. நானும் முதலாளியை 'சப்போர்ட்' செய்வதற்காகக் கொடுப்பதாக நினைக்க வேண்டியிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். இது உள்ளபடியே தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை-என்று இருந்தபோதிலும், இந்த அரசு முதலாளியையும் காப்பாற்றுவதற்காக இச்சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டது என்று சொல்லிக்கொள்கிறேன். என்றாலும் இந்தத் தீர்மானத்தை நான் மனமார வரவேற்கிறேன். இந்த நிறுவனத்தை அரசு எடுத்த பிறகு, மேலும் தவறுகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்போது இந்த நிறுவனம் வளர்ச்சிக்கு வாய்ப்பில்லாத நிலையில் இருக்கிறது. வேறு பல மெசினரிகளை வைத்துக்கொண்டு வேறுவிதமான சாதனங்களை உற்பத்தி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள, அரசு ஏற்றுக்கொண்ட பிறகாவது அதற்கேற்ற திட்டங்களை வகுத்துக்கொள்ள வேண்டும். மேலும் ஒரு 500 அல்லது ஆயிரம் அல்லது ஆயிரத்து ஐநூறு பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டிய முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தைக் கூறி அமைகிறேன். வணக்கம்.

* THIRU A. R. DAMODARAN : Mr. Vice-Chairman, Sir, this is a very important Bill and probably the first of its kind that is being placed before this House because while we have taken some of these Undertakings under the Tamil Nadu Relief Undertakings (Special Provisions) Act of 1969, this is probably the first time that we are introducing a Bill for the acquisition of an Undertaking which has been previously taken over under the Relief Undertakings Act. Therefore, Sir, when we consider this matter, we think that the Government would have been

well-advised to avoid unnecessary criticism which is bound to be made either knowingly or unknowingly about the provisions of this Bill, by referring this Bill to a Select Committee of Members both from the Lower House and from the Upper House and thereby being given an pportunity to clarify various doubs which cannot obviously be clarified in a debate of this nature. I would first like to preface my remarks by stating that I am indeed sorry that four such important Bills should have been circulated to the Members of this House, without the elementary courtesy having been observed of circulating the Financial Accounts of these four Companies for the latest accounting period 1974-75. My hon. Friend Thiru Ganapathi who is a Member of the Public Undertakings Committee, when I met him yesterday, was desperately in search of the Balance Sheets of these four Companies. When we refer to clause 6 of these Bills, we find that Rs. 1,95,64,000 will be paid to the Sakthi Pipes, Rs. 1000 will be paid to the Southern Structurals, Rs. 1,01,50,000 will be paid to the Textool Company and Rs. 32,49,000 will be paid to the Lasco Steels Limited. Obviously these figures have no meaning whatsoever, unless we are able to determine from the Balance Sheets that have been published what the assets and liabilities of these concerns are, what the cumulative losses are as per the published accounts and what the losses are which are not included in the Profit and Loss Account. All these details and other interest charges, credits, etc., from which the financial position of a Company can be judged are necessary. In foreign countries, the question of taking over of another concern is nothing new and that is called "Merger". When a Company takes over another Company, at least, the elementary precaution, I think, would be observed by the Board of Directors and by the Shareholders also of going through the accounts of such Companies for finding out what the net worth of those Companies is, before hey agree to pay any amount whether you call it an amount or compensation. After the amendment of Article 31 (2) of the Constitution, we should not say 'compensation' and we should say 'amount'. We are the representatives of shareholders, the public and if we pass these Bills in sucr a hurry, I honestly feel that we are not fulfilling the purpose for which we are elected nor are we earning the salary that we are paid. I honestly believe that a reference to a Select Committee is absolutely essential, because we find that not only what has been stated in these Bills, namely, money to the extent of about Rs. 3 crores is goign to be immediately deposited with the Commissioner for Claims but innumerable crores are going to be bank into these four concerns, obviously because we have alredy sunk some money in these concerns. We know the peculiar way in which we collect trade debts. If we give a loan of Rs. 2,000 to a person with a car, by way of supply of petrol and if he does not pay it within a month, we give him further supplies and we keep on giving credit in the hope that some debt at least will be realised. These are four such concerns where public funds are going to be massively invested and, in my opinion, with no possibility of any return for the next 10 years. The reason why I say that is this. Referring to the financial accounts of the Sakthi Pipes alone, I am not going into the question whether the amount paid is adequate or inadequate, whether it will cover the shareholders' capital; certainly it will not cover the shareholders' capital. No shareholder is going to get any money. The question arises with regard to the priorities given in the settlement of claims, to which you, Mr. Vice-Chairman, have also referred in your speech and the various liabilities will be settled by the Commissioner for Claims. Certain very vague mention has been made and as Friends have pointed out, we have no clear ideas and it should have been placed before the Members of this House as to what are the liabilities that have been incurred in the post-take-over of management period because, in category I —the settlement of claims, it has been clearly mentioned that out of the amount of Rs. 1.95 lakhs which is being paid to this concern, the claims will be settled according to the categories mentioned. Category 1 mentions loans advanced by a Bank loans advanced by an institution other than a Bank and any other loan. All these loans have been incurred after the Government took over the concern on 19th December 1972. This is quite justified because the Government would have give a guarantee and nobody would have been prepared to advance any money if the Government did not give the guarantee. Since these loans have been incurred by reason of the

Government guarantee, after take-over, it is but proper that namely, Part B, mentions the loans taken during the pre-take these loans should be settled first of all. The second part, over of management period and htere are categories III, IV and V. I do not know when the position will be reached when these loans are likely to be cleared. I have not been able to gather from this Bill the scope of clause 5 which clearly says that every liability, other than the liability specified in sub-section (2) of clause 5. of the owner of hte undertaking in respect of any period prior to the appointed day, shall be the liability of such owner and shall be enforceable against him and not against the Government or the Goverunment Company. The only two liabilities that appear to have been taken over by the new Government undertaking are (1) the loans advanced by the Central Government, or a State Government, or both, to the undertaking together with interest due thereon after the date of management, and (2) wages, salaries, etc., etc., of employees of the undertaking. I have a doubt, Sir, whether this liability under sub-clause (2) is going to be settled from out of this Rs. 1.95 lakhs that is being paid or whether this is a claim that is going to be treated separately, apart from the said Rs. 1.95 lakhs that is being paid to the former owner of the concern. There are a number of such doubts which, obviously, I cannot get clarified in a debate of this nature, because in the Hon. Minister's reply, perhaps, he may not have time to deal with some of these points. The criticism that is likely to be levelled—and I am not for a moment stating that it is true—is the criticism that was voiced by one hon. Member of this House, when he said that people would star ttalking as if this sum of Rs. 1.95 lakhs had gone

(பிற்பகல் 5-30)

into the pockets of 100 people while it was far from it. The only pockets that are likely to be filled are the pockets of the Central and State Governments which have possibly advanced loans and the pockets of big financial institutions which are mostly Government-owned and nationalised Banks and Scheduled Banks and even they will not receive more than six annas or seven annas in the rupee in accordance with the category and



priority that have been made. Therefore, to say that it is likely to go into the pockets of any particular industrialist or any cases of shareholders is not justified. But the Government must prove to the public that it is not justified, not by making statements but by having a Select Committee and meeting all members of the political parties and giving them the true facts of the case and the true nature of the transaction. It is only with this view that I have asked for the reference of the Bills to a Select Committee, because I have a feeling that this is likely to be a model Act and it may be applied in future in view of the recurring nature of the sickness that seems to come over our industries, especially during the recent past due to credit squeeze and over-capitalisation, and possibly due to inefficient management also. So many factors may be responsible for the break-up of a concern; but at the same time, I would like the Government to consider my request, in view of the fact that vast sums of money are going to be put in not only for the purpose of settlement of these loans but also for the purpose of reviving these concerns. I certainly feel that it is absolutely essential that all htese four Bills should be referred to a Select Committee. There is no particular urgency that I am aware of. Possibly the Government have reasons for certain urgency which we are not aware of, when the Government are already in management of these companies, as you said; and a rider could also be put saying that the Select Committee should report within six weeks or two months, as this is not going to take much time. This being a model Bill for the future, I feel that sufficient safeguards should be taken to ensure that the public are assured that there is no possible wastage in such take-overs and that the intention of the Government is sincere in seeking that these companies are resurrected. The accounts statements of the Sakthi Pipes, Southern Structurals and the Textool—I do not have the accounts statement of Lasco—were given to us only this morning at 11 O'clock. The cumulative loss, taking into account the depreciation that has not been added to the Profit and Loss Account in the Sakthi Pipes is Rs. 8 crores for all these four concerns. Can the Hon. Minister tell me, Sir, when he hopes to earn sufficient profit to clear off the backlog of losses that are found in these concerns? Then, what is the

real purpose of taking over these industrial undertakings? I would like to go into the basic question itself. They are mentioned in Relief Undertakings Act and it was provided at a time when one sector of the industrial economy was considered to be the paramount kings of our nation, that is, the workers in our industries and factories. It was said that crores of rupees should be spent merely to safeguard the occupation and the emoluments of these persons who were working in the factories I should not be considered anti-labour when I point out that when the Government take over these concerns, I can understand settlement of all past liabilities but for Government to assume future liabilities for a period of ten to fifteen years by investing vast sums of money under the mistaken impression that such companies can ever be made into profitable organisaitons and that all this backlog of loans could be wiped out is, I think, a very ambitious idea. It would also be a reflection on the diversion of scarce resources to sectors which do not have that priority. For example, if during 1976–77, the Hon. Minister says that five crores of rupees will have to be given to these four concerns for rehabilitation, purchase of new machinery, etc.—because obviously rehabilitation will mean fresh capital-investment, may I ask him whether this amount is not being diverted from more essential sectors where money is actively required? The Hon. the Minister for Health will require it for hospitals and the Hon. the Minister for Education will require it for schools and colleges and the diversion of such funds for such purposes is likely to create a certain amount of strain on State resources which, I think, the Members of this House are also concerned with. Therefore, Sir, I would request the Hon. Minister to consider this. I will not go into all the accounts details as my hon. Friend Thiru Ganapathi has given an excellena summary of what the position of one of these concerns is. I would only like to state that if it is a question of protecting the 800 or 1,000 workers in such companies,——we all know that bigger industrial companies have been ruined because of Government's insistence that they should take back 15 workers or 14 workers—then discipline is vitally necessary in these concerns. Definitely there has been a change in the climate of opinion over the past four months and Governments are more firm and are insisting that irrespective of emoluments, bonus, wages, etc., discipline on



the shop-floor is of vital importance. We cannot have managers of industrial concerns being ghareoed or beaten with cycle-chains if you expect production to take place as has happened in other cases. I would like even at this moment to caution Government that if they want to run these concerns, the trouble-makers in these concerns should be got rid of. I do not know if there have been labour troubles, but if there have been such troubles, then I think Government should not take the added responsibility of keeping these trouble-makers in these concerns who will go all out to see, irrespective of whether it is a Government concern with public shareholders' money, that trouble is created and it is possible that attempts would be made to sabotage the entire working of these concerns.

I commend the motion that has been moved by my hon. Friend Thiru Ganapathi and urge the Government, with the best of intentions to accept it. We have no intention of delaying, or finding fault, or merely criticising for the sake of political advantages. We sincerely believe that when it comes to a question of investing $3\frac{1}{4}$ crores of rupees and spending possibly another Rs. 5 to 6 crores in rehabilitating these concerns, Government should observe the elementary precaution of seeking the views of Members of all political parties and of Members of both the Houses and I commend this motion for the acceptance of the Members of this House.

THIRU G. VASANTHA PAI: Mr. Vice-Chairman, I thank you for the opportunity that you have given me to speak on these four Bills. Sir, I am in the happy position of not having gone through any of these Bills, because this morning I left my house at 7 a.m. and I have not seen any of these Bills which ought to have been circulated to us yesterday. But, Sir, from the discussion which has taken place in the House, I would like to make some small submissions.

Sir, the first thing is about the Sakthi Pipes Ltd. From the reading of the balance sheet by the hon. Member Thiru Ganapathi, I feel there is neither energy nor pipes in it because 'Sakthi' means some energy and if the pipes are also hollow, I think it is a very hollow venture that the Government are embarking upon. I would say in this connection that I do not know about the position of all these companies. But I do agree with the hon. Members

[Thiru G. Vasantha Pai] [1975 நவம்பர் 7

Thiruvalargal Damodaran and Ganapathi that this matter ought to be referred to a Select Committee and the opinion of all shades in the House as well as outside should be elicited before the Government embark on a venture to have these undertakings taken over, which on the face of them have incurred a loss and also have a mortgage liability to the tune of several crores of rupees which it is very hard for the Government now to take and try to improve at the present juncture..

(பிற்பகல் 5.40)

Sir, I would like to say that during the last Budget Session when I said that the Government servants must be given dearness allowance, the Hon. the Chief Minister said it would involve nearly Rs. 80 crores for the State. But I feel, Sir, that the first instalment could be given, from the amount that is going to be paid to these concerns, to the employees of the State Government who could put in better work in abundant measure. Instead of sinking this money down the drain and throwing it into these companies, I would venture to submit that the Government should really dissuade themselves from taking over these concerns and refer the matter to a Select Committee and elicit public opinion before such a venture is embarked upon.

Thank you, Mr. Vice-Chairman, for this opportunity.

* திரு. கே. ராஜாராம்: மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அவையின்முன் கடந்த சில வருடங்களுக்குள் வைக்கப்பட்ட எந்த ஒரு மசோதாவும் இன்று இந்த அவையின் உறுப்பினர்களால் சுட்டிக்காண்பிக்கிறபடி, அல்லது குறைகள் சொல்லுகிறபடி, இருந்தது இல்லை. இன்றுதான் இவ்வளவு குறைகள் சொல்லும் படியாக, ஒன்றல்ல, இரண்டல்ல, நான்கு மசோதாக்கள் வந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்குமுன் எந்த ஒரு மசோதாவும் எல்லாக் கட்சியினராலும் குறை சொல்லக்கூடிய அளவுக்கு இருந்ததில்லை. மக்கள் வரிப் பணத்தைக் கொண்டு சில நிறுவனங்களை நாம் கையகப்படுத்தும்போது, அதனால் எவ்வளவு லாபம் வருகிறது, அல்லது கூடிய சீக்கிரத்தில் அந்த நிலைமையை மாற்றி லாபம் பெறும்படி செய்ய என்ன வாய்ப்பு இருக்கிறது, இதை எப்படி நாம் செய்யப் போகிறோம், என்பதைப்பற்றியெல்லாம் உறுப்பினர்கள் தெரிந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். உறுப்பினர்களுக்கும் அரசாங்கம் எடுத்துச்



1975 நவம்பர் 7] [திரு. கே. ராஜாராம்]

சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது. இரண்டு தினங்களுக்கு முன்னரே இந்த நிறுவனங்களைப்பற்றிய விவரங்கள் எங்களுக்குக் கிடைக்கும்படி செய்திருக்க வேண்டும்.

சாதாரணமாக மின்சாரக் கட்டணத்தை ஒரு பைசா ஏற்றினால்கூட, உடனே ஒரு பெரிய கிளர்ச்சியே தமிழ் நாட்டில் ஏற்படுகிறது. வருமானத்தை சில லட்சங்கள் அதிகப்படுத்துவதற்குக்கூட அரசாங்கத்திற்கு எதிர்ப்புகள் ஏற்படுகின்றன. அந்த வகையிலே கஷ்டப்பட்டு வருமானத்தைப் பெருக்கு கிறோம். இவ்வளவு சிரமப்பட்டுப் பெருக்கும் வருமானத்தைப் பயன்படுத்தி, இந்த நிறுவனங்களைக் கையகப்படுத்துகிறோம். அப்படிச் செய்வதில் தவறு இல்லை. அந்த நிறுவனங்கள் லாபகரமாக ஓடுகின்றன அல்லது ஓடவில்லை என்றாலும், இனிமேல் லாபகரமாக ஓடத்தக்க நிலையை உண்டுபண்ண வாய்ப்பு இருக்கிறது என்று உறுப்பினர்களை 'கன்வின்ஸ்' பண்ண வேண்டியது அரசாங் கத்தின் கடமை.

அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லுவார்கள், நாம் 'நோட்ஸ்' எடுத்துக் கொள்ளலாம் என்றுகூடத் தயாராக இருந்தேன். பொதுவாக மசோதாக்களைப் பிரேரேபித்துவிட்டு எந்த விவரமும் சொல்லாமலிருப்பது வருந்தத்தக்க விஷயம். அவர்கள் தரும் விளக்கங்கள்தான் சரியாக இருக்க முடியும். வேறு விளக்கங்கள் எல்லாம் சரியாக இருக்க முடியாது. இங்கு உறுப்பினர்கள்கூட ஏதோ லைப்ரரியிலிருந்து விவரங்களைச் சேகரித்துப் பேசினார்கள் என்றால், நிச்சயமாக அந்த விவரங்கள் சரியாக இருக்க முடியாது. அதில் தவறுகள் ஏற்படத்தான் செய்யும்.

திரு. கே. எஸ். கணபதி: லைப்ரரியிலிருந்து விவரங்கள் தயாரித்து நான் பேசவில்லை. அந்த நிறுவனத்தால் ஆண்டுக் கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கணக்கை வைத்துத்தான் பேசினேன். வேறு வழியில் பேசவில்லை.

திரு. கே. ராஜாராம்: அமைச்சர் அவர்கள் சட்ட மன்ற உறுப்பினர் களுக்குத் தகவல் கொடுக்க வேண்டாம் என்று சொல்லுகிறாரா என்று நான் கேட்கிறேன். சரியான தகவலை நாம் அரசாங்கத்திடமிருந்துதான் பெற்றுக் கொள்ள முடியும். அவர்கள் கொடுக்கும் தகவல்கள்தான் சரியாக இருக்க முடியும் என்று நான் நினைக்கிறேன். அது இல்லாமல், ஏதோ சில ரிக்கார்டுகளி லிருந்து உறுப்பினர்கள் சேகரித்துப் பேசுவது அவ்வளவு சரியாக இருக்காது. அவர்களுக்குப் புரிந்திருக்கலாம். நான் நம்ப வேண்டுமென்றால், அது அரசாங்கம் கொடுக்கும் புள்ளிவிவரங்களால்தான் முடியும்,

சக்தி பைப்ஸுக்கு ஒரு கோடியே 5 லட்சத்து 64 ஆயிரம் ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அதுபோக அசெட்ஸ் அண்டு லயபிலிடிஸை நாம் எடுத்துக்கொள்ளப் போகிறோம். அதனிடத்திலே என்னென்ன சொத்துக்கள் இருக்கின்றனவோ, என்னென்ன அந்தக் கம்பெனிக்கு வரவேண்டியிருக்கிறதோ அவைகளையெல்லாம் நாம் எடுத்துக்கொள்ளப் போகிறோம். கொடுக்க வேண்டிய கடனையும் நாம் கொடுக்கப் போகிறோம். அது முக்கிய விஷயம். 19—12—1972 லிருந்து கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளாக ரிலிப் இண்டஸ்ட்ரியாக அரசாங்கம் சொந்த மானேஜ்மெண்டில் நடத்தி வந்ததில் எவ்வளவு லாபம் வந்திருக்கிறது, என்ன நிலவரம் என்று தெரியவில்லை. அதேபோன்று, சதர்ன் ஸ்ட்ரக்சுரல்சுக்கு ஆயிரம் ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அதிலே லயபிலிடியைக் காட்டிலும் அசெட்ஸ் அதிகமாக இல்லை என்று அர்த்தமா? அசெட்ஸ் அதிகமாக இருக்கிறது என்று நாம் ரூபாய் கொடுக்கிறோமா? அப்படிக் கொடுத்தால், அது நியாயமாக இருக்கும். அப்படித்தான் நாம் நினைக்க வேண்டியிருக்கிறது. ஆகவே அதுபற்றி விவரங்கள் கொடுத்திருந்தால், நன்றாக இருந்திருக்கும்.

அடுத்து, 'லாஸ்கோ ஸ்டீல்ஸ்' 23—7—71 லிருந்து 4 வருடம் 4 மாதம் நமது மேற்பார்வையில் நடந்திருக்கிறது. அதற்கு 32,49,000 ரூபாய் நஷ்டஈடு கொடுக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. கம்பெனிகளைப் பொறுத்த அளவிலே, இது தேவையா என்று நாம் கேட்கும் அளவில் இல்லை. ஆனால், பொது மக்கள் பணத்தைக் கொண்டு போடுவது என்று சொன்னால், அது லாபகரமாக நடக்கிறதா, இனிமேலும் லாபகரமாக நடக்குமா என்பதைப் புரிந்துகொண்டு செய்வது நலம். அதை எங்களுக்குத் தெரிவிக்க அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது. நாமும் அறிந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏனென்றால் அரசாங்கம் ஏற்கெனவே சொன்னதைத்தான் இப்போது நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். நாம் 'எலக்ட்ரிசிடி' concern— ஐ எடுத்துக்கொள்ளும் போது, அந்த மசோதாவைப்பற்றி அமைச்சர் அவர்கள் விவரங்களைச் சொல்லும் போது, அதனுடைய சொத்துக்கள் என்ன, அதில் இருக்கிற சாமான்களின் மதிப்பு என்ன, நாம் எவ்வளவு கொடுக்கப்போகிறோம் என்ற விவரத்தைச் சொன்னார்கள். ஆனால் இப்போது அப்படி இல்லை. இது, அரசாங்கமே ஏற்படுத்தியிருக்கிற கொள்கைக்கு மாறுபட்ட கொள்கையாகத் தெரிகிறது. இந்த எலக்ட்ரிசிடி கன்சர்ன் கையகப்படுத்தப்பட்டு, அந்த நிறுவனம் நல்ல லாபத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. அப்படியிருந்தும் அந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி, இரண்டு மூன்று மாதங்கள் தாமதப்படுத்தி, பரிசீலித்து அதன் பிறகுதான் எடுத்துக்கொண்டோம், ஆகையால்



இதை அவசரப்பட்டுச் செய்ய வேண்டியதில்லை. செலக்ட் கமிட்டிக்கு அனுப்பியிருக்கலாம். அடுத்தபடியாக, இந்த சக்தி பைப்ஸ் நிறுவனத்தைப் பொறுத்தவரையிலே அதில் இருக்கிற சொத்துக்களின் மதிப்பைச் சரிபார்த்து, பிறகுதான் இன்ஸ்டால்மெண்ட் மூலமாக அரசாங்கம் கொடுக்கப்போகிறார்கள். அப்படித்தான் கொடுப்பார்கள் என எண்ணுகிறேன். அது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆனால் இப்போது அதுமாதிரி இல்லை என்று எனக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகிறது.

THIRU G. SWAMINATHAN : Sir, the compensation has not yet been paid for the Electricity Undertakings taken over.

திரு. கே. ராஜாராம் : அதைச் சரிபார்த்து, சொத்துக்கள் எவ்வளவு என்பதை அரசாங்கம் நிர்ணயித்து, பிற்பாடுதான் கொடுக்க வேண்டும். மேலும், சக்தி பைப்ஸைப் பொறுத்தவரையிலே, 31—3—75 முதல் அவர்கள் கொடுத்திருக்கிற விவரப்படி, அந்த வருஷம் பைப்புகள் செய்வதற்கு உபயோகப்படுத்தப்பட்ட 'ரா மெட்டிரியல்ஸ்' கிரயம் இரண்டு கோடியே 26 லட்சத்துச் சொச்சம். ஆனால் செலவுகள் எல்லாம் சேர்க்காமல், சிப்பந்திகள் கூலி, Contribution to Provident Fund, E.S.I. Contribution, Staff Welfare and Medical expenses இவைகள் எல்லாம் சேர்க்காமலேயே இரண்டு கோடியே 26 லட்சம் ரூபாய் ஆகிறது.

(பிற்பகல் 5-50)

ஆனால் மிஞ்சிப்போன குழாய்கள், ஏற்கெனவே முந்தைய வருடம் மிஞ்சிய குழாய்கள் எல்லாவற்றையும் கணக்கிட்டுப் பார்த்து, விற்றது மாத்திரம் 1 கோடியே 70 லட்சம் ரூபாய் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது அவர்கள் கொடுத்த கணக்கில் சொல்லப்பட்டிருக்கிறது. Fourteenth Annual Reprot— ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட வெளிப்படையான விளக்கம் Profit and Loss Account -ல் இருக்கிறது. இது தவிர, Salaries, Depreciation முதல் போட்டதற்கு வட்டி இவைகளுக்காகவெல்லாம் நிதி ஒதுக்கப்படவில்லை. ஆகவே, அரசாங்கம் இவைகளைப் பற்றியெல்லாம் சரியாக, தெளிவாகப் பரிசீலித்தார்களாவென்று அறிய விரும்புகிறேன். இம்மாதிரி நிறைய நஷ்டம் வருமென்று தெரிந்திருந்தும், இவற்றை ஏன் எடுத்துக் கொண்டார்கள், இனிமேல் make-up பண்ண முடியுமென்று கருதுகிறார்களா

என்பதற்கான விளக்கங்களைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த இழப்பு வராமல் பாதுகாக்க முடியு மென்பதற்கு அரசாங்கம் சரியான காரணத்தை சொல்லி, இன்னும் ஒன்று அல்லது இரண்டு வருஷங்கள் நஷ்டம் இருந்தாலும், அப்புறம் சமாளிக் கலாமென்று சொல்வார்களானால், ஒப்புக்கொள்ளலாம். இதில் பொதுப்படை யான குறைகளைச் சொல்ல நான் தயாராக இல்லை. பொதுமக்கள் பணத்தை அரசாங்கம் விரயம் செய்யாமல் இருக்க வேண்டும். பொது மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட நாம், அவர்கள் பணத்திற்கு டிரஸ்டிகளாக இருக்கிறோம். எனவே மக்களின் பணத்தை இம்மாதிரி விரயம் செய்வதற்கு இடம் கொடுக்கக் கூடாதென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். நாம் இந்த நிறுவனங்களைக் கையகப்படுத்துவதற்காக ஒரு குறிப்பிட்ட தேதியை நிர்ணயித்திருக்கிறோம். சட்டம் நிறைவேற்றிய பின்னர், ஒரு கமிஷனரை நியமித்து அங்கிருக்கும் வஸ்துக்களையும், இயந்திரங்களையும் சரி பார்த்து எடுத்துக்கொள்ளப் போகிறோம். அப்படியிருந்தும், 30 நாட்களுக்குள் மூன்றில் ஒரு பங்கைக் கொடுப்பதாக இன்றைக்கு 'கமிட்' செய்கிறோம். 30 நாட்களுக்குள்ளாக சாமான்களை எல்லாம் கணக்கெடுக்க வேண்டும். ஆனால் இதற்கு முன்பு அரசு எடுத்துக்கொண்ட எலக்டிரிசிட்டி நிறுவனங்களுக்கு இப்படிப் போட வில்லை. இதற்கு மட்டும் இப்படிப் போடக் காரணமென்ன என்பதை அறிய விரும்புகிறேன். இவற்றை லாபகரமான தொழில்களாக மாற்றும் எண்ணம் அரசாங்கத்திடம் இருக்கிறது; அதனால்தான் எப்படியிருந்தாலும் பரவா யில்லை என்று அரசாங்கம் எடுத்துக்கொள்கிறதென்ற விவரத்தையாவது அமைச்சரவர்களிடமிருந்து கேட்டால், நான் மகிழ்ச்சியடைவேன் என்று கூறிக் கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த சோதாவினுடைய அடிப்படைக் கொள்கை 'நேஷனலை சேஷன்' என்பதுதான். இந்தக் கொள்கையைப் பொதுவாக எல்லா உறுப்பினர்களும் வரவேற்றிருக்கிறார்களென்பதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'நேஷனலைசேஷன்' என்பது ஒரு கொள்கை, அந்தக் கொள்கையின் அடிப்படையில் இந்தக் காரியம் நிறைவேறியிருக்கிறது. இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று மாண்புமிகு உறுப் பினர்கள் தெரிவித்தார்கள், நான் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால்,



இந்த மசோதா செலக்ட் கமிட்டிக்குப் போக வேண்டிய அவசியமில்லை. 1974-ஆம் ஆண்டு பட்ஜெட் உரையிலேயே இதைப்பற்றி மாண்புமிகு முதல மைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள், நிதிநிலை அறிக்கையிலேயே இந்த நான்கு நிறுவனங்களையும் நாட்டுடைமையாக்க வேண்டுமென்று சொல்லி யிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கருத்தை அவர்கள் தெரிவித்த பிறகு, இது பற்றிப் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. பல இடங்களிலிருந்து கருத்துக் கள் வந்திருக்கின்றன. நாட்டுடைமையாக்குதல் என்ற கொள்கை புதிய கொள்கையல்ல. ஏற்கெனவே இது அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைதான். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, இதற்கெல்லாம் எப்படிக் கணக்கு போட்டீர்கள் என்று கேட்டார்கள். இந்த நிறுவனங்களை யெல்லாம் தேசியமயமாக்க வேண்டுமென்று முடிவு செய்தபோது, அதன் சொத்துக்களையெல்லாம் மதிப்பீடு செய்ய ஒருவரை நியமித்தோம். அவர் ஒரு காஸ்ட் அக்கவுண்டன்ட். மத்திய அரசில் பணியாற்றிய சீனியர் அதிகாரி அவர். அவர் அந்தப் பணிக்காக நியமிக்கப்பட்டார். அவரால் அந்த நிறுவனங்களின் Assets and Liabilities பரிசீலிக்கப்பட்டு, அறிக்கை தரப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில்தான் இந்த நஷ்ட ஈட்டுத் தொகை போடப்பட்டிருக்கிறது. மேலும் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும் போது, balance sheet கொடுக்கவில்லையே, assets and liabilities விவரங்கள் தெரியவில்லையே என்று சொன்னார்கள். நாம் assets -ஐத்தான் எடுத்துக்கொண்டிருக்கிறோம். நாம் liabilities -ஐ எடுத்துக்கொள்ளவில்லை.

one man commission assess செய்திருப்பது, சக்தி பைப்ஸ் லிமிடெட்-ஐப் பொறுத்தவரையில், 464.70 லட்சம் ரூபாயாகும். அதில் 75 சதவிகிதம் தான் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படிப் பார்த்தால், 348.54 லட்சம் ரூபாய் வருகிறது. Valuation -க்கு Compensation கொடுப்பதற்கு 75 சதவிகிதம் அளவுக்குத்தான் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில்தான் Compensation கொடுக்க நடவடிக்கை எடுக் கப்பட்டு வருகிறது. மேலும், Compensation கொடுப்பதா, வேண்டாமா என்ற பிரச்சினையை எழுப்பினார்கள். மாண்புமிகு உறுப்பினர்

திரு. வெங்கா அவர்கள் பேசும்போது, 25-வது திருத்தம் கொண்டுவந்த பிறகு, அப்படிக் கொடுக்கலாமா, அப்படி மத்திய அரசு கொடுத்திருக்கிறதா என்று கேட்டார்கள். 25-வது திருத்தம் 20-4-1972-ல் நிறைவேற்றப்பட்டது. அதற்கு அன்றுதான் ஜனாதிபதியின் கிடைத்திருக்கிறது. அதற்குப் பிறகு, Coal Mines Nationalisation, Indian Copper Corporation Nationalisation, Sick Textiles Undertakings Nationalisation என்றெல்லாம் மத்திய அரசினர் செய்திருக்கிறார்கள். இவைகள் எல்லாம் 1972-க்குப் பிறகு தேசிய மயமாக்கப்பட்டவையாகும். காம்பன்சேஷன் அவைகளுக்குக் கொடுக்கப்பட்ட தேதிகள், 17-8-1972; 21-9-1972 மற்றும் 21-12-1972 ஆகும். மத்திய அரசு இப்படிச் செய்திருக்கிறது. Sick Text iles Undertakings Corporation -ஐ Nationalisation செய்திருப்பதில் எந்த முறையை மத்திய அரசினர் கையாண்டார்களோ, அதை அடிப்படையாகக் கொண்டுதான் இந்த 4 நிறுவனங்களையும் நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோமென்புதைத். தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசு என்ன Principles follow செய்து Compensation கொடுக்க முறைகளை நிர்ணயித்திருக்கிறார்களோ, அதைத்தான் நாம் follow செய்திருக்கிறோம். மத்திய அரசின் அதிகாரிகளோடு பேச்சு வார்த்தை நடத்திய பிறகுதான் . . . .

THIRU S. NARAYANASWAMY: The Hon. Minister says that they are taking over only the assets and not the liabilities. Even the Bill does not say so. I would like to know whether it is the intention of the Government to repudiate the liability due to the institutions.

THIRU A. R. DAMODARAN: Sir, one more thing. Are the principles which the Central Government have mentioned to the State Government so confidential that they cannot be placed before this House? May I know the principles which have been laid down for determining this sum of Rs. 1,95 lakhs? Do the



Government claim privilege on the ground that these principles are confidential? If not, cannot they be placed before the House? If they are so placed, we can understand the principles underlying this determination of compensation.

THE HON. Thiru S. J. SADIQ PASHA: Sir, it is not as if directions are given to the State Government as to the princi- ples of Compensation that shoul be followed ples of compensation that should be followed. மத்திய அரசினுடைய சட்டத்தில், இந்த Compensation -ஐ எப்படி fix பண்ண வேண்டுமென்பது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் நாம் follow செய்திருக்கிறோம். Silk Textiles Undertakings-க்கு Compensation கொடுப்பதை எப்படி assess பண்ண வேண்டுமென்பதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையைத்தான் நாம் follow செய்திருக்கிறோம். நாம் 75 சதவீதத்தைத்தான் எடுத்துக்கொண்டிருக்கிறோம். Valuation 464 லட்சம் ரூபாய், 75% of the valuation 348 லட்சம் ரூபாய் இந்த Assumed liability -- Post-take-over liability பற்றி Category:1-ல் கொடுத்திருக்கிறோம். அந்த Assumed liability-ஐத்தான் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். Post-take-over liability என்று Schedule -ல் போடப்பட்டிருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது, Assumed liability 152.09 லட்சம் ரூபாய் வருகிறது. இந்த 348.54 லட்சம் ரூபாயிலே முதலிலே அதைக் கழித்துக் கொள்ள வேண்டும். அந்தப்பணம் போக, பாக்கியை, compensation—ஆக Compensation Commissioner - இடம் deposit செய்ய வேண்டும்.

[பிற்பகல் 6-00]

அந்தப் பணம் போக, Post take over பணம் deduct பண்ணிவிட்டு, taking over பணமாக Compensation Commissioner-இடத்தில் deposit செய்யப்படும் தொகை 195·64 லட்சம் ரூபாய்.

திரு. கே. எஸ். கணபதி: அமைச்சர் அவர்கள் இவ்வளவு விளக்கம் தருகிறார்கள். அந்த 192 லட்சம் ரூபாயில் 142 லட்சம் ரூபாய் கழிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த விவரங்களை தனி நபர் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அது ஆராயும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இந்த விவரங்களை முன்கூட்டியே உறுப்பினர்களுக்குக் கொடுத்திருந்தால், இதுபற்றி இன்னும் விவரமாக விவாதித்திருக்க முடியும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: Assets-Liabilities என்று சொல்லும்போது, 10 கோடி ரூபாய் வரைக்கும் போயிருக்கும். நாங்கள் கொடுக்கும் தொகை 195 லட்சம் ரூபாய்தான். Category ஒன்றில் 295·81 லட்சம் ரூபாய். Deposit 195 லட்சம் ரூபாய். So, Government has to discharge 100 lakhs. எனவே, Compensation Commissioner இடத்தில் Deposit செய்த தொகைக்கு அதிகமாக சுமார் ஒரு கோடி ரூபாய் அளவுக்கு சர்க்கார் கொடுக்கும். Schedule—ல் சொல்லியிருப்பது போல " Loan advanced by a Bank, loans advanced by an institution other than a Bank, any other loan, any credt availed of for the purpose of trade or any other manufacturing operations " இவைகள் Category ஒன்றில் வருகின்றன இந்தத் தொகை பூராவும் post-take-over loan ஆனதனால் நாம் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே, அந்தக் கமிஷனரிடம் டெப்பாசிட் செய்யும் தொகை போதாதென்றால், அரசாங்கம் கொடுக்கும். section 22 " Where any liability of the owner of the undertaking arising out of any item specified in category-I of the Schedule is not discharged fully by the Commissioner out of the amount paid to him under the Act, the Commissioner shall intimate in writing to the Government the extent of the liability which remains undischarged, and that liability shall be assumed by the Government என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நாராயணசாமி அவர்களும், திரு. தாமோதரன் அவர்களும் Section-5, sub-clause (2) பற்றி குறிப்பிட்டார்கள். அதில்

" Any liability arising in respect of—

(a) loans advanced by the Central Government, or a State Government, or both, to the undertaking (together with interest due thereon) after the date of management; and

(b) wages, salaries and other dues of employees of the undertaking, in respect of any period whether before or after the date of management, shall, on and from the appointed day, be the liability of the Government and shall be discharged, for and on behalf of the Government, by the Government company as and when repayment of such loans or amounts becomes due or as and when such wages, salaries or other dues become due and payable ". என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.



அடுத்து, இந்த Labour wages. முக்கியமான பிரச்சினை என்னவென்றால், அந்த sick undertaking-ன் post-take-over கணக்கை எடுத்திருக்கிறார்கள். Post-take-over, pre-take-over இரண்டையும் சேர்த்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த அடிப்படையிலேதான் எல்லா நிறுவனங்களுக்கும் compensation நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நாராயணசாமி அவர்கள் சொன்னதுபோல, Southern Structurals-க்கு minus கணக்கு வருகிறது. Principle எல்லாவற்றுக்கும் ஒன்றுதான். Sakthi, Lasco Textiles, Southern Structurals இவற்றுக்கு எல்லாம் ஒன்றுதான். அப்படி வரும்போது Southern Structurals-க்கு minus என்றுதான் வருகிறது. எனவேதான் loan-ஆக ஆயிரம் ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த நிறுவனத்தைப்பற்றிப் பேசும்போது, தனிப்பட்ட நபருக்கு அதிகமான சலுகைகள் கொடுத்துவிட்டார்கள் என்று சொல்லப்பட்டது. யாருக்கும் எந்தவிதமான தனிச் சலுகையும் கொடுக்கப்படவில்லை. மேலும், இப்படி ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாகச் சட்டம் கொண்டு வருவதைவிட, பொதுவாக ஒரு சட்டம் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என்றும், இது போன்ற தனி நிர்வாகத்தை நாட்டுடைமையாக்க வேண்டும் என்ற சமயம் வரும் போது, அதற்கென்று Notification போட்டால் போதும் என்றும் சொன்னார்கள். அது என்ன notification, இதை எப்படிப் போட வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. ஒரு தொழிலைச் சொல்லி, இந்தத் தொழிலை nationalize செய்யப்போகிறோம் என்று சொல்லாமலேயே, ஒரு பொதுவான சட்டத்தை மட்டும் நிறைவேற்றி வைத்துக்கொண்டு அதன் கீழ் notify செய்தால் போதும் என்றால், அது எப்படி என்று எனக்குப் புரியவில்லை. அந்தக் கருத்தைப் பார்க்கலாம் என்ற அளவுக்குத்தான் இப்போது சொல்ல முடியும். ஏனென்றால் ஒவ்வொரு தடவையும் ஒரு நிறுவனத்தை நாட்டுடைமையாக்கும்போது, தனியாக ஒரு சட்டம் கொண்டு வருகிறோம். இப்போது இந்த undertakings-க்கும் தனித்தனியாக ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த சக்தி நிறுவனத்தைப் பொறுத்த வரையில், அது நம்முடைய மேனேஜ்மெண்ட்-க்கு வந்த பிறகு production சிறப்பாக இருக்கிறது. அந்த நிறுவனத்திற்கு 1969-லிருந்து அரசாங்கம் கடன் கொடுப்பதாகச் சொன்னார்கள். 1972 முதல் தான் கடன் கொடுத்த விவரம் இருக்கிறது.

திரு. கே. எஸ். கணபதி: 1971-ஆம் ஆண்டு 25 லட்சம், 40 லட்சம் என்று இரண்டு வகையில் கொடுத்திருக்கிறோம். 40 லட்சம் ரூபாய் மூலதனமாக தேவையான பொருட்கள் வழங்குவதற்கும், 25 லட்சம் ரூபாய் அவர்கள் பைப் சப்ளை செய்து கொஞ்சம் கொஞ்சமாக கழிக்க வேண்டுமென்றும் சொல்லிக் கொடுத்திருக்கிறோம். இதுவரையில் சப்ளை செய்து கழித்த தொகை 8 லட்சம் ரூபாய்தான்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 1972-ல் கொடுத்ததாகத்தான் கணக்கு இருக்கிறது. அதற்கு முந்திக் கொடுத்ததாகக் கணக்கு இல்லை. 1972-73-ல் 558 டன் அதற்கு ரூபாய் 15,31,395; 1973-74-ல், 11,973 டன், அதற்கு ரூபாய் 99,65,160. 1974-75-க்கு 1,65,85,753 ரூபாய் என்று உற்பத்தி அதிகமாகிக் கொண்டுதான் வந்திருக்கிறது. இதிலே சில சிக்கல்கள் Technical defects இருந்தது. அவைகளையெல்லாம் Korean Experts நிவர்த்தி செய்திருக்கிறார்கள். உற்பத்தியாகும் பைப்புகளுக்கு நல்ல கிராக்கி இருக்கிறது, ஏராளமான பணம் investment செய்யவேண்டி யிருக்கிறது. இதற்கு நல்ல எதிர்காலம் உண்டு என்ற அடிப்படை யில்தான் இப்போது Korewn Experts உதவியைக் கொண்டு Technical defects-ஐ எல்லாம் தீர்த்திருக்கிறோம். இப்போது நல்ல முறையில் நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் liabilities பற்றிச் சொன்னார்கள். 7 கோடி ரூபாய், 9 கோடி ரூபாய் என்றெல்லாம் சொன்னார்கள். அதுபற்றிய விவரங்களை ஏற்கனவே சொல்லியிருக் கிறோம். அவற்றைப் பார்க்கும்போது நாம் 195 லட்சம் ரூபாய் அளவுகளுக்குத்தான் டெபாசிட் செய்கிறோம். இந்த compensation தொகை 348 லட்சத்தில assumed liabilities 152 லட்சம் ரூபாய். Category I -ல் 295 லட்சம் ரூபாய். இந்த அளவுக்குத் தான் நாம் எடுத்துக்கொள்ளு கிறோம் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் அவர்கள் பொது மக்களுடைய வரிப் பணத்தை விரயம் செய்யாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். பொதுமக்களுடைய பணத்தை விரயமாக்க வேண்டுமென்ற நோக்கம் இந்த அரசுக்குக் கிடையாது. நிறுவனம் நல்ல முறையில் நடைபெறும். எதிர்காலத்தில் முன்னேற்றம் அடைந்து சிறப்புறும் என்ற அடிப்படையில்தான் இது தேசீயமயமாக்கப்பட்டிருக்கிறது. பலதரப்பட்ட நிபுணர்களும் இதுபற்றிய தங்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றார்கள். அவற்றின் அடிப்படையிலேதான் இது தேசீயமயமாக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்தச் சட்ட முன்வடிவை பொறுக்குக் குழுவுக்கு அனுப்ப வேண்டிய



அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன். திரு. வசந்தபாய் அவர்கள் படிக்காமலேயே கூட, இதைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

THIRU S. NARAYANASWAMY: He had no time to go through the papers.

THE HON. THIRU S. J. SADIQ PASHA: He said that he was in the happy position of not knowing anything.

THIRU G. VASANTHA PAI: Hon. Deputy Chairman, Sir, I did not say like that. I said that from what had been talked by the Members here and what had been said by the Hon. Minister himself, I had been able to glean that this was a very bad venture for the Government to embark upon.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அப்படிப் பார்க்கக் கூடாது. எனவே, இந்த மசோதாவை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் தம் திருத்தத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுகிறார்களா அல்லது வலியுறுத்து கிறார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த திருத்தத்தை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

[பிற்பகல் 6-10]

THIRU A. R. DAMODARAN: Sir, after listening to the Hon. Minister, while he has clarified certain matters, I am even more confused than what I was, to tell you very frankly. He has now stated, from what I have been able to understand, that Rs. 1·95 crores is going to be deposited with the Commissioner of Claims. Over and above that, Rs. 1·52 crores has been assumed as responsibility by the Government and that means Rs. 1·95 plus Rs. 1·52 crores. He had also mentioned certain amounts regarding

compensation principles with the Government of India. These are all consolicting matters and in all fairness to the Members of this House, I still believe on a matter of principle that this should be placed before a Select Committee with an assurance that it should report to this House within two months or so. Since Members of all parties have demanded this, I cannot assume that I will have the leave of the House to withdraw this amendment.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நான் ஏற்கெனவே விளக்கங்களைக் கொடுத்திருக்கிறேன். விளக்கம் சரியாக இல்லை என்பதுபோல் உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். இப்போது அவ்வளவுதான் சொல்ல முடியுமே தவிர, வேறு ஒன்றுமில்லை. என்னால் முடிந்த அளவுக்கு விவரங்களைக் கொடுத்திருக்கிறேன். உங்களுக்குப் புரிய வைக்க முடியவில்லை என்றுதான் நான் எண்ணுகிறேன். இன்னும் விளக்கங்கள் தேவைப்பட்டால், என்னால் முடிந்தவரை விளக்கம் கொடுக்கிறேன். ஆகவே, இந்தத் திருத்தத்தை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, it is not that the Hon. Minister is reluctant to give details I think some of the details are so intricate and technical in nature that it is not fair to load the Hon. Minister with questions. Therefore, it would be better if as the Chairman of the Select Committee, he would be able to give us full data on what he proposes in this Bill. That is what I mentioned.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

'That the Bills be referred to a Select Committee of this House consisting of 15 members'' திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேறறப்பட்ட 1975-ஆம் ஆண்டு, சக்தி பைப்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.



பிரிவுகள் 2 முதல் 31 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ஆம் ஆண்டு, சக்தி பைப்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1975) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ஆம் ஆண்டு, சக்தி பைப்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1975) நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) 1975-ஆம் ஆண்டு, சதர்ன் ஸ்டிரக்சுரல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1975).

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ஆம் ஆண்டு, சதர்ன் ஸ்டிரக்சுரல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

---

@ 189–205ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1975 நவம்பர் 7

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ஆம் ஆண்டு, சதர்ன் ஸ்டிரக்சுரல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்".

உறுப்பினர்கள் திரு. எ. ஆர். தாமோதரான் அவர்களும் திரு. கே. எஸ். கணபதி அவர்களும் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள்.

THIRU A. R. DAMODARAN : Sir, this is also a motion for reference to a Select Committee. I will formally move it but since we have dealt with all the other matters in the first motion that we have discussed and now that the Government are determined to take over these concerns without reference to a Select Committee, may I take this opportunity of making a few remarks generally about these industrial concerns?

Sir, we all want such concerns which are taken over by the Government to succeed in the objectives that they have set before them. One of the important considerations that will have to weigh with Government is to create a proper infra-structure for the management of these industrial concerns. It is not enough to run them like Departmental concerns with ministerial orders. These concerns should not also have to go often to Government for day-to-day administrative decisions. I would like the Government to seriously consider whether we should not create an industrial bureaucracy as it were, trained bureaucrats, who are able to run these industrial concerns and who are themselves management-experts with a great deal of practical knowledge of managing these concerns. These concerns should also be free from constant interference with regard to labour-employer relationship. I fully realise that the Government are not responsible for the situation in the factories, but nonetheless, many industrial concerns in our country with very good prospects have been ruined because of badly managed labour relations. I would like the Hon. the Minister for Industries to kindly see to it. We have heard him on the Electricity Board Budget debate and he has expressed



1975 நவம்பர் 7] [Thiru A. R. Damodaran]

himself in very clear terms that although this Government are fully aware of the need for looking after the welfare of labour in the factories and institutions, it is of paramount importance thao industrial discipline be observed in such concerns. I only wanted to mention that if the Government, after investing Rs. 10 crores or Rs. 12 crores, are not able to make a success of this venture, this will be a disastrous thing to the very concept of Government ownership of industry and the concept of nationalisation. One of the reasons for our having so much of trouble with our public undertakings is that the amenities that are given to labour are of such an expensive nature that we over-capitalise these concerns as in the case of the Neiveli Lignite Corporation. In the Neiveli Lignite Corporation, over Rs. 30 crores has been spent merely in providing township, roads, etc. They are all required amenities but look at the cost incurred on them when we have to pay 30 paise per unit for power from Neiveli.

I would like to caution that if these concerns are to be managed properly, then constant interference with the day-to-day administration should be avoided. We should also consider whether instead of having departmental people to look after such concerns, we can have a permanent machinery within the State, because these four concerns will by themselves be operating with several crores of rupees and Government may take over more concerns if they become sick. I would, therefore, request the Hon. Minister to consider and evolve a proper procedure for recruitment of management specialists to these organisations and see that these concerns flourish as they are intended to do. Thank you.

THIRU S. NARAYANASWAMY : Just one point, Mr. Deputy Chairman, I want to make. I was intimately concerned at the promotion stage before it came into existence and the Southern Structurals was started for the manufacture of railway wagons. It ran into foul weather because the management got into very bad terms with the Railway Board. I do think it is possible to start manufacture of railway wagons again, because the Railway Board, despite the very impecunious condition of the Company, would

[Thiru S. Narayanaswamy] [1975 நவம்பர் 7

still think of entrusting manufacture of railway wagons, particularly to some State Government undertaking and I hope and trust that it will be possible for the undertaking, when it becomes nationalised, not only to operate for manufacturing wagons profitably but also to diversify very quickly. There are facilities available and the present very unfortunate feature of heavy loss could be made good in future years. I am not afraid, as my hon. Friend Thiru Ganapathi was, that we are going to pay compensation and the same is going into private pockets. The said amount will be going only to banks, statutory bodies and we should not have the impression that it goes into private pockets. What is important is this : I am worried about the contingent liability that the Government would incur on these four concerns, when we operate them year after year and it will be a drain on the exchequer. I would like the Government to insure against such liability by taking up diversification plans quickly and by putting people from the Economic Service to manage them. People who are put in charge of these concerns should devote their full time and they should not be persons who devote part time to this and go away to attend some lunch elsewhere. It should not be left in the hands of the Civil Servants who may not be able to manage them efficiently, however much they may be efficient, but should be in the hands of persons from the Economic Service who have dedicated themselves to the work and who will run these concerns with advantage to consumer, labour and management.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு அங்கத்தினர் திரு. தாமோதரன் அவர்கள் சொல்லியதுபோல, புரொபஷனல் மேனேஜ்மெண்ட் கேடர் ஒன்று அமைக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர், இத்தகைய நிறுவனங்களை திறமையானவர்கள், இந்த நிறுவனத்தைப்பற்றித் தெரிந்தவர்கள் நிர்வகிப்பது நல்லது என்று குறிப்பிட்டார்கள். அரசாங்கத்தில் அந்தப் பிரச்சினை பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு புரொபஷனல் மேனேஜ்மெண்ட் கேடர் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்தில் இருந்து வருகிறது.



1975 நவம்பர் 7]

மாண்புமிகு உறுப்பினர் திரு. நாராயணசாமி அவர்கள் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்சுக்கு நல்ல கூரு எதிர்காலம் இருக்கின்றது என்று சொன்னார்கள். அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போதுகூட ரயில்வே போர்டைக் கேட்டு அதனுடைய வேகன்களைச் செய்வதற்கு இங்கேயே ஏற்பாட்டைச் செய்யலாம் என்ற எண்ணத்தைச் சொன்னார்கள். அதைத் தொடர்ந்து இந்த அரசு நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிறுவனத்தில் டைவர்சிபிகேஷன் செய்வதற்காக மேற்கொண்டு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-20)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** திரு. தாமோதரன் அவர்கள் தம்முடைய திருத்த்தைத் திரும்ப பெறுகிறாரா அல்லது வலியுறுத்துகிறாரா?

**திரு. ஏ. ஆர். தாமோதரன் :** ஒன்றும் புண்ணியமில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் பதில் சொன்னதில் புண்ணியமில்லையா அல்லது உறுப்பினர் அவர்கள் வற்புறுத்துவதில் புண்ணியமில்லையா ?

**திரு. கே. ராஜாராம் :** அவர் திருத்தத்தை முன்மொழியவேயில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975ஆம் ஆண்டு, சதர்ன் ஸ்டிரக்சுரல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

[1975 நவம்பர் 7

பிரிவுகள் 2 முதல் 31 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, சதர்ன் ஸ்டிரக்சுரல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1975) நிறைவேற்றப்பட வேண்டும்".
என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, சதர்ன் ஸ்டிரக்சுரல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1975) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(3) 1975 ஆம் ஆண்டு, லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1975).**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".
என்று நான் முன்மொழிகிறேன்.

---

@ 206–222 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1975 நவம்பர் 7]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன் மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்ட மன்றப் பேரவையால், நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்)".

திருவாளர்கள் ஏ. ஆர். தாமோதரனும், கே. எஸ். கணபதியும் திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய திருத்தங்களை முன்மொழிகிறார்களா ?

THIRU A. R. DAMODARAN : Sir, I do not move this amendment. I would only request the Hon. Minister, since we have not been able to get the final balance sheet of the Lasco Steels Limited, kindly to circulate it at least after this Bill is passed.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நிச்சயமாக நிறைவேற்றிக் கொடுக்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 31 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

[1975 நவம்பர் 7

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1975) நிறைவேற்றப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1975) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) 1975 ஆம் ஆண்டு, டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறுவனத்தைக் **கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1975).**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

என்று நான் முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

---

@ 223-239 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது



1975 நவம்பர் 7]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** திருத்தம் கொடுத்துள்ள உறுப்பினர்கள் திருத்தத்தை முன்மொழிகிறார்களா?

திருத்தம் முன்மொழியப்படவில்லை.

**திரு. கே. ராஜாராம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நான்கு சட்ட முன்வடிவுகளில் இது கடைசி சட்ட முன்வடிவு. இந்தச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்படும் வேளையில் ஒரே ஒரு வார்த்தையை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக இம்மாதிரி மாநிலத்திலுள்ள முக்கியமான நிறுவனங்களைக் கையகப்படுத்துவது ஒரு நல்ல ஆரம்பம், நல்ல காரியம் என்பதால், அந்தக் காரியங்களை யாருமே ஆட்சேபிக்கவில்லை. முறையைத்தான் ஆட்சேபிக்கிறோமே தவிர, வேறொன்றுமில்லை. இந்த நான்கு நிறுவனங்களிலும் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு மேனேஜ்மென்டில் பங்கு கொடுத்து, அவர்களையும் நன்கு உபயோகப்படுத்திக்கொள்வதற்கு ஒரு புது சம்பிரதாயம் ஏற்படுத்தும்படியாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** துணைத் தலைவரவர்களே,

Labour participation in management—தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு கொடுக்க வேண்டுமென்பது இப்பொழுது எங்கு பார்த்தாலும் பேசப்படுகிற கருத்து. பத்திரிகைகளிலும் இதைப்பற்றிச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. ரேடியோவில் கூட இது பற்றி ஒலி பரப்பப்படுகிறது. இது இன்றைய தினம் நாட்டில் ஒரு பெரிய கொள்கையாக இருந்து வருகிறது. எப்படியாயினும் இதை நிறைவேற்ற வேண்டும் என்பது தான் இந்த அரசின் எண்ணமும். மத்திய அரசு கூட தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு கொடுக்க வேண்டும் என்ற கருத்தில் ஆர்வம் கொண்டிருக்கிறது. நம்முடைய பாலிசியும் அதுதான். மத்திய அரசிடமிருந்து 'கைட் லைன்ஸ்' எல்லாம் வந்த பிறகு, அதுபற்றி நாம் முடிவு எடுக்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2 முதல் 31 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ஆம் ஆண்டு, டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1975) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ஆம் ஆண்டு, டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1975) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் திங்கட்கிழமை (10—11—1975) பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6·26)



## 5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders.*

240. Notification issued with G.O. Ms. No. 2873, Home, dated 26th December 1974 in regard to amendments to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10(3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

241. Notification issued with G.O. Ms. No. 972, Home, dated 30th May 1975 in regard to an amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10(3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

242. Notification issued with G.O. Ms. No. 1103, Rural Development and Local Administration, dated 4th July 1975 in regard to an amendment to the Surcharge and Disallowance Rules. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)].

### B. *Reports, Notifications and Other Papers.*

76. Notification issued with G.O. Ms. No. 541, Labour and Employment, dated 13th June 1975 in regard to amendments to the Tamil Nadu Factories Rules, 1950.

77. Notification issued with G.O. Ms. No. 674, Labour and Employment, dated 2nd August 1975 in regard to an amendment to the Tamil Nadu Factories Rules, 1950.

* 78. The Sakthi Pipes Limited (Acquisition of Undertaking) Bill, 1975 (L.A. Bill No. 38 of 1975), as passed by the Assembly.

* 79. The Southern Structurals Limited (Acquisition of Undertaking) Bill, 1975 (L.A. Bill No. 39 of 1975), as passed by the Assembly.

* 80. The Lasco Steels Limited (Acquisition of Undertaking) Bill, 1975 (L.A. Bill No. 40 of 1975), as passed by the Assembly.

* 81. The Textool Company Limited (Acquisition of Undertaking) Bill, 1975 (L.A. Bill No. 41 of 1975), as passed by the Assembly.

* 82. The Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 51 of 1975), as passed by the Assembly.

---

* Circulated to all M.L.Cs. on 6th November 1975.

# இணைப்பு I

(117-ஆம் பக்கத்தில் 90 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.)

விடை : (அ), (இ) & (உ) :—

திண்டிவனம் நகராட்சியில் 1971-72, 1972-73, 1973-74, 1974-75 ஆகிய ஆண்டுகளில் நகராட்சி பேருந்து நிலையம், வண்டிப்பேட்டை, மீன் மற்றும் கறி மார்க்கட் ஏலம் விடப்பட்ட தொகை, ஒவ்வொரு இனத்திலும் ஆண்டு தோறும் ஏலதாரரிடம் வசூல் செய்யப்படாத தொகை மேல் நடவடிக்கை ஆகியவை பற்றிய விவரங்கள் :—

பேருந்து நிலையம்—

| ஆண்டு. (1) | ஏலத்தொகை. (2) | நிலுவை. (3) | நிலுவைக்கான காரணமும் எடுக்கப்பட்ட நடவடிக்கையும். (4) |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| 1971—72 | 18,232 | இல்லை | — |
| 1972—73 | 14,985 | 4,998 | வசூல் ஆகாததால் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. |
| 1973—74 | 15,620 | 4,063 | |
| 1974—75 | 18,976 | 8,794 | |
| | 67,813 | 17,855 | |

வண்டிப்பேட்டை :—

| ஆண்டு. (1) | ஏலத்தொகை. (2) | நிலுவை. (3) | நிலுவைக்கான காரணமும் எடுக்கப்பட்ட நடவடிக்கையும். (4) |
|---|---|---|---|
| 1971—72 | 8,310 | 2,992 | வசூல் ஆகாததால் வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 1972—73 | 9,000 | 4,500 | |
| 1973—74 | 5,000 | 832 | |
| 1974—75 | 5,600 | 2,726 | |
| | 27,910 | 11,050 | |



மீன் அங்காடி:—

| ஆண்டு. (1) | ஏலத்தொகை. (2) | நிலுவை. (3) | நிலுவைக்கான காரணமும் எடுக்கப் பட்ட நடவடிக்கையும். (4) |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| 1971—72 | 3,350 | இல்லை. | உரியகாலத்தில் வசூல் செய்ய ஆணையரால் நடவடிக்கைகள் எடுக்கப்படாததால் நிலுவையாகியது. வழக்குகள் தொடரவும் நிலுவையாக விடப்பட்டதற்கு பொறுப்பானவர்களிடமிருந்து தொகையினை வசூல் செய்யவும் நகராட்சிகளின் ஆய்வாளர் உத்திரவிட்டுள்ளார். |
| 1972—73 | 4,550 | 2,126 | |
| 1973—74 | 3,610 | 300 | |
| 1974—75 | 3,500 | 581 | |
| | 15,010 | 3,007 | |

காய்கறி நாளங்காடி :—

| ஆண்டு. (1) | ஏலத்தொகை. (2) | நிலுவை. (3) | நிலுவைக்கான காரணமும் எடுக்கப் பட்ட நடவடிக்கையும். (4) |
|---|---|---|---|
| 1972—73 | 7,530 | 1,258 | உரிய காலத்தில் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படாததால் நிலுவையானது. வழக்குகள் தொடர ஆணையருக்கு நகராட்சிகளின் ஆய்வாளர் உத்திரவிட்டுள்ளார். |
| 1973—74 | 4,525 | 577 | |
| 1974—75 | 3,025 | 1,008 | |
| | 15,080 | 2.843 | |

இணைப்பு II

(26-ஆம் பக்கத்தில் இனம் 4 (1) க்கான அடிக்குறிப்பைக் காண்க)

L. A. Bill No. 38/1975.

(As passed by the Assembly)

*A Bill to provide for the acquisition in the public interest, of the undertaking of the Sakthi Pipes Limited, and for matters connected therewith.*

WHEREAS it is expedient in the public interest that the undertaking of the Sakthi Pipes Limited, shall be acquired for the purpose of enabling the Government to conserve and exploit, in a scientific and rational manner, to the maximum advantage of the State and in the interest of the community, the production and supply of the goods by the company, and for matters connected therewith or incidental thereto;

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-sixth Year of the Republic of India as follows :—

## CHAPTER I.

### PRELIMINARY.

1. *Short title.*—This Act may be called the Sakthi Pipes Limited (Acquisition of Undertaking) Act, 1975.

2. *Definitions.*—In this Act, unless the context otherwise requires,—

(a) "appointed day" means the date of publication of this Act in the *Tamil Nadu Government Gazette;*

(b) "Commissioner" means the Commissioner of Payments appointed under section 12;

(c) "company" means the Sakthi Pipes Limited being a company incorporated under the Companies Act, 1956 (Central Act I of 1956), having its registered office in this State;

(d) "date of management" means the 19th December 1972, the date on which the management of the undertaking was taken over by the Government;



(e) "Government" means the State Government;

(f) "Government company" means the Tamil Nadu Pipes, Limited, being a Government company within the meaning of section 617 of the Companies Act, 1956 (Central Act I of 1956);

(g) "owner" when used in relation to the undertaking means any person or firm who or which is, immediately before the appointed day the immediate proprietor or lessee or occupier of the undertaking or any part thereof, and also includes any agent or manager of such owner but does not include any person or body of persons authorised to take over the management of the whole or any part of the undertaking.

(h) "specified date" means such date as the Government may for the purpose of any provision of this Act, by notification, specify and different dates may be specified for different provisions of this Act;

(i) "undertaking" means an undertaking of the company—

(i) engaged in the business of manufacturing and dealing in the cast iron pipes and other goods; or

(ii) carrying on other activities with a view to achieve the objects specified in clause III of the Memorandum of Association of the Company; or

(iii) transacting anything incidental or ancillary to the matters mentioned in item (i) or (ii).

## CHAPTER II.

### ACQUISITION OF THE RIGHTS OF THE OWNER OF THE UNDERTAKING.

3. *Acquisition of rights of the owner in respect of the undertaking.*—(1) On the appointed day, the undertaking and the right, title and interest of the owner in relation to such undertaking shall stand transferred to, and shall vest absolutely in the Government.

(2) The undertaking which stands vested in the Government by virtue of sub-section (1) shall, immediately after it has so vested, stand transferred to, and vested in the Government company.

4. *General effect of vesting.*—(1) The undertaking referred to in section 3 shall be deemed to include all assets, rights, leaseholds, powers, authorities and privileges and all property, movable and immovable, including lands, buildings, workshops, stores, instruments, machinery and equipment, cash balances, cash on hand, reserve funds, investments and book debts and all other rights and interests in, or arising out of, such property as were immediately before the appointed day in the ownership, possession, power or control of the owner of the undertaking whether within or outside India, and all books of account, registers, and all other documents of whatever nature relating thereto, and shall also be deemed to include all the liabilities and obligations specified in sub-section (2) of section 5.

(2) All property as aforesaid which have vested in the Government under sub-section (1) of section 3 shall, by force of such vesting, be freed and discharged from any trust, obligation, mortgage, charge, lien and other encumbrances affecting it and any attachment, injunction or decree or order of any court restricting the use of such property in any manner shall be deemed to have been withdrawn.

(3) Where any licence or other instrument in relation to the undertaking had been granted at any time before the appointed day to the owner by the Central Government or a State Government or any other authority, the Government company shall, on and from such date, be deemed to be substituted in such licence or other instrument in place of the owner referred to therein as if such licence or other instrument had been granted to it and shall hold such licence or other instrument for the remainder of the period for which the company would have held such licence or other instrument.

(4) Every mortgage of any property which has vested under this Act in the Government and every person holding any charge, lien, or other interest in or in relation to any such property shall give, within such time and in such manner as may be prescribed, an intimation to the Commissioner of such mortgage, charge, lien or other interest.

(5) For the the removal of doubts, it is hereby declared that the mortgage of any property referred to in sub-section (2) or any other person holding any charge, lien or other interest in, or in relation to, any such property shall be entitled to claim, in accordance with his rights and interests payment of the mortgage



money or other dues, in whole or in part, out of the amount specified in relation to such property, but no such mortgage, charge, lien or other interest shall be enforceable against any property which has vested in the Government.

(6) If, on the appointed day any suit, appeal or other proceeding of whatever nature in relation to any matter specified in sub-section (2) of section 5 in respect of the undertaking instituted or preferred by or against the company, is pending, the same shall not abate, be discontinued or be, in any way prejudicially affected by reason of the transfer of the undertaking or of anything contained in this Act but the suit, appeal or other proceeding may be continued, prosecuted and enforced by or against the Government company.

5. *Owner to be liable for certain prior liabilities.*—(1) Every liability, other than the liability specified in sub-section (2), of the owner of the undertaking in respect of any period prior to the appointed day, shall be the liability of such owner and shall be enforceable against him and not against the Government or the Government company.

(2) Any liability arising in respect of—

(*a*) loans advanced by the Central Government, or a State Government, or both, to the undertaking (together with interest due thereon) after the date of management; and

(*b*) wages, salaries and other dues of employees of the undertaking, in respect of any period whether before or after the date of management, shall, on and from the appointed day, be the liability of the Government and shall be discharged, for and on behalf of the Government, by the Government company as and when repayment of such loans or amounts becomes due or as and when such wages, salaries or other dues become due and payable.

(3) For the removal of doubt, it is hereby declared that,—

(*a*) save as otherwise expressly provided in this section or in any other section of this Act, no liability, other than the liability specified in sub-section (2), in relation to the undertaking in respect of any period prior to the appointed day, shall be enforceable against the Government or the Government company;

(*b*) no award, decree or order of any court, tribunal or other authority in relation to the undertaking passed after the appointed day in respect of any matter, claim or dispute, in relation to any matter not referred to in sub-section (2), which arose before that day, shall be enforceable against the Government or the Government company;

(*c*) no liability of the undertaking or the owner thereof for the contravention, before the appointed day, of any provision of law, for ht etime being in force, shall be enforcable against the Government or the Government company.

## CHAPTER III.

### PAYMENT OF AMOUNT.

6. *Payment of amount to the owner of the undertaking.*—The onwer of the undertaking shall be given by the Government in cash and in the manner specified in Chapter VI, for the transfer to, and vesting in it under sub-section (1) of section 3, of such undertaking and the right, title and interest of the owner in relation to such undertaking an amount of rupees one crore ninety-five lakhs and sixty-four thousand only.

7. *Payment of interest.*—(1) In addition to the amount referred to in section 6 there shall be given by the Government in cash to the owner of the undertaking simple interest at the rate of four per cent per annum on the amount of each instalment referred to in sub-section (1) of section 13 and such interest shall be calculated for the period commencing on the appointed day and ending with the date of payment to the Commissioner.

(2) The amount representing interest calculated at the rate specified in sub-section (1) shall be given in addition to the amount specified in section 6.

## CHAPTER IV.

### MANAGEMENT, ETC., OF THE UNDERTAKING.

8. *Management, etc., of the undertaking.*—The Government company or any person which that company may, by order in writing, specify, shall be entitled to exercise the powers of general



superintendence, direction, control and management of the affairs and business of the undertaking, the right, title and interest of the owner in relation to which have vested in that company under sub-section (2) of section 3, and do all such things as the owner of the undertaking is authorised to exercise and do.

9. *Duty of persons in charge of management of the undertaking to deliver all assets, etc.*—On the vesting of the undertaking in the Government company, all persons in charge of the management of such undertaking immediately before such vesting shall be bound to deliver to the Government company all assets, books of account, registers or other documents in their custody relating to the undertaking.

## CHAPTER V.

### PROVISIONS RELATING TO EMPLOYEES OF THE UNDERTAKING.

10. *Employment of certain employees to continue.*—(1) Every person who is a workman within the meaning of the Industrial Disputes Act, 1947 (Central Act XIV of 1947), and has been, immediately before the appointed day, employed in the undertaking shall become, on and from the appointed day, an employee of the Government company, and shall hold office or service in the Government company with the same rights and privileges as to pension, gratuity and other matters as would have been admissible to him, if the rights in relation to such undertaking had not been transferred to and vested in, the Government company, and shall continue to do so unless and until his employment in the Government company is duly terminated or until his remuneration, terms and condition f employment are duly altered by the Government company.

(2) Every person who is not a workman within the meaning of the Industrial Disputes Act, 1947 (Central Act XIV of 1947) and who has been immediately before the appointed day, employed in hte undertaking sahll in so far as such person is employed in connection with the undertaking which has vested in the Government company, become, as from the appointed day, an employee of the Government company and shall hold his office or service therein by the same tenure, at the same remuneration and upon

the same terms and conditions and with the same rights and privileges as to pension and gratuity and other matters as he would have held the same under the undertaking if it had not vested in the Government company and shall continue to do so unless and until his employment in the Government company is duly terminated or until his remuneration, terms and conditions of employment are duly altered by the Government company.

(3) Notwithstanding anything contained in the Industrial Disputes Act, 1947 (Central Act XIV of 1947), or in any other law for the time being in force, the transfer of the services of any officer or other person employed in the undertaking to the Government company shall not entitle such officer or other employee to any compensation under this Ac or any other law for the time being in force and no such claim shall be entertained by any court, tribunal or other authority.

11. *Provident and other funds.*—(1) Where the owner of the undertaking has established a provident fund, superannuation, welfare or other fund for the benefit of the persons employed in the undertaking, the moneys relatable to the employees, whose services have become transferred by or under this Act to the Government company shall, out of the moneys standing, on the appointed day, to the credit of such provident fund, superannuation, welfare or other fund, stand transferred to, and shall vest in the Government company.

(2) The moneys which stand transferred, under sub-section (1), to the Government company shall be dealt with by that company in such manner as may be prescribed.

## CHAPTER VI.

### COMMISSIONER OF PAYMENTS.

12. *Appointment of Commissioner of Payments.*—(1) For the purpose of disbursing the amounts payable to the owner, the Government shall, by notification in the *Tamil Nadu Government Gazette*, appoint such person as it may think fit to be the Commissioner of Payments.

(2) The Government may appoint such other persons as it may think fit to assist the Commissioner and thereupon the Commissioner may authorise one or more of such persons also to exercise all or any of the powers exercisable by him under this Act, and different persons may be authorised to exercise different powers.

(3) Any person authorised by the Commissioner to exercise any powers may exercise those powers in the same manner and with the same effect as if they have been conferred on that person directly by this Act and not by way of authorisation.

(4) The salaries and allowances of the Commissioner and other persons appointed under this section shall be defrayed out of the Consolidated Fund of the State.

13. *Payment by the Government to the Commissioner.*—(1) (*a*) The Government shall pay in cash to the Commissioner for payment to the owner of the undertaking, an amount of rupees one crore one lakh and fifty thousand only in three equal annual instalments together with interest accrued under sub-section (1) of section 7.

(*b*) The first of the three equal annual instalments referred to in clause (*a*) together with interest thereon shall be paid within thirty days from the specified date.

(2) A deposit account shall be opened by the Government, in favour of the Commissioner, in the Public Account of the State and every amount paid under this Act to the Commissioner shall be deposited by him to the credit of the said deposit account in the Public Account of the State and thereafter the said deposit account shall be operated by the Commissioner.



(3) Records shall be maintained by the Commissioner in respect of the undertaking in relation to which payments have been made to him under this Act.

(4) Interest accruing on the amount standing to the credit of the deposit account referred to in sub-section (2) shall inure to the benefit of the owner of the undertaking.

14. *Certain powers of the Government company.*—(1) The Government company shall be entitled to receive, to the exclusion of all other persons, any money due to the undertaking, realised after the appointed day, notwithstanding that the realisations pertain to a period prior to the appointed day.

(2) Save as otherwise provided in this Act, the liabilities in relation to the undertaking in respect of any period prior to the appointed day which have not been discharged by the company shall be the liabilities of the owner of the undertaking.

15. *Claims to be made to the Commissioner.*—Every person having a claim against the owner of the undertaking shall prefer such claim before the Commissioner within thirty days from the specified date :

Provided that if the Commissioner is satisfied that the claimant was prevented by sufficient cause from preferring the claim within the said period of thirty days, he may entertain the claim within a further period of thirty days but not thereafter.

16. *Priority of claims.*—The claims arising out of the matter specified in the Schedule shall have priorities in accordance with the following principles, namely :—

(*a*) category I will have precedence over all other categories and category II will have precedence over category III and so on;

(*b*) the claims specified in each of the categories, except category III, shall rank equally and be paid in full, but if the amount is insufficient to meet such claims in full, they shall abate in equal proportions and be paid accordingly;

(*c*) the liabilities specified in category III shall be discharged, subject to the priorities specified in this section, in accordance with the terms of the secured loans and the priority, *inter se*, of such loans; and

(d) the question of payment of a liability with regard to a matter specified in a lower category shall arise only if a surplus is left after meeting all the liabilities specified in the immediately higher category.

17. *Examination of claims.*—(1) On receipt of the claims under section 15, the Commissioner shall arrange the claims in the order of priority specified in the Schedule and examine the same in accordance with the said order.

(2) If on examination of the claims, the Commissioner is of the opinion that the amount paid to him under this Act is not sufficient to meet the liabilities specified in any lower category, he shall not be required to examine the liabilities in respect of such lower category.

18. *Admission or rejection of claims.*—(1) After examining the claims with reference to the priority set out in the Schedule, the Commissioner shall fix a certain date on or before which every claimant shall file the proof of his claim or be excluded from the benefit of the disbursement made by the Commissioner.

(2) Not less than fourteen days' notice of the date so fixed shall be given by advertisement in one issue of the daily newspaper in the English language and one issue of the daily newspaper in Tamil and every such notice shall call upon the claimant to file the proof of his claim with the Commissioner within the time specified in the advertisement.

(3) Every claimant who fails to file the proof of his claim within the time specified by the Commissioner shall be excluded from the disbursements made by the Commissioner.

(4) The Commissioner shall, after such investigation as may, in his opinion, be necessary and after giving the owner of the undertaking an opportunity of refuting the claim and after giving the claimants a reasonable opportunity of being heard in writing, admit or reject the claim in whole or in part.

(5) The Commissioner shall have the power to regulate his own procedure in all matters arising out of the discharge of his functions including the place or places at which he shall hold his



sittings and shall, for the purpose of making any investigation under this Act, have the same powers as are vested in a civil court under the Code of Civil Procedure, 1908 (Central Act V of 1908), while trying a suit, in respect of the following matters, namely :—

(a) the summoning and enforcing the attendance of any witness and examining him on oath;

(b) the discovery and production of any document or other material object producible as evidence;

(c) the reception of evidence on affidavits; and

(d) the issuing of any commission for the examination of witnesses.

(6) Any investigation before the Commissioner shall be deemed to be a judicial proceeding within the meaning of sections 193 and 228 of the Indian Penal Code (Central Act XLV of 1860) and the Commissioner shall be deemed to be a civil court for the purposes of section 195 and Chapter XXVI of the Code of Criminal Procedure, 1973 (Central Act 2 of 1974).

(7) A claimant who is dissatisfied with the decision of the Commissioner may prefer an appeal against the decision to the principal civil court of original jurisdiction within the local limits of whose jurisdiction the undertaking is situated :

Provided that where a person who is a Judge of the High Court is appointed to be the Commissioner, such appeal shall lie to the High Court and such appeal shall be heard and disposed of by not less than two Judges of the High Court.

19. *Disbursement of money by the Commissioner to claimants.*—After admitting a claim under this Act, the amount due in respect of such claim shall be credited by the Commissioner to the relevant fund or be paid to the person or persons to whom such sums are due in three equal annual instalments and on such credit or payment, the liability of the owner in respect of such claim shall stand discharged.

20. *Disbursement of amount to the owner.*—(1) If out of the moneys paid to the owner in relation to the undertaking there is a balance left after meeting the liabilities as specified in the Schedule, the Commissioner shall disburse such balance to the owner of the undertaki- -

(2) Before making any payment to the owner under sub-section (1), the Commissioner shall satisfy himself as to the rights of such persons to receive the whole or any part of such amount and in the event of there being a doubt or dispute as to the right of the person to receive the whole or any part of the amount referred to in sections 6 and 7, the Commissioner shall refer the matter to the court and make the disbursement in accordance with the decisions of the court.

(3) Where any machinery, equipment or other property in the undertaking has vested in the Government company, but such machinery, equipment or other property does not belong to the owner of such undertaking, the amount specified in sections 6 and 13 shall, on a reference made to it by the Commissioner, be apportioned by the court between the owner of the undertaking and the owner of such machinery, equipment or other property having due regard to the value of such machinery, equipment or other property on the appointed day.

*Explanation.*—In this section, "court", in relation to the undertaking, means the principal civil court of original jurisdiction within the local limits of whose jurisdiction the undertaking is situated.

21. *Undisbursed or unclaimed amounts to be deposited to the general revenue account.*—Any money paid to the Commissioner which remains undisbursed or unclaimed for a period of three years from the last day on which the disbursement was made shall be transferred by the Commissioner to the general revenue account of the Government, but a claim to any money so transferred may be preferred to the Government by the person entitled to such payment and shall be dealt with as if such transfer had not been made, the order, if any, for payment of the claim being treated as an order for the refund of revenue.

## CHAPTER VII.

### MISCELLANEOUS.

22. *Assumption of liability.*—(1) Where any liability of the owner of the undertaking arising out of any item specified in category I of the Schedule is not discharged fully by the Commissioner out of the amount paid to him under the Act, the





Commissioner shall intimate in writing to the Government the extent of the liability which remains undischarged, and that liability shall be assumed by the Government.

(2) The Government may, by order, direct the Government company to take over any liability assumed by the Government under sub-section (1), and on receipt of such direction, it shall be the duty of the Government company to discharge such liability.

23. *Act to override all other enactments.*—The provisions of this Act shall have effect notwithstanding anything inconsistent therewith contained in any other law for the time being in force or in any instrument having effect by virtue of any law other than this Act or in any decree or order of any court, tribunal or authority.

24. *Contracts to cease to have effect unless ratified by Government.*—(1) Every contract entered into by the owner or occupier of the undertaking for any service, sale or supply and in force immediately before the appointed day shall, on and from the expiry of one hundred and eighty days from such date, cease to have effect unless such contract is, before the expiry of that period, ratified, in writing, by the Government company and in ratifying such contracts the Government company may, with the previous approval of the Government, make such alterations or modifications therein as it may think fit:

Provided that the Government company shall not omit to ratify a contract, and shall not make any alteration or modification in a contract, unless it is satisfied that such contract is unduly onerous or has been entered into in bad faith or is detrimental to the interests of the undertaking.

(2) The Government company shall not omit to ratify a contract, and shall not make any alteration or modification therein, except after giving to the parties to the contract a reasonable opportunity of being heard and except after recording in writing its reasons for refusal to ratify the contract or for making any alteration or modification therein.

25. *Penalties.*—Any person who,—

(*a*) having in his possession, custody or control any property forming part of the undertaking, wrongfully withholds such property from the Government or the Government company, or any person authorised by the Government or the Government company, as the case may be, in this behalf,

(*b*) wrongfully obtains possession of, or retains any property forming part of the undertaking or wilfully withholds or fails to furnish to the Government, the Government company or any person specified by the Government or Government company, as the case may be, any document relating to such undertaking which may be in his possession, custody or control or fails to deliver to the Government company or any person specified by the Government company any assets, books of account, registers or other documents in his custody relating to the undertaking, or,

(*c*) wrongfully removes or destroys any property forming part of the undertaking or prefers any claim under this Act, which he knows or has reasonable cause to believe to be false or grossly inaccurate, shall be punishable with imprisonment for a term which may extend to two years, or with fine which may extend to ten thousand rupees, or with both.

26. *Offences by companies.*—(1) Where an offence under this Act has been committed by a company, every person who at the time the offence was committed was in charge of, and was responsible to, the company for the conduct of the business of the company as well as the company, shall be deemed to be guilty of the offence and shall be liable to be proceeded against and punished accordingly :

Provided that nothing contained in this sub-section shall render any such person liable to any punishment, if he proves that the offence was committed without his knowledge or that he had exercised all due diligence to prevent the commission of such offence

(2) Notwithstanding anything contained in sub-section (1), where any offence under this Act has been committed by a company and it is proved that the offence has been committed with consent or connivance of, or is attributable to any neglect on the part of, any director, manager, secretary or other officer of the company,





such director, manager, secretary or other officer shall be deemed to be guilty of that offence and shall be liable to be proceeded against and punished accordingly.

*Explanation.*—For the purposes of this section,

(*a*) " company " means any body corporate and includes a firm or other association of individuals; and

(*b*) " director ", in relation to a firm, means a partner in the firm.

27. *Protection of action taken in good faith.*—No suit, prosecution or other legal proceeding shall lie against the Government or any officer of the Government or the Government company or any officer or other person authorised by the Government company for anything which is in good faith done or intended to be done under this Act.

28. *Delegation of powers.*—(1) The Government may, by notification, direct that all or any of the powers exercisable by it under this Act, other than the power under section 29, may also be exercised by any person or persons as may be specified in the notification.

(2) Whenever any delegation of power is made under sub-section (1), the person to whom such power has been delegated shall act under the direction, control and supervision of the Government.

29. *Power to make rules.*—(1) The Government may make rules to carry out the provisions of this Act.

(2) In particular, and without prejudice to the generality of the foregoing power, such rules may provide for all or any of the following matters, namely :—

(*a*) the time within which and the manner in which an intimation referred to in sub-secion (4) of section 4 shall be given;

(*b*) the manner in which monies in any provident or other fund referred to in section 11 shall be dealt with ;

(*c*) any other matter which is required to be, or may be, prescribed.

(3) All rules made under this Act shall be published in the *Tamil Nadu Government Gazette* and, unless they are expressed to come into force on a particular day, shall come into force on the day on which they are so published.

(4) All notifications issued under this Act shall, unless they are expressed to come into force on a particular day, come into force on the day on which they are published.

(5) Every rule made or notification issued under this Act shall, as soon as possible, after it is made or issued, be placed on the table of both Houses of the Legislature, and if, before the expiry of the session in which it is so placed or the next session, both Houses agree in making any modification in any such rule or notification or both Houses agree that the rule or notification should not be made or issued, the rule or notification shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be, so, however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule or notification.

30. *Power to remove difficulties.*—If any difficulty arises in giving effect to the provisions of this Act, the Government may, by order not inconsistent with the provisions of this Act, remove the difficulty:

Provided that no such order shall be made after the expiry of a period of two years from the appointed day.

31. *Declaration as to the policy of the State.*—It is hereby declared that this Act is for giving effect to the policy of the State towards securing the principles specified in clause (*b*) of Article 39 of the Constitution.

*Explanation.*—In this section, "State" has the same meaning as in Article 12 of the Constitution.



## THE SCHELUDE.

(*See* sections 16, 17, 18 and 22.)

ORDER OF PRIORITIES FOR THE DISCHARGE OF LIABILITIES IN RESPECT OF THE UNDERTAKING.

### PART A.

POST-TAKE-OVER MANAGEMENT PERIOD.

*Category I*—

(*a*) Loans advanced by a Bank.

(*b*) Loans advanced by an institution other than a Bank.

(*c*) Any other loan.

(*d*) Any credit availed of for purpose of trade or other manufacturing operations.

*Category II*—

(*a*) Revenue, taxes, cesses, rates or any other dues to the Central Government or a State Government.

(*b*) Any other dues.

### PART B.

PRE-TAKE-OVER MANAGEMENT PERIOD.

*Category III*—

Secured loans.

*Category IV*—

Revenue, taxes, cesses, rates or any other dues to the Central Government, a State Government, a local authority or a State Electricity Board.

*Category V*—

(*a*) Any credit availed of for purpose of trade or manufacturing operations.

(*b*) Any other dues.

G. M. ALAGARSWAMY.
*Secretary.*

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

---

திங்கட்கிழமை, 1975 நவம்பர் 10.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### குறுகியகால வினா.

### *Text books in Minority Languages.*

1. S. N. Q.—THIRUVALARGAL K. ARIVAZHAGAN and S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) whether text-books in Minority Languages like Telugu, Kannada, Urdu, etc., for new Mathematics, Science, History and Geography subjects from Standards VI to IX have been published by the Tamil Nadu Text Book Society; and

(b) if not, the arrangements proposed to be made in this regard for the children studying those subjects in such languages?

### சிறுபான்மை மொழிகளில் பாடப் புத்தகங்கள்

திருவாளர்கள் க. அறிவழகன் & செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) தமிழ் நாடு பாடப் புத்தகக் கழகத்தினால், ஆறு முதல் ஒன்பது வரையிலான வகுப்புகளுக்குரிய புதிய கணிதம், அறிவியல், வரலாறு, பூகோளம் ஆகிய பாடப் புத்தகங்கள் தெலுங்கு, கன்னடம், உருது முதலிய சிறுபான்மை மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளனவா ?

(இ) இல்லை எனில், அந்த மொழிகளில் அப்பாடங்களைப் பயிலும் மாணவர்கள் தொடர்பாக மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இவ்விஷயத்தில் சிறுபான்மை மொழிகள் என்பது தெலுங்கு, உருது, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளைக் குறிக்கும். ஐந்து ஆறு படிவங்களுக்கு சிறுபான்மை மொழிகளில் பாடநூல் நிறுவனம் கீழ்க்கண்ட புத்தகங்களை வெளியிட்டுள்ளது :—

| | | |
|---|---|---|
| 1 ஆறாம் வகுப்பு வரலாறு பாட புத்தகம். | .. | தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது ஆகிய மொழிகளிலும். |
| 2 ஏழாம் வகுப்பு வரலாறு பாட புத்தகம். | .. | தெலுங்கு, மலையாளம், ஆகிய இரு மொழிகளிலும். |
| 3 ஆறாம் வகுப்பு புவியியல் பாட புத்தகம். | .. | நான்கு சிறுபான்மை மொழிகளிலும். |
| 4 ஏழாம் வகுப்பு புவியியல். பாட புத்தகம். | .. | தெலுங்கு மொழியில் மட்டும். |
| 5 ஆறாம் வகுப்பு கணித பாட புத்தகம். | .. | தெலுங்கு மொழியில் மட்டும். |
| 6 ஆறாம் வகுப்பு அறிவியல் பாட புத்தகம். | .. | தெலுங்கு, மலையாளம், ஆகிய மொழிகளில் மட்டும். |

ஆறு, ஏழு படிவங்களுக்கு வெளியிட்டுள்ள மொத்த நூல்கள் 14 ஆகும்.

(இ) புதிய பாடத் திட்டத்தின்படி எட்டாம் வகுப்பு முடிய கணிதம், அறிவியல், வரலாறு, புவியியல் ஆகிய பாடங்களில் சிறுபான்மை மொழியில் புத்தகங்கள் வெளியிட தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஓசூர் வட்டத்திலே உள்ள பள்ளிகளில் 99 சதவிகிதம் தெலுங்கு படிக்கக்கூடிய பிள்ளைகளாக இருக்கின்றனர். அரசின் புதிய பாடத் திட்டம் வந்த பிறகும்கூட, இந்தப் பாடப் புத்தகங்கள் அச்சடிக்கப்படாமல் மாணவர்களுக்குச் சங்கடமாக இருக்கின்றது. அரசு கொள்கையாக ஏற்றிருக்கக்கூடிய புத்தகங்கள் அச்சடிக்கப்படாததற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எந்தெந்த புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன என்ற புள்ளி விவரங்களைக் குறிப்பிட்டேன். மேலும், சிறுபான்மை மொழியினருக்கு புத்தகங்கள் அச்சிடுவதற்காக 4—7—1975 அன்று அரசு ஒரு ஆணை பிறப்பித்தது. இதனால் நான்கு மொழி பெயர்ப்புக் கழகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இக்கழகங்களால் எட்டாம் வகுப்பு வரையிலே உள்ள சிறுபான்மை பாடப் புத்தகங்கள் மொழி பெயர்க்கப்பட்டு அச்சடிப்பதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 18 டைட்டில்களில் இக்கழகம் அளிக்க இருக்கிறது. அவை வந்தவுடன் எட்டாம் வகுப்புவரையிலும் பாடப் புத்தகங்கள் கிடைக்கும். 9, 10, 11 ஆவது வகுப்புகளுக்கான புத்தகங்களை மொழி பெயர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



**திரு. கே. எஸ். கணபதி :** விருப்பப்பாடமான சமஸ்கிருத மொழியிலே 10, 11-வது வகுப்புகளுக்கான புத்தகங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நாம் எதையெதையெல்லாம் பாடப் புத்தகமாகத் தயாரிப்பது என்பதுபற்றியும் சிறுபான்மைப் பகுதியினர் மாநிலங்களில் வெளியிட்டுள்ள புத்தகங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாமா அல்லது அதே மொழியிலே தனியாகப் புத்தகங்கள் தயாரித்து அளிப்பதா என்பதுபற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

**திரு. செ. முத்துசாமி :** எட்டாம் வகுப்பு வரையிலே அடுத்த ஆண்டு புத்தகங்கள் வந்துவிடும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். 9, 10, 11-வது வகுப்புகளுக்கு, குழு ஆராய்ந்த பிறகுதான் முடிவெடுக்கும் என்று சொல்கிறார்கள். தனியார் கம்பெனிப் புத்தகங்கள் வாங்குவதற்கான சூழ்நிலையும் இல்லை. இந்த நிலையைத் தவிர்க்க, சிறுபான்மையினருக்கு வேண்டிய புத்தகங்களை ஆந்திரா பகுதியிலே இருப்பவர்கள் மூலமாக அச்சிடுவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கூடுமானவரையிலே அவர்களுக்கு சிறிய அளவிலே புத்தகங்கள் வெளியிடும்போது, எந்த அளவுக்கு அவர்கள் பயன்படுத்துகிறார்கள் என்பதைப் பார்த்து, குறிப்பாக வரலாறை எடுத்துக்கொண்டால் தேவை என்ற அளவிலே 6,544 புத்தகங்களை வெளியிட்டிருக்கிறோம். ஆனால் 837 புத்தகங்கள்தான் வாங்கியிருக்கிறார்கள். அதே மாதிரி ஐந்தாம் வகுப்பு வரலாற்றுப் புத்தகங்கள் 10,036 வெளியிட்டிருக்கிறோம். வாங்கியிருப்பது 2,055தான். ஆறாம் வகுப்புக்கு 10,147 தேவை. ஆனால் 2,009 புத்தகங்கள்தான் வாங்கியிருக்கிறார்கள். ஏழாம் வகுப்புக்கு 8,041 புத்தகங்களில் 804 புத்தகங்கள்தான் வாங்கியிருக்கிறார்கள். ஒவ்வொரு வகைப் புத்தகங்களை வாங்குவதற்கு சிறுபான்மையினர் பள்ளிகளில் 32 அல்லது 42 பேர்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் 'சைக்ளோஸ்டைல்' செய்து புத்தக வடிவிலே கொடுக்கலாமா என்பதுபற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். கர்நாடகா, ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களிலிருந்து நாம் புத்தகங்களைத் தருவிக்க முடியாது. ஏனென்றால் அவர்கள் சிலபஸும் நம்முடைய சிலபஸும் வேறுபடும். நாம் தமிழில் எவ்வாறு சிலபஸ் போட்டிருக்கிறோமோ அந்த அடிப்படையில் மற்ற மொழிப் புத்தகங்களையும் வெளியிட வேண்டியிருக்கிறது. இதற்கான முயற்சிகள் எடுக்க 4-7-1975 அன்று பாட நூல் நிறுவனத்துக்கு ஆணையிடப்பட்டது. அந்தப் புத்தகங்களுக்கான மொழிபெயர்ப்பில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். 18 டைட்டில்களில் எட்டாவது வரையிலே புத்தகங்கள் வர இருக்கின்றன. அந்த அளவிலே படிப்படியாக இன்னும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** தமிழ் நாடு எல்லையில் ஓசூர் வட்டத்தில் உள்ள பள்ளியில் 100-க்கு 99 பள்ளிகளில் தமிழைத் தவிர வேறு மொழியைப் பாடமொழியாகக் கொண்டு மாணவர்கள் பயில்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் சொன்னார்கள். அது சரியான தகவல்தானா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஓசூர் பகுதி முழுவதும் என்று சொல்வதற்கில்லை. சில இடங்களில் 99 சதவிகிதத்தினர் தெலுங்கு பேசுபவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இருக்கும் இடங்களில் இப்படிப் பெரும்பான்மையானவர்கள் பள்ளிகளில் இருக்கிறார்கள்.

**திரு. செ. முத்துசாமி :** 99 சதம் மாணவர்கள் என்று தவத்திரு அடிகளார் அவர்கள் சொன்னார்கள். நான் சொன்னது சில பள்ளிகளிலே 99 சதவிகிதம் மாணவர்கள் தெலுங்கு மீடியம் கொண்டு படிக்கிறார்கள். மேலும் அது என்னுடைய தொகுதி என்ற அளவிலேதான் விளக்கமாகச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 99 சதவிகிதம் மாணவர்கள் என்று தவறாக எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்

**திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 10 ஆயிரம் புத்தகங்கள் போட்டால், 2,500 புத்தகங்கள்தான் விற்பனை ஆகின்றன என்று கருத்துத் தெரிவித்தார்கள். எவ்வளவு புத்தகம் போட வேண்டுமென்று அவர்கள் கணக்கிட்டது தவறா அல்லது புத்தகங்கள் வாங்காமல் தேங்கிக் கிடக்கின்றனவா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தமிழ் நாட்டிலே பொதுவாகவே இந்த நிலைதான் இருக்கிறது. ஆறு லட்சம் மாணவர்கள் இருக்கிறார்கள் ; 6 லட்சம் புத்தகங்கள் அச்சடித்து வழங்கினால், இரண்டரை லட்சம் புத்தகங்கள்தான் வாங்கியிருக்கிறார்கள். கணக்கிடுவது 6 லட்சம். ஆனால் வாங்கியிருப்பது இரண்டரை லட்சம். மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்றே நமக்குத் தெரியவில்லை. இந்த நிலைதான் இங்கேயும் இருக்கிறது.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** உருது பாடப் புத்தகங்களைப் பொறுத்த வரையிலே, சில பள்ளிகளில் புத்தகங்கள் அச்சடித்துக் கொடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தேர்வுக்கு இன்னும் நான்கைந்து மாதங்கள் தான் இருக்கின்றன. இந்த நிலையில் மாணவர்கள் எப்படித் தேர்வு எழுதுவார்கள், இதற்கு அரசு என்ன வழிவகை செய்யும் என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தமிழிலே அப்படிப்பட்ட நிலை இல்லை. இந்த ஆண்டு சிறுபான்மை மொழியினருக்கு எதையெதை மாற்றலாம் என்று ஏப்ரல், மே மாதங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் இப்போது இருந்துகொண்டிருக்கின்றது. இன்னும் முறையாக என்னென்ன புத்தகங்கள் தமிழிலே இருக்கின்றனவோ அவைகளை வேறு மொழிகளிலே கொண்டுவருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

## *Katharippulam High School.*

*91. *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact, that the Correspondent of the Katharippulam High School of Tiruthuraipoondi taluk, has given notice to all the teachers serving in that school, stating that it is not possible to run the school;

(*b*) if so, the number of teachers who are likely to lose their job due to this;

(*c*) whether the Correspondent has consented to hand over the school to the Government; and

(*d*) if so, the action proposed to be taken by the Government in this regard?

### கத்திரிப்புலம் உயர்நிலைப் பள்ளி

**திரு. கே. எஸ். கணபதி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) திருத்துறைப்பூண்டி வட்டத்திலுள்ள கத்திரிப்புலம் உயர்நிலைப் பள்ளி நிர்வாகி, அப்பள்ளியை நடத்த இயலாது என்று காரணம் காட்டி அதனைச் சார்ந்த ஆசிரியர் அனைவருக்கும் முன் அறிவிப்பு அளித்துள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் காரணமாக எத்தனை ஆசிரியர்கள் வேலை வாய்ப்பு இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது ?

(உ) அப்பள்ளியை அரசுக்கே கொடுத்துவிட நிர்வாகி இசைவு தெரிவித்துள்ளாரா ?

(எ) ஆமெனில், அதன்மீது அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(இ) 12 ஆசிரியர்கள், நான்கு ஆசிரியர் அல்லாத பணியாளர்கள்.

(உ) ஆம்.

(எ) 1976-77 ஆம் ஆண்டு முதல் இப்பள்ளியை மூடுவதற்காக அனுமதி வழங்கலாமென்றும், அதற்குப் பதிலாக அந்தப் பள்ளியின் சொத்துக்களை நன்கொடையாக ஏற்று, புதிய பள்ளி ஒன்றினைத் துவங்கலாமென்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. எஸ். கணபதி : இந்தப் பள்ளி ஆசிரியர்களுக்கு இந்த ஆண்டு முழுவதும் சம்பளம் வழங்கப்படவில்லை என்பது உண்மையா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட நிலை இல்லை என்றுதான் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இப்படி எடுத்துக்கொள்ளும்போது, ஆசிரியர் அல்லாத ஊழியர்களை அரசாங்க ஊழியர்களாக எடுத்துக்கொள்ளலாம் என்ற அளவில்தான் ஆணையிடப்பட்டிருக்கிறது.

* 92. Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU G SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the salary due to teachers working in a High School at Katharippullam, Tiruthuraipoondi taluk, Thanjavur district, has not been paid from the month of June 1975 by the management; and

(b) if so, the action proposed to be taken by the Government in the matter?

திரு. கே. எஸ். கணபதி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், கத்தரிப்புலத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு, அப்பள்ளியின் நிர்வாகத்தினர் 1975 ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து சம்பளம் வழங்கவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



*Pay of Teachers working as Agricultural Maistries.*

* 93. Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the scale of pay given to the teachers working as Agricultural Maistries in private schools of Thanjavur district, as per the recommendations of the Second Pay Commission has been reduced and whether they are at present given pay at reduced rates;

(b) if so, the number of teachers so affected in that District; and

(c) the steps proposed to be taken by the Government in this regard ?

**விவசாய மேஸ்திரிகளாகப் பணியாற்றும் ஆசிரியர்களின் சம்பளம்.**

திரு. கே. எஸ். கணபதி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தஞ்சை மாவட்டத்திலுள்ள தனியார் பள்ளிகளில் விவசாய மேஸ்திரியாகப் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இரண்டாவது ஊதிய குழு சிபாரிசுப்படி கொடுக்கப்பட்டு வந்த சம்பளம் குறைக்கப்பட்டு தற்சமயம் குறைந்த சம்பளமே கொடுக்கப்பட்டு வருகிறதா ?

(இ) ஆமெனில், அம் மாவட்டத்தில் இப்படி பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் எத்தனை பேர் ?

(உ) அவர்களைப் பொறுத்து அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஒன்று.

(உ) இப்பொருள் ஆய்விலுள்ளது.

## Book on Art Treasure of Tamil Nadu.

*54 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any proposal with the Tamil Nadu Tourism Development Corporation to bring out a book on the art treasure of Tamil Nadu, for the information of Tourists from abroad; and

(b) if so, when it is expected to be released?

## தமிழ் நாடு அருங்கலைப் பொருட்கள்பற்றி புத்தகம்.

**திரு. கே. எஸ். கணபதி** (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் தகவலுக்காக தமிழ் நாட்டில் உள்ள அருங்கலைப் பொருட்கள்பற்றி ஒரு புத்தகம் வெளியிடும் செயற்குறிப்பு ஏதாவது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஊள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது ?

(பிற்பகல் 4-10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, (அ) புதிய நூல் கொணடுவரும் செயற்குறிப்பு இல்லை ; ஆனால் சிறுசிறு நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன.

(இ) இவ்வினா எழவில்லை.

**திரு. கே. எஸ். கணபதி:** மேலவைத் துணைத் தலைவரவர்களே, பல மேலை நாடுகளில் சுற்றுப்பயணம் செய்பவர்களுக்கு பலவிதமான கைப்புத்தகங்களை அச்சடித்துக் கொடுத்திருக்கிறார்கள். அநதப் புத்தகங்களைப் பார்க்கும் போதே, அந்த நாடுகளுக்குச் செல்ல வேண்டுமென்ற அவா ஏற்படுகிறது. அந்த அடிப்படையிலே, இங்கு வருபவர்களுக்கு, வராதவர்களுக்கு வர வேண்டு மென்று ஆர்வமூட்டும் வகையில் கைப்புத்தகங்களை அச்சடித்துக் கொடுக்க அரசு முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துணைத் தலைவரவர்களே, அப்படிப்பட்ட கைப்புத்தகங்களை சிறிய அளவிலே அச்சிட்டு, கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக சுற்றுலாத் துறையினர் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.





அந்த வகையிலே, அகில இந்திய அளவிலே நாம் முதல் பரிசைப் பெற்றிருக் கிறோம். ஆனால் சிறுசிறு புத்தகங்களாக நாம் அச்சிட்டு வழங்குகிறோம். கொடைக்கானல், மகாபலிபுரம் போன்ற முக்கியமான இடங்களைப்பற்றித் தனித்தனியாக நாம் அச்சிட்டு வழங்குகிறோம். நேற்று வந்த காமன்வெல்த் பார்லிமென்டரி டெலிகேஷன் உறுப்பினர்களுக்குக்கூட 25 ரூபாய் பெறுமான முள்ள புத்தகத்தை வழங்கியிருக்கிறோம். அது, தமிழகக் கோவில்களிலுள்ள சிற்பக் கலையின் சிறப்பைப்பற்றிச் சொல்லுகின்ற முழுப் புத்தகம். சிற்பங் களின் நிழற் படங்களையெல்லாம் தொகுத்துக் கொடுத்திருக்கிறோம். இப்படி சிறிய சிறிய புத்தகங்களாக இருக்கின்றன. எல்லாவற்றையும் சேர்த்து ஒரே புத்தகமாகக் கொண்டு வரவில்லை.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** சுற்றுலாத் துறையினரால் சிறுசிறு புத்தகங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றனவென்று அமைச்சரவர்கள் சொன் னார்கள். வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் எந்தெந்த இடங்களுக்குச் செல்ல வேண்டும், எங்கெங்கு தங்க வேண்டும், எங்கெங்கு ஹோட்டல்கள் இருக் கின்றன, அந்தந்த ஊர்களிலுள்ள சிறப்புக்கள் என்ன என்பது பற்றிய முழு விவரங்களைக் கொண்டுள்ள புத்தகத்தை, தமிழகத்தைப் பொறுத்தவரையில் வெளியிடப்போவதாக அமைச்சரவர்கள் சொல்லியிருந்தார்கள். அதுபற்றிய நிலையை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** சுற்றுப் பயணிகளுக்குப் பயன்படும் வகையில், தமிழகத்தைப்பற்றிய முழு விவரங்கள் அடங்கிய "Tamil Nadu with Smile" என்ற புத்தகத்தை வெளியிட்டிருக்கிறோம். அதில் முக்கியமான இடங்களைப்பற்றிய தேவையான குறிப்புகள் இருக்கின்றன. அந்தந்த ஊர்களுக்குப் போகும்போது—சென்னைக்கு வந்தால் சென்னையைப் பற்றிய புத்தகமும், வேறு ஊர்களுக்குப் போகும்போது அந்த ஊர்களைப் பற்றிய புத்தகங்களும் தனித்தனியாகக் கொடுக்கப்படுகின்றன. சிற்பக் கலையைப்பற்றிக்கூட தனிப் புத்தகம் வெளியிட்டிருக்கிறோம். கைவினைப் பொருட்களைப்பற்றிய தனிப் புத்தகத்தை வெளியிட்டிருக்கிறோம். சுவாமிமலை வெண்கலப் பாத்திரம், திருநெல்வேலி கடைசல் பாத்திரம் போன்ற பொருள் களைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட விவரங்களடங்கிய சிறு சிறு புத்தகங்கள் வைத்திருக்கிறோம். எல்லாவற்றையும் சேர்த்து, ஒரு புத்தக மாகக் கொண்டுவர வேண்டுமென்றால், 250 ரூபாய் அளவுக்கு ஒரு புத்தகத் திற்குச் செலவாகும்.

THIRU G. VASANTHA PAI: Sir, when books like this and a lot of literature are circulated, will the Government at least see that the buses which take these tourists do not break down?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கூடுமான வரையில் இப்போது டூரிஸ்ட் பஸ்கள் நல்ல முறையில் இயங்கிக் கொண்டு வருகின்றன. நேற்று நின்றுவிட்டது. தனியார்கள் ஓட்டுகின்ற கார்கள்கூட மவுண்ட் ரோடில் நிற்கத்தான் செய்கின்றன. மற்ற பஸ்களோடு ஒப்பிடும்போது, இந்த பஸ்கள் பழுது அடையாமல்தான் இருக்கின்றன. இவை வாரத்திற்கு ஒரு நாள் ஓடுகின்றன. ஓரிரு இடங்களில் பழுது ஏற்படுகிறது. விமானத்திற்குக்கூட பழுது ஏற்படுகிறது. டூரிஸ்ட் பஸ்களைப் பொறுத்தவரையில், அவற்றை நவீன முறையில், நல்ல வசதிகளுடன் வைத்திருக்கிறார்கள்.

THIRU G. VASANTHA PAI: Sir, both the buses of the Tamil Nadu Tourism Development Corporation broke down yesterday when the Commonwealth Parliamentary Delegation came and were taken to the Integral Coach Factory.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைத்தான் நான் குறிப்பிட்டேன். ஆகையால்தான் அவர்கள் காலதாமதமாக சட்ட மன்றத்திற்கு வரும் நிலை ஏற்பட்டது. இவர்கள் வரும் நோக்கில் நிற்கக்கூடாதென்பது அந்த பஸ்களுக்குத் தெரியவில்லை. இரண்டும் ஒன்றாகச் சேர்ந்துவிட்டது.

திரு. சி. வி. ராஜகோபால் : என்னைப்போன்ற சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பஸ் பாஸ், டூரிஸ்ட் பஸ்களைப் பொறுத்த வரையில் செல்லாதென்று சொல்லி, அவற்றில் ஏற்றாமல் சென்றுவிடுகிறார்கள். எனவே அந்த நிலையை நீக்க ஆவன செய்யப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சட்ட மன்ற உறுப்பினர் சுற்றுப்பயணியாக மாறுகின்றபோது, அதற்கான தகுதி, திறமையோடு இருக்க வேண்டும். அந்த வகையிலே பணம் செலுத்தத்தான் வேண்டும். சட்ட மன்ற உறுப்பினர் என்று போகும்போது, அவர்கள் பேருந்துகளில் செல்லலாம்.

*Government Boys' High School, Koothanallur.*

*95 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state :—

(a) whether any representation has been received by the Government during 1975, from the public including parents, on wide-spread indiscipline in the Government Boys' High School, Koothanallur, Thanjavur district; and



(b) if so, the action, that has so far been taken in the matter?

கூத்தாநல்லூர் அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி.

திரு. கே. எஸ். கணபதி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், கூத்தாநல்லூரிலுள்ள அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் பரவலாக ஒழுங்கீனம் இருப்பது குறித்து, பெற்றோர்கள் உட்பட பொதுமக்களிடமிருந்து 1975-ம் ஆண்டில் முறையீடு ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அது குறித்து இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இரு பி.டி. பட்டதாரி ஆசிரியர்கள் மாற்றப்பட்டுள்ளனர்.

திரு. கே. எஸ். கணபதி : துணைத் தலைவரவர்களே, ஒழுங்கீனமென்று பொதுவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எப்படிப்பட்ட ஒழுங்கீனமென்பதை அறிய விரும்புகிறேன். ஒழுங்கீனம் ஏற்பட்டது குறித்து, பரிசீலனை செய்து அந்த ஆசிரியர்கள் மாற்றம் செய்யப்பட்டார்களா ? அப்படி மாற்றம் செய்வதே தண்டனையாகுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நிர்வாகத்தினுடைய தன்மையைப் பொறுத்து, அந்த ஆசிரியர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். இரண்டு ஆசிரியர்களை மாற்றும்படியாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே மாற்றப்பட்டிருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : Widespread indiscipline என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டு ஆசிரியர்களை மாற்றுவதாலேயே Widespread indiscipline control -க்கு உட்பட்டுவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்களைப் பற்றிச் சொல்லும்போது, "as it was suspected that they were responsible for the students' indiscipline—It is reported that the school is functioning smoothly now"

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாணவர்களிடையிலே அமைதியின்மை ஏற்படுவதற்கு இந்த ஆசிரியர்கள் காரணமாக இருந்தார்கள். அந்த வகையிலே மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

*Fresh Water Bearing Zones.*

* 96 Q.—THIRU V. VENGA: Will the Hon. the Minister for Health be pleased to state :—

(a) whether the Geological Survey of India had undertaken any survey to explore the availability of fresh water bearing zones along the coast of Madras City in recent months; and

(b) if so, the details thereof?

குடிநீர் கிடைக்கும் பகுதிகள்.

திரு. வி. வெங்கா: மாண்புமிகு மக்கள்-நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) அண்மைக் காலத்தில் சென்னை மாநகரக் கடற்கரைப் பகுதி நெடுகிலும் குடிநீர் கிடைக்கும் பகுதிகளைக் கண்டறிய இந்தியப் புவியியல் ஆய்வு நிறுவனம், ஆய்வு எதுவும் செய்ததா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்தியப் புவியியல் அளவைச் சங்கத்தின் குழு சென்னைக் கடலோரப் பகுதிகளில் கண்ணாடித் தொழிற்சாலைகளுக்கு தேவையான வெண்மணல் படிமம் குறித்து ஆய்வு செய்தபோது, திருவான்மியூர் கடலோரப் பகுதிகளில் நல்ல நில நீர் கிடைப்பதைக் கண்டறிந்து தெரிவித்தனர். நிலநீர் இருப்பதைக் கண்டறியத் தனி ஆய்வு எதும் மேற்கொள்ளப்படவில்லை.

THIRU G. VASANTHA PAI: Sir, are the Government aware that fresh water in Tiruvanmiyur belt is available only up to 10 to 12 feet and beyond that depth, it is salt water? Will the Government take precaution not to go deeper than 12 feet?

THE HON. THIRU K. ANBAZHAGAN: At that time it was found that there was some water to supply to Madras City and then the venture was undertaken to the extent that was possible for them to pump out water. They have done it. Now I do not think the necessity continues and, therefore, they will not go deeper.



*Allowances for Medical Officers.*

* 97. Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Health be pleased to state :—

(a) whether it is a fact that compensatory and special compensatory allowances are being paid to Medical Officers with M.B., B.S. qualification working in Government Hospitals and Primary Health Centres;

(b) if so, the special nature of work for which the same is being paid to them; and

(c) whether such special nature of work is not being done by the Medical Officers with M.B., B.S. qualification working in Panchayat Union Dispensaries?

மருத்துவ அலுவலர்களுக்குப் படி.

திரு. கே. எஸ். கணபதி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு மக்கள்-நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) அரசு மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பணியாற்றும் எம்.பி., பி.எஸ். பட்டம் பெற்ற மருத்துவ அலுவலர்களுக்கு ஈட்டுப்படியும் சிறப்பீட்டுப் படியும் வழங்கி வரப்படுவது உண்மையா?

(இ) ஆமெனில், எந்தச் சிறப்புப் பணிக்காக, இது அவர்களுக்கு வழங்கப்படுகிறது?

(உ) ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களில் பணியாற்றும் எம்.பி.,பி.எஸ். பட்டம் பெற்ற மருத்துவ அலுவலர்கள் அது போன்ற சிறப்புத் தன்மை வாய்ந்த பணியாற்றவில்லையா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, (அ) & (இ) அரசு மருத்துவமனைகளிலும், அரசு மருந்தகங்களிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பணியாற்றும் தேர்வுநிலை அறுவை

சிகிச்சை உதவி மருத்துவர்களும், அறுவை சிகிச்சை மருத்துவர்களும் கீழ்க் காணும் ஈட்டுப் படியைப் பெறுவதற்கு தகுதியுடையவர் ஆவர் :—

(1) நகராட்சி பகுதிகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பணியாற்றும் மருத்துவர்கள் நீங்கலாக, பிற இடங்களில் (rural areas) பணியாற்றுவதற்கு மாத மொன்றுக்கு 75 ரூபாய் சிறப்பு ஈட்டுப்படி வழங்கப்படுகிறது.

(2) மருத்துவ அதிகாரி எந்த அரசு மருத்துவ நிலையத்தில் பணியாற்றுகிறாரோ அந்த மருத்துவ நிலையத்திலிருந்து 5 மைல் தொலைவிற்குள் அல்லது 8 கிலோ மீட்டர் தொலைவிற்குள் பதிவு பெற்ற மருத்துவர்கள் ஒருவர் அல்லது பலர் தனிப்பட்ட முறையில் மருத்துவராகத் தொழில் புரியக்கூடிய அத்தகைய வட்டாரங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றுபவர்கள் நீங்கலாக, மற்றவர்களுக்கு வரையறுத்த தனிப்பட்ட முறையில் மருத்துவ தொழில் புரிதல் கட்டுப்படுத்தப்பட்டதற்காக மாதமொன்றுக்கு ரூபாய் 75 ஈட்டுப்படி வழங்கப்படுகிறது.

(3) ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு மட்டுமே ஏனைய ஈட்டுப்படி வழங்கப்படுவதால் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் மருத்துவ அதிகாரிகளுக்கு 125 ரூபாய் மொத்த ஈட்டுப்படி. வழங்கப்படுகிறது.

(உ) இவை எதுவும் சிறப்புப் பணி எதற்காகவும் வழங்கப்படவில்லை.

## *Sexually Transmitted Diseases.*

*98. *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU D. V. D' MONTE): Will the Hon. the Minister for Health be pleased to state :—

(*a*) whether the Government are aware of the increase in Sexually Transmitted Diseases in the City; and

(*b*) if so, the steps proposed to be taken to control these diseases?

### பாலுறவால் நோய்கள்.

திரு. கே. எஸ். கணபதி (திரு. டி. வி. டி'மாண்டி சார்பில்) : மாண்புமிகு மக்கள்-நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) சென்னை மாநகரில், பாலுறவால் பரவும் நோய்கள் பெருகியிருத்தலை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், இந்த நோய்களைக் கட்டுப்படுத்த எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைகள் யாவை ?



1975 நவம்பர் 10]

(பிற்பகல் 4-20)

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) மருத்துவக் கல்வி இயக்குநர் பால்வினை நோயியல் ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்துள்ளார். A group to discuss the ways and means of dealing with the V.D. diseases among the public அக் குழு தெரிவித்துள்ள பல்வேறு பரிவுரைகளை அவர் ஆய்வு செய்து வருகிறார்.

திரு. கே. எஸ். கணபதி : கொல்லிமலைப் பகுதியிலே வாழும் 10 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கும் இந்த நோய் ஏற்படும் அறிகுறிகள் தெரிகின்றன என்ற செய்தி உண்மையா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அதுபற்றி முழு விவரம் தெரியாவிட்டாலும், அப்படிப்பட்ட நிலைமை பரவலாக இருக்கின்றது என்ற செய்தி அரசுக்குத் தெரியும். அண்மையில் நாமக்கல் மருத்துவ மனையிலே இந்த நோய் சம்பந்தமாக பயிற்சி பெற்ற ஒரு மருத்துவரை நியமித்து அவர்கள் மூலமாக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

THIRU K. S. ABDUL WAHAB : Sir, it is mentioned here that the disease is on the increase. I want to know statistical figures for three or four years.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பால்வினை நோய்க்கு ஆளானவர்கள் எளிதில் வெளியில் சொல்வதில்லை. மருத்துவர்களிடம் கூட வெட்கப்பட்டுச் சொல்வதில்லை. நம் நாட்டைப் பொறுத்தவரையில், இது ஒரு குற்றத்தின் காரணமாக ஏற்பட்ட விளைவு என்ற எண்ணம் இருப்பதால்—உண்மையாகக் கூட இருக்கலாம்—வெளியில் சொல்ல முன்வராத காரணத்தால், அந்த நோய் கண்டவர்களுடைய சரியான புள்ளிவிவரத்தை அறுதியிட்டுச் சொல்ல இயலாது. மக்கள் அந்தச் சிகிச்சைக்கு வரலாம் என்று ஊக்கப்படுத்துவதன் மூலமாக பெரும்பாலோருக்கு இந்த நோயைக் குணமாக்கலாம்.

திரு. சி. வி. ராஜகோபால் : 'வெனிரியல் டிசீஸ்' ஏறக்குறைய சென்னையிலும், சென்னையையொட்டிய பகுதிகளிலும் அதிகமாகப் பரவுகிறது என்று கூறுகிறார்கள். ஆனால் சிலபேர் இதைப் பற்றிக் கூறுகிறபோது, இது ஒரு 'லேடீஸ் டிசீஸ்' என்று கூறுகிறார்கள். லேடீஸ்-இடமிருந்து தொத்து வியாதியாக இது பரவுகிறது என்று கூறுகிறார்கள். அப்படி இருக்குமாயின்

"லேடீஸ் டிசீஸ்" என்று மற்றவர்களுக்குப் பரவும் இந்த 'வெனிரியல் டிசீஸ்'-ஐத் தடுப்பதற்கு முன்ஜாக்கிரதையாக ஏதாவது நடவடிக்கை எடுக்கப் படுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இந்த பால்வினை நோய் ஆண், பெண்ணோடு கொள்ளுகின்ற உறவினாலே ஏற்படாது. சில இடங்களில் யாரோ கொள்ளுகிற தவறான தொடர்பு காரணமாக, ஒருவரிடமிருந்து இன்னொரு வருக்குப் பரவுகிறது. அதுவும் பெண்களாலே தான் பரவுகிறது என்று சொல்ல முடியாது. ஒருகாலத்திலே, சமுதாயத்திலே இருந்த அமைப்பிலே, ஒரு தொழில் முறையிலே, அப்படிப்பட்ட பழக்கத்திற்கு ஆளாகி இருந்தவர் கள் இந்த சாபக்கேட்டுக்குக் காரணமாக இருந்தார்கள். அவர்களிடமிருந்து மற்றவர்களுக்குப் பரவுகிறது. சாதாரண குடும்பப் பெண்களுக்கேகூட கணவன் மூலமாக இந்த நோய் பரவுகிறது. யார் பொறுப்பு என்பதற்கு, இந்த நோய் வந்தவர்கள் தவறுதலாக யாரிடத்திலோ தொடர்பு கொண்டுள்ள னர், அதன் நிமித்தம் தான் வந்தது என்று சொல்வதைத் தவிர, வேறு யாரிடத்திலும் பழியைப் போட்டு தப்பித்துக்கொள்ள முடியாது.

THIRU P. R. THOMAS : Hon. Deputy Chairman, Sir, I would like to know whether it is due to prostitution or immoral traffic in the country, and if so, what steps are proposed to be taken to prevent it.

THE HON. THIRU K. ANBAZHAGAN : I do not know the difference between prostitution and immoral traffic. Both are more or less the same and it is according to their own convenience.

*Prohibition of Dowry.*

*99. Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU D. V. D' MONTE) : Will the Hon. the Minister for Revenue be pleased to state :

(a) the steps taken by the Government to enforce strictly the Dowry Prohibition Act, 1961 (Central Act No. 21 of 1961); and

(b) whether the Government have conducted any survey to ascertain the evil practices resorted to in the name of Dowry in the State?





**வரதட்சணை ஒழிப்பு**

திரு. கே. எஸ். கணபதி (திரு. டி. வி. டி'மாண்டி சார்பில்) : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) 1961 ஆம் ஆண்டு வரதட்சணை ஒழிப்புச் சட்டத்தை (மத்தியச் சட்டம் 21/1961) கண்டிப்பாகச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற் கொண்டுள்ளதா?

(இ) இம் மாநிலத்தில் வரதட்சணை என்ற பெயரில் நிகழும் தீமைகளைக் கண்டறிவதற்கான ஆய்வுகள் ஏதேனும் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) வரதட்சணைக் கொடுமைகள் பற்றி வரும் புகார்களை விசாரித்து, தேவையானால் வழக்கு தொடர ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மாநில பிறப்பு, இறப்பு, திருமணத் தலைமைப்பதிவாள ருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(இ) இல்லை.

திரு. கே. எஸ். கணபதி : 1961 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தக் குற்றத் திற்காக குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் எத்தனை பேர்கள்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதுபற்றிய விவரம் இல்லை.

*Service Connections for Pumpsets.*

* 100. Q.—THIRU WILSON APPOLLOS (on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR) : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether service connections for pumpsets have not been given to a number of agriculturists in Idur Panchayat of Alathur Union, Tiruchirappalli district, even though they have remitted the prescribed amounts; and

(b) if so, the reasons therefor?

விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்புகள்

திரு. வில்சன் அப்போலோஸ் (திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சி மாவட்டம் ஆலத்தூர் ஒன்றியத்தில் இடர் பஞ்சாயத்தில் பல விவசாயிகள் விசை ஏற்றத்திற்கு பணம் கட்டியும் மின் இணைப்புகள் கொடுக்கப்படாமல் இருக்கின்றனவா ?

(இ) ஆம் எனில், காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) முன் காப்புத் தொகை வசூல் செய்யப்பட்ட 64 பேர்களில் ஒருவருக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஒருவர் இருக்குமிடம் தெரியவில்லை. 62 பேர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும். இதில் ஒருவர் தான் விசையேற்றம் பொருத்தியுள்ளார். ஆனால் அவரும் மின் இணைப்பு பெறுவதற்கான தயார் நிலையில் இல்லை. மற்றவர்கள் இன்னும் விசை யேற்றம் பொருத்தவில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை ஆய்விற்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.



### (2) பேரவையிலிருந்து செய்திகள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்புச் சட்டத்தின் 199-வது பிரிவுப்படி பணச்சட்ட முன்வடிவு எனப் பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு, இம்மேலவையின் பரிந்துரைக்காக, கீழ்க்கண்ட சட்ட முன்வடிவு பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளது ;

தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1975).

சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, இம்மேலவையின் ஒப்புதலுக்காக கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளன என்பதை அவைக்கு அறிவிக்கிறேன்—

(1) தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு, கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 60/1974).

(2) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, தனியார் மின்வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1975).

(3) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் (தனியதிகாரியின் பணிகளைச் செய்திறனுக்குதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1975)

(4) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1975).

(5) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, சட்ட மன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 49/1975).

(6) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1975).

(7) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1975).

## 8. அரசின் தீர்மானங்கள்

### (1) தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தைச் சென்னையில் அமைத்தல்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

" தமிழ் நாட்டிலிருந்து பெருமளவில் உற்பத்தியாகி ஏற்றுமதி செய்யப் படுகின்ற வேலை நிறைவுபெற்ற, ஓரளவு வேலை நிறைவு பெற்ற தோல்களின் அளவு அனைத்து இந்தியாவிலும் ஏற்றுமதி செய்யப்படுகின்ற தோல்களின் அளவில் 85 சதவீதம் ஆகும் என்பதாலும்,

தமிழ் நாட்டில் தோல் தயாரிக்கும் தொழிலில், சமுதாயத்தில் நலிந்த பிரிவினரைச் சேர்ந்தவர்கள் பெருமளவில் தொழிலாளர்களாக நியமிக்கப் பட்டுள்ளபடியாலும்,

எனவே, இப்போது,

(1) இந்திய அரசு அமைக்கக் கருதியுள்ள தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தைச் சென்னையிலேயே அமைத்திட வேண்டும் என்றும்,

(2) சென்னையில் தற்போதுள்ள தோல் ஏற்றுமதி மேம்பாட்டு மன்றம் வேலை நிறைவுபெற்ற தோல்களின் ஏற்றுமதி மேம்பாடு குறித்த கூடுதல் பொறுப்பினையும் ஏற்றுத் தொடர்ந்து செயல்பட அனுமதிக்க வேண்டு மென்றும்,

இந்திய அரசைக் கேட்டுக்கொள்வதென இம்மேலவை தீர்மானிக்கிறது".
என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

இந்தத் தீர்மானத்திற்கு சற்று விளக்கங்களைக் கொடுப்பது உதவியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

(பிற்பகல் 4-30)

Tamil Nadu has been the only State in our country with the largest number of tanneries mostly in the small scale sector. At present nearly 350 units are in operation, employing more than 200 thousand workers, mostly belonging to Backward Classes and Scheduled Caste. This industry has been contributing nearly 80 to 85 per cent of the total foreign exchange earnings of leather from India during the last 25 years.



Leather Export Promotion Council was started in the year 1956 with the intention to promote the export of E.I. tanned hides and skins following the policy of the Government to slowly reduce the export of raw hides and skins. This industry responded very well to the move and within a matter of two or three years after the exports of raw hides and skins were banned, it was possible to completely absorb the raw materials and to convert them into E.I. leathers and export them. As a result of the activity of the Council and also the tanners of Tamil Nadu taking vigorous steps towards improving the exports, the country was able to achieve exports up to Rs. 152 crores in the year 1972-73.

In the year 1963 it was decided by the Government of India to set up another Council for promoting exports of finished leathers and leather goods at Kanpur. This Council was also entrusted with the job of exporting wet blue leathers. The majority of the members of the Council belong to leather goods sector and out of 600 members, the actual tanners of wet blue leathers as well as finished leathers are nearly 100. Most of these tanners also belong to the Leather Export Promotion Council in Madras. Although the Kanpur Council was set up in the year 1963, yet the major exports have been taking place only in the semi-finished leathers like E.I., and wet blue leathers which were coming from tanners in Tamil Nadu. During the year, 1972 the Kanpur Council made representation to the Government that less and less of leathers were being made available to the leather goods people and therefore, it was necessary that quota restrictions on the export of tanned leathers should be imposed. The Committee under Dr. Seetharamiah was also formed to go into the problems of the leather industry and this Committee also recommended imposition of quota restrictions. At the same time, it recommended certain incentives for finished leather and leather goods.

Recently it was decided to merge these two Councils which was also recommended by the Seetharamiah Committee and we understand that the headquarters of the merged Council will be located in Delhi or somewhere in the north. We do not know how exactly this Council is likely to perform. But we feel that having 85 per cent of the leather industry in the State of Tamil Nadu, we have a just claim to see that the Council is located in the Southern region. We also feel that following the imposition of quota restrictions when most of the tanneries of the southern region are forced to

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1975 நவம்பர் 10

convert into finished leathers, these tanneries require all possible support and guidance from the Export Promotion Council. This can only come forth from the Council located in the Southern region.

The apprehension of most of the tanners is that the merged Council is likely to be dominated by the leather goods sector and may, in all probability, not work for the betterment of the tanners who are now requiring all possible help both in the export promotion field and also in the matter of finances.

We are also given to understand that the claim of the Kanpur Council is that since they have been functioning for the last 11 years, they have all the machinery to develop the export of finished leather. So they make a claim for the location of the merged Council.

Recently it was also announced by the Government of India that Leather Export Development Corporation will be formed which will assist the leather and leather goods industries in the production and also export of finished leather and leather goods. We are also given to understand that this Corporation will be located in Delhi. This Corporation is probably going to indulge in trading also. We feel that without giving a chance to the industry in the southern region to show certain results in the field of manufacture of finished leathers, there is no need for such a Corporation to be set up in Delhi, particularly with trading as one of its activities. If this Corporation is set up in the southern region with the close association of the tanners of southern region, we feel that it will definitely bring forward very good result.

Following the announcement by the Government of India that more and more finished leather has to be exported from India, there has been very encouraging response from the tanners of the southern region and during the current year, there has been sizable improvement in the export of finished leather from southern region. In fact, out of Rs. 20 crores that were exported from April–September 1975, nearly 85 per cent was exported from the port of Madras. This clearly indicates that we have all to potential to take up this challenge of conversion from the semi-finished into finished leathers provided all possible assistance is rendered to this industry. Therefore, our claim of the Council to



1975 நவம்பர் 10] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

be retained at Madras and also for Development Corporation to be set up at Madras is fully justified. We hope that once these things are taken care of, the tanning industry in the southern region will very soon grow into a large finished leather industry. It will also have the possibility of developing exports of leather goods in the nearest future.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன் மொழியப்பட்ட தீர்மானம்—

"தமிழ் நாட்டிலிருந்து பெருமளவில் உற்பத்தியாகி ஏற்றுமதி செய்யப் படுகின்ற வேலை நிறைவுபெற்ற, ஓரளவு வேலை நிறைவு பெற்ற தோல்களின் அளவு, அனைத்து இந்தியாவிலும் ஏற்றுமதி செய்யப்படுகின்ற தோல்களின் அளவில் 85 சதவிதம் ஆகும் என்பதாலும்,

தமிழ் நாட்டில் தோல் தயாரிக்கும் தொழிலில், சமுதாயத்தில் நலிந்த பிரிவினரைச் சேர்ந்தவர்கள் பெருமளவில் தொழிலாளர்களாக நியமிக்கப் பட்டுள்ளபடியாலும்,

எனவே, இப்போது,

(1) இந்திய அரசு அமைக்கக் கருதியுள்ள தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தைச் சென்னையிலேயே அமைத்திட வேண்டும் என்றும்,

(2) சென்னையில் தற்போதுள்ள தோல் ஏற்றுமதி மேம்பாட்டு மன்றம் வேலை நிறைவு பெற்ற தோல்களின் ஏற்றுமதி மேம்பாடு குறித்த கூடுதல் பொறுப்பினையும் ஏற்றுத் தொடர்ந்து செயல்பட அனுமதிக்க வேண்டும் என்றும்,

இந்திய அரசைக் கேட்டுக் கொள்வதென இம் மேலவை தீர்மானிக்கிறது.

(பிற்பகல் 4-40)

THIRU G. VASANTHA PAI : Sir, I wholeheartedly support this Resolution. But I would like to point out to the Government that the Central Leather Research Institute which is located in Adyar is doing yeoman service in this field by holding every year an annual Leather Trade Fair at which all the tanners from different parts of the country participate and even persons from abroad take part in it. They come and exhibit their finished goods. The Leather Fair which is an annual feature in Adyar has attracted a lot of people and it has shown the high quality

of manufacture which could be attained in leather industry. Recently I found that the carcasses of dogs were taken to this Institute and the dog skin was utilised for the manufacture of excellent ladies' hand-bags, and they were available at the Institute. My feeling is that any Corporation that is set up by the State Government themselves or in conjunction with the Central Government should be set up in conjunction with the Central Leather Research Institute which has got a large amount of experience in this field. Therefore, I commend this Resolution for acceptance. I would like to add that experts in this direction like Dr. Nayudamma who has very wide international experience in the field of leather research should be connected with this venture and their services should be utilised for making this a profitable industry in the Southern region. Thank you, Sir.

* THIRU S. NARAYANASWAMY: Hon Deputy Chairman, Sir, I rise to give my full-throated support to the Resolution moved by the Hon. the Minister for Industries. I have been concerned, as President of the Chamber of Commerce, with this problem for nearly two years. The grievances of all those who are presently engaged in the manufacture of leather finished goods have been repeatedly brought before the Central Government, the Ministry of Commerce and the Ministry of Export Trade. It is the single industry—I repeat, the only industry in India—which has performed its export promotion target. This is number one. This is also the only industry which did not ask for any compensatory foreign exchange in the form of raw material. Out of about Rs. 130 to 140 crores of foreign exchange earned, hardly a sum of Rs. 2½ crores is required for the purpose of importing some special chemicals which are not available in this country. This is the only industry which earns a high ratio of net foreign exchange and has been keeping it up and achieving the target of performance without any let or hindrance. In spite of all the above things, this industry has been badly treated from time to time. I had occasion to participate for two successive years in the Leather Trade Fair held at Guindy to which my hon. Friend Thiru Vasantha Pai also made a reference. When Thiru C. Subramaniam presided over the same, I referred to the hardships caused to them and said that if they were removed, they would export more manufactured leather goods from India and undoubtedly they would be able to earn more





foreign exchange. But, before the Central Government provided them with the machines and instruments necessary for the manufacture of finished leather goods, they had called upon them suddenly not to export semi-finished leather like tanned leather or blue leather, whatever it is. By so doing, the Central Government have caused tremendous amount of hardship to the people in the southern region for the last two years. The situaation has got somehow adjusted for the last one year. Still I would say that the situation is very far from satisfactory. From time to time they have impression on the Central Government that the C.L.R.I. is the one institution in India which successfully and continuously maintained liaison with the industry and the industry also benefited by the outcome of the research of this Institute. Dr. Nayudamma's performance as the head of this Institute attracted the attention of the Central Government and made them call upon him to assume the position of the Director-General. All honour is due to him for the work that he has done. What is important is this: Having established the C.L.R.I. here, this is the focal point for the hides and skins industry in the southern region. Representations have been made from time to time regarding this trade in this part of the country. I do not know what they are going to do by having the Council or Corporation located in the North. It would be a very foolish act. It will be as foolish as locating the Cardamom Board in Delhi and as foolish as locating the Rubber Board in New Delhi. No useful purpose will be served in locating the Leather Export Council in Delhi. I do hope that the very reasonable request contained in the Resolution moved by the Hon. Minister will be taken note of and this will not become one more instance of water being poured—I had almost said on leather—on duck's back. I only want to pay a tribute to one thing and that is for not only the way in which the Leather industry has functioned here, not only for the way in which it has kept up its target of performance of export, but also the way in which the liaison between the Central Leather Research Institute and the industry resulted in larger manufactures, larger exports and larger valued being got by these exports. Once when I said that our exports had gone up, Thiru Subramaniam twitted me saying, "That is because you have got higher value for your exports." I said, "Sir, it is you who needled us for not getting higher prices for our goods saying that our quality was poor. When we prove our quality of exports and obtain better value, you think it is not meritorious enough." I also said, "For your information, the

[Thiru S. Narayanaswamy] [1975 நவம்பர் 10

higher quantum of export and money value thereof is the result both of increased physical export and higher quality of goods." I had to tell him this and give figures. Nevertheless, it seems to me that the position regarding the hides and skins industry is not fully appreciated at the Centre, considering the repeated hardships that are posed. The Seetharamayya Committee Report was partly bad. It has not taken into recognition some of the defects inherent in the tanning trade, particularly in the mofussil of the State.

I have great pleasure in commending this Resolution and I am glad that the Hon. the Minister for Industries came with this Resolution.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் நாராயணசாமி அவர்களும் வசந்த பாய் அவர்களும் முழு மனதுடன் இந்தத் திர்மானத்தை வர்வேற்றிருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. வசந்த பாய் அவர்கள் சொன்னது போல், சென்னையிலுள்ள சி.எல்.ஆர்.ஐ. இந்தியாவிலேயே மிக பிரசித்தமானதாக, மிகச் சிறந்த ஒரு ஆராய்ச்சி நிலையமாக விளங்கி வருகிறது. அந்த ஆராய்ச்சி நிலையம் சென்னையிலே இருக்கிற காரணத்தை வைத்துத்தான், "headquarters of the Leather Industry Development Corporation" சென்னையிலேயே இருக்க வேண்டுமென்று சொல்கிறோம். சீதாராமையா சென்னையிலேயே இருக்க வேண்டுமென்று சொல்கிறோம். சீதாராமையா கமிட்டி அறிக்கை ஒரு பிரச்சினையாக இருக்கிறது. ஏனென்றால் அவர்கள் சென்னைக்கே வராமல் பெங்களூருக்கு மட்டும் போய் விட்டு ரிப்போர்ட் கொடுத்ததாகக் குறை சொல்கிறார்கள். லெதர் எக்ஸ்போர்ட் ப்ரொமோஷன் கவுன்சில் சென்னையில் இருக்கிறது. இதேமாதிரி லெதர் எக்ஸ்போர்ட் ப்ரொமோஷன் கவுன்சில் கான்பூரிலும் இருக்கிறது. சென்னையிலிருப்பது செமி-பினிஷ்ட் லெதர் எக்ஸ்போர்ட்டுக்காகவும் கான்பூரிலிருப்பது பினிஷ்ட் லெதர் குட்ஸ்-க்காகவும் மேனியுபேக்சர்ட் லெதர் குட்ஸ்-க்காகவும் இருக்கின்றன. எனவே எல்லாவற்றிற்கும் வசதியாக இருக்க வேண்டுமென்றுதான் இந்திய அரசு அமைக்கக் கருதியுள்ள தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தைச் சென்னையிலேயே அமைத்திட வேண்டுமென்ற இந்தத் தீர்மானத்தை கொண்டு வந்திருக்கிறோம். இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக



1975 நவம்பர் 10] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"தமிழ் நாட்டிலிருந்து பெருமளவில் உற்பத்தியாகி ஏற்றுமதி செய்யப்படுகின்ற வேலை நிறைவுபெற்ற, ஓரளவு வேலை நிறைவுபெற்ற தோல்களின் அளவு, அனைத்து இந்தியாவிலும் ஏற்றுமதி செய்யப்படுகின்ற தோல்களின் அளவில் 85 சதவீதம் ஆகும் என்பதாலும்,

தமிழ் நாட்டில் தோல் தயாரிக்கும் தொழிலில், சமுதாயத்தில் நலிந்த பிரிவினரைச் சேர்ந்தவர்கள் பெருமளவில் தொழிலாளர்களாக நியமிக்கப் பட்டுள்ளபடியாலும்,

எனவே, இப்போது,

(1) இந்திய அரசு அமைக்கக் கருதியுள்ள தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தைச் சென்னையிலேயே அமைத்திட வேண்டும் என்றும்,

(2) சென்னையில் தற்போதுள்ள தோல் ஏற்றுமதி மேம்பாட்டு மன்றம் வேலை நிறைவுபெற்ற தோல்களின் ஏற்றுமதி மேம்பாடு குறித்த கூடுதல் பொறுப்பினையும் ஏற்றுத் தொடர்ந்து செயல்பட அனுமதிக்க வேண்டுமென்றும்,

இந்திய அரசைக் கேட்டுக்கொள்வதென இம் மேலவை தீர்மானிக்கிறது".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### (2) அலுவல் வரிசையில் மாறுதல்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"மேலவை விதிகளின் 21 (3) விதியின்படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள இனம் இரண்டிலுள்ள சட்ட முன்வடிவுகளில் 5-வது இனமான 1975 ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் (தனியதிகாரியின் பணிகளைச் செய்திறனுக்குதல்) சட்ட முன்வடிவும், 6-வது இனமான 1975 ஆம் ஆண்டு, தனியார் மின் வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்த சட்ட

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

முன்வடிவும், 8-வது இனமான 1975 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவும் மற்றும் 9-வது இனமான 1975 ஆம் ஆண்டு, சட்ட மன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) திருத்த சட்ட முன் வடிவும் முதலில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"மேலவை விதிகளின் 21 (3) விதியின்படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள இனம் இரண்டிலுள்ள சட்ட முன்வடிவுகளில் 5-வது இனமான 1975 ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் (தனியதிகாரியின் பணிகளைச் செய்திறனுக்குதல்) சட்ட முன்வடிவும், 6-வது இனமான 1975 ஆம் ஆண்டு, தனியார் மின் வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவும், 8-வது இனமான 1975 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவும் மற்றும் 9-வது இனமான 1975 ஆம் ஆண்டு, சட்ட மன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) திருத்த சட்ட முன் வடிவும் முதலில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

**தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.**

### 4. அரசின் சட்ட முன்வடிவுகள்.

**(1) தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் (தனியதிகாரியின் பணிகளைச் செய்திறனுக்குதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1975.)**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு துணைத் தலைவா வர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் (தனியதிகாரியின் பணிகளை செய்திறனுக்குதல்) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1975), ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

1954 ஆம் ஆண்டு வக்ஃபுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 29/1954) 64-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ், தமிழ் நாடு மாநில வக்ஃப் வாரியத்தை 1967 நவம்பர் 29 ஆம் நாளிலிருந்து மூன்றாண்டுக் கால அளவிற்கு

@ 329-330 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



அரசு கலைத்தது. 1971 மே 25 ஆம் நாளிட்ட அறிவிப்பு ஒன்றின் மூலம் வாரியம் கலைக்கப்பட்ட காலம் 1971 மே 23-ஆம் நாள் வரையில் மேலும் நீட்டிக்கப்பட்டது. இந்த வக்ஃப் வாரியம் 1971 மே திங்கள் 24 ஆம் நாள் முதற்கொண்டு மீண்டும் அமைக்கப்பட்டது. வாரியத்தின் அதிகாரங்களைச் செலுத்தவும் கடமைகளைச் செய்யவும் நியமிக்கப்பட்ட வக்ஃபு தனி அதிகாரி, மேற்சொன்னவாறு 1967 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20 ஆம் நாளிலிருந்து 1971 ஆம் ஆண்டு மே திங்கள் 23 ஆம் நாள் முடிய உள்ள கலைப்பு நீட்டிக்கப் பட்ட காலத்திலும்கூட தொடர்ந்து மேற்சொன்ன அதிகாரங்களைச் செலுத்தி யும் கடமைகளைச் செய்தும் வந்தார். அந்த வகையில் தனி அதிகாரி கலைப்பு நீட்டிக்கப்பட்ட காலத்திலும்கூட நீதிமன்றங்களின் முன் பல வழக்குகளைக் கொடுத்துள்ளார். 1971 மே 25 ஆம் நாளிட்ட மேற்சொன்ன அறிவிப்பு கடந்த ஒரு தேதியிலிருந்து செயல்படக் கூடியதல்லவாகையால், அது செல் திறன் உள்ளதல்ல என்னும் காரணத்தைக் காட்டி நீதி மன்றங்கள் மேற் சொன்ன வழக்குகள் சிலவற்றைத் தள்ளுபடி செய்துள்ளது. அதன் விளைவாக இந்த வழக்குகளைத் தொடுக்க தனி அதிகாரிக்கு அதிகார வரம்பு இராமற் போயிற்று. எனவே, வாரியம் கலைப்பு நீட்டிக்கப்பட்டிருந்த கால அளவில், தனி அதிகாரியின் செயல்கள் நடவடிக்கைகள் அனைத்தையும் செல்திறனுக்க வும் மேற்சொன்ன வழக்குகள் அல்லது நடவடிக்கைகளைத் தாக்கல் செய்யவும் அந்தத் தனி அதிகாரிக்கு எவ்வித அதிகார வரம்பும் கிடையாது என்னும் ஒரே காரணத்தைக் காட்டி தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளையும் ஏனைய நடவடிக்கைகளையும் நீதிமன்றங்களில் மீண்டும் கொண்டு வர வகை செய்யவும் தேவை ஏற்பட்டுள்ளது. வக்ஃபு வாரியம், 1971 ஆம் ஆண்டு மே திங்கள் 24 ஆம் நாளிலிருந்தே மாற்றி அமைக்கப்பட்ட போதிலும்கூட அவ் வாரியத்திற்குப் புதிய செயலாளர் ஒருவர் 1971 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 12 ஆம் நாளன்று தான் நியமிக்கப்பட்டார். மேற்சொன்ன 24-5-1971 ஆம் நாள் முதல் 11-7-1971 ஆம் நாள் முடிய உள்ள கால அளவில் மேற்சொன்ன தனி அதிகாரி, வாரியத்தின் செயலாளருக்குள்ள அதிகாரங்களைச் செலுத்தினர். அக் கால அளவில் வாரியத்தின் செயலாளராக தனி அதிகாரி எடுத்துக் கொண்ட செயல்கள், நடவடிக்கைகள் ஆகியவை நீதி மன்றங்களில் ஆட்சேபிக்கப்படுவதைத் தவிர்க்க அச் செயல்கள் நடவடிக்கைகளுக்குச்

**தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம்**
**(தனியதிகாரியின் பணிகளைச் செய்திறனுக்குதல்)**
**சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட**
**முன் வடிவு எண் 43/1975)**

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1975 நவம்பர் 10

செல்திறன் அளிக்க வேண்டியது அவசியமெனக் கருதப்படுகிறது. இச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன நோக்கங்களை எய்த விழைகிறது. இதனை மேலவை ஏற்க வேண்டுமென முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் (தனியதிகாரியின் பணிகளைச் செய் திறனுக்குதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு துணைத் தலைவர வர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் (தனியதிகாரியின் பணிகளைச் செய் திறனுக்குதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1975) நிறைவேற்றப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் (தனியதிகாரியின் பணிகளைச் செய்திற னுக்குதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1975) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.





**(2) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, தனியார் மின்வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 42/1975.)**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, தனியார் மின்வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 42/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று நான் முன்மொழிகிறேன்.

தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு தனியார் மின் வழங்கு நிறுவனங்கள் (கையகப் படுத்துதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 30/1973) 9-வது பிரிவின் வரம்பு நிபந்தனையின்கீழ், இச் சட்டத்தின்கீழ் உரிமதாரருக்குக் கொடுக்கப்படக்கூடிய இழப்பு என அரசு கருதும் தொகையைக் கழித்துக்கொள்கிற தனது உத்தேசத்தை அறிவிக்கும் அறிவிப்பு ஒன்று அந்நிறுவன உடைமை அரசிடம் நிலை பெறும் நாளிலிருந்து ஓராண்டுக்குள் கொடுக்கப்பட வேண்டும். இருப்புப் பட்டியல்கள் அனுப்பப்பட்டு அவை முழுமையாகப் பரிசீலனை செய்யப்பட்ட பின்னரே, அரசுக்கு ஏற்பட்ட இழப்பு பற்றியும், அதற்குக் கழித்துக் கொள்ளப்பட வேண்டிய தொகைகள் பற்றியும் வரையறுக்கவியலும். முன்னாள் உரிமதாரர்களில் சிலர் தங்களின் இருப்புப் பட்டியல்களை இன்னும் பணிந்தனுப்பவில்லை. எனவே, தொகை கழித்துக்கொள்வதென்ற அரசின் உத்தேசத்தை அறிவிக்கும் அறிவிப்பு, அந்நிறுவனத்தின் உடைமை அரசிடம் நிலைபெற்ற நாளிலிருந்து ஓராண்டுக் கால அளவு அல்லது, அந்த நிறுவனத் திற்குச் சொந்தமான சொத்துக்கள் அனைத்தையும் அடக்கிய முழுமையான பட்டியலும், அதன் ஆவணங்கள் குறித்த பட்டியலும் அரசிடம் ஒப்படைக்கப் பெற்ற நாளிலிருந்து மூன்று திங்கள் கால அளவு இவற்றில் எது பிந்தியதோ அக்கால அளவிற்குள் அளிக்கப்பட வேண்டும் என்கிற வகையில் இச் சட்டத்தின் 2-வது பிரிவின் தற்போதைய வரம்பு நிபந்தனைக்கு விளக்கம் அளிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்சொன்ன சட்டத்தின் 9-வது பிரிவைச் சேர்ந்த வரம்பு நிபந்தனைக்குத் தக்கவாறு விளக்கமளிப்பது அவசியமெனக் கருதப்பட்டுள்ளது. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன செயற்குறிப்பிற்குச் செயல் வடிவமளிக்கும் கருத்துடனியற்றப்பட்டதாகும். மேலவைத் துணைத் தலைவரவர்களே, இம் மாமன்றம் இத் தீர்மானத்தை ஏற்று நிறைவேற்றித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

---

@ 331 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :* முன் மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, தனியார் மின் வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 42/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

THIRU S. NARAYANASWAMY : Hon. Deputy Chairman, I take it that the amendment is intended to give time to Government to make deductions in the manner that they like. If it is so, I hope and trust this opportunity will not be availed of to go on making further deductions until we reach a very alarming point of negative compensation to the companies and the shareholders. This is a matter on which the undertakings and Government are still having discussions and it is not my intention to approach those points here. But what is important is that if it is merely intended to provide further time to make deductions, it seems to me an xtremely disturbing amendment. That is all I want to say.

(பிற்பகல் 4.50).

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* தலைவர் அவர்களே, 'டிடக்ஷன் இன் மெரிட்டைப்' பொறுத்தவரையிலே சில கம்பெனிகள் பூரா கடன் கொடுக்கவில்லை என்று இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். அவர்கள் கணக்குக் கொடுத்து 3 மாதம் அல்லது ஒரு ஆண்டு இதில் எது பிந்தியதோ whichever is latter அதுதானே தவிர, இதனால் ஒன்றும் காம்பன்சேஷன் குறையும் என்று எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. விவரங்கள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் For the purpose of protecting the Government's interest என்ற அளவிலேதான் இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவந்திருக்கிறோம்.

THIRU G. VASANTHA PAI : Sir, the hon. Member was referring to compensation. I was thinking that it was from compensation to confiscation.



*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :* அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு, தனியார் மின்வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 42/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* துணைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, தனியார் மின் வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 42/1975) நிறைவேற்றப்பட வேண்டும்". என்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :* அவைமுன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, தனியார் மின்வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்), திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 42/1975) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(3) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் (சட்ட முன்வடிவு எண்**

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 53/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என நான் முன்மொழிகிறேன்.

---

@ 331-333 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவையில் "மாநிலச் சட்ட மன்றம்" என்னும் மானியக் கோரிக்கையின் மீது விவாதம் நடந்தபோது சட்டமன்றப் பேரவையிலும் மேலவையிலும் தொடர்ந்து மூன்று தடவை உறுப்பினர்களாகப் பதவி வகித்திருந்தவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 250 ஓய்வூதியம் கொடுக்கப்படலாம் என்று அவையில் அறிவிக்கப்பட்டது. அரசு இந்த உறுதிமொழியைப் பரிசீலித்துப் பார்த்து கீழ்க்காணும் நிபந்தனைகளின் பேரில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 250 ஓய்வூதியம் வழங்க முதலில் முடிவு செய்தது.

(1) ஒருவர் தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் அல்லது சட்டமன்ற மேலவையில் அல்லது இவ்விரு அவைகளிலும் குறைந்தது 12 ஆண்டுக் காலத்திற்கு உறுப்பினராகப் பணியாற்றியிருக்க வேண்டும்; இக் கால அளவு தொடர்ச்சியானதாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

(2) இக் கால அளவு, இந்திய அரசியலமைப்பின்கீழ் நடைபெற்ற முதல் தேர்தலுக்குப் பின்னர் சட்டமன்றம் அமைக்கப்பட்ட நாளிலிருந்து கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

(3) இத் திட்டம், இதுகுறித்து ஆணை பிறப்பிக்கப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(4) மாநில அரசின் அல்லது மத்திய அரசின் தொகு நிதியிலிருந்து வருமானம் எதையும் அவர் பெற்று வரக்கூடாது அல்லது மாநில அரசிற்கு அல்லது மத்திய அரசிற்குச் சொந்தமான அல்லது அதன் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு கழகத்திடமிருந்து சம்பளம் எதும் பெற்றுவரக்கூடாது; அத்தகைய வருமானம் அல்லது சம்பளமேதும் அவர் பெறுவாரேயாயின், அக் கால அளவிற்கு இந்த ஓய்வூதியம் கொடுப்பது நிறுத்தப்படும். அவ்வாறே இது குறித்து விதித்துறைகள் அவையின் முன் தற்போதுள்ள சட்ட முன்வடிவில் உள்ளன.

அரசு இதுபற்றி மேலும் கருதிப் பார்த்து, இப்பொருள் குறித்து விரிவான சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதென முடிவு செய்துள்ளது. இதற்கிணங்க சட்டவரைவிற்குத் திருத்தம் ஒன்றைக்கொண்டு வந்துள்ளது. அதன்படி சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் அரசு ஓய்வூதியம் பெற வேண்டுமாயின், அவர் பத்தாண்டுக் கால அளவிற்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராக அல்லது பன்னிரண்டு ஆண்டுக்கால அளவிற்குச் சட்டமன்ற மேலவை உறுப்பினராக அல்லது சட்டமன்றப் பேரவையிலும் சட்டமன்ற மேலவையிலும்



சேர்த்துப் பத்தாண்டுக் கால அளவிற்கு உறுப்பினராகப் பணியாற்றி இருக்க வேண்டும். ஐந்தாண்டுக்கால அளவு முடிவடையும் முன்னரே சட்டமன்றப் பேரவை கலைக்கப்படுமாயின் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் பதவிக்கால அளவை கணக்கிடுவதற்கான பொதுத் தேர்தல் நடைபெற்ற பின்னர் சட்ட மன்றப் பேரவை அமைக்கப்பட்ட நாள் தொடங்கி பேரவை கலைக்கப்பட்ட நாள் ஈறாக உள்ள கால அளவு ஐந்தாண்டுகளாகக் கருதப்பட வேண்டும்.

இதனை இம் மன்றம் ஏற்று நிறைவேற்றித் தருமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 53/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

* THIRU G. VASANTHA PAI: Sir, on point of order. I want to bring to the notice of this House that we have no jurisdiction or authority to make this payment of pensions. Sir, I would request the Hon. Deputy Chairman to see this important aspect of the matter which has been overlooked by the Government. Sir, Article 195 of the Constitution says:

> "Members of the Legislative Assembly and the Legislative Council of a State shall be entitled to receive such salaries and allowances as may from time to time be determined, by the Legislature of the State by law and, until provision in that respect is so made, salaries and allowances at such rates and upon such conditions as were immediately before the commencement of this Constitution applicable in the case of members of the Legislative Assembly of the corresponding Province."

Sir, I would like to inform the hon. Members as well as the Treasury Bench that wherever salaries, allowances and pensions are involved. the Constitution has definitely indicated that the term "salaries and allowances" cannot be confused with pensions. For exmaple, Clauses (d) and (e) under Article 112 (3) specifically mention about salaries, allowances and pensions payable to Judges and the Comptroller and Auditor-General of India. Article 112 (3) says, "The following expenditure shall be expen-

diture charged on the Consolidated Fund of India". For the President, Vice-President, Chairman, Deputy Chaairman, Speaker and Deputy Speaker it is only referred to as "emoluments and allowances." In clause (d) the words are:

"(i) the salaries, allowances and pensions payable to or in respect of Judges of the Supreme Court."

Then again, with reference to the other categories of Government servants, "the conditions of service" is the term which is applicable in the circumstances. Sir, I would request the Government to examine this point. Sir, Article 59 (3) refers only to the salaries and allowances for the President, Article 65 (3) refers only to the salaries and allowances for the Vice-President, Article 97 refers only to the salaries and allowances for the Chairman and Deputy Chairman of the Council of States and the Speaker and the Deputy Speaker of the House of the People, Article 106 refers only to the salaries and allowances for the Members of Parliament and Article 195 refers only to the salaries and allowances to the Members of the Legislative Assembly and the Legislative Council of a State.

Sir, then, the words "conditions of service" are used in Articles 146 (2), 229 (2), 309, 314 and 318 of the Constitution, "Salaries, allowances and pensions" are referred to in clauses (*d*) and (*e*) under Article 112 (3). Article 125 refers to the salaries, privileges and allowances of the Judges of the Supreme Court, Article 221 refers to the salaries, allowances and rights of the Judges of the High Courts, Article 146 (2) refers to the salaries, allowances, leave or pensions of the employees of the Supreme Court, Article 229 (2) refers to the salaries, allowances, leave or pensions for the employees of the High Courts, Article 148 (3) refers to the salary and conditions of service of the Comptroller and Auditor-General of India and the proviso to that says that the pension or age of retirement shall not be to his disadvantage. Then, Sir, Article 148 (6) refers to the salaries, allowances and pensions of persons employed in the office of the Comptroller and Auditor-General of India and Articles 318 and 322 refer to the expenses of the union and State Public Service Commissions and also the salaries and conditions of service of the persons employed in those offices.





Sir, in no case has 'salaries and allowances' been held to be tantamount to "salaries, allowances and pension". This is a serious drawback in the Bill.. The Bill seeks not only to give pension to the existing Members on the expiry of their term but also to persons who have already retired and who have ceased to be Members. Therefore, this Bill is *ultra vires* the Legislature and my respectful submission is that we have no power to pass this Bill. Therefore, this Bill cannot be made law.

I request that I may be given a ruling on this point of order.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பாய் அவர்கள் இங்கே சட்டப் பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார்கள். சட்டப் பிரச்சினையைக் கிளப்பி வாதம் செய்வதில் அவர் திறமைசாலி என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, ரிட்டயர் ஆனபிறகு ஊதியம் எதற்கு என்று பேசுவதாகத் தெரிகிறது. ஒருவர் ரிட்டயர் ஆனபிறகு, அவருக்கு ஏற்கனவே கொடுத்த வருமானம் இல்லை என்று சொன்னால், அவருக்கு பென்ஷன் கொடுக்கலாம் என்று சட்டத் திருத்தம் கொண்டுவந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'அல்ட்ரா வைரிஸ்' என்று சொல்லுகிறார்கள். 'அல்ட்ரா வைரிஸ்' ஒன்றுமில்லை. நமது அதிகாரத்திற்கு உட்பட்டதாகும். தவிர, இந்த பென்ஷன் என்பது நம்முடைய ஸ்டேட் லிஸ்டிலே வருகிறது.

The Bill mainly falls within the following entry of the State List in the Seventh Schedule to the Constitution, namely, Entry 42—State pensions, that is to say, pensions payable by the State or out of the Consolidated Fund of the State, and will be *intra vires* the State Legislature. As the Bill does not fall within the concurrent legislative field, consent of the Government of India is not necessary.

அதில் இன்னொரு முக்கியமான பிரச்சினை என்னவென்று சொன்னால், இது எம்.எல்.ஏ. அல்லது எம்.எல்.சி.-ஆக இருப்பவர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியமல்ல. only after retirement கொடுக்கப்படுகிறது.

The proposal to achieve the object in view is similar to the grant of old age pension and pension to persons who have courted imprisonment during anti-Hindi agitation, provisions for which were made only by issue of orders. Pension is payable after a

person ceases to be a Member of the Legislature and not during his term of office as the Member of the Legislature. Hence, the proposed measure will fall under entry 42 of the State List.

(பிற்பகல் 5-00)

அவர்கள் ஓய்வு பெற்ற பிறகுதான் இந்தத் தொகை கொடுக்கப்படும். தொடர்ந்து எம்.எல்.சி. ஆக இருந்தால், இந்தப் பணம் கிடைக்காது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பாய் அவர்கள் தொடர்ந்து இந்த அவையின் உறுப்பினராக இருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன். எனவே அவர் ரிடயர் ஆன பிறகுதான் அவருக்கு இந்த ஓய்வூதியம் கிடைக்கும்.

Entry 42, State List -ல் வருகிறது. எனவே இந்தச் சட்டத்தைக் கொண்டு வர மாநில அரசுக்கு அதிகாரமுண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI: Sir, I draw the attention of the Hon. Minister to Entry 38. That is a specific entry relating to salaries and allowances of Members of the Legislature of the State, of the Speaker and Deputy Speaker of the Legislative Assembly and, if there is a Legislative Council, of the Chairman and Deputy Chairman thereof. What the Hon. Minister referred to is pensions payable by the State or out of the Consolidated Fund of India. Pensions payable by the State are covered by Articles 309 to 311 of the Constitution. It is specifically mentioned in the Constitution that pensions from the Consolidated Fund of India are payable to the President, the Judges, the Comptroller and Auditor-General of India, the Vice-President and persons who occupy that position, the Governor of the State, the Speaker of the Lok Sabha and the Chairman of the Council. Therefore, Entry 42 has nothing to do with this and I am requesting the Government once again to consider this. I feel that this is completely *ultra vires* the Legislature.

THE HON. THIRU S. J. SADIQ PASHA: Sir, I have already stated that it is *intra vires*. If the hon. Member does not agree, he need not draw the pension that may become due to him.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பாய் அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினையின்மீது என்னுடைய தீர்ப்பை அளிக்கின்றேன். உறுப்பினர் அவர்கள் அரசியல் சட்டத்திலிருந்து



எடுத்துக்காட்டிய விதிகளில், இந்த மாதிரிப் பென்ஷன் கொடுப்பதைத் தடை செய்யவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. அதை உறுப்பினர் அவர்களும் ஒத்துக்கொள்வார்களென்று நினைக்கிறேன். அரசியல் சட்டத்தில் தடை செய்யப்படாத எதையும்பற்றிச் சட்டம் செய்ய நமக்கு உரிமை இருக்கிறது. நாம் இந்தி எதிர்ப்புப் போராட்டத் தியாகிகளுக்கும், எல்லைப் போராட்டத் தியாகிகளுக்கும் பென்ஷன் அளிக்கிறோம். அந்த மாதிரிதான் இதுவும் கொடுக்கப்போகிறார்கள். உத்தியோக முறை அடிப்படையில் இந்தப் பென்ஷன் அளிக்கப்படவில்லை. ஓய்வு பெற்ற அரசியல் வாதிகளுக்குப் பென்ஷன் தரப் படுகிறது. இதில் ஒன்றும் ஒழுங்குப் பிரச்சினை இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** துணைத் தலைவரவர்களே, ஓய்வு பெற்ற சட்டப் பேரவை, மேலவை உறுப்பினர்கள், இரண்டு டேர்ம்கள் பதவி வகித்திருந்தால், அவர்களுக்கு ஓய்வூதியம் கொடுப்பதற்காகக் கொண்டுவரப் பட்டிருக்கும் இந்த மசோதாவை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன்; வரவேற்கிறேன். இந்த மசோதாவின் மூலம் பயன் அடைபவர்களிலே நானும் ஒருவன் என்ற முறையிலே . . .

**ஒரு மாண்புமிகு உறுப்பினர்:** பயன் அடைபவர் இல்லை, பயன் அடையக் கூடியவர்களிலே ஒருவர்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** நான் இதனால் பயன் அடைபவனோ, இல்லையோ தெரியாது. பயன் அடையக்கூடிய வாய்ப்பைப் பெற்றவன் என்ற முறையிலே இந்த அரசுக்கு உளமாற என் நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன். இத்தகைய மசோதா கொண்டுவரப்பட்டது மிகமிக நியாயமான ஒன்று. அன்றைக்கு வேறொரு மசோதாவிலே உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். சட்டசபை உறுப்பினர்கள் மக்களுக் காகச் செய்யும் சேவையிலே, தங்கள் சொந்தத் தொழில்களிலெல்லாம் நஷ்டம் ஏற்பட்டு, ஓய்வு பெறும் போது ஓட்டாண்டியாக இருக்கும் நிலை பலருக்கு ஏற்படுகிறது. ஆகவே அவர்கள் ரிடயர் ஆகும்போது, கண்ணியமாக வாழ்வு நடத்த உதவி செய்யக்கூடிய இந்த மசோதா மிகமிக வரவேற்கத்தக்கது. தம்முடைய மாநிலம் பலவிதமான மசோதாக்களை நிறைவேற்றி, இந்த நாட்டுக்கே வழிகாட்டியாக இருக்கிறதென்பதைப் பல முறை பாராட்டி, புகழ்ந்திருக்கிறோம். அந்த வகையிலே இந்த மசோதாகூட, இந்திய நாட்டிலே வேறு எந்த மாநிலத்திலும் நிறைவேற்றப்படாத நிலையிலேதான் இருக்கிறது. இதிலும் இந்த மாநிலம் மற்ற மாநிலங்களுக்கும், பாராளுமன்றத்திற்கும் வழி

காட்டியாக அமைகிறது. இந்த மசோதாவைப் பார்த்துவிட்டு, மற்ற மாநிலங்களும் இதைப் பின்பற்றுமென்று நான் நம்புகிறேன். இதிலே ஒரேயொரு சிறிய திருத்தத்தைச் சொல்ல விரும்புகிறேன். பேரவையில் பத்து ஆண்டுகள் உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கு இந்த ஓய்வூதியம் உண்டு. அதே போன்று மேலவையில் 12 ஆண்டுகள் உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கும் ஓய்வூதியம் உண்டு. ஒருமுறை பேரவையை நான்கு ஆண்டுகளிலேயே கலைத்துவிட்டார்கள். எனவே அந்த நான்கு ஆண்டு உறுப்பினராக இருந்து, அதற்கு முன்னரோ அல்லது பின்னரோ ஐந்து ஆண்டுகள் உறுப்பினராக இருந்தவருக்கும் ஓய்வூதியம் உண்டென்று இருக்கிறது. என்னிடத்தில் சில நண்பர்கள் ஒரு விஷயத்தைச் சொன்னார்கள். அவர்களுடைய பதவிக் காலம் ஒன்பது ஆண்டுகளிலேயே முடிந்திருக்கிறது. அவர்கள், தாங்கள் ஒன்பது ஆண்டுகள் இருந்திருக்கிறோம்; இப்போது இருப்பதில் ஒரு ஆண்டைக் குறைத்து, ஒன்பது ஆண்டுகள் உறுப்பினராக இருந்திருந்தால் அவர்களுக்கும் கிடைக்கும்படி சட்டத்தைத் திருத்தி விடுங்களென்று சொன்னார்கள்.

ஒரே ஒரு வருஷம் குறைக்கப்பட்டால் போதும். சாதாரணமாக ஒன்பது ஆண்டுக்காலம் இருந்திருந்தால் போதுமென்ற சிறிய திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. வி. ராஜகோபால்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இதில் ஒருசில கருத்துக்களைச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். உறுப்பினர் திரு. வசந்த பாய் அவர்கள் இதற்கு அரசியல் சட்டம் இடம் தரவில்லையென்று சொன்னார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அதுதான் தீர்ந்துவிட்டதே.

**திரு. சி. வி. ராஜகோபால்:** உறுப்பினரவர்களுக்கும், துணைத் தலைவரவர்களுக்கும் ஒன்றை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சேலரி, அலவன்ஸ் என்ற வார்த்தைகள் வந்தாலே, அவற்றைத் தொடர்ந்து பென்ஷன் என்ற வார்த்தை வரும். சேலரி என்று இல்லாமல், ஆனரேரியம் என்ற முறையில் சட்ட மன்ற உறுப்பினர்கள் பெற்று வந்தால், மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லும் சட்டம் அதற்கு ஒவ்வாததாக இருக்கும். ஆனால் நாம் பெறுவதை 'சேலரி' என்று சொல்லுகிறோம். ஆகவே பத்து ஆண்டுகள்



'சேலரி' பெற்று வேலை செய்பவர்களாக இருப்பதால், பென்ஷன் அளிக்கிறார்கள். ஆனால் ஆனரேரியம் என்ற அளவுக்குப் பெற்றிருந்தால், 10, 15 ஆண்டுகள் உறுப்பினராக இருந்தாலும், பென்ஷன் கிடைக்காது.

அடுத்தபடியாக, ஒரேயொரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். சட்ட மன்றத்திலே பணியாற்றிய உறுப்பினர்களுக்கு கடைசி நேரத்தில் கொடுக்கப்படும் உதவியை பென்ஷன் என்று சொல்லுகிறார்கள். அப்படிக் கொடுக்கப்படும் தொகை 'பென்ஷன்' என்ற வார்த்தை மூலம் குறிப்பிடப்படுவதைவிட, உதவித் தொகை என்பது மாதிரியாக அமையும் வேறொரு வார்த்தை மூலம் குறிப்பிடப்பட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். அரசியல்வாதிகள் கடைசிவரைக்கும்—இடுகாடு போகின்ற வரைக்கும், அரசியல் வாதிகளாகத்தான் இருப்பார்கள். உத்தியோகம் பார்ப்பவர்கள் ரிடயர் ஆகிறார்கள். ஆனால் அரசியல்வாதிகள் கடைசிவரையில், till the end அரசியல்வாதியாகவே இருப்பதனால், கௌரவமான வார்த்தையை, 'பென்ஷன்' என்ற வார்த்தைக்கு சப்ஸ்டிட்யூட்டாகப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உத்தியோகஸ்தர்கள் பென்ஷன் வாங்கலாம். நமக்குக் கொடுக்கப்படுவது பென்ஷன் என்று இல்லாமல், வேறுவிதமாக இருக்க வேண்டும். தேவையில்லாதவர்கள், என் போன்றவர்கள் அல்லது திரு. வசந்த பாய் போன்றவர்கள் வாங்காமலிருக்கும் உரிமை அவர்களுக்கு இருக்கிறது என்று கூறிக்கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவைப் பாராட்டி, முடித்துக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI: Sir, now I am speaking on the merits of this Bill. Sir, recently I had agitated on the floor of this House that Government servants and teachers should not be given less than Rs. 150 per month as pension because pension also should have a link with the cost of living index and that with the dearness allowance fixed at Rs. 161 at the Centre, the minimum pension that should be given to anybody should be not less than Rs. 150. Recently, when I had been round the City of Madras meeting my Constituents, I was interrogated by several persons who were suffering with pensions less than Rs. 50 or slightly more than Rs. 50 in the State, asking me " As a Member of the Council, are you going to take for yourself a pension of Rs. 250 for ten years' service while we are denied even a Rs. 150 pension for having served the Government of the State for nearly 30 to 40 years? Is this for this reason that you are elected?" They asked me that question and I felt very much hurt.

Sir, our demand in 1971 to give the Members Rs. 100 as Compensatory Allowance met with a lot of opposition outside. Since then we have been consistently trying to increase our emoluments—a further allowance of Rs. 100 in the next year, another increase last year, a telephone allowance of Rs. 100 and 10,000 kilometres of free travel this year—and now we are going to take a pension for ourselves. Is it for enriching ourselves at the expense of the State that we are elected to the Legislature ? I think this is a hard thing for us to bear if we are to go and meet our Constituents again and we should not brook the humiliation that will come to us if we are going to go to the electorate for an election who will charge us with having enriched ourselves during our term of office. I request the Government to withdraw this Bill relating to pensions and to see that this sort of complete rise in emoluments is prevented. We have to meet our Constituents at the time of the elections. And what will they think of us ? They will think that we have utilised the opportunity to make unjust enrichment for ourselves. Sir, this is a thing which I cannot brook and which I cannot imagine. Therefore, I have given notice of some amendments to the Bill. I am not saying that Members of the House who are in indigent circumstances and who might have spent all their money in the elections should not be compensated. To such people, certainly some compensation should be given. I have given notice of some amendments which are already on the table of the House. I am just reading them out :

" Provided that no pension shall be paid to any person who is a recipient of income from any trade, profession or calling or in receipt of any salary from the Parliament or any Legislature or any Government. . .

*(பிற்பகல் 5.10)*

THIRU G. VASANTHA PAI : I am sorry, Sir. The second thing which I wish to submit to this House is that this Bill contains a provision that if the Assembly is to be dissolved within a specific period of time, the period between that dissolution and the summoning of the Assembly, even if it is dissolved within one year shall be deemed to be five years. I do not know how this can stand any Constitutional test.



The proviso to this Bill is rather alarming. It says :

" The State Government may make rules providing for the conditions and restrictions subject to which such pension may be granted. "

This is very humiliating to the Members of the House. If any power is given to the Executive to control the Legislature, I think it is against the basic principle and concept of the Constitution. I am against this clause which gives power to the Executive to say how the pension that is given to us shall be subject to conditions and restrictions.

The second explanation says :

" If the Legislative Assembly is dissolved before the expiration of the period of five years, for the purpose of computing the period as member of the Legislative Assembly the period commencing with the date of the Constitution of the Legislative Assembly after the general election and ending with the date of dissolution, shall be deemed to be five years. "

Sir, this is an impossible proposition which we are trying to pass without proper scrutiny and this cannot stand any valid Constitutional test.

With these remarks, I shall reserve my further comments and also my further submissions on the amendments which I propose to move in this House.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசியல் துறையில், வளர்கின்ற ஜனநாயக நாடுகளில் பலர் ஈடுபட வேண்டிய நிர்பந்தங்கள் ஏற்படுகின்றன. உண்மையான மக்களாட்சி முறை அல்லது ஜனநாயக முறைகள் வெற்றிபெற வேண்டுமென்று சொன்னால், கடைகோடியினரல்லாத நடுத்தர வர்க்கத்தினர்கள் மற்றும் அதற்கும் கீழே இருக்கின்ற மக்கள் அரசியலில் ஆர்வம் காட்டி மேலே வருகிறபோதுதான் உண்மையான ஜனநாயக மறுமலர்ச்சி ஏற்பட முடியும். அப்படி ஏற்படாது போனால், ஜனநாயகம் என்ற பெயரில், வசதி வாய்ப்புகள் உடையவர்களிடத்திலே ஆட்சி முறைகள் சிக்கிவிடும். நம்முடைய அமைப்பைப் பார்க்கின்றபோது, ஆட்சி முறைகளை, சட்டப் பேரவை, மேலவை முறைகளைப்

பார்க்கின்றபோது, நடுத்தர வர்க்கத்தினர்கள், அதற்கும் கீழே சாதாரணமான சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நிறைய பேர் அரசியலில் பங்கு கொள்ளுகின்ற சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது என்பது நமக்குத் தெரிகிறது. இந்தச் சூழ்நிலை இப்படியே நீடிக்க வேண்டுமென்றால், வசதி வாய்ப்புக்கள் இல்லாத நிலையிலுள்ள சாதாரண மக்களுக்கு இதுபோன்ற உதவிகள், ஊதியங்கள் கொடுத்து ஊக்கப் படுத்துவது இன்றியமையாதது. அப்போதுதான் சாதாரண மக்கள் மேலோங்கி வரவும் வாய்ப்பு ஏற்படும். இப்போது இருக்கிற பட்டியலைப் பார்த்தாலும், நம்முடைய உறுப்பினர்கள் மற்றும் அமைச்சரவையின் பட்டியலைப் பார்த்தாலும் தெரியும்; வருமான வரி கட்டுகிறவர்கள் மிகச் சிலர் கூட இருக்க மாட்டார்கள். இப்போது இருக்கிற அமைப்பு முறையைப் பார்த்தால், இப்போது ஆளுகின்ற அரசைப் பொறுத்தவரையில், அது சராசரி மக்களின் பிரதிபலிப்பாக இருக்கிறது என்பதை அறிய முடிகிறது. இந்த அடித்தளத்தில் இருக்கின்ற மக்கள் பயமின்றி அரசியல் பணிகளில் ஈடுபடுவ தற்காக இந்த மசோதா கொண்டு வந்திருப்பதை நான் வரவேற்கின்றேன். இது போன்ற திட்டங்கள் மூலமாக சாதாரண மக்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு அதிக வாய்ப்பு ஏற்படும் என்று நம்பி, இதை வரவேற்கிறேன். ஒருகால் அரசியல் சட்டத்திற்கு ஒவ்வாதது என்று சொன்னால், இதன் பலன்களை எடுத்துச் சொல்லி, டெல்லி வரையில் இந்தச் செய்தியைப் பரப்பி, அரசியல் சட்டம்கூட திருத்தப்படலாம். அதையும் வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வரவேற்கிறேன்.

திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக மற்ற விஷயங்கள் சம்பந்தமாக திரு. ராஜகோபால் அவர்கள் எத்தனையோ சமயம் பேசினாலும்—அதில் அவர் சொல்வதில் சம்பந்தம் இல்லாமல்கூட இருக்க லாம்—இன்று அவர் பேசிய பேச்சு எனக்கு நல்ல சம்மதத்தைக் கொடுத்தது. தம் நாட்டு அரசியலில் இருப்பவர்கள், பெரும்பான்மையோர் கடைசியில் ஓட்டாண்டிகளாக மாறுகிறார்கள். நாம் அதைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். சிலர் 20 ஆண்டுகள், 30 ஆண்டுகள் மக்களுக்காகவே உழைக் கிறார்கள். தேர்தலில் நின்றால், வெற்றி பெறுகிறார்கள்; அவர்களுக்கு எதிராக 2 லட்சம், 3 லட்சம் ரூபாய் செலவழித்தவர்கள் டெப்பாசிட்கூட வாங்காமல் போகிறார்கள். ஆனால் எச்செலவும் செய்யாமல் மக்கள் ஊழியர்கள் வெற்றி பெறுகிறார்கள். அவர்களுக்கு கடைசி காலத்தில் இம்மாதிரி ஒரு ஓய்வூதியம் கொடுப்பது என்பதுபற்றி நாம் ஏதோ புதிதாகப் பேசுவது சரியில்லை. Commonwealth Parliamentary Conference இப்போது நடந்தது அந்த உறுப்பினர்கள் எல்லாம் நம் நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டிருக்



கிறார்கள். அங்கு ஒரு அறிக்கை கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு நாட்டிலும் உள்ள பார்லிமென்டரி உறுப்பினர்கள், சட்ட மன்றப் பேரவை, மேலவை உறுப் பினர்கள் வரையிலும் சொல்லப்பட்டது. அநேகமாக இந்தியாவைத் தவிர எல்லா பார்லிமென்டரி நாடுகளிலும் எல்லா உறுப்பினர்களுக்கும் பென்ஷன் கொடுக்கிறார்கள். ஏதோ இரண்டொரு நாடுகளில் இல்லை. இங்கிலாந்து தேசத்தில் பார்லிமென்ட் உறுப்பினர்களுக்குக்கூட உண்டு.

உறுப்பினர்களில் சில பேர் நல்ல நிலைமையில் இருக்கிறார்கள், சட்ட சபை மெம்பர்களாகவும், கோர்ட்டுகளில் வழக்கறிஞர்களாகவும் இருந்து நாள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கிறார்கள். அவர்களுக்கு இம்மாதிரி பென்ஷன் கொடுப்பது சரியாகத் தோன்றாமல் இருக்கலாம். ஆனால் பொதுவாக அரசியலில் ஈடுபட்டுள்ள என் போன்றவர்கள், 50 வருஷமாக அரசியலிலே தஞ்சம் என்று இருக்கிறார்கள். அரசியலைத் தவிர வேறு எதுவுமே எனக்குத் தெரியாது." அதுவும் சட்ட சபையில் நுழைய ஆரம்பித்தது 1946-ல்தான். அதற்கு முன்னால் பணக்காரர்கள்தான் வரக்கூடிய காலமாக இருந்தது. 1946-ல் தான் நான் வந்தேன். இடையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்தபோது, 1957-லிருந்து 1962-வரை நான் சட்ட சபையில் இல்லை. ஆக, தொடர்ந்து 25 ஆண்டுகள் இருக்கின்றேன். சட்டப் பேரவையில் உறுப்பின ராக 11 வருஷங்கள், இந்த சபையில் 12 வருஷங்கள் இருந்திருக்கிறேன். இடையில் 4 வருஷங்கள் தவிர, திரு. தியாகராஜன் அவர்கள் மறைந்த பிறகு Bye-election-ல் வந்தேன். கிட்டத்தட்ட 25 ஆண்டுகள் சட்ட சபையில்

(பிற்பகல் 5.20)

இருந்திருக்கிறேன். இதே மாதிரி என்னைப் போல எத்தனையோ பேர்கள் இருந்திருக்கின்றார்கள். கணக்கு எடுத்துப் பார்த்தால், தெரியும். இம்மாதிரி உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் கொடுப்பதில் இந்தியாவில், நமது மாநிலத்தவர் கள்தான் முதலில் வழி காட்டியிருக்கிறோம். எத்தனையோ விஷயங்களில் வழி காட்டியிருக்கிறோம். கூட்டுறவுத் துறையில், தொழில் துறையில், மற்ற பல துறைகளில் வழி காட்டியிருக்கிறோம். மற்ற மாநிலங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று வழி காட்டியிருக்கிறோம். முதலிலே, கிண்டியில் தொழிற் பேட்டைகள் அமைத்திருக்கிறோம். இப்படி அமைக்கப்பட்டிருந்த தொழிற் பேட்டைகளைக் காட்டியபோது, இது எப்படி நடக்கும் என்று பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் சந்தேகப்பட்டார்கள். நம் தமிழ்நாட்டில் நடந்துகொண் டிருக்கும் தொழிற்பேட்டைகளைப்பற்றி ஒவ்வொரு மாநிலத்தவரும் அறிவார்கள்.

அவர்கள் இவைகளையெல்லாம் பார்வையிட்டுவிட்டுப் போனார்கள். இப்படிப்பட்ட காரியங்களில் நாம் 10 ஆண்டுகளுக்கு முன்னதாக இருந்தே ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

யாரையும் வற்புறுத்தி வாங்கத்தான் வேண்டும் என்று அரசாங்கம் வற்புறுத்தவில்லை. இப்போதுகூட ரூ. 250 சம்பளமாக வாங்குவதைக்கூட வேண்டாம் என்று சொல்லுவதற்கு புரொவிஷன் இருக்கிறது. நாம் வாங்கத்தான் வேண்டும் என்று ஒன்றும் கட்டாயமில்லை. வசதியோடு இருப்பவர்கள் வேண்டாம் என்று சொல்லிவிடலாம்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** ஒரு வேளை அது உறுப்பினர் திரு. வசந்த பாய் அவர்களுக்குத் தேவையில்லாமல் இருக்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** யாரைப்பற்றியும் குறிப்பிட்டுப் பேசக்கூடாது.

**திரு. கே. ராஜாராம் :** இங்கு யாரையும் குறிப்பிட்டுப் பேசக்கூடாது. எந்த உறுப்பினராவது தேவையில்லை என்றால், இப்போது வாங்கிக்கொண்டிருக்கின்ற ரூ. 250 சம்பளத்தைக்கூட தேவையில்லை என்று சொல்லிவிடலாம். நமது மாநிலம் இப்போது பிற மாநிலங்களுக்கு வழி காட்டக்கூடிய நிலைமையில், இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறது. இது மிக நல்ல காரியமாகும் என்று தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, பொதுவாக எல்லா உறுப்பினர்களும் இந்த மசோதாவை வரவேற்றிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பாய் அவர்கள் சொல்வது, அவர் வோட்டுக் கேட்கப் போகும்போது, ரூ. 250 சம்பளம், பென்சன் வாங்கப்போகிறீர்கள் என்று எல்லாம் கேட்பார்களே என்பது. வோட்டுபெற்று வெற்றி பெறுவிட்டால், பணம் வாங்க முடியாது. வெற்றி பெற்றுவிட்டால், எனக்கு வருகிற சம்பளத்தை உங்களுக்குச் செலவழிக்கிறேன் என்று கூட சொல்லிக்கொள்ளலாம். அப்படி எல்லா உறுப்பினர்களிடமும் அவர் வோட்டு பெற்றுக்கொள்ளலாம்.

**திரு. ஏ. ஆர். தாமோதரன் :** இன்னும் பத்து வருடம் ஆகவில்லை.

**திரு. ஜி. வசந்த பாய் :** I am having only six years.



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுத்து நிச்சயமாக வெற்றிபெற வேண்டும். மாண்புமிகு திரு. வசந்த பாய் அவர்களுக்கு 12 வருடங்கள் ஆகிவிடும். அவர்கள் அடுத்த தடவையும் வெற்றிபெற வேண்டுமென்று விரும்புகிறேன். இந்த மசோதாவைப்பற்றி மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் நல்ல முறையிலே எடுத்துச் சொன்னார்கள். இதிலே இருக்கக்கூடிய பிரச்சினை, சட்ட மன்றப் பேரவையிலே விவாதிக்கப்பட்டது. அது அவரவர்கள் நிலைமையைப் பொறுத்தது. அவரவர்கள் அவசியத்தைப் பொறுத்தது. வசதி இருப்பவர்களுக்கு, சமுதாயத்தில் மேல் மட்டத்தில் இருப்பவர்களுக்கெல்லாம் இதுபோன்ற பென்ஷன் தேவைப்படாமல் இருக்கலாம். சமுதாயத்தில் அடிமட்டத்தில் உள்ளவர்கள், கஷ்ட நிலையில் இருக்கின்ற உறுப்பினர்கள் இதை வரவேற்கிறார்கள். அது அவரவர்களுடைய மனநிலைமையைப் பொருத்ததாக இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. வி. ராஜகோபால் அவர்கள் இதற்கு ஒரு கவர்ச்சிகரமான பெயர் வேண்டுமென்று சொன்னார்கள். தியாகிகள் பென்ஷன், உதவித் தொகை என்று பெயர் இருக்கிறது. அதை வைத்துக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்று பார்க்கலாம். பொதுவாக இந்த மசோதா அவசியமானது என்ற அளவில்தான் சட்ட மன்றப் பேரவையிலும், மேலவையிலும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். முதலில் 12 ஆண்டுகள் என்று கருதப்பட்டது. இரண்டு தடவைகள் அவை உறுப்பினராக இருந்திருந்தால் போதும் என்று கருதப்பட்டது. இப்படி விதியிருந்தால் சட்ட சபையிலே இரண்டு தடவைகள் இருந்தால்கூட உறுப்பினர்களுக்கு பென்ஷன் பெறுகின்ற வாய்ப்பு இருக்காது என்ற அளவில், சட்ட சபையிலே இரண்டு தடவைகள், அல்லது 12 ஆண்டுகள் என்று இருந்ததைத் திருத்தி, பேரவையிலும், மேலவையிலும் இருந்த காலம் சேர்ந்து 10 ஆண்டுகள் இருந்தாலும், பென்ஷன் உண்டு என்ற அளவில்தான் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. எனவே இந்த மசோதாவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

THIRU G. VASANTHA PAI: Sir, I have given notice of some amendments to the Tamil Nadu Payment of Salaries (Second Amendment) Bill, 1975. I beg to move the following amendments :—

"In clause 2 in the proposed section 12-B after item (iii), the other clauses and explanations be deleted and the following substituted in their stead :—

(1) Provided that no pension shall be paid to any person who is a recipient of income from any trade, profession, or calling or in receipt of any salary from the Parliament or any Legislature or any Government or any Corporation State-owned or private, and including Company or Co-operative Society or an Association or Organisation, charitable or otherwise :

(2) Provided further that no such pension shall be paid to any member of the Legislature before his completing 55 years of age."

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** திரு. ஜி. வசந்த பாய் அவர்களின் திருத்தத்தை வழி மொழிபவர் யாரும் இல்லை. ஆதலால் திருத்தம் கைவிடப் படுகிறது.

**திரு. கே. ராஜாராம் :** தலைவரவர்களே, இந்த மசோதாவில் இரண்டாவது கிளாஸ்லே 3-வது அயிட்டம், பின்னர் இருக்கக்கூடிய

"The State Government may make rules providing for the conditions and restrictions subject to which such pension may be granted."

இதை நான் முதலில் கவனிக்கவில்லை. இது ஒரு நல்ல விஷயம். ஏனென்றால் சில கஷ்டமான விஷயங்களைச் சொல்லிவிடுகிறேன். தேர்தல் நடக்கும் காலத்தில் ஒரு வேட்பாளர் திடீரென்று மறைந்துவிட்டார். அப்போது தேர்தலை அந்தத் தொகுதிக்கு நிறுத்திவிட்டார்கள். அந்தத் தேர்தல் இரண்டு மாதங்கள் கழித்துத்தான் வந்தது. அந்தத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினருக்கு முழு டர்ம் என்ற அளவில் உள்ள ஐந்து ஆண்டுகளில், இரண்டு மாதங்கள் குறைந்து விடுகின்றன. அவருக்கு ஆரம்ப காலத்திலேயே இரண்டு மாதங்கள் குறைந்துவிடுகின்றன. அவையை 'டிசால்வ்' பண்ணுகின்ற நிலை



மையும் வருகின்றது. நான்கு அல்லது 4½ வருடங்களில் 'டிசால்வ்' பண்ணினால், அதை ஐந்து வருடமாகக் கொள்ள வேண்டும். இருக்கின்ற ஐந்து வருடத்தில் ஆரம்ப காலத்தில் இரண்டு மாதங்கள் கழித்து உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றவர்களுக்கு இந்த இரண்டு மாத காலத்தைக் கணக்கிலெடுத்துக்கொண்டு, அரசாங்கம் அதை அவர்களுக்கு ஐந்து வருடங்களாக ஆக்குவதற்கு இந்த விதி பயன்படும் என்று நினைக்கிறேன்.

"The State Government may make rules providing for the conditions and restrictions subject to which such pension may be granted."

உதாரணமாக, போன தேர்தலிலே திருமங்கலம் தொகுதியில், என்னுடைய தொகுதியில், வேட்பாளர் மறைந்துவிட்டார். மற்ற அசெம்பிளி தேர்தல்கள் எல்லாம் முடிந்து இரண்டு மாதங்கள் கழித்துத்தான் அந்தத் தொகுதித் தேர்தலுக்கு தேதி நிர்ணயிக்கப்பட்டு, அபேட்சகர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு ஐந்து வருடத்தில் அந்த இரண்டு மாதம் குறைந்திருக்கிறது. அது அவருடைய குற்றமில்லை. இடையிலே இந்த வருடத்தில் 10 மாதம்தான் இருந்திருக்கிறார்கள். நான்கு வருடத்திலே சட்ட சபை கலைந்ததால், மூன்று வருடம் 10 மாதம்தான் இருந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படி ஒரு சட்ட விதியைப் போடுவது நல்லதல்ல என்று கருதுகிறேன். ஆனால் ஒரு தனிப்பட்ட விதத்தில் "ஸ்பெஷல் கேஸ்" ஆக, அந்த நேரத்தில் இருக்கின்ற சூழ்நிலையின் அரசு உத்தரவிட்டு விலக்களித்துக் கொள்ள முடியும். இப்போதே சட்ட விதியைப் போடுவது தேர்ந்தெடுக்கப்படுபவர்களுடைய உயிருக்கே ஆபத்தாக வரலாம். இரண்டு மாதங்கள்தான் குறைவு என்று வருகின்றபோது, பார்த்துக்கொள்ளலாம். அதைப்பற்றியெல்லாம் யோசித்த பின்தான், அதிலே தனியாக விதி செய்ய வேண்டிய தேவையில்லை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ராஜாராம் :** என்னுடைய கருத்தை முதலமைச்சர் அவர்களும் எடுத்துச் சொல்லிவிட்டார்கள். தனிச் சட்டத் திருத்தம் வேண்டியதே இல்லை. இந்த 'கிளாஸே' போதுமானது. இதை வைத்தே உத்தரவு போட முடியும் என்று நினைக்கிறேன். ஒருவேளை சட்டப் பிரச்சினை வந்தால், ஒரு தனி

அமெண்ட்மெண்ட் போட்டுக்கொள்ளலாம். கோரிக்கை ஏதாவது வரும் போது, தனியாகப் பார்த்துக்கொள்ளலாம். இந்த அவையிலேகூட ஒரு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்ட சபையில் பிரமாணமே எடுக்காத நிலையில் மறைந்துவிட்டார்கள். அடுத்தபடி பை-எலக்ஷன் வைக்கும்படி நேர்ந்து, இரண்டு மாதம் கழித்துத்தான் அந்த ஸ்தானம் பூர்த்தி செய்யப் பட்டு உறுப்பினராக இருந்துகொண்டிருந்தார். அவர் 12 வருடங்களுக்குக் குறைவாக 11½, 11¾ வருடங்கள் உறுப்பினராக இருந்தார். அவரும் ஆரம்பத்திலே காலம் கழித்து வந்தார். இந்த மாதிரி சட்டப் பிரச்சினை வரும். அதைப்பற்றிச் சற்று ஆலோசித்துப் பார்க்க வேண்டும். இந்தச் சட்டம் வேண்டாம் என்று ஒரு உறுப்பினர் தீர்மானம் கொடுத்தார்கள். அரசாங்கத்துக்கு அந்த விதமான அதிகாரங்கள் இல்லை என்றால், கஷ்டமான நிலை ஏற்படும். நான் அந்த அதிகாரம் அரசுக்கு இருக்க வேண்டும் என்று கருதுகிறேன்.

(பிற்பகல் 5.30)

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இதை முதலிலேயே தெளிவாகத் தெரிவித்து விடுவது நல்லது என்று கருது கிறேன். பேரவை உறுப்பினர்களுக்கு 10 ஆண்டுகள் என்று நாம் தெளிவாகப் போட்டிருக்கிறோம். ஒன்றும் மாறுதல் கிடையாது. மேலவை உறுப்பினர் களுக்கு 12 ஆண்டுகள் என்று போட்டிருக்கிறோம். அரசியலமைப்புச் சட்டப்படி கலைக்கப்பட்டால், அப்படிக் குறைந்த வருஷம் சேர்த்துக்கொள்ளப் படும். 10 ஆண்டுகள் என்று இப்போது தெளிவாக இருக்கிறது. புதிதாக விதி முறைகளில் ஒன்றும் நாம் மாற்ற வேண்டிய அவசியமில்லை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் யோசித்துப் பார்த்து இரண்டு மூன்று உதாரணங் களைத்தான் சொன்னார்கள். நாங்கள் யோசித்த பிறகு, 10, 15 உதாரணங்கள் எங்களுக்கு வந்தன. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போன்ற ஒரு நிலை ஏற்படுமானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது போல், அவசியமாக இருந்தால், தனியாக அரசு உத்தரவு போட்டுக் கொடுக் கலாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

" சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடி விற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

" சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 53/1975) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

" சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1975) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, சட்ட மன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1975).

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

" சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, சட்ட மன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) திருத்த சட்ட முன் வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

---

@ 333-334 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1975 நவம்பர் 10

தமிழ் நாடு 1967 ஆம் ஆண்டு சட்ட மன்றச் (தகவின்மையைத் தவிர்த்தல்) (தமிழ் நாடு சட்டம் 3/1967) சட்டத்தைச் சேர்ந்த 2 ஆவது பிரிவின்படி, இச் சட்டத்தின் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பதவிகள் எவையும், அப் பதவி வகிப்பவர் சட்ட மன்ற உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கு அல்லது உறுப்பினராயிருப்பதற்கு அவரைத் தகுதியற்றவராக்காது அல்லது அவரை அவ்வாறு தகுதியற்றவராக்கியுள்ளதாக எப்போதுமே கருதப்படக் கூடாது. தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழக இயக்குநர் பதவியும் தமிழ் நாடு சிறு தொழில் கழக இயக்குநர் பதவியும் மேற்சொன்ன விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆதாயமளிக்கும் பதவிகள் குறித்த இணைக்குழு தனது "ஐந்தாவது மக்களவை—பத்தாவது அறிக்கையில்" செய்துள்ள பரிவுரையின் அடிப்படையில், இவ்விரு கழகங்கள் தொடர்பான பதிவுகளை மேற்படி விவர அட்டவணையிலிருந்து நீக்கிவிட அரசு முடிவு செய்துள்ளது. இதே அறிக்கையில், மேற்படி இணைக் குழு செய்துள்ள பரிவுரையை அடிப் படையாகக் கொண்டு, மேற்சொன்ன விவர அட்டவணையில் கீழ்க்கண்ட நான்கு அமைப்புகளைச் சேர்த்துக் கொள்ளவும் அரசு முடிவெடுத்துள்ளது :—

1. தமிழ் நாடு உப்பு, உப்பு சார்ந்த இரசாயனப் பொருள்கள் வாரியம்.

2. கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் நூலின் ஆலைவாயில் விலையையும், கிடங்குவாயில் விலையையும் நிர்ணயிக்கும் துணைக் குழு.

3. கூட்டுறவு நூற்பாலைகள் குறித்த மாநில ஆலோசனைக் குழு.

4. குடும்ப நலத் திட்டம் குறித்த நாடகக் கதை-வசனங்களையும், கலைஞர்களையும் தெரிந்தெடுக்கும் குழு.

தமிழ் நாடு கைவினைப் பொருள்கள் வளர்ச்சிக் கழக இயக்குநர் பதவியையும் மேற்சொன்ன விவர அட்டவணையில் சேர்ப்பதென்று அரசு முடிவு செய்துள்ளது. அதற்கேற்ப, மேலவை முன் இப்போது வைக்கப்பட்டுள்ள இச் சட்ட முன்வடிவில் இது குறித்த விதித் துறைகள் அடங்கியுள்ளன. இத் தீர்மானத்தை ஏற்று, நிறைவேற்றித் தருமாறு இம் மாமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, சட்ட மன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) திருத்த சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



1975 நவம்பர் 10]

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, சட்ட மன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) திருத்த சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1975) நிறைவேற்றப் பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, சட்ட மன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) திருத்த சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1975) நிறைவேற்றப் பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## (5) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, கைத்தறித் துணிகள் (பாதுகாத்தல், உற்பத்தி, பகிர்ந்தளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1974)

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, கைத்தறித் துணிகள் (பாதுகாத்தல், உற்பத்தி, பகிர்ந்தளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

---

@ 334-353 ஆக அச்சிடப்பட்டுள்ளது. V ஆம் பக்கங்களில் இணைப்பு

தற்போது இருக்கும் சட்டத்தின் கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கு விசைத் தறிகள் மற்றும் நூற்பு நெசவாலைகளினால் ஏற்படும் போட்டியிலிருந்து போதுமான பாதுகாப்பு அளிக்கவும் மேலும் நெசவாளர்களுக்கு போதுமான அளவு நூலை நியாயமான விலைக்கு அளிக்கவும் இயலாமல் உள்ளது. ஆகவே நூல் உற்பத்தி, பகிர்ந்தளிப்பு மற்றும் விற்பனையை கட்டுப்படுத்தவும் மேலும் கைத்தறித் தொழிலை பாதுகாக்கும் பொருட்டு சில ரகத் துணிகளை அத் துறைக்கென ஒதுக்கவும், மாநில அரசிற்கு அதிகாரம் அளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. 1958 ஆம் ஆண்டின் அத்தியாவசியப் பண்டங்கள் சட்டத்தின்கீழ் அமுலில் தொடர்ந்து இருந்து வரும் பருத்தித் துணிகள் (கட்டுப்பாடு) ஆணை 1948 இன் விதிகள் மேற்கண்ட குறிக்கோள்களை அடைவதற்குப் போதுமானதாக இல்லை. இந்த அவையின் முன் வைக்கப் பட்டுள்ள இச் சட்ட முன்வடிவில் மேற்கூறிய குறிக்கோள்களுக்கான விதி முறைகள் கட்டாயக் குழுவின் ஆய்விற்கு விடப்பட்டு அக் குழுவின் திருத்தங் களுக்குட்பட்டு உள்ளது. இந்த மசோதா சட்ட மன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த மசோதாவை நிறைவேற்றித்தருமாறு இந்த மாமன்றத்தை வேண்டுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன் மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, கைத்தறித் துணிகள் (பாதுகாத்தல், உற்பத்தி, பகிர்ந்தளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

(பிற்பகல் 5-40)

THIRU S. NARAYANASWAMY: Hon. Deputy Chairman, I am rising to express some of my misgivings in regard to this Bill. This Bill is undoubtedly intended for the very noble purpose of protecting the handloom industry in the State. I am personally aware of the great hardship caused by accumulation of handloom cloth and handloom yarn in the State. But, I wonder if a Bill of this character is going to bring prosperity to the handloom sector. The fact of the matter is that those who consume products of the powerlooms seem to be of a wholly different community from those who consume handloom cloth. I am much more disturbed by the list of articles the manufacture of which by powerlooms is being prohibited—like dhoties,





sarees, sarongs, lungis, blankets, handkerchiefs, etc. The fact of the matter is that the textile industry in this State is itself going through a terrible crisis today and it involves an enormous sector of employed people. The amount of money which has been invested in powerlooms, particularly automatic looms during the last few years is a staggering sum. Moreover, in Tamil Nadu we are manufacturing very, very complicated types of textile machinery that are being marketed today and these looms have been doing a very valuable job. Apart from this, what has developed as a result of the anomalous excise duty provisions is the enormous spread of individual powerlooms in villages. As I travel, I see these individual looms being kept in small houses by people who have grown rich through the powerlooms because of the mixture of man-made fibre with the cloth which they weave on these looms. This sector has become a very significant sector in the State and I dare say that it will become so in other States also. Between the powerloom sector and the organised textile industry which pays enormous excise duties apart from setting up the automatic powerlooms at very high costs, there are this sector of powerlooms in the individual village and the rural sector to consider. So, I am worried abuot this. What seems to be certain to happen is that sarees and specialised types of textile goods which are largely used would come under the categories referred to as prohibited for powerlooms.

Apart from this, what worries me is the prohibition of dealers. Clause 4 of the Bill says that no manufacturer or dealer shall sell or offer to sell any handloom product which has been manufactured whether within or outside the State by any powerloom or composite mill. I think what this clause 4 purports to do is to describe the powerloom product as handloom product and prohibit it. I do not know what it means and what is the conflict of jurisdiction between the Centre and the State in this matter. I think it will be restriction of normal trading facilities. I am not giving an exposition of law on this matter because I do not know enough law to give it. But I do think that it would be unfair to prohibit the dealer in textile cloth from dealing in these goods. We want to compel him to handle only handloom

[Thiru S. Narayanaswamy] [1975 நவம்பர் 10

cloth and not powerloom products. I have my misgivings in this regard. I do want the prosperity of the handloom sector to be promoted by the State. But I do think we should not do anything which while sealing the fate of the powerloom sector in the State, will not bring about the prosperity of the handloom, sector. Perhaps, I may get greater elucidation from the Hon. Minister but I do think very definitely that it will destroy the powerloom sector's major earning power while perhaps not doing very much for the handloom sector itself.

* தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக, கைத்தறித் துணி என்று சொன்னால், நம்முடைய அரசு அமைச்சர்களுக்குத் தனி அடையாளச் சின்னம் போல், அவர்கள் தேக்க நிலையிலே இருந்த துணிகளை எல்லாம் தாங்களே தோளில் சுமந்துசென்று அதிகமான துணிகளை விற்று பெயர் பெற்றார்கள். கைத்தறித் துணிக்கு என்று ஏதாவது பாதுகாப்பு செய்வது நியாயமானது. அதே நேரத்தில் கிராமப் புறங்களில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு மிகவும் குறைவாக இருக்கின்றது. அவர்களுக்கெல்லாம் ஒருவருக்கு ஐநூறு ரூபாய் இருந்தால், அவர்கள் சொந்தமாகக் கைத்தொழில் செய்து கொள்ள முடியும். அதன் மூலமாக அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க முடியும். விசைத்தறியை விஸ்தரிக்காமல் கைத்தறியை அதிகமாக்க வேண்டும். அவர்களுக்கு அதிகமான வேலை கொடுப்பதற்காக அரசு தனிப்பட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். கைத்தறித் துணிகள் அடிக்கடி தேக்கம் அடைவது சாத்தியம். ஆகையால் கூடுமான வரையிலே நம்முடைய அமைச்சர்கள் அந்தத் துணிகள் தேங்கா வண்ணம் விற்பதற்குத் தலைமை தாங்கி நடத்தினால், இந்தச் சிரமங்களைத் தவிர்க்க முடியும் என்று அரசைக் கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. ராஜாராம்: துணைத் தலைவர் அவர்களே, ஏராளமான மசோதாக்கள் பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளன. எனக்குத் தெரிந்த வரையில், சமீப காலத்திலே பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்ட மசோதாக்களில் இந்த மசோதா மக்களின் கவனத்தை மிகவும் ஈர்த்த ஒரு மசோதா. இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், பொறுக்குக் குழு உறுப்பினர்கள் மக்களின் கருத்தை அறிய எல்லா ஊர்களுக்கும், ஜில்லா தலைநகரங்களுக்கும் சென்றனர். ஆயிரக்கணக்கான பேர் அங்கு வந்து தங்களுடைய



1975 நவம்பர் 10] [திரு. கே. ராஜாராம்]

அபிப்பிராயங்களை பொறுக்குக் குழுவிடம் தெரிவித்தார்கள். ஆரம்பத்தில், கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்வது, வினியோகிப்பது, விற்பது, இவைகளைக் கட்டுப்படுத்தி, விற்பனையை எப்படிச் செய்வது என்பது மட்டும்தான் அந்த மசோதாவில் இருந்தது. ஆனால் எல்லா ஜில்லாக்களுக்கும் சென்று பொதுமக்களிடம் இந்த விஷயத்தில் உள்ள கஷ்ட நஷ்டங்களைத் தெரிந்து கொண்டு வந்த பிற்பாடு, முக்கியமான விஷயங்கள் சிலவற்றை இந்த மசோதாவில் சேர்த்தோம். முக்கியமாக கைத்தறித் துணிக்கு வேண்டிய மூலப் பொருள்கள் கிடைக்காமல், ஆறேழு மாதங்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகையால் துணியை மட்டும் கட்டுப்படுத்துவது மசோதாவின் நோக்கம் என்று வந்தால் ஆபத்து என்று அப்போது சில திருத்தங்களைச் செய்தோம். அது மட்டுமல்லாமல், அவர்களுக்கு வேண்டிய சாயப் பொருள்கள், நூல் முதலியவை விலை அபரிமிதமாக ஏறிவிடும். மதுரையில் 3-ல் 2 பங்கு பேர் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள். அவர்கள் இதனால் 3 நாள் 4 நாள் பட்டினி கூட கிடக்கும்படியாக ஏற்பட்டுவிடும். நான் மதுரையிலிருந்து வந்தவன், விவரமாகத் தெரியும் என்பதால் இதைச் சொல்லுகிறேன். ஆனால் இப்போது செய்திருக்கிற காரியம் மிகவும் நல்ல காரியம். இன்னும் அவர்களை வறுமையிலிருந்து காப்பாற்ற நிறைய செய்ய வேண்டும். ஏனென்றால் அவர்கள் உற்பத்தி செய்த துணிகளை விற்க முடியாமல், மூன்று நான்கு மாதம் மிகவும் கஷ்டப்படுவார்கள். நூலுக்கு வழிசெய்து கொடுத்தோம். அதேபோல் இந்தத் துணிகளை விற்பதற்கும் வழிவகை செய்ய வேண்டும். துணிகள் விற்காது இருக்கும் நிலையை அரசாங்கம் மாற்றி, அரசாங்கமே அவைகளை எடுத்துக் கொண்டு விற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். 'நாம் உற்பத்தி செய்யும் துணியை நிச்சயமாக வாங்குவார்கள்' என்ற நிலையை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விசைத்தறி வந்த நேரத்தில், மற்ற மாநிலங்கள் எல்லாம் ஓடி ஓடி விசைத்தறியை அமைக்க ஏற்பாடு செய்தனர். ஆனால் நம்முடைய தமிழ் நாட்டில் மட்டும்தான், இந்த விசைத்தறியை ஏற்றுக் கொண்டால், கைத்தறித் தொழில் நசித்துவிடும், அதற்கு ஆபத்து வந்துவிடும் என்று கருதி, அப்போது இருந்த அரசாங்கம் மறுத்து விட்டது. ஆனால் பக்கத்து மாநிலங்களான ஆந்திரா, கேரளா, கர்நாடகா போன்றவைகளிலிருந்து விசைத்தறித் துணி தமிழ் நாட்டுக்கு வந்தால், கைத்தறித் துணி விற்பனை குறைந்துவிடும், அவர்கள் போட்டியாக விசைத்தறித் துணியை விற்பனை செய்வார்கள் என்ற பயத்தில், இங்கே நாலைந்து பேர் ஒன்று சேர்ந்தால், அவர்களுக்கு விசைத்தறி

[திரு. கே. ராஜாராம்] [1975 நவம்பர் 10

அனுமதிக்கலாம் என்று அரசாங்கம் ஒரு கொள்கையை உண்டாக்கியது. ஆனால் பெரிய பெரிய ஆட்டோமேடிக் மில்களிலிருந்து விசைத்தறித் துணிகள் வந்துகொண்டிருக்கின்றன, இதனால் பெரிய விலாங்கு மீனிலிருந்து சின்ன மீனைக் காப்பாற்றக்கூடிய கட்டத்தில் இருக்கிறோம். மிகப் பயங்கரமான ஆபத்து வந்திருக்கிறது. அதனால்தான் பொறுக்குக் குழு சென்ற காலத்தில், நிறைய பேர் இதிலே லைசென்ஸ் கிடைத்து விடும் என்ற நம்பிக்கையுடன் சாட்சியம் அளித்தார்கள். இந்த மசோதாவின் மூலம் அவர்கள் துயரைப் போக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதைப்பற்றி நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முன்னாள் தொழில் அமைச்சராக இருந்த திரு. மாதவன் அவர்கள் டெல்லிக்குச் செல்லும்போதெல்லாம் மிகவும் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த விசைத்தறிகள் எவ்வளவு மோசமாக கைத்தறியை பாதிக்கும்படியான நிலைமையைக் கொண்டுவந்து விட்டன என்பதைப்பற்றியெல்லாம் மிகவும் விளக்கிக் கூறினார்கள். அதற்காகச் சட்டம் செய்யும் அதிகாரம் நம்மிடம் இல்லை, எப்படி இந்த நிலைமையைப் போக்குவது என்று எல்லாம் கூட்டுப் பொறுக்குக் குழுவிலே எடுத்துச் சொன்னார்கள். மேலும் சட்டவிரோதமாக லைசென்ஸ் இல்லாமல் விசைத்தறிகளை நிறைய பேர் வைத்திருக்கிறார்கள். அந்தமாதிரி விசைத்தறிகளைப் பறிப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். கைத்தறித் துணிக்கு எந்தெந்த ரகங்களை ஒதுக்கலாம் என்றும், அந்த ரகத் துணிகளை விசைத்தறிகள் உற்பத்தி செய்யக்கூடாது என்றும் சொல்லியிருக்கிறோம். ஆனால், வடக்கேயிருந்து இங்கு வரும் விசைத்தறித் துணிகளைத் தடுக்க நமக்கு அதிகாரம் இருக்கிறதா என்பதைப் பரிசீலிக்க வேண்டும் என்று அப்போதே சொன்னேன். தொழில் அமைச்சர் அவர்கள் கூட டெல்லிக்குச் சென்று, இதைப்பற்றியெல்லாம் கருத்துத் தெரிவித்தார்கள். டெல்லியிலிருந்து அமைச்சர்கள் இங்கு வரும்போதும் இவ்வாறு சட்டம் செய்ய வேண்டுமென்று சொல்கிறோம், அவர்களும் அதைக் கேட்டுக் கொண்டு செல்கிறார்கள். ஆனால் அங்கிருந்து வரும் அறிக்கை வேறு விதமாக இருக்கின்றது. இதனால் நம்முடைய சட்டம் ஒருவேளை வியர்த்தமாகப் போய் விடுமோ என்று பயமாகவும் இருக்கிறது. வடக்கே சூரத்திலிருந்தும், மற்றும் தெற்கு எல்லைப் பிரதேசங்களிலிருந்தும் இந்தத் துணிகள் "ஸ்மக்ளிங்" மாதிரி வந்துகொண்டிருக்கின்றன. இந்த நிலைமையைப் பார்த்தால், இதுவும் ஒரு "ஸ்மக்ளிங்" ஆகிவிடும்போல் இருக்கிறது. ஆகையால் விசைத்தறிகள், மில் துணிகள் ஆகியவை இங்கு வருவதைத் தடுக்க மத்திய சர்க்காருடைய



1975 நவம்பர் 10] [திரு. கே. ராஜாராம்]

(பிற்பகல் 5-50)

ஒத்துழைப்புத்தேவை. மத்திய அரசு நம்முடன் ஒத்துழைத்தாலொழிய, இந்தச் சட்டத்தினால் மக்களுக்கு நன்மை செய்ய முடியாது. கைத்தறித் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு நாம் எவ்வளவு முயற்சி செய்தாலும், மத்திய அரசினுடைய ஒத்துழைப்பு கிடைக்கவில்லையென்று சொன்னால், மிகவும் கஷ்டங்கள் ஏற்படும். ஆகையால் இதில் அதிக கவனம் செலுத்தி, மத்திய அரசுக்கு வேண்டிய தகவல்களை நமது அமைச்சரவை கொடுத்து, அடுத்த மாநிலங்களிலிருந்து துணிகளை இங்கு கொண்டுவராமல் இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். முடியுமானால் எல்லா மாநிலங்களையும் கட்டுப்படுத்துமளவுக்கு பார்லிமென்டிலேயே ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். அதை நான் வரவேற்கிறேன். அப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டுவந்து, எல்லா மாநிலங்களையும் கட்டுப்படுத்தினால், நமக்கு மிக்க நன்மை ஏற்படும். இந்தியாவைப் பொறுத்தவரையில், தமிழ் நாட்டில்தான் இந்தத் தொழிலினால் ஜீவிக்கக்கூடியவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அடுத்தபடியாக ஆந்திராவில் அதிகமாக இருக்கிறார்கள். அதற்கு அடுத்தபடியாக வங்காளம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் இருக்கிறார்களென்று சொல்லுகிறார்கள். நம்முடைய மாநில மக்களுள் மூன்றில் ஒரு பங்கினர் இந்தத் தொழிலினால் ஜீவிக்கிறார்கள். தறிகளின் எண்ணிக்கை எத்தனை இருந்தாலும், ஒவ்வொரு தறியையும் நம்பி 5 பேர்கள் வாழ்கிறார்கள். நம்முடைய கணக்குப்படி கைத்தறி ஒவ்வொன்றுக்கும் 5 உயிர்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையால், நம்முடைய காலத்தில், நாம் நிறைவேற்றக்கூடிய சட்டங்களில் இது மிகவும் முக்கியமான சட்டமாகும். இந்தச் சட்டத்தின் முழு அனுகூலங்களை மக்கள் பெறுவதற்கு மத்திய அரசினுடைய ஒத்துழைப்பு தேவை. அதைப் பெறுவதற்கு நல்ல முறையில் முயற்சி எடுத்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்கிறேன் என்று கூறி, அமைகிறேன்.

(பிற்பகல் 5-50)

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கைத்தறித் துறையில் உற்பத்தியாகின்ற துணிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும்; சந்தையிலே ஏற்படும் விலையேற்றத்திற்கு கைத்தறி நெசவாளர்களை ஆட்படுத்தாமல், நியாயமான விலையில் அவர்களுக்குத் தேவையான மூலப் பொருள்களைக் கொடுப்பதற்கான வழி முறைகளைச் செய்ய வேண்டுமென்ற நோக்கங்களோடு இந்த மசோதா கொண்டுவரப்படுகிறது. இந்தக் கொள்கை

யைப் பொறுத்தவரையில், தமிழ் நாட்டில் தொடர்ந்து நாம் ஏகோபித்த ஆதரவைப் பெற்று வந்திருக்கிறோம். இது எல்லோருக்கும் தெரியும். மூதறிஞர் ராஜாஜி அவர்கள் காலத்திலிருந்தே, கைத்தறித் துறையைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக, ஒருசில ரகங்களை ஒதுக்க வேண்டுமென்ற கொள்கைக்கு தமிழ் நாட்டு மக்கள் ஆதரவு தந்திருக்கிறார்கள். தொடர்ந்து நூற்பு ஆலைகள் பெருகினவேயொழிய, நெய்யும் வாய்ப்புகள் தமிழ் நாட்டில் குறைவுதான். அந்தக் கொள்கையிலே தொடர்ந்து நாம் ஒரே எண்ணத்தைக் கடைப்பிடித்து வந்திருக்கிறோம். இதை, மத்திய அரசு எந்தக் கண்ணோட்டத்தோடு நோக்குமென்பது பிரச்சினைக்குரிய ஒன்றாகும். மத்திய அரசினுடைய இன்றைய கொள்கை, அவர்கள் போட்டிருக்கும் இன்றையச் சட்டம் ஆகியவை, நாம் இன்றைக்குக் கொண்டு வந்திருக்கும் கொள்கையை ஆதரிப்பதாக இருக்கின்றன. ஆனால் போட்ட சட்டத்தை நிறைவேற்ற முடியாத துர்பாக்கியமான நிலைமையில் மத்திய அரசு இருக்கிறது. எந்தெந்த ரகங்களை கைத்தறிக்காக ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசு சட்டம் போட்டிருந்தாலும், அதனால் எந்தெந்த மாநிலங்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறதோ, அவைகள் அந்தச் சட்டத்தை அமுல்படுத்த மறுக்கின்றன. எனவே, கைத்தறியை நம்பியுள்ள தமிழ் நாடு போன்ற மாநிலங்கள் அதனால் பாதிக்கப்படுகின்றன. அதனால் நாமே ஒரு சட்டத்தைக் கொண்டுவரலாமென்ற முடிவை எடுத்தோம். மத்திய அரசு அவர்களே போட்டுள்ள சட்டத்தை நிறைவேற்ற முயலும்போது, அதை எதிர்க்கும் சூழ்நிலை ஏற்படுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட நிலை ஏற்படக் கூடாதென்பதுதான் சாதாரண எண்ணமாக இருக்கவேண்டும். எனவே நமது சட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு முழு ஆதரவையும் தருமென்று நம்புகிறேன். இதைப்பற்றி நாம் எடுத்துச் சொல்லி வருகிறோம். எனவே அந்த அடிப்படையிலேதான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. வெளி மாநிலங்களில் உற்பத்தியாகும் துணிகளுக்குப் பாதகம் ஏற்பட்டால்—அது சட்ட விரோதமாக உற்பத்தியாகும் துணியாக இருந்தால்—அதைத் தடுக்க ஏன் அகில இந்திய ரீதியில் சட்டம் கொண்டுவரக்கூடாதென்று கேட்டார்கள். அகில இந்திய ரீதியில் சட்டம் இருக்கிறது. அதை நிறைவேற்ற மத்திய அரசுக்கு மனமில்லாமல் இருக்கிறது. இதற்கு முக்கியமான காரணம் இருக்கிறது. மராத்திய மாநிலத்திலும், குஜராத் மாநிலத்திலும் லட்சக்கணக்கான விசைத் தறிகளை வைத்திருக்கிறார்கள். ஆகவே இந்தச் சட்டத்தை நிறைவேற்ற அச்சப்படுகிறார்கள். நாம் மத்திய அரசினிடத்தில் எடுத்துக் கூறியிருப்பது என்னவென்றால் தொடர்ந்து பேசிக்கொண்டே போனால் முடிவு ஏற்படாது; அந்த மாநிலங்களைப் பார்த்து



பயப்படும் நிலைதான் ஏற்படும்; குறிப்பாக தமிழ் நாடு இதில் ஒரே கொள்கையைப் பின்பற்றி வந்துள்ளதால், எங்களுக்குத் தனி அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அரசிப் போக்குவரத்தை நாம் தடை செய்கிறோம். அது போன்று இதையும் அரசியல் சட்டத்தின் அடிப்படையிலே செய்ய முடியும். மத்திய அரசு அதற்கு அனுமதி தர வேண்டும். நம்முடைய மாநிலத்திற்கு ஒரு சட்டம் கொண்டுவந்து, அதை பிற மாநிலங்கள் எதிர்த்தாலும், மத்திய அரசு நமக்கு அனுமதி கொடுக்க வாய்ப்பிருக்கிறது. அந்த எண்ணத்தில்தான் நாம் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம். விசைத்தறி, கைத்தறி பற்றிய ஒரு தெளிவான முடிவுக்கு நாம் வர வேண்டும். இன்றைக்கு 30 லட்சம் மக்கள் நம்பியுள்ள ஒரு தொழிலை நாம் கைவிட்டுவிட முடியாது. எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னதுபோல, கிட்டத்தட்ட 40,000 விசைத் தறிகள், "authorised; unauthorised", "legal; illegal." ஆக இருக்கின்றன. நம்முடைய கைத்தறித் துணிகளைப் பாதிக்கின்ற அளவுக்கு, இந்த விசைத் தறிகளின் மூலம் ஏராளமான துணிகளை உற்பத்தி செய்கிறார்கள். 5 லட்சம் கைத்தறிகளை பாதிக்கக்கூடிய அளவுக்கு 40,000 விசைத் தறிகள் இன்றைக்கு உற்பத்தி செய்கின்றன. இந்த நிலையில், எதிர்காலத்தில் என்ன வாகுமென்பதை நினைக்கும்போது, பயங்கரமான பிரச்சினையாகத்தான் தோன்றுகிறது. எனவே தமிழ் நாட்டு நெசவாளர்களின் பிரச்சினையில் அதிக கவனம் செலுத்தி வருகிறோம். விசைத் தறிகளைப் பொறுத்து, சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சென்சஸ் எடுத்தோம். அதற்கு உடன்பட்டவர்கள் "unauthorised" ஆக இருந்தாலும், அவர்களையும் ஏற்றுக்கொள்ளலாமென்ற பிரிவைப் போட்டிருக்கிறோம். அவர்களை சட்டப்படி "legalise" செய்ய மத்திய அரசு அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய கொள்கை, எதிர்காலத்திலே விசைத் தறி, ஆலைத் தறி ஆகியவை அதிகமாகக்கூடாது; கைத்தறிகளைப் பெருக்கிக்கொள்ளலாமென்பதுதான். வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு இது ஒரு பரிகாரமாக அமையும். எனவே நிரந்தரமான பரிகாரமாக இருக்க வேண்டுமென்றுதான் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறோம். இதை நல்ல நோக்கத்தோடு கொண்டுவந்து இருக்கிறோம். இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, கைத்தறித் துணிகள் (பாதுகாத்தல், உற்பத்தி, பகிர்ந்தளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 38 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, கைத்தறித் துணிகள் (பாதுகாத்தல், உற்பத்தி, பகிர்ந்தளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1974) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, கைத்தறித் துணிகள் (பாதுகாத்தல், உற்பத்தி, பகிர்ந்தளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1974) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 6-00)





**(6) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1974).**

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) திருத்த சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 40/1971) செயலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள பகுதிகளில் 19-6-1971 அன்றுள்ளவாறு இருந்து வரும் குடியிருப்புகள் குறித்து அவர்களுக்கு மேற்படி சட்டம், உடைமை உரிமை வழங்குகிறது. இச்சட்டம் இம்மாநிலத்தில் பெரும்பாலும் மலைத் தோட்டங்கள் நிறைந்த நீலகிரி மாவட்டம், பெரும்பாலும் நகரப் பகுதியாயுள்ள சென்னை மாவட்டம் நீங்கலாக ஏனைய எல்லா மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன சட்டத்தைச் செயல்படுத்தும்போது, நடைமுறையில் சில இடர்ப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இவ்விடர்ப்பாடுகளைக் களைந்து, மேற்படி சட்டம் செயல்படுத்தப்படுவதை நிர்வாக வகையில் மிகவும் ஏற்புடைத்ததாகச் செய்யும் பொருட்டு, அச்சட்டத்தைத் திருத்தக் கருதப்பட்டுள்ளது.

ஒரு குடியிருப்பு வீடு அல்லது குடிசையை அடுத்துள்ள எந்தப் பகுதி அக்குடியிருப்பு வீட்டினை அல்லது குடிசையை வசதியான முறையில் அனுபவித்து வர அவசியமாகும் என்பதை முடிவு செய்வதற்காக, முகவுரைக்கப்பட்ட இச்சட்ட முன்வடிவில் விதித்துறை ஒன்று செய்யப்பட்டது. அதன்படி, உழவர் அல்லது உழவுத் தொழிலாளர் குடும்பத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு மேற்சொன்ன பகுதி முடிவு செய்யப்பட வேண்டும் என்பதே அந்த விதித்துறை. இந்த விதித்துறையானது உழவருக்கு அல்லது உழவுத் தொழிலாளருக்குத் தற்போதுள்ள உரிமைகளைப் பாதிக்கும் என்று இணை ஆய்வுக் குழு கருதியதால், மேற்சொன்ன விதித்துறையை விட்டுவிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

---

@ 353-357 ஆக அச்சிடப்பட்டுள்ளது.IV ஆம் பக்கங்களில் இணைப்பு

[திரு. செ. மாதவன்] [1975 நவம்பர் 10

குடியிருப்பிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவிற்குள் மற்றொரு குடியிருப்பு வீடு அல்லது குடிசை அல்லது ஒரு வீட்டுமனையை ஓர் உழவர் அல்லது உழவுத் தொழிலாளர் தன் ஆளுகையில் வைத்திருப்பாரேயானால் அவர் குடியிருப்பு குறித்து உடைமையுரிமை பெறத் தகுதியுடையவராகமாட்டார் என்ற வகையில் விதித்துறை ஒன்று முகவுரைக்கப்பட்ட சட்ட முன்வடிவில் சேர்க்கப்பட்டது. இவ்வாறு வரையறுத்துள்ள 5 கிலோ மீட்டர் தொலைவு உழவர் ' அல்லது உழவுத் தொழிலாளரின் நலனுக்குகந்தவாறு குறைக்கப்படலாமென்று இணை ஆய்வுக்குழு கருதியதால், ஐந்து கிலோ மீட்டர் தொலைவினை ஒரு கிலோ மீட்டராகக் குறைக்கக் கருதப்பட்டுள்ளது.

மேலும், ஒரு குடியிருப்புக்கு உடைமையுரிமை பெற்ற ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட குடியிருப்புகளுக்கு உடைமையுரிமை பெறுவதற்குத் தகுதி பெறும் வாய்ப்பு மிகக் குறைவேயெனக் கருதப்பட்டதாலும், உடைமையாளர்கள் இப்பிரிவின் நோக்கத்தையே முறியடிப்பதற்காக அந்த விதித்துறையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொள்ளக் கூடுமாதலாலும், இச்சட்ட முன்வடிவில் (3) பகுதியின் வாயிலாக மேற்படி சட்டத்தில் 3-வது பிரிவில் சேர்க்கக் கருதியுள்ள (3), (4), (5) உட்பிரிவுகள் விட்டுவிடப்பட வேண்டுமென்று இணை ஆய்வுக்குழு முடிவுசெய்துள்ளது.

நிலச் சொந்தக்காரர் தனது நிலத்தை வசதியாக அனுபவித்திட இடையூறாக உள்ள வகையில் அந்த நிலத்திற்குள் ஒரு குடியிருப்பு அமைந்திருந்தால், நிலச் சொந்தக்காரர் தனது நிலத்தில் அல்லது வேறு ஓரிடத்தில் தனது செலவில் குடியிருப்புக்காக மாற்று இடம் ஒன்றை அமைத்துத் தருவதற்கு முகவுரைக்கப்பட்டுள்ள இச்சட்ட முன்வடிவில் கருதப்பட்டது. அத்தகைய உழவருக்கு அல்லது உழவுத் தொழிலாளருக்கு மாற்று இடம் கொடுக்கப்பட்டால், அத்தகைய மாற்று இடத்திற்கு உழவர் அல்லது உழவுத் தொழிலாளி இடம் மாறிச் செல்ல வேண்டியது அவரது கடமையாகும். அவர் அவ்வாறு இடம் மாறிச் செல்லத்தவறினால் அல்லது மறுத்தால், அக்குடியிருப்பு அச்சொந்தக்காரருக்கே மீண்டும் சேர்ந்துவிடுவதோடு, அக்குடியிருப்பிலிருந்து சுருக்க வகையில் அந்த உழவர் அல்லது உழவுத் தொழிலாளர் வெளியேற்றப்படுவதற்கும் உட்பட்டவராவார். உழவருக்கு அல்லது உழவுத் தொழிலாளருக்கு அதே நிலத்தில் அல்லது அதற்குரிய நிலச் சொந்தக்காரருக்கு ஏற்கெனவே உடைமையாக உள்ள வேறு ஒரு நிலத்தில் மாற்று இடம் கொடுக்கப்பட வேண்டும் என்றும், குடியிருப்பு வீடு அல்லது குடிசை ஒன்றை அமைப்பதற்கு அது ஏற்றதாக இருக்க வேண்டும் என்றும் சட்டத்தின் பயன்களை



[திரு. செ. மாதவன்]

1975 நவம்பர் 10]

அவர் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் அல்லது மாற்று இடத்திற்கு செல்லத் தவறினால் அல்லது மறுத்தால், இச்சட்டத்தின்கீழ் அவர் வெளியேற்றப்படாமல் பாதுகாக்கப்படுவதற்கு மட்டுமாவது அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் இணை ஆய்வுக் குழு கருதுகிறது. முகவுரைக்கப்பட்ட இச்சட்ட முன்வடிவின் 9-வது பகுதியில் பழைய வழக்குகளை மீண்டும் பரிசீலிக்க இயலும் வகையில் விதித்துறை உள்ளது. இதை நீக்கிவிடவும் கருதப்பட்டுள்ளது.

இணை ஆய்வுக் குழுவின் ஆய்வுக்காக இச்சட்ட முன்வடிவு அனுப்பப்பட்டது. மேற்சொன்ன பொருட்கள் தொடர்பானவையும் அக்குழுவால் திருத்தப்பட்டபடியுள்ளவையுமான விதித்துறைகள் மேலவை முன் தற்போது வைக்கப்பட்டுள்ள இச்சட்ட முன்வடிவில் அடங்கியுள்ளன.

இச்சட்ட முன்வடிவை ஏற்று நிறைவேற்றுமாறு இம்மேலவையை வேண்டுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்;

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா கூட பொறுக்குக் குழுவில் வெகுநாட்களாக இருந்து, உறுப்பினர்கள் சில முக்கிய ஊர்களுக்குச் சென்று சாட்சியம் பெற்று, பிறகு முடிவு செய்யப்பட்ட ஒரு மசோதா. இவற்றில் சில சந்தேகங்கள் எழுகின்றன. அவற்றை ஒரு 'டிசென்ட்டிங் நோட்'-ஆக எழுதுவதற்குப் பொருந்தாது. ஆகவேதான் எழுதவில்லை. மினிமம் மூன்று சென்ட் என்று சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த லேபரர் தனக்கு இரண்டு சென்ட் போதுமென்று சொல்லி லேன்ட்லார்ட் ஒத்துக்கொண்டால், இருவரும் அவர்களாகவே முடிவுசெய்து கொள்ளலாம். இப்படி மூன்று சென்ட் என்று இருக்கும் போது, அது கரெக்டாகவும் இருக்க வேண்டும். இருவருமே ஒத்துக்கொண்டு போய்விட்டால், சட்டம் குறுக்கிடாது. ஆனால் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இரண்டு சென்ட் தான் இருக்கின்றது என்றால், இருவரும் ஒத்துக்கொண்டால் சரி. அந்தமாதிரியான 'அக்ரீடு செட்டில்மென்ட்' வந்தால் எப்படி என்பதுபற்றி இந்தச் சட்டத்தில் ஒன்றுமே சொல்லப்படவில்லை.

[திரு. கே. ராஜாராம்] [1975 நவம்பர் 10]

அதேமாதிரி தாரமும் சொல்லப்பட்டிருக்கிறது. "ஐந்து கிலோமீட்டருக்குள் வேறு இடம் இருப்பின்", என்பதை மாற்றி ஒரு கிலோமீட்டருக்குள் இருந்தால் அவருக்குக் குடியிருப்பு இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. முன்பு "ஐந்து கிலோமீட்டர் வரைக்கும்" என்று இருந்ததை இப்போது ஒரு கிலோ மீட்டராக மாற்றியிருக்கிறோம். அதுகூட இரண்டு பேரும் சேர்ந்து ஒரு செட்டில்மென்ட்-க்கு வந்துவிட்டால், சட்டம் குறுக்கிடாமல் இருக்க வேண்டும், அல்லது விதிகளிலாவது வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சட்டத்திலே சம்மதம் என்று போட்டு விட்டால், நிச்சயமாக விவசாயிகளுக்குப் பெரிய ஆபத்து வந்துவிடும். ஆகவே தான் போடவில்லை. அதுவும், யாரையுமே கட்டாயப்படுத்தவும் இல்லை. குடியிருக்கின்ற விவசாயி "நானே போகின்றேன்" என்று சொன்னால், "போகக்கூடாது" என்றும் சொல்லவில்லை. அந்த வகையிலே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. நாமே 'அக்ரீட்' என்று போட்டுவிட்டால், கட்டாயத்திற்கு வாய்ப்பு இருக்கும். குடியானவர்களுக்கு ஒரு உரிமை கொடுக்கிறோம். ஐந்து கிலோமீட்டர் என்று வைத்தால், ஒரு பெரிய அபத்தில் அது கொண்டுவந்துவிடும். காரணம் ஒரு விவசாயி உழைத்து தொழில் செய்வதற்காகத்தான் அங்கே தங்குகிறான். குறைக்காமல் இருந்தால், தொழிலுக்கு பாதகம் ஏற்படும். ஆகவே நான் குறைத்துப் போடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, குடியிருப்பு (அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவதற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.



1975 நவம்பர் 10]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1974) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1974) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(7) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1975).

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் திட்டங்கள் வெளியார் உதவியின்றி மாநில அரசின் நிதிகளைக் கொண்டே நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். இத்திட்டங்களுக்கான நிதிவாயில்களைத் திரட்டிட, தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் கீழ் (காலி நிலம் உட்பட) குடியிருப்புக்காகவும், குடியிருப்புக்கு அல்லாத நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகிற நிலங்களுக்கு வெவ்வேறு படித்தரங்களில்

@ 357-366-ஆக அச்சிடப்பட்டுள்ளது. VII ஆம் பக்கங்களில் இணைப்பு

[திரு. செ. மாதவன்] [1975 நவம்பர் 10]

வரி விதிக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. இவ்வாறு வரி விதிப்பதன் வாயிலாகக் கிட்டும் கூடுதல் வரித் தொகையை குடிசை மாற்றுப் பணிகளுக்காகவும், மறு வளர்ச்சித் திட்டங்களுக்காகவும், குறைந்த வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டங்களுக்காகவும் செலவிட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. மற்றும், சென்னை மாநகரப் புற எல்லைகளிலிருந்து 16 கிலோ மீட்டருக்குள் அமைந்துள்ள பகுதிக்கும் இச்சட்டத்தை நீட்டிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இச்செயல் நோக்கத்திற்காக, 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/1975) அதிகார முறையில் வெளியிடப்பட்டது.

பொதுமக்களிடமிருந்தும், வெவ்வேறு தொழில் நிறுவனங்களிடமிருந்தும், வர்த்தக சங்கங்களிடமிருந்தும், கல்வி நிறுவனங்களிடமிருந்தும் பற்பல சலுகைகள் கோரி முறையீடுகள் பெறப்பட்டன. இம்முறையீடுகள் அனைத்தையும் ஆய்வு செய்து, இச்சட்ட முன்வடிவில் பின்வரும் விதித் துறைகள் இயற்றப்படுகின்றன; அவையாவன :—

(1) சென்னை, மதுரை, கோவை, சேலம், திருச்சிராப்பள்ளி நகரங்களிலும், சென்னை மாநகரின் புற எல்லைகளிலிருந்து 16 கிலோ மீட்டர் தொலைவிற்குள் இருக்கிற எல்லைப் பகுதியிலும் உள்ள நிலங்களில் நிலவரி விதி 1971 ஜூலை 1-ஆம் நாளன்று உள்ளபடி நடைமுறைப்படுத்தப்படும். அயினும், கிராமத்தின் ஒரு பகுதி மட்டும் மேற்சொன்ன 16 கிலோ மீட்டருக்குள் அமைந்திருந்தால் அந்தக் கிராமம் முழுவதும், இவ்வரி விதிப்பின் செயல் நோக்கத்திற்காக விலக்குப் பெறும்.

(2) பொதுமக்களுக்குச் சில நன்மைகள் வழங்கிட, படித்தரமான வரி வீதமும் மாற்றியமைக்கப்படுகின்றது.

(3) எல்லைப் பகுதியைப் பொறுத்தவரையில், தொடக்க வரி விலக்கின் வரம்பு உயர்த்தப்படுகிறது.

கட்டடச் சொந்தக்காரரே அனுபவித்து வருகிற நிலங்களுக்கு அளிக்கப்பட்டு வந்த சலுகையை நிறுத்திவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.



1975 நவம்பர் 10] [திரு. செ. மாதவன்]

மேற்படி அவசரச் சட்டத்திற்குப் பதிலாக, இச்சட்ட முன்வடிவை இயற்றும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு, மூலச் சட்டத்தின் 29-ஆவது பிரிவைச் சேர்ந்த (c), (d), (h), (i), (k) பகுதியின் கீழ் விலக்குகள் அளிப்பது குறித்துச் சில திருத்தங்களைச் செய்திட உத்தேசிக்கப்படுகிறது.

1975-ஆம் ஆண்டு தமிழ் நாடு நகர்ப்புற நிலவரி (திருத்த) அவசரச் சட்டத்தின் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/1975) சில மாறுதல்களைச் செய்து, அதற்குப் பதிலாக ஒரு சட்டத்தைக் கொண்டுவர இச்சட்ட முன்வடிவு விழைகிறது. இச்சட்ட முன்வடிவை இம்மன்றம் ஏற்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

(பிற்பகல் 6-10)

THIRU A. R. DAMODARAN: Sir, I move—

"That the Bill be referred to a Select Committee consisting of 15 members of this House with a direction that the report be submitted to this House within a week."

THIRU K. S. GANAPATHI: Sir, I move—

"That the Bill be referred to a Select Committee consisting of 15 members of this House with a direction that the report be submitted to this House within a week."

THIRU S. NARAYANASWAMY: Sir, I second the amendment.

THIRU A. R. DAMODARAN: Sir, I have moved this amendment for reference to a Select Committee only because I believe that this Bill which is replacing the Tamil Nadu Ordinance No. 10 of 1975 seeks to make certani far-reaching changes in the provisions of this Act, not only in the Schedule of rates at which the tax is going to be levied but also in the amendment to section 29 where certain exemptions that were formerly given to religious institutions, charitable ins

2. *Insertion of new section 1-A in Tamil Nadu Act 12 of 1966.*—After section 1 of the Tamil Nadu Urban Land Tax Act, 1966 (Tamil Nadu Act 12 of 1966) (hereinafter referred to as the principal Act), the following section shall be inserted, namely :—

" 1-A. *Extension of the Act to Madras City Belt Area.*—Notwithstanding anything contained in clause (*b*) of sub-section (2) and sub-section (4) of section 1, this Act shall be deemed to have come into force on the 1st day of July 1975 in the area comprising within sixteen kilometres of the outer limits of the City of Madras (hereinafter referred to in this Act, as the Madras City Belt Area) :

Provided that for the purpose of determining the amount of urban land tax under this Act in respect of such area, the market value as on the 1st day of July 1971 shall be the basis :

Provided further that where any portion of a village lies within the said sixteen kilometres, the whole of such village shall be deemed to lie outside the said sixteen kilometres for the purposes of this Act. ".

3. *Amendment of section 2, Tamil Nadu Act 12 of 1966.*—In section 2 of the principal Act, in clause (6), for the words " the land ", the words " the urban land " shall be substituted.

4. *Insertion of new section 2-A in Tamil Nadu Act 12 of 1966.*—After section 2 of the principal Act, the following section shall be inserted, namely :—

" 2-A. *Special definition.*—Notwithstanding anything contained in clause (5) of section 2, in this Act, unless the context otherwise requires, ' date of the commencement of this Act ' in relation to the Madras City Belt Area means the 1st day of July 1975 :

Provided that for the purpose of determining the amount of urban land tax under this Act in respect of such area, the market value as on the 1st day of July 1971 shall be the basis. ".



5. *Insertion of new section 5-C in Tamil Nadu Act 12 of 1966.*—After section 5-B of the principal Act, the following section shall be inserted, namely :—

" 5-C. *Special provisions regarding revised rates.*—(1) Notwithstanding anything contained in this Act, the rate of tax under this Act as amended by the Tamil Nadu Urban Land Tax (Amendment) Act, 1975, shall be levied in the area in which this Act is in force (including the Madras City Belt Area) with effect from the 1st day of July 1975.

(2) For the purpose of determining the amount of urban land tax under sub-section (1) in respect of the areas specified in that sub-section, the market value as on the 1st day of July 1971, shall be the basis.

(3) Subject to the provisions of sub-section (2) and the other provisions of this Act, for determining the amount of the urban land tax under sub-section (1), the provisions of this Act shall, as far as may be, apply as they applied to the determination of the amount of urban land tax before the 1st day of July 1975.".

6. *Substitution of new sections for sections 6-A and 6-B, Tamil Nadu Act 12 of 1966.*—For sections 6-A and 6-B of the principal Act, the following sections shall respectively be substituted, namely :—

" 6-A. *Urban area.*—For the purposes of this Act, the area comprising in—

(*a*) the City of Madras,

(*b*) the Madras City Belt Area,

(*c*) any municipal town,

(*d*) the area within sixteen kilometres of the outer limits of such municipal town,

(*e*) any township,

(*f*) the area within sixteen kilometres of the outer limits of such township,

shall each constitute a separate urban area and for the purposes of assessment under this Act, the extent of urban land held by a owner in one urban area shall not be included in the extent of urban land held by him in another urban area.

6-B. *Total extent only to fix the rates.*—For the purposes of the Act,—

(i) the total extent of the urban land which is vacant or which is used for residential purposes in an urban area shall be taken into account for applying the rates specified in Parts I and III of the Schedule;

(ii) the total extent of the urban land used for non-residential purposes in an urban area shall be taken into account for applying the rates specified in Parts II and IV of the Schedule.".

7. *Insertion of new section 7-C in Tamil Nadu Act* 12 *of* 1966.—After section 7-B of the principal Act, the following section shall be inserted, namely :—

"7-C. *Owner of urban land to submit return in certain cases.*—Notwithstanding anyhting contained in sections 7, 7-A and 7-B, every owner of urban land in the area in which this Act is in force (including the Madras City Belt Area) and liable to pay urban land tax shall, within a period of one month from the date of the publication of the Tamil Nadu Urban Land Tax (Amendment) Act, 1975, in the *Tamil Nadu Government Gazette* or within such further time as the Government may, by notification, specify, furnish to the Assistant Commissioner having jurisdiction a return in respect of each urban land containing the following particulars, namely :—

(*a*) name of the owner of the urban land;

(*b*) the extent of the urban land in the urban area; and

(*c*) the name of the division or ward and of the street, survey number and sub-division number of the urban land and other particulars of such urban land.

and the provisions of this Act, shall, as far as may be, apply in respect of such return as they apply in respect of the return referred to in section 7.".



8. *Substitution of new section* 13, *Tamil Nadu Act* 12 *of* 1966.—For section 13 of the principal Act, the following section shall be substituted, namely :—

"13. *Market value to remain in force for specified period.*—The market value determined under this Act with reference to any specified date shall remain in force for such period as the Government may, from time to time, specify in this behalf and such period shall commence from such specified date.".

9. *Amendment of section* 19, *Tamil Nadu Act* 12 *of* 1966.—In section 19 of the principal Act, after sub-section (4), the following sub-section shall be added, namely :—

"(5) Whenever there is change in the aggregate extent of urban land held by any owner in any urban area as a result of any transfer effected by inheritance, sale, purchase, gift, exchange, surrender, settlement or by any other manner whatsoever or as a result of partition—

(*a*) such owner shall furnish to the Assistant Commissioner having jurisdiction a return in respect of such urban land containing such particulars, within such time and in such manner as may be prescribed, and the provisions of this Act shall, as far as may be, apply to such return as if it were a return required to be furnished under section 7; and

(*b*) the Assistant Commissioner shall proceed to assess or re-assess such urban land for subsequent fasli years, after following such procedure as may be prescribed, and the provisions of this Act, shall, as far as may be, apply to such assessment or re-assessment.".

10. *Amendment of section* 20, *Tamil Nadu Act* 12 *of* 1966.—In section 20 of the principal Act, in sub-section (1), in the proviso, for the words " unless the urban land tax has been paid ", the words " unless the urban land tax levied has been paid " shall be substituted.

11. *Omission of section* 26, *Tamil Nadu Act* 12 *of* 1966.—Section 26 of the principal Act shall be omitted.

12. *Amendment of section* 29, *Tamil Nadu Act* 12 *of* 1966.—In section 29 of the principal Act,—

(i) for clause (*c*), the following clause shall be substituted, namely :—

" (c) any urban land owned by a religious institution, which is set apart for public worship and is actually so used, including any urban land owned by such institution and which is appurtenant thereto but not including any urban land owned by such institution and—

(i) which is vacant, or

(ii) in which buildings from which income is derived have been constructed; ";

(ii) for clause (d), the following clause shall be substituted, namely :—

" (d) (i) any urban land on which hospitals maintained by—

(a) the Government, any local authority or such other authority specified by the Government in this behalf, or

(b) by any private institution which is in receipt of grant either from the Central Government or from the State Government,

have been constructed and any urban land appurtenant to such hospitals; or

(ii) any urban land used for purposes directly connected with such hospitals, but not including any urban land—

(a) which is vacant, or

(b) in which buildings from which income is derived have been constructed.

*Explanation.*—For the removal of doubts, it is hereby declared that the urban land on which staff quarters including nurses quarters or any other buildings directly connected with the purposes of the said hospitals have been constructed shall be deemed to be urban land used for purposes directly connected with the said hospitals;";

(iii) for clause (h), the following clause shall be substituted, namely :—

" (h) any urban land used by schools, colleges or universities for purposes directly connected with education, but not including any urban land owned by such educational institutions and—

(i) which is vacant, or

(ii) in which buildings from which income is derived have been constructed.



*Explanation I.*—For the purposes of this clause, schools or colleges shall mean only such schools or colleges which are educational institutions recognised either by the Government or by any university, as the case may be.

*Explanation II.*—For the removal of doubts, it is hereby declared that the urban land on which schools, colleges or universities or staff quarters or hostels or other buildings used for the welfare of the students, have been constructed, or used as playgrounds attached to such schools, colleges or universities, shall be deemed to be urban land used for the purposes directly connected with education;";

(iv) for clause (i), the following clause shall be substituted, namely :—

" (i) any urban land used for public parks, public libraries and public museums;";

(v) for clause (k), the following clause shall be substituted, namely :—

" (k) subject to the provisions of this section, any urban land actually used for religious, charitable or philanthropic purposes by such religious, charitable or philanthropic institutions, as the Government may, by notification, specify, but not including any urban land owned by such institutions and—

(i) which is vacant, or

(ii) in which buildings from which income is derived have been constructed;".

13. *Substitution of new section for section 29-A, Tamil Nadu Act 13 of 1956.*—For section 29-A of the principal Act, the following section shall be substituted, namely :—

" 29-A. *Exemption from the levy of urban land tax.*—Nothing in this Act shall apply to any owner, if the aggregate extent of urban land held by him—

(i) in any urban area in which this Act is in force (other than the Madras City Belt Area), does not exceed—

(a) two grounds, if such urban land is vacant or is used for residential purposes, or

(b) half ground, if such urban land is vacant or is used for non-residential purposes;

(ii) in the Madras City Belt Area, does not exceed—

(a) three grounds, if such urban land is vacant or is used for residential purposes, or

(b) one ground, if such urban land is used for non-residential purposes:

Provided that where the aggregate extent of urban land held by any owner during any part of the fasli year exceeds the extent mentioned above, but subsequently if the extent so held is reduced below the extent above mentioned, such owner shall be liable to pay the urban land tax for that fasli year, as if there had been no such reduction.".

14. *Insertion of section 44, Tamil Nadu Act 12 of 1966.*—After section 43 of the principal Act, the following section shall be inserted, namely:—

"44. *Classification of land used for both residential and non-residential purposes.*—Notwithstanding anything contained in this Act, for purposes of this Act, in the case of any urban land which is used for both residential and non-residential purposes,—

(i) in any urban area in which this Act is in force (other than the Madras City Belt Area), where the extent used for non-residential purposes does not exceed half ground, and

(ii) in the Madras City Belt Area, where the extent used for non-residential purposes does not exceed one ground,

the urban land shall be deemed to be used for residential purposes.".

15. *Substitution of new Schedule for the Schedule in Tamil Nadu Act 12 of 1966.*—In the principal Act, for the Schedule, the following Schedule shall be substituted, namely:—



"THE SCHEDULE."

(*See* section 5.)

A. *Urban land in any urban area in which this Act is in force (other than the Madras City Belt Area.*

PART I.

Urban land which is vacant or is used for residential purposes.

| *Extent of urban land.* (1) | *Rate of tax.* (2) |
|---|---|
| Where the aggregate extent of urban land held by the owner in the urban area— | |
| (i) is two grounds or less .. | Nil |
| (ii) exceeds two grounds but does not exceed five grounds. | 0·7 per centum of the market value on the extent in excess of two grounds which have the the lowest market value. |
| (iii) exceeds five grounds but does not exceed ten grounds. | 0·8 per centum of the market value on the whole extent. |
| (iv) exceeds ten grounds. | 1·0 per centum of the market value on the whole extent. |

PART II.

Urban land used for non-residential purposes.

| *Extent of urban land.* (1) | *Rate of tax.* (2) |
|---|---|
| Where the aggregate extent of urban land held by the owner in the urban area— | |
| (i) is half ground or less .. | Nil |
| (ii) exceeds half ground but does not exceed five grounds. | 0·25 per centum of the market value on the whole extent. |
| (iii) exceeds two grounds but does not exceed five grounds. | 1·0 per centum of the market value on the whole extent. |
| (iv) exceeds five grounds but does not exceed ten grounds. | 1·5 qer centum of the market value on the whole extent. |
| (v) exceeds ten grounds but does not exceed twenty grounds. | 2·0 per centum of the market value on the whole extent. |
| (vi) exceeds twenty grounds. | 2·5 per centum of the market value on the whole extent. |

### B. *Urban land in the Madras City Belt Area.*

## PART III.

Urban land which is vacant or is used for residential purposes.

| *Extent of urban land.* (1) | *Rate of tax.* (2) |
|---|---|
| Where the aggregate extent of urban land held by the owner in the urban area— | |
| (i) is three grounds or less. | Nil |
| (ii) exceeds three grounds but does not exceed seven grounds. | 0·4 per centum of the market value on the extent in excess of three grounds which have the lowest market value. |
| (iii) exceeds seven grounds but does not exceed ten grounds. | 0·5 per centum of the market value on the whole extent. |
| (iv) exceeds ten grounds | 0·6 per centum of the market value on the whole extent". |

I certify that this is a Money Bill.

Fort St. George,
Madras,
Date : 6-11-1975.

K. GOVINDAN,
*Speaker,*
*Tamil Nadu Legislative Assembly.*

*தமிழ் நாடு சட்டமன்ற மேலவை*

---

*செவ்வாய்க்கிழமை, 1975 நவம்பர் 11.*

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Ex-Hindi Pandits working as Junior Assistants and Librarians.*

* 101 *Q.*—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the services of the Ex-Hindi Pandits, now working as Junior Assistants and Librarians are terminated on the date of their attaining superannuation, instead of being continued till the end of the academic year, even though their pay and services were protected under a specific Government order; and

(*b*) if so, the reason therefor?

### இளநிலை உதவியாளர்களாகவும் நூலகர்களாகவும் பணியாற்றும் முன்னாள் இந்தி ஆசிரியர்கள்

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முன்னாள் இந்தி ஆசிரியர்களாக இருந்து, தற்போது இளநிலை உதவியாளர்களாகவும், நூலகர்களாகவும் பணியாற்றிவருவோரின் சம்பளம், பணி ஆகியவற்றிற்குத் திட்டவட்டமான அரசாணை ஒன்றின்கீழ் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தபோதிலும், கல்வியாண்டு இறுதிவரை அவர்கள் தொடர்ந்து பணியில் வைத்துக்கொள்ளப்படுவதற்குப் பதிலாக, பணிமூப்பு

அடையும் தேதியிலேயே அவர்கள் பணியிலிருந்து நீக்கப்படுகிறார்கள் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் யாது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) ஆசிரியரல்லாத பதவிகளில் பணிபுரியும் முன்னாள் இந்திப் பண்டிதர்கள் வயது முதிர்வடைந்த நாள் முதல் கல்வி ஆண்டு இறுதிவரை பணிபுரிய அனுமதி கோரினால் அவ்வாறே வழக்கமான நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதிக்கப்படுகின்றனர். அவ்வாறு அனுமதி கோராதவர்கள் வயது முதிர்வடைந்த நாள் முதல் பணியிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர்.

**திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, அவர்களே விண்ணப்பம் கொடுக்க வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியாது. ஏனென்றால் இதுபோன்ற உத்தரவு இருக்கின்ற எண்ணமே இல்லை. 1968 ஆம் ஆண்டிலே, இந்த அரசாணை 477-ல் அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு கொடுத்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே அவர்கள் தொடர்ந்து இருப்பார்கள் என்று இருக்கிறது. ஆனால் பணிப் பாதுகாப்பு கொடுக்காததாலே, திருச்சி மாவட்டத்தில் பணி நீக்கம் ஆகியிருக்கிறது. அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையிலே ஏதாவது அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, 58 வயது வரையிலே அவர்கள் பணிபுரியலாம். மற்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்கின்ற உரிமை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. டீச்சிங் லைனில் இருப்பவர்கள், சொல்லிக்கொடுக்கின்ற பிரிவிலே இருப்பவர்களுக்கு அந்த ஆண்டிலே தொடர்பில்லாமல், இடையிலே விட்டுவிட முடியாது என்ற அளவில்தான் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. ஓய்வுக்குப் பிறகு பணி கொடுப்பது என்பது ரீ-எம்ப்ளாய்மெண்ட், எக்ஸ்டென்ஷன் என்பதாகும். இவர்கள் பார்க்கின்ற வேலைகள் பயிற்றுவிக்காத துறையிலே. ஆகவே அவர்கள் அனுமதி கோரினால், வழங்க வேண்டும் என்ற முறை இருக்கிறது. அவர்கள் இதையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும். இப்போதாவது தெரிந்துகொள்ள வேண்டும். யார் யார் விண்ணப்பம் போடுகிறார்களோ, அவர்களுக்கு அந்த ஆண்டு இறுதி வரையிலும் கொடுப்பதாக இந்தத் துறையிலே முடிவெடுக்கப்பட்டு, அப்படிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

**திரு. கே. எஸ். கணபதி :** அரசினுடைய தீர்மானம் காரணமாக இவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் ஆசிரியர்களுக்குக்



கொடுக்கக்கூடிய சிறப்பூதியம், தேர்வுநிலை ஊதியம் வழங்கப்படவில்லை என்று அறிகிறேன். மற்ற பள்ளி ஆசிரியர்களுக்குள்ள எல்லாச் சலுகைகளையும் தொடர்ந்து இவர்களுக்கும் கொடுக்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அவர்களுக்கும் இந்த வசதி வாய்ப்புகள் தரப்படுகின்றன என்றுதான் கருதுகிறேன். எது எது தரப்படவில்லை என்று உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அதைப்பற்றி ஆராயலாம்.

## *English Medium Sections in Schools*

* 102 *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether only one section in each class is permitted in English medium in each School;

(*b*) whether this has resulted in great over-crowding in these English medium sections ;

(*c*) whether requests have been received for increasing the number of such sections; and

(*d*) if so, the action proposed to be taken thereon?

### பள்ளிகளில் ஆங்கில பயிற்று மொழிப் பிரிவுகள்

திரு. கே. எஸ். கணபதி, (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள ஒவ்வொரு வகுப்பிலும் ஒரே ஒரு பிரிவு மட்டும் ஆங்கிலப் பயிற்று மொழி அனுமதிக்கப்படுகிறதா ?

(இ) இதனால் இந்த ஆங்கிலப் பயிற்று மொழிப் பிரிவுகளில் அதிக மாணவர்கள் சேர்ந்து நெரிசலேற்பட்டுள்ளதா ?

(உ) அத்தகைய பிரிவுகளைக் கூடுதலாக்க வேண்டுமென்று வேண்டுகோள்கள் வரப்பெற்றுள்ளனவா ?

(எ) ஆமெனில், அதுகுறித்து எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) தமிழ்மொழியல்லாத

பிறமொழிகளை தாய்மொழியாகக் கொண்டவர்களின் தேவைக்காகவும், மைய அரசில் பணிபுரிவோரின் தேவைக்காகவும் அநேக பள்ளிகளில் ஆங்கில மொழி வாயிலாக கல்வி போதிக்கும் ஒரு பிரிவை ஒவ்வொரு வகுப்பிலும் ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

(இ) அத்தகைய பிரிவில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்களும் சேர விரும்புவதால், நகரங்களில் உள்ள சில உயர்நிலைப்பள்ளிகளில் இடநெருக்கடி ஏற்படுகிறது.

(உ) ஒன்றுக்கு மேற்பட்ட ஆங்கிலம் மூலம் கல்வி போதிக்கும் பிரிவுகள் ஏற்படுத்த சில உயர்நிலைப்பள்ளிகள் அனுமதி கோரின.

(எ) அத்தகைய வேண்டுகோள்கள் இவ்வாண்டில் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

**திரு. கே. எஸ். கணபதி :** சென்னையிலே ஒரு சில பள்ளிகளிலே ஒரு வகுப்பறையிலே 120 மாணவர்கள் படிக்கிறார்கள். இந்த நெருக்கடி நிலைமை காரணமாக சரியான முறையில் கல்வி போதிக்கப்பட வில்லை என்பதும் எல்லோருக்கும் தெரியும். அந்த அடிப்படையிலே இந்த ஆண்டு தொட்டே மாணவர்கள் 100 பேர்களுக்கு மேல் இருந்தால், இரண்டாவது வகுப்பு தொடங்க அரசு வழிவகைகள் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 120 மாணாக்கர்கள் வரை சேர்த்தது அவர்களுடைய தவறே தவிர, வேறல்ல. ஒவ்வொரு வகுப்புக்கும் எவ்வளவு பேர்கள் என்று இருக்கின்றதோ, அந்த அளவுக்குத்தான் சேர்க்கலாம் என்று குறிப்பிட்டிருக்கிறோம். அந்த அளவுக்குத்தான் சேர்க்கலாம். நாம் கொடுத்திருக்கின்ற நிபந்தனையின் அடிப்படையிலே, தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்கள் அல்லது அகில இந்திய அளவிலே பணியில் இருப்பவர்கள் என்று குறிப்புகளைக் காட்டி அந்த 120 பேர்களும் அதன் கீழ் வருகிறார்கள் என்று கணக்குக் காட்டுவார்களானால், 2-வது பிரிவு வைத்துக்கொள்ள வாய்ப்பும் வசதியும் ஏற்படும். தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்கள், அகில இந்திய பணி புரிகின்றவர்கள் ஒரு வகுப்பிலே சேர்க்கப்பட்டு மீதி இடங்கள் காலியாக இருந்தால், அப்படிப்பட்ட நிலைமையில் அந்த இடங்களை நிரப்புவதற்காக, தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களையும்கூட சேர்த்துக்கொள்ளலாம் என்று வைத்திருக்கிறோம். அந்த 120 இடங்களும் நிரப்பப்பட்டதற்குத் தக்க காரணங்கள் இருக்குமானால் எழுதி அனுப்பினால் அது தனியாக ஆராயப்படும்.





**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** துணைத் தலைவரவர்களே, ஆங்கிலப் பயிற்சி மொழி வகுப்புகள் அதிகமாகப் பெருகிவருகின்ற நிலை இருக்கிறது என்ற கருத்து இருக்கிறது. அது உண்மையா ? அதுபற்றித் தகவல் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆங்காங்கு அதிகமாக வைக்க வேண்டுமென்று இருக்கிறார்கள். தமிழில் பயிற்றுவிக்கின்ற பள்ளிகளோடும் வகுப்புகளோடும் ஒப்பிட்டுப்பார்த்தால், ஆங்கிலத்தில் பயிற்றுவிக்க இருக்கின்ற வகுப்புகள் மிகமிகக் குறைவுதான். தமிழில் பயிற்சி மொழி வகுப்புகள் தான் அதிகமாக இருக்கின்றன. 2,882 உயர்நிலைப் பள்ளிகளில் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் 29 தான் இருக்கின்றன. ஹையர் செகண்டரி பள்ளிகள் 30-க்குள் தான் இருக்கும். ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகள் 30, 40 தான் இருக்கும். இதுமாதிரி ஆங்கில அறிவைப் போதிக்கின்ற பள்ளிகள் 200, 300 என்றுதான் இருக்க முடியும். தமிழ் மொழியில் பயிற்றுவிக்கும் வகுப்புகள்தான் அதிகமாக இருக்கின்றன. அதிகமான மாணவர்களும் தமிழிலேதான் படித்து வருகிறார்கள்.

THIRU G. VASANTHA PAI: Sir, will the Government accept, as a matter of principle, in educational institutions, that the teacher-pupil ratio should not be more than 1:40?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கிட்டத்தட்ட ஒரு ஆசிரியருக்கு 35 மாணவர்கள் என்று சராசரியாக வருகிறது. சில பள்ளிகளில் 40, 45 மாணவர்கள் என்று வரும், சில பள்ளிகளில் 20 அல்லது 25 என்றுகூட வரும். 1:35, 1:30 என்றுகூட . . .

THIRU G. VASANTHA PAI: I do not mind if it is reduced. On the other hand, I expect that it should not exceed 40.

THIRU K. S. GANAPATHI: I think the hon. Member means the class-room strength.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கூடுமானவரையில் ஒரு ஆசிரியருக்கு 40 மாணவர்கள் இருக்க வேண்டுமென்ற அளவுக்குத்தான் இருக்கிறது. கல்லூரிகளிலேதான் 1 : 80 என்று இருக்கலாம் என்று வைத்திருக்கிறோம். பள்ளிகளிலே இப்போது 1:40 என்ற அளவுதான் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆசிரியர்கள் தருவதிலே ஆங்காங்கே மாணவர்கள் எண்ணிக்கை அதிகப்படாத சூழ்நிலை ஏற்படுகின்றபோது, சில குறிப்பிட்ட

புகழ்பெற்ற மக்களால் விரும்பப்படுகின்ற பள்ளிகளிலே அந்த எண்ணிக்கை கொஞ்சம் கூடியிருக்கிறது. அதைக் குறைப்பதற்கான முயற்சியை அரசு ஆராய்ந்து வருகிறது.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுவது போல, சில குறிப்பிட்ட, மக்களால் விரும்பப்படுகிற பள்ளிகளிலே மட்டுமல்ல, சில அரசாங்கப் பள்ளிகளிலே ஆசிரியர்களுடைய எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கின்றது. இந்தக் காரணத்தால் 50 அல்லது 55 மாணவர்கள் வரை இருப்பதால், இரண்டாவது வகுப்பு தொடங்கப்படாத நிலைமை இருந்து வருகின்றது. இதை கல்வி அமைச்சர் அவர்கள் கவனித்து உடனடியாக பிரிவுகளை ஏற்படுத்தி ஆசிரியர்களை வழங்க பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்த நிலைமைகளும் சில இடங்களில் இருக்கின்றன. சில பள்ளிகளில் 6, 7 மாணவர்கள் இருக்கின்ற வகுப்புகளும் இருக்கின்றன. மொத்தத்தில் ஆண்டுக்காண்டு இருக்கின்ற வகுப்பு மாணவர்களுடைய எண்ணிக்கையை வைத்து அதற்கேற்ப ஆசிரியர்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கி, நிதித்துறை நிதி ஒதுக்கிடுகிறது. அந்த அளவுக்கு மாவட்டத்திற்கு மாவட்டம் ஆசிரியர்களை ஒதுக்குகிறார்கள். இருக்கின்ற ஆசிரியர்களைப் பகிர்ந்து தரவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இப்போது இருக்கின்ற நெருக்கடிகளைக் குறைக்க வேண்டும் என்பதுதான் அரசின் எண்ணம். நிதி ஆதாயம், வசதிகள் ஏற்படுகிறபோது, கூடுதலான ஆசிரியர்களை நியமிப்பதன் மூலம் இந்தக் குறைபாடுகளை நீக்க முடியும்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** நான் கேட்ட கேள்வி ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் கடந்த 2, 3 ஆண்டுகளிலே அதிகமாகியிருப்பதாக பரவலாக மக்களிடையே பேசப்படுகிறது. அது உண்மையா என்பதுதான். எதிலே அதிக வகுப்புகள் இருக்கின்றன என்பது என்னுடைய கேள்வி அல்ல. படிமுறை வளர்ச்சியில் ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் அதிகமாகியிருக்கின்றன, வளருகின்றன என்பது உண்மையா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தமிழில் பயிற்றுவிக்கின்ற பள்ளிகள் வளருகின்ற அளவைப் பார்க்கின்றபோது, ஆங்கிலப் பயிற்சிப் பள்ளிகள் அவ்வளவு அதிகமாக வளரவில்லை. ஆனால், 2, 3 ஆண்டுகளுக்கு முன்னால் பார்த்தால், ஆங்கிலப் பயிற்சி வகுப்புக்கு 2 அல்லது 3 பள்ளிகளுக்குத்தான் அனுமதி கூடுதலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. காஞ்சிபுரத்திலே ஒரு உயர்நிலைப் பள்ளியிலேகூட ஆங்கிலப் பயிற்சி வகுப்பு இல்லா





மல் இருக்கிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தினுடைய தலைநகரமாக இருக்கிறது. அகில இந்திய அளவில் பணியாற்றுகிறவர்களும், வேறு மொழியினர்களும் அங்கு இருப்பதாக கணக்குக் காட்டப்பட்டிருப்பதால், அங்கே ஒரு ஆங்கிலப் பயிற்சி வகுப்பு தொடங்க வேண்டும் என்பதற்கு இடம் ஏற்படுகிறது. அடுத்தபடியாக, தூத்துக்குடி, ஸ்பிக் தொழிற்சாலையை ஒட்டிய பகுதியிலே வேறு மொழி பேசுகின்றவர்கள் இருப்பதாலும், அகில இந்திய அளவில் பணியாற்றுபவர்கள் இருப்பதாலும், அங்கே ஒரு இடம் ஒதுக்கப்பட்டது. டால்மியாபுரத்திலேயும் அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்ற காரணத்தால், ஒரு இடம் ஒதுக்கப்பட்டது. பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் அனுமதி இல்லாமல் வகுப்புகள் தொடங்க முடியாது. அப்படிப் பார்த்தால், 2 அல்லது 3 ஆண்டுக் காலத்திலே 4, 5 பள்ளிகளிலே வகுப்புகள் தொடங்க அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளைக் கணக்கு எடுத்துப் பார்த்தோமானால், 200, 300 என்ற அளவுக்கு 3, 4, 5 ஆண்டுகளுக்குள் வரும்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** இப்போது நம்முடைய அமைச்சர் கொடுத்த பட்டியல்படி பார்த்தால், நகரங்களின் மத்தியில் ஆங்கிலப் பயிற்சி வகுப்பு அதிகமாகி வருவதாகத் தெரிகிறது. ஏற்கெனவே ஆங்கிலம் மூலமாகப் பயிற்றுவிப்பது, பெரியவர்களுடைய பழக்கம். தமிழின் மூலமாகப் படிப்பது சரியானதல்ல என்ற மனப்போக்கும் இருக்கிறது. கிராமப்புறங்களில் ஆங்கிலம் மூலமாகப் படிக்கும் வகுப்பை அதிகப்படுத்துவதற்கு அரசு முன் வருமா அல்லது ஆங்கிலம் மூலம் படிக்கின்ற வகுப்புகளுக்கு உள்ள எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இதில் நாம் ஒரு விதிமுறையை வைத்திருக்கிறோம். அதன்படிதான் செயல்பட்டு வருகிறோம். அரசாங்கத்தின் கொள்கையே தமிழ் பயிற்று மொழி வகுப்புகள் இருக்க வேண்டும் என்பதுதான். அந்தக் கொள்கைப்படி தமிழ் பயிற்று மொழி வகுப்புகளைத்தான் ஆங்காங்கு நாம் ஏற்படுத்திக்கொண்டு வருகிறோம். வேறு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் வாழ்கின்ற பகுதியிலும், அகில இந்தியப் பணிகளில் பணியாற்றுபவர்கள் வாழ்கின்ற பகுதியிலும் அங்கு வாழ்கின்றவர்களுடைய பிள்ளைகள் படிப்பதற்காக மட்டும்தான் இந்த மாதிரி வசதிகளைச் செய்து கொடுத்து வருகிறோம். ஆங்கிலப் பயிற்று மொழிப் பள்ளிகள் அதிகமாகி இருக்கின்றனவா என்று பார்த்தால் கூட, அதிகம் இல்லை என்றுதான் சொல்ல முடியும். இன்றைக்கு ஆங்கில மொழியைப் பயிற்று

மொழியாகக் கொண்ட மெட்ரிகுலேஷன் பள்ளிகள் 29 தான் இருக்கின்றன. ஹையர் செகண்டரிப் பள்ளிகள் 30 அல்லது 40 இருக்கக்கூடும். 6, 7 வகுப்புகள் இருக்கிற பள்ளிகளில் ஒரே ஒரு ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்பை நடத்துவதற்குத்தான் அனுமதி தந்திருக்கிறோம். இன்றைக்கு மாநிலத்திலிருக்கும் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட பள்ளிகளில் சுமார் 200 அல்லது 300 பள்ளிக்கூடங்களுக்குத் தான் ஒரே ஒரு ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்பு நடத்துவதற்கு அனுமதி தந்திருக்கிறோம். ஆனால் கின்டர் கார்டன் என்று சொல்லக்கூடிய 5-வது வகுப்பு வரையுள்ள பள்ளிகளின் எண்ணிக்கை ஏராளமான அளவுக்குப் பெருகியிருக்கின்றன. அந்தப் பள்ளிகளின் எண்ணிக்கை பெருகுவதைக் கட்டுப்படுத்துவதற்குக் கூட ஒரு விதி முறை வைத்திருக்கிறோம். அந்தப் பள்ளிகளில் படிக்கின்றவர்களை நாம் 6-வது வகுப்பு வரைதான் அரசாங்கப் பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளலாம் என்றும், 6-வது வகுப்புக்குப் பிறகு நாம் சேர்க்க மாட்டோம் என்றும் ஒரு கடுமையான உத்தரவு போட்டிருக்கிறோம்.

### *Appeal from permanent teachers*

* 103 *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU P. R. THOMAS): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that a large number of permanent teachers have made an appeal to the Government against the orders of ousting served by the Aided Managements in Ramanathapuram district;

(*b*) if so, the number of permanent teachers so affected; and

(*c*) the action taken thereon?

*நிரந்தர பதவி பெற்ற ஆசிரியர்களிடமிருந்து மேல்முறையீடு*

திரு. கே. எஸ். கணபதி (திரு. பி. ஆர். தாமஸ் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அரசு மானியம் பெறும் தனியார் பள்ளிகளால் கொடுக்கப்பட்ட வேலைநீக்க ஆணைகளை எதிர்த்து நிரந்தர பதவியைப் பெற்ற ஆசிரியர்கள் பலர் அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளது உண்மையா?



(ஆ) ஆமெனில், அவ்வாறு பாதிக்கப்பட்ட நிரந்தரப் பதவி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது?

(இ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) சில ஆசிரியர்களிடமிருந்து மேல் முறையீடுகள் பள்ளிக் கல்வி இயக்குநரால் பெறப்பட்டுள்ளன.

(ஆ) 12 (பன்னிரெண்டு).

(இ) பள்ளிக் கல்வி இணை இயக்குநர் மேற்படி மேல் முறையீடுகளை பரிசீலித்து வருகிறார். மேல் முறையீடுகளின் மேல் இறுதி முடிவு எடுக்கும் வரை ஆசிரியர்களை பணியில் தொடர ஏ. தெக்கூர் மற்றும் கமுதியிலுள்ள பள்ளிகளின் நிர்வாகத்திற்கு தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**திரு. கே. எஸ். கணபதி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, நிரந்தரப் பதவி பெற்ற 12 ஆசிரியர்களை நிர்வாகத்தினர் வேலை நீக்கம் செய்திருப்பதாகச் சொன்னார்கள். இவ்வாறு ஆசிரியர்களைப் பணி நீக்கம் செய்ததற்கு நிர்வாகத்தினர் என்ன காரணம் கூறுகிறார்கள் என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அங்கு படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டதுதான் காரணம் என்று நிர்வாகத்தினர் கூறுகிறார்கள். இது குறித்து சில ஆசிரியர்களிடமிருந்து மேல் முறையீடுகள் பள்ளிக் கல்வி இயக்குநரால் பெறப்பட்டுள்ளன. அரசு பரிசீலித்து ஒரு முடிவு எடுக்கும் வரை, வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களைப் பணியில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நிர்வாகத்திற்கு இணை பள்ளிக் கல்வி இயக்குநர் ஆணையிட்டிருக்கிறார்கள். அப்படி இணை இயக்குநர் ஆணையிட்டிருக்கிறார் என்றால், அரசு சம்பளம் தரும் என்று தான் அர்த்தம்.

**திரு. செ. முத்துசாமி:** வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை நிர்வாகம் தொடர்ந்து பணியில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. அந்த உத்தரவை நிர்வாகம் ஏற்று, அந்த பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை வேலையில் சேர்த்திருக்கிறதா அல்லது மறுத்திருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றிய விவரம் இல்லை.

### Appointment of Teachers with Pulavar Title as Tamil Teachers

*104 Q.—Thiru K. S. Ganapathi (on behalf of Thiru G. Swaminathan): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether any representation has been received by the Government from the Tamil Nadu Elementary School • Tamil Pandits Association, requesting that the teachers with Pulavar Title working in the Elementary Schools should be appointed as Tamil Teachers in all Middle Schools; and

(b) if so, the action taken thereon?

### புலவர் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு தமிழ் ஆசிரியர் நியமனம்

**திரு. கே. எஸ். கணபதி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு தொடக்கப்பள்ளி புலவர் கழகத்திலிருந்து இப்பள்ளிகளில் பணியாற்றுகின்ற புலவர் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு அனைத்து நடுநிலைப் பள்ளிகளிலும் தமிழ் ஆசிரியர் நியமனம் கொடுக்கப்பட வேண்டுமென்று, அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. எஸ். கணபதி :** ஆரம்பப் பள்ளிகளில் புலவர் பட்டம் பெற்ற பல ஆசிரியர்கள், ஏறத்தாழ ஒவ்வொரு மாவட்டத்திற்கு 120 பேர் வீதம் இருக்கிறார்கள். நாம் தமிழ் ஆசிரியர் பதவிகளை உயர்நிலைப் பள்ளிகளுக்கு வழங்குவது போல், இவர்களுக்கும் அனைத்து நடுநிலைப் பள்ளிகளிலும் தமிழ் ஆசிரியர் பதவிகளை வழங்கலாம். ஆரம்பப் பள்ளிகளில் பணியாற்றும் புலவர் பட்டம் பெற்ற ஆசிரியர்களை நடுநிலைப் பள்ளிகளில் தமிழ் கற்றுக் கொடுப்பதற்காக தமிழ் ஆசிரியர்களாக நியமிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அவர்கள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அது அரசின் ஆய்வில்



இருக்கிறது. உயர் துவக்கப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியர் நியமனம் நாம் கொடுக்கும் சமயத்தில், இவர்களுக்கு முன்னுரிமை தரலாம்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்:** புலவர் பட்டம் பெற்று இருப்பவர்கள் தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்ற தமிழ் ஆசிரியர்கள். இடைநிலைப் பள்ளிகளில் படிக்கின்றவர்கள் தமிழை பிழை இல்லாமல் படிப்பதற்கும், அவர்களுக்குத் தமிழ் உணர்வை ஏற்படுத்துவதற்கும் இப்படிப்பட்ட ஆசிரியர்களை தமிழ்ப் பாடத்தை போதிக்க நியமனம் செய்தால், அது தமிழுக்குத் துணை செய்யும். தமிழ் ஆசிரியர்களை இடைநிலைப் பள்ளிகளில் நியமிக்க அரசு ஏற்கெனவே கொள்கையளவில் ஒப்புக்கொண்டிருக்கிறது. அதை முழு அளவில் தமிழகமெங்கும் அரசு செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எல்லாப் பள்ளிகளிலும் ஏற்படுத்த வேண்டுமென்று ஆணையிடவில்லை. நிதி வசதி ஏற்படும்போது, புலவர் பட்டம் பெற்ற ஆசிரியர்களை நடுநிலைப் பள்ளிகளில் நியமிக்க முடியும். இப்பொழுது உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் போதிக்க முதல் நிலைத் தமிழ் ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தி வருகிறோம்.

**திரு. செ. முத்துசாமி :** உயர்நிலைப் பள்ளிகளில் போதிக்கப்படும் அதே தமிழ்ப் பாடம் தான் நடுநிலைப் பள்ளிகளில் 6, 7, 8 ஆகிய வகுப்புகளில் போதிக்கப்படுகிறது. உயர்நிலைப் பள்ளிகளில் மட்டும் இப்போது முதல் நிலைத் தமிழ் ஆசிரியர்களை நியமிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உயர்நிலைப் பள்ளிகளில் மட்டும் இவர்களை நியமித்தால், போதாது. நடுநிலைப் பள்ளிகளிலும் நியமித்தால் நல்லது. அப்பொழுது தான் கிராமப்புறங்களில் நடுநிலைப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களும் பயனடைய முடியும். தமிழில் பிழை இல்லாமல் படிக்கின்ற ஒரு வாய்ப்பும் கிடைக்கும். ஆகவே, தமிழ் ஆசிரியர் பதவிகளுக்கு அனைத்து நடுநிலைப் பள்ளிகளிலும் நியமனம் செய்ய அரசு விரைவாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலிலேயே எடுத்துச் சொல்லியபடி, ஆங்கில வகுப்புகளைப் பொறுத்தவரை, அப்படிப்பட்ட ஒரு பிரச்சினை இல்லை. தமிழைப் பொறுத்தவரை தான், அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்கிறது. இனிமேல் முதல் நிலைத் தமிழ் ஆசிரியர்களை பள்ளிகளில் நியமிக்க வேண்டுமென்று நாம் ஆணையிட்டிருக்கிறோம். ஏற்கெனவே முதல் நிலைத் தமிழ் ஆசிரியர்கள் என்றும், இரண்டாம் நிலைத் தமிழ்

ஆசிரியர்கள் என்றும் பாகுபாடு இருந்தது. இப்பொழுது ஒரே நிலையாக்கி இருக்கிறோம். ஆகவே, இப்படிப்பட்ட பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்களை நியமிக்க வேண்டி வந்தாலும், முதல் நிலைத் தமிழ் ஆசிரியர்களைத் தான் நியமிக்க வேண்டிவரும். இது ஒரு கொள்கைப் பிரச்சினையைப் பற்றிய தாகவும், நிதி நிலையை ஆதாரமாகக் கொண்ட பிரச்சினையாகவும் இருப்பதால், திட்டவட்டமான முடிவு எடுக்கப்படவில்லை.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : அந்தத் திட்டத்தின், கொள்கையின் அடிப்படையில் இதுவரை எவ்வளவு தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக் கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரம் இல்லை.

## Midday Meals Scheme

* 105 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU P. R. THOMAS): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that Central Kitchens of the Midday Meals Scheme, are functioning only in Chingleput, South Arcot and North Arcot districts in the State; and

(b) if so, whether there is any proposal to extend this scheme to other districts also?

### நண்பகல் உணவுத்திட்டம்.

திரு. கே. எஸ். கணபதி (திரு. பி. ஆர். தாமஸ் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) இம்மாநிலத்தில் செங்கற்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் மட்டுமே நண்பகல் உணவுத்திட்டத்தின் மைய சமையல் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இத்திட்டத்தை பிற மாவட்டங்களுக்கும் நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) மைய சமையற்கூட திட்டத்தை தஞ்சாவூர் மாவட்டத்துக்கு விரிவாக்கலாமா என்பது ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.





## Drinking water from Vaigai Dam to Madurai City

* 106 Q.—Thiru K. S. GANAPATHI (on behalf of Thiru D. SANTOSHAM): Will the Hon. the Minister for Health be pleased to state with reference to the answer given to Legislative Council Starred Question No. 97 on the floor of the Councli on 23rd December 1974—

(a) whether the investigation on the scheme to bring drinking water from Vaigai Dam to Madurai City has been completed; and

(b) if so, when the scheme will be implemented?

### வைகை அணைக்கட்டிலிருந்து மதுரை மாநகரத்திற்குக் குடிநீர்

திரு. கே. எஸ். கணபதி (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : 23—12—1974-ல் சட்ட மன்ற மேலவையில் 97 ஆம் எண் வினாவிற்கு அளித்த பதிலையொட்டி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வைகை அணைக்கட்டிலிருந்து மதுரை மாநகரத்திற்கு குடிநீரைக் கொண்டு வருவதற்கான திட்டத்தைப் பரிசிலனை செய்யும் பணி முடிவு பெற்றுள்ளதா?

(இ) ஆமெனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம். தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் இத்திட்டத்தை ஆய்வு செய்து முடித்து, பொது விவரச் செயற்குறிப்பு ஒன்றைத் தயாரித்து வருகிறது.

(இ) இந்தச் செயற்குறிப்பு தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்தால் எற்பளிக்கப்பட்ட பிறகு அரசினால் பரிசீலிக்கப்படும்.

திரு. கே. எஸ். கணபதி : இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகக் கூடும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது என்று தெரிந்துகொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த ஆய்வை நடத்தியபோது, வைகை அணைக்கட்டிலிருந்து மதுரை மாநகரத்திற்கு குடிநீரைக் கொண்டு வருவதற் கான திட்டத்தைப் பரிசிலனை செய்யும்போது, எப்படிப்பட்ட வழி முறையிலே திட்டத்தை நிறைவேற்றலாம் என்று மூன்று, நான்கு வகையாகப் பரிசீலித் திருக்கிறார்கள். ஒரு வகைப் பரிசிலனையில் 567 லட்சம் ரூபாய் திட்டத்

திற்குச் செலவாகும் என்றும், ஏறத்தாழ 14 லட்சம் ரூபாய் நிர்வாகச் செலவுக்கு ஆகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இன்னொரு வகையான திட்டத்தை நிறைவேற்ற 554 லட்சம் ரூபாய் மொத்தச் செலவு என்றும் 16½ லட்சத்திலிருந்து 17 லட்சம் ரூபாய் வரை நிர்வாகச் செலவு என்றும் கருதப் படுகிறது. இப்படி எந்த வகைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானாலும், 500 லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட முதலீடு செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு மேல் அதை நடைமுறைப்படுத்த 16 லட்சத்திலிருந்து 17 லட்சம் வரை நிர்வாகச் செலவுக்கு என்று செலவிட வேண்டியிருக்கிறது. இன்னும் சிக்கனமான வழி வகை இருக்கிறதா என்று ஆராயப்பட்டது. பொதுப் பணித் துறையை கலந்தாலோசிக்கப்பட்டது. பொதுப் பணித் துறையினுடைய குழாயோடு ஒரு குழாயை இணைத்து, அதன் மூலம் கால்வாயுடன் ஒரு குழாய் ஏற்படுத்துவதன் மூலம் செலவைக் குறைக்க முடியுமா என்பது பற்றி அந்தத் துறையுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகின்றது. இன்னும் திட்டவட்டமான முடிவு எடுக்கப்படவில்லை.

### *Temporary Judicial Second Class Magistrates*

* 107 *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Second State Conference of the Tamil Nadu State Magisterial Service Association has requested the Government to issue orders to regularise the services of all the existing temporary Judicial School Class Magistrates ; and

(*b*) if so, the action taken thereon?

*நீதித்துறை இரண்டாவது வகுப்பு தற்காலிக மாஜிஸ்டிரேட்டுகள்*

திரு. கே. எஸ். கணபதி (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தற்போது பணியாற்றுகிற நீதித்துறை இரண்டாவது வகுப்பு தற்காலிக மாஜிஸ்டிரேட்டுகள் அனைவரின் பணியையும் முறைப்படுத்தி ஆணைகள் பிறப்பிக்குமாறு, தமிழ்நாடு மாநில மாஜிஸ்டிரேட்டுகள் சங்கத்தின் இரண்டாவது மாநிலக் கூட்டம் கேட்டுக் கொண்டுள்ளதா ?



(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) 37 தற்காலிக இரண்டாம் வகுப்பு மேஜிஸ்டிரேட்டுகளின் பணியை ஒழுங்குபடுத்தி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

### *Assistant Public Prosecutors, Grade I and Grade II*

* 108 *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Revenue be please to state—

(*a*) whether the Tamil Nadu Police Commission in their recommendations numbers 115 and 116 have recommended the necessity for revising and enhancing the pay scales of the Assistant Public Prosecutors, Grade I and II; and

(*b*) if so, the stage at which the matter now stands?

*அரசு வழக்கு உதவி நடத்துநர்கள் (நிலை I, நிலை-II)*

திரு. கே. எஸ். கணபதி (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு வழக்கு உதவி நடத்துநர்களின் (நிலை I நிலை II ) சம்பள விகிதங்களைத் திருத்தி உயர்த்துவதற்கான அவசியம் குறித்து தமிழ்நாடு காவல் துறை ஆணைக்குழு தனது 115, 116 ஆம் எண் பரிவுரைகளில், பரிவுரை செய்துள்ளதா ?

(இ) ஆமெனில், அது தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### *Urban Land Tax*

* 109 *Q.*—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the total amount of urban land tax levied for the fasli year 1384, in Tiruchirappalli urban area ; and

(*b*) the total expenditure incurred by the Government for the year, towards the assessment and collection of the tax?

### நகர்ப்புற நிலவரி

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி நகர்ப் பகுதியில், 1384 பசலி ஆண்டுக்கு விதிக்கப்பட்ட நகர்ப்புற நிலவரி மொத்தம் எவ்வளவு ?

(இ) மேற்படி வரி மதிப்பீடு, வரித்தண்டல் வகையில் இவ்வாண்டில் அரசுக்கு ஏற்பட்ட மொத்தச் செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ரூபாய் 13,61,919.10.

(இ) ( i ) நகர்ப்புற நிலவரி மதிப்பீட்டுக்கான செலவு—ரூ. 1,77,149.17

( ii ) நகர்ப்புற நிலவரி வசூலுக்கான செலவு—ரூ. 20,887.47

திரு. கே. எஸ். கணபதி : இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கும் அடிப்படை மாற்றத்தினால் இன்னும், எவ்வளவு அதிகமாக அரசுக்கு வருமானம் வருமென்று மதிப்பிடப்பட்டுள்ளது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இன்னும் கணக்கு வரவில்லை.

(பிற்பகல் 4-20)

### Multi-purpose Co-operative Credit Society at Malaiveppankuttai, Namakkal taluk.

* 110. *Q.*—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Government have received any petition regarding the election of office-bearers on 1st November 1974 to the Multi-purpose Co-operative Credit Society at Malaiveppankuttai, Namakkal taluk ; and

(*b*) if so, the action taken thereon?

### மலைவேப்பன்குட்டை பலநோக்குக் கூட்டுறவு நாணயச் சங்கம், நாமக்கல் தாலுகா.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நாமக்கல் தாலுகாவிலுள்ள மலைவேப்பன்குட்டை பலநோக்குக் கூட்டுறவு நாணயச் சங்கத்தில் 1—11—1974-ல் நடைபெற்ற நிர்வாகிகள் தேர்தல் பற்றி அரசுக்கு மகஜர் ஏதும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?





மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : (அ) & (இ) மலைவேப்பன் குட்டை பலநோக்கு கூட்டுறவு நாணயச் சங்கத்தில் 1—11—74 அன்று நடைபெற்ற தலைவர் தேர்தல் குறித்து அதிருப்தி தெரிவித்து 25—2—75 அன்று அரசுக்கு வந்த புகார் மனு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மலைவேப்பன்குட்டை பல நோக்கு கூட்டுறவு நாணயச் சங்கத்தில் தலைவர் தேர்தலை அங்குள்ள நிர்வாகஸ்தர்கள் எல்லாம் வெளியில் போன பிறகு ரகசியமாக நடத்தினார்களா ? அப்படியானால் அதனுடைய 'ரிசல்ட்' என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இந்தத் தேர்தல் முறையாக நடக்கவில்லை, மறுதேர்தல் நடத்த வேண்டும், தேர்தல் செல்லாது என்று அவர்கள் 25—2—1975 அன்று அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். தேர்தல் ஆனை 73 விதியின்படி அவர்கள் 31—12—74க்குள் தேர்தல் செல்லாது என்று மனு கொடுத்திருக்கவேண்டும். ஆனால் அவர்கள் கொடுத்திருப்பது 25—12—1975-ல் தான். மேலும் அந்த நடைபெற்ற தேர்தலைப் பற்றி விசாரித்ததில், அது முறையாகத்தான் நடத்தப்பட்டிருக்கிறது என்று தெரிய வருகிறது. அவர்கள் குறித்த காலத்திலே, 4 மணிக்கு, அறிவிப்புப் பலகையில் தேர்தல் பற்றி அறிவிப்பு கொடுத்து, விதிப்படி தேர்தல் நடந்திருக்கிறது. தவறாக நடக்கவில்லை.

திரு. சி. வி. ராஜகோபால் : கூட்டுறவு இயக்கங்களில் தலைவர் தேர்தல் பரபரப்பாக நடத்தப்படுகிறது. அப்போதே நாமினேஷன் கொடுப்பது. அந்த நிமிஷமே ஓட்டுக்கு விடுவது. உடனே 'டிக்ளேர்' செய்து விடுவது என்றெல்லாம் நிமிஷக்கணக்கில் தேர்தல் நடக்கின்றது. ஆகையால் தேர்தலுக்கு நிற்க விரும்பும் அங்கத்தினர்களுக்கு தகவல் தெரிய வாய்ப்பு இல்லாமலேயே போய்விடுகிறது. இரண்டு நாட்களுக்கு முன் அறிவிப்பு கொடுத்து, பிறகு தேர்தல் நடத்தினால், நன்றாக இருக்கும். பழைய முறைகளை மாற்றி, இப்போது புதிய முறைகளிலே நடத்துகிறார்கள். இது ஜனநாயக நாடு. ஜனநாயக முறையிலே தேர்தல் நடக்க வேண்டும். ஆகையால் புதிய முறைகளைக் கையாளாமல் பழைய முறைகளிலே தேர்தல் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : பழைய முறையிலே ஜனநாயக முறைப்படி தேர்தல் நடந்துகொண்டிருக்கிறது.

[1975 நவம்பர் 11

*Mayuram Wholesale Co-operative Stores Super-Market.*

* 111. *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that representation has been received by the Government from the public of Mayuram during the first week of May 1975, regarding the improper functioning of the Mayuram Wholesale Co-operative Stores Super-Market;

(*b*) if so, the details of the complaint; and

(*c*) the action taken thereon?

*மாயூரம் மொத்த வியாபாரக் கூட்டுறவுப் பண்டகசாலைச் சிறப்பு அங்காடி*

திரு. கே. எஸ். கணபதி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாயூரம் மொத்த வியாபார கூட்டுறவுப் பண்டகசாலைச் சிறப்பு அங்காடி முறைகேடாகச் செயல்படுவது குறித்து 1975 ஆம் ஆண்டு மே திங்கள் முதல் வாரத்தில் மாயூரம் மக்களிடமிருந்து முறையீடு ஏதும் அரசுக்கு வரப்பெற்றுள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், அப்புகாரின் விவரங்கள் யாவை?

(உ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) மாயூரம் பொதுமக்களிடமிருந்து அத்தகைய முறையீடு எதுவும் வரவில்லை. ஆயினும், இவ்வாண்டு (1975) மே திங்களில் மாண்புமிகு உறுப்பினர், திரு. சுவாமிநாதன் அரசுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

(இ) அக் கடிதத்தில் கூறப்பட்டிருந்த புகார்களாவன—

(i) மாயூரம் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை ஊழியர்கள் வாடிக்கையாளர்களிடம் மரியாதையற்ற முறையில் நடந்து கொண்டு அவர்களுக்குத் தொல்லை கொடுத்து வருகின்றனர்;

(ii) உண்மையில் பங்கீட்டு வழங்கல் அட்டை வைத்திருப்போர் பலருக்கு சர்க்கரை போன்ற இன்றியமையாப் பொருட்களை வழங்க மறுக்கின்றனர்;



1975 நவம்பர் 11]

(iii) அங்கு எடைபோட்டுத் தரப்பட்ட பொருட்களின் எடைகளில் குறைவு இருந்த காரணத்தால் அப்பண்டகசாலையின் மீது சென்னையிலுள்ள எடைகள்-அளவைகள் துறை இயக்குநர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேலும், இன்றியமையாப் பொருட்களைத் தட்டின்றி வழங்குதற்பொருட்டு அங்கு உணவுப்பொருள் வழங்கு துறையின் மாதிரிக் கடை ஒன்று உடனே திறக்கப்படவேண்டும் என்றும் அந்த முறையீட்டில் வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது.

(உ) அந்த முறையீட்டினையொட்டி, எடுக்கப்பட்ட நடவடிக்கை.

இனம் (i).—புகார் முற்றிலும் பொதுப்படையாக உள்ளது. இருப்பினும், பண்டகசாலை ஊழியர்கள் வாடிக்கையாளர்களுக்கு எப்போதும் மதிப்பளித்து நடந்துகொள்ளுமாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென அப் பண்டகசாலையின் தலைமை நிர்வாக அலுவலருக்குத் தஞ்சாவூரிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் இணைப்பதிவாளர் கட்டளை பிறப்பித்தார்.

இனம் (ii).—இக்குற்றச்சாட்டு பற்றி உணவுப் பொருள் வழங்கு துறை அலுவலர்கள் விசாரணை செய்து, அக்கூட்டுறவு மொத்தப் பண்டகசாலையின் மீது தவறு இல்லை என்ற முடிவிற்கு வந்தனர்.

இனம் (iii).—இந்தப் பண்டகசாலையின் இரண்டு கிளைகளில் மண்ணெண்ணெய் அளந்து கொடுப்பதற்காகவுள்ள ஒரு லிட்டர் கூம்புவடிவ அளவைகளில் முத்திரைகள் புதுப்பிக்கப்படாதது தொடர்பாக, மாயூரம் நீதித்துறை முதல் வகுப்பு நீதிபதியின் நீதிமன்றத்தில் குற்ற வழக்குகள் இரண்டு தாக்கல் செய்யப்பட்டன. நிர்வாகப் பணியாளர்கள் குற்றவாளிகள் அல்லர் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது; ஆனால், விற்பனையாளர்கள் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளித்து, அவர்களைக் கண்டித்து மன்னித்து விடுதலை செய்தது.

*Kuruvikkarambai Co-operative Credit Society, Peravoorani taluk. Thanjavur district.*

* 112. *Q.*—THIRU K. RAJARAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state:

(*a*) whether it is a fact that the activities and business transacted by the Kuruvikkarambai Co-operative Credit Society

Peravoorani taluk, Thanjavur district, have been paralysed due to misappropriation of funds, by the former President of the Society ; and

(*b*) if so, the alternative arrangements proposed to be taken by the Government for sanctioning and payment of loans under the co-operative sector to the farmers in that area?

### தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், குருவிக்கரம்பை கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கம்.

**திரு. கே. ராஜாராம் :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், குருவிக்கரம்பை கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கத்தின் முன்னாள் தலைவர் அச்சங்கத்தின் நிதிகளைக் கையாடல் செய்ததால் அச்சங்கத்தின் நடவடிக்கைகள், நிலைகுலைந்து விட்டன என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அந்தப் பகுதியிலுள்ள உழவர்களுக்கு கூட்டுறவுத் துறையின்கீழ் கடன்களுக்கு ஒப்பளிப்பு வழங்கி அவற்றை வழங்குவதற்கு அரசு எடுக்கக் கருதியுள்ள மாற்று ஏற்பாடுகள் யாவை ?

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி :** (அ) & (இ) குருவிக்கரம்பை கூட்டுறவு கடன் வழங்கு சங்கம் சிறிது காலம் செயல்படாமலிருந்து இப்போது அது செயல்பட்டு வருகிறது. 11—4—75 முற்பகலில் இருந்து தனி அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டார் ; அதன் பின்னர் இச்சங்கத்தின் மூலம் கடன்கள் வழங்கப்பட்டன.

**திரு. கே. ராஜாராம் :** 28—7—75 அன்று கூட அந்தச் சங்கத்திலிருந்து கடன் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்று அந்த ஊரிலுள்ள பிரமுகர்கள் கடிதம் எழுதியிருப்பதின் பேரில்தான் இந்தக் கேள்வியை நான் கேட்டேன். இப்போது சங்கம் செயல்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** இந்த ஆண்டு விவசாயிகளுக்கு அந்தச் சங்கத்தின் மூலமாக கொடுக்கப்பட்ட கடன் தொகை, ரொக்கமாக ரூ. 1.26 லட்சம். பொருள்களின் மூலமாக ரூ. 1.44 லட்சம். இதுவரை 150 விவசாயிகளுக்கு, தகுதி உள்ளவர்கள் என்று கருதி, கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது.



### *Incentive Bonus to the Conductors and Drivers*

*113. *Q.*—THIRU KU. MA. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Labour and Transport be pleased to state:

(*a*) whether the Government are aware of the fact that the drivers and conductors in their desire to get more incentive bonus ar eoverloading the buses and also allow foot-board travel which lead to accidents; and

(*b*) if so, whether the Government have any proposal to punish the drivers and conductors also, besides punishing the foot-board travellers?

### நடத்துநர்களுக்கும் ஓட்டுநர்களுக்கும் ஊக்க ஊதியம்

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் :** மாண்புமிகு தொழிலாளர் நலன் & போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊக்க ஊதியம் பெறவேண்டும் என்ற எண்ணத்தில் பேருந்து நடத்துநர்களும், ஓட்டுநர்களும் அளவுக்கு மீறியும் பேருந்து படிக்கட்டுகளிலும் பயணிகளை ஏற்றிக் கொள்கின்றனர் என்பதையும் இதனால் விபத்துகள் ஏற்படுகின்றன என்பதையும் அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், மேற்குறிப்பிட்ட படிக்கட்டுப் பயணிகளைத் தண்டிப்பதுடன், பேருந்து நடத்துநர்களையும், ஓட்டுநர்களையும் தண்டிக்க அரசிடம் உத்தேசம் ஏதும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) ஆம்.

(இ) பணியாளர்களின்மீதும், பயணிகள் மீதும் இது குறித்து நடவடிக்கை எடுக்க மோட்டார் வாகன சட்டத்திலும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதியிலும் வழி செய்யப்பட்டிருக்கிறது. படிக்கட்டுகளில் பயணம் செய்யக் கூடாது என்கின்ற கட்டுப்பாட்டைக் கடுமையாக செயல்படுத்த வேண்டி பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு அறிவுறுத்தப்பட்டு, இது இப்போது செயல்படுத்தப்படுகிறது.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் :** பஸ்களின் படிக்கட்டில் நின்று பயணம் செய்பவர்களையும் கண்டக்டரே தடை செய்ய வேண்டும். பிக்பாக்கெட் அடிப்பவர்களையும், மது குடித்து விட்டு தகராறு செய்பவர்களையும் சட்ட

விரோதமான செயல் என்று கருதி, தடுத்து நிறுத்த எப்படி கண்டக்டர் கடமைப்பட்டிருக்கிருரோ அவ்வாறே படிக்கட்டுகளில் நின்றுகொண்டு பிரயாணம் செய்பவர்களையும் தடுத்து நிறுத்த கண்டக்டர் கடமைப்பட்டிருக்கிருர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 21-7-1975 அன்று மாலை அண்ணு சமாதியருகில் ஒரு விபத்து நடந்திருக்கிறது. அவ்வளவு அகலமான கடற்கரைச் சாலையில் ஒரு டாக்சியை ஓவர்டேக் செய்ய வேண்டும் என்று மிகவும் இடதுபுறமாக பஸ்ஸை ஓட்டியதில் அந்த பஸ் சாலை ஓரமாகச் சென்று விளக்குக் கம்பத்தில் மோதியதால், 22 வயது உள்ள அசோகன் என்ற வாலிபன் அடிபட்டு ஒரு மணி நேரத்திற்குள்ளேயே உயிர் இழந்து விட்டான். மேலும் அவனுடன் நாலைந்து பேர்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டு, அவர்கள் பொது மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றிருக்கின்றனர். இறந்த வாலிபர் கு. சா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் மகன். ஆகையால் சம்பந்தப்பட்ட டிரைவர், கண்டக்டர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? இறந்தவரின் குடும்பத்திற்கு நஷ்ட ஈடு கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இறந்தவரைப் பற்றி தற்போது என்னிடம் தகவல் இல்லை. ஆனல் உயிர் இழந்தவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்கு பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே ஏற்பாடுகள் இருக்கின்றன. அது பற்றி அணுகிஞல், முறையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே இவ்வாறு ஏற்பாடுகள் இருக்கின்றன என்று சொன்னர்கள். அது பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே மட்டும் தாஞ அல்லது அரசு எடுத்துக் கொண்டிருக்கிற எல்லாப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் பொருந்துமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன். இந்த போனஸ் சிஸ்டத்திஞல் எங்கள் பகுதியிலே பஸ்கள் மிகவும் அதிகமாக மக்களை ஏற்றிக்கொண்டு, இன்னொரு பஸ்ஸைவிட தமக்கு அதிக போனஸ் கிடைக்கவேண்டுமென்ற நோக்கத்தில், டிரைவர்களும் கண்டக்டர்களும் மிகவும் வேகமாக பஸ்ஸை செலுத்திக்கொண்டிருக்கிருர்கள். இவ்வாறு ஓட்டுபவர்கள்மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதாகத் தெரிகிறது. ஆகையால் அரசு நடவடிக்கை எடுக்க முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இந்த விதி எல்லோருக்கும் பொருந்தும். பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே மட்டும்தான் என்பது இல்லை. தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:** உயிரிழந்த அந்த வாலிபன் ஒருவனே தன்னுடைய குடும்பத்தைப் பொறுப்பேற்றுக்கொண்டு நடத்தி வந்திருக்கிறன். அவர்களுக்கு வேறு உதவியும் இல்லை. ஆகையால் அந்தக் குடும்பத்திற்கு முதலமைச்சர் அவர்கள் நிதியிலிருந்து உதவித்தொகை கொடுப்பதற்கு வழிவகை செய்யப்படுமா? தீபாவளி சமயத்தில் மதுரையில் சேலைகள் பரிசு வாங்கச் சென்று உயிர் இழந்த 19 பேர் குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அது போன்று இதற்கும் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி:** நான் ஏற்கெனவே வேறு ஒரு அவையில் விளக்கம் அளித்திருக்கிறேன். வேறு எந்த ஒரு இலாகாவும் பொறுப்பேற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலையில், யார் இறந்தாலும், அவர்களுக்கு அரசு நிறுவனத்திலிருந்து, அல்லது துறைகளிலிருந்து தொகை வழங்கப்படாமல் இருக்கும்போது, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தொகை அளிக்கப்படுகிறது. அவ்வாறு பொறுப்பு ஏற்றுக்கொண்டு நிதி வழங்கப்படுமென்ற நிலையில் அரசுத் துறைகள் அல்லது நிறுவனங்கள் இருக்குமாஞல், அப்போது முதலமைச்சர் நிதியிலிருந்து வழங்கப்படுவதில்லை. யாரும் பொறுப்பேற்றுக்கொள்ளாத சூழ்நிலையில்தான் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி வழங்கப்படுகிறது.

**திரு. கே. ராஜாராம்:** பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு எழுதியிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினர்கள். ஆனல், இன்றுகூட சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷன் பகுதியிலே பஸ் விபத்து நடந்து, உயிர்ச் சேதமும், பொருட் சேதமும் ஏற்பட்டிருக்கின்றன. அமைச்சர் அவர்கள்கூட அங்கு போய் நேரில் பார்த்து வந்திருக்கிருர்கள். அதுபற்றி ஆய்வுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அதுபற்றிய விவர அறிக்கை இந்த அவையிலே வைக்கப்படவிருக்கிறது.

THIRU G. VASANTHA PAI: Sir, I wanted to ask the same question about the Central Station accident this morning.

### *Pension to Retired Employees of Chatram Department, Thanjavur district.*

* 114. *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:

(*a*) whether it is a fact, that arrears of pension due to the retired employees of the Chatram Department, Thanjavur

district, have not yet been disbursed to them as per G.O. Ms. No. 1714, Revenue, dated 19th April 1974 and Government Memorandum No. 73270-XIII/74-8, Commercial Taxes and Religious Endowments Department, dated 6th October 1974:

(*b*) if so, the reason therefor; and

(*c*) the action proposed to be taken by the Government in the matter?

### தஞ்சாவூர் மாவட்டம் சத்திரத் துறையின் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ஓய்வூதியம்

**திரு. கே. எஸ். கணபதி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்):** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தஞ்சாவூர் மாவட்டம் சத்திரத் துறையின் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்குச் சேரவேண்டிய ஓய்வூதியத் தொகை நிலுவைகள், வருவாய்த் துறையின் 19-4-1974 ஆம் நாளிட்ட 1714 ஆம் எண்ணுள்ள அரசாணைக்கிணங்கவும், வணிக வரிகள்—சமயக்கட்டளைகள் துறையில் 6-10-1974 ஆம் நாளிட்ட 73270 -XIII/ 74-8-ஆம் எண்ணுள்ள அரசுக் குறிப்பாணைக் கிணங்கவும் இன்னும் வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்குக் காரணம் யாது?

(உ) இப்பொருள்பற்றி அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ), (இ) & (உ) திங்கள் ஒன்றுக்கு ரூ. 60 என்ற விதத்தில் தனிப்பட்ட ஓய்வூதியம் 1-10-1974 முதல் கொடுக்கப்பட்டு வருகிறது. 1-10-1974-க்கு முன்புள்ள கால அளவிற்கான ஓய்வூதிய நிலுவைத் தொகைகளைக் கொடுப்பது பற்றி அரசு முனைப்பாக ஆய்வு செய்து வருகிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(பிற்பகல் 4-30)





### 2. மேலவை விதி 82-ன் கீழ் விளக்க உரை.

### சென்ட்ரல் ஸ்டேஷன் அருகே பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துக்கு ஏற்பட்ட விபத்து குறித்து

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, போக்குவரத்துத் துறை அமைச்சர் என்ற முறையில் நான் இந்த அவைக்கு ஒரு செய்தியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்று காலை பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான வடபழனி—பாரிஸ் வழித்தடத்தில் 17 ஆம் நம்பர் பேருந்து பஸ் ஏ. 831, ரிஜிஸ்டர் நம்பர் எம்.எஸ்.எஸ். 6745 காலை 9½ மணிக்கு விபத்துக்கு உள்ளாயிற்று. வடபழனியிலிருந்து பாரிஸ் திரும்பி வரும்போது, சென்ட்ரல் ஸ்டேஷன் அருகில், டிரைவரின் கருத்துப்படி, பிரேக் பிடிக்காமல்போன காரணத்தினால், வண்டி நிற்காமல் நேராகச் சென்று, சென்ட்ரல் ஸ்டேஷன் 10 ஆம் நம்பர் பிளாட்பாரத்தில் நின்றது. போகும்போது சைக்கிளில் மீன்கூடை ஏற்றிச் சென்ற ஒருவர்மீது மோதியதால் அவர் அந்த இடத்திலேயே மரணம் அடைந்தார். மேலும் அந்த விபத்தில் தற்போதைய தகவல்படி, 14 பேர்களுக்கு காயம் ஏற்பட்டது. அவர்கள் அனைவரும் உடனடியாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தகுந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது. போலிசார் ஒருவர் மாண்டுவிட்டார் என்ற செய்தியை எனக்கு அளித்திருக்கிறார்கள். அந்தப் பேருந்து ஓட்டுநர் முத்தையாவை விபத்து குறித்து விசாரித்ததில், பிரேக் பிடிக்காமல் போன காரணத்தால் விபத்து நேர்ந்துவிட்டதென்று சொல்கிறார். விபத்தின் காரணம் குறித்து பிரேக் இன்ஸ்பெக்டர் ரிப்போர்ட் கேட்கப்பட்டிருக்கிறது. மேலும் விசாரணை தொடரும். விபத்திலே மாண்டுவிட்டவர்களின் குடும்பத்திற்கும், காயமடைந்தவர்களுக்கும் அரசின் சார்பில் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். விபத்து நடந்த இடத்தையும் நான் நேரிலே சென்று பார்த்தேன். மருத்துவ மனைக்கு நேரிலே சென்று, காயமடைந்தவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு வந்தேன்.

### 3. கவன ஈர்ப்பு.

### நவசக்தி பத்திரிகை அலுவலகம் சென்று பெண்கள் பலர் நவசக்தி ஊழியர்களைத் தாக்கியதன் காரணமாக அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலைமை குறித்து.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"29—10—1975 காலை 11-00—11-30 மணி அளவில் நவசக்தி பத்திரிகை அலுவலகம் சென்று பெண்கள் பலர் நவசக்தி ஊழியர்களை தாக்கியுள்ளார்கள் போலீசார் சரியாக நடவடிக்கை எடுக்கவில்லை. இது தொடர்பாக அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையைப் பற்றி".

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, செங்கொடியின் முன்னாள் ஆசிரியரும், தற்பொழுது நவசக்தி நாளிதழின் மேலாளருமான திரு. நாஞ்சில் செல்வம், 29-10-1975 அன்று மைலாப்பூர் காவல் நிலையத்தில் புகார் ஒன்று கொடுத்தார். அப்புகாரில், தான் இரு காங்கிரசுகளும் இணைய வேண்டுமென்று ஆதரித்து, ஸ்தாபன காங்கிரசின் மகளிர் பிரிவைத் தாக்கிக் கட்டுரை எழுதியதால், 29-10-1975-ஆம் தேதி காலை 11-30 மணிக்கு தமிழ் நாடு ஸ்தாபன காங்கிரசின் மகளிர் பிரிவு அமைப்பாளர் திருமதி ரமணிபாயும் மற்றும் 50 பெண்களும் மைலாப்பூர் கச்சேரி சாலையிலுள்ள நவசக்தி அலுவலகத்தில் நுழைந்து தன்னையும் மற்றுமுள்ள ஊழியர்களையும் துடைப்பத்தால் அடித்து காரி உமிழ்ந்தார்கள் என்று குறிப்பிட்டிருந்தார். உடனடியாக அவ்விடத்தைச் சுற்றித் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மேற்கொண்டு எவ்விதக் குழப்பமும் ஏற்படவில்லை.

மைலாப்பூர் காவல் துறை ஆய்வாளர், அப் புகாரின் பேரில் இ.பி.கோ. 147, 448, 341, 323 மற்றும் 355 பிரிவுகளின் கீழ் ஒரு வழக்கு (குற்ற எண் 5089/75) பதிவு செய்து, புலன் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டார். நவசக்தி அலுவலகத்திற்கு அருகாமையிலிருந்த நான்கு குற்றவாளிகளை கைது செய்தார். கைது செய்யப்பட்டவர்கள் அன்றே ஜாமீனின் பேரில் விடுதலை செய்யப்பட்டனர்.

புலனாய்வில் திரு. நாஞ்சில் செல்வம் மட்டும்தான் தாக்கப்பட்டார் என்றும், சம்பவம் நடைபெற்றபொழுது திரு. ரமணிபாய் நவசக்தி அலுவலகத்திற்குள் செல்லாமல் வெளியில் காத்திருந்தார் என்றும் தெரிய வந்தன. திரு. நாஞ்சில் செல்வம் கழுத்திலும், வலது கை மோதிர விரலிலும் வலி இருப்பதாகச் சொன்னார். அதன் பேரில் அவர் சிகிச்சைக்காக இராயப்பேட்டை அரசினர் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். மருத்துவ அதிகாரி, காயங்கள் சாதாரணமானவை என்று அபிப்பிராயம் தெரிவித்தார்.

திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த ஸ்தாபன காங்கிரசின் முக்கிய ஊழியரான திருமதி திலகவதி அம்மாள், சம்பவம் நடந்த அன்று இராயப்பேட்டை அரசினர் மருத்துவ மனையில் சில காயங்களுக்காக சிகிச்சை பெற்றபின் மாலை 2 மணிக்கு மைலாப்பூர் காவல் நிலையத்தில் தன்னை திரு. நாஞ்சில் செல்வம் தாக்கியதாகப் புகார் ஒன்று கொடுத்தார். இப்புகாரின் பேரில் இ.பி.கோ. 341, 323 மற்றும் 354 பிரிவுகளின் கீழ் வழக்கு ஒன்று (குற்ற எண் 5090/75) பதிவு செய்யப்பட்டு, புலனாய்வில் இருக்கிறது. இவ் வழக்கு சம்பந்தமாக திரு. நாஞ்சில் செல்வம் கைது செய்யப்பட்டு சொந்த ஜாமீனின் பேரில் விடுதலை செய்யப்பட்டார்.



இவ்விவரங்களிலிருந்து திரு. செ. முத்துசாமி அவர்கள் விடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல் மைலாப்பூர் பகுதியில் எவ்வித பதட்ட நிலையும் இல்லை. காவல் துறையினர் தகுந்த நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

**திரு. செ. முத்துசாமி :** துணைத் தலைவரவர்களே, அன்றைக்கு உடனடியாக 4 பேர்களைக் கைது செய்த பின்றால், வேறு யாராவது கைது செய்யப்பட்டார்களா ? மேற்கொண்டு நடவடிக்கை என்னவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அந்த நான்கு பேரைத் தவிர வேறு யாரும் கைது செய்யப்படவில்லை. போலீசார் புலன் விசாரணை செய்து வருகிறார்கள்.

### 4. அரசின் சட்ட முன்வடிவுகள்.

#### (1) தமிழ் நாடு, 1975-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1975)—தொடர்ச்சி.

* **THIRU G. VASANTHA PAI:** Sir, yesterday I was referring to the total exemption that might be granted from the urban land tax and only the excess land being charged with the tax. I hope the Government will accept this suggestion and give complete exemption for two grounds, one ground, half-a-ground and three grounds respectively which are mentioned in the schedule and charge only the excess extent of land.

There is another important matter which I wish to bring to the notice of the Hon. the Chief Minister and that is about the several societies that have been formed for the purpose of providing accommodation for Government employees, for Housing Board employees, for Bank employees, for the L.I.C. employees and for all other persons of the same category. Sir, for example, there is one colony by name Jeevan Bhima Colony in Mylapore like this. In the suburbs like Indira Nagar and

[Thiru G. Vasantha Pai] [1975 நவம்பர் 11

other places, several other colonies have come up and have been occupied by middle class employees. Actually they occupy only less than half a ground with regard to their respective flats but these colonies have some more land which could be used by all of them and also roads forming part of them. Under the present Bill, these Societies have to pay the full tax by way of urban land tax in respect of this land which is enjoyed by all the people as road or common land. This imposition of tax will work a great hardship on these employees since they will have to bear the burden of additional tax. They are all persons in the U.D.C. cadre and belong to the middle class. For example, if a colony has 18 grounds and if there are 48 apartments, each of them will have to pay, according to the present rate of taxation, a sum of Rs. 100 by way of urban land tax. I would request the Government to amend section 29-F so as to exempt these housing colonies which are using the land for the common benefit of all the flat owners since the individual is not using that land.

Sir, why I am referring to this is that we have encouraged them to form housing colonies in the suburbs of the city. The L.I.C. alone has got about half a dozen colonies for its employees. I hope the Government will take pity on them and exempt them totally from the liability to urban land tax in respect of the land that is used in common by all the flat owners in the said colonies.

Another matter I wish to emphasise is the aspect which I have already mentioned, namely, playgrounds. I once again repeat and request the Hon. the Chief Minister as well as the Hon. the Minister for Revenue to exempt all playgrounds, whether they belong to schools or any social clubs or other organisations. After all, the health of a person is very important and we should have enough lung space in the city to enable people to have physical exercises in their middle age as well as in their pre old age. I request the Government to examine this seriously and exempt playgrounds from the operation of the Urban Land Tax Act. Thank you, Sir.



1975 நவம்பர் 11]

[பிற்பகல் 4.40]

* **திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்**: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் கொண்டுவந்துள்ள இந்த நகர்ப்புற நிலவரிச் சட்டத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். ஒரு சிலர் வீட்டைச்சுற்றி ஒரு ஊருக்கே தேவையான நிலத்தை வளைத்து வைத்துக்கொண்டிருப்பதனால் தான், வேறு சிலர் ஒரு மனை நிலம் கூட வாங்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். மனிதனுக்கு, சராசரியாக எல்லோருக்கும் நிலம் தேவை. "காணி நிலம் வேண்டும்" என்று சொன்னார் பாரதியார். ஆறடி மண்ணாவது நமக்குத் தேவை. அதுவும் என்னைப்போல் அதிகம் வளர்ந்தவர்களுக்கு இன்னும் சற்று அதிகமாகத் தேவை. ஆனால் தனக்கென்று ஓர் அடி நிலம் கூட இல்லாத மக்கள் ஏராளமான பேர் இந்த நாட்டிலே இருக்கிறார்கள். பலர் நடைபாதையில் வாழ்வதைப் பார்க்கிறோம். ஏராளமான மக்கள், சாக்கையும் மற்ற தகரங்களையும் கொண்டு குடிசை அமைத்து வாழ்ந்து வருகின்றார்கள். ஏராளமான நிலங்கள், அளவுக்கு அதிகமாக வைத்திருப்பவர்களிடமிருந்து இந்தமாதிரி வரி வசூலிப்பது மட்டும் போதாது, அவர்களிடமிருக்கும் உபரி நிலத்தை கட்டாயமாகப் பறித்து எடுத்து, அதை நிலமற்ற ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இதில் ஒரு திருத்தத்தை மட்டும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பாய் அவர்கள் கூறியதுபோல, விளையாட்டு மைதானங்கள் மக்களுடைய சுகாதாரத்துக்குத் தேவைப்படுகின்ற இன்றியமையாதவை என்பதனால், இந்தத் திட்டத்திலிருந்து விளையாட்டு மைதானங்களுக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டும் என்று கோருவது நியாயமே என்று கருதுகின்றேன். மக்களுடைய நல் வாழ்வுக்குப் பயன்படுவதனால், அதற்கு வரிவிலக்கு அளிக்க வேண்டுமென்று வற்புறுத்துகின்றேன்.

மேலும், இப்போது இரண்டு மனைக்கு மேல் இருந்தால் வரி உண்டு என்றும், அதற்கும் குறைந்து இருந்தால் வரி இல்லை என்றும் இருக்கிறது. அதிலேயும் ஒரு குறைபாடு இருக்கிறது. உதாரணமாக இரண்டு மனை நிலம் காலியாக இருந்தால், அதற்கு வரி வசூலிக்கப்படுகிறது, அதற்குள்ளேயே 1,200 சதுர அடியில் வீடுகட்டினால், மீதியிருப்பது 1½ கிரவுண்ட் தான். அரை கிரவுண்டில் வீடு கட்டினால், அந்த இடத்திற்கு கார்ப்பரேஷன் வரியும் வசூலிக்கிறார்கள். மேலும், அந்த இரண்டு கிரவுண்டுக்கும் நில வரியும் வசூலிக்கின்றார்கள். ஆகவே, கட்டிடம் கட்டிய பகுதியைக் கழித்துவிட்டு எஞ்சிய காலி நிலத்தைத் தான் நகர வரி விதிப்பின் கீழ் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு

கின்றேன். முன்பெல்லாம், 1½ கிரவுண்டு இருந்தாலும் வரி வசூல் செய்து வந்தார்கள். அப்போது, அதற்காக கோர்ட்டுக்குக் கூடப் போனார்கள். இப்போது வரி இரண்டு கிரவுண்டுக்கு மேல் இருந்தால்தான் என்று விதி வந்திருக்கிறது. கடந்த 7 ஆண்டுக் காலமாக 1½ கிரவுண்ட் வைத்திருந்தவர்களிடமிருந்தும் வரி வசூலிக்கப்பட்டிருக்கிறது. வரியில் பாக்கி வைத்திருந்தவர்களுக்கு இப்போதும் நோட்டீஸ் வந்துகொண்டிருக்கிறது, பழைய பாக்கியைச் செலுத்தவேண்டும் என்று, அந்த பாக்கியைச் செலுத்துவதினின்றும் விலக்கு அளித்து ஏற்கெனவே 1½ கிரவுண்டுக்குச் செலுத்திய தொகையைத் திருப்பிக் கொடுக்கவும் வழிவகை செய்யவேண்டும் என்று சொல்லி இந்தச் சட்டத்தை முழுமனதுடன் ஆதரிக்கின்றேன்.

*தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நகர்ப்புற நிலவரியிலிருந்து பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், ஆகியவற்றைச் சேர்ந்த இடங்களுக்கு விதிவிலக்களிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், கோயில்களைச் சேர்ந்தவர்களுடைய குடியிருப்புக்கள், மற்றும் காலி நிலங்களுக்கு விதி விலக்களிக்கப்படவில்லை. கோயில்களில் இருக்கும் காலி நிலங்களுக்கு வரி விதிக்கப்பட்டிருக்கிறது. கபாலீஸ்வரர் கோயிலை எடுத்துக் கொண்டால், 200-க்கு மேற்பட்ட கிரவுண்ட் சும்மாதான் கிடக்கின்றது. வருமானம் எதுவும் அவற்றிலிருந்து இல்லை. அந்தக் காலி நிலத்தைப் பராமரித்துப் பயன்படுத்திக்கொள்ள போதிய பணவசதி இல்லாததன் காரணமாகத்தான் அவைகள் காலியாகக் கிடக்கின்றன. காலி நிலங்களுக்கு என்று சொன்னால், எல்லா அற நிலையங்களையும் சேர்த்து, எல்லாத் திருக்கோயில்களிலும் தரிசாக இருக்கின்ற நிலங்களுக்கும் வரி போடப்பட்டிருக்கின்றது. அவற்றிலிருந்து எந்தவிதமான வருமானமும் இல்லாமல் இருப்பதால், அவற்றுக்கு விலக்களிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அது மட்டுமல்ல, குடியிருப்புக்கென்று பயன்படுத்துகின்ற இடங்களுக்கும் இந்தப் பள்ளி, கல்லூரியில் பணிபுரியும் ஊழியர்களுக்கு என்று இருக்கும் குடியிருப்புகளுக்கு விலக்களிக்கப்பட்டிருப்பதுபோல, விலக்களிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

*திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நகர்ப்புற நிலவரி சம்பந்தமாக வந்துள்ள திருத்த மசோதாவில் எனக்குத் தோன்றிய சில முக்கிய விஷயங்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். பொதுவாக நகரத்திற்கு அது முனிசிபாலிடியாகவோ அல்லது டவுன்ஷிப் ஆகவோ இருந்தாலும் சரி அல்லது சென்னைக் கார்ப்பரேஷனை இருந்தாலும் சரி, நகர நில வரிக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலே



மதுரையை கார்ப்பரேஷன் என்று சொல்லவில்லை. மதுரை நகரை ஒரு முனிசிபாலிடியாக எடுத்துக்கொள்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. சென்னை மட்டும் கார்ப்பரேஷன் என்று சொல்லப்பட்டிருக்கிறது, இதற்கு 16 கிலோ மீட்டர் சுற்றளவில் இருக்கக்கூடிய நிலங்களையெல்லாம் நகர வரிக்கு உட்படுத்தி மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. சென்னை மாநகரைச் சுற்றி தொழில்கள் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய நிலங்களை வேண்டுமானால் அம்மாதிரி வரிக்கு உட்படுத்தலாமேயொழிய, உண்மையில் விவசாய நிலங்களுக்கு இந்த நிலவரியை விதிக்கக்கூடாது. தற்போது இருக்கும் விதிகளின் கீழ், நகரத்தைச் சுற்றி விவசாயத்தின் கீழ் இருக்கும் புஞ்சை நிலங்களுக்கு நகர நிலவரி உண்டு என்ற நிலைமை இருக்கிறது. நஞ்சைச் சாகுபடி செய்யக்கூடிய நிலம் மட்டும் விலக்களிக்கப்பட்டு, விவசாய நிலம் என்று எடுத்திருக்கிறார்கள். புஞ்சை நிலங்களையும் விவசாய நிலம் என்று எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி எடுத்துக்கொள்ளாமல் இருப்பது சரியல்ல. புஞ்சைக்கும் விலக்களிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன். உண்மையில் தென்காசியை எடுத்துக் கொண்டால், தென்காசியிலிருந்து கேரள எல்லை வரையில் இருக்கக் கூடிய அத்தனை நிலங்களும் நகர நிலவரிக்கு உட்பட்டதாக ஆகிவிடும். தென்காசி ஒரு முனிசிப்பாலிட்டி. அடுத்தபடியாக, குற்றாலம் ஒரு டவுன்ஷிப். ஆகவே, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய எல்லா நிலங்களையும் நகர்ப்புற நிலவரிக்கு உட்படுத்தியதாக ஆகிவிடும். ஆகவே, நஞ்சை நிலங்களைப் போலவே, புஞ்சை நிலத்திற்கும் இந்த வரியிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன். இதை ஒரு திருத்தமாக அமைச்சர் அவர்கள் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, டிரஸ்டுகள் சம்பந்தப்பட்ட நிலங்கள், கோயில் சம்பந்தப்பட்ட நிலங்கள், பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள் சம்பந்தப்பட்ட நிலங்கள் இவைகளிலே, சில நிலங்களுக்கு விதிவிலக்கு அளித்து சில நிலங்களுக்கு இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. உதாரணமாக ஒரு கோயிலுக்கு அல்லது ஒரு பள்ளிக் கூடத்திற்குச் சொந்தமான நிலத்தில் கட்டடம் கட்டி வாடகைக்கு விட்டிருந்தால், அதற்கு நகர்ப்புற நிலவரி கட்டவேண்டும் என்று இருக்கிறது. கோயிலானாலும் சரி, பள்ளியானாலும் சரி, கல்லூரியானாலும் சரி, அவைகள் நடக்கவேண்டுமானால், இம்மாதிரி வரக்கூடிய வருமானத்திலிருந்து தான் நடக்க வேண்டும். ஆகவே, அதற்கு வரி போட வேண்டும் என்று சொல்வது சரியாகாது. வருவாயைக் கொண்டு வேறு ஏதாவது சொந்த முறைக்கு உபயோகப்படுத்தினால்,

அல்லது வேறு ஒரு வியாபாரம் செய்வதற்கு அந்த வருவாயை உபயோகப்படுத்தினால், வரி போடலாம். ஆனால் அந்தக் கோயிலுக்கான பூஜை செய்யவும், கோயிலுக்கான வேறு செலவு செய்யவும், பள்ளிக்கூடமானால்—அந்தப் பள்ளியை நடத்துவதற்கும் அரசாங்கம் கொடுக்கும் கிராண்ட் போதுமானதாக இல்லை—அதில் ஏற்படும் பற்றுக்குறையை நிவர்த்தி செய்வதற்காக இதை அவர்கள் செலவழித்தால், அதற்கு வரி போடுவது என்பது சரியானதா என்பதை யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதுபோக, கட்டிடம் கட்டி வாடகைக்கு விட்டு, வருமானம் வந்தால், வரி போட வேண்டுமென்று சொல்வது ஒருபுறமிருக்க, கட்டடம் கட்டாமல் காலியாக வைத்துக்கொண்டிருந்தால், அதற்கும் வரி செலுத்த வேண்டுமென்று சொல்வது, அதுவும் இம்மாதிரி பொது ஸ்தாபனங்களுக்கு அதை விஸ்தரிப்பது சரியா என்பதை நாம் யோசிக்க வேண்டும். அவர்களுக்குப் போதுமான பணம் இருந்தால், போதுமான வருவாய் இருந்தால், இந்த நிலங்கள் யாவற்றையும் சும்மா இருக்க யாரும் விடமாட்டார்கள். ஆகவே, காலியாக இருந்தாலும், அதற்கு வரி செலுத்த வேண்டுமென்று சொல்வது நியாயமில்லை, அதை ஆலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

(பிற்பகல் 4-50)

மற்றொரு முக்கிய விஷயம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்னையைச் சுற்றிலும் 16 கிலோ மீட்டர் தூரத்திற்கு இருக்கும்படியான நிலத்திற்கு வரி என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது ரெசிடன்சியல் ஏரியாவாக இருந்தால் 3 கிரவுண்டு வரை வரி கிடையாது. அதற்கு மேல் இருந்தால், வரி செலுத்த வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஒரே மாதிரியாக எல்லாவற்றிற்கும் செய்ய வேண்டும். சாதாரணமாக பெரியகுளம் ஒரு சிறிய முனிசிபாலிடியாக இருந்தாலும், இந்த வரிக்குட்படுகிறது. இந்த முனிசிபாலிடியைச் சுற்றி 16 கிலோ மீட்டர் வரை இருக்கக்கூடிய நிலத்திற்கு 2 கிரவுண்டுக்குத்தான் வரி விலக்கு உண்டு. சென்னைக்கு அருகில் உள்ள பகுதிக்கு 3 கிரவுண்டு வரை என்றும் மற்ற மாநகரங்களுக்கு அருகில் உள்ள பகுதிக்கு 2 கிரவுண்டுக்கு மட்டும் வரி விலக்கு என்றும் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நகரங்கள் அருகில் உள்ள நிலங்கள் வரி விகிதத்தைப்பற்றி ஆராய்ந்து செய்யலாம்.

**திரு. கே. ராஜாராம்:** நாம் அந்த அதிகாரத்தைத் தான் இந்த மசோதாவிலே கொடுக்கப்போகிறோம். அதனால்தான் நான் இதைப்பற்றிப்



பேசுகிறேன். அது தவிர, நம் அதிகாரத்தையும் வேண்டுமானால், விஸ்தரிக்க முடியும். ஒன்றைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். இதிலே டிஸ்கிரிமினேஷன் இருக்கிறது. ஒரு நகரத்தைச் சுற்றியுள்ள நிலங்களில் 3 கிரவுண்டுக்கு வரி இல்லை என்றும், மற்றொரு நகரத்தைச் சுற்றியுள்ள நிலங்களில் 2 கிரவுண்டுக்கு வரி இல்லை என்றும் இந்தத் திருத்தத்தில் இருக்கிறது. இதை நாம் பரிசீலிக்க வேண்டும். இதை விஸ்தரிப்பதற்கு ஏற்ற முறையில் இதைத் திருத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்தச் சட்டம் வந்தாலும், சில குறைகள் இருக்கத்தான் செய்யும். சிறிய குறைகள் இருக்கத்தான் செய்யும். ஆனால் பெரிய குறை இதில் இருக்கிறது. அதை நிவர்த்திக்க வேண்டும். பொது ஸ்தாபனங்கள் பாதிக்கப்படாமலிருப்பதற்கு அரசாங்கத்திற்கும் பொறுப்பிருக்கிறது. சட்டசபை உறுப்பினர்களுக்குக் கடமையும் இருக்கிறது. இந்தச் சட்டத்தை நாம் கவனித்து ஆராய்ந்து செய்ய வேண்டும். தனியார்களைப் பற்றியும் கவனிக்க வேண்டும். அவர்கள் உதவி வேண்டினால், நாம் உதவி செய்யலாம். கோயில்களும், பள்ளிகளும் (மைனர்கள்) சிறு குழந்தைகள் போல. அவைகளின் குறைகளை நிவர்த்திக்க வேண்டும். சட்ட சபையும், அமைச்சரவையும் பொது ஸ்தாபனங்களுக்குக் கார்டியனாக இருந்து, அவற்றைப் பாதுகாக்க வேண்டிய நிலையில் இருக்கின்றன. இந்தப் பொது ஸ்தாபனங்களுக்கு குறைகள் ஏற்பட்டுவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** துணைத் தலைவரவர்களே, நகர்ப்புற வரி பற்றிய இந்தச் சட்டம், ஏற்கெனவே நம்முடைய தமிழ் நாட்டிலே இருக்கின்ற ஒரு சட்டம்தான். 1963 ஆம் ஆண்டிலிருந்தே தொடர்ந்து இருக்கின்ற ஒரு சட்டம் இது. அந்தச் சட்டத்திலே சில திருத்தங்கள் செய்வதற்காக இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்படுகிறது. இந்த வரி நியாயம் அல்ல, இந்த வரிச்சுமையை மக்களாலே தாங்கிக்கொள்ள முடியாத நிலை இருக்கிறது, யார் யாருக்கு வரி போடலாம் என்று வாதிடப்பட்டது. ஏற்கெனவே ஏற்றுக்கொண்ட ஒன்று என்று இதை விட்டுவிடலாம் என்று நினைக்கிறேன். இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்த அளவுக்கு, நாம் குடியிருக்கின்ற வீடுகள், வணிகத்திற்கு என்று பயன்படுத்துகின்ற கட்டிடங்கள் என்ற முறையிலே இரண்டு விதமாக வரி அமைப்பு இருக்கவேண்டும் என்ற புதிய கொள்கையை நாம் இப்போது கொண்டுவந்திருக்கிறோம். இந்தக் கொள்கையை அமுல் நடத்தும்போது, ஓரளவுக்கு வரி விகிதத்தையும் உயர்த்த வேண்டுமென்றுதான் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். இதுதான் இந்த மசோதாவினுடைய மூலப்பொருளாக அமைந்திருக்கிறது. இதை யொட்டி இதுவரை விதி விலக்குகள் என்று கொடுத்துக் கொடுத்து, பிரிவு

களிலே ஒரு குழப்பமான நிலை இருந்தது. இதை நிவர்த்திக்க வேண்டுமென்ற முறையிலே இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். அதைத்தான் கடைசியாக நமது எதிர்க் கட்சித் தலைவரவர்கள் எடுத்துச் சொன்னார்கள். பொது மக்களுடைய நன்மைக்காகச் செயற்படுகின்ற கோயில்கள், அறநிலைய அமைப்புகள், கல்விக்கூடங்கள், மருத்துவ விடுதிகள்—இது போன்ற அமைப்புகளுக்கு விதி விலக்குக் கொடுப்பதற்கு என்று ஒரு பிரிவு நம்முடைய இந்தச் சட்டத்திலேயே இருக்கின்றது. இதிலே யாருக்குக் கொடுப்பது என்ற பெரிய போராட்டம் ஒவ்வொரு மாநிலத்திற்கும் இருக்கின்றது. இதில் தொல்லைகள் இருந்தன. அந்தத் தொல்லைகளை எல்லாம் நீக்குவதற்கு, வேறுபடுத்துவதற்கு என்று விதி தெளிவாக இருக்க வேண்டும், அதைத் தெளிவாக எடுத்துச் சொல்லிவிட்டால், எப்படியும் மக்கள் வரியைக் கொடுத்து விடுவார்கள் என்ற அளவில்தான் தெளிவுபடுத்துகிறோம். அறநிலையங்களைப் பொறுத்த அளவுக்கு, அதனுடைய சொந்த உபயோகத்திற்காகப் பயன்படுத்துகிற இடங்களுக்கு, அதிலே வருகின்ற காலி இடங்கள், அதிலே வியாபாரிகள் பயன்படுத்தக்கூடிய கடைகள், பிரிவுகள் இத்தனைக்கும் வரி விலக்கு என்று போட்டுவிட்டோம். இன்னும் ஒரு படி மேலே சென்று, தெளிவாக அந்த அறநிலையங்கள், கோயில்களுடைய சொந்த நிலங்கள் அல்லது சொந்தக் கட்டிடங்கள் எந்த உபயோகத்திற்கும் பயன்படுத்தப்படாமல் கிடக்குமேயானால் அதற்கும் வருமானம் வரக்கூடிய வகையிலே பயன்படுத்தாத நிலத்திற்கும் வேறுபடுத்த வேண்டும் என்றுதான் இன்றைக்குத் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. காலி இடங்கள் இருக்கக்கூடாது, அதுவும் பெரும் நகரங்களிலே ஒரு கோயிலுக்கு உபரியாக நிலங்கள் இருந்தால், அதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதிலே நாம் தெளிவாக இருக்க வேண்டும். வருவாய் வருமானால், வேறு நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்த முடியுமானால், வருவாய் வருகின்ற துறை என்ற முறையிலே போட்டிருக்கிறோம். நாம் போடும் வரிக்கும் அவர்கள் சேர்த்து வருவாயைப் பெருக்கிக் கொள்ளலாம். அந்த அளவிலேதான் வருவாய் வரக்கூடிய இடத்திற்கு சட்டத்திலே வரி செய்யப்பட்டிருக்கிறது. அது கோயிலாக இருந்தாலும், கல்விக்கூடங்களாக இருந்தாலும், அறக்கட்டளை அமைப்புகளாக இருந்தாலும் சரி, இந்த வரியைச் சேர்த்தே அவைகள் வருவாயைப் பெருக்கிக் கொள்ளலாம் என்ற கொள்கையின் அடிப்படையிலேதான் இந்தத் திருத்தத்தைத் தெளிவாக்கிக் கொண்டுவருகிறோம். வரி கட்டலாமா கட்டக்கூடாதா என்று செக்ரட்டேரியெட்டுக்கும், அலுவலகங்களுக்கும் அலைந்துகொண்டிருப்பது குறைந்துவிடும். ஆகவே இந்தச் சட்டத்திலே இந்தத் திருத்தத்தைப் போட்டிருக்கிறோம். இதை நாம் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.



அவர்கள் எல்லாம் இந்த வரியை வருவாயிலே சேர்த்தே வசூலித்துவிடுவார்கள். அறக்கட்டளையாக இருந்தாலும், கோயிலாக இருந்தாலும் கூட, பிரச்சினைகள் தீர்ந்துவிடும்.

திரு. எஸ். நாராயணசாமி: வரி உயர்த்தப்பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வரி உயர்வாக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மையல்ல. இது 1963-லே யிருந்தே இருக்கின்றது. குறைக்க வேண்டியதாக இருந்தால், இந்த வரியை நாம் குறைக்கலாம் என்ற அளவிற்கு ஆராய்ந்தோம். அவசரச் சட்டத்திற்குப் பிறகும் வேறுபாடு இருப்பதை எல்லோரும் பாராட்டினார்கள். நாம் எந்த அளவுக்குக் குறைபாடுகளை நிவர்த்திக்க முடியுமோ அந்த அளவுக்கு முயற்சிக்கிறோம். அதை உணர்ந்தும் இருக்கிறோம். இதற்குமேல் ஆராய்ந்து, பள்ளிக்கூடங்கள் கட்டிடங்களாகப் பயன்படுத்தக்கூடிய இடங்களுக்கு வரி இல்லை என்று போட்டிருக்கிறோம். அந்த நிலத்தைத் தவிர்த்து. அவர்களுக்கு வருவாய் வருகின்ற கட்டிடங்கள் இருந்தால், அதற்கு வரி உண்டு என்று தெளிவாகப் போட்டிருக்கிறோம். சட்டத்திலே போட்டிருக்கின்ற அந்தத் தெளிவான விதி ஒரு பெரிய சுமையைக் குறைக்கும் என்று நம்புகிறேன். பொதுவாக இந்த வரியைக் குறித்து தைரியமாக இது நியாயமான வரி என்று சொல்லிவிட முடியாது. நம்முடைய எதிர்கால நோக்கம் என்ன? இதை நாம் கொஞ்சம் தெளிவாகச் சிந்திக்க வேண்டும். பெரும் நகரங்களைப் பொறுத்து, சுற்றியுள்ள இடங்களுக்கு எதிர்காலத்திலே விலை அதிகமாக ஏறிவிடும். இப்படி இருந்தால், நம்முடைய சமுதாய அமைப்பிலே ஒரு பாதத்தை அது உருவாக்கிவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே நாம் தைரியமாக முடிவு எடுக்க வேண்டும். மாநில அரசுக்கு இதில் இருக்கக்கூடிய அதிகாரம் வரிபோடுவது. மத்திய அரசுக்குள்ள அதிகாரம் நமக்குக் கிடைத்துவிட்டால், இந்த அரசு கவலைப்படவேண்டியதில்லை. இரண்டு கிரவுண்டுக்கு மேல் இருந்தால் சரி, காலியாக இருந்தால், ஒப்படைத்து விடுங்கள் என்று சொல்லலாம். நிலத்தில் வீடு கட்டாமல், பூமியைக் காட்டி வருமானம் தேடவேண்டும் என்று நினைக்கிறவர்கள், அதைக் காலியாக வைக்கக்கூடாது என்பதற்காகத் தான் இதைக் கொண்டு வருகிறோம். அவர்கள் அதில் வீடுகளைக் கட்டியிருந்தால், அரசாங்கத்திலே ஒப்படைத்து விடுங்கள் என்பதுதான் அரசாங்கத்தினுடைய கொள்கையாக இருக்க வேண்டும் என்கிறோம். நகர்ப்புற சொத்துக்களுக்கு ஒரு நிலை கொண்டு வரவேண்டும், அதற்கு ஒரு எல்லை கொண்டுவர வேண்டும், சீலிங், உயர் அளவுக்கு வரம்பு கட்ட வேண்டும் என்பதுதான் நம் கொள்கையாக இருக்கிறது. அந்தக்

[திரு. செ. மாதவன்] [1975 நவம்பர் 11

கொள்கை வந்துவிட்டால், இந்த வரியைப்பற்றி நாம் அதிகக் கவலைப்பட வேண்டாம். இந்த நிலைமைகள் மாற வேண்டும். அந்தக் காலத்திலே 10 அல்லது 15 கிரவுண்டுகள் கூட இருக்கலாம். அதை இப்போது குறைத்துக் கொள்ள வேண்டும். அந்த அளவுக்கு எதிர்காலத்திலே வருகின்ற நிலை இருக்கிறது. இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவிட்டால், தீய சக்திகளுக்கு நாம் இடம் கொடுத்தவர்கள் ஆகிவிடுவோம். இதைச் செய்யாவிட்டால், பொதுவாக ஜனநாயக சக்திகளுக்கு இடம் இல்லாமல் போய்விடும்.

(பிற்பகல் 5-00)

திரு. எஸ். நாராயணசாமி : அந்தக் காலத்தில் உள்ள சட்டப்படி நாங்கள் அதிகப் பரப்பிலே வீடு கட்ட வேண்டிய நிலைமை இருந்தது. அதனால் நாங்கள் கட்ட முடியாமல் போயிற்று.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுது அப்படிப்பட்ட சட்டம் கிடையாது. ஆகவே தீய சக்திகளுக்கு இடம் கொடுக்காமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆட்கள் எண்ணிக்கைக்குத் தக்கபடி நிலம் இல்லாமல் இருக்கிறது. நிலம் இல்லாமல் நிறைய ஆட்கள் இருக்கிறார்கள். எல்லோருக்கும் நிலம் இருக்க வேண்டும் என்பதுதான் நமது கொள்கை. அதற்கு ஏற்றாற் போல் மனதை மாற்ற வேண்டும். எங்களுடைய அரசு ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்து, அதே நேரத்தில் இருக்கின்றதை எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அந்தத் தத்துவத்தின் அடிப்படையில் கொண்டுவரப்படும் சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட இந்த நகர்ப்புற நிலவரித் திருத்தச் சட்ட முன்வடிவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம்: இந்தச் சட்டத்தின்படி நஞ்சைக்கும் புஞ்சைக்கும் தள்ளுபடி உள்ளதாகத் தெரிகிறது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படியில்லை. நஞ்சைக்கு சட்டத்திலே போட்டிருக்கிறோம். புஞ்சைக்கு சட்டத்தின் கீழ் போடப்பட்ட ஆணையிலே சேர்த்திருக்கிறோம். திரு. வசந்த பாய் அவர்கள் சொன்ன கோரிக்கை நியாயமானது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கம் தெளிவான விளக்கமாகத் தெரியவில்லை. இந்த நஞ்சை புஞ்சை கிளாசிபிக்கேஷன் 1928 ஆம் ஆண்டில் செட்டில்மெண்ட் ஆயிற்று. அதுவும் பாதிக்கப்படுமா என்று அமைச்சரவர்களிடமிருந்து விளக்கம் பெற விரும்புகிறேன்.



1975 நவம்பர் 11]

திரு. கே. ராஜாராம்: இரண்டும் பாதிக்கப்படாது என்று தோன்றுகிறது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நஞ்சைக்கு விதி விலக்கு என்று சட்டத்திலே போட்டிருக்கிறோம். புஞ்சைக்கு நமக்கு இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொடுத்திருக்கிறோம். இரண்டும் சட்டத்திலே இருக்கிறது என்ற கருத்தைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பாய் அவர்கள் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : திரு. கணபதி தம்முடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா?

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, திருத்தங்கள் தனித் தனியாக எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவைமுன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 8.

THIRU K. S. GANAPATHI: Sir, I beg to move the following recommendation on behalf of my hon. Friend Thiru A. R. Damodaran and myself:

"That this House recommends that the proposed new section 13 in clause 8 be deleted".

THIRU S. NARAYANASWAMY: I second it.

[1975 நவம்பர் 11

* திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த 8-வது பிரிவிலுள்ள செக்ஷன் 13 அப்போதைக்கப்போது ஏற்படக்கூடிய, நிலத்தினுடைய மதிப்பில் மாறுதல் செய்ய அரசுக்கு உரிமை வழங்குவதாக இருக்கிறது. முதலிலே 1966 ஆம் ஆண்டிலே வந்த சட்டத்தின்படி அந்த உரிமை இருக்கிறது என்றாலும்கூட, 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த மாற்றம் செய்தால் போதும் என்று இருக்கிறது. அந்தச் சட்டத்தின்படி அதற்குப் பிறகு 10 ஆண்டுகளுக்கு அந்த நிலத்தினுடைய மதிப்பு தொடர்ந்து அதே தொகையில் இருந்து வருவதற்கு வழிவகை செய்யப்பட்டிருந்தது. இதை மாற்ற வேண்டிய அவசியமில்லை. ஒருவர் நில உடைமையாளராக இருக்கிற ஒரே காரணத்தினால், அவர் அனுபவித்து வருகிற நிலத்தின் மதிப்பை உயர்த்துவதனால் எந்தவிதமான பயனும் இல்லை. இதனால் பக்கத்தில் உள்ளவர்கள் ஒரு சதுர அடி நிலத்தை 20 ரூபாய்க்கு விற்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும். 10 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் மாற்றப்பட வேண்டுமென்று 1966 ஆம் ஆண்டுச் சட்டத்திலே எப்படி இருந்ததோ அதே முறையே தொடர்ந்து இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

* Thiru S. NARAYANASWAMY: Sir, I consider it particularly important that there should be some stability about the valuation of landed area because this is the only thing that is likely to save society from bankruptcy. To-day, the combined efforts of all the three taxes to which I referred yesterday have been to take away liquidity in a very big way and altogether to destroy it. Even the so-called affluent people who may have their own lands do not have the cash to pay all the taxes together. If at least we are sure that the value remains constant over a period of ten years, we will be able to budget for what is going to happen. The surprise increase in the municipal levy itself has caused so much hardship to people that it is essential that the valuation remains constant over a period of at least a decade particularly when the rate of tax has gone up and the interpretation of the law has changed. The whole new system of taxation, as the Hon. Minister has very appropriately stated, is in the field of a new consciousness of social obligations. I entirely understand that. But, as of now, what has happened is this. The quinquennial valuation being done by the municipalities itself has caused hardship. We do not want the right of revaluation to



1975 நவம்பர் 11] [Thiru S. Narayanaswamy]

vest with the Government at greater frequencies than for a decade. This is the object of the amendment and I will be very happy to see the Government accepting this.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: நகர்ப்புற நிலவரி விதிக்கின்றதால் நிலத்தினுடைய விலை மதிப்பு அதிகரிக்கின்றது என்று சொன்னால், அதனால நிர்வாகத்தில் சிக்கல்கள் ஏற்படும். ஏற்கெனவே 1966 ஆம் ஆண்டு சட்டத்திலே உள்ளதுபோல் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றுவதுதான் நியாயம். நிர்வாகத்துக்கு இடர்ப்பாடு ஏற்படும். ஆண்டுக்காண்டு நிலத்தின் விலை உயர்ந்தாலும், வரியல் அரசுக்கு இழப்பு ஏற்படும். இந்த நேரத்தில் நான் ஒரு கருத்தினைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை 10 சதவிகிதம் அல்லது 5 சதவிகிதம் உயர்த்திக்கொள்வது முறையாக இருக்கும். அப்படி இல்லாவிட்டால், பல இடங்களில் அதிகாரிகள் நிலத்தினுடைய விலையை மதிப்பிடுவதில் சிக்கல்கள் ஏற்படும். இந்த முறையைப் பின்பற்றினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சற்று முன்பு குறிப்பிட்டது போல், விலையை மதிப்பிடுவதற்காகவும், தகராறுகளைத் தீர்ப்பதற்காகவும் கட்டுகளைத் தூக்கிக்கொண்டு அதிகாரிகளைத் தேடிக்கொண்டு வருகின்ற அவசியமே இருக்காது என்று நான் நம்புகிறேன். இதற்குரிய பரிகாரம் தேடும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அன்றைக்கே இதை நான் விளக்கமாகக் கூறினேன். சட்டம் வந்தது 1963 ஆம் ஆண்டில். 1963 ஆம் ஆண்டு சொத்துக்கு இருந்த மதிப்பை எடுத்துக் கொள்ளலாமென்று வைத்தோம். 10 ஆண்டுகளுக்குப் பிறகு நகர்ப்புற நிலவரியை மாற்றலாம் என்று வைத்தோம். இப்பொழுது நடப்பது 1975 ஆம் ஆண்டு. 1971 ஆம் ஆண்டிலே மதுரைக்கு இதை விரிவுபடுத்தினோம். மதுரையில் உள்ள ஒரு நபர் 1971 ஆம் ஆண்டு உள்ள சொத்தின் மதிப்புக்குத் தகுந்தவாறு நகர்ப்புற நிலவரி கொடுக்கின்றார். சென்னையிலே உள்ள நபர் 1963 ஆம் ஆண்டில் சொத்துக்கு என்ன மதிப்பு இருந்ததோ அந்த மதிப்புக்குத்தான் நகர்ப்புற நிலவரி கொடுக்கின்றார். சென்னை மதுரையை விட முதன்மையாக இருப்பது, பெரிய நகரம். சென்னையிலே மதுரையை விட அதிக வசதி வாய்ப்புகள் இருக்கின்றன. அப்படி இருந்தும், சென்னையில் உள்ள ஒருவர் மதுரையில் இருப்பதைவிடக் குறைவாகக் கொடுக்கின்ற ஒரு நிலை உள்ளது. 1975 ஆம் ஆண்டு, அதாவது 10 ஆண்டுகளுக்குப் பிறகு மாற்றும்போது, இந்தப் பிரச்சினை எழுகின்றது. இதை அமுல்படுத்தினால், சென்னைக்கு அருகாமையில் 16 கிலோ மீட்டர் வரையில் உள்ளவர்கள் 1975 ஆம் ஆண்டு உள்ள மதிப்பின் அடிப்படையில் கொடுக்கின்ற

ஒரு நிலை ஏற்படுகிறது. அப்படி அமுல்படுத்தாவிட்டால், 1963 ஆம் ஆண்டு இருந்த மதிப்பின்படிதான் நகர்ப்புற நிலவரி செலுத்தும் நிலை ஏற்படுகிறது. இதைச் சீர்படுத்தாவிட்டால், சென்னை, மதுரை மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள 16 கிலோ மீட்டருக்கு உட்பட்ட இடம் இவையெல்லாம் சேர்ந்து குழப்பத்தை ஏற்படுத்தும். 1963 ஆம் ஆண்டுச் சட்டத்திலே 10 ஆண்டுகளுக்குப் பிறகு மாற்றலாம் என்ற ஒரு நிலை இருந்ததால், அந்த நிலையை மாற்ற முடிவு செய்து, சென்னை, மதுரை மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள 16 கிலோ மீட்டர் தூரத்துக்கு உட்பட்ட பகுதி ஆகியவற்றிலுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க இதைக் கொண்டு வந்தோம். இதைச் சீர்படுத்தினால், எதிர்காலத்தில் இதில் சிக்கல்கள் ஏற்படாது. எதிர்காலத்தில் இது போன்ற ஒரு பிரச்சினை வரக்கூடாது என்பதற்காகத்தான், எதிர்காலத்தில் இன்னும் நீடிக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டாலும்கூட எல்லாவற்றிற்கும் தீர்வு காண்பதற்காகத்தான் ஒரு முடிவு எடுக்க வாய்ப்பு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான், இதில் ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறதே அல்லாமல், தனிப்பட்ட அதிகாரிகள் நிலத்தின் மதிப்பைக் கூட்டும்போதெல்லாம் வரியையும் மாற்றலாம் என்ற அடிப்படையில் இதில் விதி ஒன்றுமில்லை. அதை இன்னும் தெளிவாகக்கூற விரும்புகிறேன். இன்றைக்குக் கொண்டு வரும் சட்டத்திலே 1971 ஆம் ஆண்டு நிலத்தின் மதிப்பு என்ற ஒரு நிலையை வைத்துக்கொண்டிருக்கிறோம். எதிர்காலத்திலே ஒரு குழப்பமும் ஏற்படாமலிருக்க, மதுரைக்கும், சென்னைக்கும் மற்றும் சென்னையைச் சுற்றி 16 கிலோ மீட்டருக்கு உட்பட்ட பகுதிக்கும் ஒருவித குழப்பமும் ஏற்படாமலிருக்க, இன்னும் வேறு இடங்களுக்கு இதை நீட்டிக்கும்போது குழப்பம் ஒன்றும் ஏற்படாமலிருக்க, இதை இங்கு கொண்டு வந்திருக்கிறோம். தமிழ் நாடு பூராவிலும் இதை அமுலுக்குக் கொண்டுவரும் போது, ஒரு ஆணை மூலமாக இதைக் கொண்டு வரத்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம். அதிகாரிகளுக்கு எந்தவிதமான அதிகாரமும் அதிகமாகக் கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-10)

THIRU S. NARAYANASWAMY: Sir, it is not that we are making the mistake of finding fault with individual officers. All I wanted to say is that Government should understand the difficulties of changed valuation. Our objection is to the necessity for taxation arising out of pressures for raising revenue. There may be times when the raising of further revenue may become a very urgent consideration. Some 18 months from



now Government may take it into their head to revise the valuation of land for the purpose of raising more revenue. Governments are not less capable of changing their views than their individual officers. That is my view and I have absolutely no doubt about it. When I say Government, it consists of individuals and they decide collectively that a situation is there where they have to raise revenue. In that attempt, something looks extremely proper which did not look proper in the previous year. If the valuation is made in such circumstances, the hardships are for the poor man. He is unable to budget his income and he is unable to increase his income. The question of increased value of land forces him to sell his land and he has to pay capital gains tax. There is no question of his escaping with the gain that he has made. The man who retains the liquid funds to pay is the one who is likely to feel the hardship.

The second point is the one which the Hon. Minister himself has raised. I am glad that he has realised the anomaly. There is disparity in the valuation adopted for Madurai and Madras and between Madras City and the suburban areas. If the Hon. Minister tries to extend the tax to some other areas, it will result both in embarrassment and confusion. Such confusion Hon. Minister tries to extend the tax to some other areas, it will process. But the idea of bestowing the power to change the valuation in a greater frequency seems to me to be fraught with very grave consequences to the assessees. I have nothing more to say.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: துணைத் தலைவர் அவர்களே, வரியை அதிகப்படுத்துவதன் மூலமாக அரசாங்கத்துக்கு அந்த நோக்கம் வந்துவிடும் என்று சொன்னார்கள். அதற்கும் திருத்தத்திற்கும் சம்பந்தமில்லை. இந்தத் திருத்தப்படி அரசாங்கம் உத்தரவு போடலாம். திருத்தம் இல்லாவிட்டால், அரசாங்கம் அவசரச் சட்டம் போடலாம். ஆக வரியை ஏற்றுவதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. பொதுவாக 1963-லே போடப்பட்ட வரியை எட்டு ஆண்டுகளுக்குப் பின்னாலேதான் மாற்றியிருக்கிறோம். அதுவும் மதுரைக்கு மாற்றி விட்ட காரணத்தினாலே, மாற்றி விட்டோம். அடிக்கடி மாற்ற வேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கம் அல்ல.

THIRU C. V. RAJAGOPAL: Sir, regarding the school play-grounds, the Hon. Minister has not mentioned anything. I would like to know whether they are exempt or not.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த சட்டத்திலே இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் பரிந்துரையை வற்புறுத்துகிறாரா?

திரு. கே. எஸ். கணபதி: துணைத் தலைவர் அவர்களே, பரிந்துரையை வற்புறுத்தவில்லை. திரும்பப் பெறுகிறேன்.

பரிந்துரை, அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 11.

THIRU K. S. GANAPATHI: Hon. Deputy Chairman, Sir, I beg to move the following recommendation:—

"That this House recommends that clause 11 be deleted".

THIRU S. NARAYANASWAMY: Sir, I second it.

திரு. கே. எஸ். கணபதி: துணைத் தலைவர் அவர்களே, இந்த ஒரு பிரிவில் 1966 ஆம் ஆண்டிலே இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தபோது, ஒரு வீட்டில் அதனுடைய சொந்தக்காரர் குடியிருப்பாரேயானால், அப்படி குடியிருப்பதற்குப் போடப்படும் வரியில் 25 சதவிகிதத்தைத் தள்ளிக் கொடுக்கலாம் என்று வழிவகை செய்திருந்தார்கள். இது 1966 ஆம் ஆண்டிலே காங்கிரஸ் ஆட்சியிலே கொண்டுவந்த சட்டம். ஆனால் அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகு, 1973-லே 25 சதவிகித வரவை 50 சதவிகிதமாக உயர்த்தித் தந்தார்கள். அந்த வகையிலே வீட்டில் வாழ்பவர்களுக்கு வசதி தந்திருந்தது. ஆனால், என்ன காரணத்தினால் இந்த மனம் மாறியது என்பது எனக்குத் தெரியவில்லை. அது இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக முழுமையாக அகற்றப்பட்டுவிட்டது. இப்போது 100 ரூபாய் செலுத்த வேண்டியவர்கள் 100 ரூபாய் தொடர்ந்து செலுத்த வேண்டும் என்று போட்டிருக்கிறார்கள். எந்த அடிப்படையில் இந்த மன மாற்றம் ஏற்பட்டது? கொள்கையிலே என்ன மாற்றம் ஏற்பட்டது? குடியிருப்பவர்களுடைய வருமானம் அதிகரித்து விட்டதாக அரசு கருதுகிறதா என்று கேட்டுக் கொண்டு இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொண்டு குடியிருப்பவர்களுக்குச் சற்று வசதி செய்து தரவேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. செ. மாதவன்: துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசாங்கம் பரிசீலித்தது. இதனால் பயன்பெறுவோர்களுடைய எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்தது. ஆகவேதான், இதற்கென்று ஒரு நடைமுறை வைத்து, இதற்கென்று ஒரு பிரிவை வைத்து, இதற்கென்றே ஒரு முறையைக் கொண்டுவந்து அதிலே நிர்வாகச் சிக்கல் வந்துவிடும் என்ற எண்ணத்தினாலே, இதை மாற்றினோம். இதிலே பயன் பெறுவோர்களுடைய எண்ணிக்கையைப் பார்ப்போமானால், சென்னை நகரத்தைப் பொறுத்தவரையிலே, மொத்தம் 6 ஆயிரம் பேர்தான் பயன் பெற்றிருக்கிறார்கள். அவர்களும் வசதி படைத்தவர்களாக இருக்கிறார்கள். இது 1384 பசலி வரை. திருச்சியிலே 253 பேர், சேலத்திலே 462 பேர் என்ற மிகக் குறைவான எண்ணிக்கையிலேதான் பயன் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரிவால் சலுகை பெறுகின்றவர்கள் மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், அவர்களுக்கு இந்தச் சலுகை இல்லாமல் இருந்தால், பிரச்சினை இல்லாமல் போகும், நிர்வாகச் சிக்கல் ஏற்படாது என்ற காரணத்தினாலேதான் இந்த முடிவெடுத்திருக்கிறோம்.

திரு. கே. எஸ். கணபதி: துணைத் தலைவர் அவர்களே, 1966 ஆம் ஆண்டு 25 சதவிகிதமாக இருந்தது. அப்போது இந்தக் குறிப்புகள் அரசிடம் இல்லையா? 1973 ஆம் ஆண்டு 50 சதவிகிதம் என்று எந்த அடிப்படையில் உயர்த்தித் தந்திருக்கிறீர்கள், அதற்குப் பிறகுதான் இது தோன்றியதா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதைப்பற்றிச் சிந்தித்தாலே நமக்கு நன்கு புரியும். 1963 ஆம் ஆண்டிலே போட்டாலும், 1966 ஆம் ஆண்டிலே நீதி மன்றங்களுக்குச் செல்ல ஆரம்பித்தது. இந்த ஏழெட்டு ஆண்டுக் காலத்தில் அதனுடைய பயன் எத்தனை பேருக்குக் கிடைத்திருக்கிறது என்று பார்க்கும் போது. நிர்வாகச் செலவுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. ஆகவே இந்த முடிவை எடுக்க வேண்டுமென்று இப்போது எடுத்திருக்கிறோம்.

THIRU K. S. GANAPATHI.: I am not able to appreciate the stand of the Hon. Minister.

1973 ஆம் ஆண்டிலே மாற்றம் செய்திருக்கிறீர்கள். 1½ ஆண்டுக் காலம் கூட ஆகவில்லை. பரிசீலனை செய்த காலம் 1966. திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு வந்தது 1967 லே. நீதி மன்றம் சென்று வந்த காலம் எல்லாம் எடுத்துக் கொண்டால்கூட 1973-க்கு முன்னதாகவே முடிந்துவிட்டது. அதனை 1973-லே 50 சதவிகிதம் என்று உயர்த்தியிருக்கிறீர்கள். இந்தச் சலுகை ஒரு சில பேருக்குத்தான் கிடைக்கிறது என்பதற்காக அரசு செய்திருக்கிறதா

[திரு. கே. எஸ். கணபதி] [1975 நவம்பர் 11

இதனுல் அரசுக்கு எவ்வளவு வருமானம் கிடைத்துவிடப் போகிறது? என்ன நோக்கத்தில் கொடுத்த சலுகையைத் திரும்பப் பெறுகிறது என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

THE HON. THIRU S. MADHAVAN: He is not able to understand because he wants a concession which I refuse.

THIRU K. S. GANAPATHI: I do not own a single cent of property in any urban area.

THE HON. THIRU S. MADHAVAN: He wants this concession on behalf of a group of people who will be benefited by this.

THIRU K. S. GANAPATHI: I strongly object to it. I do not represent any such person.

THE HON. THIRU S. MADHAVAN: A group of people must be benefited by this provision which I am refusing.

1384 பசலி வரை, 1974 ஆம் ஆண்டு வரை, 944 பேருக்குத்தான் இந்தச் சலுகை கிடைத்திருக்கிறது. மொத்தமாகப் பார்த்தால், 6 ஆயிரம் பேருக்குத் தான் இது கிடைத்திருக்கிறது. லட்சக் கணக்கான மக்கள் வாழ்கின்ற இந்தப் பகுதியிலே 6 ஆயிரம் பேர்களுக்கென்று ஒரு தனிச் சலுகை, ஒரு தனிப் பிரிவு, ஒரு தனி அக்கௌண்ட் என்பது வேண்டாம் என்பதுதான் அரசின் நோக்கமே தவிர, அவர்களுக்குச் சலுகை கொடுக்கக்கூடாது என்பது அல்ல. இந்த அரசாங்கம் வந்ததற்குப் பின்னுல்தான், அவர்களுக்குச் சலுகை அதிகப்படுத்தித் தந்திருக்கிறது. ஆனுல் பயன் பெறுவோருடைய எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்ற காரணத்தாலும் சென்ற ஆண்டு 944 பேருக்கு மட்டுமே தான் இது கிடைத்திருக்கிறது என்ற காரணத்தாலும், இதைச் செய்திருக்கிறோம்.

THIRU S. NARAYANASWAMY: Sir, the only point which I want to make is this. The philosophy of giving certain concessions, when the Urban Land Tax Act was brought for the first time, was that the people who were to be benefited by those concessions were the people who made good and proper use of the land. Therefore, the idea was to appreciate the fact that they lived in their own houses and did not make commercial use of the land and they were regarded as being entitled to concessions. I would like more of that point to be appreciated in this



1975 நவம்பர் 11] [Thiru S. Narayanaswamy]

Bill itself. Of course, unlike Thiru Ganapathi, I own a house and I stand to benefit by it. Of course, we are helpless. Government can not only bring one legislation but they can bring hundreds of legislations which have an effect on private property. But what we say is that this being a forum in which we want to discuss the grievances of the people, it is proper that we tell the Government the difficulty. Of course, it is for the Government to decide on that.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் தம்முடைய பரிந்துரையை வலியுறுத்துகிருரா?

திரு. கே. எஸ். கணபதி: வலியுறுத்தவில்லை. திரும்பப்பெறுகிறேன்.

பரிந்துரை, அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 12.

THIRU K. S. GANAPATHI: Hon. Deputy Chairman, Sir, I beg to move the following recommendation:—

"That this House recommends that in clause 12, for item (i), the following be substituted:—

(i) for clause (c), the following clause shall be substituted:—

'(c) any urban land owned by a Religious institution."

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு துணைத் தலைவர்களே, பரிந்துரையை நான் வழிமொழிகிறேன்.

THIRU G. VASANTHA PAI: Sir, I beg to move the following recommendation:—

"That this House recommends to the Assembly that in clause 12, for sub-clause (iv), the following be substituted:—

(i) any urban land used for public parks, public libraries, or public museums, urban land belonging to any private or public organisation, club or society or anybody whatsoever and used by it for recreation, sports or games either for the public or its members."

(ii) Two grounds in the case of residential plot in the City and ½ ground in the case of non-residential plot in the City and three grounds and 1 ground in a built-up area in the case of residential and non residential plots respectively.

THIRU K. S. GANAPATHI: Sir, I second it.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: துணைத் தலைவரவர்களே, 12-வது விதியில (அ) பகுதிக்கு, மத ஸ்தாபனங்களுக்கு வரி விதிப்பிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்பதற்காகக் கொடுத்துள்ள பரிந்துரையை முன்மொழிகிறேன்:

"That this House recommends that in clause 12, for item (i), the following be substituted:—

(i) for clause (*c*), the following clause shall be substituted:—

'(*c*) any urban land owned by a religious institution including any urban land owned by such institution which is vacant and any land on which a building is constructed from which income is derived, and which income is set apart for the objects of religious worship'."

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: துணைத் தலைவரவர்களே, நான் வழிமொழிகிறேன்.

THIRU K. S. GANAPATHI: I also move the following recommendation:—

"That this House recommends that in clause 12—

(i) for proposed clause (*d*) (i), the following shall be substituted:—

"(*d*) (i) any urban land on which hospitals or institutions for the provision of medical relief are situated".

(ii) proposed clause (*d*) (ii) be omitted.

(iii) for proposed clause (*h*), the following shall be substituted:—

"(*h*) any urban land owned by schools, colleges or Universities".



"*Explanation I*.—For the purpose of this clause, schools or colleges shall mean only such schools or colleges which are educational institutions recognised either by the Government or by the University, as the case may be and such of those schools or colleges which are educational institutions, the income from the urban land whether vacant or built upon being set apart or earmarked for educational activities."

(iv) for proposed clause (i), the following clause shall be substituted:—

"(*i*) any urban land used for public parks, public libraries, public museums and play fields".

(v) for proposed clause (*k*), the following clause shall be substituted:—

"(*k*) subject to the provisions of this section, any urban land owned by religious, charitable or philanthropic institutions recognised by either the Indian Income-tax Act, 1961 or Hindu Religious and Charitable Endowments Act and such religious, charitable or philanthropic institutions as the Government may, by notification specify".

THIRU S. NARAYANASWAMY: Sir, I second it.

(பிற்பகல் 5-20)

திரு. க. அறிவழகன்: பெரிய குடும்பங்களுக்காக முன்மொழியுங்கள்.

திரு. கே. எஸ். கணபதி: துணைத் தலைவரவர்களே, பெரிய குடும்பங்களுக்காக நான் பேசவில்லை. பொது மக்களின் நன்மைக்காகத் தான் பேசுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் திருத்தம் என்னவென்று புரிந்துகொள்ளாமல், இப்படிச் சொல்லுகிறார்களென்று எண்ணுகிறேன். அந்தத் திருத்தத்தின் தன்மையை உணர்ந்திருப்பார்களானால், அவர்களும் இதனை ஆதரிப்பார்களென்று நம்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: பெரிய குடும்பத்தில் அவரும் சேர்ந்துவிடுவார்.

திரு. கே. எஸ். கணபதி: ஒரு பள்ளியாக இருந்தாலும், மத ஸ்தாபனமாக இருந்தாலும் அல்லது ஒரு மருத்துவ நிலையமாக இருந்தாலும், அதைச் சுற்றியுள்ள நிலங்கள்—காலியாக உள்ள நிலங்களையும், அங்கு வருவாய் வரக்

கூடிய அளவிலே கடை கட்டி விட்டிருக்கிறார்கள் என்றால், அந்த மாதிரி நிலங்களையும் வரி விதிப்புக்குக் கொண்டுவரும் திட்டம் தவிர்க்கப்பட வேண்டும். அறநிலையங்களுக்கும், கோவில்களுக்கும், மருத்துவ நிலையங்களுக்கும் சொந்தமான நிலங்கள் அருகாமையிலேயே இருந்தால், அந்த நிலங்களுக்கு வரி விதிக்கக் கூடாதென்பது என்னுடைய வேண்டுகோள். ஏனென்றால் அந்தப் பள்ளியோ, மருத்துவ நிலையமோ, அறநிலையமோ நடைபெறுவதற்கு அந்த நிலங்களிலுள்ள கட்டிடங்களிலிருந்து வரும் வருமானம் பயன்படுமானால், அது வரி விதிப்பிற்கு உட்படுத்தப்படக்கூடாதென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அந்த வருமானத்தைத் தவிர வேறு எந்தவிதமான வருமானமும் இல்லாத நிலை கூட சில அற நிலையங்களுக்கும், பள்ளிகளுக்கும் உண்டு. அந்த நிலைமையிலே அந்த வருமானம் தவிர்க்கப்படக்கூடாது. அவர்கள், மேலும் தங்களுக்குக் கட்டிடம் கட்டுவதற்காக நிலம் தேவையென்பதால் வைத்திருக்கக்கூடும். அந்த நிலம் இந்த வரிக்கு உட்படுத்தப்படுமானால், அந்த நிலத்தின் மதிப்பையே வரியாகக் கட்டும் நிலைமை ஏற்படும். அதற்கு அருகாமையிலுள்ள நிலம், appurtenant என்பதே ஒரு 'vague term'. 6 அடி அளவைக்கூட appurtenant என்று சொல்லலாம்; 10 அடி நிலத்தைச் சொல்லலாம். அதற்கு வாய்ப்புக் கொடுக்காமல், பள்ளிகள், கல்லூரிகள், அறநிலையங்கள், மருத்துவ நிலையங்கள் ஆகியவற்றுக்குள்ள நிலங்களனைத்துக்கும் வரி விதிப்பிலிருந்து விதி விலக்கு அளிக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள். பள்ளிகள் என்பதற்கு எக்ஸ்ப்ளனேஷன் சொல்லும்போது, 'ரெகக்னைஸ்டு' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"Recognised by the Government or by the University"

என்றிருக்கிறது. அத்துடன் என்ன நான் சேர்த்துக்கொண்டுள்ளேன் என்றால்,

"and such of those schools or colleges which are educational institutions, the income from the urban land whether vacant or built upon being set apart or earmarked for educational activities"

என்பதுதான். அவர்கள் அந்த நிலங்களிலிருந்து வரக்கூடிய வருமானத்தை, அந்தக் கல்வி நிலையத்தினுடைய நலனுக்காக, முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்தினால், அவர்களுக்கும் இந்தச் சட்டத்தின்கீழ் வரி விதிப்பிலிருந்து விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* தவத்திரு குன்றக்குடி அடிகளார்: துணைத் தலைவரவர்களே, நகர்ப்புற நிலங்களுள், திருக்கோவில்களுக்குரிய இடங்களுக்கு வரி விதிப்பிலிருந்து விதி விலக்கு அளிக்க வேண்டுமென்ற திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்.



அதுவும் குறிப்பாக காலி நிலங்களுக்கு வரி விதிப்பதென்று சொன்னால், அதனால் பல இன்னல்கள் ஏற்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் குறிப்பிட்டதுபோன்று, பல பெரிய மனிதர்கள் தங்களுடைய வீட்டைச் சுற்றிலும் காலி இடங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் திருக்கோவில்கள் போன்றவைகளுக்குப் பழங்காலத்தில் கிடைத்த இடங்கள் அபிவிருத்தி செய்ய முடியாமல், காலி இடங்களாகவே இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்கள் எவ்வளவு இருக்கின்றன என்பதுபற்றிய புள்ளி விவரம் எனக்குக் காலையிலே கிடைத்தது. மயிலை, கபாலீஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமாக 200 கிரவுன்டுக்கும் மேலான காலி இடம் இருக்கின்றது. அவைகளுக்கெல்லாம் ஆயிரக் கணக்கில் வரி கட்ட வேண்டுமென்று சொன்னால், அந்த நிறுவனங்கள் பாதிக்கப்படும். அந்தக் கொள்கையைப் பொறுத்தவரையில், ஆட்சேபணை இல்லை. அரசு, அந்தத் திருக்கோவில்களின் நிலங்களைப் பொதுக் காரியங்களுக்காக மார்க்கெட் ரேட்டில் ஆர்ஜிதம் செய்து எடுத்துக்கொண்டால், ஆட்சேபணை இல்லை. அது போன்ற நிறுவனங்களை, உடனடியாக வரிகளைக் கட்டுமாறு நிர்பந்திப்பது, பெரிய விளைவுகளை உண்டாக்கும். அடுத்தாற்போல், மருத்துவ மனைகளுடன் உள்ள நர்சுகள் குடியிருப்பு போன்றவைகளுக்கு விதி விலக்கு அளித்திருப்பதுபோல், திருக்கோவில்களில் பணி புரிகின்ற குருக்கள், பணியாளர்கள் குடியிருக்கும் வீடுகளுக்கும் வருவாய் இல்லையென்று கருதி, விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறேன். பொதுவாக சமய நிறுவனங்கள், திருக்கோவில்கள் ஆகியவற்றின் நிலங்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

THIRU G. VASANTHA PAI: Sir, the land used as playground is deemed to be used for purposes directly connected with education. My submission is that even old people require playgrounds and recreational facilities and to cater to their needs, there are clubs and other social welfare institutions which provide such recreational facilities. In such clubs, they mingle together and this land is used for purposes of recreational facilities. Those lands are not productive and if they are taxed under this Bill, the clubs will only have to sell the lands to eke out their existence. I request the Hon. Minister to exempt these lands also, when they are used for recreational facilities by the members of the club and also by members of the public. The very purpose of my amendment is to bring home to the Hon. Minister that there are lungs in the City of Madras which provide the necessary recreational facilities to the people. People over the age of 40

[Thiru G. Vasantha Pai] [1975 நவம்பர் 11

or 45 play golf, people of the age of 40 and less play tennis and still younger people play cricket. This sort of recreation and games are absolutely necessary for the efficiency in the discharge of their duties. I request the Hon. Minister to consider this and exempt all lands which are used for recreational facilities.

Yesterday I was referring to a small club which charged the students and young men only Rs. 5 per month as subscription. There are only about 150 members for that club. They are all taking part in games and recreational facilities in the club. The area concerned was marked as a park in the Lay-out of the House Construction Society which was originally designed by Thiru Venkatakrishna Iyer. On one side of it, there is a tennis court and on the other side there is a cricket ground. The subscription is only Rs. 5 which is absolutely necessary for keeping the ground in order. Such a club will be forced to pay Rs. 6,000 as urban land tax under the present Bill. I was only referring to this as an instance and I am told there are a number of such clubs. Such clubs will have to sell their land for the purpose of paying urban land tax and what will happen is that the City will lose all the lung spaces now available and in that respect, this Bill will prove to be a draconian measure. I request the Hon. Minister kindly to consider this and exempt them from the urban land tax.

Thiru S. NARAYANASWAMY: Sir, one suggestion I want to make. I wonder whether it would be within the competence of the Government. I feel that the Government would be in a position to consider whether those religious and other cultural institutions which are given exemption from the Income-tax Act could not be exempted from the Urban Land Tax Act also. I think the State Government would be in a position to consider this suggestion. I happen to know the ruinous situation faced by the Cosmopolitan Club. Though I am not a member of the Committee. I was on the Building Committee. The Club is facing a financial crisis, unless the Club prefers to sell both its rear and the frontage and in that case, all the recreational facilities offered by the Club will disappear. Of course, we will have to live in some building whether there are amenities or not.

(பிற்பகல் 5-30)



1975 நவம்பர் 11] [Thiru G. Vasantha Pai]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதுபோன்ற சலுகைகளைக் கொடுப்பதிலே ஆட்சேபணையில்லை. சில குறிப்பிட்ட பகுதியினருக்கு நன்மை கிடைக்கும் என்ற முறையிலே கொடுப்பது நியாயம்தான். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், நீண்ட பரிசீலனைக்குப் பிறகுதான் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதற்கு மேல் சலுகை கொடுக்க முடியாது. திரு. வசந்த பாய் அவர்கள் விளையாடுகிற இடத்தைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். மாணவர்கள் பயன்படுத்துகின்ற இடம் என்று சொன்னார்கள். மாணவர்களிடம் ஒப்படைத்தால், வரி இல்லாமல் போய்விடும்.

THIRU G. VASANTHA PAI: Sir, it does not belong to the school. The young people in the Colony use it as cricket ground and all students of different colleges and schools use the place and we are running it for their benefit.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற இடத்துக்குப் பக்கத்திலே இருக்கின்ற இடத்தை எங்கள் மாணவர்களுக்குத் தாருங்கள் என்று கேட்கிறார்கள்.

* THIRU G. VASANTHA PAI: I am sorry, Sir. It will not be a socialistic move but a capitalistic one. A capitalistic institution is running a school for girls and that institution is trying to encroach upon our land to which I seriously objected. It is Rani Meyyammai School and it is trying to encroach on our land with a view to getting access to our land, they also cut down all the trees. I request the Hon. Minister not to take any action which would help that capitalist's institution. Our pavilion is named after Mahatma Gandhi and his wife Kasturi Pai Gandhi. It has been brought into existence by our endeavours from 1957 and I have toiled for it. We had unloaded about 4,000 tractor-loads of sand from Tiruvanmiyur area and filled the land and raised it to the present level. ...nvious eyes, particularly from the nearby institution, namely, Rani Meyyammai School, were being cast on us. I do not want this land to go to them and it will be an anti-social act if this land should be handed over to them.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்களுடைய உணர்ச்சி புரிகிறது. திரும்பத்திரும்ப அதையே கூறுகிறீர்களே.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பணக்காரர்களுக்கெல்லாம் இடம் கொடுக்காது இந்த அரசு நடக்க வேண்டும் என்று சொன்னதிலே எனக்கு ரொம்ப மகிழ்ச்சி. ஆனால்; அப்படிச் சொல்லும் போது, இன்னொருவருக்கு, பணக்காரருக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லக்கூடாது. பணக்காரருக்குக் கொடுக்கக்கூடாது என்ற கருத்தை நான் ஆதரிக்கின்றேன்.

* THIRU G. VASANTHA PAI: Sir, we are not letting out the land or the premises. We only get a sum of Rs. 10 to be given to the markers, because the cricket ground has to be made, the pitch has to be laid, the mat has to be put, the wicket has to be fixed and other connected matters or things have to be done by markers. We get another sum of Rs. 10 for watering the pitch and rooling it. Barring this sum of Rs. 20 per match, we are not collecting any money. Nor are we making any profit out of this. I can assure the Hon. Minister, since I am the Secretary from 1957, that we have used it only for the purpose of the residents of the colony because the place has been earmarked as a park and we have seen that nobody pays a subscription more than Rs. 5 or Rs. 4 per month.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாணவர்களுக்கும் பயன்படும் என்று அவர்களுடைய பேச்சிலே இருந்ததால், மாணவர்களுக்கு என்று இருந்தால் வரியில்லை என்று சொன்னேன். பொதுவாக அவர்கள் சொன்னது நியாயமானதுதான். சட்டப்படி ஸ்போர்ட்ஸ் கவுன்சில், அசோசியேஷன் என்று போட்டுவிட்டால், ஏராளமானவர்கள் சேர்ந்துகொண்டு விதிவிலக்குப் பெறுகின்ற ஒரு வாய்ப்பைப் பார்த்தேன். ஆகவேதான் விதிவிலக்கு கூடாது என்று முடிவெடுத்தோம். விளையாட்டுக்குப் பயன்படுகின்ற இடங்கள், "வேக்கன்ட் ஸ்பேசஸ்" என்று மட்டும் இருக்குமானால், அந்த அசோசியேஷன் மனு போடுமானால், அவர்கள் வரி கொடுப்பதற்கு அவர்களுக்கு வரக்கூடிய வருவாய் போதாமல் இருக்குமானால், பரிசீலிக்கலாம். இவற்றையெல்லாம் என் சொல்கிறேன் என்றால். அவர்கள் காஸ்மோபாலிட்டன் கிளப் என்ற பெயரைச் சேர்த்துக்கொண்டார்கள்.

THIRU G. VASANTHA PAI: The Cosmopolitan Club has no playground. Playgrounds belonging to the clubs which are vacant lands should be exempted.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஒவ்வொன்றுக்கும் திருப்பித்திருப்பிப் பேசக்கூடாது. கிளப் என்று சொன்னாலும், அதெல்லாம் வந்துவிடும், ஆகவே





தான் எந்தக் கிளப்-ஆக இருந்தாலும், விளையாட்டுக்கு என்று இருந்தால், அது பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதுதான் என்னுடைய கருத்து. கோயில்களைப் பொறுத்தவரையில், தெளிவாக விளக்கிக் கொடுத்திருக்கிறோம். கல்லூரிகள், மற்றும் பள்ளிகள் போல, கோயில்களிலும் அவர்களுடைய சொந்த வேலைகளைச் செய்வதற்கு விடு இருக்குமானால், அதற்கு வரி போடக்கூடாது என்பது நியாயம். அதைச் செய்யலாம். ஆனால் காலியிடங்களையெல்லாம் என்ன செய்வது என்று கேள்வி கேட்டு, அடிகளார் அவர்களே பதிலும் சொன்னார்கள். நீங்களே நிலங்களை எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். சட்டம் போட்டவுடனே, அவர்கள் அந்த நிலங்கள் பற்றிய கணக்கைக் கொடுத்தால், அரசாங்கமே அவற்றை எற்றுக்கொண்டு நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தலாம். அவற்றின் விலையைப்பற்றி அவர்கள் கவலைப்பட மாட்டார்கள் என்று நினைக்கின்றேன். ஏனென்றால் பொது நன்மைக்காக . . . .

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் பேசும்போது தற்காப்பு நோக்கத்தோடு மார்க்கெட் ரேட்-க்கு என்றுதான் குறிப்பிட்டேன். என்னுடையதென்றால், தருவதற்கு நான் கவலைப்படவில்லை. இந்த நிலங்கள் பல நிறுவனங்களுக்குச் சொந்தமாக இருக்கின்றன. ஆகவே, சந்தை விலைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சந்தை விலைக்கு என்று சொல்கிறார்கள். இந்த நாடு கெட்டதற்கே இதுதான் காரணம். கோயில்களில் இருக்கின்ற காலி நிலங்களை எடுத்துக்கொள்ளலாம் என்ற நல்ல யோசனையாக இருப்பதனால், அதை அரசாங்கம் பரிசீலிக்கும். ஆனால் வரிவிலக்குக் கொடுக்க முடியாது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதுபோன்று விலக்குக் கொடுக்க ஆரம்பித்தால், அது பரவிக்கொண்டு போகும். ஆகவே ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளே இருந்தால்தான் நல்லது என்பதால் 29 ஆம் பிரிவுக்கு இந்த விளக்கம் கொடுத்திருக்கிறோம். மோசமான நிலை ஏதேனும் வருமானால், அதைப் பரிசீலிக்க 22-வது அதிகாரம் வைத்திருக்கிறோம். ஆகவே, பொதுவாக மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய அமைப்புகளுக்கு அதிகமான வரி விதிக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கணபதியின் பரிந்துரைகள், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டன.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்:** இன்னும் ஏராளமான சந்தேகங்கள் இருக்கின்றன; நான் வற்புறுத்துகிறேன்.

*1975 நவம்பர் 11]*

*மாண்புமிகு திரு. செ. மாதவன்: வற்புறுத்துவதிலே பலன் இல்லாமல் போய்விடும்.*

*தவத்திரு குன்றக்குடி அடிகளார்: அறநிலையங்கள், திருக்கோயில்கள் வசம் இருக்கும் நிலங்களுக்கு நியாயமான உத்தரவாதங்கள் கொடுத்திருப்பதனால், பரிந்துரையைத் திரும்பப்பெறுகிறேன்.*

*தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் பரிந்துரை, அவையின் அனுமதியுடன், திரும்பப்பெறப்பட்டது.*

THIRU G. VASANTHA PAI: Sir, in view of the statement of the Hon. Minister that in places where the lands are used for playgrounds and used for the benefit of the public and the members of the club, the exemption will be considered by the Government, I withdraw my recommendation.

*திரு. வசந்த பாய் அவர்களுடைய பரிந்துரை, அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.*

*பிரிவு 15.*

THIRU K. S. GANAPATHI: Sir, I move the following recommendation:

"That this House recommends that in clause 15 for the proposed schedule, the following may be substituted:

"A. URBAN LAND IN ANY URBAN AREA IN WHICH THIS ACT IS IN FORCE (OTHER THAN THE MADRAS CITY BELT AREA)

| *Extent of urban land* (1) | *Rate of tax* (2) |
| --- | --- |
| Where the aggregate extent of urban land held by the owner in the urban area : | |
| (i) is two grounds or less | Nil |



*1975 நவம்பர் 11]* [Thiru K. S. Ganapathi]

| *Extent of urban land* (1) | *Rate of tax* (2) |
| --- | --- |
| (ii) exceeds two grounds but does not exceed five grounds | 0.7 per centum of the market value on the extent in excess of two grounds which have the lowest market value. |
| (iii) exceeds five grounds but does not exceed 10 grounds | 0.8 per centum of the market value on the extent in excess of two grounds which have the lowest market value. |
| (iv) exceeds 10 grounds | 1.0 per centum of the market value on the extent in excess of two grounds which have the lowest market value. |

*B. Urban land in the Madras Bity Celt Area*

PART II

Urban land which is vacant or is used for residential or non-residential purposes

| *Extent of urban land* | *Rate of tax* |
| --- | --- |
| Where the extent aggregate of urban land held by the owner in the urban area— | |
| (i) is three grounds or less | Nil |
| (ii) exceeds three grounds but does not exceed seven grounds | 0.4 per centum of the market value on the extent in excess of three grounds which have the lowest market value. |
| (iii) exceeds 7 grounds but does not exceed 10 grounds | 0.5 per centum of the market value on the extent in excess of three grounds which have the lowest market value. |
| (iv) exceeds 10 grounds | 0.6 per centum of the market value on the extent in excess of three grounds which have the lowest market . value." |

1975 நவம்பர் 11]

(பிற்பகல் 5.40)

**திரு. கே. எஸ். கணபதி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இதிலே நான்கு பிரிவுகளாகப் போட்டிருக்கிறார்கள். அதிலே சென்னை நகரத்துக்கு பார்ட் 1, 2, 3, 4 என்று இருக்கிறது. ரெசிடன்சியல் பர்பசுக்கு, நான்-ரெசிடன்சியல் பர்பசுக்கு என்று போட்டிருக்கிறது. பெல்ட் ஏரியாவில் ரெசிடன்சியல், நான்-ரெசிடன்சியல் என்று இரண்டு விதமாகக் கூறியிருக்கிறார்கள். நான் நேற்றே கூறினேன். அரசு சட்டத்திலே நான்-ரெசிடன்சியல் இடத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிலத்திற்கு 6 சதம் அளவுக்கு வரி போடப்பட்டிருக்கிறது. அது 2.5 சதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையிலேகூட நான்-ரெசிடன்சியல் பர்பசுக்கு, half the amount எக்சம்சன் என்று சொல்லியிருக்கிறார்கள். 2 கிரவுண்டிலிருந்து 5 கிரவுண்ட் என்றால், 5 சதவிகிதம் வரி விதிப்பு இருக்கிறது. நான் இந்த அவையிலே நேற்று கூறியதுபோல, திருச்சி, சென்னை போன்ற நகரங்களுக்கு வெளியிலே சுற்றியுள்ள பகுதிகளில், 10 மைல்கள், 15 மைல்களுக்கப்பால் அவர்கள் 15 கிரவுண்ட், 20 கிரவுண்ட் என்று நிலத்தை வாங்கி வைத்திருக்கிறார்கள். அவர்கள் அதில் தொழில் நடத்துவதற்காக, தொழிலை விரிவுபடுத்த வேண்டும் என்பதற்காக, ஏற்கெனவே நிலத்தைக் குறைந்த விலைக்கு வாங்கி வைத்திருக்கின்றார்கள். நான் கூறியது போல, இந்த நிலத்தை மதிப்பு கூறுவதானால், அந்த நிலத்தை விற்கிறவர்களுக்கு எந்தவிதமான லாபமும் ஏற்படாது. அவர்கள் அந்த நிலத்தைத் தனியாக விற்பனை செய்தால், அதற்கு அவர்களுக்கு அதிக வரி விதிப்பு இருக்கக்கூடாது என்ற அடிப்படையில், குடியிருப்புகளுக்கு என்ன வரி விதிப்பு இருக்கிறதோ, அதே வரிவிதிப்பு இருக்க வேண்டும் என்றுதான் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இரண்டாவது திருத்தமாக இந்த பெல்ட் ஏரியா என்று சொல்வதிலே, அவர்களுக்கு வரி விதிப்பு மிகமிக அதிகமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பெல்ட் ஏரியாவிற்கு நகர்ப்புறத்திலே என்ன வரி விதிக்கப்படுகிறதோ அதிலே 50 சதம் வரி குறைக்கப்பட்டால், நியாயமாக இருக்கும் என்ற அடிப்படையிலே முன்னுள்ள சட்டத்திலே அதற்கு பாதி குறைத்து திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** 12-வது பிரிவுக்கான பரிந்துரை திரும்பப் பெறப்பட்டுவிட்டது. ஆகையால் திரு. வசந்த பாய் அவர்கள் 15-வது பிரிவுக்குக் கொடுத்துள்ள பரிந்துரை முறையானதாக இல்லை என்று கருதுகிறேன்.



1975 நவம்பர் 11]

**THIRU G. VASANTHA PAI:** Sir, it has been wrongly put. Item (2) should have been at the bottom. I support the amendment which has been proposed by Thiru Ganapathi. I request that the whole extent should be exempted and only on the extent in excess of the limit should the tax be levied. That is my request.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஏற்கெனவே 6 சதவிகிதத்திலிருந்து 2½ சதவிகிதத்திற்குக் குறைந்திருப்பதைக் குறித்து திரு. கணபதி அவர்கள் பாராட்டினார்கள். அதிலே திரு. வசந்த பாய் அவர்களும் சேர்ந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். கணபதி:** எக்சம்ஷனைப் பொறுத்தவரையில், 5 கிரவுண்டுக்கு மேலாக என்று சொல்லும்போது, இந்த 2 கிரவுண்டுக்கும் சேர்த்துத்தான் வரி விதிக்கப்படுகிறது. வரிவிதிப்பதிலிருந்து அந்த 2 கிரவுண்ட்டுக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** 5 கிரவுண்ட்டுக்கு மேலே நிலம் வைத்திருப்பவர்கள் எண்ணிக்கை ரொம்பக் குறைவாக இருப்பதால், அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**THIRU G. VASANTHA PAI:** Sir, the point is this. Over 5 grounds Government are taxing the whole extent—even the 2 grounds which is exempt for others. Naturally, the persons who have got 6 grounds are at a disadvantage. For example, the members of the Gandhi Nagar Society originally had 6 grounds or 6½ grounds because the co-operative society insisted on people taking 6 grounds. So, several persons who have 6 grounds lose the benefit of the exemption of even 2 grounds. It is not fair to them. They have taken the plots on the insistence of the Government as well as the society. So, I request the Hon. Minister to examine this and give total exemption for 2 grounds.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் பரிந்துரையை வலியுறுத்துகிறார்களா?

**திரு. கே. எஸ். கணபதி:** வலியுறுத்தவில்லை.

பரிந்துரை, அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

(பரிந்துரை ஏதும் இல்லை.)

[1975 நவம்பர் 11

மாண்புமிகு திரு. செ. மாதவன்: துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1975) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1975) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1975).

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிந்துரை எதுமில்லை.

@ 468 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1975 நவம்பர் 11]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த, சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1975) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு. பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1975) திருப்பியனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1975)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

@ 469-471 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1975 நவம்பர் 11

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2 அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1975) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1975) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 5-50)

**(4) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 60/1974)**

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 60/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

இச்சட்ட வரைவை முன் மொழிகையில், தமிழ் நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 53/1961) சில விதித்துறைகள் செயல்படுத்தப்பட்டபோது நடைமுறையில் காணப்பட்ட சில

@ 472-475 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1975 நவம்பர் 11] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

இடர்பாடுகள் காரணமாக, அச்சட்டத்தின் சில பிரிவுகளைத் திருத்த இச்சட்ட வரைவு விழைகிறது என்பதைக் கூற விரும்புகிறேன். மேற்சொன்ன சட்டத்தின் 18-வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகவின்மைகளுக்கு கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர் ஒருவர் உட்பட்டவராக இருந்தாரா அல்லது உட்பட்டவராகிறாரா என்பதை முடிவு செய்வதற்கான விதித்துறை எதும் அச்சட்டத்தின் மேற்சொன்ன பிரிவில் இல்லை. எனவே, 28-வது பிரிவைச் சேர்ந்த (6) உட்பிரிவில் அடங்கியுள்ள விதித்துறையையொட்டி கூட்டுறவுச் சங்க உறுப்பினராவதில் உள்ள தகவின்மையை முடிவு செய்வதற்கான அதிகாரத்தைக் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கு அளிப்பது அவசியமானதாகும் என்று கருதப்பட்டுள்ளது. கூட்டுறவு வளர்ச்சி நிதி, கூட்டுறவுக் கல்வி நிதி ஆகியவற்றிற்கான நிதி ஒதுக்கத்தை, சங்கத்தின் பொதுக் குழு நிதி ஒதுக்கம் செய்ய வேண்டும் என்பதற்காகக் காத்திராமல், தணிக்கைச் சான்றிதழை பதிவாளர் வழங்கியதற்குப் பிறகு, சங்கத்தின் நிகர ஆதாயங்களிலிருந்து நேரடியாக ஒதுக்கி வைக்க வேண்டும் என்றும் கருதப்பட்டுள்ளது. மேற்சொன்ன சட்டத்தின் 27-வது பிரிவைச் சேர்ந்த (3) உட் பிரிவின் (a) பகுதியின் வரம்பு நிபந்தனையின் கீழ், குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் ஓராண்டுக்கொருமுறை பதவியிலிருந்து ஓய்வு பெற வேண்டும். சங்கத்தின் உறுப்பினர்கள் ஆண்டுதோறும் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதால் குழு நிர்வாகத்தில் அடிக்கடி மாற்றங்கள் ஏற்பட வழி ஏற்படுவதோடு, குழு பயன் தரத்தக்க பணி எதுவும் தொடர்ந்து செய்வதற்கு இடையூறு ஏற்படுகிறது. எனவே, குழுவின் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் ஓராண்டுக்கொருமுறை பதவியிலிருந்து ஓய்வு பெறுதல், அதுபோன்று அவர்கள் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படக்கூடிய பதவிக் காலியிடங்களை நிரப்புவதற்காகத் தேர்தல் நடத்துதல் ஆகிய இந்த முறையைக் கைவிடுவது என்றும் குழுவின் உறுப்பினர்கள் அனைவரையும் தேர்ந்தெடுக்க மூன்றுண்டுக்கொருமுறை தேர்தல் நடத்துவதற்காக விதித்துறை இயற்றப்படலாம் என்றும் கருதப்பட்டுள்ளது. சங்கம் ஒன்றின் புத்தகங்களைக் கைப்பற்றிய விசாரணை அதிகாரி, அப்புத்தகங்களை, அவருக்கு மேலுள்ள உயர் அதிகாரியின் அனுமதியைப் பெறுமல் அறுபது நாட்களுக்கு மேல் வைத்திருக்கக் கூடாது என்பதற்கு இச்சட்டத்தில் 65-வது பிரிவைச் சேர்ந்த (2) உட் பிரிவின் (b) பகுதியின் இரண்டாவது வரம்பு நிபந்தனை வகை செய்கிறது. பொதுவாக, விரிவான ஆய்விற்குப் பிறகு 65-வது பிரிவின் கீழ் விசாரணை நடத்தி முடிப்பதற்கு விசாரணை அதிகாரிக்கு ஆறு மாதங்களுக்கு மேல் ஆகிறது. காவல் துறையினரிடம் குற்றப் புகார் கொடுத்துள்ள வழக்குகளில் விசாரணை அதிகாரி, அந்தப் பதிவேடுகள் பிறரால் திருத்தம் செய்யப்படாமல் இருப்பதற்காக அப்

பதிவேடுகளை ஆறு திங்களுக்கு மேல் வைத்திருக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே, விசாரணை அதிகாரி, தனக்கு மேல் உள்ள அதிகாரி யின் அனுமதியைப் பெறுமல் அப்பதிவேடுகளை ஆறு திங்கள் கால அளவிற்கு வைத்திருக்கும் வண்ணம் அக்கால அளவை அதிகப்படுத்துவது என்று கருதப் பட்டுள்ளது. மேற்சொன்ன சட்டத்தின் 71-வது பிரிவு (1) உட் பிரிவின் முதல் வரம்பு நிபந்தனையில் வரும் " நடத்தக் கூடாது " என்னும் சொல்லுக்குப் பதி லாக " தொடங்கக் கூடாது " என்னும் சொல்லை அமைத்துக்கொள்வதென்றும் கருதப்பட்டுள்ளது. இவ்விதித்துறை மேலும் தெளிவாகவும் குறிப்பாகவும் அமைய வேண்டுமென்ற நோக்குடன் இத்திருத்தம் செய்யப்படுகிறது. குழுவை மீண்டும் அமைக்க நேரிடும்போது அல்லது ரத்து செய்யப்படும்போது அல்லது சங்கத்தைக் கலைக்க நேரிடும்போது மேற்படி சங்கத்தின் பதிவேடுகள், சொத் துக்கள் இவற்றின் சுவாதீன ஒப்படைப்பைப் பெறுவதற்கான நடைமுறையை இச்சட்டத்தின் 107-வது பிரிவைச் சேர்ந்த (1) உட் பிரிவு வரையறுக்கிறது. ஒரு சங்கத்தின் நியமனக் குழு ஒன்றிற்குப் பதிலாக மற்றொரு நியமனக் குழு அமைக்கப்படும்போது, அச்சங்கத்தின் பதிவேடுகள், சொத்துக்கள் இவற்றின் சுவாதீன ஒப்படைப்பை பெறுவதற்கான நடைமுறையை மேற்சொன்ன உட் பிரிவு தெளிவாக்கவில்லை. மேற்சொன்ன உத்தேசக் கருத்தைத் தெளிவாக்கு வதற்காக இச்சட்டத்தின் 107-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவைத் திருத்த வேண்டுமெனக் கருதப்படுகிறது. இச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதி களிலிருந்து விலக்கு பெறுவதற்காக, அல்லது இவ்விதிகளைத் திருத்த முடிவில் பொருந்தச் செய்வதற்காக வகை செய்து இந்த ஆணைகளை கடந்த ஒரு தேதி யிலிருந்து செயலுக்குக் கொண்டுவர மேற்படி சட்டத்தின் 111-வது பிரிவையும் திருத்தக் கருதியுள்ளது. மேற்சொன்ன கருத்துக்களுக்குச் செயல் வடிவம் கொடுக்கவே இச்சட்ட வரைவு விழைகிறது. இப்பிரேரணையை ஏற்குமாறு இம் மேலவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன் மொழியப்பட்ட தீர்மானம் :

" சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 60/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

* தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ் நாடு கூட்டுறவு சங்கங்கள் திருத்தச் சட்டத்தை மிக மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். அது தொடர்பாக சில வார்த்தைகளை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள்





ஆண்டுதோறும் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதால், குழு நிர்வாகத்தில் அடிக்கடி மாற்றங்கள் ஏற்பட்டு, குழு பயன்தரத்தக்க பணி எதையும் செய்வ தற்கு இடையூறாக இருந்தது. அதை இந்தச் சட்டத்தின் வாயிலாக மாற்றிய தற்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை நான் வர வேற்கிறேன். கூட்டுறவுத் துறையிலிருந்து ஆண்டுதோறும் கல்விக்கு என்று பணம் எடுக்கிறார்கள். அது எப்படி செலவழிக்கப்படுகிறது என்ற விவரம் தெரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது. அந்த நிதி சரியான முறையில் செல வழிக்கப்பட வேண்டும். இப்பொழுது 'கூட்டுறவு' என்ற பத்திரிகையை மட்டும் நடத்துகிறார்கள். கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றுபவர்களுக்கென்று முன்பு ஒரு வாரம், 10 நாட்களுக்கு வகுப்புகள் நடத்தப்பட்டு வந்தன. இப்பொழுது அது நடத்தப்படவில்லை. நம்முடைய மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர்கள் 10 ஆண்டு, 12 ஆண்டுகளுக்கு உறுப்பினர்களாக இருந்திருந்தால், அவர்களுக்கு ஓய்வூதியம் தரப்படும் என்ற ஒரு சட்டத்தை நாம் இயற்றியிருக்கிறோம். கிராமப்புறங்களில் இருக்கும் கூட்டுறவுச் சங்கங்களில் இயக்குநர்களாக, டைரக்டர்களாக இருந்து, அது லாபகரமாக நடப்பதற்காக உழைத்துப் பாடுபடும் இயக்குநர்களுக்கும் அதிலிருந்து கிடைக்கும் லாபத்திலிருந்து இதுபோன்ற ஒரு முறையை ஏற்படுத்திக் கொடுக்கும்படி நான் அன்புகூர்ந்து விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்குக் கீழே முழு நேர ஊழியர்களாக இருக்கின்ற ஊழியர்களுக்கும் எந்தவிதமான வாய்ப்பும் இல்லை. சிறப்பான முறையில், ஒழுங்கான முறையில் சங்கத்தை நிர்வகித்து லாபத்தை சம்பாதித்துக் கொடுக்கும் வகையில் கூட்டுறவுச் சங்கத்திலே பணியாற்றும் ஊழியர்களுக்கு லாபத்தில் ஒரு சதவிகிதம் அல்லது ½ சதவிகிதம் ஊக்க ஊதியமாக வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இங்கு நடக்கும் வினாக்கள்-விடைகள் நேரத்தின்போதுகூட, கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறும் ஒழுங் கீனங்கள்பற்றி எழுப்பப்படும் வினாக்களையும் அதற்கு மாண்புமிகு அமைச்சரால் கூறப்படும் விடைகளையும் கேட்டுக்கொண்டிருந்தோம். ஒன்றியங்களில் இருப் பவர்களும் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் போக வேண்டுமென்ற வழி முறைகளை யெல்லாம் மேலும் வற்புறுத்தி நாடு சமுதாய மறுமலர்ச்சியும், பொருளாதார மறுமலர்ச்சியும் அடைய வழி வகுத்திருக்கிறோம். நாட்டில் சமுதாய மறு மலர்ச்சியும், பொருளாதார மறுமலர்ச்சியும் ஏற்பட அதற்குரிய வேகத்தையும் வளர்ச்சியையும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கொடுக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். கல்வி விஸ்தரிப்பு போன்றவைகளில் கூட்டுறவுச் சங்கங்களைப்பற்றி உறுப்பினர்கள் தெரிந்துகொள்ளாமல் சிரமப் படுகிறார்கள். கிராமங்களில் இருப்பவர்களுக்கு சட்டங்களைப்பற்றித் தெரி யாது. ஆகவே அவர்களுக்கு திட்டமிட்டு பயிற்சி கொடுக்க வேண்டும். ஊழி

யர்களுக்கு லாபத்தில் பங்கு தர வேண்டும். இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தச் சட்ட முன்வடிவை மன நிறைவுடன் நான் ஆதரிக்கும் அதே நேரத்தில் நான் சொல்லிய பரிந்துரைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அன்புகூர்ந்து விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** மாண்புமிகு துணைத் தலைவ ரவர்களே, மாணபுமிகு உறுப்பினர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் பேசும்பொழுது, கூட்டுறவு நிதியிலிருந்து கல்விக்கு எடுக்கப்படும் நிதி எப்படி யெல்லாம் செலவழிக்கப்படுகின்றது என்ற விவரம் தெரியவில்லை என்று சொன் ஞர்கள். அந்த நிதியானது மிக நல்ல முறையில் செலவழிக்கப்படுகிறது என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கல்விக் காக என்று ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகையில் இப்பொழுது கிட்டத்தட்ட ஒரு பயிற்சிப் பள்ளி உட்பட 6 அல்லது 7 பள்ளிகள் நடத்தப்படுகின்றன. அதற் காக அந்தப் பணம் செலவழிக்கப்படுகிறது. இதிலிருந்து எடுக்கப்பட்ட பணத்தைக் கொண்டு ஒரு கல்லூரி சென்னையிலே நடைபெற்றுக்கொண்டிருக் கிறது. இவைகளுக்கான நிதியை கல்வி நிதியிலிருந்து எடுத்துக்கொள்கின் றோம். இந்தக் கல்லூரிக்கு 4½ லட்சம் ரூபாய் ஒதுக்கியும்கூட, அதற்கு என்று இருககும் இடம் போதுமானதாக இல்லை. மேலும் பணம் செலவு செய்து, அதற்கு வேண்டிய வழிவகைகளை எல்லாம் செய்து, இடத்தை விஸ்த ரிக்க வேண்டியிருக்கிறது. மாவட்டங்களில் இருக்கிற ஏழு பள்ளிகளுக்கும் ஏற்படுகின்ற செலவினங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இன்னும் வளர்ச்சித் துறையில் செய்ய வேண்டிய காரியங்களையெல்லாம் செய்து வருகின் றோம். மேலும் விஸ்தரிக்க வேண்டியிருக்கிறது. கிராமப்புறங்களில் இருக் கின்ற கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கின்றவர்களுக்கு கூட்டுறவுத் துறையில் அனுபவம் போதாது என்று சொல்கிறார்கள். புதிய முறைகளில் பயிற்சியளிக்க என்னென்ன யோசனை செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்யலாம். இந்தக் கூட்டுறவுத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் இயக்குநர்களாகப் பணியாற்றுகின்றவர்களுக்கு ஊதியமாகவோ, 'ஆனரேரியமாகவோ' ஏதாவது வழங்க வேண்டுமென்று நான் கொடுத்துள்ள திருத்தத்தின் மேல் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அபிப் பிராயம் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** மாண்புமிகு உறுப்பினர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் சொல்லியுள்ள யோசனை நல்ல யோசனைதான். கூட்டுறவுச் சங்கங்களை நல்ல முறையில் நடத்தி லாபத்தை நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். லாபம் வரக்கூடிய சூழ்நிலை விரைவில் உருவானால், அவ்வாறு நிச்சயமாகக் கொடுப்பதற்கான ஒரு வாய்ப்பு இருக் கிறது. என்னுடைய சொந்த ஊரான மன்னார்குடியில்கூட ஒரு கூட்டுறவு ஆலையை ஏற்படுத்தியிருக்கிறோம். அங்கு பணியாற்றிக் கொண்டிருக்கும் அதிகாரிகளிடமும், ஊழியர்களிடமும் நல்ல முறையில் பணியாற்றி அதிகமாக லாபத்தை ஏற்படுத்திக் கொடுத்தால், 'டிவிடெண்ட்' அதாவது லாபத்தில் பங்கு தருவோம் என்று சொல்லியிருக்கிறோம். அதில் லாபம் கிடைக்கும் அளவுக்கு அதிகாரிகளும் ஊழியர்களும் ஒத்துழைத்து வருகிறார்கள். லாபம் கிடைக்கும் அளவுக்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். சூப்பர் மார்க்கெட்டு களையெல்லாம் இப்பொழுது ஏற்படுத்திக் கொண்டு வருகிறோம். டைரக்டர் களுக்கு ஊதியமாகவோ, 'ஆனரேரியமாகவோ' ஏதாவது வழங்க வேண்டு மென்று மாண்புமிகு உறுப்பினர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் குறிப்பிட்டார்கள். பொது வாழ்வில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்களைத் தான் நாம் இயக்குநர்களாகப் போடுகிறோம். மாநில அளவில், மாவட்ட அளவில் கூட்டங்கள் நடக்கும்போது, நாம் அவர்களுக்கு டி.ஏ. வழங்குகிறோம். கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டங்கள் நடைபெறும் காலங்களில் அதில் கலந்துகொள்ள வரும் இயக்குநர்களுக்கு டி.ஏ. வழங்குவது கிடையாது. அவர் களுக்கும் வழங்கக்கூடிய நிலைமை வரக்கூடாது என்பது என்னுடைய அபிப் பிராயம். இந்தக் கருத்தை மாண்புமிகு அடிகளார் அவர்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். இப்பொழுதே நாம் கூட்டுறவுச் சங்கங்களை 'நோ ப்ராபிட்—நோ லாஸ்' என்ற அளவுக்குத்தான் நடத்திக்கொண்டு வருகிறோம். கூட்டுறவுச் சங்கங்களில் மிகக் குறைந்த வட்டி விகிதம்தான் அமுலில் இருக்கிறது லேவாதேவிக்காரர்களைவிடக் குறைவாக நாம் வட்டி விகிதத்தை விதித்திருக்கிறோம். பொருள்களின் விலைகூட வெளியில் உள்ள விலையைவிட கூட்டுறவுச் சங்கங்களில் குறைவாகத்தான் இருக்கிறது. பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்கள் கவுரவமான முறையில் இருப்பவர்கள், மக்களால் மதிக்கப்படுபவர்கள். அவர்களும் கவுரவமாக மக்களுக்குத் தொண்டாற்றுவ தற்கென்றே முன் வந்திருப்பவர்கள். அப்படிப்பட்டவர்கள் இந்த இயக்குநர் பதவிகளில் எத்தகைய பலனையும் எதிர்பாராமல் பணியாற்றி வருகிறார்கள். இத்தகைய வாய்ப்பு மாண்புமிகு உறுப்பினர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களுக்கும் இருக்கிறது. அவர்களும் அதை நல்ல முறையில் பயன்படுத்தி, அதன் மூலம் மக்களுக்குத் தொண்டாற்றக்கூடிய ஒரு வாய்ப்பைப் பெற்றிருக்

கிறார்கள். அதை அவர்கள் பயன்படுத்துவார்கள் என்று நம்புகிறேன். எதையும் சினிமா கொட்டகை மாதிரி ஆக்கக்கூடாது.

(பிற்பகல் 6-00)

ஆகவே இங்கேயும் இதை சினிமா கொட்டகையாக ஆக்கிவிடாமல் உள்ளபடியே, இது பொது மக்களுக்குப் பயன்தரக்கூடிய அளவிலே, இதிலே வருகிறவர்கள் எல்லாம் இருக்க வேண்டும். விகிதாசாரப்படி லாப நஷ்டக் கணக்குப் பார்த்துக் கொடுக்க வேண்டும் என்று சொல்வது எல்லாம் அவ்வளவு நல்லதாக எனக்குப் படவில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வழக்கம்போல அமைச்சர் அவர்கள் மிகுந்த சாமர்த்தியமாக எனக்குப் பதில் சொன்னார்கள். அதற்கு என்னுடைய நன்றி. சட்ட மன்ற மேலவைக்கும், பேரவைக்கும் வந்திருப்பவர்களுக்கு ஓய்வூதியம் தரும் வகையிலே சட்டம் செய்திருக்கிறோம். கிராமப்புறங்களில் இருப்பவர்களுக்கு, அதுவும் அந்தக் கூட்டுறவு இயக்கங்களில் லாபம் வரக்கூடிய நிலை இருந்தால், அவர்களுக்கு 'ஆனரேரியம்' என்ற முறையிலே கொடுக்க வேண்டும். அவர்களுக்கு வருடத்திலே மரியாதை என்ற முறையிலே கொடுக்க வேண்டுமென்றால், அந்த இயக்கத்தால் முடியாது. அதுவும் வெளியில் இருப்பவர்கள்தான் கொடுக்க வேண்டும். நாம் ஆண்டுதோறும் சட்ட சபை கூடும்போதெல்லாம் ஏதாவது ஒரு வகையிலே நூறு ரூபாய், 200 ரூபாய் என்று உயர்த்திக் கொண்டே போகிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'புண்ணியம்' கிண்ணியம்' என்று எல்லாம் சொன்னார்கள். அவ்வாறு எல்லாம் சொல்லாமல் இதை மரியாதை என்ற அளவிலே அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். கூட்டுறவு இயக்கங்களிலிருந்து கொடுக்க முடியாது என்றால், வேறு சில பேர் கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்போது முழு நேர ஊழியர்கள் கிடைப்பதில்லை. இதை அன்புகூர்ந்து அரசு பரிசீலனை செய்ய வேண்டும். அப்படி முழுநேர ஊழியம் செய்வதற்கு கூட்டுறவுச் சங்கத்திலிருந்து லாபம் வந்தால், அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். இதன் பிறகு அமைப்புகள், முறைகள் எப்படி வந்தாலும், வரலாம். ஆக, அமைச்சர் அவர்கள் அன்புகூர்ந்து இதற்குச் சரியான பரிகாரம் காண வேண்டுமென்று மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** சட்ட மன்ற உறுப்பினர்களைப் பற்றி இங்கே சொல்வது அவ்வளவு சரியானது என்று எனக்குத் தோன்றவில்லை. சட்ட மன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. நாம்



இப்பொழுது சம்பளம் பெறுவதில் எவ்வளவோ மாற்றம் செய்து, இப்பொழுது 350 ரூபாய்தான் வாங்கிக்கொண்டிருக்கிறோம். சம்பளம் வாங்குபவர்களுக்குத்தான் அவர்கள் ரிட்டயர் ஆன பிறகு ஊதியம் கொடுக்க வேண்டுமே தவிர, இந்த கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் பதவிக்காக ஐயாயிரம் ரூபாய் வரையில் தாங்களாகவே செலவு செய்து வரக்கூடிய நிலையில் இருப்பவர்களுக்கு, கொடுக்க வேண்டும் என்று சொல்வது சரியானதாக எனக்குப் படவில்லை. பொதுஜன சேவைக்கென்றே அவர்கள் வருகிறார்கள். மேலும் அவர்கள் மக்களுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொண்டுதான் அங்கு வருகிறார்கள். சில நேரங்களில் பதவிக்காக தங்கள் கையிலிருந்தே ஆயிரக்கணக்கில் செலவு செய்கிறார்கள். இதுவெல்லாம் தவத்திரு அடிகளார் அவர்களுக்குத் தெரியும். அவர்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. 5 ஆயிரம் ரூபாய் வரையில் செலவு செய்து பிரசிடெண்ட்டாக வரத் தயாராக இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் ஏதாவது கொடுக்க வேண்டுமென்றால், ஜெனரல் பாடி மீட்டிங் கூட்டும் போது ஏதாவது ஒரு ஸ்வீட், காரம், காபி கொடுக்கலாம். (சிரிப்பு) ஒவ்வொரு மீட்டிங் கூட்டும்போதும், இவ்வாறு கொடுக்கிறார்கள். மேலும் 'நான்-அபிசியல்' என்று இருப்பவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல, அவர்களுக்கு வேண்டிய வசதிகளை அவர்களே சங்கத்தின் மூலமாகச் செய்து கொடுக்கிறார்கள். சேவை மனப்பான்மையுடன் அங்கு ஊழியம் செய்கிறவர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டும் என்பது அவ்வளவு திருப்திகரமாக எனக்குப்படவில்லை. ஏதோ நான் வேடிக்கையாகப் பேசி உங்கள் கருத்தையெல்லாம் மாற்றிவிட வேண்டும் என்று இதைச் சொல்லவில்லை. தமிழ் நாட்டில் கிட்டத்தட்ட 20 ஆயிரம் சொசைட்டிகள் இருக்கின்றன. அவைகள் கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகளுக்காக பாடுபட்டுக்கொண்டிருக்கின்றன. இதில் லாப நஷ்டக் கணக்கு கிடையாது. சில சொஸைட்டிகளிலே நஷ்டம் வந்தாலும், அவைகளைத் தொடர்ந்து நடத்தும்படி கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஏனென்றால் சில இடங்களில் மக்களுக்காக மண்ணெண்ணெய், ஜீனி முதலான பொருள்கள் வினியோகிக்கப்படுகின்றன. அவைகளில் நஷ்டம் வருகின்றது. அந்த சொஸைட்டியில் உள்ளவர்கள்கூட நஷ்டத்திலே நடத்துவதற்கு மறுக்கிறார்கள். ஆனால் அது மக்களுக்காகப் பயன்பட வேண்டும் என்ற எண்ணத்திலேதான் நாம் நடத்தச் சொல்லியிருக்கிறோம். இதிலே லாப நஷ்டக் கணக்கு கிடையாது. 'நோ பிராபிட்—நோ லாஸ்' என்ற அளவிலேதான் நடத்திக் கொண்டிருக்கிறோம். எங்காவது ஒன்றிரண்டு இடங்களிலே லாபம் வந்துவிட்டால், அவற்றைப் பங்கு போடுவதற்குரிய உரிமையை நாம் இப்போது கொடுக்க வேண்டாமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்திலே உள்ள சந்திர சேகரபுரம் கூட்டுறவு சொஸைட்டியிலே தீபாவளிக்காக கிட்டத்தட்ட 75 லட்சம் ரூபாய்க்கு வியாபாரம் நடந்திருக்கிறது. தமிழ் நாட்டிலே உள்ள கூட்டுறவு சிறப்பு அங்காடிகளிலே மொத்தமாக கிட்டத்தட்ட 9.87 கோடி ரூபாய் அளவிலே வியாபாரம் நடந்திருக்கிறது. ஆனால் இந்த சந்திரசேகரபுரம் கூட்டுறவு அங்காடியிலே சீனவெடி மட்டும் 3½ லட்ச ரூபாய்க்கு விற்றிருக்கிறது. இதனால் கும்பகோணத்தில் உள்ள பட்டாசு வியாபாரிகள் என்ன ஆனார்கள் என்றே தெரியவில்லை. அங்கு நல்ல முறையிலே வியாபாரம் நடைபெற்றிருக்கிறது. இந்த நிலைமை ஒன்றிரண்டு இடங்களிலேதான் இருக்கின்றது. ஆனால் எல்லா இடங்களிலும் வளர்ச்சி அடைந்த பிறகு, எல்லாக் கூட்டுறவு சொஸைட்டிகளிலும் லாபம் வரக்கூடிய நிலைமை ஏற்படுமானால், அந்தச் சமயத்தில் தவத்திரு அடிகளார் அவர்கள் கூறிய யோசனையை கவனிக்கலாம் என்று சொல்லி, இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. ராஜாராம்:** துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், குறை சொல்ல வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இல்லை

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** நீங்கள் என்ன விரும்புகிறீர்கள் என்பதை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. கே. ராஜாராம்:** ஒரே ஒரு விளக்கத்தை மட்டும் கேட்க விரும்புகிறேன். நிலவள வங்கி, வீடு கட்டும் சங்கம் என்று இரண்டு சங்கங்கள் இருக்கின்றன. இந்த நிலவள வங்கியில் கடன் வாங்கியிருப்பவர்கள் கடனைத் தீர்க்காமலிருந்தால், அவர்கள் உறுப்பினர்களாக இருக்க வேண்டியதுதான். வீடு கட்டும் சங்கத்தில் வீடு கட்ட கடன் வாங்கியிருந்தால், உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்று இருந்தால், சங்கம் நன்றாக ஓடும். ஆனால் கடன் தீர்ந்த பிற்பாடும், அவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் 'ஷேர்' போட்டு உறுப்பினர்கள் ஆகிறார்கள். ஆனால் கடனை அடைத்த பிறகு, அவர்களுக்கு அவ்வளவு அக்கறை இருப்பதில்லை. அவர்கள் அங்கே உறுப்பினர்களாக இருந்துகொண்டு அந்தச் சங்க வளர்ச்சிக்குப் பாதகமான காரியங்கள் செய்கிறார்கள். ஆகையால் சம்பந்தம் இல்லாதவர்களுக்கு ஓட்டுரிமை இல்லாமல் செய்ய அரசாங்கம் யோசிக்க வேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதில் நியாயம் இருக்கிறது. சம்பந்தம் இல்லாதவர்கள்





அந்தச் சங்கக் காரியங்களில் ஈடுபடுவதை நாம் ஆதரிக்கக் கூடாதுதான். ஆனால் ஒரு சங்கத்தில் ஒரு விவசாயி சென்ற ஆண்டு கடன் வாங்கியிருந்தால், இந்த ஆண்டு வேண்டாம், அல்லது ஒரு ஐந்தாண்டு அல்லது பத்தாண்டுகளுக்கு வேண்டாம், பிறகு வாங்கிக்கொள்ளலாம் என்று இருக்கலாம். நாம் விவசாயிகளுக்கென்றே கூட்டுறவுச் சங்கங்களை வைத்திருக்கிறோம். ஆகையால் விவசாயி ஆக இருந்தால், அந்தச் சங்கத்தில் இருக்கலாம், வேறு யாராவது சிறு கடைக்காரர்கள், சிறு மில்காரர்கள் போன்றவர்கள் நிலவள வங்கியில் உறுப்பினராக இருக்கத் தகுதியில்லை. அந்த அடிப்படையில் நாம் ஒதுக்கீடு செய்யலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே. ராஜாராம்:** வீடு கட்டும் சங்கத்திலும் அதுமாதிரிதான் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அதையும் கவனிக்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு, கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 60/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** துணைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு, கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 60/1974) நிறைவேற்றப்பட வேண்டும்".

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு,

[மேலவைத் துணைத் தலைவர்] [1975 நவம்பர் 11

1974 ஆம் ஆண்டு, கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 60/1974) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 6-10)

**(5) தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1975).**

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

" சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம் :

" சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ".

*** தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அறநிலையத் திருத்தச் சட்டத்தைப் பல வகையிலேயும் வரவேற்கின்ற நல்ல மனம் அல்லது சுபாவம் எனக்குத் தூண்டப்பெற்றாலும், சில இன்றியமையாத கருத்துக்களை இந்த நேரத்தில் நம்முடைய அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சாதாரணமாக, நம்முடைய சமயங்கள், சமய நிறுவனங்கள், திருக்கோவில்கள் ஒரு காலத்திலே புகழ் பெற்ற தமிழக வரலாற்றிலே, தமிழ் இன வரலாற்று மையக் கேந்திரங்களாக, சமூகப் பணி மனைகளாக இருந்தன. அவைகள் காலப் போக்கில் அந்நிய ஆட்சியின் காரணமாக சிரத்தை குறைந்து, விலகியிருக்கின்றன. மீண்டும் நம்முடைய அரசு, குறிப்பாக

@ 475-483 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1975 நவம்பர் 11] [தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

நம்முடைய அறநிலையத் துறை அமைச்சரவர்கள், அவற்றை சமுதாயப் பணி மனைகளாக மாற்றுவதில் அதிக அக்கறை காட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதை முழு மனதோடு வரவேற்றுப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தமாதிரித் திருத்தங்கள் வரும்போதெல்லாம், சமய நிறுவனங்கள், திருக்கோவில்கள் ஆகியவை பணம் பண்ணுகின்ற வெறும் பொருளாதார நிறுவனங்கள்போல் கருதப்படுகின்றன. எனவே இப்படிப்பட்ட திருத்தங்களைக் கொண்டுவரும்போது, திருக்கோவில்கள், அறநிலையங்கள் ஆகியவற்றின் கொள்கைகள், கோட்பாடுகள் ஆகியவற்றை வெளிப்படுத்துவதற்கும், அதனுடைய பின்னணியில் மறைந்து கிடக்கும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் உரிய வாறு சில திட்டங்களை நம்முடைய அரசு செயல்படுத்த வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். சாதாரணமாக நம்முடைய அமைசரவர்கள் ஒன்றைக் குறிப்பிடுவார்கள். கிறித்தவ சமய நிறுவனங்கள் நல்லபடியாக வேலை செய்கின்றனவென்றும், நம்முடைய சமய நிறுவனங்கள் அப்படி வேலை செய்ய வில்லையென்றும் சொல்லுவார்கள். அப்படிச் சொல்வதற்குரிய பலகீனங்கள் எங்கிருக்கின்றன என்பதை அரசு கண்டுபிடித்து ஆவன செய்ய வேண்டும். அரசினுடைய ஆட்சி முறையில், மேலாண்மையில் கடந்த கால் நூற்றாண்டு களாக—50 ஆண்டுகள் என்றுகூடச் சொல்லலாம்—இந்தச் சமய நிறுவனங்கள் இருக்கின்றன. அவைகளை அந்த வழியில் வழி நடத்துவதும், செயல் படுத்துவதும் இன்றியமையாதது. அதற்குரியவாறு சில சட்டங்களில் திருத்தங்கள் செய்வதன் மூலம், அந்த நிர்வாகத்தைக் கொண்டு வர வேண்டுமென்பதுதான் என்னுடைய நோக்கமும், விருப்பமும், வேண்டுகோளுமாகும். அதே நேரத்தில் ஒரு சமய சார்பற்ற அரசு என்ற நிலையும் நமக்கு இருக்கிறது. அதிலே இரண்டு விதமான கருத்துக்கு இடம் கிடையாது. ஆக, சமய நிறுவனங் களில் நல்ல நிர்வாகம், நல்ல அமைப்பு வேண்டுமென்பதிலே அரசுக்கு இருக்கும் அக்கறையை யாரும் புரிந்துகொள்ள முடிகிறது. அந்த வகையில், அந்த நிறுவனங்களைச் சரியான முறையில் வழி நடத்தலாம். மேலாண்மை செய்ய லாம். அதற்கு மாறாக தெரிந்தோ, தெரியாமலோ அந்த நிர்வாகங்களில் அரசு அதிகாரங்கள் விஸ்தரிக்கப்படுகின்றன என்பதுபோன்ற மனோபாவங்கள் மக்க ளிடத்தில் உண்டாவது அவ்வளவு நல்லதா என்பதை நம்முடைய அரசு எண்ணிப் பார்க்க வேண்டும். வழி நடத்துதல் என்பதும் மற்றும் மேலாண்மை செய்வது என்பதும், அரசின் அதிகாரத்தை விஸ்தரிப்பதென்பதும் இரண்டு மாறுபட்ட, முரண்பாடான கருத்துக்களென்று நான் கருதுகிறேன். அப்படி யொரு எண்ணம் சமுதாயத்தில் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். குறிப் பாக பல்வேறு சமயங்கள் வாழும் நாடாக நமது நாடு இருக்கின்றது. அந்த

[தவத்திரு குன்றக்குடி அடிகளார்] [1975 நவம்பர் 11]

சமய நெறியில், அந்த நிறுவனங்கள் சுதந்திரமாகப் பணிகளைச் செய்து, மக்களை மதம் மாற்றுதல் போன்ற பணிகளிலே ஈடுபட அனுமதிக்க வேண்டும். அந்தச் சமுதாயத்திற்கு முழுவதுமாக சமய அடிப்படையிலே பயன்படுகின்றவாறு, தனித்து சிறப்பாக இயங்குவதற்குரிய வழி வகைகளை நம்முடைய அரசு செய்ய வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள். எனவே இந்த மாதிரி அமைப்புக்கள், நிறுவனங்கள் வருகின்றபோது, அறங்காவலர்களாக இருந்தாலும் சரி, இறை பணியாளர்களாக இருந்தாலும் சரி, அந்தக் கோட்பாடுகளிலும், கட்டுப்பாடுகளிலும் அளவு கடந்த ஆர்வமும், அக்கறையும் உடையவர்களாக இருத்தல் வேண்டும். அப்படிப்பட்டவர்களை நியமித்தால்தான், அதிகமான வளர்ச்சியைக் கொடுக்கும். நம்முடைய அரசு மக்களின் உணர்வுகளை உணர்ந்த அரசு. அந்த அரசு பொறுப்பு ஏற்ற பிறகு, பூம்புகார் பொலிவுறுகிறது; வள்ளுவர் கோட்டம் காணுகிறோமென்று சொன்னால், அந்த அமைப்பில், ஆட்சியில் பொறுப்பு ஏற்கின்றவர்களுடைய உணர்வுகளின் விளைவுதான் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. பல சமயங்களில் சமய ஞானிகள், பல பெரிய நாயன்மார்கள் வாழ்ந்த இடங்கள், மடங்கள் இவைகள் எல்லாம் நினைவுச் சின்னமாக்கப்படுவதுபற்றி நான் இந்த மேலவையில் பரிந்துரை செய்திருக்கிறேன். ஆனால் அந்தச் சந்தர்ப்பங்கள் வருகிறபோது, அறநிலைய ஆட்சித் துறைகூட அதற்கு உத்தரவாதம் கொடுக்காமல், அதை மடங்களே செய்ய வேண்டும், கோவில்களே செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அவர்கள் அந்த நிலைமையை ஆராய்ந்து, அவற்றைச் செய்யக் கூடிய இனிய சூழ்நிலையில் இல்லையென்பதை நம்முடைய அமைச்சரவர்களும் அறிந்து கொண்டிருக்கிறார்கள். இந்தமாதிரி அமைப்புக்கள் வளருகிறபோது, சிறந்த முறையில் அதனுடைய நோக்கங்கள், கொள்கைகள், கோட்பாடுகள் வளரத்தக்க வகையில் அமைக்க வேண்டுமென்பதை நான் மீண்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பொதுவாகத் திருக்கோவில்களைப் பொறுத்தவரையில், 2, 3 வகையில் பிரித்து, நல்ல முறையில் செயல்படுத்துவது அவசியமானது. பொதுவாக பூசையில் நாம் தலையிடுவதில்லை என்ற மரபு இருக்கிறது. ஆனாலும் தவிர்க்க முடியாத நிலையில், இந்த இரண்டும் கலந்துதான் இருக்கின்றன. ஆகவே, ஒவ்வொரு துறையிலும், ஒவ்வொரு திருக்கோவிலும், ஒவ்வொரு மடமும்கூட சமூகப் பாதுகாப்புக்கென்று சில குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டும். மற்ற சமய நிறுவனங்களைப் பார்த்தால், அவர்கள் வழிபடுகிற மக்களுக்குப் பட்டியல் வைத்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய அற நிலையங்களைப் பொறுத்தவரையில், சொத்து ரெஜிஸ்டர்தான் வைத்துக் கொண்டிருக்கிறோம். வழிபடுபவர்கள் யார் யார், அவர்களுடைய நலன் என்ன



1975 நவம்பர் 11] [தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

என்று கவனிக்கத்தக்க வகையிலே இந்தச் சட்டங்கள் உயிர்ப்பு பெற வேண்டும். இதற்கு இசைந்து வருகின்றவாறு மற்றவர்களை நாம் தயார் செய்ய வேண்டும். தேவைப்பட்டால், நிர்ப்பந்தப்படுத்த வேண்டும். சொத்துக்களுடைய ஆட்சியைப் பொறுத்தவரையில், 'செகுலர் ஸ்டேட்' என்பதால், எந்தவிதமான மாறுதல்களையும் நாம் செய்யலாம். எந்தவிதத்திலும் மேலாண்மை செய்யலாம். ஆனால் இந்தமாதிரிப் பணிகளை எடுத்துக்கொள்கிறபோது, நாம் சிறந்த சில உதாரணங்களை மேற்கொள்ள வேண்டும். பரம்பரை அறங்காவலர்களைப் பொறுத்தவரையில், அது ஒரு சொத்துரிமை அல்ல என்பதில் இரண்டுவித கருத்துக்கு இடம் இருக்க முடியாது. அதை உயர்நீதி மன்றம்கூட ஆட்சேபித்திருக்கிறது. ஆனாலும்கூட பல பரம்பரை அறங்காவலர்களுடைய திருக்கோவில்கள் நல்ல முறையில் தூய்மையாகப் பணி புரிகின்றன என்பதிலே நம்முடைய அமைச்சரவர்களுக்குக் கருத்து வேறுபாடு இருக்காதென்று கருதுகிறேன். குறிப்பாக தர்மபுர ஆதினத்தை எடுத்துக்கொண்டால், அவர்களுடைய திருக்கோவில்கள் நன்றாகப் பேணப்படுகின்றன. இயற்கை நியதிகளுக்கு மாறாக சில சமயங்களில் நாம் சட்டம் செய்கின்றோமோ என்று அச்சம் ஏற்படுகிறது. தவறான நிர்வாகம் இல்லாமல்போனாலும், பரம்பரை அறங்காவலர்களுடைய திருக்கோவில்களில் நாம் கூடுதலாக அறங்காவலர்களை நியமிக்கலாமென்று அரசு இப்போது முடிவெடுத்திருக்கிறது. அரசுக்கு, நன்றாக நடைபெற வேண்டுமென்பதுதான் நோக்கம். நன்றாக நடைபெறாத நிறுவனங்களை வழி நடத்த அறிவுறுத்த வேண்டும். நன்றாக நடந்தாலும், நியமிக்கலாம் என்று சொன்னால், எந்த நோக்கத்தில் அரசு அந்த முடிவுக்கு வந்திருக்கிறதென்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. எனவே 'தவறாக இல்லாது போனாலும்' என்று சொன்னால், அது வேறு விதமாக, இயற்கை நியதிகளுக்கு மாறாக இருப்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இறை பணியாளர்கள், நேரடியாக ஊழியர்களைப் பொறுக்கித் தருகிற தேர்வுக் குழுவின் மூலமாக வந்துவிடுகிறார்கள். அவர்களுக்கு ஏதாவது ஒரு 6 மாதம், 3 மாதம் குறுகிய காலப் பயிற்சி கொடுத்து அவர்கள் இறை பணியாளர்களாக நியமிக்கப்படுகின்ற பழக்கத்தை கட்டாயமாக அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். திருக்கோவில் என்றால், அது ஒரு தத்துவ களஞ்சியமாக, ஒரு பல்கலைக் கழகமாக இருக்கின்றது. அதனுடைய உணர்வுகளைச் செயல்படுத்த வேண்டுமென்று சொன்னால், நாம் பி.ஏ. போன்ற பட்டப்படிப்பு படித்தவர்களை மட்டும் போட்டுவிட்டால் போதாது. அவர்களைத் தேர்ந்தெடுத்த பிறகாவது, மற்ற துறைகளில் இருப்பதைப் போல, 3 அல்லது 6 மாதங்கள் நல்ல பயிற்சி கொடுத்து, அந்தப் பயிற்சியிலே தேர்வு பெறுகிறவர்களுக்குத்

நான் அந்த இறை பணியாளர் பதவி கொடுக்க வேண்டுமென்று வைக்க வேண்டும். இது ஒரு நியாயமான கோரிக்கை, இதை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தணிக்கைக் கட்டணத்தை இப்போது கூட்டியிருக்கிறார்கள். சில மணி நேரங்களுக்கு முன்பு நகர்ப்புற நிலவரி மசோதாபற்றி இங்கே விவாதம் நடைபெற்றது. நான்கு புறமும் விலை வாசி உயர்ந்துகொண்டிருக்கிறது. முன்பெல்லாம் அரசு ஏதாவது சட்டம் செய்தால், சமய நிறுவனங்களுக்கு விதிவிலக்கு கொடுத்தது. இப்போது வரவர அந்த விதிவிலக்குகள் அடிபட்டுக்கொண்டிருக்கின்றன. ஒரு புறம் வருவாய்க்கு உள்ள வழிகள் குறுகி வருகின்றன; மறுபுறம் செலவுக்குள்ள வழிகள் பெருகி வருகின்றன. இப்படியே போனால், அந்த அறநிலையங்கள் என்னவாகுமென்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நான் சற்றேறக்குறைய 10 நிறுவனங்களிடமிருந்து எந்த முறையில் தணிக்கைக் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது என்ற புள்ளிவிவரத்தைச் சேர்த்தேன். அதிலே ஒன்று இந்தியன் பேங்க். அது இந்தியாவிலேயே ஒரு பெரிய நிறுவனம். அங்கே 15 கோடி ரூபாய்க்கு வரவு செலவு செய்கிறார்கள். அந்த நிறுவனத்திற்கு, ஆண்டொன்றுக்கு 3,000 ரூபாய் தணிக்கைக் கட்டணமென்று ரிசர்வ் வங்கி நிர்ணயித்திருக்கிறது. ரிசர்வ் வங்கியே தணிக்கையாளர்களை நியமிக்கிறது. ஆக பல கோடி ரூபாய் வரவு செலவு செய்கின்ற ஒரு வங்கிக்குக்கூட ரிசர்வ் வங்கி வைத்திருக்கின்ற கட்டணம் 3,000 ரூபாய். தணிக்கையாளர்களையும் அவர்களே நியமிக்கிறார்கள். அதுபோல நம்முடைய அரசின் நிர்வாகத்தின்கீழ் கல்லூரிகள் இருக்கின்றன. 132 கோடி ரூபாயை நாம் கல்விக்காகச் செலவழிக்கிறோம். மேலும் தனியார் கல்லூரிகளும் இருக்கின்றன. ஒரு லட்சம் ரூபாய் வரவு செலவு செய்கின்ற ஒரு கல்லூரிக்கு 100 ரூபாய்தான் தணிக்கைக் கட்டணம் வாங்குகிறார்கள். தமிழக அரசினுடைய கல்வித் துறையில் இப்படி இருக்கிறது. அதுபோல வேளாண்மை வாரியத்தை எடுத்துக்கொண்டால், 156 லட்சம் ரூபாய் ஆண்டொன்றுக்கு வரவு செலவு செய்கிறார்கள். ஆனால் 3,500 ரூபாய்தான் அவர்கள் தணிக்கைக் கட்டணம் கொடுக்கிறார்கள். என்னிடம் சரியான புள்ளிவிவரங்கள் இல்லை. இப்போது விதிக்கப்பட்டுள்ள கட்டணங்களைக்கூட கொடுக்க முடியாமல் பல நிறுவனங்கள், பல ஆண்டுகளாகத் தேங்கிக் கிடக்கின்றன. இவைகளையெல்லாம் நம்முடைய அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, இவற்றிற்குக் குறைந்த அளவு தணிக்கைக் கட்டணம் விதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உயர்நீதி மன்றத்திலேகூட இதைப்பற்றிச் சர்ச்சை நடந்தபோது, என்ன வேலை செய்கிறோமோ அந்த வேலை செய்வதற்குரிய நியாயமான கட்டணங்களை வாங்கிக்கொள்வதுதான் முறை என்று சொல்லப்பட்டது. இதிலே அரசுக்குப் பல சங்கடங்கள் இருக்கலாம்.





(பிற்பகல் 6-20)

இதெல்லாம் இப்போது நாம் ஒரு தனி இலாக்காவை ஏற்றுக்கொண்டதனால் ஏற்படும் சுமையாக இருந்தாலும் இருக்கலாம். இப்போது தனியார் கல்லூரிகளில்கூட, சென்ற ஆண்டுவரையில் அவர்களே, தணிக்கையாளர்களை நியமித்துக்கொண்டிருந்தார்கள். அந்த முறை சரியானதாக இல்லை என்று இப்போது அரசாங்கமே தணிக்கையாளர்களை நியமிக்கிறது. அப்படி நியமிக்கிறபோதுகூட, வரவு செலவுக் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்காக நாம் இப்போது அற நிலையத்தைக் கேட்கப் போகிற தொகை மூன்றாயிரத்திலிருந்து, ஆறாயிரம் வரையில் வரும். ஆனால் கல்லூரிகளிலே கொடுக்கிற தொகை 100 என்று பார்க்கிறோம். இந்த அடிப்படைகளை நாம் பார்க்கிறபோது, பல வங்கிகள், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் போன்றவைகளை எடுத்துக் கொண்டால், 40 கோடி ரூபாய்க்கு மேல் வரவு செலவு செய்கிறார்கள். ஆனால் 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் தணிக்கைத் தொகை இல்லை என்று சொல்கிறார்கள். இப்படியெல்லாம் இருப்பதை அரசு பார்த்து, இன்னும் தெளிவாகச் சொன்னால், நம்முடைய அறநிலையச் சட்டத்தில், தணிக்கைத் தொகை விதிப்புக்கு உள்ள மொத்தத் தொகையை வசூலிக்க 100-க்கு 10 விழுக்காடு என்று பணம் ஒதுக்குகிறார்கள். ஆனால் மேலாண்மைக்கு 11 விழுக்காடு என்று வருகிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். வேலையை உண்மையாக களத்தில் செய்கிறவர்கள், அதை வசூலித்துக்கொண்டு வந்து சேர்க்கிறவர்களுக்கு 10 விழுக்காடு, அதை மேலாண்மை செய்கிறவர்களுக்கு 11 விழுக்காடு என்று சொன்னால், மேலே இருக்கிற நடைமுறைகள், நிர்வாகங்கள் என்னவாகும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். எனக்குத் தெரிந்து—நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகின்றேன்—எந்தத் திருக்கோயிலும் விஞ்ஞான பூர்வமான நிதிநிலைத் திட்டம் தயாரிக்கின்ற பழக்கத்தை இதுவரை கொண்டுவரவில்லை. கொண்டுவரவும் முடியவில்லை நிதி பற்றாக்குறையின் காரணமாக; பெரிய பெரிய மண்டபங்கள் வைத்திருக்கின்ற நிர்வாகங்களுக்கு, அதிலே வருகின்ற தேய்மானங்கள், பின்னாலே வருகின்ற பாதுகாப்புகள், திருப்பணிகள் ஆகிய இவைகளையெல்லாம் செய்வதற்குக்கூட நிதி ஒதுக்க முடியவில்லை. பெரிய சர்ப்ளஸ் கோயிலிலே ஏதாவது செய்ய முடியுமோ என்னவோ தெரியவில்லை. மற்றவைகளைப் பொறுத்தமட்டிலும், ஒரு புறம் நாம் கட்டிக்கொண்டுபோக, மறுபுறம் இடிந்துவரும் நிலைமைதான் இருக்கிறது. ஆக, ஒரு கோயிலுக்கு—ஒரு மாடல் விஞ்ஞானபூர்வமான வரவு

*[தவத்திரு குன்றக்குடி அடிகளார்] [1975 நவம்பர் 11*

செலவுத் திட்டம்—இப்படித்தான் இருக்க வேண்டும் என்று அரசாங்கம் பரிசிலனை செய்த பிறகு, இப்படி 10 விழுக்காடு நாம் தணிக்கைக் கட்டணம் வாங்க முடியும் என்று அரசு நம்பினால், எனக்கு ஆட்சேபனை ஒன்றுமில்லை. அரசினுடைய தணிக்கைத் துறைக்குக் கொடுப்பதற்கு மறுப்பு ஒன்றும் இல்லை. ஆனால், அதை நிர்வாகத்தால் உண்மையாகக் கொடுக்க முடியுமா என்று பார்க்க வேண்டும். அரசு ஊழியர்கள் சம்பளத்தைப் படிப்படியாக உயர்த்திக் கொண்டு போகிறார்கள். திருக்கோவில்களிலே இருக்கக்கூடிய ஊழியர்கள், இன்னும் 100 விழுக்காடு பேரும்கூட, வாழ்க்கைக்குப் போதிய ஊதியம் இல்லாமல் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இனிமேல் ஓய்வூதியம் போன்ற வசதி வாய்ப்புக்கள் எல்லாம் உண்டாக்கினால்தான், அவர்கள் நிம்மதியாக வாழ வழியேற்படும். லட்சக்கணக்கான ஊழியர்கள் அங்கே இருக்கிறார்கள். நான் முன்னாலேயே நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, ரொம்ப கனிவோடு, பரிவோடு உடனடியாக அந்தக் கூட்டத் தொடரிலேயே ஊதிய உயர்வு வேண்டுமென்று கேட்டு, அவர்களும் உடனடியாக அறிவித்தார்கள். ஆனால், அந்த ஊதிய உயர்வைக்கூட பல கோயில்கள் நடைமுறைப்படுத்த முடியாமல் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தஞ்சாவூரிலே, திருவாரூர் திருக்கோயில் மிகப்பெரிய திருக்கோயில். இந்த தீபாவளிக்குக்கூட அங்கே சம்பளம் பட்டுவாடா செய்ய முடியாமல் நிதி நெருக்கடியில் சங்கடப்பட்டிருக்கிறார்கள். இப்படி பெரிய கோயில்கள் எல்லாம்கூட தஞ்சை மாவட்டத்திலே நிதி நெருக்கடி காரணமாக பெரிதும் அல்லல்படுகின்றனவென்பதை நம்முடைய அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அந்தத் தணிக்கைக் கட்டணத்தைப் பொறுத்தவரையில், அரசை மிகுந்த பரிவோடு கேட்டுக்கொள்ளுகின்றேன்—எதிர்ப்பதாக நினைக்க வேண்டாம்—எது சாத்தியம் என்று பார்த்து, அந்த சாத்தியக் கூறுகளை அன்புகூர்ந்து ஆராய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அப்படி ஆராய்ந்து சாத்தியக்கூறு இருப்பதாகத் தென்பட்டால், கொடுப்பதிலே எனக்கு ஆட்சேபனை ஒன்றுமில்லை. அப்படி ஆராய்ந்து சாத்தியக்கூறு இருக்கிறதா என்பதைப் பார்க்க, இதை தற்காலிகமாக அரசு ஒத்திவைத்தாலும் எனக்கு ஆட்சேபனை இல்லை. சில நிறுவனங்களுடைய மாதிரி வரவு செலவுத் திட்டத்தை வாங்கிப் பார்த்ததில், 7½ விழுக்காடு, 10 விழுக்காடு, 15 விழுக்காடு தாண்டு விழுகின்ற நிறுவனங்களாகத்தான் அவைகள் இருக்கின்றன. நிலைமை இப்படி இருக்கின்றபோது, வேறு எந்த நிர்வாகத்திலும் இல்லாத அளவுக்கு தணிக்கைக் கட்டணம் அதற்குப் போடப்பட்டிருக்கிறது. வேறு எந்தப் பொது நிறுவனத்திலும் 3½ விழுக்காடு தணிக்கைக்



*1975 நவம்பர் 11] [தவத்திரு குன்றக்குடி அடிகளார்]*

கட்டணம் இருப்பதாக என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. வங்கிகளைக் கேட்டேன், வாரியங்களைக் கேட்டேன். நம்முடைய சுற்றுலா வாரியத்திற்கு எவ்வளவு லட்சம் வரவு செலவு இருக்கிறது, அங்கே என்ன தணிக்கைக் கட்டணம் என்று பார்த்தால், 0 என்ற அளவிலேதான் இருக்கிறதே தவிர அது 1 என்ற விழுக்காட்டுக்குக்கூட வரவில்லை. அரசினுடைய பிற துறைகளிலே இருக்கின்ற வாரியங்களுக்கு இந்த நிலை என்று சொன்னால், ஒரு அற நிலையம், அறத்துக்காக ஏற்பட்டிருப்பதை, அதிலே 10 விழுக்காடு, 15 விழுக்காடு சமூகப் பாதுகாப்புக்குத்தான் செலவழிக்க வேண்டுமென்று அரசு விதி செய்யுமானால், இரண்டு கைகளாலும் மனமுவந்து வரவேற்க நான் தயாராக இருக்கிறேன். செய்து கொண்டிருக்கும் காரியத்தைத் தணிக்கை செய்வதிலே நாம் இவ்வளவு பெரிய தொகையைச் செலவழிப்பதென்பதை எந்த வகையிலும் நியாயமானதாக என்னால் கருத முடியவில்லை. ஆகவே, இவைகளையெல்லாம் நம்முடைய அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு, அன்புகூர்ந்து நன்றாகப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எனக்கு மிக்க மகிழ்ச்சியளிக்கத்தக்க ஒரு செய்தி, வரவேற்கத்தக்க ஒரு செய்தி, பேரவைக்குப் பங்களிப்புத் தொகை கொடுக்கலாம் என்று சட்ட முன்வடிவில் சேர்த்திருப்பது. அதற்காக நான் மிகுந்த கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் தெளிவாகச் சொன்னால், அது ஒரு காலத்திலே அரசு பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்று இருந்தது. அன்றைக்கிருந்த முதலமைச்சர் அவர்கள், தானே முதலமைச்சராக இருக்கப்போவதாக நினைத்துக்கொண்டு, தன்னுடைய மேலாண்மையிலேயே அதை ஒழுங்காக நடைமுறைப்படுத்தி விடலாம் என்று நினைத்தார். ஆனால் தொடர்ந்து அது சரியாக நடைபெறவில்லை. இந்துக்களுக்கு "தான் ஒரு இந்து" என்று சிந்திக்கின்ற பழக்கத்தைவிட, ஜாதி ரீதியாகவும், தனி ரீதியாகவும் சிந்திக்கின்ற பழக்கம் சாபக்கேடு காரணமாக இருக்கிறது. அது மேல் முதல் கீழ் வரையிலும் இருக்கிறது. இதற்கு யார் விதிவிலக்கு என்று நான் சொல்லத் தயாராக இல்லை. அப்படி ஒரு பலவீனமான சமுதாய அமைப்பில், ஒரு பேரவையை அப்போதிருந்த முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அதற்கு நிதி வசூலித்தல் போன்றவைகளிலேகூட இடர்ப்பாடுகள் இருந்தன. அப்படிப்பட்ட இடர்ப்பாடுகளிலேகூட, இன்றைக்கு நம்முடைய அற நிலைய அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும், மடாதிபதிகளைக் கட்டுப்படுத்த முடியுமா என்று கேட்டார்கள். தணிக்கைத் தொகை வேண்டுமென்று நாம் கட்டுப்படுத்தப் போகிறோம். அதைப் போல பங்களிப்புத் தொகை வேண்டுமென்று கட்டுப்படுத்தப் போகிறோம். சரியான முறையில் வராதவர்

களுக்கு சமூகப் பாதுகாப்பு, அல்லது இந்தமாதிரிக் கொள்கைக் கோட்பாடு பாதுகாப்புக்கு இந்தப் பேரவையைத் தவிர வேறு எதுவும் இன்றைக்கு மார்க்கம் கொடுப்பதாக இல்லை. நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேரவையினுடைய ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக இருக்கிறார்கள். பல பிரச்சினைகளைப்பற்றி நாங்கள் விவாதித்தோம். • தெளிவாகச் சொன்னால், பிற மதங்களுக்கு நெருக்கடி ஏற்படுகின்றபோது, நெருக்கடியைத் தீர்க்க தலைகாட்டுகின்ற ஒரேயொரு பொறுப்பை இந்தப் பேரவைதான் வைத்துக்கொண்டிருக்கிறது. அதற்கு நாம் கட்டாயப்படுத்தக் கூடாது, அவர்களே அக்கறைகொள்ள வேண்டுமென்றெல்லாம் அரசு சொல்வது அதிலே கொள்கை, கோட்பாடு இருக்கிறது என்பதால்தான். நம்முடைய அமைச்சர் அவர்கள் மகிழ்வார்கள் என்று நினைக்கிறேன். இந்தப் பேரவைகூட ஒரு 'ஆர்தோடாக்ஸ்' சென்றுகப் போகாமல் அரசினுடைய கொள்கைகளுக்கு, முற்போக்குக் கொள்கைகளுக்கு ஆதரவு தருகின்ற ஒரு அணியாக, நம்முடைய மறைமலையடிகள், அறிஞர் அண்ணா போன்றவர்களுடைய முற்போக்கு அணியாக அமைந்திருக்கிறது. இந்த 25 ஆண்டு, 50 ஆண்டு வரலாற்றில் பார்த்தால், இந்த அரசினுடைய வரலாற்றில்தான் சமயத் துறையிலும்கூட, நம்முடைய முற்போக்குக் கருத்துக்கள் பிரதிபலிப்பதற்கு இப்போது ஒரு அணி இருக்கிறது, ஒரு ஸ்தாபனம் இருக்கிறது என்று மிக்க மகிழ்ச்சியோடு வரவேற்க முடியும். எனவே, அதைச் சட்டபூர்வமான ஒரு ஸ்தாபனமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். ஏனெனில் சமயச் சீர்திருத்தம் ஏதாவது நாம் செய்தால், உயர்நீதிமன்றத்திற்குப் போகிறார்கள், "இது சமயச் சீர்திருத்தம், அரசு செய்யக்கூடாது" என்று சொல்வார்கள். எனவே, பேரவை போன்ற ஒரு ஸ்தாபனத்தை நாம் வளப்படுத்துவோமானால், நாம் நினைக்கின்ற சமயச் சீர்திருத்தங்கள் அவசியம்தானா என்பதை அதிலே விவாதிப்பதற்கு, முடிவெடுப்பதற்கு, வலிமை ஏற்பட முடியும். அப்படிப்பட்ட சூழ்நிலை எல்லாம் ஏற்பட—நம்முடைய சமுதாய அமைப்பு இப்படி இருப்பதனால் சொல்கிறேன்—நம்முடைய அமைப்பை நாம் ஒருமைப்பாடுடையதாகச் செய்வதற்கு இன்னும் ஒரு தலைமுறை பிடிக்கும் என்று கருதுகிறேன். இந்தத் துறையில் நம்முடைய அரசு அதிக அக்கறை எடுத்துக்கொண்டு, பேரவைக்கு இந்த அளவுக்கு இடம் கொடுக்க முன்வந்ததற்கு மகிழ்ச்சி தெரிவித்து, அதை விரைவாக ஒரு சட்டபூர்வமான நிறுவனமாக மாற்றி, அதற்கு நியாயமான பங்களிப்புத்தொகை கிடைக்கும்படி செய்ய வேண்டும். மற்ற மதஸ்தாபனங்கள் கல்வி மருத்துவப் பணிகளை மேற்கொள்கின்றன. கிறிஸ்தவனாக இருப்பதற்கு ஒரு உத்தரவாதம் கிறிஸ்தவ சர்ச் கொடுக்கிறது; அதைப்போல இந்துவுக்கு இந்த ஸ்தாபனம் உத்தரவாதம் கொடுக்கிற ஒரு





இன்றியமையாத சூழ்நிலையை நாம் உருவாக்காத வரையில், ஒரு இந்து அனாதையாக இருக்கிற வரையில், இந்து ஸ்தாபனங்கள், அதனுடைய நோக்கங்கள் நிறைவேறியதாகக் கருத முடியாது. அப்படிப்பட்ட ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க பேரவைதான் இந்தப் பணியைச் செய்ய முடியும். அந்த வகையில் நம்முடைய அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அளவில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஏழு மணிக்குள் முடிக்க வேண்டும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மதிப்பிற்குரிய அடிகளார் அவர்கள் கொடுத்த திருத்தத்திற்கு ஆதரவு கொடுத்து சில வார்த்தைகள் நான் சொல்ல விரும்புகிறேன். தணிக்கை பெர்சென்டேஜ் பற்றி மிக நன்றாகச் சொன்னார்கள். எத்தனையோ நிறுவனங்களைச் சுட்டிக்காட்டி, பல நிறுவனங்களுக்கு இப்போது இவ்வளவு தான் இருக்கிறது, ஏற்கெனவே இவ்வளவு இருந்தது, எத்தனை ஏற்றியிருக்கிறார்கள் என்பதை புள்ளிவிவரங்களோடு சொன்னார்கள். அவற்றைப் பார்க்கும்போது, இன்னும் கொஞ்ச நாட்கள் இதே நிலைமையில் போனால், அறநிலையத்தினுடைய பட்ஜெட் போடுவதற்கே வாய்ப்பில்லாமல் போகும் என்று நினைக்கிறேன். இப்போதே அந்தக் கோயில்கள் ரொம்ப சிரமப்படும் நிலைமையில்தான் இருக்கின்றன. லேண்ட் சீலிங், நிலப் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவந்த பிறகு, உதாரணமாக ஸ்ரீரங்கம் கோயிலை எடுத்துக்கொண்டால், நிர்வாகத்தில் ஏற்படும் அனைத்துச் செலவையும் கோயில் வருவாயிலிருந்துதான் செய்கிறார்கள். எல்லாவிதமான செலவுகளையும் கோயில் பணத்திலிருந்துதான் செய்கிறார்கள். கோயிலுக்கு வரக்கூடிய வருமானத்தில், நிலங்கள், வீடுகள், கடைகள் மூலம் வரும் வருமானம் தான் ஜாஸ்தி, சில கோயில்களில் தான் உண்டியல் மூலம் அதிக அளவில் வருமானம் வருகிறது. நிலைமை அப்படி இருக்கும்போது, சமய நிறுவனமானாலும் சரி, கோயிலானாலும் சரி, வருமானம் குறைவாக இருக்கும்போது, இந்த மாதிரி தணிக்கைக்கு அதிகப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. மாண்புமிகு அடிகளார் அவர்கள் நல்ல முறையில் சுட்டிக்காட்டினார்கள். புள்ளிவிவரம் எல்லாம் சரியாகக் கொடுத்தார்கள். எங்கிருந்து கொண்டுவந்தார்களோ, சரியான புள்ளிவிவரம் கொடுத்தார்கள். அதற்காக நாம் அவரைப் பாராட்ட வேண்டும். தமிழ்நாட்டிலேகூட அவருடைய புகழ் ஒளி வீசிக்கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 6.30)

சர்க்கார் இப்போது 3½ பெர்செண்ட் என்று சட்டத்திலே போட்டிருப்பது பயங்கரமாக இருக்கின்றது. இந்த மாதிரி போக்கிலேயே போகலாமா? எந்த சட்டம் வந்தாலும் அது இந்து சமுதாயத்தைத்தான் பாதிக்கிறது. எந்த மதத்தையும் பாதிக்கின்ற மாதிரி இருக்கக்கூடாது. சர்க்கார் 1½ பெர்செண்ட் தள்ளிவிடலாம்.

அடுத்தபடியாக, இந்த தர்ம ஸ்தாபனங்கள் பற்றியும், திருக்கோயில்கள் பற்றியும், அறங்காவல் நிறுவனங்கள் பற்றியும் கொஞ்சமாவது பற்றுதல் இருக்க வேண்டும். அதைப்பற்றி நன்கு தெரிந்திருக்க வேண்டும். சட்டத்திலே வழிவகைகள் செய்யப்பட்டிருந்தால், அதைப்பற்றி நான் சொல்லவேண்டிய அவசியமில்லை. தர்ம ஸ்தாபனங்கள், கோயில்கள் இவைகளில் நல்ல நிர்வாகம் நடந்துகொண்டிருக்கின்றது. குறை சொல்வதற்கில்லை. திருவாவடுதுறை ஸ்தாபனம் நன்றாக நடந்துகொண்டிருக்கிறது. காஞ்சி சங்கராச்சாரியார் அவர்கள் நிர்வாகம் நன்றாக நடந்துகொண்டிருக்கின்றது. இவைகளில் எல்லாம் என்ன குறை இருக்கிறது? இப்போது இதைச் செய்ய வேண்டுமா என்பதைப் பற்றிச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். தனிப்பட்ட நபர்கள்பற்றி நாம் பார்க்க வேண்டியதில்லை. தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் நிர்வாகம் பற்றிக் குறை சொல்ல முடியாது. நன்றாக நடந்து கொண்டிருக்கிறது. சமய ஸ்தாபனங்கள் பிற்காலத்தில் பாதிக்கப்படும். அந்த ஸ்தாபனங்கள் பாதிக்கப்படும் அளவுக்கு சட்டம் செய்தால் மிகக் கஷ்டமாகி விடும். ஜனநாயகத்திலே தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் ஒவ்வொரு மதத்திற்கும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். அப்போதைக்கப்போது ஒரு ஆணை போட்டாவது வழி செய்யலாம். போகிற போக்கிலேயே போய்க் கொண்டிருப்பது கஷ்டமாக இருக்கிறது. தெய்வீகப் பேரவை . . .

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: 'போகிற போக்கைப் பார்த்தால்' என்று திரு. தீக்ஷிதர் அவர்கள் எதைக் குறிப்பிட்டார்கள்? திரு. தீக்ஷிதர் அவர்கள் குறிப்பிட்ட "போகிறபோக்கைப் பார்த்தால்" என்பது யாரை, எதைக் குறித்து என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் எதைச் சொல்கிறேன் என்றால், ஜனநாயக நாட்டிலே, ஜனநாயகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்ற மெம்பர்களும், அரசும் எந்த மதத்தையும் போற்றுபவர்களாக இருக்க வேண்டும் என்று சொல்கிறேன். வருங்காலத்தில் இப்படியே போனால் எப்படி



இருக்குமோ என்றுதான் சொல்கிறேன். தற்கால அமைச்சர்களைப்பற்றிச் சொல்வதாக நினைக்கக்கூடாது. இப்போதே இப்படி இருந்தால், வருங்காலத்தில் இவைகள் எப்படி இருக்கும் என்றுதான் சொல்கிறேன். இந்து மதத்தின் கொள்கைகளைப் பாதுகாக்கும் அளவில் தெய்வீகப் பேரவை இருந்து கொண்டிருக்கின்றது. அதற்கு ஊக்கம் அளிக்க சர்க்கார் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, தர்மகர்த்தா குழுவானது முறையாக நடக்கவில்லை என்பதை அரசு அறியும். ஆனால் இந்தச் சட்டத் திருத்தத்திலே அந்த தர்மகர்த்தா குழுவைப்பற்றிக் கொடுத்த விளக்கம் சரியில்லை. அரசு அதிலுள்ள குறைகளைக் கண்டறிந்து அவற்றை அகற்றவேண்டும். இந்தத் திருத்தத்தை நான் வரவேற்றாலும்கூட, இதிலே குறைபாடுகளைக் காணுகிறேன். இந்தச் சட்டத்தில், போர்ட் ஆப் டிரஸ்டீஸ், தர்மகர்த்தா குழு இருக்க வேண்டும் என்று ஏற்கெனவே இருந்தாலும் கூட, பல திருக்கோயில்களிலே தர்மகர்த்தா குழு இல்லாத நிலை இருப்பதும் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஏதோ காரணம் இருக்கிறது. காரணம் இல்லாமல் இல்லை. காரணங்களை நாம் நிச்சயமாகக் கண்டுபிடிக்க வேண்டும். இந்த மாதிரி திருத்தம் இல்லாமலேகூட, தொடர்ந்து நல்ல அளவில் அதிகாரிகளைக் கொண்டு இயங்கும் திருக்கோயில்களும் தமிழ் நாட்டிலே உண்டு. அந்த நிலை மாற்றப்பட வேண்டிய ஒன்றுதானா என்பது எனக்கு விளங்கவில்லை. என்னைப் பொறுத்த மட்டிலே, இந்த தர்மகர்த்தா குழுவினர் என்ன செய்கிறார்கள் என்பது சந்தேகமாக இருக்கிறது. வேண்டாம் என்று சொல்லவில்லை. வேண்டும் என்றும் நான் கருதவில்லை. சட்டத்திலே வேண்டும் என்று இருக்கிறது. அந்த நிலைமை ஏற்பட்டிருக்கும்போது, அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கப்படாமலிருப்பது சரியல்ல. தர்மகர்த்தாவை நியமன காலத்திற்கு முன்னாலேயே அரசு நியமிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி நியமிக்கும்போது, அவர்கள் கடவுள் நம்பிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். சட்டப்படி 'கடவுள் நம்பிக்கை உண்டு' என்று எழுதித் தரவேண்டும் என்று இருக்கிறது.

என்னுடைய சொந்த அனுபவம் ஒன்று இருக்கின்றது. அதை இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் பழனியிலே உள்ள திருக்கோயிலுக்குச் சென்றிருந்தேன். அந்தக் கோயிலிலே இப்போது புதிதாக ஒரு அறங்காவலரை நியமித்திருக்கின்றார்கள் என்று நினைக்கின்றேன். நான் சென்றபோது, அன்று காலை 11 மணி அளவில் பூஜை ஆரம்பமாயிற்று. 11 மணி

அளவில் ஆரம்பமான பூஜை, மாலை 2½ மணி வரையில் நடந்து முடிந்தது. இந்த 11 மணியிலிருந்து மாலை 2½ மணி வரையில் அறங்காவலர் அவர்கள் அங்கே இருந்து கொண்டிருந்தார்கள். அவர் ஒரு முக்கியஸ்தர் என்றுதான் நான் நினைக்கிறேன். அவருடைய பெயர் என்ன என்று எனக்குத் தெரியாது. அவர் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருடன் அங்கு வந்திருந்தார்கள் என்று நினைக்கிறேன். அது குறித்து நான் மகிழ்ச்சிதான் அடைகிறேன். அன்று நடந்த பூஜைக்குப் பிறகு திருநீறு வந்திருந்தவர்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால் அந்த அறங்காவலர் தனக்குத் திருநீறு வேண்டாம் என்று சொல்லி, அங்கு இருந்தவர்களுக்கும், நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் கொடுத்தார்கள்.

திரு. க. அறிவழகன் : அவர் நாமம் போடுபவராக இருக்கும்.

திரு. கே. எஸ். கணபதி : அவர் நாமம் போடுபவர் என்பது அல்ல பிரச்சினை. திருநீறு வழங்கப்பட்டால், அதைப் பெற்றுக்கொள்வார்கள். வேண்டாம் என்று சொல்லமாட்டார்கள். மரியாதைக்காகக்கூட வாங்கிக் கொள்ளாமல், உறவினர்களுக்குக் கொடுக்கும்படி சொன்னார்கள்.

திரு. க. அறிவழகன் : அறங்காவலர் அவர்களுக்கு அந்தக் கோயிலிலேயே அதிக மரியாதையைச் செய்து, மற்றவர்கள் அதைத் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதற்காகச் சொல்லியிருக்கலாம்.

திரு. கே. எஸ். கணபதி : கோயில்களில் எல்லோருக்கும் தான் கொடுக்கிறார்கள். மரியாதை என்பது வேறு. லட்சக்கணக்கான பேர்கள் வந்தாலும், திருநீறு கொடுப்பார்கள்.

திரு. கே. ராஜாராம் : திருநீற்றை வாங்கிக் கீழே போடாமல், வாங்காமல் இருந்தார்களே, அதுவே போதும்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : விபூதி பூசி, குங்குமம் வைத்துக் கொண்டிருப்பவர்கள் எல்லாம் பக்தி உள்ளவர்கள், விபூதி பூசாதவர்கள் எல்லாம் பக்தி இல்லாதவர்கள் என்று நினைப்பதற்கில்லை. இதுபற்றி தவத்திரு குன்றக்குடி அடிகளார் இலக்கியத்தோடு, கவிதைகளாகவும் உவமையாகவும் விளக்கிக் கூறியிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில், இந்து சமுதாயத்தில் கடவுள் நம்பிக்கை உள்ளவரா என்று கேட்டு, அதை அதிகாரிகள் பரிசீலனை செய்கிறார்கள். பரிசீலனைக்குப் பிறகுதான் நாம் அவர்களை அறங்காவலர்களாக இருக்க அனுமதிக்கிறோம். கடவுள் பக்தி இருக்கின்றவர்கள்



என்று வெளி உலகத்திற்குக் காட்டிக்கொண்டு, திருநீற்றைப் பூசிக்கொண்டு பல தவறுகள், ஆண்டவனுக்குப் பின்னாலே திரை மறைவில் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திருநீறு பூசிக்கொள்வதைப்பற்றியும், கடவுள் நம்பிக்கை உள்ளவன் யார், கடவுள் நம்பிக்கை அற்றவன் யார் என்பதுபற்றியும் சிறந்த விளக்கத்தைக் கொடுத்தார்கள். அதிலே மாறுபட்ட கருத்து எதுவுமே எனக்குக் கிடையாது அந்த நியமனத்திற்கு முன்னாலேயே அதிகாரிகளை அனுப்பி அந்தப் பகுதிக்கு நேராகச் சென்று பரிசீலிப்பதாகவும், பின்னர் நியமிப்பதாகவும் குறிப்பிட்டார்கள். இந்தப் பரிசீலனை எப்படி இருக்க முடியும் என்று என்னைக் கேட்டால், அந்தப் பகுதி மக்கள் சொல்ல வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அதைத் தவிர வேறுவிதமாகத் தெரிந்துகொள்ள முடியாது. அவர்களுடைய நடவடிக்கைகள் மூலமாகத்தான் அவர்களுக்கு நம்பிக்கை உண்டாக்க முடியும் என்பதைத்தான் நான் சொல்ல முடியும். நான் குறிப்பிட்ட நபர் காலை 11 மணியிலிருந்து மாலை 2½ மணி வரை பூஜை நடக்கும் வரை இருந்தார்கள். கடவுள் நம்பிக்கை உள்ளவராக இருந்தார்கள். அவர் மிகமிகக் கவனமாக அங்கு நடந்துகொண்டிருந்த ஆராதனைகளையும் கவனித்துக் கொண்டிருந்தார்கள். இவ்வளவு தூரம் கவனித்துக்கொண்டிருந்தவர், திருநீறு ஏன் வாங்கிக்கொள்ளவில்லை என்பதுதான் எனக்கு விளங்கவில்லை. திருக்கோயிலிலே திருநீறு வழங்கப்படுகிறது. அதைப் பெறுவதிலே என்ன தவறு இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. கொடுக்கும்போது மரியாதைக்காகவாவது வாங்காதது, உண்மையிலேயே இந்த நிர்வாகத்தை அவமதிப்பதாகத்தான் ஆகும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 6-40)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அவமதிப்பதற்கு ஒன்றுமில்லை. ஒருவர் திருநீறு வாங்கிப் பூசிக் கொண்டால் தான் பக்திமான் என்று அர்த்தமா? வாங்கிப் பூசாவிட்டால் பக்திமான் இல்லையா? இது குறித்து உறுப்பினர் அவர்களின் விளக்கம் தேவை.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கருத்துக்கு நான் அப்போதே பதில் சொல்லிவிட்டேன். இருந்தாலும் பூஜை முடிவடையும் வரை எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்தவர் கடைசி

நேரத்தில் திருநீறை வாங்காமல் இருந்ததைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். சிலர் திருநீறை வாங்குவார்கள் மரியாதைக்காக, ஆனால் நெற்றியில் பூசமாட்டார்கள். அதைக்கூட அவர் செய்யவில்லை என்பதைத்தான் நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு வீட்டுக்கு, விருந்தாளி வந்தால்கூட, வீட்டிலுள்ளவர்கள் காபி கொடுத்தால், அதைச் சாப்பிட மாட்டேன் என்று எந்த விருந்தாளியாவது சொன்னால், அது வீட்டுக்காரர்களை அவமானப் படுத்தியதற்குச் சமமாகும். அந்தக் காபியை கையில் வாங்கவாவது செய்ய வேண்டும். அதுபோல கொடுக்கப்பட்ட திருநீறை அவர் கையில் வாங்கியாவது இருக்கலாம். இதில் யார் பக்திமான், யார் பக்திமான் இல்லை, என்பதைப் பரிசீலிக்க முடியாத ஒரு நிலை இருப்பதால்தான், இத்தகைய கேடுகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** பக்திமானை எப்படித் தெரிந்து கொள்வது? உறுப்பினர் அவர்களின் யோசனையை வரவேற்கிறேன்.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, யார் பக்திமான் என்பது கண்டுபிடிக்க முடியாத ஒன்று என்பதை நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகள் பரிசீலனை செய்கிறார்கள் என்றும் பரிசீலனைக்குப் பிறகுதான் அவர்களை அறங்காவலர்களாக நியமிக்கிறோம் என்றும் சொன்னதற்காகத்தான் நான் இதைச் சொன்னேன். ஒருவர் பக்திமானா இல்லையா என்பதை அவருடைய செயல்களிலிருந்தும், பக்கத்தில் விசாரித்தும் உறுதிப்படுத்தலாம் என்பதுதான் என்னுடைய கருத்து.

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் 'ஆடிட் பீஸ்' 3½ சதவிகிதம் என்று விதித்திருப்பதைக் குறைக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். ஏற்கெனவே உள்ள 1½ சதவிகித வரியே அதிகமானது என்பது என்னுடைய கருத்து. ஏனென்றால் இன்றைய தினம் வருவாய் உள்ள கோயில்கள் மிக மிகக் குறைவு. அதே நேரத்தில் ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருமானமுள்ள கோயில்களின் கணக்குகளைத் தணிக்கை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்காக ஒரு தணிக்கையாளரை நியமித்தால், என்ன செலவது? அதிகமான வருமானத்தை பக்தர்களுக்கோ, கோயில் பணிகளுக்கோ செலவழிக்கும் வகையில் தணிக்கைக் கட்டணத்தை 1½ சதவிகிதமாகக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய சொந்த விருப்பம் ஒன்றை நான் இங்கே



தெரிவிக்க விரும்புகிறேன. திருச்சியில் உள்ள ஸ்ரீரங்கம் திருக்கோயிலிலிருந்து ஆண்டுதோறும் 7 லட்சம், 8 லட்சம் ரூபாய் வருமானம் வருகிறது. ஆனால் பெரும்பகுதி சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலிலிருந்து தான வருகிறது. பெரும்பகுதி வருமானம் அதிலிருந்து வந்தும், சமயபுரம் மாரியம்மன் திருக்கோயில் சரியாக வைக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், இல்லை என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த மாரியம்மன் திருக்கோயிலிலிருந்து கிடைக்கும் வருவாயிலிருந்து சரியான பங்கு கொடுக்கப்படவில்லை. 7 அல்லது 8 லட்சம் ரூபாய் வருமானத்தில் 5 அலலது 6 லட்சம் ரூபாய் வருமானம் சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலிலிருந்து மட்டும் கிடைக்கிறது. மாரியம்மன் திருக்கோயிலிலிருந்து வரக்கூடிய வருமானம் ஸ்ரீரங்கம் திருக்கோயிலுக்குச் செலவழிக்கப்படுகிறது. அந்த வருமானத்தில் பெரும்பகுதி சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலிலிருந்து வந்தது. லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ள திருக்கோயில்கள் இரண்டும் ஒன்றாக இணைந்திருக்க முடியாது. சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலுக்கு ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. ஆனால் ஸ்ரீரங்கம் திருக்கோயிலுக்கு அவ்வளவாக இல்லை. ஆகவே சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலிருந்து கிடைக்கும் வருமானத்தை ஸ்ரீரங்கம் திருக்கோயிலுக்குச் செலவிடுவது முறையாகாது. இவ்வளவு வருமானம் சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலிலிருந்து வந்தும்கூட, அந்தக் கோயிலுக்குப் போய் வரக்கூடிய வழிகூட சரியாக இல்லை. ஆகவே இரண்டு கோயில்கள் இணைந்திருக்கக்கூடிய நிலைமையைப் போக்கி, தனித் தனித் திருக்கோயில்களாக, தனித் தனி நிர்வாகங்களாக அமைக்க வேண்டுமென்றும், சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலுக்குப் போய்வர சரியான வழி அமைக்க வேண்டுமென்றும், அதற்கு நில ஆர்ஜித முறையிலாவது நிலத்தை வாங்கி ஏற்பாடுகள் செய்வதற்கு பணம் ஒதுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு மேலவைக்கு அனுப்பப்பட்டுள்ள இந்தத் தீர்மானங்களின் பேரில் மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல பல கருத்துக்களை யெல்லாம் வழங்கியிருக்கிறார்கள். குறிப்பாக இந்தத் தணிக்கைக் கட்டணத்தை ½ சதவிகிதத்திலிருந்து 3-1/2 சதவிகிதமாக உயர்த்தியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டி, அதைக் குறைக்க வேண்டுமென்ற நோக்கத்திலே பேசியிருக்கிறார்கள். கோயில்கள் பாதிக்கப்பட வேண்டும், அறநிலையங்கள் பாதிக்கப்பட வேண்டும், நிர்வாக அமைப்பு பாதிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தத் தணிக்கைக் கட்டணம் ½ சதவிகிதத்திலிருந்து

[திரு. மு. கண்ணப்பன்] [1975 நவம்பர் 11

3½ சதவிகிதமாக உயர்த்தப்படவில்லை என்பதை நான் ஆரம்பத்திலேயே தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தத் தணிக்கை முறையைப் பொறுத்த வரை, பழைய அமைப்பில் இருந்தபோது தனியார் தணிக்கையாளர் முறை தான் நடைமுறையில் வந்தது. தனியார் தணிக்கை செய்தபோது, சரியாகத் தணிக்கை செய்யப்படாத காரணத்தால் தான், துறையே தணிக்கையை நடத்த வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டு, 1971 ஆம் ஆண்டு முதல் துறை யிலுள்ள தணிக்கையாளர்கள் தணிக்கை செய்வதுடன், 1971 ஆம் ஆண்டுக்குப் பின்பும் 1971 ஆம் ஆண்டுக்கு முன்பும் உள்ள கணக்குகளும் சரிபார்க்கப்பட்டு வருகின்றன. அதிகாரிகளையும் ஊழியர்களையும் பொறுத்தவரை, அதிகமான எண்ணிக்கையில் இருக்கிறார்கள், அதனால் தான் அதிகப்படியான செலவு ஏற்படு கிறது என்று யாரும் சொல்லப்படத் தேவையில்லை. 1966-67-ல் நம்முடைய துறையினுடைய நிர்வாகத்தில் இருந்த நிறுவனங்களுடைய எண்ணிக்கை சுமார் 9 ஆயிரம். இன்றைக்கு நிர்வாகத்தின் கீழ் வந்திருக்கும் நிறு வனங்களின் எண்ணிக்கை சுமார் 20 ஆயிரம். மேற்படியும் [illegible] நிறு வனங்களை நம்முடைய நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர இருக்கின்றோம். எதிர் காலத்தில் இன்னும் பல்லாயிரக்கணக்கான நிறுவனங்களை அறநிலையத் துறை யின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர வேண்டும். நிறுவனங்களின் எண்ணிக்கை மிக அதிகமாய், வேலைப்பளுவும் அதிகமாகிவிட்ட போதிலும், 1966-ல் எந்த அளவு இதில் ஊழியர்கள் இருந்தார்களோ, எந்த அளவு அதிகாரிகள் இருந் தார்களோ, அந்த அளவுக்குத் தான் இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறார் கள். குறைந்த ஊழியர்களை வைத்து, கூடுதல் வேலை வாங்குகின்றோம். அதிக மான ஊழியர்களையும் அதிகாரிகளையும் நியமித்து இலாகாவுக்குக் கூடுதல் செலவை ஏற்படுத்திக்கொண்டு வருகின்றோம் என்று சொல்ல முடியாது. 1966-ல் இருந்த அந்த அளவு ஊழியர்களும் அதிகாரிகளும் தான் இன்றைக்கும் பணி யாற்றிக்கொண்டு வருகிறார்கள். சம்பளம், பயணப்படி மற்றும் பல்வேறு நிதி நிலைமைகளை அரசு ஊழியர்களுக்குக் கொடுப்பது போல இவர்களுக்கும் நாம் உயர்த்திக் கொடுக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். அப்படி இருக்கின்ற காரணத்தால் தான், நமக்குச் செலவு அதிகமாக ஏற்படுகிறது. போன ஆண் டுக்கும் இந்த ஆண்டுக்கும் உள்ள செலவை ஒப்பிட்டுப் பார்த்தால் கூட, போன ஆண்டு 15.70 லட்சம் ரூபாய் செலவு ஏற்பட்டதற்கு மாறாக, இந்த ஆண்டு 19.36 லட்சம் ரூபாய் அளவுக்கு நாம் செலவு செய்ய வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். இப்பொழுது உயர்த்தியிருக்கும் தணிக்கையாளர் கட்ட ணத்தை கூட நாம் எல்லா நிறுவனங்களுக்கும் ½ சதவிகிதத்திலிருந்து 3½ சதவிகிதமாக உயர்த்திவிடவில்லை. வருமானத்திற்குத் தகுந்தாற்போல், 'ஸ்லாப் ஸிஸ்டம்' என்ற அடிப்படையில் உயர்த்த வேண்டுமென்று முடிவு செய்



1975 நவம்பர் 11] [திரு. மு. கண்ணப்பன்]

திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் 5 ஆயிரம் ரூபாய், 2 லட்சம் ரூபாய் இப்படியெல்லாம் வருமானம் வருகின்ற நிறுவனங்களிலிருந்து தணிக்கைக் கட்டணமாக 2 சதவிகிதம் தான் வசூலிக்க வேண்டுமென்ற ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட வருமானமுள்ள நிறுவனங்கள், தணிக்கையாளர் கட்டணமாக 3½ சதவிகிதம் கொடுக்க வேண்டுமென்று சொன்னால்கூட, சில நிறுவனங்கள் பாதிக்கப்படும். இப்பொழுது நாம் ஏற்படுத்தியுள்ள முறைப்படி 999 ரூபாய் வரையில் வருமானம் வரக்கூடிய திருக்கோயில்கள் தணிக்கைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. ஆயிரம் ரூபாய்க்கு மேல் 1½ சதவிகிதம் தணிக்கைக் கட்டணம் போட்டிருக்கிறோம். 5 ஆயிரம் ரூபாய்க்கு மேல் இரண்டு சதவிகிதம் தணிக்கைக் கட்டணம் போட்டிருக்கிறோம். 20 ஆயிரம் ரூபாய்க்கு மேல் 2½ சதவிகிதம் தணிக்கைக் கட்டணம் போட்டிருக்கிறோம். 60 ஆயிரம் ரூபாய்க்கு மேல் 3 சதவிகிதம் தணிக்கைக் கட்டணம் போட்டிருக்கிறோம். 2 லட்சம் ரூபாய்க்கு மேல் 3½ சதவிகிதம் தணிக்கைக் கட்டணம் போட்டிருக்கிறோம். இப்படியெல்லாம் தணிக்கைக் கட்டணத்தைக் கட்டுப்படுத்தியிருக்கிறோம். எந்த வகையிலாவது இந்தத் திருக்கோயில்களும், அற நிலையங்களும், நிறுவனங்களும் பாதிக்கப்பட வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் உயர்த்தப்படவில்லை. இப்படிக் கட்டுப்படுத்தியதன் மூலம் நமக்கு 24 லட்சம் ரூபாய் வருமானம் வரும். இப்பொழுது நமக்கு நிர்வாகச் செலவு 19.70 லட்சம் ரூபாயாக இருக்கிறது. இந்த 24 லட்சம் ரூபாயை வைத்துத்தான் நாம் செலவு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். இன்னும் சில ஆண்டுகளில் இந்தச் செலவு இன்னும் அதிகமாகக்கூடும். மேலும் 49 ஆயிரத்துக்கு அதிகப்படியான நிறுவனங்களை நாம் மேற்கொள்ள இருக்கிறோம். அடுத்தபடியாக, நமக்கு இப்பொழுது இருக்கின்ற சட்டத்தின் அடிப்படையில் பல அறக் கட்டளைகள், அறச் சாலைகள் இவற்றை எல்லாம் நிர்வாகத்தின் கீழ் எடுத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்படும் போது இதன் கீழ் லட்சத்திற்கு மேற்பட்ட நிறுவனங்கள் வரக்கூடிய வாய்ப்பிருக்கிறது. அவற்றின் கணக்கை தணிக்கை செய்ய மேலும் தணிக்கையாளர்கள் தேவைப்படுவார்கள், மேலும் அதிகாரிகள் தேவைப்படு வார்கள், மேலும் ஊழியர்கள் தேவைப்படுவார்கள் என்பதால் தான், இதைச் சீரமைத்து 'ஸிலாப் ஸிஸ்டத்தின்' அடிப்படையில் உயர்த்தியிருக்கிறோமே

[திரு. மு. கண்ணப்பன்] [1975 நவம்பர் 11

யல்லாமல், வேறு நோக்கம் அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேமாதிரி தனிப்பட்ட ஒருசில உதாரணங்களை எல்லாம் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் இங்கே சொன்னார்கள். சில வங்கிகளிலே குறைந்த கட்டணம் இருப்பதாகவும், கல்லூரிகளிலே குறைந்த கட்டணம் இருப்பதாகவும், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் குறைந்த கட்டணம் இருப்பதாகவும் எடுத்துக்கூறினார்கள். நம்முடைய நிறுவனங்களைப் பொறுத்தவரையில், ஏதோ மாவட்டத்தின் தலைமையிடத்திலோ மாநிலத்தின் தலைமையிடத்திலோ 'ஆடிட்' செய்வதில்லை. தமிழ் நாடு பூராவும் பரந்து இருக்கின்ற கோயில்கள் உள்ள இடங்களுக்கெல்லாம் சென்று அந்த நிறுவனங்களிலுள்ள செலவுகள் அனைத்தையும், வருவாய் அனைத்தையும் தணிக்கை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒவ்வொரு கிராமமாக திருக்கோயில்களுக்குச் சென்று நாம் தணிக்கை செய்ய வேண்டிய நிலைமையில் இருப்பதால் தான், இந்த நிர்வாகத்தைப் பொறுத்தவரை, கட்டண உயர்வு சற்று அதிகமாக இருக்கிறது. நாம் தணிக்கை செய்யும் முறையை ஆரம்பத்திலிருந்தே செய்து வருகிறோம். 1951 ஆம் ஆண்டிலிருந்தே எப்படி எப்படியெல்லாம் தணிக்கை செய்தார்களோ, அதே முறையில்தான் நாம் தணிக்கை செய்து கொண்டு வருகிறோம். முன்பு நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஊதியம் குறைவாக இருந்தது. அப்பொழுது நிர்வாகச் செலவும் குறைவாக இருந்தது. இப்பொழுது அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் எல்லாச் சலுகைகளையும் இவர்களுக்கும் வழங்குகிறோம். அதன் காரணமாக அரசு ஊழியர்களுக்கு ஊதியம், பஞ்சப்படி, பயணப்படி போன்றவைகளை உயர்த்தும்போது, நாமும் இவர்களுக்கு அவற்றை உயர்த்திக் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதன் காரணமாகத்தான் நமக்குச் செலவு அதிகமாகி வருகிறது. ஆகவே நிர்வாகம் பாதிக்கப்படாத வகையில் 'ஸ்லாப் சிஸ்டம்' வைத்திருக்கிற காரணத்

(பிற்பகல் 6-50)

தால், அதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பரம்பரை அறங்காவலர்கள் உள்ள கோவில்களில் தவறான நிர்வாகம் இல்லாத போதிலும், எதற்காகக் கூடுதல் அறங்காவலர்களை நியமிக்கலாம் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் தவத்திரு அடிகளார் அவர்களும், திரு. கணபதி அவர்களும் இங்கே பேசுகிற போது குறிப்பிட்டார்கள். இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரையிலே, பரம்பரை அறங்காவலர்களாக, மடாதிபதிகளாக உள்ள கோவில்களில் கூடுதலாக நியமிக்க வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இல்லை. அரசியல் சட்டத்



1975 நவம்பர் 11] [திரு. மு. கண்ணப்பன்]

திலே அதற்கு விதிமுறைகள் இல்லை என்பது தவத்திரு அடிகளார் அவர்களுக்கும் தெரியும். ஆனால் பரம்பரை அறங்காவலர்கள் என்று சொல்லிக் கொண்டு, அவர்கள் ஏராளமான அக்கிரமங்கள் செய்கிறார்கள். அப்படிப்பட்ட கோவில்களைக்கூட பட்டியல் போட்டுக் காட்ட முடியும். பரம்பரை அறங்காவலர்கள் என்ற தகுதியை வைத்துக்கொண்டு, அரசாங்க ஆணையாளரிடத்திலோ, அங்கு இருக்கிற அதிகாரிகளிடத்திலோ அனுமதி பெறாமல், இலட்சக்கணக்கான ரூபாய்களைத் திருப்பணி செய்வதற்கென்று செலவிடுகிறார்கள். மதிப்பீடுகள் செய்யப்படாமல் 'எஸ்டிமேட்டுகளுக்கு' அனுமதிகூட வாங்காமல், லட்சக்கணக்கான ரூபாய்களைப் பாழாக்கிக்கொண்டிருக்கிறார்கள். அதெல்லாம் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிற நேரத்தில், உடனடியாக ஆணையாளரோ துணை ஆணையாளரோ குறிப்பிட்ட பரம்பரை அறங்காவலருக்கு "உங்களுடைய நிர்வாகத்திலே இன்னின்ன ஊழல்கள் இருக்கின்றன, இப்படி எல்லாம் தவறான முறையில் செலவு செய்திருக்கிறீர்கள், ஆகவே ஏன் கூடுதலான அறங்காவலரை உங்களுடைய நிறுவனத்துக்கு நியமிக்கக்கூடாது என்பதற்கு இந்த நோட்டீஸ் கண்ட 15 நாட்கள் அல்லது இரண்டு மாதத்திற்குள் விளக்கம் தரவேண்டும்." என்று நோட்டீஸ் விடப்படுகிறது. அவரும் ஏதாவது பதில் எழுதி அனுப்புகிறார். அந்தப் பதிலை ஏற்றுக்கொள்ளாமல், உடனே இன்னொரு அறங்காவலரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறோம். அதை எதிர்த்து கோர்ட்டுக்குப் போகிறார்கள். மாவட்ட நீதி மன்றம், உயர்நீதி மன்றம், அடுத்து சுப்ரீம் கோர்ட் என்று சென்று, இப்படியாக குறைந்தது ஐந்தாண்டுக் காலம், 10 ஆண்டுக் காலம் அந்த நிர்வாகத்தையே பாழாக்கிக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கோவிலுக்கும், அந்த நிறுவனத்துக்கும், பொதுமக்களுக்கும் பயன் படாத வகையில், சில மோசமான காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்தக் காரணத்தாலேதான் இந்தச் சட்டத்தைத் திருத்துகிறோமே தவிர, பரம்பரை அறங்காவலர்களுடைய உரிமைகள் பறிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு நாம் செய்யவில்லை. எங்கெங்கே தவறான நிர்வாகம் இருக்கிறதோ, எங்கெங்கே ஊழல் இருக்கிறதோ, அந்தந்த இடங்களில் இந்தச் சட்டத்தைப் பிரயோகப்படுத்தி, நல்ல திறமையான நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு, எதிர்காலத்திலே நாம் இதை உபயோகப்படுத்துவோமே தவிர, நிச்சயமாக தவறான வழியிலே இந்தச் சட்டம் பிரயோகிக்கப்படமாட்டாது என்ற உத்தரவாதத்தை நான் இந்த நேரத்திலே கொடுக்க விரும்புகிறேன்.

அதே மாதிரி, நிர்வாக அதிகாரிகளுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும், அரசாங்கத்திலே தேர்வு செய்யப்பட்டதற்குப் பிறகு நேரடியாக அவர்கள்

நியமிக்கப்படுவதால், கோவில்களிலே இருக்கக்கூடிய பல்வேறு நிலைமைகள் அவர்களுக்குப் புரியாது என்ற கருத்தை தவத்திரு அடிகளார் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய கருத்தை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னாலே தான், தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் தேர்வு செய்யப்பட்டு, இந்தத் துறையிலே முதிர்ச்சி பெற்ற அதிகாரிகள், அல்லது ஓய்வு பெற்ற அதிகாரிகள், அல்லது மதத்துறையிலே உள்ள நிபுணர்கள், தவத்திரு அடிகளாரைப் போன்றவர்களை எல்லாம் அழைத்து, அவர்களாலே இந்து மதத்தில் இருக்கக்கூடிய பல்வேறு சிறப்பு அம்சங்கள், கோவிலிலே உடனடியாகச் செய்யப்பட வேண்டிய காரியங்கள் போன்றவைகள்பற்றி இரண்டு மாத கால அளவில் பயிற்சி கொடுக்கப்பட்டு, அதற்குப் பின்னாலேதான் அவர்களை கோவிலிலே நியமிக்க வேண்டும் என்று யோசித்திருக்கிறோம். அந்த அடிப்படையிலே அந்த நடைமுறையை சீக்கிரத்திலே பின்பற்றுவதற்கான ஏற்பாடுகளை இந்தத் துறையின் மூலம் இன்றைக்குச் செய்து கொண்டிருக்கிறோம் என்ற செய்தியையும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே போல் பல நிறுவனங்கள் கட்டணம் கொடுக்க முடியவில்லை என்று சொன்னார்கள். அப்படி இருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. தமிழகத்தில் ஏற்கெனவே வறட்சி ஏற்பட்டபோது குத்தகைதாரர்களுக்குச் சலுகை தர வேண்டுமென்ற நோக்கத்தில் பல சலுகைகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. அதனால் சில இடங்களிலே குத்தகை வராமல் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அந்த நிறுவனங்களில் அப்படிப்பட்ட நிலைமைகள் தொடர்ந்து இருக்காது என்ற நோக்கத்தில்தான் நாம் இந்தக் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறோம். அந்த அடிப்படையில் எந்த நிறுவனமும் பாதிக்கப்படாத வகையில் நாம் பார்த்துக்கொள்வோம் என்ற உறுதிமொழியையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஊதிய உயர்வைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, கோவில் ஊழியர்களைப்பற்றி யாரும் சிந்திக்காத நேரத்திலே, கோவில்களிலே 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஊழியர்கள் இருக்கிறார்கள் என்பதால், அவர்களுக்கு வருடந்தோறும் ஊதிய உயர்வு கொடுப்பது, அவர்கள் வேலையை நிரந்தரமாக்குவது என்ற சலுகைகள் எல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தமிழகத்தில் இருக்கக்கூடிய கோவில்களை எட்டு வகையாகப் பிரித்து, அதன் அடிப்படையிலே அவர்களுக்கு நாம் ஊதிய உயர்வைக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத மிகப் பெரிய சலுகை தமிழ் நாட்டு அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 'குடும்பப் பாதுகாப்புத் திட்டம்' என்று அரசு ஊழியர் பணி செய்யும் காலத்தில் இறந்துவிட்டால் அவருடைய குடும்பத்திற்கு அரசின் சார்பிலே 10 ஆயிரம் ரூபாய் தந்துகொண்டிருக்கிறோம். இந்தச் சலுகை கோவில் ஊழியர்களுக்கும் அளிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் அவர்களுக்கும் இந்தச்



சலுகை கொடுத்திருக்கிறோம். அந்த ஊழியர்கள் 10 ரூபாய், 50 ரூபாய், 100 ரூபாய் என்ற அளவிலே சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தச் சலுகை கொடுக்க வேண்டியது நியாயம் என்பதை உணர்ந்து செய்திருக்கிறோம். அது கூட எல்லா ஊழியர்களும் மாதந்தோறும் 10 ரூபாய் செலுத்துவது என்பது முடியாத காரியம் என்பதால், அரசு ஊழியர்களுக்கு இன்சூரன்ஸ் அடிப்படையிலே மாதந்தோறும் ஒரு ரூபாய் வாங்கிக் கொண்டு நாம் 10 ஆயிரம் ரூபாய் தருவது போல், இன்சூரன்ஸ் நிறுவனம் சம்மதிப்பது சந்தேகம் என்ற சூழ்நிலை ஏற்பட்டதற்குப் பிறகு, இந்தத் துறையே இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு அந்த அடிப்படையிலே அவர்களிடமிருந்து 2 ரூபாய், 5 ரூபாய், 10 ரூபாய் என்று மூன்று வகையாகப் பிரித்து, வசூல் செய்வது இரண்டு ரூபாய் கட்டுகிறவர் தன்னுடைய பணிக்காலத்தில் இறந்து போனால் அவர் குடும்பத்திற்கு 2,000 ரூபாயும், 5 ரூபாய் கட்டுகிறவர் தன்னுடைய பணிக்காலத்தில் இறந்துபோனால் 5,000 ரூபாயும், 10 ரூபாய் கட்டுகிறவர் இறந்துபோனால் 10 ஆயிரம் ரூபாயும் கொடுக்கப்படும் என்ற திட்டத்தை கடந்த ஜூன் மாதம் 3-ம் தேதியிலிருந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். சம்பள உயர்வாக இருந்தாலும், அல்லது அவர்களைப் பாதுகாப்பதாக இருந்தாலும், எந்த வகையிலும் குறைவுபடாமல், குறுகிய காலத்திலே இம்மாதிரியான நல்ல காரியங்களையெல்லாம் செய்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் சமயபுரம் மாரியம்மன் கோவிலைப்பற்றிச் சொன்னார்கள். அந்தக் கோவிலைப் பொறுத்த அளவிலே, மேம்பாடு செய்யப்பட வேண்டிய காரியங்கள் ஏராளமாக இருக்கின்றன என்பதை நானும் ஒத்துக்கொள்கிறேன். அந்த வட்டாரத்தில் இருப்பவர்கள்கூட, ஸ்ரீரங்கம் கோவிலிலிருந்து சமயபுரம் மாரியம்மன் கோவிலைப் பிரித்து தனி நிர்வாகமாக ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை என்னிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். அங்கே இருக்கிற பொதுமக்களுடைய பிரதிநிதிகள்கூட எழுத்துமூலமாக கோரிக்கையை அனுப்பியிருக்கிறார்கள். எப்படிப் பிரிப்பது, எந்த வகையிலே பிரிப்பது என்ற நிலைமை ஏற்படுமானால், தமிழ் நாட்டிலே இன்னும் சில கோயில்களைப் பிரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடும். அவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்துத்தான் முடிவெடுக்க விடும். அவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்துத்தான் முடிவெடுக்க முடியுமே தவிர, உடனடியாக அதற்குப் பதில் சொல்ல முடியவில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் சொல்லியிருக்கிற நியாயமான கோரிக்கையை அரசு பரிசீலித்து நல்ல முடிவுகளை மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ராஜாராம்:** துணைத் தலைவர் அவர்களே, அது ஆபத்தான கோரிக்கையுங்கூட. ஏனென்றால், மதுரை மீனாட்சி அம்மன் கோவிலிலிருந்து

திருப்பரங்குன்றம் கோவிலைப் பிரித்துவிட்டால், மீனாட்சி அம்மன் கோவிலை மூட வேண்டியதுதான். திருப்பரங்குன்றம் கோவிலை வைத்துத்தான் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

